

கல்கி
மணியம்.
தீபாவளி மலர் KALKI 1957



YOU LOOK YOUR BEST IN
Khatau
VOILES

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!



பண்டிகைகளில் சிறந்தது தீபாவளி

வண்டிகளில் சிறந்தது புதிய ஸ்டாண்டர்ட் வான்கார்டு III



அமைப்பில் அலாதி அழகு,
அழகுக்கேற்ற பலம்,
பலத்துக்கேற்ற ஓயா உழைப்பு.


STANDARD TRIUMPH

தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்)
பிரைவேட் லிமிடெட்,

சென்னை — பெங்களூர் — உதகை

SMZ-40



C.S.C.
QUALITY SHOES
எங்கள் ஆதரவாளர்களுக்கும்
வியாபாரிகளுக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்
4 Corona
4
கரோனு சாஹூ கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
143, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1
CSC.56.9A
சென்னை, கேரள ராஜ்யத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஜெய் ஹிந்த் ஏஜன்ஸீஸ், 2/5, பந்தர் தெரு, சென்னை-1


TYRE RECONDITIONING
OF ALL TYPES –
ON OR OFF THE ROAD
TYRESOLES
Over 700 Factories Throughout the globe
STANES MOTORS (S. I.) LTD., COIMBATORE
Branches: KOTTAYAM, BANGALORE, TIRUCHIRAPALLI, MADRAS, VIJAYAWADA, CALCUTTA.


விரைவில் வருகிறது
திரை வானிலே ஒரு
துருவ நட்சத்திரம்..
சிவாஜி கணேசன் (இரு வேடங்களில் தோன்றும்..)
வீனஸ் பிக்சர்ஸ்
உத்தம புத்திரன்
பத்மினி · கண்ணாம்பா · ராகினி · தங்கவேலு · நம்பியார்
O.A.K. தேவர் · ஸ்டண்ட் சோமு · M.S.S. பாக்கியம் · ஹெலன்
டைரக்ஷன்
T. பிரகாஷ் ராவ்
திரைக்கதை வசனம்
ஸ்ரீதர்
சங்கீதம் : ஜி. ராமநாதன்
ஆர்ட் : கங்கா
காமிரா : வின்சென்ட்
ஸ்டுடியோ : ஜெமினி

Elegant


ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸ்
வடிவுக்கு வளைகாப்பு
தயாரிப்பு
V.K.ராமசாமி • A.P.நாகராஜன்
கதை.வசனம்: A.P.நாகராஜன்
சிவாஜி கணேசன் • T.R.ராமச்சந்திரன் • V.K.ராமசாமி • S.V.சுப்பையா
T.K.ராமச்சந்திரன் • ஏழுமலை • P.D.சம்பந்தம் • வரதிராஜ் • சாமிராம்
சாவித்திரி • M.N.ராஜம் • சவுகார் ஜானகி • முத்துலக்ஷ்மி • பேபி உமா...
டைரக்ஷன்.. K.சோமு • சங்கீதம்... K.V.மஹாதேவன் • ஸ்டுடியோ...பிலிம்சென்டர்


அனைவருக்கும் எமது மங்களகரமான தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
குமரன் நூலை
நூற்கும் கதிர்கள் 19000
விஸ்தரிக்கப்படுவது 6000
ஸ்ரீ குமரன் மில்ஸ் லிமிடெட்
ஆலை : புதுப்பாளையம்
GRAMS: 'KUMARAN'
ஆபீஸ் : பீளமேடு போஸ்ட் • கோயமுத்தூர்



சிற்ப ஓவியங்களில் தனிச்சிறப்பு வாய்ந்தது
அஜந்தா குகை
ரஸிகர்களை மகிழ்வித்து உற்சாகமூட்டுவதில்
தனிச்சிறப்பு வாய்ந்தது
தங்கபஸ்பம் புகையிலை
THANGABASPAM TOBACCO-KARAIKUDI
தங்க பஸ்பம்




ஜுபிலி பிலிம்ஸ் வி
கல்கியின்
பார்த்திபன் கனவு
'கல்கி'யின் எழுத்துக்கு எழுத்து,
எண்ணத்துக்கு எண்ணம்
பிரதிபலிக்கும் திரை ஓவியம்


கோவிந்தராஜன்
அளிக்கும்
திரைக்கதை
வசன அமைப்பு
விந்தன்
சங்கீதம் வேதா
நடனம்:எல்லப்பா
படப்பிடிப்பு:
செல்வராஜ்
காட்சி ஜோடனைகள்
மணியம்
டைரக்ஷன்
யோகானந்த்


SRI HARI YARNS FOR....
STRENGTH and FINENESS
60's 80's
SRI HARI MILLS PRIVATE LTD.
SINGANALLUR P.O. COIMBATORE
MANAGING AGENTS-A.V. SRINIVASALU NAIDU & CO.
SUNDARAM



லில்லி பிஸ்கத்
உபயோகித்து
தீபாவளி பண்டிகையை
உற்சாகமிருந்ததாக்குங்கள்!
பல இனுசுகளிலும் கிடைக்கும். தரத்திலும், சுவையிலும் ஈடற்றது. புதியதாகவும், சுத்தமானதாகவும் என்றும் கிடைக்கும்.
*
லில்லி பிஸ்கத் கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா - 4
LILY'S CUSTARD CREAM
LILY'S CREAM CRACKERS
BADLEY


பண்டிகை நாம் நெருங்குவதை நமது நகரங்களிலும், கிராமங்களிலும் காணும் குதூகலத்திலிருந்து உணர்கிறோம். அகல்விளக்குகளின் சாந்த ஒளியை வீடுகளில் எங்கும் காணலாம். ஒன்று சேர்ந்து உறவாடும் பந்துக்களின் சிரிப்பொலி எங்கும் நிறைந்திருக்கும். இத்தகைய ஒரு சமயத்தில் நாம் மகிழ்வுடனிருப்பது நாம் என்ன உடுத்திக்கொண்டிருக்கிறோம், எப்படி நமது வீடுகளை அலங்கரிக்கிறோம் என்பதையே பொறுத்திருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றதான ஹாண்ட்லூம் ஹவுஸ் துணிகளை வாங்கினால் நாம் ஆனந்தமாக இருப்பது நிச்சயம். ஹாண்ட்லூம் ஹவுஸுக்கு விஜயம் செய்யும் பொழுது பண்டிகை காலத்துக்கென்றே தேர்ந்தெடுக்கப்பட்ட எழில்மிக்க கணிசமான பட்டுத் துணிகளையே கேட்டு வாங்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.
ஹாண்ட்லூம் ஹவுஸ்
9/13, ரட்டன் பஜார், சென்னை-3
221, டாக்டர் தாதாபாய் நௌரோஜி தெரு
கோட்டை, பம்பாய்

பொருளடக்கம்



பாற்கடல்



நாரதர்:

அப்பனே! கொஞ்சம் கண் திறப்பாயா?

நாராயணன்:

என்ன விசேஷம்? உலகத்தைவிட்டு இவ்வளவு தூரம் முனிவர் வந்தது என்ன காரணம்? ஏன் கண்களில் நீர்?

நாரதர்:

அப்பனே, துக்கம் தாங்கவில்லை. நீயோ தூங்குகிறாய். உலகம் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது.

நாராயணன்:

இது ஒன்றும் புதியது அல்லவே! உமக்கு ஏன் இப்போது இந்த விசாரம்?

நாரதர்:

இப்படிச் சொல்லுகிறாயே! தருமம் அழிந்துபோய் வருகிறது. ஆசையும் அநீதியும் வளர்ந்து வருகின்றன. உன்னை எல்லாரும் மறந்து விட்டார்கள். பாற்கடல் என்றால் சிரிக்கிறார்கள். நான் என்ன சொன்னாலும் நம்ப மாட்டோம் என்கிறார்கள். கொஞ்சம் எழுந்து உன் முகத்தை எல்லாருக்கும் காட்டுவாயே!

நாராயணன்:

இப்படி நீர் சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறது. நான் எழுந்தால், உமக்குத் தெரியுமே, விளையாட்டு கலைந்து போய் விடும். மக்கள் என்னை மறந்தால் என்ன, நான் இருப்பது இல்லாமல்போகுமா? மக்கள் தருமங்களைக் காத்தால் போதுமே. தருமங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமே!

நாரதர்:

அப்பனே! நானும் சொன்னேன், இன்னும் பலரும் சொல்லித்தான் வருகிறார்கள். உன்னை மறந்த பின் தருமம் ஏது? கண்ணாடிக்குப் பின் இருக்கும் ரஸம் தேய்ந்துபோனால் கண்ணாடி எதற்கு உதவும்? ரஸம் தேய்ந்து போச்சு, அப்பனே! பகவானை மறந்த தருமத்துக்கு உயிர் ஏது? அது நிலைத்து நிற்குமா?

நாராயணன்:

கௌதமபுத்தரைக்கூப்பிடும், அவரைக்கேட்கலாம்.

நாரதர்:

எல்லாம் அவர் செய்த கூத்துத்தான். உன்னைப் பற்றி விவாதம் வேண்டாம் என்று அவர் சொன்னதை, நீயே இல்லை என்று அவர் போதித்ததாக வைத்துக் கொண்டு மக்கள் கெட்டுப் போனார்கள்.

நாராயணன்:

அது ரொம்பக் காலம் ஆச்சே! அவர் சொன்னதை விட்டு விட்டு இப்போது எல்லாரும் தர்க்கமும் விவாதமும் செய்து வருகிறார்களே? நான் இருப்பது அவர்களுக்கு விளங்கவில்லையா?

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

நாரதர்: ஆகா! தர்க்கம் வேண்டிய அளவு செய்து வருகிறீர்கள். விதையிலிருந்து மரமா, மரத்திலிருந்து விதையா என்று சண்டை பிடித்துத்தான் வருகிறீர்கள். ஆனால் உன்னை மறந்துவிட்டார்கள்.

நாராயணன்: முனிவர் நீர்தான் இருக்கிறீரே? கண்ணுடிக்கு ரஸம் பூசச் சொல்லுமே!

நாரதர்: நான் சொல்லி யார் கேட்கப் போகிறார்கள்? என் தம்புராவின் நாதம் உடைந்து போச்சு!

நாராயணன்: அப்படிச்சொல்லாதீர். மீட்டிப்பாரும்!

நாரதர் (தம்புரா மீட்டுகிறார்): ஆனந்தம்! ஆனந்தம்! உன்முன் நின்றதும் நாதம் உண்டாகிறது. உன் மாயம்! நான் கீழே போனதும் மறுபடியும் பழைய கதைதான்.

நாராயணன்: இல்லை, இல்லை! நன்றாகப் பாடி ஆடிச் சொல்லும். ஆசைகளைக் குறைக்கச் சொல்லுவீர். அப்போதுதான் திரை அகன்று நான் இருப்பது மக்களுக்கு விளங்கும்.

நாரதர்: விளங்காது பெருமானே, விளங்காது! அவர்கள் மூளை கெட்டுப் போச்சு. நீ எழுந்து வந்தால் தான் உருப்படும்.

நாராயணன்: மறுபடியும் குருக்ஷேத்திரம் நடக்க வேண்டும் என்கிறீரா?

நாரதர்: அப்படித்தான் தோன்றுகிறது. நாராயணா! (வெடிகள் படார்! படார்!) அதுவென்ன பெரிய சத்தம் கேட்டதே? பயமாக இருக்கிறது!

நாராயணன் (சிரித்து): உமக்கும் பயமா? அது தான் குருக்ஷேத்திரத்தின் துவக்கம். தெரியாதா? நான் எழுந்தால் அப்படித்தானே?

நாரதர்: வேண்டாம், வேண்டாம். நீ தூங்கு! நான் பாடிப் பார்க்கிறேன்.

நாராயணன்: உலகமெல்லாம் என்னை மறந்து விட்டது என்றீர். பாரத நாட்டிலும் அப்படித்தானா?

நாரதர்: ஐயோ, அதை ஏன் கேட்கிறாய்? அங்கே ரொம்ப மோசம்!

நாராயணன்: மோகன தாஸனை அனுப்பினேனே, அவன் ஒன்றும் செய்யவில்லையா?

நாரதர்: ரொம்பத்தான் செய்தார். ஆனால் அவர் திரும்பியதும் பழைய கதைதான். மக்கள் அவரையும் மறந்து விட்டார்கள். பணக் கூத்து கூத்தாடுகிறார்கள்.

நாராயணன்: நேற்றுத்தானே அவர் உபதேசம் நடந்தது. அதற்குள் மறந்து விட்டார்களா?

நாரதர்: ஆம், பெருமானே, மறந்து விட்டார்கள்.

நாராயணன்: சங்கடங்கள் அநுபவித்தால் புத்தி வரும். அப்படித்தானே?

நாரதர்: வேறு என்ன வழி? ஆனால் அந்தப் பேதையர்கள் சங்கடம் தாங்குவார்களா?

நாராயணன்: தாங்கும் சக்தியும் நான் தருவேன். இது உனக்குத் தெரியுமே? அதுதானே விளையாட்டு. தாங்கும் சக்தி தராமற் போனால் தேவி என்னைச் சும்மா விடமாட்டாள்.

நாரதர்: உங்களுக்கு விளையாட்டுத்தான். மக்களுக்குப் பிராண சங்கடம்.

நாராயணன்: பிராண சங்கடமா? எந்தப் பிராணனுக்குச் சங்கடம்? நான்தானே அந்தப் பிராணன்? ப்ரியே! இவரைப் பார்! இவருக்குக் கொஞ்சம் உபதேசம் செய்து அனுப்பு. இவருக்கு புத்தி கலங்கிப் போயிருக்கிறதுபோல் இருக்கிறது.

நாரதர்: தேவி! நமஸ்கரிக்கிறேன். உங்கள் தரிசனம் கண்டதும் என் மயக்கம் தீர்ந்தது.




மணியம்

டி. கே. சி. ஜாதகம்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லண்ட் தேசத்திலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று, உபசரிப்பதற்காக நடந்தது விருந்து. கல்லூரியின் பழைய மாணவரான டி. கே. சிதம்பரநாத முதலியாரையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய நம்மைகளை எப்படியும் திருத்திவிட வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு வந்தவர் பாதிரியார். அவரிடத்திலே டி. கே. சி.யை அறிமுகப்படுத்தினார்கள். உடனே, துரை, டி. கே. சி.யைப் பார்த்து ஏளன பாவத்தோடுதானே, பல கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்தார். குறிப்பிடத் தக்க கேள்வியொன்று கீழ்க்கண்டவாறு:—

"ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள எங்களுக்கு மரங்கள் என்றால் ரொம்பப் பிரியம். இந்தியர்களாகிய உங்களுக்கு எப்படியோ?" (We love trees, Do you?) என்று கேட்டார் பாதிரியார்.

இந்தக் கேள்விக்கு டி. கே. சி. பதில் சொன்னார்கள்:— "மரங்களிடத்திலே எங்களுக்குப் பிரியம் கிடையாது; பக்தியே செலுத்துகிறோம்" (We don't love trees; but we worship them) என்று சொன்னார்கள். "தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஸ்தல விருக்ஷம் என்று ஒன்று இருக்கிறது. குற்றாலத்திலே பலா மரம்; திருநெல்வேலியிலே மூங்கில் மரம், திருப்பெருந்துறையிலே குருந்த மரம்; இப்படியாக ஒவ்வொரு கோயிலுக்கும் மூல ஸ்தானமாக அமைந்திருப்பது ஒரு மரந்தான். அந்த மரம் துளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும், கனிவதும் கண்டு அதிசயித்தார்கள் எங்கள் முன்னோர்கள். ஒவ்வொரு மரத்துக்குள்ளேயிருக்கும் ரஸாயன வித்தைகள், இஞ்சினீயரிங் ஜாலங்கள், சிற்ப மர்மங்கள், இவைகளைக் கண்டு அனுபவித்தார்கள். அதற்கு மேலே, ஒவ்வொரு மரத்துக்குள்ளேயும் அபூர்வமான ஒரு ஞாபகசக்தி யல்லவா இருக்கிறது! ஆயிரக்கணக்கான ஆலமரங்களைப் பார்த்துத்தான் இருக்கிறோம். ஆனால், எந்த ஆலமரமாவது



தப்பித் தவறி, ஒரு பலாக்காயைக் காய்த்ததுண்டா? ரோஜாப் பதியமொன்றை நடுகிறோம். நடும்போது அது ஒரு வெற்றுக் கம்பாக, கன்னியாகத்தான் இருக்கிறது. பிறகு வருகிறது, அதற்குள்ளிருந்து ஒரு அற்புதமான ரோஜா மலர். அந்த மலருக்கு ஒரு தனி வர்ணம், ஒரு தனி மணம். எந்த ரோஜாச் செடியாவது, ஞாபகப் பிசகினால், ஒரு பிச்சிப் பூவைப் பூத்ததுண்டா? இப்படியாகத் தாவர வர்க்கங்களுக்குள்ளே ஒரு அதிசயமான ஞாபக சக்தியும், உயிர்த் தத்துவமும் இருந்துகொண்டு அவைகளை இயக்குவதை உணர்ந்தார்கள் தமிழர்கள். இவைகளையெல்லாம் பார்த்தபிறகு, மரத்துக்குள் அல்லவா இறைவன் இருந்து தொழிற்படுகிறான் என்று அறிந்தார்கள். ஆகவே, விருக்ஷங்களுக்கே கோயில் கட்டி வணங்கி வருகிறோம் நாங்கள்" என்று டி. கே. சி. விளக்கம் கொடுத்தார்கள். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஸ்காட்லண்ட் துரை அரண்டே போனார்.

* * *

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன், சென்னைக்கு வினோபா பாவே வந்திருந்தார். சத்தியத்தை நாடி, நாடி வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணம் செய்த மகான் வினோபாஜி. டி. கே. சி.யோ, பரிபூரண சௌந்தர்யம் எங்கெங்கே இருக்கிறதோ, (பாதாளத்தி லிருந்தாலும் சரி), அங்கெல்லாம் துணிச்சலோடு சென்று, அதைத் தரிசித்து ஆனந்தத்திலே திளைக்கும் அபூர்வப் பிறவி. காலஞ் சென்ற 'கல்கி'யின் முயற்சியால், வினோபாஜியும் டி. கே. சி.யும் சந்தித்தார்கள், சத்தியமும் சௌந்தர்யமும் சந்தித்தது போல்.

கம்பர் எழுதிய இரணியவதைப் படலத்தில், "சாணினும் உளன்" என்று தொடங்கும் பாடலை எடுத்து, ஒரு மணி நேரம் விளக்கினார்கள் டி. கே. சி. "கடவுள் இல்லை" என்று சொன்ன இரணியனைப் பார்த்து, மகன் பிரகலாதன் பேசுகிற கட்டம்.

"இறைவன் ஒரு சாண் இடத்திலும் இருக்கிறான், அணுவை நூறு பாகமாக வைத்த கோணிலும் (துகளிலும்) இருக்கிறான். உலகத்திலேயே பெரிய மலை என்று சொல்லும் மேரு மலையிலும் நிறைந்திருக்கிறான். இதோ, உன் பக்கத்தில் தூண் நிற்கிறதே, அதிலும் இருக்கிறான். இதோடு நிற்கவில்லை. கடவுளாவது, ஒன்றாவது என்று நீ சொன்னாயே, அந்தச் சொல்லுக்குள்ளும் அவன் ஒளிந்துகொண்டு நிற்கிறான். 'இல்லை' யென்று சொன்னது நீயா? இல்லை. இறைவன் உன் வேஷத்தில் நின்றுகொண்டு சொன்ன வார்த்தைதான். 'நீ' யென்று ஒருவனே இல்லையே" என்று பிறவி ஞானியான பிரஹலாதன் சொன்னான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஹிரண்யன், "பலே, பலே! இந்தச் சின்னப் பயலுக்கு இவ்வளவு வேதாந்தமா!" என்று ஏளனத்தோடு சிரிக்கிறான். வருகிறது கம்பன்பாட்டு:—

"சாணினும் உளன், ஓர்தன் மை
அணுவினைச் சதகூறிட் ட
கோணினும் உளன், மாமே ருக்
குன்றினும் உளன், இந்நின் ற
தூணினும் உளன், நீசொன் ன
சொல்லினும் உளன்; இத்தன் மை
காணுதி விரைவின்'என் றான்:—
நன்றெனக் கனகன்நக் கான்."

இந்தப் பாட்டை டி.கே.சி. தமக்கே உரிய நாதத்தோடும், காம்பீர்யத்தோடும், சவுக்கத்தில் பாடி, வினோபாஜிக்கு விளக்கம் செய்தார்கள்.

"நீ சொன்ன சொல்லினும் உளன்" என்ற வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்திலே, வினோபாஜி உருகி

விட்டார். ''எல்லா இந்திய மொழிகளிலும், ஹிரண்ய வதையைப் பற்றிப் பல கவிஞர்கள் பாடித்தான் இருக்கிறார்கள். ஆனால், கம்பனைப்போல், இதர பாஷைக் கவிஞன் ஒருவனாவது, 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்று சொன்னது கிடையாது'' என்று வெகுவாகப் பாராட்டினார் வினோபா பாவே. அதோடு நின்று விடவில்லை.

கம்பராமாயணப் பிரதி ஒன்றை வாங்கிப் போய் அதை ஒழுங்காகப் படிக்கவே தொடங்கிவிட்டார் அவர்.

டி. கே. சி. யைச் சந்தித்து ஏழெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன; ஆனாலும், சில தினங்களுக்கு முன் வினோபாஜி அந்தச் சந்திப்பைப் பற்றி ஒரு உருக்கமான கடிதம் (ஹிந்தியில்) பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

''அன்று அவரைச் சந்தித்த சந்திப்பு என்னுடைய ஞாபகத்தில் மிக, மிக அழுத்தமாகப் பதிந்து கிடக்கிறது. அதற்குமுன்பு டி. கே. சி.யை நான் பார்த்ததில்லை. ஆனால், அன்று அவர் மனந்திறந்து என்னோடு உரையாடியபோது, நீண்ட நெடுங்காலமாகப் பழகிவந்த நண்பர் அவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. வெளிப்பகட்டை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, கவிதையின் இதயத் துடிப்பை அப்படி, அப்படியே எடுத்துக் கூறக்கூடிய ''மர்மக்ஞ ரஸிகர்'' அவர். அவரைப் போன்ற ரஸிகரைக் காண்பது அரிதினும் அரிது.''

* * *

சுமார் எட்டு வருஷங்களுக்குமுன், டி. கே. சி.யும், 'கல்கி'யும், சதாசிவம் தம்பதிகளும் பம்பாய்க்குப் போயிருந்தார்கள். போனதும், சோபியா வாடியா (Madame Sophia Wadia) என்ற இலக்கிய மேதை, டி. கே. சி.யைத் தம் வீட்டுக்கு அழைத்து, விருந்தளித்து உபசரித்தார். அந்த அம்மாள் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவர்; தமிழ் தெரியவே தெரியாது; ஆனாலும், பன்மொழிப் புலமை வாய்ந்தவர்; இலக்கியத்திலும், கவிதையிலும் சிறந்த பயிற்சி உடையவர்; இந்திய எழுத்தாளர் சங்கத்தின் தலைவர். அவருக்கு ரஸிகமணி திருவாசகத்திலிருந்து ஒரு பாடலைப் பாடி, ஆங்கிலத்திலே பொருளை விளக்கினார்கள்.

''ஒரு குடத்திலே, ஆற்றுத் தண்ணீரை மொண்டு, வீட்டுக்குக் கொண்டுவந்து, மச்சுப் படியேறி, மாடிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்குள், அப்பாடி! இளைத்துப் போகிறோம் நாம். இந்தச் சின்னக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கு அவ்வளவு ஆற்றல் வேண்டியிருக்கிறது நமக்கு. நம்முடைய ஆற்றலை வைத்து இறைவனுடைய ஆற்றலை அளந்து பார்த்தோமேயானால், அதை இப்படி, அப்படி என்று சொல்லி முடியாது. இந்த மகாசமுத்திரத்திலேயுள்ள நீரை, ஆவியாக மாற்றி, அதை வானத்திலே பத்து, இருபது மைல் உயரம் கொண்டு போய், மேகமாகச் சேமித்து வைத்து, பருவக் காலம் பார்த்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ருஷ்யாவிலே மழையாகக் கொட்டுகிறான் இறைவன். கோடானு கோடி குடம் தண்ணீரை, இப்படிச் சமுத்திரத்திலிருந்து, தலைமேல் வைத்துத் தூக்கிப் போய், எவ்வளவு கருணையோடு உலகமெல்லாம் செழிக்க மழையாகப் பொழிகிறான்! இந்த சக்தியையும், கருணையையும் உணர்ந்து வியந்த நம் முன்னோர்கள், சிவன் தன் தலைமேல் கங்கையையே குடமாக வைத்திருக்கிறான் என்று கற்பனை செய்து ரஸித்தார்கள்; ''அப்பார் சடையப்பன்'' என்றார்கள். ''அப்பு'' என்றால் ''தண்ணீர்'' என்று பொருள். ''அப்பார் சடையப்பனை''த் தஞ்சம் என்று நம்பி, எல்லாம் அவன் செயல், நமக்குச் செயல் என்பதே இல்லை என்று தெரிந்து தம்மையே அவனிடத்தில் ஒப்படைத்து விடுகிறார்கள் ஞானிகள்; அதன்மூலம் கவலையெல்லாம் நீங்கி ஆனந்தத்தை அடைகிறார்கள்; இப்பேர்ப்பட்ட ஞானிகளுடைய இதயத்திலே புகுந்து சம்மணம் போட்டு உட்கார்ந்து கொள்ளுகிறான் இறைவன். அவ்வளவுக்கு எளியவன் தான் அவன். ஆனால், ஞானமில்லாத, வறட்டு அறிவாளிகளுக்குப் புலப்படாதவன் அவன். அண்டம் கடந்து, அகண்டமும் கடந்து, எங்கேயோ தூரத் தொலைவில் உள்ள பேர்வழியாகவும் இருக்கிறான். இந்த முரண்பாட்டு ரகசியத்தை மாணிக்கவாசகர் எடுத்துச் சொல்லுகிறார் :—

''அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்''

இந்தப் பாடலை சோபியா வாடியாவுக்குப் பாடிக் காட்டினார்கள். ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம் பாடினார்கள். பாட்டு முடிந்ததும், ''சரி, போய்வருகிறேன்'' என்று சொல்லி டி. கே. சி. எழுந்தார்கள்.

எஸ். மகராஜன்



உடனே அந்த அம்மாள், ''இன்னும் கொஞ்ச நேரம் தாங்கள் தங்கவேண்டும். தாங்கள் சொன்ன பாட்டை இன்னும் ஒருமுறை பாடிக் காட்டவேண்டும். கருத்தைக் கவனிக்காமல், பாட்டின் ஒலியின்பத்தை மாத்திரம் நான் அனுபவித்துப் பார்க்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். டி. கே. சி.க்கு ஒரே உற்சாகம் பிறந்து விட்டது. மறுபடியும் பாட்டைப் பாடினார்கள்:

'அம்பார் சடையப்பன்
ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த
உள்ளத்தார் உள்ளிருக்கும்
அம்பானுக்(கு) அம்பாலைப்
பாடு துங்காண் அம்மானாய்'

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பரங்கி மாது சொன்னார் :— '' தமிழ் பாஷையிலே ஒரு அபூர்வமான மந்திர சக்தி யிருக்கிறது. பாட்டின் ஒலியைக் கேட்கும் போதே, எனக்கு ஒரு ஆனந்த மயக்கம் ஏற்படுகிறது'' என்று சொன்னார்.

பிரான்ஸ் தேசத்துப் பெண்மணியின் வாக்குமூலம், டி. கே. சி. யின் அடிப்படையான கொள்கையை வலியுறுத்தியது. '' தமிழ்க் கவிதையில் ஒரு அபூர்வமான தான லயம் (ரிதம்) இருக்கிறது. கிரேக்க பாஷைக்குக் கூட இல்லாத நளினமும், நுண்மையும் தமிழ்மொழிக்கு இருக்கிறது'' என்று ஆங்கிலப் புலவர் வின்ஸ்லோ சொன்னாரே, அதை அடிக்கடி டி. கே. சி. சொல்லுவார்கள். சோபியா வாடியாவின் வாக்கு இந்தக் கொள்கையை ஊர்ஜிதம் செய்தது.

*   *   *

பல நூற்றாண்டுகளுக்கு முன், சேரன் செங்குட்டவன் இமயம் சென்று கல்லிலே மீனைப் 'பொறித்து' வந்த வரலாற்றை மேடைப் பேச்சுகளிலே அடிக்கடி கேட்டு வருகிறோம். மீன் 'பொரியலை' எடுத்து, எடுத்துப் புலவர் பெரு மக்கள் பரிமாறுவதும், ''பார்த்தீர்களா தமிழன் வீரத்தை !!'' என்று சொல்லி அவர்கள் தொண்டை கிழியக் கத்துவதையும் பார்த்து அலுத்து விட்டோம். மீனைப் பொறித்து வந்த காரணத்தால் தமிழன் வீரம் இமயத்தையே தொட்டு விட்டது என்பது உண்மைதான். ஆனால் தமிழனுடைய அரிய பண்பாடு இமயத்தைத் தொட்டு விடவில்லை. சேரன் செங்குட்டுவனையும் மிஞ்சிய நிகழ்ச்சியொன்று சமீபத்தில் நடந்தது. புலவர் உலகம் அதையுணர்ந்து அனுபவித்ததாகவே தெரியவில்லை. பத்து வருஷங்களுக்கு முன், குற்றாலக் குறவஞ்சி யென்ற அரிய தமிழ் நூல், இந்து மகா சமுத்திரத்தையும், அட்லாண்டிக் சமுத்திரத்தையுமே தாண்டி, அமெரிக்காவிலே உள்ள 'நியூயார்க்' (New York) நகரத்தின் நாடகமேடையிலே அரங்கேற்றப்பட்டது.

அடையாற்றிலே இருக்கும் திருமதி ருக்மிணி தேவி கோஷ்டியார் நடன நாடகமாக அதை அரங்கேற்றியபோது, ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் தமிழ் ஒலியையும், இசையையும், நாட்டியத்தையும், கவிதையையுமே அனுபவித்து, ''ஒன்ஸ் மோர்'' போட்டார்கள். இப்படியாகத் தமிழ்ப் பண்பாட்டையே அமெரிக்கர் உள்ளத்தில் 'பொறித்து' வைத்து விட்டு வந்திருக்கிறார்கள் கலாக்ஷேத்திரக் கலைஞர்கள். இந்தப் படையெடுப்புக்கும், வெற்றிக்கும் மூலகாரணமாக இருந்தது டி. கே. சி.

1933-ம் வருஷத்திலே சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்குத் தலைவர் டி. கே. சி. பேசியவரோ டாக்டர் அருண்டேல்; அவர் சிறந்த அறிவாளி; பிரம்மஞான சபையின் தலைவர்; ருக்மிணி தேவியின் கணவர்; ஆஸ்திரேலியாவிலே பிறந்தவர்.

குறிப்பு : 'மீன் பொரியல்' அல்ல

முதன் முதலாக அந்தக் கூட்டத்திலேதான் டி. கே. சி.யைச் சந்தித்தார் டாக்டர் அருண்டேல். டி. கே. சி. தமிழில் பேசிய முடிவுரையை அவர் கேட்டார். தமிழ் தெரியாதவராயிருந்த போதிலும், டி. கே. சி. பேச்சிலே புள்ள நயங்களை அருண்டேல் எப்படியோ கண்டு கொண்டார். கூட்டம் முடிந்ததும், அடையாற்றுக்குப் போய், தம் மனைவியாரிடத்திலே அவர் சொன்னார்:— ''டி. கே. சி. என்ற அபூர்வமான மனிதரை நான் இன்று கண்டேன். நீ அவரைக் கட்டாயம் சந்திக்க வேண்டும், இந்தியப் பண்பாட்டைப் பார்க்க வேண்டுமானால் டி. கே. சி.யைப் பார்த்தாலே போதும்'' என்றார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் டி. கே. சி.க்கும், அருண்டேல் தம்பதிகளுக்கும் இடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பின், ருக்மிணி தேவியும், டாக்டர் அருண்டேலும் குற்றாலத்துக்குச் சென்றார்கள். சாரல்காலம்; திருவாங்கூர் மாளிகையின் முற்றத்திலே, ஒரு மாமரத்தடியிலே, அமர்ந்து டி. கே. சி.யிடம் இருவரும் 'குற்றாலக் குறவஞ்சி'யைக் கேட்டார்கள். பாடம் முடிந்ததும், சிருஷ்டி உற்சாகமே ஏற்பட்டு விட்டது ருக்மிணிதேவிக்கு; குறவஞ்சியை நடன நாடகமாக நடிக்க வேண்டியதுதான் என்று நிர்மானித்தார். அதன் பயனாகத் தமிழ்ப்பண்பாட்டின் குரல் அமெரிக்காவையே எட்டிவிட்டது. ருக்மிணி தேவி தமிழர், அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது சாமானிய காரியம். ஆஸ்திரேலியாவில் பிறந்து, வளர்ந்த டாக்டர் அருண்டேல் பத்து நாட்களாக, டி. கே. சி. பாடிக் காட்டிய குறவஞ்சியை, தமிழ்த் தெரியாமலே எப்படி அனுபவித்து விட்டார் என்று கேட்கலாம்; இந்தக் கேள்வியை டி. கே. சி.யே டாக்டர் அருண்டேலிடம் கேட்டார்கள்.

''தமிழ்மொழி எனக்குத் தெரியாதுதான். அதனால் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. நீங்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடும்போது, உங்கள் இதயம் என்னுடைய இதயத்தோடு ஒட்டி, எனக்குப் பொருளை விளக்கிவிடுகிறது. உங்கள் குரல் மூலமும், முகப்பொலிவின் மூலமும் கவிதையின் உட்பொருளை நான் கண்டு கொண்டேன்'' என்று சொன்னார் டாக்டர் அருண்டேல்.

*   *   *

ஸ்காட்லண்டு தேசத்துப் பாதிரியாரும், வினோபா பாவேயும், சோபியா வாடியாவும், டாக்டர் அருண்டேலும் தமிழ் தெரியாத அந்நியர்கள். ஆனாலும், டி. கே. சி. யின் இதய ஒலி அவர்களுடைய இதயத்தைத் தொட்டுக் கரைத்து விட்டது. தமிழ் தெரிந்த நம்மவர்களுடைய தோற் செவிக்குள்ளே மாத்திரம் அந்த ஒலி பிரவேசிக்க முடியவில்லை.

சில மாதங்களுக்கு முன், தமிழ்ப் பண்பாட்டைப் பற்றி, புதுக்கோட்டை டவுன் ஹாலிலே ஒரு புலவர் சிகாமணி மேடைமேலேறிப் பேசினார். பரீக்ஷை எழுதி, டாக்டர் பட்டம் பெற்ற தமிழ்ப் புலவர் அவர். ''டி. கே. சி. போய் விட்டார்; இனிமேல் தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழுக்கும் யோகந்தான்'' என்று அவர் கர்ஜித்தார். புலவர் நல்லவர்தான்; ஆனால், உண்மைப் பண்பாட்டை அறிவது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது அவருக்கு. தமிழின் அருமைப்பாடுகள் அவருக்கு எட்டாத வஸ்துக்களாகப் போய் விட்டன. டி. கே. சி. கொடுக்கும் விளக்கமோ அவருக்கு இருட்டடிப்பாகத் தோன்றுகிறது. டி. கே. சி. ஜாதகத்தில் இப்படி ஒரு கோளாறு விழுந்து விட்டது.

தமிழின் ஆழமும், தமிழின் எளிமையும் ஒன்று சேர்ந்து, சூழ்ச்சி செய்து, சில புலவர்களை, வேண்டுமென்றே, ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. போதாக் குறைக்கு, இந்தச் சூழ்ச்சியில் சேர்ந்து கொண்டது டி. கே. சி. ஜாதகம்.

இந்தச் சதிக்கு முன் நாம் யார்!



இந்தச் சுபதினத்தில் உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்களுக்குப் பரிசளிப்பதற்காகத் தபாலாபீஸ் பரிசுக் கூப்பன்களை வாங்குங்கள்.

இந்தப் பரிசுக் கூப்பன்களை 12 வருஷ தேசியத் திட்ட சேமிப்புப் பத்திரங்களாக (National Plan Savings Certificates) மாற்றிக் கொள்ள முடியும். ரூ. 5/-, ரூ. 10/-, ரூ. 50/-, ரூ. 100/-, ரூ. 1000/- இவற்றிற்குப் பத்திரங்கள் கிடைக்கும்.


இந்தப் பரிசுக் கூப்பன்கள் இரண்டு விதத்தில் பலனைக் கொடுக்கின்றன. இவை நல்ல பரிசுகளாக இருப்பதுடன் உங்களுக்கும் உங்கள் அபிமானிகளுக்கும் தேசத்தின் சுபிட்சத்துக்கு உதவவும் சந்தர்ப்பம் அளிக்கின்றன.

இதர விவரங்களுக்கு உங்களருகில் உள்ள தபால் ஆபீஸ்களில் விசாரியுங்கள்

சிறு சேமிப்பு திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்

பம்பாய் அரசாங்க விளம்பர இலாகாவினால் வெளியிடப்பட்டது





தீபாவளி

தீபாவளி ஒரு சாதிய மஹோத்ஸவ தினம். பாரதர்களைப் பிடித்து வந்த கொடுங்கோன்மையை யொழித்துப் பாரதர்களுக்கு ஸ்ரீபகவான் சுதந்திரம் அருளிய உத்தம தினம். கொடுங்கோலனை நரகாசுரன் தன் வர்க்கங்களுடன் நீறுபட்டழிந்த தினம். தேவர்கள் சுவர்க்கத்தை மறுபடியும் அடைந்த தினம். பாரத நாட்டின் பெண்மணி யொருத்தி, போர்முகத்தில் கார்முகத்தை வளைத்து அம்பெய்து கொடுந் தொழிலரக்கர்களை அழித்து நாட்டினருக்கு நன்மை செய்த நல்ல திருநாள். இதை நாம் கொண்டாட வேண்டியது மெத்த அவசியமே.

இந்தத் தினத்தின் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. ஆகையால் அவைகளை அவசியமாய்க் கவனித்து நடக்க வேண்டும். விடியற்காலத்தில் எழுந்திருத்தல், மங்கள ஸ்நானம் செய்தல், புதுக்கோடி வஸ்திரம் அணிதல், கடவுளை வழிபடுதல், அறுசுவை புண்டியருந்தல், தீபாலங்காரம் செய்தல், வெடி சுடல், புதுக் கணக்கு வைத்தல், தனபூஜை செய்தல் முதலான எல்லா விவரங்களுக்கும் அர்த்தம் இருக்கிறது. இதில் எதையும் அற்பமாய் எண்ணிவிடக் கூடாது.

நமது பாரதநாடு சுதந்திரமடைந்த தினமாகையால் நாம் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். தற்பொழுது பாரத நாட்டில் உண்மையான சுதந்திரமில்லை. உண்மையான சுதந்திரத்தைப் பெற முயன்றும் பல கஷ்டங்கள் உண்டாகின்றன. கஷ்டங்கள் உண்டானாலும் நம்மவர்கள் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு எடுத்த காரியத்தை விடாமல் முயன்று பலவித நன்மைகளைச் செய்து வருகின்றனர். இப்பொழுதுதான் தேசத்தில் உண்மையான சுதந்திர உணர்ச்சி கிளம்பிய பிறகு, புதிய யாத்திரை ஸ்தலங்களும் தீர்த்தங்களும் புண்ய க்ஷேத்திரங்களும் பண்டிகை தினங்களும் ஏற்பட்டு விட்டன. பாரதம் சுயராஜ்யமடைந்து விட்டால் இந்தப் புதிய பண்டிகைகளிற் புதிய தீபாவளி என்றும் சாதிய மஹோத்சவ தினம் ஒன்று ஏற்பட்டுவிடும். அம்மாதிரியாகப் பாரத தேசத்தில் புதிய தீபாவளியை ஏற்படுத்த எண்ணிறந்த காரியங்களை, செய்து வரும் தேசபக்தர்களுடைய இஷ்ட எண்ணங்களே,

மணியம் —





எல்லாம் வல்ல இறைவனான கடவுள் ஈடேற்றி வைப்பாராக! தேசபக்தர்கள் மனம் சலியாமல் திடசித்தத்துடன் தங்கள் காரியங்களைச் செய்வார்களாக!

[தீபாவளியைப் பற்றிப் பாரதியாரின் கருத்து என்ன? வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் சுதந்திர நோக்குடன் கவனித்த கவிஞருக்குத் தீபாவளியிலும் ஒரு சுதந்திர அம்சம் தெரிந்தது. தீபாவளி சாதாரணப் பண்டிகை அல்ல, கொடுங்கோன்மை சக்தியினிடமிருந்து பாரதநாடு விடுதலை பெற்ற நன்னாள் என்று கூறுகிறார் அவர். சுதந்திர இந்தியாவில் இத்திருநாளை ''ஜாதீய மஹோத்ஸவ ஸுதின''மாகப் புதுப் பொலிவுடன் கொண்டாடுவார்கள் என்ற கருத்தை வெளியிட்டார் கவிஞர்.

பாரதி நூல்களில் இதுவரை வெளிவராத இக் கட்டுரை பாரதியார் ஆசிரியராக இருந்து புதுவையிலிருந்து நடத்திவந்த ''இந்தியா'' வாரப் பத்திரிகையின் 1909-ம் வருஷ தீபாவளி இதழில்-சரியாக நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் தலையங்கமாக வெளிவந்தது. இக் கட்டுரையை உதவியவர்: திரு ரா. அ. பத்மநாபன்.]

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்



நினைவுப் படலங்கள்

குற்றால மலையின் மேல் ஒரு மொட்டைப் பாறை இருக்கிறது. சிற்றருவியைத் தாண்டிக் கொஞ்ச தூரம் போனீர்களானால் அந்தப் பாறையை அடைந்து விடுவீர்கள்.

சுற்றிலும் பசுமையான மரங்களும் செடி கொடிகள் முதலியனவும் அடர்ந்து வளர்ந்திருக்கும். காட்டு மல்லி முதலான புஷ்பங்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும். அவைகளின் மணம் பாறையில் எங்கிருந்தாலும் 'கம்'மென்று அடித்துக் கொண்டிருக்கும். இடையிடையே அணில், குரங்கு, காட்டுக்கோழி மற்றும் பட்சி வகைகளின் அரவம் கேட்கும். சதா காற்று 'ஜில்'லென்று வீசிக் கொண்டிருக்கும்.

பாறையில் நின்றுகொண்டு மேலே அண்ணாந்து பார்த்தீர்களானால் நீல வானம் தெரியும்; அதில் இங்குமங்குமாகச் சிறுசிறு மேகக் கூட்டங்கள் வெண் பஞ்சு போல் ஓடிக் கொண்டிருக்கும். வடக்கு முகமாகத் திரும்பிப் பார்த்தீர்களானால் ஒரே பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகள். அவைகளின் நடுவே தென்னை மரங்கள் கொத்திட்டு நிற்கும். தூரத்தில் திருமலை முருகன் தரிசனம் தருவான்; ஒரு மூலையில் தென்காசிக் கோவிலின் இடிந்த கோபுரத்தின் உச்சி காட்சி தரும்.

மாலை சுமார் ஐந்தரை மணி அளவில் அங்கு வந்து விட்டீர்களானால் ஒரு சத்சங்கம் கூடியிருப்பதைக் காண்பீர்கள். எல்லாருமாகச் சேர்ந்து நாலைந்து பேர்கள்தான் இருக்கும். சில வேளைகளில் இன்னும் இரண்டொருவர் வந்து சேருவதும் உண்டு.

அந்தக் கூட்டத்துக்கு நடுவில் நரைத்த தலையும் மீசையும் கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே, அவர்கள் தான் எங்கள் டி. கே. சி. தாத்தா.

மாலையில் உட்கார்ந்தவர்கள் இருட்டுவது கூடத் தெரியாமல் உட்கார்ந்து கொண்டே இருப்பார்கள். கவிதை அனுபவத்திலும் கலை விமர்சனத்திலும் ஈடுபட்டுவிட்ட அவர்களுக்கு நேரமேது, கணக்கேது? ஒரே ஆனந்தமும் குஷியும் கும்மாளமும் தான்.

ஒரு நாள் மாலையில் சத்சங்கம் ஏனோ சேரவில்லை. அன்று நான் மட்டுமே மலை மேல் அவர்களுடன் ஏறினேன். மலையில் ஏறுவதும் இறங்குவதுமே ஒரு கலை என்பதை அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டோம். ''ஏறும்போது ஒரே மடியாய் விறுவிறு என்று ஏறக்கூடாது. பத்தடி, பதினைந்தடிக்கொருதரம் நின்று விடவேண்டும். நின்று நின்று ஏறினால் மலைமேல் ஏறுகிறோம் என்றே நமக்குத் தோன்றாது. ஏன், எவரெஸ்ட் சிகரத்துக்குக்கூட ஜுலாய்ப் போய்ச் சேர்ந்து விடலாம்'' என்று சொல்வார்கள்.

மெள்ள மெள்ள ஏறிப் பாறையின் உச்சியை அடைந்து விட்டோம். மேல்த் துண்டை எடுத்து இரண்டாக மடித்து ஒரு உதறு உதறிவிட்டுக் கீழே விரித்து அதன் மேல் உட்கார்ந்து கொண்டார்கள். நானும் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு நோட்டுப் புஸ்தகத்தை எடுத்தார்கள். அதில் உள்ள ஒரு பாடலை எடுத்துத் தமக்குத் தாமே பாடிக் கொண்டிருந்தார்கள், சுமார் ஒன்றரை மணி நேரம். என்னிடம் அந்தப் பாடலைக் கேள் என்று அவர்கள் சொல்லவில்லை.

பிறகு கீழே இறங்கினோம். இறங்கும் போதும் நின்று நின்றுதான் இறங்கினோம். வழியில் ஒரு இடத்தில் நின்ற போது தற்செயலாக என் கவனத்தை ஒரு மரம் கவர்ந்தது. அந்த மரம் ஒரு சிறு பாறையின் மேல் முளைத்து நின்று கொண்டிருந்தது. 'பாறையின் மேலே எப்படியடா மரம் முளைத்தது? வேடிக்கையாய் இருக்கிறதே!' என்று எனக்குப் பட்டது. இந்த அதிசயத்தைப் பற்றித் தாத்தாவிடம் சொல்லாமல் இருக்க முடியுமா, என்ன?

அவர்கள் மரத்தின் பக்கத்தில் போய்ப் பார்த்தார்கள். பக்க வாட்டிலும் பார்த்தார்கள். பிறகு என்னையும் அழைத்து ஒரு பக்கத்தில் பார்க்கச் சொன்னார்கள். அந்தப் பக்கத்தில் பாறையில் ஒரு பிளவு மேலிருந்து கீழ் வரையும் வெடித்திருந்தது. அந்தப் பிளவின் வழியாக மரத்தின் வேர் பூமிக்கு வந்து பதிந்து விட்டிருந்தது.

பாறைக்கு அடியில் உள்ள மண்ணில் விதை விழுந்திருக்கிறது. அது துளிர்த்துப் பிறகு செடியாக வளர்ந்து வந்திருக்கிறது. செடி வளர வளரப் பாறையும் அதற்கு இடம் கொடுத்து வந்திருக்கிறது. அதன் பயன் பாறையில் பிளவு உண்டாகி விட்டது. செடி மரமாகப் பாறையிலும் பெரிதாய் வளர்ந்து விட்டது.

''எந்த விஷயத்தையும் நயமாகவும் அன்போடும் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வோமேயானால் எல்லாம் தன்னால் நடந்து விடும். நம் வார்த்தைக்கும் மதிப்பு உண்டு. கடிந்து சொல்வோமேயானால் ஒருவரும் அதை ஏற்க மாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டுக் கீழ்க்காணும் பாடலைச் சொன்னார்கள்:

வெட்டனவை மெல்லெனவை
வெல்லாவாம், வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில்
பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப்
பாறை — பசுமரத்தின்
வேருக்கு நெக்கு
விடும்.

தீப. நடராஜன்



பாடலை ஒரு தடவை சொன்னார்கள்; இரண்டு தடவைகள் பாடினார்கள். என்னைத் திரும்பச் சொல்லச் சொன்னார்கள். நானும் ஒரு தடவை சொன்னேன். இரண்டு தடவைகள் சொன்னேன், என் உள்ளத்தில் பதிந்து விட்டது பாடல், உருப்போடாமலேயேதான்.

விளக்கம் என்று ஒன்றுமே சொல்லவில்லை, அவர்கள். 'வேழம்' என்றால் யானை; 'கோல்' என்பது அங்குசம் என்று மட்டுமே சொன்னார்கள். பாட்டு எனக்குப் புரிந்து விட்டது. புரிந்து விட்டதோடல்லாமல் அனுபவித்தும் விட்டேன். இன்றும் பாடலை மனசுக்குள்ளேயே அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறேன். சொல்லச் சொல்ல நாக்கில் சுவை ஏறத்தான் செய்கிறது.

எனக்கு அவர்கள் சொன்ன பாடல்களையும், நான் ரசித்த பாடல்களையும் ஒரு நோட்டில் தம் கைப்படப் பதம் பிரித்து அழகாக எழுதித் தந்திருக்கிறார்கள்; இந்தப் பாட்டையும் அன்று இரவு அந்த நோட்டில் எழுதித் தந்தார்கள். பாடலுக்கு முன் எழுதியிருக்கும் குறிப்பு: "கடினமான வார்த்தைகள் இதமான வார்த்தைகளை வென்றுவிடமாட்டாது."

அந்த நோட்டில் உள்ள பாடல்கள் அனைத்தும் நான் அனுபவித்த பாடல்களே. பெரும்பான்மையான பாடல்கள் ஒவ்வொன்றும் நேரடியான அனுபவம் ஒன்றை அடைந்த பின்தான் எனக்குச் சொன்னார்கள். ஒரு விஷயத்தை அனுபவித்த பின் கவிதையைக் கேட்கிறபோது வெகு சுலபமாக விளங்கி விடுகிறது குழந்தைகளுக்கு.

கவிதையில் விஷயம் பிரதானம் அல்ல. கவிஞன் எப்படி அதை அனுபவித்தான், நமக்கு எப்படி அதைக் கவிதை உருவில் பாவத்தோடு கொடுக்கிறான் என்பதே முக்கியம் என்பார்கள்.

குழந்தைகளுக்குக் கவியை எப்படிச் சூழ்நிலையை வைத்துக் கொண்டு சொல்வார்களோ, அதே போல்தான் எந்த விஷயத்தையுமே அது அதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலை உருவாகும் போது தெளிவாகவும் அனுபவிக்கும் வகையிலும் எடுத்துச் சொல்வார்கள்.

குழந்தைகளுக்கு எப்படி நேருக்கு நேராக ஒரு விஷயத்தைக் காட்டிய பின் கவியைச் சொல்வார்களோ, அதேபோல் கவியின் விஷயத்தைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தினது மாதிரி விளக்கம் கொடுத்த பின்தான் பெரியவர்களுக்குப் பாடலைச் சொல்வார்கள்.

கவியின் விஷயம் நன்கு விளங்கி விட்டது காரணமாகக் கவியின் உருவத்தையும் பாவத்தையும் கண்டு அனுபவிக்க முடிகிறது. இந்த ஆனந்தத்துக்காக எப்போதும் பத்துப்பேர்கள் இருந்தபடியே இருப்பார்கள், அவர்களைச் சுற்றி.

நண்பர்களும் விருந்தினருமாக வீடு எப்போதும் கலகலவென்று இருக்கும். ஒருவரும் இல்லாமல் போய் விட்டால் தான் அவர்களுக்குச் சங்கடம். பாடல் சொல்வதற்கும், அதைக் கேட்டு அனுபவித்து ஆனந்தப்படவும் ஆள் இல்லையே என்று ஏங்குவார்கள்; அந்தக் குறையை நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் மூலமாகப் பார்க்கலாம்.

"சரி! சௌகரியப்பட்டவுடனேயே புறப்பட்டு விட வேண்டும்—நாள் நக்ஷத்திரம் பார்க்காமலே. குற்றாலம் வறண்டுபோய் விட்டது—மழை அருவியெல்லாம் இருக்கத்தான் செய்கிறது — மனுஷாள் இல்லை. தமிழையோ பண்பாட்டையோ கேட்க ஆளில்லை. ....இன்று புறப்பட்டுப் போய் விட்டார், ஊருக்கே. ஏதோ பதினைந்து நாட்களில் வருவதாகச் சொல்லித்தான் போயிருக்கிறார். பட்டிக்காட்டு மாட்டுக்குப் போட்ட மாதிரி மனுஷனுக்கும் போட்டுவிடும் மூட்டுக்கட்டையை!"

சதா நண்பர்களுடன் உறவாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் மனசில் உண்டு. பக்கத்தில் இருந்தால் அவர்களிடம் வண்டியைக் கட்டிக் கொண்டு போய் விடுவார்கள். ரொம்பத் தூரத்தில் இருப்பவர்களிடம் எப்படிப் போவது? அதற்குக் 'கடிதம்' என்ற சாதனத்தைக் கைக்கொண்டார்கள்.

காலையில் எழுந்ததும் மேல் வீட்டுக்குப் போனால் அவர்கள் படுக்கைக்குப் பக்கத்தில் இருக்கும் ஷெல்பில் ஒரு பத்துக் கவர்கள் விலாசம் எழுதி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கடிதமும் பத்துப் பக்கம் பதினைந்து பக்கம்தான்.



கடிதங்களை ஒரு நாளும் அடுத்தவரைக் கொண்டு எழுதச் சொல்ல மாட்டார்கள். எத்தனை கடிதங்கள் எழுதினாலும் தாமே தான் எழுத வேண்டும். இரவு தூக்கம் இல்லையானால் எழுந்து உட்கார்ந்து, 'பெட் லைட்'டைப் போட்டுக் கொண்டு கடிதம் எழுத ஆரம்பித்து விடுவார்கள்.

கட்டுரைகள் எவ்வளவு குறைத்து எழுதியிருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அதிகமாக எழுதியிருக்கிறார்கள் கடிதம். ஒவ்வொரு கடிதமும் ஒரு இலக்கியப் பொக்கிஷம்தான். ஹாஸ்யம், பரிவு, குத்தல், கேலி, எக்காளம் — இப்படி எத்தனை எத்தனையோ ரஸங்களைக் காணலாம் அவர்களின் கடிதங்களில்.

குழந்தைகளுக்கு எழுதினால் 'அருமைக் கண்மணி' என்றே எழுதுவார்கள். நண்பர்களுக்கெல்லாம் 'அருமை நண்பர்' என்றும், பெண்களுக்கு எழுதும்போது 'அருமைப் புதல்வி' என்றும் எழுதுவார்கள். அருமைப் புதல்வியருள் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியைப் படித்துப் பாருங்களேன்:

"7உ. எழுதிய கடிதம் கிடைத்தது. பம்பாயில்தான் இருக்கிறீர்கள். பம்பாய்க்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது வந்தது கடிதம் தில்லியிலிருந்து.

தூரத்தை யெல்லாம் கவனியாமல் தில்லிக்கே போய் விடுகிறீர்கள். சீனுவின் மனைவியாளுக்கு அஞ்சு மாதம். இங்கே தங்கத்துக்கு மூன்று மாசம். மசக்கையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனாலும் தாயாகப் போகிறோம் என்ற ஆனந்தம் உள்ளுக்குள் இருந்து கொண்டு தானே இருக்கிறது. இயற்கை எத்தனை எத்தனையோ அற்புதங்கள் இயற்றிக் கொண்டிருக்கிறது. அவைகளில் ஒன்று இந்த ஆனந்தம். இந்த ஆனந்தம் தானே உலகத்தைக் காப்பாற்றுகிறது.

ஒரு பள்ளிக்கூடத்தைக் காப்பாற்ற முடியவில்லை. ஒரு கோயிலைக் காப்பாற்ற முடியவில்லை. ஒரு பண்பாட்டை—கம்பரது பண்பாட்டைத்தான் — காப்பாற்ற முடியவில்லை. ஆனால் கோடானுகோடி கொண்ட சமுதாயத்தை அல்லவா ஒரு ஆனந்தம் காப்பாற்றி வருகிறது. சீனுவின் மனைவியாளுக்கு என் சந்தோஷத்தைத் தெரிவிக்க வேணும்."

அன்பும் நட்பும் இலக்கியத்தோடு அவர்கள் வாழ்க்கையில் பங்கு கொண்டிருந்தன. நட்பை வளர்க்கவும், அன்பைத் தெரிவிக்கவும் என்னவென்னவெல்லாமோ எழுதினார்கள், செய்தார்கள். அப்படி நம்மை எல்லாம் அவர்களோடு பிணைத்த காரியத்தைப் பற்றி ராஜாஜித் தாத்தா சொல்கிறார்கள். கேளுங்கள்:

"அன்பு என்னும் வெள்ளத்தில் மூழ்கித் தெய்விக மகிழ்ச்சியை அனுபவித்து நன்றி என்னும் தெய்வ வழிபாட்டில் இருக்கிறீர்கள். இது தங்கள் எழுத்தில் உருவம் கொண்டு விளங்குகிறது. அதைப் படித்துப் படித்து நான் அடையும் சந்தோஷம் அங்கே நான் வந்திருந்தாலும் அடைந்திருக்க மாட்டேன்.

ஸ்நேகம் உண்டாக்கிக் கொள்வதும், அதைக் காப்பாற்றுவதும் ஒரு தெய்வ வரமாகத்தான் ஒருவன் அடையலாம். இந்த சக்தி தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். வால்மீகி ராமாயணத்தில் சுக்ரீவன் ஹநுமானுக்குச் சொல்கிறான்:

'சர்வதா சுகரம் மித்ரம் துஷ்கரம் பரிபாலனம்.'

"எப்பவும் நட்பு சுலபமாகச் செய்து கொள்ளலாம். ஆனால் அதைக் காப்பாற்றுவது கஷ்டமான வேலை. தாங்கள் இதைச் சுலபமாக, சந்தோஷமாகச் செய்துவிடுகிறீர்கள். வளர்ப்பதில் என்ன இருக்கிறது? இது ஒரு உண்மை. உங்களுடைய இந்தச் சக்தியினால் எத்தனை பேருக்கு வாழ்க்கையில் சந்தோஷம்!"

அன்பும் நட்பும் நிறைந்துள்ள ஒரு உலகத்தை எங்களுக்குத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள் தாத்தா. அந்தப் புண்ணிய உலகில் உலவுவதற்கு ஏற்ற உள்ளத்தையும் எங்களிடத்தில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; வேறு என்ன சம்பத்து வேண்டும்?



மகாபுருஷ விஜயம்

நா. ரகுநாதன்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை ஐம்பது வருஷங்களாக அலங்கரித்து வரும் ஸ்ரீமத் ஆசார்ய ஸ்வாமிகளைத் தென்னாட்டில் பார்த்திராதவர்கள் அநேகமாக இருக்க மாட்டார்களென்றே சொல்லலாம். ஒரே ஒரு தரம் தரிசித்து எட்ட இருந்து வணங்கி வழிநடந்தவர்களுக்கும் இப் பெரியாரைப் பற்றி நினைத்த அளவில் மனத்துக்கு உற்சாகமும் அமைதியும் ஏற்படுவது கண்கூடு. சாந்தமே உருக் கொண்டாற் போன்று மனத்தைக் கவரும் தோற்றம்; புன்முறுவல் பூத்த முகப் பொலிவு; அருள் நிறைந்த பார்வை. நாலு வார்த்தை பேசினாலும் மறக்க முடியாத பேச்சு. அதில் அவ்வளவு ஆழ்ந்த கருத்தும், கனிவும், இனிமையும் காணலாம். இந்த மகான் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு சென்னைக்கு மறுமுறை விஜயம் செய்து நவராத்திரி பூஜையை விமரிசையாக நடத்தி, பதினாயிரக்கணக்கான பக்தர்களின் மனத்தைக் குளிர வைத்துக் கொண்டிருக்கிறார்.

1894ம் வருஷம் வைதிகப் பெருங்குடியில் தோன்றினார்கள் ஸ்வாமிகள். பள்ளிக்கூடத்து ஆங்கிலப் படிப்பில் நல்ல சுறுசுறுப்பும் மேதாவிலாசமும் காணப்பட்டது. அப்பொழுது பீடத்திலமர்ந்திருந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (நமது ஸ்வாமிகளுக்குப் பரம குரு) வெகு சாந்தர். பீடத்துக்குப் பூர்ண தகுதியுள்ளவரைச் சிறு பிராயத்திலேயே தேர்ந்தெடுத்துத் தகுந்த பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கருதினார். அவர் கடாக்ஷம் சிறுவன் ஸ்வாமிநாதன்மேல் விழுந்தது.

அவர் எண்ணப்படி, அவருக்குப் பிறகு சில நாட்களே பட்டத்திலிருந்த ஸ்ரீ மகா தேவேந்திர ஸரஸ்வதி அவர்கள் ஸித்தியடைந்ததும், மடத்து அன்பர்கள் நமது ஸ்வாமிகளின் பெற்றோர்களை நாடினர்.

பெற்றோர்கள் அன்புப் பிள்ளைக்கு அதிபால்யத்தில் ஸந்நியாஸமா என்று எண்ணிக் கலங்கினார்கள். ஆனால் ஐந்து வயதில் உலகத்தை உதறித் தள்ளித் தாய் மனம் நோவாமல் விடைபெற்று வீட்டை விட்டு வெளியேறிய ஆதி சங்கராச்சார்யரவர்கள் பரம்பரையில் ஈடு இணையற்றவராய் விளங்கப் போகும் நமது ஸ்வாமிகளுக்குப் பதின்மூன்றாவது வயதிலேயே விரக்தியும் லோகானுக்கிரஹ புத்தியும் வந்ததில் ஆச்சரியமில்லை. தயங்காமல் தம்மை மடத்துக்கு அர்ப்பணம் பண்ணிவிட வேண்டுமென்று தாய் தந்தையரைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் ஆஸ்திக உலகத்தின் அதிர்ஷ்டவசத்தால் ஒப்புக் கொண்டார்கள். ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி என்ற ஆச்ரமப் பெயருடன் நமது சுவாமிகள் பட்டத்தில் அமர்ந்தார்கள். இப்படிப் பதின்மூன்றாவது வயதில் அவர் பிறந்த குடும்பத்தின் பற்றுவிட்டது. ஆனால் உலகம் முழுவதும் அவர் குடும்பமாயிற்று.

நமது ஸ்வாமிகளும் பீடத்துக்குத் தகுந்தவரை ஆராய்ந்தெடுத்து ஸந்நியாசம் கொடுத்து ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி என்ற தமது முக்கிய சிஷ்யராக்கிப் பீடத்தின் பொறுப்புகளையும் அவர்களுக்கு உணர்த்தி வருகிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் ஸ்வாமிகளுக்கு ஸம்ஸ்க்ருதம் கற்பிக்கப்படவில்லை. பட்டத்துக்கு வந்த சில மாதங்களுக்கெல்லாம் ஜம்புகேசுவரத்தில் அகிலாண்டேசுவரி அம்மனுக்குத் தாடங்கப் பிரதிஷ்டை பண்ணும் பெரும் பாக்கியம் ஸ்வாமிகளுக்குக் கிட்டியது. அப்பொழுது இந்த பால ஸந்நியாஸியைப் பார்த்தவர்கள், பலி சக்கரவர்த்தியின் யக்ஞ வாடத்திற்கு வந்த வாமன மூர்த்தியைக் கண்டு "பால சூரியன் உதித்தானோ?" என்று மயங்கிய ரிஷிகளைப் போல ஆச்சரியமுற்றார்கள்.

அது முதல் சுமார் ஐந்து அல்லது ஆறு வருஷம் மடத்துக்குச் சொந்தமான மஹேந்திரமங்கலம் என்ற கிராமத்தில் காவிரிக் கரையில் தனியே இருந்து ஸாஹித்யம், சாஸ்திரம் முதலான எல்லா வித்தைகளிலும் தகுந்தவர்களிடம் முறையாகப் பாடம் கேட்டு வெகு சுலபமாகக் கிரகித்துத் தேர்ச்சி பெற்றார்கள். ஸங்கீதத்தில் முக்கியமாகவும், இன்னும் பல கலைகளிலும் தனி முயற்சி பண்ணாமலே, வாழ்வினைப் பயனாக ரஸம் ததும்பிய உள்ளத்தில் அதி நுட்பமான அறிவும் ஆற்றலும் உண்டாயிற்று. பல பாஷைகளில் மணிக்கணக்காகப் பல்லாயிரம் பேர்கள் கொண்ட கூட்டங்களில் பிரசங்கம் செய்து மக்களின் மனத்தைக் கவர்ந்து ஒருமைப்படுத்தும் சக்தி ஸ்வாமிகளிடம் அலாதி.

அன்று முதல் இன்று வரை கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொன்னபடி உண்மையான மகாத்மாக்களாலேயே சாதிக்கக் கூடிய 'லோக ஸங்க்ரஹம்' என்ற நிகரற்ற பணியைச் செய்து வருகிறார்கள். காசி முதல் கன்யாகுமரி வரையில் ஸ்வாமிகள் அனேகமாகக் கால் நடையாகவே ஸஞ்சரித்துத் தமது தபஸின் சக்தியாலும் சொல் வன்மையாலும் சீலத்தாலும் ஸநாதன தர்மத்துக்குப் புத்துயிர் தந்து வந்திருக்கிறார்கள். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல் அவரவர் க்ஷேமலாபங்களைப் பரிவுடன் விசாரிப்பது ஸ்வாமிகளுடைய எல்லையற்ற கருணையை விளங்கச் செய்கிறது. அவர்களுடைய ஆச்சரியமான ஞாபக சக்தியைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை.

இப்பேர்ப்பட்ட சிறந்த ஆத்ம குணங்கள் பொருந்தியவர்களே அத்வைத ஸம்பிரதாயத்துக்கு அரணாக அமைக்கப்பட்ட பீடங்களில் ஆசார்யர்களாக இருந்து நிர்வகிக்க முடியும். கர்தமப் பிரஜாபதி தபஸ் செய்து ஸ்ரீ மகாவிஷ்ணு பிரசன்னமானதும் தமக்கு மோக்ஷம் வேண்டுமென்று பிரார்த்திக்க, "நீ இப்பொழுது அதற்கு ஆசைப்படாதே. பூததயை செய்து சகல ஜீவராசிகளுக்கும் அபயம் அளித்து பிரஹ்ம—ஆத்ம ஐக்யத்தைத் தெரிந்து என் திருவடிசேருவாய்" என்று அருளினாராம். இதில் சொன்ன இரண்டு தர்மங்களில் பூததயை என்பது கிருகஸ்தனுக்கும் அபயம் என்பது ஸந்நியாசிகளுக்கும் பிரத்தியேகமாக அமைந்தவை. "எவனைக்கண்டு உலகம் நடுங்குவதில்லையோ, எவன் உலகத்தைக் கண்டு வெருளுவதில்லையோ, அவனே எனக்கு இனியவன்" என்று பகவான் கீதையில் சொன்னதும் இந்த ஸந்நியாசிகளைப் பற்றியே.

உலகத்துக்கு அபயம் அளிக்கும் துறவிகள் தனிமையில் ரமிப்பது இயல்பு. அப்படியிருந்தும், ஆஸ்திக சமூகத்தின் க்ஷேமத்தைக் கருதி, ஆதிசங்கர பகவத் பாதரும், ஸ்ரீ ராமானுஜாச்சாரியர், ஸ்ரீமத்வாசாரியர், மற்றுமுள்ள ஸம்பிரதாயப் பிரவர்த்தகர்கள் எல்லோரும் மதப் பிரசாரங்களுக்கும் ஸதாசாரத்தைப் பரப்புவதற்கும் ஆங்காங்கு மடங்களை ஏற்படுத்தி ஸந்நியாசிகளையே மடாதிபதிகளாக அமைத்திருக்கிறார்கள். அவர்களாலேயே பல இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும்



நடுவே ஹிந்து சமூகம் ஸநாதன தர்மத்தில் ஆழ்ந்த நம்பிக்கையையும் பிடிப்பையும் இழக்காமல் வந்திருக்கிறது. இந்தப் பீடங்களில் அமர்ந்த ஸந்நியாசிகள் தங்கள் ஆச்ரம தர்மங்களுக்கு விரோதமில்லாமல் பொதுமக்களின் நலனுக்காக இடைவிடாமல் உழைக்க வேண்டியிருக்கிறது. இதற்குச் சிறந்த ஆத்ம குணங்களே இன்றியமையாத சாதனம்.

இப்பேர்ப்பட்ட உயரிய குணங்கள் நம் ஸ்வாமிகளிடத்தில் ஒளி வீசுகின்றன. உடலை வற்றச் செய்யும் கடுந்தவம், சலியாத உழைப்பு, மதமாத்ஸர்யம், சம்பிரதாயச் சண்டை முதலியன அவர்கள் இருக்கும் எல்லையிலேயே தலை காட்டுவதில்லை. எம் மதத்துக்கும் சம்மதமான பரமாத்ம தத்துவத்தையே எப்பொழுதும் போதித்து வருகிறார்கள். தவிர, அவரவர்களுடைய குல தர்மத்தையும், சம்பிரதாயத்தையும் அனுசரித்துக் கடவுளை வழிபட்டால் எல்லோரும் சீராக வீடு பெறலாமென்றும் உலகத்தில் அர்த்தமற்ற வகுப்புவாதச் சண்டைகளும் மதச் சண்டைகளும் ஒழியும் என்றும் போதித்து வருகிறார்கள். ஒழுங்கான வாழ்வுக்கு இன்றியமையாத பொருளாதாரத்தைத் தேட வேண்டியது அவசியமாயினும், உடலே ஆன்மா என்ற நாஸ்திகவாதத்தில் மாட்டிக் கொண்டு தடுமாறாதபடி மக்களைக் காப்பதற்கு வேதமும் வேதத்தில் சொல்லிய தர்மங்கள், கர்மங்கள் முதலியவை இன்றியமையாதவை என்று நினைப்பூட்டி வருகிறார்கள். வேதத்தைக் காப்பதற்கென்று ஒரு தனி வகுப்பு ஹிந்து சமூகத்தில் இருந்து தன் கடமையைச் செய்து வந்ததாலேயே தர்மம் இதுவரையில் காப்பாற்றப்பட்டது என்பதை வற்புறுத்துகிறார்கள்.

இந்த உண்மைகள் பரவிப் பலங்கொள்வதற்காக ஸ்வாமிகள் பல ஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் இரவு பகலாய் எந்தெந்த வகையில் நன்னெறியையும் நல்லொழுக்கத்தையும் பரப்பலாமென்று சிந்தித்து வருகிறார்கள். வேததர்ம பரிபாலன ஸபை மூலம் வேதமோதுபவர்களுக்கும் சாஸ்திரங்களைக் கசடறக் கற்பவர்களுக்கும் பரீட்சைகள் நடத்திப் பரிசுகள் வழங்கி ஊக்கமளித்து வருகிறார்கள். திருப்பாவை, திருவெம்பாவை ஆறங்க மகாநாடுகளைத் தமிழ் நாடு முழுவதிலும் கூட்டி ஒவ்வொருவரும் தன் இஷ்ட தேவதையினிடத்தில் பக்தி செய்வதற்காகப் பிற தெய்வங்களிடத்தில் அசூயையோ அவமதிப்போ கொள்ள வேண்டியதில்லை என்றும், எல்லாத் தெய்வங்களின் வழிபாடும் பரம்பொருளின் வழிபாடே என்று தெரிந்தவன் எல்லோரும் ஒரு கடவுளின் மக்கள் என்பதனாலேயே பிறரிடம் அன்புகொண்டு ஒழுகுவான் என்றும் விளக்கி வருகிறார்கள். இந்த மகாநாடுகளில் ஸ்மார்த்தர்களும் வைஷ்ணவர்களும், பிராம்மணர்களும், பிராம்மணரல்லாதாரும் எவ்வளவு ஒற்றுமையாய்ப் பழகி வருகிறார்கள் என்பதைக் கவனித்தால் ஒருமை மனப்பான்மையை வளர்ப்பதற்கு இதைவிட மேலான கருவி எளிதில் கிடைக்காது என்று துணியலாம். கோவில்களில் வார வழிபாடும் இந்த உயர்ந்த நோக்கங்களுடனேயே நடத்தப் பெருக்கம் அளித்தும் வருகிறார்கள்.

வைதிகன் என்ற தனி வகுப்பு இனி முன்போல் பணி செய்ய இயலாது என்று கண்ட நம் ஸ்வாமிகள் வேதம் ஓதத் தகுதியுள்ள எல்லாக் குடும்பங்களிலும் ஆண் குழந்தைகளுக்கு ஏழு வயதுக்குள் உபநயனம் செய்வித்து வேதத்தை முறையே கற்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவதுடன் பள்ளி மாணவர்களுக்கு இந்த நோக்கத்துடன் பண உதவி புரிந்தும் வருகிறார்கள்.

காஞ்சி மடத்தின் ஆதரவில் அறுபது வருஷமாக அத்வைத ஸபை நடந்து வருகிறது. அதற்கு ஸ்வாமிகள் செய்திருக்கும் உபகாரம் எல்லையற்றது. அவர்களுடைய பீடாரோஹணப் பொன் விழாக் கொண்டாட்ட சமயத்தில் அவர்கள் பேரால் ஒரு ஸம்ஸ்கிருத சர்வகலாசாலை நிறுவ வேண்டும் என்று பொதுஜனங்களுக்கு ஆசை பிறந்தது. இதைப்பற்றி இந்தத் தடவை சென்னையில் செய்துவரும் உபந்நியாசங்களில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டு நல்ல முறையில் ஜனங்களின் உற்சாகத்தை உபயோகப்படுத்த உதவியிருக்கிறார்கள். மற்ற சர்வகலாசாலைகளைப் போல் இன்னொன்று ஆரம்பிப்பதில் பிரயோசனமில்லை என்றும் நமக்குத் தொன்று தொட்டுத் தனிச் செல்வமாய் வழங்கி வந்திருக்கும் குருகுலவாசப் படிப்பையே விருத்தி செய்வதில் முனைய வேண்டுமென்றும் சொல்கிறார்கள். வேதம், சாஸ்திரம் முதலிய ஆன்மீகத் துறைகளில் உழைத்த பெரும் படிப்பாளிகளும் புத்திமான்களும் மலிந்து கிடந்த நாட்டில் இந்தச் செல்வம் வரவரக் குன்றி வருகிறது. இன்னும் சில வித்வான்கள் மட்டும் கிராமவாசம் செய்து தம்மைத் தேடி வரும் சீடர்களுக்கு சாஸ்திரங்களைப் போதித்து வருகிறார்கள். இவர்களையும் இவர்களிடத்தில் போய்ப் படிப்பவர்களையும் ஊக்குவித்து அவர்களுக்குத் திரவியசகாயம் செய்து, குருகுலவாசம் என்ற மரம் பட்டுப் போகும் தறுவாயில் புதுத் துளிர் காண வேண்டும் என்று நம் ஸ்வாமிகளின் உள்ளம் துடிக்கிறது. படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் சம்பந்தம், உத்தியோகத்துக்கும் பண சம்பாத்தியத்துக்கும் சம்பந்தம், பணத்துக்கும் சமூக மதிப்புக்கும் தன்மதிப்புக்கும் சம்பந்தம் என்ற இந்தச் சம்பந்தங்களெல்லாம் கற்பிதமென்றும், மேல் நாட்டு மனப்பான்மைக்கு அடிமைப்பட்டவர்களால் வளர்க்கப்பட்டவை என்றும் அழகாக எடுத்துக் காட்டி வருகிறார்கள். படிப்பு ஆத்ம லாபத்துக்காக என்றும், நெறி தவறாது அவனவனுக்கு ஏற்பட்ட தர்மத்தை ஒட்டித் தொழில் செய்து வாழ்க்கை நடத்தச் சம்பாதித்துச் சந்துஷ்டியுடன் வாழ வேண்டுமென்றும், தொழில்களில் உயர்வு தாழ்வு பாராட்டுவது அறியாமை என்றும் ஆன்றோர் போதித்து வந்தபடியே ஸ்ரீமத் ஆசார்யர்களும் பசுமரத்தாணியென மனத்தில் தைக்கும்படி போதித்து வருகிறார்கள்.

''புல்லுக்கும் கீழாகத் தன்னைக் கருதி, மரத்திலும் மேலான பொறுமைகாட்டி, அஹங்காரலேசமற்றவனும் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளிடமும் கௌரவ புத்தி எவன் காட்டுகிறானோ, அவனே ஹரிகீர்த்தனம் செய்யத் தகுதியுள்ளவன்'' என்பது சைதன்ய மஹாப் பிரபுவின் புஷ்பித்த வாக்கு. இத்தகைய உத்தம குணங்களையும் உத்தம பக்தியையும் பார்க்க வேணுமென்றால் நமது ஆசார்யாளிடத்தில்தான் இன்று பார்க்கலாம். இந்த விநயமே நமது சிஷ்யர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஸௌலப்யமாகப் பரிமளித்து எல்லோருடைய மனத்தையும் ஆகர்ஷிக்கிறது. எல்லையற்ற தபஸ் சக்தி, ஸர்வதோமுகமான ஞானம், உலகப்போக்கையும் மனிதர் உள்ளத்தையும் 'எக்ஸ்-ரே' பண்ணிப் பார்க்கும் கூரிய புத்திசக்தி, ஜீவகோடிகளிடத்தில் பேரன்பு, இவ்வளவு காணற்கரிய குணங்களும் ஒன்றுபட்டு உருவெடுத்து வந்தாற்போல் இருக்கும் இப் பெரியார் பொன்மொழிகளை மனத்தில் வாங்கி அந்த உபதேசத்தை நடத்தையில் கைப்பற்றி நமது பாரத சமூகம் மேன்மையடையும்படி சர்வேச்வரன் ஸ்ரீமத் ஆசார்யர்களுக்குத் தீர்க்க ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அருளுவானாக.



ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

நீங்கள் கோத்ரெஜ் வாஷிங் சோப்புத் தூள் போட்டியில் கலந்து கொண்டீர்களா?


எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

சுதந்திர நாட்டின் சுபிட்சப் பாதையில்
சுயதேவைப் பூர்த்தியிலே எமது பணி

C P C

"பிரிமியர்"

எலக்ட்ரிக் மோட்டார்கள்



• 3 & 5 HP மோட்டார்கள் 1440 RPM பால் & ரோலர் பேரிங்குகள் பொருத்தப்பட்டவை

★ நிசப்த ஓட்டம்!
★ நீடித்த உழைப்பு!!
★ குறைந்த செலவு!!!

போன்: 230 தந்தி: "பிரிமியர்கோ"

கோயமுத்தூர் பிரிமியர் கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.

தபால் பெட்டி நெ. 210
அவினாசி ரோடு - - கோயமுத்தூர்
(Factory: PATEL ROAD, COIMBATORE)

பிராஞ்சுகள்:

82-B, டவுன் ஹால் ரோடு மதுரை போன்: 757	169, பாண்டி ரோடு விழுப்புரம் போன்: 63

பாங்கானதும் ஆரோக்கியமுமான கூந்தலுக்கு பிரிலியன்டைன்
அது வசீகர ப்ரெஞ்ச் லாவண்டர் வாசனையை உடையது




பியர்லைன் லாவண்டர் பிரிலியன்டைன்

"ஐஸ்-கூல்"
க்ஷவரத்திற்குப் பின் உபயோகிக்கும் லோஷன் குளிர்ச்சியை அளிக்கிறது—உங்கள் முகத்திற்கு புதிய மலர்ச்சியை அளிக்கிறது. மேலும் வெட்டுக் காயங்களைக் குணப்படுத்த உதவுகிறது.

ஒரு ஜாடி விலை ரூ. 1.94
[உள்ளூர் வரி அலாதி]

PEARLINE-PARIS PRIVATE LTD. P. O. Box 493 BOMBAY 1.

ஆண்டவன் அருள்



எஸ். ஒய். கிருஷ்ணசாமி

ஆண்டவனை அறியாதவர் யாரும் இல்லை. அவருக்குத் தாய் தகப்பன் வைத்த பெயர் அமிருதகிரீசன் என்பது. ஆனால் ஆண்டவன் என்ற பெயர் அவருக்கு நாளடைவில் நிலைத்து விட்டது. இதற்குக் காரணம் அவருடைய அளவில்லாத பக்திதான்; எதற்கும், "ஆண்டவன் அருள்" என்று பதில் சொல்வார். கடற்கரையில் வீசும் காற்று, சூடான காப்பி, புது மோட்டார், நல்ல நிழற்படம், இலவச டிக்கட், ஆண்டு நிறைவு, திருமணம், பொதுக்கூட்டம், போட்டிப் பந்தாட்டம், ரேடியோ சொற்பொழிவு, மாலையில் கதிரவன் மறையும் தோற்றம், எதையும் மனம் குளிரக் கண்டு மகிழ்ந்து, "ஆண்டவன் அருள்" என்பார். அவர் யாரிடமும் சிறிதும் தற்பெருமை பாராட்டிக் கொள்ளமாட்டார்.

"நான் என்ன, சாதாரண வக்கீல். என்னைவிட அதிக புத்திசாலிகள் இருக்கிறார்கள். ஆனால் நான் ஹைகோர்ட்டில் பேசி முடித்ததும், ஜட்ஜ் 'இவ்வளவு அழகான வாதத்தைக் கேட்டுப் பல ஆண்டுகள் ஆகி விட்டன' என்றார். எல்லாம் ஆண்டவன் அருள்" என்பார். காலையில் ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரையில் பூஜையில் ஆழ்ந்திருப்பார். அப்பொழுது யாராவது டெலிபோனில் கூப்பிட்டால், "நான் பூஜையில் இருக்கிறேன். இன்னும் அரை மணியாகும் என்று சொல்லு" என்று தம் சேவகன் சம்பந்தத்தினிடம் சொல்வார். மாலையில் எங்கேயாவது போவதற்கு அழைத்தால், "ஒரு நிமிஷம் இருங்கள். இதோ ஆண்டவன் முன் விளக்கை ஏற்றி ஒரு நமஸ்காரம் செய்து விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறுவார்.

'யாராவது கூப்பிட வரும்பொழுது தான் ஆண்டவனுக்கு விளக்கேற்றுவார்' என்று சிலர் பழிப்பாகச் சொல்வதுண்டு. ஆனால் அதெல்லாம் பொறாமையினால் பேசும் பேச்சு. மொத்தத்தில் அவர் உண்மையான பக்தர். பூஜைப் பெட்டியில்லாமல் வெளியூருக்குப் பிரயாணம் செய்ததே இல்லை. ஆகாய விமானத்தில் போகும்பொழுது கூடப் பூஜைப் பெட்டி கையிலேயே இருக்கும். விமான நிலையச் சேவகன் மற்றச் சாமான்களை எடுப்பதைப்போல் பூஜைப் பெட்டியை எடுக்க வந்தால் சரேலென்று பாய்ந்து அதைத் தாமே எடுத்துக் கொண்டு, "இது என்னுடைய பூஜைப் பெட்டி. நானே எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று உயர்ந்த குரலில் உரைப்பார். யார் வீட்டிலாவது விருந்தாளியாகச் சென்று தங்கி இருந்தாலும் தம்முடைய தினசரி நியமங்களை விடுவதில்லை. குளிப்பதற்கு முன் காப்பி அருந்துவதில்லை என்று முதலிலேயே தெரிவித்து விடுவார். "நான் ஒரு பழைய காலத்து மனிதன். ஏதோ சீமைக்குப் போய்ப் பரீட்சை எல்லாம் தேறி விட்டேனே தவிர, நம்முடைய வழக்கங்களை விடுவதற்கு மனம் வரவில்லை" என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வார். "காசி


பிக்கத்திரிக்காயை விட்டுவிட்டேன். கோவில் பறங்கிக்காயை விட்டு விட்டேன். வெங்காயம் எப்போழுதுமே சாப்பிடுவது இடையாது. மற்றவை எது வேண்டுமானாலும் சாப்பிடுவேன். எல்லாம் ஆண்டவன் அருள்'' என்று அவர் எச்சரிக்கை செய்வார்.

தொழிலில் நேர்மை நெறி தவறுதவர் என்ற பெருமை ஒன்றைத்தான் அவர் தற்புகழ்ச்சியாகப் பேசிக் கொள்வது; ஆனால் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ''நான் என்ன சிலரைப் போல் ஆயிரம் வாங்கிக்கொண்டு நாலாயிரம் கிடைத்தது என்று பொய்யா சொல்கிறேன்? ஏதோ, கட்சிக்காரர்கள் எனக்குச் சட்டம் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; ஆயிரம், இரண்டாயிரம் கேட்டால் பேரம் பேசுவதில்லை. எல்லாம் ஆண்டவன் அருள்'' என்று அவர் உண்மையைத் தெரிவித்து விடுவார்.

தம் மீது சிலர் வீண் அபவாதம் சுமத்துவதைக் குறித்து அவர் வருத்தப்படுவதுண்டு. ''நான் என்னவோ எல்லாருக்கும் வேண்டியவன்தான். ஒருவரிடமும் எனக்குப் பகை கிடையாது. ஆனால் சில நண்பர்கள் நான் ''அந்த ஜட்ஜுக்கு வேண்டியவன், இந்த ஜட்ஜ் நான் வாதாடும் பொழுது கவனித்துக் கேட்கிறார், அதனால்தான் எனக்கு இவ்வளவு 'கேஸ்' கிடைக்கிறது என்று அநியாயமாகப் பேசுகிறார்கள். எல்லாம் ஆண்டவன் அருள்'' என்று மனம் நொந்து கொள்வார். வேறு வக்கீல் யாராவது பெரிய கேஸில் வெற்றி அடைந்தால் அதைப் பெருமைப்படுத்திப் பேசுவார்.

''கோபாலசாமி நேற்று நன்றாகச் சட்டத்தை எடுத்துக் காட்டினார். கேஸ் அவர் பக்கம்தான் தீர்ப்பு. நல்ல புத்திசாலி. நேற்று காலையில் என்னிடம் வந்து நுட்பமான சில சந்தேகங்களை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஏதோ தெரிந்ததைச் சொன்னேன். அதே பிரகாரம் வாதாடி வென்று விட்டார். நான் வெற்றி பெற்றாலென்ன, மற்றொருவர் வெற்றி பெற்றால் என்ன? அதைத்தான் கீதையிலும் கண்ணன் போதித்திருக்கிறார். எல்லாம் ஆண்டவன் அருள்'' என்பார்.

ஆண்டவனுடைய ஆபீஸ் அறை அழகாக ஜோடிக்கப்பட்டிருந்தது. வடக்குப் பாகத்துச் சுவர் சட்டப் புத்தகங்கள் நிரப்பிய அலமாரிகளால் மறைக்கப்பட்டிருந்தது. தெற்குப் பக்கத்து ஜன்னலில் சமக்காளம் போல் குறுக்கே கோடு நெய்த பஞ்சவர்ணப் படுதா காற்றில் அசைந்து கொண்டிருந்தது. ஜன்னல் அருகில் மற்றொரு புத்தக அலமாரி. எதிரில் கேஸ் கட்டுகள் குவித்து வைத்திருந்த ஒரு மரத்தட்டு வரிசை. ஒரு மூலையில் டைப்ரைட்டர் மேஜை. நடுவில் சாம்பல் வர்ணம் பூசின பெரிய இரும்பு மேஜை. மேஜையை ஒட்டித் தடையானில் சுற்றும் நாற்காலி. மேஜை மீது பிரித்தும் பிரிக்காமலும் நாலைந்து புத்தகங்கள். இடது கைப்பக்கம் டெலிபோன். மேஜை மீது ஈசான்ய மூலையில் ''அமிருத கிரிசனுக்கு'' என்று எழுதிக் கையொப்பம் போட்டிருந்த ஒரு மாஜி ஆங்கிலேய நீதிபதியின் படம்.



எதிரே கதவின் மேல் சுவரில் கதர் மாலையால் அலங்கரிக்கப் பட்ட காந்திஜியின் படம். காகிதம் பறக்காமல் இருப்பதற்குப் பித்தளையால் செய்த ''மூன்று குரங்குகள்''. ஒன்று காதைப் பொத்திக் கொண்டிருக்கும். ஒன்று கண்ணை மறைத்துக் கொண்டிருக்கும். ஒன்று வாயைப் பொத்திக் கொண்டிருக்கும். மூன்றும் ஒரே பீடத்தில் ஒன்றோடொன்று ஒட்டினாற்போல் உட்கார்ந்து கொண்டிருக்கும். பார்த்த வர்கள் சிறிது நிமிஷங்களுக்குள் இது என்னவென்று கேட்கா விட்டால், ஆண்டவன் அந்தப் பொம்மையின் தத்துவத்தைத் தாமே சொல்லி விடுவார். ''முதற் குரங்கு தீமையைக் கேட்காது. இரண்டாவது குரங்கு தீமையைப் பார்க்காது. மூன்றாவது குரங்கு தீமையைப் பேசாது. அது தான் வாழ்க்கையின் மேன்மை. ஆண்டவன் அருள்'' என்பார்.

ஒரு நாள் காலையில் மணி ஒன்பதிருக்கும். ஆண்டவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். இடது கைவிரலால் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இருந்தார். இது மேதாவிகளுக்கு ஒரு பழக்கம். முன் காலத்தில், அதாவது இரண்டாவது உலகப்போருக்கு முன், புகழ்பெற்ற ஒரு வக்கீல் வாதாடும் பொழுது பழைய காகிதத் துண்டை விரலில் சுற்றிக் கொண்டே இருப்பார். காகிதம் தீர்ந்தால் அபிப்பிராயத்தின் அருவியும் நின்று விடும். இதற்காக அருகில் ஒருவர் நின்று கொண்டு துண்டுக் காகிதத்தைக் கொடுத்துக் கொண்டே இருப்பார். சிலர் மும்முரமாக எழுதும் பொழுது நாக்கை உள் கன்னத்தில் அழுத்திக் கொள்வார்கள். அப்பொழுது எழுதும் கருத்துக்கள் கடுமையாக இருக்கும்;

ஒருவர் பேசும்பொழுது மற்றொருவர் கால் விரலை அசைத்துக் கொண்டிருந்தால், ''இந்தப் பிதற்றல் எப்பொழுது முடியும்?'' என்று பொருள். பாமரர்களும் பள்ளிக்கூடப் பையன்களும், ''ஒன்றும் தெரியவில்லையே?'' என்பதற்குத் தலையைச் சொறிந்து கொண்டு தயங்குவார்கள். அமிருதகிரிசன் அப்பொழுது ஆலோசித்தது, அன்று கோர்ட்டுக்குப் போக வேண்டுமா, வேண்டாமா என்பதுதான். பத்திரிகையில் பாதி மனமும், கேஸ் இல்லா விட்டாலும் கோர்ட்டுக்குப் போக வேண்டுமா என்ற சர்ச்சையில் பாதி மனமுமாய், கீதையில் ''சம்சயம் படைத்தவன் நசித்து விடுவான்'' என்ற உபதேசத்தையும் எண்ணிக் கொண்டு, நாற்காலியை ஒரு கால் வட்டம் சுற்றி, ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

அப்பொழுது வீட்டின் முன் ஒரு ரிக்ஷா வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து இருவர் கீழே இறங்கினார்கள். முதலில் இறங்கியது சிறுவன். சுமார் பதினேழு வயதிருக்கும்; பின் இறங்கியவர் நடு வயதினர். நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயதிருக்கும். வாலிபன் கையில் ஒரு தோல் பை இருந்தது.

பெரியவர் ஒரு விநாடி இங்குமங்கும் சுற்றிப் பார்த்தார். அப்பொழுது அமிருதகிரீசன் வீட்டின் முன் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பலகையைப் பார்த்துவிட்டுப் பையனைத் தம் அருகில் வரும்படி கையால் சைகை செய்து, அந்தப் பலகையைச் சுட்டிக் காட்டினார். உடனே இருவரும் பலகையை நெருங்கினார்கள். பலகையில் எழுதி இருந்ததைப் படித்துவிட்டு, "சரி சரி" என்று பொருள்படும்படி பெரியவர் தம் தலையை அசைத்தார்.

இந்த நாடகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஆண்டவன், சரேலென்று பத்திரிகையும் கையுமாய் நாற்காலியிலிருந்து எழுந்து உள்ளே மறைந்தார். சில விநாடிகளுக்கெல்லாம் வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

ஆண்டவனுக்குச் சம்பந்தம் என்றொரு வேலையாள் உண்டு. சம்பந்தம் தலைமுறை தலைமுறையாகச் சென்னை நகரத்தையே சார்ந்தவன். வறுமை வாழ்க்கை என்ற பள்ளியைத் தவிர வேறு எங்கும் அவன் படித்ததில்லை. முழு உளுந்துக்கு எண்ணெய் தடவினாற் போல் மினுமினுத்த கருப்பு நிறம் வாய்ந்தவன். சுமார் ஐந்தடி உயரம் இருப்பான். பதினைந்திலிருந்து முப்பது வரையில் என்ன வயது வேண்டுமானாலும் மதிக்கலாம். எதற்கும் அஞ்சாதவன். அவன் பேசும் தமிழ் சைதாப்பேட்டைக்குத் தெற்கே ஒருவருக்கும் விளங்காது. துயரத்திலும் விநோதத்தைத் தான் பார்ப்பான். சுகத்தையும் துக்கத்தையும் ஒன்றுகக் கருதும் வேதாந்தி. வாய்ப்பேச்சில் சம்பந்தத்தை வெல்லவே முடியாது.

"அடே, சம்பந்தம்!" என்றார் ஆண்டவன்.

"கூப்டயா?" என்றான் உள்ளிருந்து கொண்டே சம்பந்தம்.

"உடனே இங்கே வருகிறாயா, உன் தோலை உரிக்கட்டுமா?" என்று கேட்டார் ஆண்டவன்.

"அம்மாடியோ!" என்று சொல்லிக் கொண்டே சம்பந்தம் வேகமாக வெளியில் வந்தான்.

"இதோ பார்; வாசலில் யாரோ வந்திருக்கிறார்கள்; உடனே சட்டையை மாட்டிக் கொண்டு, அவர்களை ஆபீசு அறைக்கு அழைத்துச் செல்; நான் வேறு வேலையாய் இருக்கிறேன்; பத்து நிமிஷத்தில் வந்துவிடுவேன். நடுவில் போய்க் கலைக்க முடியாது என்று சொல்லு. சிறிது நேரத்துக்கெல்லாம் வாசல் கதவை இழுத்துச் சாத்தி விடு" என்று கட்டளையிட்டார். பிறகு அங்கேயே தரையில் உட்கார்ந்து கொண்டு தினசரிப் பத்திரிகையை இரண்டாவது முறை படிக்கத் தொடங்கினார்.

சம்பந்தம் வாசல் கதவைத் திறந்தான்.

"இன்னா ஒணும்?" என்று கேட்டான் வந்தவரிடம்.

"வக்கீல் அமிருதகிரீசர் வீடு இது தானே?" என்றார் பெரியவர்.

"அ ஆம்" என்றான் சம்பந்தம்.

"அவர் இருக்கிறாரோ?"

"இல்லாமெ எங்கே பூட்டாரு? பேப்பர் படிச்சுக்கினுகிறாரு."

"அவரை ஒரு முக்கிய விஷயமாய்ப் பார்க்க வேண்டும்."

"நல்லா பாருங்க. நீங்க ஆபீஸிலே குந்திக்கிட்டிருங்க. நான் போய் இட்டாறேன்" என்று சொல்லிவிட்டு, அவர்கள் இருவரையும் ஆபீஸ் அறையில் அமரச் செய்துவிட்டு, ஓடோடியும் வந்தான் எஜமானனிடம்.

"நான் சொன்னபடி செய்தாயா?" என்று கேட்டார் அமிருதகிரீசன்.

"நல்ல வேலெங்க. கட்சிக்காரங்க போலேருக்குது. எங்காச்சும் பூட்டாங்கன்னு? இதோ வந்திடுவாருன்னு ஆளுங்களே ஆபீஸிலே அப்பேல பண்ணி வெச்சிருக்கேன்" என்று சொல்லி விட்டுத் தன்னுடைய சாமர்த்தியத்தைத் தானே



அனுபவித்துக் கொண்டு புன்னகையுடன் நின்றான் சம்பந்தம்.

சம்பந்தத்தைக் கொலை செய்து இந்தப் பூமியின் பாரத்தைக் குறைக்க வேண்டும் என்று அடங்காத ஆசை சில சமயம் அமிருதகிரீசனுக்கு வருவதுண்டு. இப்பொழுது வந்த கோபத்தில் ஆண்டவனுக்குப் பேச்சே வரவில்லை. பத்திரிகையைச் சம்பந்தத்தின் மேல் விட்டெறிந்தார்; அதைச் சம்பந்தம் எளிதாகப் பிடித்துக் கொண்டான். அமிருதகிரீசன் ஆபீஸ் அறையை நோக்கி மெதுவாக நடந்து சென்றார்.

கதவு திறந்ததும் வந்தவர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள். அமிருதகிரீசன் அவர்கள் இருவரையும் வீற்றிருக்கும்படி கைகாட்டி விட்டுத் தாமும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"உங்களைப் பார்க்கலாம் என்றுதான் வந்தோம்" என்றார் பெரியவர்.

ஆண்டவன் ஒன்றும் பதில் கூறவில்லை.

"உங்களைப் பற்றி எல்லாரும் பெருமையாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். வக்கீல் என்றால் அவரைப் போல் அல்லவா இருக்க வேண்டும்? ஏழைகளிடம் தயவு, கட்சிக்காரர்களிடம் அனுதாபம், நட்பிடம் அடக்கம், பரம பக்தி. இன்றைக்குத்தான் உங்களைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது" என்றார்.

தமக்கும் இவரைப் பார்த்தது பாக்கியமா இல்லையா என்று ஆலோசித்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தார் ஆண்டவன்.

"நேற்றைக்குத்தான் உங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நிறைகுடம் தளும்பாது. இந்தக் காலத்திலே இரண்டெழுத்து படிச்சுட்டா என்ன பாடு படுத்துகிறார்கள்! உங்களைப் பார்த்தால் சீமைக்குப் போனவர் என்று சொல்ல முடியுமா? இதோ மேஜை மீது இருக்கிறதே இது யார் படம்?" என்றார்.

வந்தவர் பலே பேர்வழி. இந்த வேதாந்தமும், பணிவும், கடைசியில் பணத்தைக் குறைப்பதற்காகத்தான் என்பதை ஆண்டவன் அறிவார். இருந்தாலும் கட்சிக்காரராக இருக்கக்கூடும். கேஸ் காகிதங்களை ஜன்னல் வழியாக வெளியே விட்டெறியும் பதவியைத்தான் இன்னமும் அடையவில்லை. என்னதான் சொல்லுகிறார் பார்ப்போம் என்று மனத்தை அடக்கிக் கொண்டார்.

"இந்தப் படமா? இது ஒரு பழைய நீதிபதி. எனக்கு நெருங்கிய நண்பர். ஏதோ ஆண்டவன் அருள்" என்று கூறினார் அமிருதகிரீசன்.

"அப்படிச் சொல்லுங்கள்; உங்களுக்கென்ன? ஜட்ஜு, கவர்னர் எல்லாரும் தெரிந்தவர்கள். இருந்தாலும் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறீர்களா? நம் கையில் என்ன இருக்கிறது? அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அந்த நம்பிக்கை தான் நமக்கு பலம். ஆனால் நம்பிக்கை தான் குறைந்துகொண்டே வருகிறதே. அநியாயம்தான் அதிகரித்துக் கொண்டே வருகிறது. நான் ஒரு சண்டைக்கும் போகாதவன். இருந்தாலும் என்ன செய்வது? அளவுக்கு மீறினால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றார்.

அமிருதகிரீசன் இடது கண்ணால் மெதுவாகக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். வேறு வழி இல்லை. முகவுரையே இன்னும் முடிந்தபாடில்லை.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் யாரோ உங்கள் மீது அக்கிரமமாக வழக்கு...." என்றார்;


"அதெல்லாம் ஒன்றும் இல்லை; என் மீது ஒருவரும் பிராது செய்யவில்லை. கணபதி விஷயத்தில்தான் அநியாயம் நடந்திருக்கிறது."

"யார் கணபதி?"

"அடேடே? அதைச் சொல்ல மறந்து விட்டேனே? இதோ இருக்கிறானே, என் மகன் கணபதி. இவனுக்காக ஒரு கேஸ் நடத்த வேண்டும்."

கேஸ் என்றதும் ஆண்டவன் நாற்காலியில் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார்; கும்பாபிஷேகம், அன்னதானம், அநாதைப் பள்ளிக்கூடம், ஹரிஜன முன்னேற்றம் முதலிய தொண்டில் ஈடுபட்டவர் போல் பீடிகை போட்டதினால் இருந்த பயம் ஓரளவு தெளிந்தது. இருந்தாலும் ஒன்றும் நிர்மானமாகத் தெரியவில்லை; வந்தவர் விவரத்தைச் சொல்ல நாள் முழுதும் எடுத்துக் கொள்வார் என்று தோன்றியது. அப்பொழுது பெரியவர் பையனிடமிருந்த பையைத் தம் கையில் வாங்கிக் கொண்டு, அதைத் திறந்து ஒரு


தீபாவளி
வாழ்த்துக்கள்...
பிரஸிடெண்ட்
டாய்லட்ஸ்
தயாரிப்பாளர்களிடமிருந்து...
ராதோட் டிரேடிங் கம்பெனி, மதராஸ்-1


எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்
டி. ஐ. சைகிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
உலகப்பிரசித்திபெற்ற ஹெர்குலிஸ் சைகிள்கள்
தயாரிப்பாளர்கள்

காகிதக் கட்டை வெளியில் எடுத்தார்: மரியாதையாகக் குறுக்கிடுவதற்கு இது தான் நல்ல தருணம் என்று ஆண்டவன் எண்ணினார்.

"நான் கேஸ் கட்டை முதலில் பார்ப்பதில்லை. நீங்கள் எல்லாச் சமாசாரங்களையும் எடுத்துச் சொல்லுங்கள். எதையும் விட வேண்டாம், அதில் சுரான விஷயம் இருக்கும்" என்று சொல்லி, ஒரு வெள்ளைக் காகிதக் கட்டைத் தம் முன் இழுத்துக் கொண்டு உட்கார்ந்துகொண்டார்.

பெரியவர் உடனே கட்டைப் பைக்குள் வைத்து விட்டுப் பேசலானார்.

"என் பெயர் சோமசுந்தரம்; எனக்கு ஒரே மகன், இந்தக் கணபதி. இரண்டு பெண்கள் உண்டு. ஆனால் அவர்களுக்கு மணமாகி விட்டது. மாப்பிள்ளைகள் இரண்டு பேரும் நல்ல பையன்கள். எல்லாம் உள்ளூர்தான். வருவதும் போவதுமாக இருப்பார்கள். நான் பழைய காலத்து மனிதன். எனக்கு நாலு பேர்கள்கூட இருக்க வேண்டும்."

"இதென்ன குடும்ப வியாஜ்யமா?" என்று கேட்டார் அமிருதகிரீசன்.

"இல்லை. இல்லை. குடும்பத்தில் ஒரு விதமான தகராறும் கிடையாது. முதலில் நான் யார், என்ன என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? அதற்காகத்தான் எடுத்துச் சொன்னேன். கேஸ் கணபதி விஷயத்தில் தான்."

"அப்படியா?" என்று சொல்லிப் பேனாவை மூடி வைத்து விட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டார் ஆண்டவன்.

"ஆமாம். கணபதி நல்ல பையன். இந்தக் காலத்துச் சிறுவர்களைப் போல் ஒரு தப்பு வழிக்கும் போக மாட்டான். பொறுப்பாகப் படித்து உடம்பைக் கூடக் கெடுத்துக் கொண்டு விட்டான். ஆனால் பாருங்கள். இண்டர்மீடியட் பரீட்சையில் அவனை அநியாயமாகத் தேற விடாமல் தள்ளி விட்டார்கள்."

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் ஆண்டவன்.

"இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் முப்பத்தி மூன்று, முப்பத்திரண்டு என்று குறைந்த மார்க் போட்டிருக்கிறார்கள். அதெப்படி, ஒவ்வொரு விடையுமா தப்பாக இருக்கும்? இருந்தாலும் எல்லாவற்றிலுமா சொல்லி வைத்தாற் போல் முப்பத்திரண்டு மார்க்! இதுவரையில் ஒரு பரீட்சையிலும் தோற்காதபையன், திடீரென்று எப்படித் தோற்று விட்டான்? இதை இலேசாக விட்டு விடக் கூடாது. கடைசி வரையில் பார்த்துத்தான் தீர வேண்டும்."

"சரி, இதில் கோர்ட் விவகாரம் என்ன இருக்கிறது?" என்று சற்றுச் சந்தேகத்துடன் கேட்டார் ஆண்டவன்.

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? கட்டாயம் ஒரு 'ரிட்' போட்டுவிட வேண்டியதுதான்!"


"ரிட்டா!"

"ஆம். ரிட். பல்கலைக் கழகம் உபசான்ஸலர், கனம் கல்வி மந்திரி, கணபதியின் விடைகளைத் திருத்திய வாத்தியார்கள், எல்லாரையும் பிரதிவாதியாகச் சேர்த்து ஒரு ரிட் போட வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் செய்யும் அநீதியும் அக்கிரமமும் வெளியில் தெரிய வரும்."

"என்ன வேண்டும் என்று விண்ணப்பம் செய்வது?"

"இதெல்லாம் உங்களுக்குத் தெரியாததா? நீங்களே அதை யெல்லாம் கவனித்து அவர்கள் தப்ப வழி இல்லாமல் செய்ய வேண்டும்."

ஆண்டவன் ஆலோசனையில் ஆழ்ந்தார். "ரிட் என்பது ஒரு சமய சஞ்சீவி. இருபத்தைந்து ரூபாய்தான் கட்ட வேண்டும். எதற்கு வேண்டுமானாலும் ரிட் உபயோகப்படும். நியாயம் கிடைப்பதற்கு ரிட் தான் குறுக்கு வழி. ஒன்றைச் சாதிப்பதற்கும் ரிட் உதவும். ஒன்றைத் தடுப்பதற்கும் ரிட் உதவும். வேலையில் நின்று விலக்குவது அநீதி என்று ரிட்; கட்டடத்தைக் கட்டுவேன் என்று ரிட்; இடிப்பேன் என்று ரிட்; ஊரை விட்டு வெளியேறுவேன் என்று ரிட்; பொதுக் குளத்தில் சலவைத் தொழிலாளி அழுக்குத் துணியைத் தோய்க்க உரிமை உண்டு என்று ரிட்; பஸ் ஓட்டுவதற்கு ரிட்; ஓடும் பஸ்ஸை நிறுத்துவதற்கு ரிட்;



மனம்போல் வியாபாரம் செய்வதற்கு ரிட்; பொதுக் கூட்டம் நடத்துவேன் என்று ரிட்; சினிமாவில் அரசியல் படங்களைக் காண்பிக்கமாட்டேன் என்று ரிட்; வீட்டைப் போலீசார் சோதனை போடக் கூடாது என்று ரிட்; கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு ரிட்; சட்டசபைத் தேர்தலைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. தோற்றவர் அனைவரும் 'ரிட்' போடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாகப் பல "ரிட்"டுக்களை நமது ஜனநாயகம் நமக்கு நல்கியிருக்க, சில வக்கீல்கள் ரிட்டிலேயே நிபுணர்கள் என்று புகழ் பெற்றுத் தொழில் நடத்தி வருகிறார்கள். அவர்கள் விசேஷமாக வேறு சட்டங்களைப் படித்ததில்லை. வருமான வரி வக்கீல், கிரிமினல் வக்கீல், கம்பெனிச் சட்ட வக்கீல் என்ற இனங்களில் புதிதாகத் தோன்றியவர் ரிட் வக்கீல். அதிகமாகப் படிக்காமல் தில்லி வரைக்கும் சென்று உ. நாடக் கூடியது ரிட் ஒன்றுதான்.

நான்காண்டுகளுக்கு முன்னால் அமிருதகிரீசன் முதன் முதலாக ரிட்டில் புகுந்தார். அவர் பேசியது சினிமா ரிட். அதாவது ஜனங்கள் குடியிருக்கும் தெரு நடுவில் ஒரு தியேட்டர் கட்டுவதற்கு அரசாங்கத்தார் அனுமதி கொடுத்திருந்தார்கள். அந்த அனுமதி சட்டசபைத் தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன் கொடுக்கப்பட்டிருந்தது. ஊர் ஜனங்கள் ஒன்று கூடி இந்த அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு ரிட் போட்டார்கள். அமிருதகிரீசன் சினிமா சொந்தக்காரருக்காக வாதாடினார். ஹைகோர்ட்டில் அவர் சினிமாவினால் வரும் நன்மைகளை யெல்லாம் உருக்கமாக எடுத்துக் காட்டினார்.

சினிமாவின் சத்தத்தினால் தெருவில் இருக்க முடியவில்லை என்பது பொய். தெரு நடுவில் சினிமா வைத்ததினால் அனைவரும் தங்கள் வீட்டில் இருந்து கொண்டே பாட்டையும் பேச்சையும் இலவசமாகக் கேட்டு வருகிறார்கள். என் கட்சிக்காரர் அல்லவா அவர்கள்மீது ரிட் போட வேண்டும்!" என்றெல்லாம் அதி நுட்பமாகப் பேசி வெற்றி அடைந்தார்.

நீதிபதி, இரு கட்சிகளுக்கும் பொதுவாக, 'மாலை நிகழ்ச்சி நடத்துவதில் ஒருவருக்கும் இடைஞ்சல் இல்லை. ஆனால் இரவு ஒன்பது மணிக்கு மேல் சினிமா காட்சி நடத்தக் கூடாது' என்று தீர்ப்பு எழுதி விட்டார்.

வழக்கு தில்லிக்குச் சென்றது. அங்கே ஏழு நீதிபதிகள் அப்பீலைக் கேட்டார்கள். ஹைக் கோர்ட்டார் செய்த தீர்ப்பைக் கண்டு வியந்தார்கள். இரவில் அனைவரும் உறங்கி விடுவார்கள். மாலையில் அல்லவா ஜனங்கள் நடமாடுவார்கள்? ஆச்சரியம் எப்படி ஊர் நடுவில் சினிமா நடத்தலாம்? ஆகையால் இரவில் நடத்தலாமே தவிர, மாலையில் நடத்துவது தவறு என்று தீர்ப்பைக் கொடுத்தார்கள்.

இந்த "சினிமா ரிட்" சட்ட சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. குறிப்பாக, "பிரதிவாதி வக்கீல் அமிருதகிரீசன்" என்று எழுதி இருந்தார்கள். அந்த இதழை ஆண்டவன் எப்பொழுதும் மேசைமீது வைத்திருப்பார். அந்தக் காலத்தில் ரிட்டைப் பொறுத்த சட்டம் நம் நாட்டுக்குப் புதிது. சினிமா ரிட்டில் நான் பேசின வாதங்கள் இன்று வரை எல்லா ரிட்டுகளுக்கும் உபயோகப்படுகின்றன என்று தில்லியில் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனால் தில்லியில் தொழிலாளிகளுக்குள் பொறுமை கிடையாது. எல்லாம் ஆண்டவன் அருள்" என்பார்.

ஆனால் அமிருதகிரீசனே இப்பொழுது தயங்கினார். பரீட்சையில் தோற்ற பையனைத் தூக்கி விடுவதற்கு எந்த ரிட் என்று ஆண்டவனுக்கே விளங்கவில்லை. அதற்காக வந்த வழக்கை விட்டு விடுவதா? வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்று சொல்லுவது தொழிலுக்கே விரோதம். தூக்குத் தண்டனை விதித்த பிறகு வீட்டுக்கு வந்து கைதியின் சுற்றத்தாரிடம் "போகட்டும், இவ்வளவோடு விட்டாரே" என்று தேறுதல் சொன்ன தொழில், அல்லவா? துவக்கத்திலேயே வழக்கு இல்லை என்று சொல்வாரா?

ஆண்டவன் காகிதத்தைத் தம் அருகே இழுத்துக் கொண்டு விவரங்களை எழுத ஆரம்பித்தார். கணபதி படித்தது சென்னை அரசியல் கல்லூரியில். சரித்திரம், தமிழ் முதலிய தொகுதி. எல்லாத் தொகுதியிலும் தோல்வி. ஆனால் ஒவ்வொன்றிலும் முப்பத்திரண்டு அல்லது முப்பத்தி மூன்று மார்க் வாங்கி இருந்தான். இதுவே சந்தேகத்துக்கு இடமாக இருந்தது. சரித்திரத்திலும் தமிழிலும் கேட்ட சில கேள்விகள் பாடத்தில் குறிப்பிட்ட பாகத்தில் அடங்காதவை. ஆங்கிலேயச் சரித்திரத்தில், "பிரான்சு தேசத்தில் நடந்த ஜனப் புரட்சி ஆங்கில அரசியலை எவ்விதத்தில் மாற்றியது?" என்று ஒரு வினா. தமிழில் கம்பராமாயணத்தில் ஒரு பகுதியைப் பாடமாகக் குறிப்பிட்டு, "உதவி வரைத்தன்று உதவி—உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்ற வள்ளுவரின் குறள் ராமாயணத்தில் எந்தப் பகுதிக்குப் பொருந்தும் என்று ஒரு வினா. பரீட்சையில் அதிகாரத்துக்கு மீறின கேள்விகள் கேட்கப்பட் டிருந்தன. பரீட்சையை ரத்து செய்வதற்கு இதுவே போதுமானது. ஆனால் பயன் என்ன? கணபதி எப்படியாவது தேற வேண்டும். ஆகையால், முழு பரீட்சையுமே செல்லாது என்று வாதாடுவதற்கு உரிமை இருந்தாலும், குறிப்புக்கு மீறின கேள்விகளைத் தள்ளி விட்டு, கணபதி எழுதின மற்ற விடைகளை மட்டும் திரும்பவும் திருத்த வேண்டும் என்று ரிட் போடுவது என்று ஆண்டவன் தீர்மானித்தார்.

அரசியல் அடிப்படைச் சட்டத்தில் 226 தொகுதியின் கீழ் பல்கலைக் கழகம் உப-சான்சலர் மீது ஒரு ரிட் தொடுக்கப்பட்டது. சோமசுந்தரம் ஆண்டவனிடம் ஒரு பச்சை நோட்டைக் கொடுத்து, "எல்லாச் செலவையும் இதற்குள் நடத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் ஏழைகள். அதிகமாக அபராதம் போடக் கூடாது" என்று கூறி விட்டுப் பணப் பையைச் சட்டையின் உள்பையில் வைத்துப் பத்திரப்படுத்தி விட்டார். வந்த நோட்டை விட வேண்டாம் என்று ஆண்டவனும் அதை மேஜையின் அறையில் வைத்துப் பூட்டிக் கொண்டார்.

கேஸ் தாக்கலாயிற்று. பல்கலைக் கழகத்தின் சார்பாக அட்வகேட் ஜெனரல் வாதாடுவதற்கு நியமிக்கப்பட்டார். ஆண்டவனுக்கு இதனால் இலவச விளம்பரம். "பேசக்கூட நேரம் இல்லே. ஒரு பெரிய கேஸைத் தெரியாமல் ஒப்புக் கொண்டு விட்டேன். எதிர்க் கட்சியில் அட்வகேட் ஜெனரல். போய் வருகிறேன்" என்று யார் வந்தாலும் எழுந்து போய்க் கொண்டிருந்தார் ஆண்டவன்.

சில நாட்களுக்கெல்லாம் ரிட் "ஹரிங்"குக்கு வந்தது. அன்று ஆண்டவன் அதிகாலையில் எழுந்து ஏழு மணியிலிருந்தே பரபரக்கத் தொடங்கினார். ஒரு வண்டிப் புத்தகங்களை மூன்று நான்கு துணி மூட்டைகளாகக் கட்டிச் சம்பந்தத்திடம் ரிக்ஷாவில் வைத்து முன்னதாகவே அனுப்பிவிட்டார். பத்தேகால் மணிக்கெல்லாம் தாமே கோர்ட்டை அடைந்தார். கோர்ட்டுக்குள் நுழையும் பொழுது ஒரு சிறிய அபசகுனம். ஆனால் ஆண்டவன் அதைப் பொருட்படுத்தவில்லை! இவர் உள்ளே போகும் பொழுது தான் வேலையாள் உள்ளெல்லாம் பெருக்கி விட்டுக் குப்பைக் கூடையும் விளக்குமாறுமாய் வெளியேறிக் கொண்டிருந்தான். ஆண்டவன் புத்தகங்களை யெல்லாம் எதிரே வரிசையாக அடுக்கி வைத்தார். சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டு களைப்பாறினார். பத்தேமுக்கால் மணிக்கு அட்வகேட் ஜெனரல் வந்து சேர்ந்தார். வெறும் கையை வீசிக் கொண்டு எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். ஆண்டவன் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களை ஒரு முறை பார்த்து விட்டுத் தம் அருகில் இருந்தவரிடம் ஏதோ முணுமுணுத்தார். இருவரும் நகைத்தார்கள். ஆண்டவன் இதைக் கவனிக்காதவர் போல் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

பதினொரு மணிக்கு வெள்ளித் தடிச் சேவகன் முன்வர, நீதிபதி அரங்கத்துள் வந்தருளினார். மேடையேறி நாற்காலியில் உட்கார்ந்து ஆயாசத்தினால் பெருமூச்சு விட்டுக் கண்களை மூடிக் கொண்டார். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம்



கண்களைத் திறந்தார். 'பெஞ்ச் கிளார்க்' ஒரு காகிதத்தை நீதிபதியிடம் மரியாதையுடன் நீட்டி விட்டு ஆண்டவன் பக்கம் திரும்பித் தலையால் சைகை செய்தார். ஆண்டவன் குதித்தெழுந்தார். ஆனால் நீதிபதி இவர் பக்கமே பார்க்கவில்லை. ஏனென்றால் அதே தருணத்தில் அட்வகேட் ஜெனரலும் எழுந்தார்.

"மேன்மைதங்கிய கோர்ட்டார் அவர்களே" என்று ஆண்டவனும் அட்வகேட் ஜெனரலும் சேர்ந்து சொன்னார்கள். அட்வகேட் ஜெனரல் ஆண்டவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். அட்வகேட் ஜெனரல் - கடாக்ஷம் தம் மீது விழவும் ஆண்டவன் தம்மை அறியாமலே புன்முறுவல் செய்தார். நீதிபதி ஆண்டவனை உட்காரும்படி கட்டளை இட்டார்.

"பல்கலைக் கழகத்தின் சார்பாக நான் தோன்றுகிறேன்" என்ற முகவுரையுடன் ஆரம்பித்தார் அட்வகேட் ஜெனரல். "வாதியின் வேண்டுகோளுக்கு இணங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்: கணபதியின் விடைகளைத் திரும்பவும் திருத்த ஒருவித ஆட்சேபணையும் எங்களுக்குக் கிடையாது: அதற்காகச் செலுத்த வேண்டிய சோதனைக் கட்டணம், மறுபடியும் திருத்துவதற்குக் கட்டணம், பிரசுரிப்பதற்குக் கட்டணம் எல்லாவற்றையும் கட்டி விட்டால் நாங்கள் மேல் நடக்க வேண்டியதை ஏற்பாடு செய்கிறோம்" என்று சுருக்கமாகப் பேசிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

நீதிபதி தலைநிமிராமல் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ஆண்டவன் எழுந்திருந்தார். சில வார்த்தைகளாவது பேச வேண்டும் என்று அவருக்கு அடங்காத ஆசை. மெதுவாகக் கனைத்தார். ஒருவரும் கவனிக்கவில்லை. அடுத்த நிமிஷம் நீதிபதி ஒரு காகிதத்தை பெஞ்ச் கிளார்க்கிடம் விட்டெறிந்தார். பெஞ்ச் கிளார்க் சேவகனைக் கூப்பிட்டு அவன் காதில் ஏதோ சொன்னார். சேவகன் கதவருகே ஓடி அடுத்த வழக்கில் வாதியின் பெயரை உரக்கக் கூவினான். ஆண்டவன் வெளியேறினார். வெளி வராந்தாவில், சம்பந்தம் சோமசுந்தரத்தினிடம் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தான்: "இன்னு பேச்சுக்கேட்டீங்க நம்ப ஐயாவை? பேசாமலே காரியத்தைச் சாதித்து விட்டாரு, பார்த்தீங்களா? கோதாவிலே இறங்கிட்டாருன்னு, அவ்வளவுதான்."


அன்று மாலை கோர்ட்டில் நடந்த நிகழ்ச்சியை ஆண்டவன் பணிவுடன் தெரிவித்துக் கொண்டிருந்தார். "நான் என்ன செய்வது? என்னுடைய மனுவைப் படித்ததும் அட்வகேட் ஜெனரல் பல்கலைக் கழகத்தாரிடம் மறு பேச்சில்லாமல் நம் ரிட்டை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றாராம். அவர்களும் அப்படியே ஒப்புக் கொண்டார்கள். எதிர்ப்பு இல்லாவிட்டால் நான் என்ன செய்வது? எல்லாம் ஆண்டவன் அருள்" என்றார்.

பிறகு சோமசுந்தரம் செலுத்த வேண்டிய பணத்தை யெல்லாம் கட்டினார். அதற்குள் செப்டம்பர் மாதம் வந்து விட்டது. திரும்பவும் திருத்தினாலும் தீர்மானமாகத் தன் மகன் தேறிவிடுவான் என்ற நிச்சயம் சோமசுந்தரத்துக்கு இல்லை. எதற்கும் செப்டம்பர் பரீட்சையும் எழுதிவிடுவது நலம் என்று அவருக்குப் பட்டது. கணபதி இரண்டாவது முறை பரீட்சை எழுதினான்.

ஒருநாள் காலையில், செப்டம்பர் பரீட்சையில் தேறினவர்கள் நம்பர் எல்லாம் தினசரிப் பத்திரிகையில் வெளி வந்தது. ஆனால் கணபதியின் நம்பரைக் காணவில்லை. அன்று தபால்காரன் சோமசுந்தரத்துக்கு ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அதில் கணபதியின் விடைகளைத் திரும்பவும் திருத்தியதில் அவன் தேறி விட்டதாகக் கண்டிருந்தது. கடிதத்தை எடுத்துக் கொண்டு சோமசுந்தரம் ஆண்டவனிடம் வந்தார்.

"கணபதி இப்பொழுது தோற்றிருக்கிறானா, தேறி விட்டானா?" என்று கேட்டார் சோமசுந்தரம்.

"இது நுட்பமான கேள்வி. சட்டத்தை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். எதற்கும் செப்டம்பர் பரீட்சை கணபதியைப் பொறுத்தவரை செல்லாது என்று ஒரு "ரிட்" போட்டு விடுவோம்" என்றார் ஆண்டவன்;



Retail Branches

285, China Bazar Road, MADRAS-1

71, Pondy Bazar, T. NAGAR, MADRAS-17

காணமற் போன

கதை ✳ ரவீந்திரநாத் தாகூர்

நதியின் பழைய ஸ்நான கட்டம்; பெரும்பாலும் இடிந்தது. அதன் அருகே எனது தோணியைக் கொண்டு கட்டினேன். சூரியன் அஸ்தமித்தான்.

தோணி மீதில் மகமதியச் செம்படவர் மாலை நமாஸ் செய்தனர். மேற்கு வான மாலை ஒளிகொண்ட நிரை மீது அவர்களுடைய மௌனமான தொழுகை ஒரு சித்திரம் எழுதியது போலத் தோன்றிற்று. நதியின் அசைவற்ற நீரின் மீது அஸ்தமன ஒளி பொன்னிற முதலாக உருக்கு நீலம் வரை பலவகைப்பட்ட மெல்லிய வர்ண பேதங்கள் காட்டிற்று.

எனக்கெதிரே அங்கொரு மாளிகை நின்றது. அது கிழப் பருவத்துக்குரிய குறிகளெல்லாம் பொருந்தி யிருந்தது; ஜன்னல்கள் உடைந்திருந்தன. தாழ்வாரங்கள் இடிந்து கிடந்தன. நெடுந்தூரம் போகும் ஆலமர வேர்களால் உடைந்த படிக்கட்டின் மேல் நான் தனியாக உட்கார்ந்திருந்தேன். ஏதோ விசனத்தில் அமுந் தொடங்கினேன். அப்போது நான் திடுக்கிடும்படி ஒரு குரல், "எந்த ஊர், ஐயா?" என்று கேட்டது.



திரும்பிப் பார்த்தேன். ஏழை, இராப் பட்டினி போலத் தோன்றிய மனிதன் ஒருவன் தென்பட்டான். வங்காளத்தை விட்டு வெளியே வேலைக்குப் போயிருக்கும் வங்காளிகளின் முகத்தில் இடிந்து போன தோற்றமொன்று காணப்படுதல் வழக்கம். அந்த மாதிரி களை இவன் முகத்திலும் இருந்தது. அல்பாகா பட்டுச் சட்டை ஒன்று போட்டிருந்தான். அழுக்குச் சட்டை, எங்ஙனம் ஊரி. முன் பக்கம் திறந்திருந்தது. அவனுடைய தினக் காரியத்தை முடித்து விட்டு வீட்டுக்குத் திரும்புவோன் போல் தோன்றினன். சாயங்கால போஜனம் செய்ய வேண்டிய வேளையில் காற்று குடித்துக் கொண்டு உலாவினான்.

அந்த மனிதன் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். அவனுடைய கேள்விக்கு மறுமொழியாக நான்:

"ராஞ்சிப் பட்டணத்திலிருந்து வருகிறேன்" என்றேன்.

"என்ன தொழில்?" என்று கேட்டான் அந்த மனிதன்.

"வியாபாரி" என்றேன்.

"என்ன வியாபாரம்?" என்று கேட்டான் அந்த ஏழை.

"பட்டு நாலும், மரமும் வியாபாரம் செய்து வருகிறேன்" என்றேன்.

"பெயரென்ன?" என்று கேட்டான்.

ஒரு கணம் யோசனை பண்ணி விட்டுப் பின் ஒரு பெயரைச் சொன்னேன். அது என் சொந்தப் பெயரன்று.

பின்னும் அவன் மனம் திருப்தியடைய வில்லை. மறுபடியும் மறுபடியும் அவன் கேள்விகள் கேட்கத் தொடங்கினன்.

"இங்கு எதற்காக வந்தீர்?" என்றான்.

"காற்றுக்காக" என்றேன்.

அவன் ஆச்சரியப்படலானன். சொல்கிறான்: "இந்த ஊர்க் காற்று விசேஷமென்று வந்தீர்? நான் ஆறு வருஷங்களாக இந்தக் காற்றில் பழகுகிறேன். அதனுடன் நாள்தோறும் பதினைந்து தான்ய எடை குயினைமருந்தும் சாப்பிட்டு வருகிறேன். யாதொரு அனுகூலமும் தெரியவில்லை."

"இருந்தாலும், ராஞ்சிப் பட்டணத்திலிருந்து வந்த எனக்கு இவ்விடத்துக் காற்று புதிதன்றோ? கொஞ்சம் அனுகூலம் இருக்கத்தான் செய்யும்" என்று மறுமொழி கூறினேன்.

அதற்கு அவன், "சரிதான் நீர் எதிர்பாராத அனுகூலமும் உண்டாகலாம். இங்கே எந்த வீட்டில் தங்குவீர்?" என்று கேட்டான்.

படித்துறைக்கு மேலே இடிந்து கிடந்த மாளிகையைக் காட்டி, "அங்கே" என்றேன். நான் புதையல் எடுக்க வந்ததாக அவன் சம்சயப்பட்டது போல் அவன் முகக் குறிப்பில் தோன்றிற்று. எனினும் அந்த விஷயத்தைக் குறித்து அவன் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு அந்த இடிந்த மாளிகையில் நடந்த விஷயம் ஒன்றை விஸ்தரிக்கலானன்.

அந்த மனிதன் அவ்வூரில் பள்ளிக்கூட வாத்தியார் என்று தெரிந்து கொண்டேன். பிரம்மாண்டமான வழுக்கைத் தலை, அதன் கீழே குழி விழுந்த கண்கள் அப்ராக்ருத-இயற்கைக்கு மாறான-ஒளி வீசின. அவனுடைய முகம் பசியாலும் வியாதியாலும் வற்றிப் போயிருந்தது.

தோணிக்காரர் தங்களுடைய மாலை ஜபத்தை முடித்துச் சமையலிலே இறங்கினர். சூரியனுடைய கடைசிக் கிரணம் மங்கி விட்டது. அந்த இருண்ட பாழ் வீடு இடிந்த படித்துறைக்கருகே ஒளியின்றிப் பேய் போல நின்றது.

அந்த வாத்தியார் சொல்லுகிறான்:

"நான் பத்து வருஷங்களுக்கு முன்னே இங்கு வந்தபோது அந்த வீட்டில் பூஷண் ஸாஹ் என்ற மனிதன் குடியிருந்தான். இவனுடைய சித்தப்பன் துர்கா ஸாஹ் என்பவன் குழந்தையில்லாமல் செத்துப் போய்விட்டபடியால், சித்தப்பனுடைய பெரிய பூஸ்திதியும் வியாபாரமும் இவனுக்குக் கிடைத்தன.

ஆனால் பூஷண் ஸாஹ் புது நாகரிகத்தைச் சேர்ந்தவன். இங்கிலீஷ் படித்து வெகு சுத்தமாகப் பேசுவான். துரைமார் கச்சேரியில் செருப்பு போட்டுக் கொண்டே நுழைவான். அத்துடன் தாடியும் வளர்த்தான். இதனால் துரைமார் இவனைக் கர்வி என்று சொல்லி இவனுக்கு யாதொரு நன்மையும் செய்ய மாட்டார்கள். அவனைப் பார்த்தால் உடனே தெரியும், இவன் புது வழியைச் சேர்ந்த வங்காளி என்று.

வீட்டிலேயும் அவனுக்கொரு சங்கடம்: அவன் பெண்டாட்டி அழகாக இருப்பாள். கல்லூரிப் படிப்பு ஒருபுறம், அழகுப் பெண்டாட்டி ஒருபுறம் — புராதன ஆசார அனுஷ்டானங்கள் அவன் வீட்டிலே நிற்க இடமுண்டா?"

அந்த வாத்தியார் ஒருதரம் கனைத்துக்கொண்டே மேலும் சொல்லுகிறான்:

நகைகள்

"உமக்குக் கல்யாணம் ஆகியிருக்குமே, ஐயா! அவசியம் ஆகியிருக்கும். ஆகையால் சாதாரண ஸ்திரீக்குப் புளிப்பு மாங்காய், கார மிளகாய், கடுமையான புருஷன் மூன்றும்தான் நன்றாகப் பிடிக்குமென்ற விஷயம் உமக்கு நான் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். ஒரு மனிதன் தனது மனைவியின் காதலை இழக்க வேண்டுமாயின் குரூபியாகவும் ஏழையாகவும் இருக்க வேண்டிய கட்டாயமில்லை; சாதுவாக இருந்தால் அதுவே போதும்.

இப்படி இருப்பதன் காரணம் என்னவென்று நீர் கேட்பீரானால், நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய விஷயம் அதிகமுண்டு. நான் இந்த வியவகாரத்தைக் குறித்துப் பலரிடம் விவாதித்திருக்கிறேன். மிகவும் யோசனை பண்ணியிருக்கிறேன்.


கலைமான் தன் கொம்புகளைத் தேய்க்க வயிரம் பாய்ந்த மரத்தை நாடும். வாழை மரத்திலே தேய்ப்பதில் அதற்கு இன்பமில்லை. ஆணும் பெண்ணும் இரண்டு பாலாகப் பிரிந்த கால முதலாகப் பெண் ஆணை மயக்கி வசப்படுத்தும் பொருட்டாகத் தனது சக்தியையெல்லாம் செலவிட்டு எத்தனையோ தந்திரங்கள் செய்து வருகிறாள். தானாகவே பரிவு காட்டும் புருஷனுடைய பெண்டாட்டிக்கு உத்தியோகமில்லாமல் போய் விடுகிறது. எண்ணிலாத நாற்றாண்டுகளாகப் பாட்டிமாரிடமிருந்து வழி வழியாகக் கிடைக்கப்பெற்ற ஆயுதங்களெல்லாம் அவள் கையிலே பயனின்றிக் கிடக்கின்றன. கண்ணீர்களின் சக்தி, கோபத் தழல் விழி வலை—அவையெல்லாம் தொழிலின்றிக் கிடக்கின்றன. நவீன நாகரிகத்தில் மனிதன் தனக்கு ஈசன் கொடுத்த மிருக ஸ்வபாவங்களின் சக்தியை இழந்து விடுகிறான். இதனால் காதற்கட்டுகள் தளர்ச்சி யடைகின்றன. நவீன நாகரிகம் என்ற யந்திரத்திலிருந்து அந்தப் பாக்கியஹீனனாகிய பூஷண் லாற் பழுதற்று வெளிப்பட்டான். அதனால் அவனுக்கு வியாபாரத்திலும் நல்ல அநுகூலமில்லை. வீட்டிலும் அவனுக்கு மகிழ்ச்சியில்லை.

பூஷண் லாற் மனைவிக்குப் பெயர் மணி மல்லிகை. அவளுக்குக் கேட்காமலே கொஞ்சுதல்கள்; அழாமலே டக்கா மஸ்லின் சேலைகள்; சண்டை போட்டு ஜயிக்காமல் சாமான்யமாகவே தங்கக் காப்புகள்,—எல்லாம் சும்மா கிடைத்தன. அதனால் அவளுடைய பெண் இயல்பு வளர்ச்சி பெற இடமில்லாமல் போய், அதனுடன் புருஷன் மீதுள்ள காதலும் மடிந்தது. அவனிடமிருந்து வஸ்துக்களைப் பெற்றுக் கொண்டாள். அவனுக்கு யாதொரு கைம்மாறும் கொடுக்கவில்லை. சூது தெரியாத மூடக் கணவன் ஒன்றைக் கொடுத்தால் மீளப் பெறலாமென்று நினைத்தான். உண்மையோ அதற்கு நேர் விரோதம்.

இதன் பயன் எங்ஙனம் முடிந்த தெனில், நாளாக நாளாக மணி தனது கணவனை டக்கா மஸ்லின்களும், காப்புகளும் தரும் யந்திரமென்று பாவனை செய்யலானாள். முதல்தரமான யந்திரம்; அதன் சக்கரங்களுக்கு அவள் எண்ணெய் கூடப் பூச வேண்டியதில்லை.

பூஷணனுடைய மனைவி அதிகம் பேசுவதில்லை. அக்கம் பக்கத்தாருடன் நெருங்கிப் பழகுவது







மில்லை. விரதமெடுத்து, அந்தணருக்குச் சோறிடல், பரதேசிக்கு இரண்டு காசு போடுதல் இந்த வழக்கமெல்லாம் அவளுக்குக் கிடையாது. அவளிடம் சிக்கனப் பொருள் பிறகு நஷ்டமாவதில்லை. கையில் கிடைத்ததை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவாள். கணவனுடைய முத்தங்களை மாத்திரந்தான் ஞாபகத்தில் காப்பாற்றுவதில்லை. அவளுடைய யௌவன அழகில் ஓரணு கூட மாறாமலேயிருந்தது. அது பெரிய ஆச்சரியம். எத்தனை வயதானாலும் பதினாறு வயதுக்குள்ள ரூபம் அப்படியே இருந்ததாக அவளைப் பார்த்தவர் எல்லாரும் கூறினர். பனிக்கட்டி போல அன்பில்லாத இருதயமிருந்தால் யௌவனம் மாறாமல் இருக்குமென்று தோன்றுகிறது.

மணிமல்லிகை வீட்டு வேலைகளில் மிகவும் வல்லவள். அத்தியாவசியமாக இருந்தாலொழிய வேலைக்காரர் வைத்துக் கொள்வதில்லை. தான் செய்யக்கூடிய வேலையைப் பிறர் செய்யக் கூலி கொடுத்தால் தன்னைத் தானே திருடுதலுக்குச் சமானமென்று நினைத்தாள்.

யாரைப் பற்றியும் கவலையில்லை. அவளுக்குக் காதலின் கலக்கமில்லை. எப்போதும் வேலை செய்து மிச்சம் பிடிப்பாள். அவளுக்கு எப்போதுமே நோய் கிடையாது. விசனமுமில்லை.

புருஷரில் பெரும்பான்மையோருக்கு இது போதும். போதுமென்பது மாத்திரமன்று; இது அவர்களுக்கு அதிர்ஷ்டம். ஏனென்றால் காதல் செய்யும் மனைவியை மறப்பது சிரமம். ஓயாத நினைப்பின் சலிப்பினால் மனிதன் இளமையை இழந்து விடுவான். இடுப்பு நோய் வந்தபோது தான் மனிதனுக்கு இடுப்பிருக்கும் நினைவு உண்டாகும். வீட்டில் மனைவி உம்மிடம் காதல் செய்து தான் இருப்பதை எப்போதும் நினைப்பு மூட்டிக் கொண்டிருப்பதால் அதுவும் இடுப்பு வலிக்குச் சமானந்தான். அதிக பிரேமை மனைவிக்கு ஒரு புண்ணியமாக இருக்கலாம். ஆனால் புருஷனுக்குத் தொந்தரவு. இது என்னுடைய நிஷ்கபடமான அபிப்பிராயம்.

நான் சொல்லுவது உங்களுக்குத் தொல்லையாகத் தோன்றவில்லையே? ஏனையா, உம்மைத்தானே, கேளும். நான் தனியாகக் குடியிருக்கிறேன். என் மனைவி என்னோடு வசிக்கவில்லை. ஆதலால் எத்தனையோ முக்கியமான ஜன சமூக விவகாரங்களைப் பற்றி யோசனை பண்ண எனக்கு நேரம் கிடைக்கிறது. அவற்றை என் மாணுக்கருடன் பேச இடமில்லை. இன்னும் நான் பேசப் பேசக் கேட்டுக் கொண்டே வாரும். இந்த விஷயங்களைக் குறித்து நான் எத்தனை ஆழமாகத் தெளிவாக யோசனை செய்து வைத்திருக்கிறேன் என்பது உமக்கே நன்றாகத் தெரியும்.''

இங்ஙனம் அந்த வாத்தியார் பேசிக் கொண்டிருக்கும் போது, பக்கத்தில் ஒரு காட்டிலிருந்து நரிகள் ஊளையிடும் சத்தம் வந்தது. அவனுடைய பிரசங்கக் காட்டாறு சற்றே தடைப்பட்டு நின்றது. அந்த நரிகளின் ஒலியும் நின்றது. மண்ணும் நீரும் அதிக மௌனத்தில் வீழ்ந்தன. அப்போது அவன் கடலும் விழிகளை இரவின் இருளில் விசாலமாகத் திறந்து கொண்டு மேலே கதை சொல்லுகிறான்:

''இப்படி இருக்கும்போதே பூஷணனுடைய சிக்கலான வியாபாரத்தில் ஒரு குழப்பம் உண்டாகி விட்டது. நடந்த விஷயத்தைச் சரியாக அறியவும் சொல்லவும் நான் சக்தி இல்லாதவன். ஏனெனில் எனக்கு வியாபாரப் பழக்கம் கிடையாது. என்ன காரணமோ அவனுக்குக் கடைத்தெருவில் நாணயம் குறைந்து விட்டது. எந்த உபாயத்தினாலேனும் ஒன்றரை லட்சம் ரூபாய் திரட்டிச் சில தினங்கள் அதைக் கடைத் தெருவிலே புரட்டிக் காட்டினால் மறுபடியும் அவனுக்கு நாணயம் உறுதியாகி மேல் வியாபாரம் சங்கடமில்லாமல் நடக்கும்.

ஒன்றரை லட்சம் ரூபாய் மொத்தக் கடனாக வாங்க வழி தேடினான். அதற்குச் சரியான ஜாமீன் வேண்டியிருந்தது. நகைகள்தானே முதல்தர ஜாமீன்?

பூஷண் ஊரற்ற தன் மனைவியிடம் சென்றான். ஆனால் பெரும்பான்மையான மனிதர் எத்தனை கலபமாக மனைவியை முகம் நோக்கிப் பேசுகிறார்களோ அப்படி அவனால் பேச முடியாது. அவன் அவளிடம் செலுத்திய காதல் பயந்த வகுப்பு. மெதுவாக நடந்து போய், தைரியமாகப் பேச முடியாமல் செய்கிற வகுப்பு. பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள ஆகர்ஷணம் போலே பலமான கவர்ச்சி; ஆனால் இரண்டுக்கும் இடையே பல்லாயிரம் யோசனை தூரம் அல்லவா இருக்கிறது?

முதல்தரமான கற்பனைக் கதையிலே கதாநாயகனாக இருப்பவன்கூடச் சில சமயங்களில், மிகவும் நெருக்கடி உண்டான போது, தனது பிரிய காந்தையிடம் அடைமானப் பத்திரங்கள், கடன் சீட்டுகள் முதலிய கவிதா சூன்யமான விஷயங்களைப் பற்றிப் பேசும்படி அவசியமாக நேர்கிறது. ஆனால் சொற்கள் இடறுகின்றன. ராகம் சரிப்படவில்லை. ஏனடா பேசத் தொடங்கினோமென்ற திகைப்பு உண்டாகிறது. துர்ப்பாக்கியனாகிய பூஷண், 'இதோ பாரடி; எனக்குப் பணம் வேண்டும். உன் நகைகளைக் கொண்டு வா' என்று நேரே சொல்ல முழுதும் சக்தி இல்லாதவனாய் நின்றான்.

கடைசியாக அவளிடம் விஷயத்தைச் சொன்னான். ஆனால் அவன் மெருகு போட்டு மெருகு போட்டுப் பேசின மாதிரியில் அவளுடைய ஆட்சேபத்துக்கு வலிமை ஏறிற்றேயன்றி அவன் அவளுடைய இஷ்டத்துக்கு இணங்குவதாகிய பயன் கிடைக்கவில்லை. மணி மல்லிகை தன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு வாய் பேசாதிருக்கையில் அவன் மனம் புண்பட்டது. எனினும், மாறி அவளைப் புண்படுத்த அவனால் இயலவில்லை. காரணம் யாதெனில், பகவான் ஆணுக்குக் கொடுத்திருக்கும் மிருகத்தனமாகிய இயற்கைக் குணத்தை அவன் சிறிதுகூட மிஞ்சாதபடி இழந்து விட்டான். இது மடமையென்று அவனிடம் யாரேனும் சொன்னால், அதற்கு அவன், 'என் மனைவி தன் சுயேச்சைப்படி என் வசம் நகைகளைக் கொடுக்க மனமில்லாதிருக்கையிலே, நான் பலாத்காரம் செய்ய எனக்கு அதிகாரமில்லை' என்று மறுமொழி சொல்லியிருப்பான். கடவுள் மனிதனுக்கு வலிமையையும், உக்ரத்தன்மையையும் கொடுத்தது. இங்ஙனம் மெல்லிழை போட்ட தர்மங்களை சூட்சுமமாக அளப்பதில் வீண் காலம் செலவிடும் பொருட்டா?

எப்படியோ பூஷண் தனது மனைவியின் நகைகளை வாங்குதல் மானக்குறைவென்று நிச்சயித்து வேறு வழிகளாலே பணம் திரட்டிக் கொண்டு வரலாமென்ற உத்தேசத்துடன் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றான்.

இந்த உலகத்தில் புருஷன் ஸ்திரீயின் குணத்தை அறிவதைக் காட்டிலும் அதிகலபமாக ஸ்திரீ புருஷன் குணத்தைத் தெரிந்து கொள்ளுதல் விதி. ஆனால் நவீன புருஷர் மிகவும் சூட்சும குணமுடையவராய்ப் பல நிலைமைகளில் பெண்ணுக்குண்டான சுபாவ யுக்திகளாலே அறியத்தகாதவராய் விடுகின்றனர். சாதாரணமாக மனுஷரை மூன்று பகுதியாக்கலாம்;

சிலர் மிருகங்கள், சிலர் மூடர், சிலர் குருடர். ஆனால் இந்த நவீன மக்கள் இந்த மூன்றிலும் சேரவில்லை.

எனவே மணிமல்லிகை தன்னுடைய மந்திரியை அழைப்பித்து யோசனை கேட்கலானாள். அந்த மந்திரி அவளுடைய அத்தான். பூஷணனுடைய ஜமீனில் அவனுக்கு ஒரு குமாஸ்தா வேலை. உழைத்துப் பாடுபட்டுச் சம்பாதிக்கும் ஜாதியைச் சேர்ந்தவனன்று. குடும்பத்துக்குப் பந்துவென்ற ஸ்தானத்தில் சம்பளத்தை மிச்சம் வைத்து மேலும் மேலும் மிச்சம் பண்ணி வந்தான்.

மணி அவனை அழைப்பித்து நடந்ததைச் சொன்னாள். ''நீ இதற்கு என்ன யுக்தி சொல்லுகிறாய்?'' என்றாள்.

அவன் மேதாவி போலவே தலையை அசைத்து, ''விஷயம் ஒன்றும் தெரியவில்லை'' என்றான். விஷயங்கள் நேரே இருப்பதாக மேதாவிகள் எப்போதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

அவன் சொன்னான்: ''பாபுவுக்குப் பணம் அகப்படாது. கடைசி வரை உன் நகையைத்தான் கேட்பார்'' என்று.

மனித இயல்பை அவன் அறிந்த மட்டில் இது சாத்தியம்; பெரும்பாலும் நிச்சயமென்று கருதினாள். அவளுடைய கவலை மிகுதியாயிற்று. அன்பு செலுத்தக் குழந்தை கிடையாது அவளுக்கு. புருஷன் இருந்தான்! ஆனால் அவன் இருந்தானென்பதே அவள் மனத்தில் சரியானபடி அழுந்த இடமில்லாமல் இருந்தான்! எனவே அவளுடைய அன்புக்குத் தனிப் பாத்திரமாய், குழந்தை வளர்வது போல வருஷா வருஷம் வளர்ந்து வந்த நகைகளை விட்டுப் பிரிவதென்ற நினைப்பு வந்த மாத்திரத்திலே அவள் உடம்பு ஜில்லிட்டது. ரத்தம் உறைந்து போகத் தெரிந்தது. ஒரே கணத்தில் இத்தனை நகைகளையும் வியாபாரம் பண்ணுமிடத்தில் போடலாமா என்று எண்ணி நடுங்கி, 'இனி யாது செய்யலாம்?' என்று கேட்டாள் மந்திரி அத்தான் மதுசூதனனை.

மது சொன்னான்:—'அட, நகைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு பிறந்தகத்துக்குப் போய் விடு' என்றான். அவனுக்கு அந்தக் கணத்தில் மணி மல்லிகையிடம் இருந்த நகைகளிலே ஒரு பகுதி— பெரும் பகுதி— தன் வசமாகக் கூடுமென்ற நம்பிக்கை பிறக்கலாயிற்று.

மணி உடனே சம்மதப்பட்டாள். அப்போது கோடை இறுதி. இரவில் மழை பெய்து கொண்டிருந்தது. இதே படித்துறைக் கருகில் தோணி வந்து நின்றது. உச்சி முதல் பாதம் வரை சால்வையால் இறுகப் போர்த்திக் கொண்டு மணி தோணியில் ஏறினாள். உதயமாகும் தருணம். மேகங்கள் வானை மூடிப் பேரிருளாக இருந்தது. அப்போது தவளைகள் கத்திக் கொண்டிருந்தன. ஏற்கெனவே மதுசூதனன் தோணியில் வந்து தூங்கினான். அவன் கண்ணை விழித்து, 'நகைப் பெட்டியை மட்டும் என்னுடைய கையிலே கொடு' என்றான்.

'இப்போது வேண்டாம், பிறகு கொடுக்கிறேன். தோணி செல்லட்டும்' என்றாள் மணி மல்லிகை.

தோணி புறப்பட்டது. ஆற்றில் விரைந்து போயிற்று. இரவு முழுதும் உட்கார்ந்து மணி தன் நகைகளை உடம்பு முழுதிலும் ஒன்று மிச்சமில்லாமல் அணிந்து கொண்ட பிறகுதான் தோணிக்கு வந்தாள். அவற்றைப் பெட்டியிலே வைத்தால் பறி போய் விடுமென்று பயந்தாள். மேலே போட்டால், அவளைக் கொன்றுவொழிய யாராலும் பறிக்க முடியாதல்லவா? மணி மல்லிகைக்குத் தனது கணவன் குணம் தெரியாவிடினும் மதுவின் குணம் தெரியும்.

மதுசூதனன் மேற்படி ஜமீன் தலைமைக் குமாஸ்தாவுக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பிவிட்டு வந்தான். அதில் யஜமானியைப் பிறந்தகத்தில் கொண்டு விடத் தான் போவதாகத் தெரிவித்தான். இந்தத் தலைமைக் காரியஸ்தன் பூஷணனுடைய பிதாவின் காலமுதலாக ஜமீனில் விசுவாசத்துடன் வேலை பார்த்து வருவோன். அவனுக்கு மதுவின் கடிதத்தைப் பார்த்தவுடனே மஹா கோபமுண்டாகித் தனது யஜமானனுக்கு நீண்ட லிகிதம் ஒன்று உச்சரிப்புப் பிழைகள் மயமாக எழுதி வைத்தான். அந்த லிகிதத்தில் இலக்கணம் கொஞ்சம் பலஹீனமாக இருந்தாலும் பாஷை வெகு கடுமை. பெண்பிள்ளைகளிடம் அதிக தாட்சண்யம் காட்டுதல் மடமை என்ற தன் கொள்கையை மிகவும் தெளிவாக எழுதியிருந்தான். இந்தக் கடிதத்தை வாசித்தவுடன், மணி ரகஸியமாக ஓடிப் போனதன் கருத்தை பூஷணன் உணர்ந்து கொண்டான். நகைகொடுக்க மாட்டேனென்று பெண்டாட்டி சொல்லியதற்குத் தணிந்து போயும், இத்தனை சங்கடமான காலத்தில், அவள் மீண்டும் சம்சயம் தீராதவளாய்த் தன்னைப் பிரிந்து சென்று விட்டதை யெண்ணும்போது அவன் வருத்தம் மிகுதிப்பட்டது.

கோப மடைவதை விட்டு மனம் வருந்தலானான். யாதொரு காரணமுமில்லாமல் மனுஷ்யன் காட்டுத் தீ போல் சினம் பொங்கும் படிக்கும், அதிர் நிஷ்காரணமாக மழை போல் அழும்படிக்கும் பகவான் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால் காலச் சக்கரம் மாறிப் போனதிலிருந்து அந்த விதியும் மாறி வருகிறது.

பூஷண் தலையைக் குனிந்துகொண்டு, 'சரி; உன்னுடைய தீர்மானப்படி நீ நடந்து கொள். எனது கடமையை நான் செய்கிறேன்' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டான். இவன் இன்னும் ஐந்தாறு நூற்றாண்டு கழிந்த பின்பு பிறந்திருக்க வேண்டும். அப்போது கேவலம் மானஸிக சக்திகளால் உலகம் இயக்கப் படுமென்கிறார்கள். அது தவறிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்தது மாத்திரமேயல்லாமல் நித்தியமான புராதன மிருக சுபாவங்களையுடைய ஒரு ஸ்திரீயை விவாகம் செய்யும்படி நேர்ந்தது அவனுடைய துரதிர்ஷ்டம். அந்த விஷயத்தைக் குறித்து அவன் அவளுக்கு ஒரு வரிகூட எழுதவில்லை. அவன் திரும்பி வந்தபிறகும் அவளிடம் இதைக் குறித்து ஒன்றும் பேசுவதில்லையென்று தீர்மானம் செய்து கொண்டான். என்ன பயங்கரமான தண்டனை, அவளுக்கு!

பூஷணன் பத்துப் பன்னிரண்டு தினங்களுக்கப்பால் தனக்கு வேண்டிய தொகை சேகரம் பண்ணிக் கொண்டு மறுபடியும் தனது வீட்டுக்குத் திரும்பி வந்தான். மணிமல்லிகையும் தந்தை வீட்டிலிருந்து திரும்பி வந்திருப்பாளென்று நினைத்தான். ஆதலால் தன் மனைவி தனது தகுதியற்ற சம்சயத்தை யெண்ணி வெட்கமும் பரிவும் காட்டுவாள் என்று பாவனை செய்து கொண்டு அவளுடைய அறைப் பக்கம் ஆவலுடன் போனான்.

கதவு சாத்தியிருந்தது. பூட்டை உடைத்தான். உள்ளே போனால் வெற்றறை. ஆரம்பத்திலே சிலநாட்கள் அவள் திரும்பாத விஷயத்தைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அவளுக்கு இஷ்டமானால் தானே வருவாளென்று இருந்தான். பிறகு தலைமைக் குமாஸ்தா வந்து, 'நீ கவனியாமல் இருப்பது பயனில்லை. அவளைப் பற்றி ஏதேனும் செய்தி தெரிய வேண்டாமா?' என்றான். அதன்பேரில் மாமனார் வீட்டுக்குப் பூஷணன் தூதரை விடுத்தான். அந்தச் சமயம் வரை அங்கு மணியும் வரவில்லை, மதுசூதனனும் வரவில்லையென்று செய்தி கிடைத்தது.

எங்கும் தேட ஆரம்பித்தார்கள். நதியின் இருபுறத்துக் கரைகளிலும் விசாரணை பண்ணிக் கொண்டே போனார்கள். மதுவின் அங்க அடையாள விவரங்களெல்லாம் போலீசார் வசம் கொடுத்தார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. எந்தத் தோணியில் போனார்கள், யார் தோணி விட்டார்கள், எந்த வழியே போனார்கள்— ஒன்றுமே துலங்கவில்லை.



இனி மீனாவியை மீண்டும் காணலாம் என்ற ஆசை கட்டோடு நீங்கினபின் ஒரு நாள் மாலை பூஷணன் தனது தனிக் கட்டிலருகே போனான். அன்று கோகுலாஷ்டமி. காலை முதல் மழை இடைவிடாமல் பொழிந்து கொண்டிருந்தது. உத்ஸவத்தை யொட்டிக் கிராமத்தில் சந்தை கூடிற்று. ஒரு பந்தல் போட்டு அதில் நாடகம் நடந்தது. மழையோசையுடன் தொலைவிலிருந்து பாட்டொலியும் கலந்து வந்தது. அதோ பார்! அங்கொரு ஜன்னல் நிலையை விட்டு நழுவிக் கிடக்கிறதே. அதன் மூலமாக இருளில் பூஷணன் மழையை நோக்கிக் கொண்டிருந்தான். ஈரவாடை, உள்ளே தெளிக்கும் தூற்றல், பாட்டோசை ஒன்றையும் அவன் கவனிக்கவில்லை. அறையிலே சுவர் மீதில் இரண்டு ரவி வர்மா படங்கள், லக்ஷ்மியும் சரஸ்வதியும் மாட்டியிருந்தன. துணி தொங்கவிடும் மரத்திலே ஒரு கைத் துண்டு, ஒரு ரவிக்கை, இரண்டு பட்டுப் புடவைகள், — இவை மட்டும் மாட்டியிருந்தன.

மறு நாள் உடுக்கத் தயாராக அவள் அவற்றை வைத்துப் போயினள். மூலையில் ஒரு மேஜைமேல் ஒரு தட்டில் வெற்றிலை சுண்ணாம்பு தடவி வைத்திருந்தது. அது அப்படியே சருகாய்க் கிடந்தது. கண்ணாடி அலமாரியில், அவளுடைய குழந்தைப் பருவத்துப் பீங்கான் பொம்மைகள், வாசனை சீசாக்கள், வர்ணக் கண்ணாடிகளில் செய்த அலங்கார சீசாக்கள், நேர்த்தியான சீட்டுக் கட்டு, பெரிய மெருகிட்ட சங்குகள், வெறும் சோப்புப் பெட்டிகள் — முதலிய எத்தனையோ சாமான்கள் வெகு ஜாக்கிரதையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. புரையில் அவளுக்குப் பிரியமான உருண்டைக் கண்ணாடி போட்ட சிறு விளக்கொன்று வைத்திருந்தது. மாலை தோறும் மனி அதைத் தன் கையால் ஏற்றி வைப்பது வழக்கம். எல்லாவற்றையும் வெறுமையாக்கி விட்டுப் போனோர், உயிரற்ற சாமான்களின் மீதும் தீய இருதயத்தின் முத்திரை விட்டுச் செல்லுகின்றனர்.

பாதி இரவில், மழை நின்று நாடகச் சத்தமும் நின்ற பின்பு, பூஷணன் அப்படியே உட்கார்ந்திருந்தான். ஜன்னலுக்கு வெளியே காடாந்தகாரம். வானே அனாவி இருளுலகம். அவன் முன் கதவு திறந்து நிற்பதைப் போல் தோன்றிற்று. 'ஹோ!' என்று அவனிருள் இழந்த பொருளெல்லாம் திரும்பி வருமென்ற பிராந்தி உண்டாயிற்று.

இவ்வனம் அவன் யோசித்துக் கொண்டிருக்கையிலே, நகைகள் குலுங்குவது போல் கிலு கிலுவென்ற ஒரு சத்தம் கேட்டது. அவ்வொலி நதித்துறையின் படிகளின் மேல் ஏறி வருவதுபோலிருந்தது. நதியின் நீர் இரவின் இருளுடனே லயித்துக் கிடந்தது. கம்பியுடன் பூஷணன் தன் ஆவல் கொண்ட விழிகளால் இருளைக் கிழிக்க முயன்றான். கண் நோவுற்றது. ஒன்றும் புலப்படவில்லை. அவன் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுதி யுற்றது போல இருளும் மிகுதிப்பட்டது. வெளியுலகம் மறைந்து விட்டது.

அவ்வொலி படித்துறையின் உச்சிக்கு வந்தது. பின் வீட்டை நோக்கி வரலாயிற்று. வாயிலுக் கெதிரே வந்து நின்றது. வாயில் காப்போன் கதவைப் பூட்டி விட்டுச் சென்றிருந்தான். அதோ பார். அந்த அடைத்த கதவின் மேல் கிலு கிலுவென்று நகை போட்ட கைகளால் புடைப்பது போல் பல அடிகள் செவிப்பட்டன. பூஷணன் பின்பு கணமும் தரித்திருக்க மாட்டாதவனாய், ஒளியற்ற பல அறைகளின் வழியாகவும், மெத்தைப் படி வழியாகவும் தட்டித் தடவிக் கொண்டு இறங்கி வந்து மூடியிருந்த வாயில் கதவருகே நின்றான். அதன் வெளிப்பக்கத்தில் சங்கிலி பூட்டு பூட்டி இருந்தது. தன் பலத்தை யெல்லாம் வைத்து இழுத்தான். அசைகிற சத்தத்தில் விழித்துக் கொண்டான். பிறகு தான் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், தூங்கினபடியே கீழே இறங்கி வந்திருப்பதாகவும் கண்டான். அவன் உடம்பு முழுதும் வியர்வையால் நனைந்திருந்தது. அவன் கைகால்கள் பனிக்கட்டி போல் குளிர்ந்திருந்தன. அவியப் போகிற விளக்கைப் போல நெஞ்சு புடைத்துக் கொண்டது. அவனது கனவு உடைந்து போகவே மறுபடியும் மழையின் சலசலப்பைத் தவிர வேறே ஓசை யொன்றும் இல்லை என்பதைக் கண்டான். கனவாயினும், ஏதோ ஒரு சிறு தடையினாலேயே தனது அசாத்திய ஆசை நிறைவேறாது போய்விட்டதாக எண்ணி அதை நனவு போலக் கருதலானான். இடைவிடாது பெய்யும் மழை ஒலி: "இந்த நனவே கனவு. உலகம் மாயை" என்று சொல்லுவது போல் இருந்தது.

கிராமத்தில் திருவிழா மறுநாளும் தொடர்ந்து நடந்தது. வாயில்காப்போன் மறுநாளும் சந்தைக்குப் போக வேண்டுமென்று விடுமுறை கேட்டான். இரவு முழுதும் வாயில் கதவு திறந்தே இருக்க வேண்டுமென்று பூஷணன் அவனுக்குக் கட்டளை இட்டான்.

அன்றிரவு விளக்கை அணைத்து விட்டுப் பூஷணன் தனது படுக்கை அறையில் திறந்த ஜன்னலருகே பழையபடி உட்கார்ந்திருந்தான். வானம் கரிய மேகங்களால் இருண்டிருந்தது. ஏதோ பெரிய சம்பவம் நடக்கப் போவதை உலகம் எதிர்பார்த்து நிற்பது போல மௌனம் நிலவியது. தவளை கத்துவதின் ஏக ராகமும், நாடகப் பாட்டும் மௌனத்தைக் கலைக்கவில்லை. அதனை விகாரமாக்கின.

இரவில் நெடுநேரமான பின், தவளைகளும் சின் வண்டுகளும் நாடகப் புரைப் பையன்களும் சத்தமில்லாது போன பிறகு, இரவின் இருள் இன்னும் மையாகி விட்டது. 'சமயம் வந்து விட்டது!'



முதல் நாள் இரவு போலவே நதியின் கட்டத்திலிருந்து சலசலப்பும், கிலுகிலுப்புமான சத்தம் மறுபடியும் வந்தது. ஆனால் இந்தத் தடவை பூஷணன் அதைத் திரும்பிப் பார்க்கவில்லை. ஆத்திர மிகுதியினால் தனது புலன்களைத் தவறவிடக் கூடாது என்று நிச்சயித்துக் கொண்டான். தன்னைத் தானே வெகு சிரமத்தின் பேரில் அடக்கிக் கொண்டிருந்தான்.

ஆபரண ஓசை படித்துறையிலிருந்து வாயிற் கதவுக்குள் மெதுவாக நுழைந்தது. பிறகு சுழற்சியாக இருந்த மேலேப் படிக்கட்டின் மீது தானும் சுழன்றேறி உள்ளறைகளுக்குச் சமீபத்தில் வந்தது. பூஷணனால் தன்னை அடக்க இயலவில்லை. நெஞ்சு கொட்டத் தொடங்கிற்று. ஆத்திரம் வந்து தொண்டையை அடைக்கிறது. படிக்கட்டின் உச்சிக்கு வந்து அந்த ஓசை தாழ்வாரத்தின் வழியே பூஷணன் இருந்த அறைக்கு வெளிப் புறத்திலே சுளக்கென்று வந்து நின்றது: இப்போது அறைக் கதவுக்குப் பக்கத்திலே வந்து நிற்கிறது.

பூஷணன் தன்னை மறந்து விட்டான். உள்ளே மூடி வைத்திருந்த ஆத்திர மெல்லாம் உடைத்துக்கொண்டு, 'அடியே! மனிமல்லிகே' என்றொரு கூக்குரலாகப் புறப்பட்டது. மின்வெட்டுவது போல் நாற்காலியிலிருந்து எழுந்தான். மறுபடியும் தூக்கத்திலிருந்து தான் விழித்துக் கொண்டதைக் கண்டான். தனது கூக்குரலால் ஜன்னல் கண்ணாடி யெல்லாம் அதிர்ந்து கொண்டிருக்கக் கண்டான். வெளியே தவளைகள் கத்துகின்றன. மழை பெய்யும் ஓசை சளசளவென்று கேட்கிறது. பூஷணன் மௌனமானான்:

மறுநாள் சந்தை கலைந்து விட்டது. திருவிழாக் கடைகளும், நாடகக் கொட்டகையும் போய்விட்டன. அன்றிரவு வீட்டில் தன்னைத் தவிர வேறு யாரும் படுத்துறங்கக் கூடாதென்று பூஷணன் கடுமையாக உத்தரவு போட்டான்.

சாயங்கால மானவுடனேயே மேற்படி ஜன்னலுக்கருகே போய் உட்கார்ந்தான். அன்றிரவு மேகப் படலத்தில் உடைப்புக்கள் விழுந்திருந்தன. மழை பெய்து சுத்தப்பட்ட வானத்தில் அவ்வுடைப்புகளை ஊடுருவி நக்ஷத்திர ஒளி மின்னியது. சந்திரன் எழ நெடும்போதாகி விட்டது.

சந்தை முடிந்து போனபடியால், — வெள்ளமாகப் பாய்ந்த — நதியில், ஒரு தோணி கூட இல்லை. இரண்டிரவு கண் விழித்த சிரமத்தால் கிராமத்து ஜனங்கள் அயர்ந்து தூங்கி விட்டனர்.

நாற்காலியின் முதுகிலே தலையைச் சாய்த்துக் கொண்டு பூஷணன் மீண்டும் நக்ஷத்திரங்களை நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் நோக்குகையிலேயே அவை ஒவ்வொன்றாக மறைந்தன. களைப்பெய்திய விழியின் இமைகளைப்போலே வானின் இருட் படலமும் பூமியின் இருட் படலமும் சந்தித்தன. இன்று பூஷண் மனம் சாந்தியோடிருந்தது. தனது நெஞ்சின் ஆவல் தீர யமதர்மராஜன் தன் ரகசியங்களைத் தனக்குக் காட்டுவதற்குரிய காலம் வந்து விட்டதென்று நினைத்தான்.

முந்தின இரவுகளைப் போலவே நதியின்கட்டத்திலிருந்து இந்த ஓசை புறப்பட்டு வந்தது. நதிப் படிகளின்மேல் ஏறிற்று. பூஷண் கண்ணை மூடிக் கொண்டு சமாதியில் இருந்தான். அது முற்றத்துக்கு வந்தது. சுழன்று படிக்கட்டின் மேல் ஏறிற்று. நீண்ட தாழ்வாரத்தைக் கடந்தது. அவனுடைய படுக்கை அறைக் கதவுக்கு வெளிப்புறத்திலே வந்து நெடுநேரம் சும்மா காத்து நின்றது.

பூஷணனுடைய நெஞ்சு புடைக்கிறது. அவன் உடம்பு முழுதும் நடுங்கிற்று. அவன் கண்ணைத் திறக்கவில்லை. அப்போது அவ்வொலி வாயிற் படியைக் கடந்து அவன் அறைக்குள் நுழைந்தது. சேவகன் போட்டிருந்த மரத்தருகே போய்ப் பின்பு சிறு விளக்கு வைத்திருந்த புரைவோரம் வந்து, அப்பால் சருகான வெற்றிலைகள் மடித்து வைத்திருந்த மேஜையைக் கடந்து, பலவித சாமான்கள் சேர்ந்து வைத்திருந்த அலமாரியையும் தாண்டிக்கொண்டு கடைசியாக பூஷண் ஸாஹ பக்கத்திலே வந்து நின்றது.

கண்ணைத் திறந்தான். பிறைச் சந்திரனுடைய இலேசான ஒளியில் தன் நாற்காலிக்கு எதிரே, மனுஷ்ய ரூபம் போல் வெற்றெலும்புக் கூடு வந்து நிற்பதைக் கண்டான். அந்த எலும்புக் கூடு தன் விரல்களில் மோதிரம் போட்டுக் கொண்டிருந்தது. கையில் காப்புகளும், காதில் சரங்களும், முடிமீது பொன் மகுடமும், அதன் உடம்பு முழுதும் பொன்னும் வைரமுமாக மிளிர்ந்தன. ஆபரணங்கள் அதன் அவயவங்களில் தொங்கிக் கீழே விழுந்து விடும் போலிருந்தன. எல்லாவற்றிலும் அதிக பயங்கரமான விஷயம் என்னவென்றால், அதன் எலும்பு மூஞ்சியில் இருந்த இரண்டு கண்கள் மாத்திரம் உயிர்க் கண்கள். இரண்டு கரிய ஈர விழிகள், நீண்ட அடர்ந்த இமைகளின் வழியே இமையா வெறித்து நோக்கின. அவன் நாடிகளுக்குள்ளே ரத்தம் உறைந்து போய் விட்டது. இந்த கோரத்தைப் பார்க்காமல் தன் கண்களை மூடிக்கொள்ள முயன்றான். அவனால் இயலவில்லை.



அப்போது அந்த எலும்பு ரூபம் அசைவற்றுக் கிடந்த பூஷணனை உற்று நோக்கிக் கையை நீட்டி அழைப்பது போலே சமிக்ஞை செய்தது. அதன் எலும்பு விரல்களின் வைர மோதிரங்கள் வெளிறிய நிலவில் 'பளீர்' என்று மின்னின.

தன் வசமிழந்தவனும், பூஷணன் எழுந்து அந்த எலும்பு வடிவத்தைத் தொடர்ந்து சென்றான். அது அறையை விட்டு வெளியே புறப்பட்டது. அதன் எலும்புகளும் வைரங்களும் 'நெற நெற' என்ற ஒலி செய்தன. தாழ்வாரத்தைக் கடந்து போயிற்று. மையிருள் போர்த்திருந்த சுழற் படிக்கட்டு வழியே சுற்றிச் சுற்றி இறங்கி அடிக்கு வந்து சேர்ந்தது. கீழ்த் தாழ்வாரத்தையும் கடந்து விளக்கில்லாத வெளிப்புறத்து வெறுமண்டபத்துக்கு வந்தது. பூஷணனும் கூட வருகிறான். பிறகு தோட்டத்துக்குச் செங்கல் தளமிட்ட பாதைக்கு வந்தனர். எலும்புக் கால்களின் அடியிலே செங்கற்கள் நொறுங்கின. அடர்ந்த நிலா மரக்கிளைகளின் வழியே இருண்டு வந்தது. பாதை நேரே தெரியவில்லை. இருபுறத்தும் மின்மினிப் பூச்சிகள் பறந்து சென்றன. இருண்ட மர நிழற் பாதை வழியே நதியின் கட்டத்துக்கு வந்து சேர்ந்தனர்.

முன் ஏறிவந்தது போல, படித்துறையில் அந்த அலங்கார எலும்புக்கூடு படிப்படியாக மெல்ல மெல்ல திமிர்ந்து வளையோசைகளுடன் இறங்கிச் சென்றது.

எலும்புக் கூடு தண்ணீருக்குள்ளே இறங்கிற்று. அதைப் பின் தொடர்ந்து, பூஷணனும் ஓரடியை ஜலத்துக்குள் வைத்தான். ஜலத்திலே கால் பட்டவுடன் திடுக்கிட்டுக் கண்ணை விழித்துக் கொண்டான். வழிகாட்டியைக் காணவில்லை. எதிர்க் கரையில் மரங்கள் அசையாமல் மோனமுற்று நின்றன. தலைக்குமேலே பிறைச் சந்திரன் வியப்பெய்தியவன் போலே விழித்துக் கொண்டிருந்தான். உச்சி முதல் உள்ளங்கால் வரை நடுங்கிப் போய் பூஷண் ஸாஹ கால் வழுக்கித் தலைகீழாகத் தண்ணீருக்குள் விழுந்தான்.

கனவுகளை விட்டு ஒரு கணம் ஜாக்ர லோகத்துக்கு வந்தான். மறுகணம் நித்ய நித்ரா லோகத்தில் ஆழ்ந்து சேர்ந்தே போனான்.''

★

இவ்வளவும் தன் கதையைச் சொல்லி முடித்து அந்த வாத்தியார் சிறிது நேரம் சும்மா இருந்தான். அவன் கதையை நிறுத்தின கணத்தில் திடீரென்று உலகத்தின் மௌனம் என் உணர்வை வந்து மோதிற்று. நெடுநேரம் வாய் பேசாமல் இருந்தேன். என் முகத்தின் குறிப்பைக் காண வேண்டுமென்பது அவனுடைய அவா. அதற்கு இருள் இடம் கொடுக்கவில்லை.

கடைசியாக அவன், "நீர் இந்தக் கதை உண்மையாக நடந்ததென்று நம்புகிறீரோ, இல்லையோ?" என்று கேட்டான்.


"உமக்கு நம்பிக்கைதானா?" என்று நான் திரும்பக் கேட்டேன்.

அதற்கு அவன் :—"நான் நம்பவில்லை. கேள்விப்பட்டதைச் சொன்னேன் ; அவ்வளவுதான். இது வாஸ்தவமாக இராதென்பதற்கு இரண்டு காரணம். முதலாவது காரணம் பிரகிருதியானவள் வேடிக்கைக் கதைகள் எழுதும் வழக்கமில்லை. அதாவது உண்மையில் நடந்த சமாசாரம் இத்தனை கதை மாதிரி இருக்காது. பிரகிருதிக்கு வேறு எவ்வளவோ வேலையிருக்கிறது" என்றான்.

அவன் சொல்லிய நான் இடையே மறித்து :—"இரண்டாவது காரணம் யாதென்றால், பூஷண் ஸாஹ என்பது அடியேனுடைய பெயர். நான் சாகவில்லை யென்பதற்கு நானே சாட்சி" என்றேன்.

அந்த வாத்தியார் துளி கூட வருத்தப்படாமல் :—"ஓஹோ நான் அப்படியிருக்கலாமென்றே உத்தேசித்தேன். உம் மனைவியின் பெயரென்ன?" என்றான்.

"நிருத்ய-காளி" என்றேன்.



ஹோமர்

இப் பகுதிகளில் மேனாட்டு இலக்கியக் கர்த்தாக்களை நேயர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம்.

ஹோமர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவர். கண் பார்வை இழந்த அந்தகக் கவிஞர். ஒரு சிறுவனுடைய உதவி கொண்டு ஊர் ஊராகச் சுற்றி வந்தார். கையில் "லையர்" என்ற தந்தி வாத்தியத்தை மீட்டி அதற்கேற்பக் கவிதைக் கதைகள் சொல்லி வந்தார். அலெக்ஸாந்தர் என்ற பிரசித்தி பெற்ற கிரேக்க மன்னர் ஹோமரின் கவிதைத் தொகுதியை எப்பொழுதும் தலைமாட்டில் வைத்துக் கொண்டு படிப்பாராம். அப்படியானால் ஹோமரின் கவிதைகள் எவ்வளவு புகழ் பெற்று விளங்கின என்பதை ஊகிக்கலாம்.

ஹோமர் எழுதிய இரண்டு அற்புதக் காவியங்கள் இலியடும் ஒடிஸேயுமாகும்!

டிராய் நகரின் மீது கிரேக்க வீரர்கள் படையெடுத்து வெற்றியுடன் திரும்பினர். அவர்களில் ஒதஸூஸ் என்று ஒரு வீரன். அவனுக்கும் கடல் கடவுளுக்கும் தீராப் பகை. அதன் காரணமாகக் கடல் கடவுள், ஒதஸூஸ் தன் வீட்டுக்குப் போய் மனைவியைக் காணவிடாமல் செய்து சுமார் பத்து ஆண்டுகள் எங்கெங்கோ அலைக்கழிக்கிறான்.

ஒதஸூஸின் மனைவி அழகி பெனிலோப். தன் அருமைக் கணவனை எண்ணி எண்ணி உருகிக் காலங்கழிக்கிறாள்.

ஆனால் அவள் அழகில் மயங்கியிருக்கும் ஊர்ப் பிரமுகர்களும் இளைஞர்களும் "ஒதஸூஸ் இறந்திருப்பான்! அவனை எண்ணி உருகாதே! பயனில்லை. எங்களில் ஒருவரைக் கல்யாணம் செய்து கொள்" என்று ஓயாமல் நச்சரிக்கின்றனர்.

இவர்களுடைய தொந்தரவைப் பத்து வருஷம் பொறுத்தும் பார்த்தாள். ஒதஸூஸ் வரும் வழியாகக் காணோம்!

"இதோ! ஒதஸூஸின் வில் இருக்கிறது! இதை யார் நாண் ஏற்றுகிறார்களோ, அவர்களை மணம் செய்து கொள்கிறேன்" என்கிறாள்.

உடனே எல்லா வீரர்களும் அந்த வில்லின் நாண் ஏற்றும் முயற்சியில் ஈடுபட்டுப் படுதோல்வியடைகின்றனர்!

இந்தக் காட்சியைத்தான் இப் பக்கத்தில் நீங்கள் காண்கிறீர்கள்!

கதை முடிவு? ஒதஸூஸ் வருகிறான்! அவளுடைய கற்பு காப்பாற்றப்படுகிறது! அவை மிகவும் ருசிகரமான சம்பவங்கள்!





கேதே

ஜெர்மானியக் கவிஞர்களில் முதல் இடம் வகிப்பவர் கேதே!

கேதேயைப் பற்றி நம் நாட்டிலும் பலர் அறிந்திருப்பார்கள். கவி காளிதாஸனின் சாகுந்தலத்தைப் பற்றி கேதே பரவசப்பட்டு எழுதிய மொழிகளே மேல் நாட்டில் பலர் காளிதாஸனின் நூல்களையும் வடமொழியையும் பயில ஆர்வத்தைத் தூண்டின!

கேதே தமது வாழ்நாள் முழுதும் சிந்தித்துச் சிந்தித்து அதன் பயனாக "பாஸ்ட்" என்று ஒரு காவியத்தைச் செய்திருக்கிறார்.

நாடக உருவில் அமைந்துள்ளது காவியம்! நடிப்பதற்கு ஏற்றதல்ல, படித்துப் பயன் அடைவதற்கு ஏற்பட்டது. மேல்நாட்டில் வழங்கும் நாடோடிக் கதையே இந்தக் கதைக்கு ஆதாரம்.

டாக்டர் பாஸ்டன் என்பவர் விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர். அவர் வாழ்நாளில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக விஞ்ஞான ஆராய்ச்சியில் செலவழித்தார். கடைசியில் அவர் என்ன கண்டார்? இத்தனை ஆண்டுகள் விஞ்ஞான ஆராய்ச்சி செய்தும் உண்மையைக் காண முடியவில்லை. 'இதனால் என் உலக வாழ்வு பாழாயிற்று! உலக இன்பத்தையும் இழந்தேன்! உண்மையையும் காணமுடியவில்லை! என்ன பிழைப்பு?' என்று அலுத்துக் கொள்கிறார். அதுமட்டுமல்ல, இளமையில் அனுபவிக்கக்கூடிய இன்பங்களையும் துய்க்க வேண்டும் என்ற தாகம் எழுகிறது! இதன் காரணமாக, பில்லி, சூனியம் போன்ற கீழ்த்தரமான ஆராய்ச்சிகளில் பாஸ்டன் ஈடுபடுகிறார்! இதன் பயனாக மெபிஸ்டாபிலீஸ் என்ற நரக தூதன் டாக்டர் பாஸ்டன் முன்பு ஒரு வழிப்போக்கன் போல் தோன்றுகிறான். இருவரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்.

இவ்வுலகில் மெபிஸ்டாபிலீஸ் பாஸ்டனுக்குத் தொண்டனாக இருந்து வேலை செய்ய வேண்டியது! பாஸ்டனின் இறப்புக்குப் பிறகு, டாக்டர் பாஸ்டன் மெபிஸ்டாபிலீஸுக்கு அடிமையாக வேலை செய்ய வேண்டியது!

இந்த ஒப்பந்தத்துக்குப் பிறகு மெபிஸ்டாபிலீஸின் உதவி கொண்டு டாக்டர் பாஸ்டன் நடத்தும் இன்ப வாழ்க்கையை ஒரு அற்புத காவியமாக வடித்துத் தந்திருக்கிறார் கவிஞர் கேதே!

டாக்டர் பாஸ்டனை மெபிஸ்டாபிலீஸ் வழிப்போக்கன் உருவில் சந்திக்கும் காட்சியை இங்கு காணலாம்!

தாந்தே

இத்தாலி நாட்டுக் கவிஞர் தாந்தே. அவர் இத்தாலி மொழியில் மிக அருமையான காவியம் இயற்றியிருக்கிறார்.

தாந்தே, பிளாரன்ஸ் என்ற ஊரில் பிறந்தவர். ஆனால் அவர் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொண்டபோது "பிளாரன்ஸில் பிறந்தவனாயினும் பிளாரன்ஸ் மக்களின் குணங்கள் இல்லாதவன்" என்று பெருமையோடு சொல்லிக் கொண்டார்!

தாந்தே உள் நாட்டுக் கலவரங்கள் காரணமாகத் தம் சொந்த நாட்டை விட்டு, ஊரை விட்டு, மனைவி மக்களை விட்டு ஓட நேரிட்டது! இப்படி நாடோடி வாழ்க்கை நடத்திய காலத்தில்தான் அவர் "இன்பத்தில் முடியும் காவியம்" ("காமெடியா") எழுதினார். அது நாளடைவில் மக்களைப் பரவசப்படுத்தி "தெய்விகக் காவ்யம்" ("டிவைன் காமெடியா") என்று வழங்கலாயிற்று.

இக்காவியத்தின் கதாநாயகன் அதன் ஆசிரியனே!

இந்த ஆசிரியன் காட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் போது, வர்ஜில் என்ற கவிஞர் அவனுக்கு வழித்துணையாக வந்து நரக லோகத்தில் மனிதன் எந்தக் குற்றங்களுக்காக நரக வேதனைப்படுகிறான் என்பதை நரக லோகத்துக்கு அழைத்துச் சென்று காட்டுகிறார்.

கடைசியில் சுவர்க்கலோக எல்லையிலிருக்கும் ஒரு இனிய சோலையை அடைகிறார்கள்!

அங்கே கதாநாயகன் தேஜோமயமாக விளங்கும் சுடரைக் காண்கிறான். இது என்ன இரண்டாவது சூரியனோ என்று மயங்குகிறான். அப்படி வந்து நின்றவள் அவன், முன்பு காதலித்த பியாட் ரிஸேதான்!

இப்படி அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கும்போது தாந்தே வான மண்டலத்தில் எழும்புவதாக உணர்கிறார்!

"இது என்ன பூமியின் ஆகர்ஷண சக்தியினால் கீழ் நோக்கி இழுக்கப்படவேண்டியிருக்க நாம் என்ன மேலே நோக்கி எழுகிறோமே" என்று வியக்கிறார்.

அப்போது பியாட்ரிஸ் "மனிதன் இயல்பாகச் சேர வேண்டியது கடவுளின் அடியினை. ஆகவே கடவுளின் இருப்பிடத்தை நோக்கிச் செல்வது தான் அவனது இயற்கையான பண்பு. அதை விட்டு விலகி விலகிச் செல்வது இயற்கைக்கு மாறானது!" என்று மனிதனின் உயர்ந்த லட்சியத்தை விளக்குகிறாள்!

இப்படி அவள் பல கருத்துக்களைப் பொழிகிறாள்!





ஷேக்ஸ்பியர்

ஆங்கிலம் படித்தவர்களும் படியாதவர்களும் மேநாட்டு இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர் பெயரை அறிந்திருப்பார்கள் என்றால் அது ஷேக்ஸ்பியரின் பெயர்தான்!

ஷேக்ஸ்பியர் சுமார் நாற்பது நாடகங்கள் எழுதியுள்ளார்! ஒவ்வொன்றுமே அற்புதமான வடிவோடு மிகப் பெரிய கருத்துக்களையும் பாவங்களையும் அள்ளி வீசிக்கொண்டிருக்கிறது! பல சோக நாடகங்கள்; அவற்றில் பல காதல் நாடகங்கள்!

காதலும், வேடிக்கையும் ஹாஸ்யமும் கடல் வீசும் 'மிட்ஸம்மர் நைட்ஸ் ட்ரீம்' என்ற நாடகத்திலிருந்து ஒரு காட்சியைத்தான் இதோ இப்பக்கத்தில் பார்க்கிறோம்!

வன தேவதைகளின் அரசனுக்குத் தன் ராணிமேல் ஏதோ ஒரு விஷயம் பற்றிக் கோபம்!

இந்தக் கோபத்தின் காரணமாக அவள் மீது பழி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று வன தேவதைகளின் அரசன் நினைக்கிறான். தனது பணியாளர்களைக் கூப்பிட்டு, ராணி வனத்தில் தூங்கும் போது அவள் கண்களில் காதல் ரசத்தை ஊற்றும்படி பணிக்கிறான். அந்தக் காதல் ரசத்தின் சக்தி என்னவென்றால், தூங்கி விழித்தவுடன் யாரைப் பார்க்கிறாளோ, அவன் மீது ராணிக்குக் காதல் உண்டாகிவிடும்!

ராணி வனத்திலுள்ள புஷ்ப சோலையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு கோமாளி. அடுத்த ஊருக்குப் போய்க் கொண்டிருப்பவன், சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளப் படுத்துத் தூங்குகிறான்.

அவனுக்குக் கழுதைத் தலை வைக்கப் படுகிறது!

ராணியின் கண்களில் ஏற்கனவே காதல் ரசமும் ஊற்றப்பட்டிருக்கிறது!

ராணி தூக்கத்திலிருந்து கண்விழித்த போது, கழுதைத் தலையோடிருக்கும் கோமாளியைப் பார்க்கிறாள்! அவளுடைய காதல் பொங்கிப் பெருகுகிறது!

ராணி அந்தக் கழுதை மனிதனோடு கொஞ்சிக் குலாவும் காட்சி, இந்நாடகத்தில் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கச் செய்யும் ஹாஸ்யக் காட்சியாகும்!

அற்புதமான பெரிய காதல் நாடகத்தில் இப்படியொரு ஹாஸ்ய நிகழ்ச்சியைப் புகுத்துகிறார் நாடகக் கவிஞர் ஷேக்ஸ்பியர்.



காலம்
மாறிவிட்டது
யுகங்களுக்கு முன், விசுவாமித்திர மகரிஷியின் மகத்தான தபோ வன்மையைக் கண்டு பொறாமைகொண்ட தேவர்கள், அவரை நெறி தவற நடக்கச் செய்வதன் மூலம், அவர் தபோ பலத்தைக் குலைக்க அழகிய மேனகையை ஏவிவிட்டனர்.
சிற்றின்ப ஆசைகொண்ட மேனகையும் அதற்கு இசைந்து, காரியத்தில் வெற்றி கண்டாள். மகிமைவாய்ந்த மகரிஷியின் பட்டின் மிருதுவான நரை மயிரும், அலை அலையாய் தவழ்ந்து படிந்து நின்ற தாடியும் மேனகையை ரிஷியிடம் மயங்கச் செய்தன என்பது பெரியோரின் கருத்து.
ஆனால் காலம் மாறிவிட்டது. தற்கால யுவதிகள், நரைத்த ரோமத்தை முற்றிலும் அருவருக்கின்றனர்.
கூந்தலைக் கருமையாக்கும் உலகப் புகழ்பெற்ற
லோமா
REGD.
கொண்டு, கருமையானதும்
பளபளப்பானதுமான கேசத்தை அடையுங்கள்
ஸோல் ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்டாவாலா—ஆமதாபாத்-1
ஏஜெண்டுகள்: வி. நரோட்டம் அண்ட் கோ., பம்பாய்-2 போன்: 30575
MPS-TAM
சென்னை ஏஜண்டுகள்: ஜே பாலபாய் அண்டு கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிர்ருல் கதீர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

விந்தை புரிந்த விஞ்ஞானிகள்

இன்று உலக மக்கள் இயற்கை இடையூறுகளை வென்று நாகரிக வாழ்வு நடத்துவதற்கான அற்புத சாதனங்களைக் கண்டு பிடித்து, மானிட வர்க்கத்துக்கு இணையில்லாத் தொண்டு புரிந்த விஞ்ஞான மேதைகளின் வாழ்க்கை வரலாற்றைக் கீழே தருகிறோம். அவர்களுடைய திருவுருவப் படங்களை விஞ்ஞான மண்டலப் பகுதியில் காணலாம்.

ஜகதீஷ் சந்திர போஸ் (1858—1937): தாவர வர்க்கங்களுக்கும் மனிதரைப்போல் உணர்ச்சிகள் உண்டு என்ற உண்மையை நிரூபித்த தனிப்பெரும் விஞ்ஞான மேதைதான் ஸ்ரீ ஜகதீஷ் சந்திர போஸ். வங்காளத்தைச் சேர்ந்த டாக்கா ஜில்லாவில் பிறந்து கல்கத்தா, லண்டன் சர்வகலாசாலைகளில் பட்டம் பெற்ற ஸ்ரீ போஸ், தமது 25-வது வயதில் கல்கத்தா பிரஸிடென்ஸி கல்லூரியில் பௌதிகப் பேராசிரியர் பதவி பெற்றார். மின்சார கிரண சம்பந்தமாக அவர் கண்டு பிடித்த அற்புதங்கள் புத்தகமாக வெளிவர லண்டன் ராயல் சொஸைட்டி உதவிபுரிய முன் வந்தது. அதிலிருந்து, அவரது ஆராய்ச்சியின் உயர்வைத் தெரிந்து கொள்ளலாம். இலைகளின் உணர்ச்சிகளை நிரூபிக்கும் நுட்பமான யந்திரங்களை ஜகதீஷ் சந்திர போஸ் கண்டு பிடித்தது, அவரது ஆராய்ச்சிகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது. தூக்கம், துக்கம், பசி, பரபரப்பு, நோய் முதலிய அவஸ்தைகள் தாவரங்களுக்கும் உண்டு என்பதை அவர் நிரூபித்து ஏராளமான பதக்கங்களும் பெற்றார்.

ஆச்சார்ய ப்ரபுல்ல சந்திர ரே (1861—1944): யாருக்கும் இராத தனிச் சிறப்பு ஆச்சார்ய ப்ரபுல்ல சந்திர ரே ஒருவருக்குத்தான் உண்டு. அவர் ஏககாலத்தில் விஞ்ஞான மேதையாகவும் மிகப் புகழ் பெற்ற பேராசிரியராகவும், பிரபல பொதுநலத் தொண்டராகவும் திகழ்ந்தார். விஞ்ஞான உலகில் பல ஆண்டுகள் வரையில் அவரது அநுபவமும் அறிவுத் திறனும் எவரும் வியக்கத்தக்க வகையில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவரது உதாரணமும் உபதேசங்களும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு உத்வேகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து அவர்கள் முன்னேறுவதற்கு வழிகாட்டியாக இருந்தன. இந்திய ரசாயன நிபுணர்கள் பயிற்சி பெறுவதற்கான சிறந்த கல்லூரியை அமைத்த பெருமை அவருக்குத்தான் உரியது.

எடின்பரோ பல்கலைக் கழகத்தில் டி. எஸ்ஸி. பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பியதும் அவர் கல்கத்தா பிரஸிடென்ஸி கலாசாலையில் ரசாயன உதவிப் பேராசிரியராக நியமிக்கப் பட்டார். 1902-ம் ஆண்டில் பேராசிரியர் பி. ஸி. ரே. வெளியிட்ட "ரசாயன வரலாறு" என்ற மாபெரும் நூலின் இரண்டாம் பாகம் 1908-ல் வெளியிடப்பட்டது. ஆச்சார்ய ரே கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தபோது பதினைந்து ஆண்டுகள் வரையில் தமக்குக் கிடைத்த சம்பளத்தை, ரசாயன இலாகா அபிவிருத்திச் செலவுக்காக நன்கொடையாக வழங்கி வந்தார்.

ஸி. வி. ராமன் (1888-): அறிவுத் துறையில், ஆராய்ச்சித் துறையில் உலக நாடுகளிடையே பாரத நாட்டின் மதிப்பை உயர்த்திய மேதாவிகளில் முதல் ஸ்தானத்துக்குரியவர் சர் சந்திரசேகர வெங்கடராமன் எம். ஏ., எல். எல்டி. டி. எஸ்ஸி., எப். ஆர். எஸ். தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. 1888—ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் தேதி திருச்சிராப்பள்ளியில் பிறந்த ஸ்ரீ ஸி. வி. ராமன் தமது பதினாறாவது வயதில் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலையில் தேறிப் பட்டம் பெற்றார். எம். ஏ. பட்டம் பெற்றபின், இந்திய சர்க்கார் நடத்திய போட்டிப் பரீட்சையில் தேறி முதல் ஸ்தானம் பெற்றதால், எடுத்த எடுப்பில் அவரை உதவி அக்கௌண்டென்ட் ஜெனரலாக நியமித்து விட்டனர்.

1909-ல் ஸ்ரீ ராமனின் விஞ்ஞான ஆராய்ச்சிகள் ஆரம்பமாயின. அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா முதலிய நாடுகளில் நடந்த விஞ்ஞான மகாநாடுகளில் அவர் கலந்து கொண்டது, அந்த நாடுகளில் விஞ்ஞானத் துறையில் இந்தியாவின் மதிப்பு உயருவதற்கு உதவியாக இருந்தது. ஒளிச்சிதறல் சம்பந்தமாக அவர் கண்டு பிடித்த அரிய நுட்பமான விஷயங்கள் இன்று Raman Effect என்று வழங்கி வருகின்றன; ஒளிவீச்சு சம்பந்தமான ஆராய்ச்சியில் அவர் பெற்ற அற்புதமான வெற்றிக்காக அவருக்கு 1930-ல் நோபல் பரிசு கிடைத்தது.

எஸ். ராமானுஜம் (1887-1920): ஏழை துணிக் கடை குமாஸ்தாவின் குமாரரான ஸ்ரீ எஸ். ராமானுஜம் எப்படியோ தட்டுத்தடுமாறிக் கல்லூரியை எட்டிப் பிடித்தார். ஆனால் கல்லூரியில் முதல் வருஷப் பரீட்சையிலேயே அவர் தேறவில்லை. எனவே அவர் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வேலை தேடவேண்டியதாயிற்று. எத்தனையோ இன்னல்களை அநுபவித்தபிறகு அவருக்குக் கடைசியாகச் சென்னைத் துறைமுகத்தில் ஒரு குமாஸ்தா வேலை கிடைத்தது. சிறு வயது முதல் கணிதத்தில் தனி ஆர்வம் கொண்டிருந்த ஸ்ரீ ராமானுஜம் வேலைக்குச் சென்ற பிறகும் அதில் கவனம் செலுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டார்; கணிதத்தில் இவரது மேதையைக் கண்டு சென்னை பல்கலைக் கழகம் இவருக்கு உதவி அளிக்க முன் வந்தது. அதிலிருந்து அவரது புகழ் வெளிநாடுகளிலும் பரவியது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் கணிதப் பேராசிரியர் ஹார்டி, ராமானுஜத்தின் இணையற்ற மேதையை உணர்ந்து அவரை இங்கிலாந்துக்கு அழைத்தார். இங்கிலாந்து சென்ற ராமானுஜம் அங்குள்ள உலகப் புகழ் பெற்ற ராயல் சொஸைட்டியால் பாராட்டப் பட்டார். எனினும் துரதிர்ஷ்டவசமாக இங்கிலாந்தில் நோய்வாய்ப்பட்ட அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்த சில மாதங்களுக்குப் பின் மறைந்தார். முப்பத்தி மூன்று வயதுக்குள் ஸ்ரீ ராமானுஜம் பல கணித உண்மைகளைக் கண்டு பிடித்து உலகக் கணித மேதைகளையெல்லாம் பிரமிக்கச் செய்து விட்டார்.

ஜி. எஸ். ஓம் (1787—1854): ஜெர்மன் விஞ்ஞான மேதையும் கணித மேதையுமான ஜி. எஸ். ஓம் மின்சார சம்பந்தமாகக் கண்டுபிடித்த பல அரிய விஷயங்கள் இன்று "ஓம்மினுடைய சித்தாந்தங்கள்" என்று பிரசித்தி பெற்று விளங்குகின்றன. அவர் விஞ்ஞானப் பேராசிரியராகவும், கணிதப் பேராசிரியராகவும் இருந்து செய்துள்ள ஆராய்ச்சிகள் அற்புதமானவை. அவர் எழுதியுள்ள விஞ்ஞான நூல்கள் மிகப் புகழ் பெற்றவை.

டாக்டர் பாபா (1909—): கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்த டாக்டர் ஹோமி ஜிஹாங்கீர் பாபா கணிதத்தில் மூன்று பட்டங்கள் பெற்ற மேதையாவார். டாக்டர் பாபா வகித்துள்ள உயர் பதவிகள் எவரையும் பிரமிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை; உலகப் புகழ் பெற்ற பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தில் அவர் சில ஆண்டுகள் பேராசிரியராக இருந்தார். அணுசக்தி கமிஷன் தலைவராகவும், டாடா ஆராய்ச்சி நிலைய டைரக்டராகவும், இந்திய விஞ்ஞான காங்கிரஸ் அக்ராசனராகவும், அணுசக்தி மகாநாட்டுத் தலைவராகவும் அவர் புரிந்துள்ள தொண்டுகள் அவர் மக்களின் நன்மதிப்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாகும்படி செய்திருக்கின்றன;

ஹம்ப்ரி டேவி (1778—1829): ஆராய்ச்சித் துறையில் பிரிட்டனுக்குப் பெருமையை உண்டு பண்ணிய விஞ்ஞான மேதைகளில் ஹம்ப்ரி டேவி முக்கியமானவர். ரண சிகிச்சைக்கு இன்றியமையாத மயக்க மருந்து கண்டு பிடிப்பதற்கு அடிகோலியவர் ஹம்ப்ரி டேவிதான். எரிமலைகளின் ஆராய்ச்சியிலும் அவர் ஈடுபட்டிருந்தார். அவரது அதிவேகமான ஆராய்ச்சிகளும் பலன்களும் எல்லோரையும் பிரமிக்க வைத்தன. 1815-ல் சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்கான விளக்கைக் கண்டு பிடித்துப் புகழ் பெற்றார்.

ஹெரால்ட் கிளேடன் உரே (1893 -): 1934-ம் வருஷத்தில் ரசாயன ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானி ஹெரால்டு கிளேடன் உரே, அணுக்கள் சம்பந்தமாகச் சில அரிய நூல்கள் எழுதியுள்ளார். டியூடேரியம் என்ற அபூர்வ சாதனத்தைக் கண்டு

பிடித்தவர் உரேதான். அவர் வெளியிட்டுள்ள ஏராளமான விஞ்ஞானப் பிரசுரங்களும் மிகப் புகழ் பெற்றவை. அதனால்தான் உலக விஞ்ஞானிகளின் அணியில் அவர் முக்கிய இடம் பெற்றுள்ளார்.

மேகநாத் ஸஹா (1893—1956): விஞ்ஞான மேதையான பேராசிரியர் மேகநாத் ஸஹா 1951—ம் ஆண்டிலே அரசியலில் கலந்துகொண்டு லோகசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைக்கண்டு பலரும் ஆச்சரியம் அடைந்தனர். ஆனால், மந்திரி பதவிக்காக அவர் அரசியலில் கலந்து கொள்ளவில்லை. லோக சபையின் மூலம் பாரத நாட்டில் தொழில்துறைகள் முன்னேற்றம் அடைவதற்குத் தாம் உருவான தொண்டு செய்ய முடியும் என்ற உத்தேசத்துடனேயே அவர் அரசியலில் ஈடுபட்டார். விஞ்ஞான சம்பந்தமாக அவர் கண்டு பிடித்த சில நுணுக்க விஷயங்கள் உலகப் பிரசித்தமானவை. அலகாபாத், கல்கத்தா சர்வகலாசாலைகளில் பேராசிரியராக இருந்த ஸ்ரீ ஸஹா, விஞ்ஞான ஆராய்ச்சிக்கல்லூரிகளையும் ஸ்தாபித்துள்ளார்.

ஜே. எச். வி. ஹாப் (1852—1911): ரசாயனப் பேராசிரியராகவும் ஆராய்ச்சியில் மகா மேதையாகவும் விளங்கிய ஜே. எச். வி. ஹாப்பின் கருத்துகளையே இன்றுள்ள விஞ்ஞான நிபுணர்கள் கூடப் பின்பற்றுகிறார்கள். 1901-ம் ஆண்டில் ரசாயன ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற ஹாப் டச்சுக்காரர் ஆவார்; அவரது ஆராய்ச்சிகள் விஞ்ஞான சாஸ்திர இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

ஜோசப் ஜே. தாம்சன் (1856-1940): காற்று மூலம் மின்சாரம் செல்லக் கூடும் என்பதை முதன் முதலாகக் கண்டு பிடித்த பிரிட்டிஷ் கணித மேதையும் விஞ்ஞான மேதையுமான ஜோசப் ஜே. தாம்சன் பௌதிக ஆராய்ச்சிக்காக 1906 ஆண்டில் நோபல் பரிசு பெற்றார்.

லூயிகி கல்வானி (1737—1798): உலோகச் சேர்க்கையில் மிகவும் சக்தி பொருந்திய மின்சாரத்தை உண்டு பண்ண முடியும் என்ற பேருண்மையைக் கண்டுபிடித்த பெருமை இத்தாலியில் பிறந்த லூயிகி கல்வானிக்கே உரியது. அவரது ஆராய்ச்சிகள் அடங்கிய வெளியீடு உலகத்தையே பிரமிக்க வைத்தது.

பீர்பால் ஸாஹ்னி (1891—1949): லாகூர், கேம்பிரிட்ஜ் கலாசாலைகளில் படித்துப் பட்டம் பெற்று, லக்ஷ்மணபுரி பல்கலைக் கழகத்தில் தாவர சாஸ்திரப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட ஸ்ரீ பீர்பால் ஸாஹ்னிதான், லக்ஷ்மணபுரியில் தற்போதுள்ள பண்டைய கால தாவரவர்க்க நிலையத்தை ஸ்தாபித்தவர். தாவர சம்பந்தமாக ஸ்ரீ ஸாஹ்னி சிறந்த நூல் எழுதியதுடன், இக்காலத்தில் மறைந்துவிட்ட தாவர வர்க்கங்கள், இந்திய நாணயங்கள் முதலியவை பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் வெளியிட்டார். லக்ஷ்மணபுரியில் உள்ள பண்டைய கால தாவர வர்க்க நிலையத்தின் அபிவிருத்திக்காக ஸ்ரீ ஸாஹ்னி தமது சொத்து, வீடு, புத்தகசாலை, மிகவும் கஷ்டப்பட்டுச் சேகரித்த பண்டைய தாவர வர்க்க சாதனங்கள்முதலியவற்றை நன்கொடையாக அளித்ததிலிருந்து அவரது தர்ம சிந்தனையைத் தெரிந்து கொள்ளலாம்.

மைக்கேல் பாரடே (1791 - 1867) வறுமை காரணமாகவும், படிப்பு இல்லாததாலும் ஓர் அச்சுக்கூடத்தில் புத்தகங்களுக்கு அட்டை போடும் வேலையில் அமர்ந்திருந்த மைக்கேல் பாரடே, புத்தகங்களின் மேல் அட்டைகளைப் பார்ப்பதுடன் நில்லாமல், புத்தகங்களுக்கு உள்ளே என்ன இருக்கிறது என்பதையும் இடைவிடாது கவனிக்கத் தொடங்கினார். அந்த விடாமுயற்சி அவரைக் கடைசியில் உலக சரித்திரத்தில் அழியாத இடம் பெறும் விஞ்ஞான நிபுணராகச் செய்து விட்டது. இன்று உலகமக்கள் பெற்றுள்ள பல நவீன வசதிகளுக்கும் அஸ்திவாரம் அமைத்தவர் மைக்கேல் பாரடேதான். வாகனப் போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து, விளக்கு, உஷ்ணம், சக்தி முதலிய சகல சாதனங்களும் மைக்கேல் பாரடேயின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அபிவிருத்தியடைந்தன.

எர்னஸ்ட் ருதர்போர்ட் (1871—1937): இயற்கைத் தத்துவ மேதையும், ரசாயன நிபுணருமான எர்னஸ்ட் ருதர்போர்ட் புகழ் பெறுவதற்கு வறுமையோ, கல்வியின்மையோ தடையாக இருக்கவில்லை. அவர் தமது ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்குக் கலாசாலைப் படிப்பு பெருதவியாக இருந்தது. இருபத்தேழாவது வயதில் கனடா பல்கலைக் கழகத்தில் இயற்கைத் தத்துவப் பேராசிரியராகத் திகழ்ந்த எர்னஸ்ட் ருதர்போர்ட் மின்சார அலைகள், தோரியம், அணுக்கள் சம்பந்தமான பல அரிய உண்மைகளைக் கண்டு பிடித்ததுடன், காந்தக் கருவியையும் உருவாக்கினார். அவர் 1908-ம் ஆண்டில் நிகழ்த்திய ரசாயன ஆராய்ச்சிக்காக நோபல் பரிசுபெற்ற போது உலகமே அவரைப் பாராட்டியது.

இர்விங் லாங்மூர் (1881—1957): இர்விங் லாங்மூர் அமெரிக்காவில் பிறந்தார்; பாரிஸில் கல்வி கற்றார்; கொலம்பியாவில் பட்டம் பெற்றார்; ஜெர்மனியில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு பிச். டி. பட்டம் பெற்றார். அவருக்கு உலகத்திலுள்ள ஒன்பது பல்கலைக் கழகங்கள் போட்டி போட்டுக் கொண்டு கௌரவப் பட்டங்கள் வழங்கினவெனில், அவரது மேதையை அறிந்து கொள்ளலாம். இன்ஜினீரிங், பௌதிக, ரசாயன சம்பந்தமாக அவரது ஆராய்ச்சி வெளியீடுகள் மிகப் புகழ் பெற்றவை. செயற்கை மழையைக் கொண்டு வரும் வழியை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் அவர்தான். 1932-ல் அவருக்கு ரசாயன நோபல் பரிசு கிடைத்தது.

தாமஸ் ஆல்வா எடிஸன் (1847-1931): ஏழைக் குடும்பத்தில் பிறந்த தாமஸ் ஆல்வா எடிஸனைச் சிறு வயதிலேயே வறுமை வாட்டத் தொடங்கியது. அத்துடன் கல்வியின்மையும் சேர்ந்து கொண்டது. எனவே, பன்னிரண்டாம் வயதிலேயே அவர் ஏதாவது வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்திரிகை விற்கும் பையனாகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்த எடிசன் பிறகு தந்தி நிலையத்தில் வேலை பார்க்கத் தொடங்கினார். அவர் தமது வறுமை நிலையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இடைவிடாது படித்தும், சோதனைகள் செய்தும் அறிவை விருத்தி செய்து கொண்டார். 21-வது வயதிலேயே மின்சாரத்தால் ஒலிப்பதிவு செய்யும் கருவியை, கிராமபோனைக் கண்டு பிடிக்கும் அளவுக்கு அவருக்கு ஆராய்ச்சித் திறன் ஏற்பட்டு விட்டது.

ஸ்ரீமதி மேரி க்யூரி (1867—1934): முதன் முதலாக 1898-ம் ஆண்டிலே ரேடியம் கண்டுபிடிக்கப்பட்ட போது, விஞ்ஞான நிபுணர்கள் ஒரு புதிய உலகத்தையே கண்டனர் என்று கூறுவது மிகையாகாது. நோய்களை எதிர்த்து நடக்கும் போரில் ரேடியத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்த ஆயுதம் வேறு எதுவுமில்லை என்ற உண்மையை அவர்கள் அறிந்ததும், அதை மானிட வர்க்கத்துக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகவே கருதினர். அத்தகைய அற்புதமான ரேடியத்தைக் கண்டு பிடித்தவர்தான் ஸ்ரீமதி மார்ஜா அல்லது மேரி க்யூரி என்ற பெண்மணி. போலந்தில் ஓர் ஏழை உபாத்தியாயருக்குப் பெண்ணாகப் பிறந்த மேரி க்யூரியின் அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் வறுமை தடையாக இருக்கவில்லை. அதற்கு மாறாக, அவர் ஆயுள் முழுதும் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடத்துவதற்கு அது உதவியாக இருந்தது. முதலில் அவர் ஏழை உபாத்தியாயராகவே வாழ்க்கையை ஆரம்பித்தார். கையில் சிறிது தொகை சேர்த்துக் கொண்டு பிறகு மேல் படிப்புக்காகப் பாரிஸ் சென்றார். பௌதிக சாஸ்திரத்திலும், ரசாயன சாஸ்திரத்திலும் நோபல் பரிசு பெற்றார்.

சர் ஐஸக் நியூடன் (1642—1727): மரத்திலிருந்து ஆப்பிள் பழம் கீழே விழுவதை ஒரு பையன் பார்த்துக் கொண்டிருந்தான். அச் சம்பவம் அந்தப் பையனின் வாழ்க்கையை அடியோடு மாற்றி விட்டது. அது வரையில் மண்டுவாக இருந்து உபாத்தியாயரிடம் அடிபட்டு வந்த அந்தச் சிறுவன் மகா புத்திசாலியாக மாறினான். ஆப்பிள் விழுந்த அற்ப சம்பவத்திலிருந்து பூமியின் ஆகர்ஷண சக்தியையும் மற்றும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் சம்பந்தமான ரகசியங்களையும் தூரதிருஷ்டிக் கண்ணாடியையும் கண்டுபிடித்த நியூடன்தான் அந்தப் பையன். ஆராய்ச்சி உலகில் மங்காப் புகழ் பெற்று விளங்கும் சர் ஐசக் நியூடன் கணிதப் பேராசிரியராகவும் அகில உலக ஆராய்ச்சி நிபுணராகவும் திகழ்ந்தார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (1879 - 1955): ஜெர்மன் சர்வாதிகாரியாக விளங்கிய அடால்ப் ஹிட்லருக்கு விரோதமாக அமெரிக்காவும், பிரிட்டனும் மற்ற நாடுகளும் எவ்வளவோ பிரசாரம் செய்தன; ஆனால், அவையெல்லாவற்றையும் விட ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் ஒரு செய்கை, ஹிட்லர்மீது உலக மக்கள் சகலருக்கும் வெறுப்பு உண்டாகும்படி செய்து விட்டது. ஜெர்மனியில் பிறந்து, அங்கேயே கல்வியில் தேர்ச்சிபெற்று, பேராசிரியராகவும் விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணராகவும் திகழ்ந்த ஐன்ஸ்டீனை, ஹிட்லர் வெளியேற்றினார். ஐன்ஸ்டீன், அமெரிக்காவுக்குச் சென்று, அமெரிக்கப் பிரஜையாகி, அங்கேயே ஸ்தாபித்து விட்டார். அவரது அற்புத ஆராய்ச்சிக்காக 1921-ல் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.

விஞ்ஞான மண்டலம்



ஜகதீஷ் சந்திர போஸ்



சர்.பி.ஸி.ரே



ஸி.வி.ராமன்




எஸ். ராமானுஜம்



ஜி.எஸ். ஓம்


டாக்டர் எச். ஜே. பாபா
ஹம்ரி டேவி
எச். ஸி. உரே
டாக்டர் எம். என். ஸஹா
ஜே. எச். வி. ஹாப்


ஜோசப் ஜே. தாம்சன்
லூயிகி கல்வானி
பிர்பால் ஸாஹ்னி
மைக்கேல் பாரடே
எர்னஸ்ட் ரூதர்போர்ட்



தாமஸ் எடிசன்



இர்விங் லாங்மூர்




மேரி கியூரி




சர். ஐசக் நியூடன்



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்


எமது மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
கடந்த காலத்தில் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிறிது தாமதம் ஏற்படினும் பொறுமையாகவும் சாந்தமாகவும் இருந்த எமது ஆதரவாளர்களுக்கு இப்போது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், வருங்காலத்தில் அவர்களது தேவைகளை உடனுக்குடன் கவனிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் எனவும் உறுதி கூறுகிறோம். எமது முயற்சிகள் வெற்றி பெற இறைவனை பிரார்த்தித்துக் கொள்கிறோம்.
IEW
THE INDIA ELECTRIC WORKS LTD.
CHATNATH BUILDINGS - MOUNT ROAD - MADRAS-2


MAFATLAL
GROUP OF MILLS
SHORROCK
AHMEDABAD.
NEW SHORROCK
NADIAD.
STANDARD
BOMBAY.
NEW CHINA
BOMBAY.
SASSOON
BOMBAY.
NEW UNION
BOMBAY.
MAHARANEE
MHALSABAI
DEWAS.
SURAT COTTON
SURAT.
MAFATLAL FINE
NAVSARI.
GAGALBHAI JUTE
CALCUTTA.
MAFATLAL
GROUP
CLOTH FOR THE NATION
Mafatlal's other interests include
Cotton, Sugar and Dyestuffs.
MAFATLAL HOUSE, BACK BAY RECLAMATION, BOMBAY 1


நாம் அறியாதது

எனது நண்பர் கோபாலய்யர் எப்பொழுதும் பார்வதியின் பேச்சாகவே இருந்தார். அவளிடம், அவருக்கு அளவற்ற மதிப்பு. பக்தி என்று கூடக் கூறலாம். அவளுடைய பொறுமை, சாமர்த்தியம், அறிவு, உதாரகுணம் முதலியவற்றைப் போற்றாத நாளில்லை. முடிவில் எனக்கும் அவளைப் பார்க்க ஆவலிருந்தது. ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை நான்கு மணிக்கு இருவரும் அவள் வீட்டுக்குப் போனோம்.


மோட்டாரின் சத்தம் கேட்டு, பார்வதி வெளியே வந்தாள். வயது அறுபதுக்கு மேலிருக்கும். முகத்தில் சுருக்கம் இருந்த போதிலும் பார்வைக்குப் பத்து வருஷங்கள் குறைவாகவே காணப்பட்டாள். சாதாரண உயரம். மெல்லிய உடல். முகத்தில் நல்ல களை, கண்களில் அமைதியான ஒளி.

கோபாலய்யரைக் கண்டதும் முறுவலுடன் கை கூப்பினாள். என்னைக் காட்டி, ''இவர்தான் என் நண்பர். இவரைப் பற்றி அடிக்கடி கூறியிருக்கிறேன் அல்லவா?'' என்று கூறிக்கொண்டே வீட்டுக்குள்ளே நுழைந்தார். நானும் அவர் பின் போனேன். பார்வதி கடைசியில் வந்தாள்.

ரீடிங் ரோடிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்தில் அந்த வீடு இருந்தது. சிறிதாக இருந்த பொழுதிலும் அழகாகவும் சுத்தமாகவும் இருந்தது. வாசல் பக்கமிருந்த ஹாலில் சௌகரியமான



நன்மை



க. சந்தானம்

பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சுவரில் சிவன், பார்வதி, நடராஜர், ராமர், கிருஷ்ணன் முதலிய படங்கள் மாட்டப்பட்டிருந்தன.

மூவரும் போய் நாற்காலிகளில் உட்காரும்பொழுது ஒரு சிறு பெண் பரபரப்புடன் ஓடிவந்து, 'பாட்டி!' என்றாள். எங்களைப் பார்த்ததும் நிறுத்திக் கொண்டாள். கோபாலய்யர் புன்சிரிப்புடன் அவள் கையைப் பிடித்து அருகில் இழுத்து முதுகில் தடவிக் கொடுத்தார். பன்னிரண்டு வயதிருக்கலாம். கொடி உடலும், கண்ணும் மான்குட்டி போல். என்னை அறியாமலே அவள் தலை மீது கையை மெதுவாக வைத்தேன். "ஏன், மீனு! உனக்கு என்ன கூச்சம்? நாங்கள் இருவரும் உனக்குத் தாத்தாக்கள் போலத்தானே! என்ன சொல்ல வந்தாய்?" என்று கேட்டார் கோபாலய்யர்.

மீனு தன் பாட்டியின் முகத்தை நோக்கினாள். பார்வதி அவளை அழைத்து மடிமீது உட்கார வைத்துக் கொண்டு, "என்ன கண்ணே, உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, பாட்டி! அடுத்த வீட்டுக்கு ஒரு ஜோசியர் வந்திருக்கிறார். கையைப் பார்த்து, வரப் போவதெல்லாம் சொல்லுவாராம். நானும் என் கையைக் காட்டலாமா? ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டுமாம்" என்று தயக்கத்துடன் மீனு கூறினாள்.

பார்வதியின் முகத்தில் இலேசாகச் சோகக்குறி காணப்பட்டது. மீனுவை முத்தமிட்டுக் கொண்டே, "அதெல்லாம் நமக்கு வேண்டாம், மீனு. நாம் இன்றையப் பாட்டைப் பார்த்துக் கொண்டால், கடவுள் நாளைக் காரியத்தைக் கவனிப்பார்" என்றாள்.

"இல்லை, பாட்டி! அடுத்த வீட்டு ராதாவுக்குக் கை பார்த்து அவள் அமெரிக்கா போவாள் என்று குறி சொன்னார். எனக்கும் அப்படி ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க ஆசை" என்று கெஞ்சும் கண்ணோடு பாட்டியைப் பார்த்தாள்.

"அதற்கு ஜோசியம் எதற்கு, கண்ணு! நீ கெட்டிக் காரியாகப் படித்தால் உன்னை நானே அமெரிக்காவுக்கு அனுப்புகிறேன்" என்றாள் பார்வதி.

"நிஜமாகவா?" என்று கூறிப் பாட்டியைக் கட்டி முத்தமிட்டு விட்டு மீனு வெளியே ஓடிப்போய் விட்டாள். பார்வதி அவள் சென்ற வழியையே சிறிது நேரம் பார்த்துவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"ஏனம்மா, குழந்தை கை பார்த்தால் என்ன மோசம் போகும்? சில வேளை இந்தக் குறிகள் பலிக்கலாம். எனக்குக்கூடச் சோதிடத்தில் ஓரளவு நம்பிக்கையுண்டு" என்றார் கோபாலய்யர். பார்வதியின் கண்கள் பிரகாசித்தன.

"உங்களைப் போன்ற புத்திசாலிகள் இப்படிப் பேசுவது எனக்கு ஆச்சரியமாகத்தானிருக்கிறது. சோதிடம் உண்மையாக இருந்தாலும் உதவாது. பொய்யாக இருந்தால் பயத்துக்கும் ஏமாற்றத்துக்கும் காரணமாகும். அது எப்படி உண்மையாக இருக்கக் கூடும் என்று எனக்கு விளங்கவில்லை. ஈசுவரனுக்குக்கூட வருங்கால நிகழ்ச்சிகள் நிச்சயமாகத் தெரியுமா என்பது எனக்குச் சந்தேகம். அவன் பூரண ஞானியாக இருக்கலாம். பூரண சக்தியும் படைத்திருக்கலாம். வரப்போகும் நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்கனவே நிச்சயமாகி விட்டால், அவனுடைய சிருஷ்டி சக்தி என்னவாகிறது? ஒரு முறை சிருஷ்டித்து விட்டுத் தூங்கி விடுகிறானா! பகவானுடைய சங்கல்பம் உடனே காரியத்தில் பலித்து விடுகிறது என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்களே! என் எண்ணத்தில், கடவுளின் பழைய சங்கல்பங்கள் இயற்கை விதிகளாகத் தோன்றுகின்றன. புதிய சங்கல்பங்கள் வளர்ச்சியடையும் ஜீவராசிகளாகப் பரிணமிக்கின்றன. மனிதனுடைய வருங்காலம் ஓரளவு அவனுடைய ஆசாபாசங்களாலும், சிந்தனைகளாலும், கருமங்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஓயாமல் மாறிக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் வருங்காலத்தை அறிய முயலுவது மூடத்தனம் என்று எனக்குத் தோன்றுகிறது. அது அறிவுக்கு எட்டாமல் இருப்பதே நமக்கு நன்மை. அதிர்ஷ்டம் என்றுகூடச் சொல்லுவேன்.



நான் சிறுமியாக இருந்த பொழுது, எனது வருங்கால வாழ்க்கையை அறிந்திருக்கக் கூடுமானால், அப்பொழுதே தற்கொலை செய்து கொண்டிருப்பேன். ஈசனுடைய மாயைதான் என்னைக் காத்து வருகிறது'' என்றாள்.

கோபாலய்யர் பெருமையுடன் என்னை நோக்கினார். நானும் வியப்புடன் அவளைப் பார்த்து, '' நீங்கள் கூறியதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். ஆனால், தங்கள் சரித்திரத்தை அறிய மிகுந்த ஆவல் உண்டாக்கி விட்டீர்கள். அதைச் சொன்னால் மிகவும் நன்றி யுள்ளவளாக இருப்பேன்'' என்றேன்.

பார்வதியின் முகத்தில் புன்னகை பூத்தது. ஆனால் கண்களில் மட்டும் பனி படர்ந்தது. புடவையால் துடைத்துக் கொண்டு தொடங்கினாள்:

என் கதையைக் கேட்டு எவருக்கும் புண்ணியமில்லை. ஆனாலும், சொல்லுகிறேன், கேளுங்கள்.

அன்னையின் கர்ப்பத்தில் நான் இருக்கும் பொழுதே, என் தந்தை இறந்து விட்டார். நான் பிறந்த தினமே தாயும் போய் விட்டாள். எனது சித்தப்பாவும், சித்தியும் என்னை எடுத்து வளர்த்தனர்.

நான் பிறந்த ஊர் கோவிலூர். திருச்சிக்குச் சமீபத்தில் காவேரிக்கரையில் இருக்கின்றது. மிகவும் அழகான கிராமம். அதில் எங்கள் குடும்பத்தார் தனவந்தர்கள். பத்து வேலி நிலம் இருந்தது. எனது தந்தையும், அவருடைய இளைய சகோதரரான சித்தப்பாவும் சேர்ந்து ஒரே வீட்டில் வசித்தனர். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. என்னையே தங்கள் மகளாகப் பாவித்து மிகவும் அன்புடன் வளர்த்தனர். எனது பெற்றோர்கள் உயிருடனிருந்தால் அதற்கு மேலாக என்னை நேசித்திருக்க முடியாது. இப்பொழுது சித்தப்பா, சித்தி என்று சொல்லுகிறேனே யொழிய, அவர்கள் ஜீவித்திருக்கும் வரையில் அப்பா, அம்மா என்றுதான் அவர்களைக் கூப்பிட்டு வந்தேன்.

எனக்குப் பத்து வயதிருக்கும். தினம்போல் அப்பா காலையில் ஆறு மணிக்கு எழுந்து காவேரிக்குப் போனார். வழக்கப்படி ஏழு மணிக்குத் திரும்பி வரவில்லை. வயலுக்குப் போயிருப்பார் என்று சும்மா இருந்து விட்டோம். ஒன்பது மணி ஆகியும் வராமற் போகவே, இரண்டு குடியானவர்களைக் கூப்பிட்டுப் பார்த்து வரச் சொன்னோம். அவர்கள் தேடி அலைந்து காணாமல் திரும்பினர். ஊர் முழுதும் செய்தி பரவியது. நாலைந்து கோஷ்டிகளாகச் சுற்றுப் பக்கங்களில் தேடினார்கள். மாலை நான்கு மணிக்கு இரண்டு மைலுக் கப்பால் காவேரிக் கரையில் அவர் சவம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதன் பிறகு அந்த ஊரில் இருக்கச் சித்திக்குப் பிடிக்க வில்லை. முக்கியமாக, சில பாட்டிகள் என்னைப் பார்த்து 'இந்தப் பெண் ஜாதகம்தான் கெடுதல்' என்று சொல்லுவது அவளுக்குச் சகிக்கவில்லை. நிலத்தைக் குடியானவர்களிடம் ஒப்புவித்து விட்டு, சென்னை வந்து மயிலாப்பூரில் ஒரு வீடு வாடகைக்குப் பிடித்துக் கொண்டு வசித்துவந்தோம். தனக்கு மகனில்லாததால், சித்தப்பா உயில் எழுதிவைத்துத் தன் ஆஸ்தியை, சித்தி உயிருள்ளளவும் அனுபவிப்பது, அதற்குப் பிறகு என்னைச் சேரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்.

ஆதலால் கஷ்டமில்லாமல் வசித்து வந்தோம். சித்தி என்னை நன்றாகப் படிக்க வைத்தாள். பள்ளிக்குப் போவதுமன்றி வீட்டில் வடமொழியும், திருவாசகமும் கற்று வைத்தாள். அவளும் என்னுடன் சேர்ந்து படிப்பாள். என்னை விட்டுப் பிரிய மனமில்லாமல், என் விவாகத்தை ஒத்திப் போட்டு வந்தாள். ஆனாலும் அக் காலத்தில் பதினெட்டு வயதுப் பெண்ணைக் கன்னியாக வைத்திருப்பது சாத்தியமில்லை. பந்துக்களின் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தாள். அதுவும் எப்படி? விவாகத்துக்குப் பிறகும் என் புருஷன் வந்து எங்கள் வீட்டிலிருப்பதற்காக வக்கீல் வேலைக்குத் தயாராகிய ஓர் ஏழைப் பையனைத் தேடி மணம் முடித்து வைத்தாள்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தவிர என் கணவர் சுந்தரம் மற்ற எவ்விதத்திலும் சிறந்தவர். மிகவும் கூரிய புத்தியுள்ளவர். அதைவிடக் குணத்தில் மிகுந்தவர். என் கைப் பிடித்த நாள் முதல், இருவரும் உயிரும் உடலும் போல் அன்னியோன்யமாக இருந்தோம். எனது சித்தியைத் தாயைப்போலப் பாவித்தார் அவர். ஆனால், என் அதிர்ஷ்டம் என்னை 'விடாது அல்லவா? விவாகமாகி ஒரு வருஷத்துக்குள் திடீரென்று சித்தி இறந்து விட்டாள்.



மாலையில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மயக்க மாக வருகிறது என்றான். மூன்று மணி நேரத்தில் மறு உலகம் சேர்ந்து விட்டான். ஹிருதயம் நின்று விட்டது என்று டாக்டர்கள் கூறினார்கள். அதனால் எனக்கு என்ன ஆறுதல்? பிறந்தபோது என்னைப் பலர் அனாதை என்ற போதிலும், சித்தி செத்தபோதுதான் உண்மை யில் அனாதையானேன். அவனுடைய அன்பு என்னை என்றும் சூழ்ந்திருக்கிறது.

இளம் தம்பதிகளின் சோகம் நீடித்திருக்காதல்லவா? என் புருஷன் சாமர்த்தியமாக என் நிலக்களை நல்ல விலைக்கு விற்று ஒரு பங்களா வாங்கி மீதியைச் சர்க்கார் பத்திரங்களில் போட்டு வைத்தார். அவருடைய தொழி லும் விருத்தியடைந்தது. இரண்டு வருஷங்களுக்குள் முதல் குழந்தை மணி பிறந்தான். அவனுக்குப் பின் நான்கு வருஷங்களுக்கு வேறு குழந்தைகள் இல்லை. மூவரும் மிகவும் சுகமாக இருந்தோம்.

மறுபடியும் எனது பாக்கிய சக்கரம் கீழ் நோக்கிச் சுழல ஆரம்பித்தது. அடுத்தடுத்து இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்தனர். விவாகமாகிப் பத்து வருஷங்க ளுக்குப் பின் ஒரு நாள் திடீரென்று என் கணவர் புதிய காரை ஓட்டிக் கொண்டு போகையில் ஒரு லாரியோடு மோதி இறந்து போனார். குழந்தை மணியுடன் நான் புதிய வாழ்க்கை ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

என் வாழ்க்கையைச் சோக சாகரமென்று கூறினால் மிகையாகாது. ஆனால் அது உண்மையல்ல. அன்பினர் மறையும்பொழுது துயரத்தில் மூழ்குவது சகஜம். ஆனால் அதோடு வறுமை, நோய் முதலிய பீடைகள் சேர்ந்தால் ஒழிய, சில மாதங்களில் இறந்தவர்கள் இவ்வுலகிலிருந்து மட்டுமன்றி, நமது மனத்தை விட்டும் மறைந்து விடுகிறார்கள். அந்நாட்களில் எனது கஷ்டம் கணவன் போனதல்ல. ஒரே பிள்ளையை வைத்துப் பரிபாலிப்பதே. மணி தினம் காலையில் பள்ளி சென்று மாலையில் வீட்டுக்குத் திரும்பும் வரையில் என்னை யறியாத நடுக்கம். அப்பொழுது நான் ஈசனிடம் சரண் அடைவதைத் தவிர மனத் தின் அமைதிக்கு வேறு வழியில்லை என்று கண்டேன். பக்திப் பாடல்களையும் சுலோகங் களையும் ஓயாமல் பாடம் பண்ணிப் பாடிக் கொண்டு வந்தேன். மணிக்கும் மனப்பாடம் செய்து வைத்தேன். காலையிலும் மாலையிலும் இருவரும் சேர்ந்து பாடுவது வழக்கம். இதனால் எனக்கு நிம்மதி ஏற்பட்டது மட்டுமல்ல; அக்கம் பக்கத்தி லுள்ளவர்களுக் கெல் லாம் எங்கள் மீது அன்பு உண்டாகி எல்லோரும் நண்பர்க ளானார்கள். அவர்களில் கோபாலய்யரும் ஒருவர்.

மணி வைத்தியக் கலாசாலையில் சேர்ந்து, திறமையுடன் படித்து உயர் வகுப்பில் தேறினான். அவனுக்கு உடனே சென்னை பெரிய வைத்தியக் கலாசாலையில் வேலை கிடைத்தது. எனக்குச் சித்தி செய்தது போலவே, அழகான படித்த ஒரு ஏழைப் பெண் ணைப் பார்த்து அவனுக்கு மணம் செய்வித்தேன். மீண்டும் எனது குடும்பம் ஜொலித்தது. வேணுவைப் பெற்றதுதான் அவன் தாய் செய்த வேலை. நான்தான் வளர்த்தேன். ஏழு வருஷத்துக்குப்பின் மீனு பிறந்தாள். அவள் அதிர்ஷ்டமும் என்னைப் போல்தான். அவளுக்கு ஒரு வயது முடியு முன் சென்னையில் வீட்டுக்கு வீடு பலி வாங்கிய பாழும் ஜுரம் என் மகனையும், மருமகளையும் கொண்டுபோய் விட்டது. சென்னையை வெறுக்க லானேன். கோபாலய்யரின் உதவியால் இங்கே பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக வசித்து வருகிறேன்.


வேணுவும் மீனுவும் தாய் தகப்பனில்லாக் குழந்தை களானார்கள். அவர்களைப் பரிபாலித்துப் பெரியவர்க ளாக்கும் முழுப் பொறுப்பும் என் தலையிலேயே சுமந்தது. வாழ்க்கையிலே எத்தனையோ பேர் இன்ப மாகவே நாட்களை ஓட்டி விட்டு இன்பமாகவே கண் மூடுகிறார்கள். பலர் கஷ்டங்களுக்குமேல் கஷ்டப் பட்டு, அதிலேயே உழன்று சாகிறார்கள். நான் வந்த வழி கஷ்டப்படுவதாகவே தானிருந்தது. கடிகார முள் சுற்றிச் சுற்றி வருவதுபோல் கஷ்டங்கள் என்னையே மையப் புள்ளியாகக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தன. வாழ்க்கையே எனக்கு வெறுத்து விட்டது.

ஆனால் வேணுவும் மீனுவும் என் உள்ளத்திலே ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்து அவியவிடாமல் காப்பாற்றி வருகிறார்கள். பச்சிளம் பாலகர்களான எங்களை இந்த உலகத்திலே தனியாகத் தவிக்க விட்டுச் செல்வது நியாயமா என்று கேட்பது போல் இருக்கிறது அவர்களது மலர் வதனம். வாழைக் கன்றை எத்த னையோ தடவைகள் தலை அரிந்து விடுகிறார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அது துளிர்க்கிறதே ஒழியப் பட்டுப் போக முற்படுகிறதா? அத்தனை இன்னல்களையும் தாண்டி அது மீண்டும் மீண்டும் குருத்து விட்டுப் பலன் அளிக்கிறதல்லவா? — இப்படியெல்லாம் எண்ணி மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டேன்.

நான் என்ன சொல்லியும் கேட்காமல் எனது பேரன் வேணுகோபாலன் விமானப் படையில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறான். அஞ்ஞானம் கேட்காமல் நான் பலமுறை சொல்லி யும் அவன் கேட்கவில்லை. எல்லாம் என்னை ஆளும் ஈசன் செயல் என்றிருந்த போதிலும் அவனைப் பற் றிய கவலை மட்டும் அவ் வப்பொழுது என் மன அமைதியைக் குலைக்கிறது.

இவ்வாறு தன் கதையை முடித்தாள் பார்வதி.

''நீங்கள் இந்தப் பிற விக் கடலை நீந்தி வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்று நான் சொல்ல வேண்டும்'' என்றேன். கோபாலய்யர் இந்தச் சர்ச்சையை வளர்க்க விரும்பாமல், ''பார்வதி, சங்கராச்சாரி யாரின் பஜகோவிந்தத்தில் இரண்டு மூன்று சுலோ கங்கள் பாடுங்கள்'' என்றார். அவள் நாற் காலியிலிருந்து இறங்கித்



ஸ்தாபகர்



தொ. ஆறுமுக முதலியார்

சுதேசி

(ஸ்தாபிதம்: 1906)

டெலிபோன்: 84469
தபால் பெட்டி: 2433
தந்தி: "புலவு"

இத் தீபாவளித் திருநாளில் நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் எங்களது மனமார்ந்த

நல் வாழ்த்துக்கள்!

இதர எந்த தயாரிப்புகட்கும் தலைசிறந்ததும், நீடித்து உழைக்கக் கூடியதும், அழகும் கவர்ச்சியும் பொருந்தியனவாகும். விலையுயர்ந்த நவீன யந்திர சாதனங்களால், மேனாட்டு முறைப்படி தயாரிக்கப்பெற்ற எங்கள் "கணபதி" புதிய தமிழ் எழுத்துக்களும், "ஆறுமுகம்" புதிய தெலுங்கு எழுத்துக்களும் "சுதேசி" புதிய மலையாள எழுத்துக்களும் புகழ் சிறந்த பல்லோராலும் பாராட்டப் பெற்றுள்ளன. மேலும், அச்சாபீஸ் நிர்வாகிகள் அனைவருடைய நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றவையாகும்.

பூரா விவரங்களுக்கு எழுதவும்

தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்

நிர்வாக பாகஸ்தர்



வக்கீல்:- என் ஐயா, என்னிடம் கேஸைக் கொடுத்து விட்டு, ஜெயிக்குமோ ஜெயிக்காதோ என்று சந்தேகம் பட்டுக்கொண்டு, கூடவே ஒரு ஜோஸ்யரையும் அழைத்து வந்து விட்டீரே!

தரையில் உட்கார்ந்து இனிய குரலில் பாடினுள். நாங்களிருவரும் பரவசமடைந்தோம். அச்சுலோகங்களின் சாராம்சம் பின்வருமாறு:

தாமரை இலைமீது மின்னி மறையும் பனித்துளிபோல,
போமது இன்னுயிரும் ஓர் கணம் ஒளிவிசி;
காமமும் நோயும் ஓயாமல் துன்புறுத்த
நாமென்றும் துயரில் மூழ்கித் தவிப்பதுணர்வாம்.

மீண்டும் பிறப்பு, மீண்டும் இறப்பு,
மீண்டும் அன்னை வயிற்றில் அடக்கம்,
யாண்டும் பிறவிக் கடலில் சுழல்வேனை முகில்வண்ணு
ஆண்டு அருள்புரிவாய்.

நீ யார், நான் யார், எங்கிருந்து வந்தோம்,
தாயாரும் தந்தையும் உண்மையில் உளரோ,
மாயக் கனவுகள் அனைத்தும் என்றுணர்ந்து
நேயப் பற்றுகள் விடுத்துத் துறந்திடுவோம்.

மூன்றுவது சுலோகத்தை அவன் முடிக்கும் போது வாசலில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. மூவரும் எழுந்து நின்றோம். விளையாடிக் கொண்டிருந்த மீனு ஓடி வந்து தூதனிடமிருந்து ஒரு கவரை வாங்கிப் பாட்டியிடம் கொடுத்தாள். அதைப் பிரித்துப் பார்த்து விட்டு அவள் கோபாலய்யரிடம் கொடுத்தாள். அவர் படித்த பின் என்னிடம் நீட்டினுர்.

'பயிற்சி விமானம் தீப்பற்றி வேணுகோபாலன் இறந்தான். அவன் உடல் விமானம் மூலம் நாளைக் காலை வீட்டில் சேர்ப்பிக்கப்படும். அந்திமக் கிரியைகளுக்கு விமானப்படையார் உதவி புரிவார்கள். மிகவும் வருத்தம்' என்று கண்டிருந்தது.

ஆண்டவனே! இன்னும் உன் சோதனை தீரவில்லையா? இந்தக் குடும்பத்துடன் எத்தனையோ திருவிளையாடல்களை நிகழ்த்திய பின்புமா உன் மனம் கனியவில்லை? 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழியை உண்மையாக்கிக் காட்டத் தொடங்கி விட்டாயே! பார்வதி இந்தத் துயரைத் தாங்கிக்கொள்ள வேண்டுமே!

என் மனம் என்னை யறியாமலே ஆண்டவனிடம், அருவமாக எங்கும் நிறைந்திருக்கும் ஆண்டவனிடம் முறையிட்டது. ஆனுல் பார்வதி ஒன்றும் பேசவில்லை. கண்களை மூடிக் கொண்டாள். ஆனுல் கண்களிலிருந்து நீர் பெருகி மீனுவின் மீது விழுந்தது. அவள் திடுக்கிட்டுப் பாட்டியைப் பார்த்து, ''என்ன பாட்டி, ஏன் அழுகிறுய்?'' என்று கேட்டாள்.

''விமானம் நெருப்புப் பற்றி நம் வேணு இறந்து போய் விட்டான், மீனு!'' என்று மிகவும் மெதுவான குரலில் பார்வதி கூறினுள்.

''ஐயோ, நான் என்ன செய்வேன்?'' என்று கூறிய மீனு அலறி அழ ஆரம்பித்தாள்.

''அழாதே, கண்ணே! நான் இருக்கிறேன். எனக்குப் பரமேசுவரன் சாகாவரம் கொடுத்திருக்கிறுர்!'' என்றுள் பார்வதி.

இதைக் கேட்டதும் மீனுவின் முகத்தில் அழுகைக்கு நடுவில் சிறிது சிரிப்பும் தோன்றிற்று. கோபாலய்யரை நோக்கி, 'இது உண்மையா, மாமா? பாட்டிக்கு வரம் கொடுத்திருக்கிறுரா?'' என்று கேட்டாள். ஆனுல் தான் ஏதோ அசட்டுத் தனமாகக் கேட்டு விட்டதாக அவளுக்கே தோன்றிற்று. மீண்டும் வேணுவைப் பற்றிப் புலம்பிக் கொண்டு தரையில் படுத்துத் தூங்கிவிட்டாள்.


பார்வதி நாற்காலியின் மீது உட்கார்ந்தாள். நாங்கள் இருவரும் பதினேந்து நிமிஷம் அப்படியே நின்று கொண்டிருந்தோம். அத்தகைய சந்தர்ப்பங்களில் என்ன சொல்ல முடியும்? முடிவில் கோபாலய்யர், ''மீனுவுக்காக நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும், அம்மா! உங்களைப் போன்ற தெய்வ பக்தர்களுக்கு வேறு சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. நாங்கள் போய் நாளைக் காலை வருகிறேம்'' என்றுர்.

பார்வதி பேசாமல் கையெடுத்துக் கும்பிட்டாள். இருவரும் வெளியே வந்ததும் கதவைத் தாளிட்டாள்.

மோட்டாரில் ஏறும் பொழுது, ''கோபாலய்யர்! வீட்டுக்குள் விம்மி அழுவது போல் கேட்கிறதே!'' என்றேன்.

''எனக்கு ஒன்றும் கேட்கவில்லை. உமது கற்பனையாக இருக்க வேண்டும். பொறுமைக்குப் பூதேவி என்று வால்மீகி அடிக்கடி சொல்லுகிறுர் அல்லவா? பார்வதி அந்த பூதேவியின் அவதாரம் என்று நினைக்கிறேன்'' என்றுர் கோபாலய்யர்.

''ஆமாம். ஸ்ரீதேவி, சரஸ்வதி, அம்பிகை ஆகிய மூவர் கடாக்ஷமும் இருக்கிறது. ஆனுல், பாவம், மூதேவியின் பகையையும் எந்த ஜென்மத்திலோ சம்பாதித்திருக்கிறுள்'' என்றேன்.


NOT THE Que
WE ARE
YET TO LEARN
FROM ANTS
BUT THE Quality
WE ARE
MAINTAINING
FOR DECADES
CLOTH:
Grey Dhoties
&
Gada
REGD. TRADE MARK
YARN:
Best Quality of
2' to 60'
Carded yarn
SRI RANGAVILAS GINNING, SPINNING
AND WEAVING MILLS LTD.,
PEELAMEDU POST
COIMBATORE
MANAGING PARTNER: G.N. VENKATAPATHY
PHONE: 176 817
MANAGING AGENTS
P. S. G. & SONS.
GRAMS: "RANGAVILAS"

தலை தீபாவளி மாப்பிள்ளை நடிக-



நட்சத்திரமாய் இருந்தால்...!



அசுவமேத யாகம்

டி.என்.ராமச்சந்திரன்

> புது தில்லியில், பாரத நாட்டுப் புதை பொருள் இலாகாவிலே துணை டைரக்டராகப் பணியாற்றி வருகிறார் திரு டி. என். இராமச்சந்திரன். வேதங்களை முறைப்படி சிறு வயதிலேயே படித்தவர். இதனால் அவருக்குப் பல விஷயங்கள் சுலபமாகவும் மிகத் தெளிவாகவும் புரிகின்றன!
>
> திரு இராமச்சந்திரன் இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய தேசங்களிலும், தாய்லாந்து முதலிய கீழ்நாடுகளிலும் ஆராய்ச்சியை முன்னிட்டு விரிவாகச் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். அவர், அசுவமேத யாகத்தைப் பற்றி மிக விரிவான ஆராய்ச்சி நிகழ்த்தி வெளியிட்டுள்ள கருத்துக்கள் உலகை வியப்புக் கடலில் ஆழ்த்தி விருக்கின்றன. இங்கு அவருடைய ஆராய்ச்சியில் ஒரு சிறு பகுதியை வெளியிடுகிறோம்.

பாரத நாட்டுச் சரித்திரத்தைப் பார்த்தால், சரித்திர காலத்துக்கு முற்பட்ட வேதகாலமோ, அதற்கு முற்பட்ட காலமோ - அப்பொழுதிலிருந்தே சமீப காலம் வரை பேரரசர்கள் அசுவமேத யாகம் செய்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்!

அரசர்கள், தங்களது நிகரற்ற வீரத்தையும், தங்கள் ஆதிக்கத்தையும் உலகுக்கு அறிவிக்கத் தொடர்ந்து அசுவமேத யாகம் செய்து வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல: தேசமக்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்களைத் தாங்களே பரிசுத்தப்படுத்திக்கொள்ள அரசர்கள் அசுவமேதயாகம் நடத்தி வந்திருக்கிறார்கள். அசுவமேதயாகம் முடிந்த பிறகு யாக சாலையை யொட்டி யிருக்கும் தீர்த்தத்தில் நீராடுவது புனிதமாகக் கருதப்பட்டது. இத்தகைய பழக்கம் பழம் கிரேக்க மக்களிடமும் இருந்தது என்று அறிகிறோம். அரசர்கள் உள்பட மக்கள் அனைவரும் புனிதமுற அவ்வப்போது அதாவது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய வேள்வி நடத்தி வந்திருக்கிறார்கள்.

இது மட்டுமல்ல; மகாபாரதத்தில் தர்ம புத்திரர் அசுவமேதயாகம் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். எப்போது? குரு க்ஷேத்திர யுத்தம் எல்லாம் முடிந்த பிறகு. "குரு க்ஷேத்திர யுத்தத்தில்தான் எல்லா அரசர்களையும் வென்று தர்ம புத்திரர் ஏகசக்ராதிபதியாகிவிட்டாரே, அவருடைய தன்னிகரற்ற தன்மைதான் நிலைநிறுத்தப்பட்டு விட்டதே!" என்று கேட்கலாம். உண்மை; ஆனால் யுதிஷ்டிரர் அதற்காக அசுவமேதயாகம் செய்யவில்லை.

"குருக்ஷேத்திரப் போரிலே எனக்கு மிக நெருங்கிய உறவினர்களைக் கொல்லும்படி நேர்ந்ததே. அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ள என்ன வழி?" என்று கிருஷ்ண பரமாத்மாவைக் கேட்டார். அதற்குக் கிருஷ்ண பரமாத்மா, மூன்று அசுவமேத யாகங்கள் செய்தால் அந்தப் பாபம் தொலையும் என்று கூறினார்.


இதன்படி தர்மபுத்திரர் அசுவமேத யாகம் புரிந்ததாகப் பழம்பெரும் காப்பியமான மகா பாரதத்தில் பார்க்கிறோம்.

ராமாயணத்தில் தசரத சக்கரவர்த்தி அசுவமேத யாகம் புரிந்ததாகப் பார்க்கிறோம். தசரத சக்கரவர்த்தி, தமக்குப் பிள்ளைப் பேறு உண்டாகவில்லையே அதற்கு என்ன உபாயம் என்று கேட்டார். அதற்கு வசிஷ்ட முனிவர், அசுவமேதயாகம் செய்ய வேண்டும் என்று கூறியதாக அறிகிறோம்.

உத்தரராம சரித்திரம் ராமனே அசுவமேத யாகம் செய்ததாகக் கூறுகிறது. ராமன் எதற்குச் செய்தான்? மனைவி சீதையை மீண்டும் காட்டுக்கு அனுப்பி விட்டு, பெரும் விரக தாபத்தில் ஆழ்ந்திருந்த சக்கரவர்த்தி ராமன், அந்தத் தாபத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகவே அசுவமேத யாகம் செய்தான் என்று உத்தரராம சரித்திரம் விவரிக்கிறது.

இப்படி அசுவமேத யாகம் பலப்பல நோக்கங்களோடு சென்ற பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

ஆக, மன்னர்கள் தாங்கள் மற்ற மன்னர்களைவிட அதிவீர பராக்கிரமசாலிகள், ஸார்வ பௌமர்கள் என்ற கீர்த்தியை நிலை நாட்டிக் கொள்வதற்காகவும், தங்கள் பாபத்துக்குப் பிராயச்சித்தமாகவும் ஒரு





பலனை உத்தேசித்தும், சோர்ந்த உள்ளத்துக்கு உற்சாகம் ஏற்படுத்திக் கொள்ளவும், தேசத்தைப் புனிதப்படுத்துவதற்காகவும் அவ்வப்போது நாட்டில் அசுவமேத யாகங்கள் செய்து வந்திருக்கிறார்கள்.

வேள்விகள் இந்தியாவில் மட்டுமல்ல, ஈரான் நாட்டிலும் நடைபெற்றுவந்திருக்கின்றன. வேதங்களில் கூறப்படும் அக்னிஸ்தோமம் என்னும் வேள்வியும் இரானிய மொழியில் கூறப்படும் ஹோமாவும் ஒன்றே. ஈரான்நாட்டுப் பழம் பெரும் நூல்களில், அஹுரா, பார்ஹிஸ், மந்த்ரா, யக்ஞம் முதலிய வடமொழிச் சொற்கள் அப்படியே இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஆரியர்கள் எங்கிருந்தோ இந்நாட்டுக்கு வந்தார்கள் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. ஈரான் நாட்டிலிருந்து இந்தியா வரைக்கும் ஓர் இனத்தார் வாழ்ந்து வந்தனர். அவர்கள்தான் ஆரியர்கள் என்று சொல்ல வேண்டும். ஆப்கானிஸ்தானத்தில் இன்னும் வேதகால வார்த்தைகள் வழங்குகின்றன. ஆப்கானிஸ்தானத்தில் ஓடும் பல நதிகளின் பெயர்களை ரிக்வேதத்தில் காண்கிறோம். ஆப்கானிஸ்தானத்தில் இன்று இருக்கும் காபூல் நகரம் ரிக்வேதத்தில் "கூபா" என்று வழங்கப்பட்டுள்ளது!

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பாரதநாட்டிலிருந்து மேற்கே ஈரான் நாடுவரைக்கும் ஒரே பண்பாடு நிலவி வந்தது என்பது நன்கு தெரிகிறது!

அசுவமேதயாகம் அந்நாட்களில் மனிதனை உயர்த்துவதற்காகவும் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்று மத்ஸ்ய புராணம் வாயிலாக அறிகிறோம்.

அந்தக் காலத்தில் மனிதர்களுக்குள் பிரமாதமான ஏற்றத் தாழ்வுகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இன்னின்ன காரியங்கள் செய்பவர்கள் இன்னின்ன வர்ணத்தார்கள் என்று பிரித்து வைத்திருந்தார்கள். மேல் வர்ணத்தார் கீழ் வர்ணத்தார் என்றால் வெறும் பிரிவுதானே [ஒழிய] ஏற்றத் தாழ்வுகள் இல்லை.

மேல் வர்ணத்தார்கள் தங்கள் காரியங்களைச் சரியாக நிறைவேற்றவில்லையானால் அவர்களை அந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதமாட்டார்கள். கீழ் வர்ணத்தார்கள் என்று இருப்பவர்கள் கீழேயே இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள் மேல் வர்ணத்தார்களாகவும் ஆகலாம். அரசர்களாகக்கூட உயரலாம்.

கீழ்வர்ணத்தார்கள் அரசர்களானார்கள் என்றால் அவர்கள் அரசருக்கு உரிய தகுதியை அடைய வேண்டும். அவர்கள் க்ஷத்திரியர்கள் ஆகவேண்டும். அப்படி அவர்கள் க்ஷத்திரியர்கள் ஆக என்ன செய்யவேண்டும்? அதற்கும் அந்தக் காலத்தில் வழி வகுத்து வைத்திருக்கிறார்கள். ஒரு அசுவமேத யாகம் செய்தால் க்ஷத்திரியர்களாகலாம் என்றும், இரண்டு அசுவமேத யாகம் செய்தால் "ஸார்வ பௌமன்" என்ற கீர்த்தியையும் பெறலாம் என்றும் மத்ஸ்ய புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவ்விதமே அந்தக் காலத்தில் அரசர்கள் செய்து வந்ததாக அறிகிறோம்.


பாகவத புராணம், ஆந்திர அரச வம்சத்தை ஸ்தாபித்தவன் ஒரு விருஷால வம்சத்தினன் என்று கூறுகிறது. ஒரு ஆந்திர மன்னன் தான் பெரும் கீர்த்தியுடைய இருமுறை அசுவமேதயாகம் செய்தான் என்று நானாகாட் குகைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.


கீழ் வர்ணத்தாரைச் சேர்ந்தவர்கள் மேல் வர்ணத்தை அடைய மட்டும் அசுவமேதயாகம் செய்து வந்தார்கள் என்றில்லை!

அந்தணன், அரசனானால், அவன் அந்தத் தகுதியைப் பெற அசுவமேத யாகம் செய்துள்ளான் என்றும் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

கடைசி மௌரிய அரசனைக் கொன்று பட்டத்துக்கு வந்தவன் புஷ்யமித்திரன் என்ற அந்தணன். ஆனால் இவன் பட்டத்துக்கு வந்ததும் அதற்குத் தான் தகுதி

ஜகத் கிராம் என்ற ஊரில் கருட உருவத்தில் அமைந்






யாகசாலையிருந்த இடத்தில் கிடைத்த செங்கற்களில் பிராஹ்மி லிபியில் செதுக்கப்பட்ட சுலோகம்.

உள்ளவன் என்பதை நிரூபிப்பதற்காக என்ன செய்தான்? அசுவமேதயாகந்தான் செய்தான். புஷ்யமித்திரன் இரண்டு தடவைகள் அசுவமேதயாகம் செய்தான் என்று அயோத்தியிலுள்ள சரித்திரச் சான்றுகள் மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

இப்படியெல்லாம், அசுவமேத யாகத்தைப் பற்றி நமது கவனம் செல்வதற்குக் காரணம் சமீபத்தில் டெஹ்ராடூனிலிருந்து முப்பது மைல் தூரத்திலுள்ள "ஜகத்ரொம்" என்னும் ஊரில் கால்ஸி என்ற இடத்தில் வேத முறைப்படி அமைக்கப்பட்டுள்ள அசுவமேத யாகசாலை ஒன்று புதைபொருள் இலாக்காவினருக்குக் கிடைத்திருப்பதுதான். அங்கு வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிற இலட்சணங்களுடன் கூடிய கருட உருவத்தில் யாகசாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் அசுவமேதயாகம் நடைபெற்ற இடம்.



யாகசாலையின் அமைப்பிலே வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியே செங்கல்களின் பரிமாணமும், உருவமும் இருக்கின்றன என்பது இன்னும் வியப்பளிக்கும் விஷயமாகும். யாகசாலை ஐந்து அடுக்குகள் கொண்டவையாக இருக்க வேண்டும். அதன்படியே ஜகத் கிராம் யாகசாலை அமைந்திருக்கிறது.

அந்த யாகசாலையில் பிராஹ்மி லிபியில் செதுக்கப்பட்ட பல செங்கற்கள் கிடைத்துள்ளன. அவற்றை ஒன்றாகத் தொகுத்துப் பார்த்தால்,

> ஸித்தம் ஓம் யுகேச்வரஸ்யாச்வ
> மேதே யுகசைலமஹீபதே!
>
> இஷ்ட கா வார்ஷகண்யஸ்ய
> ந்ருபதே சீலவர்மண:

என்ற சுலோகமாக அமைகிறது. இதிலிருந்து சீலவர்மன் என்னும் அரசன் தனது இருபத்தைந்தாவது ஆட்சிக் காலத்தில் அசுவமேதயாகம் செய்ததாகத் தெரிய வருகிறது. இவர் விருஷகண கோத்திரமுள்ள யுகசைல அரசன். இவனுக்கு யுகேச்வரன் என்ற மற்றொரு பெயரும் இருந்ததாகத் தெரிகிறது.

அவ்வப்போது அசுவமேத யாகங்களைச் செய்பவன் யுகேச்வரன் என்று அழைக்கப்படுவான் என்று பிருஹத் சம்ஹிதை சொல்லுகிறது. அதனால் சீலவர்மனும் அடிக்கடி அசுவமேத யாகம் செய்து வந்தான் என்று ஊகிக்கிறோம். அதைத் தவிர, "யுகசைலம்" என்ற சிறப்புப் பெயரும் வழங்கி வருகிறது! அந்தப் பெயர் தான் பிற்காலத்தில் 'கால்ஸி' என்று திரிந்து வழங்கியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

கால்ஸியில் இன்றும் அசோக சக்கரவர்த்தியினுடைய பிரசித்திபெற்ற கல்வெட்டு இருக்கிறது. அசோக சக்கரவர்த்தியின் இந்தக் கல்வெட்டில் மிருகங்களை வதை செய்யும் யாகங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்தே இந்த இடத்தில் தொடர்ந்து பல அசுவமேத யாகங்கள் நடந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

இந்த இடம் மலைப் பிரதேசமான பகுதியில் இருக்கிறது. இந்த மலைப் பிரதேசத்துக்கு இன்று பின்ஹார் என்று பெயர் வழங்குகிறது. இந்தப் பெயர் எப்படி வந்திருக்கும் என்று ஆராயும்போது வேதகாலத்தில் வழங்கப்பட்ட மன்ஹார் என்ற சொல்லின் 'மருவு' ஆகத்தான் இருக்க வேண்டும் என்று நம்ப இடம் அளிக்கிறது. இந்த மன்ஹார் என்ற இடம் மிகவும் முக்கியமான இடம். இந்த இடத்தில்தான் துஷ்யந்தனின்



போட்டோ: புஷ்பத்துறை சுப்பிரமணியம்

புதல்வனான பரதன் அசுவமேத யாகம் செய்திருப்பதாக அறிகிறோம்.

இன்னும் பல இடங்களில் அசுவமேத யாகங்கள் நடைபெற்றதற்கு வேண்டிய சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

ஜகத்கிராம் பிரதேசத்தில் பல அசுவமேத யாகங்கள் நடைபெற்றிருக்கின்றன ஜகத்கிராம் என்ற இடத்திலுள்ள இந்த யாக சாலை கி. பி. சகாப்தத்தின் இரண்டாவது நூற்றாண்டைச் சேர்ந்தது.

வேத காலங்களிலிருந்து சமீபகாலம் வரையில் பலப்பல மன்னர்கள் மிகச் சிறந்த முறையில் அசுவமேத யாகங்கள் செய்திருப்பதற்கு பல சான்றுகள் காண்கிறோம்.

சமீபத்தில் நாகர்ஜுன கொண்டாவில் பூமியைத் தோண்டியதில் மூன்றாவது நூற்றாண்டில் அமைக்கப்பட்ட அசுவமேத யாக சாலை ஒன்று கிடைத்துள்ளது.

இதில் விசேஷம் என்னவென்றால், அரசனின் மனைவியர் புத்த மதத்தைத் தழுவியவர்களாக இருந்தபோதிலும் அசுவமேத யாகம் செய்துள்ளான்.

அசுவமேத யாகம், முக்கியமாக ஹிந்து அரசர்களே செய்து வந்திருக்கிறார்கள் என்று எண்ணலாம். புத்த மதத்தைத் தழுவியவர்கள் யாகம் செய்யும் வழக்கத்தைக் கண்டிப்பவர்கள். ஆனால் அரசர்கள் புத்த மதத்தைத் தழுவிய மனைவிகளைப் பெற்றிருந்தாலும், தங்கள் புகழை நிலைநாட்டிக் கொள்ள அசுவமேத யாகம் செய்துள்ளனர். 'நாகார்ஜுன கொண்டா'வில் இப்படிப்பட்ட ஒரு அசுவமேதயாகம் நடைபெற்றிருக்கிறது.


சங்க காலத்தில் கரிகாலன் அசுவமேத யாகம் செய்துள்ளான் என்று புறநானூறு கூறுகிறது. இன்னும் எத்தனையோ தமிழ்ப் பேரரசர்கள் வேத முறைப்படி யாகங்கள் செய்து வந்துள்ளனர். பெரும்பாணாற்றுப் படை, தக்கயாகப் பரணி முதலிய நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன! பல செப்புப் பட்டயங்களும் சாட்சி சொல்கின்றன!

ஏன், சமீப காலத்திலே, பதினேழாம் நூற்றாண்டிலே ஜெய்ப்பூர் மன்னர் ஜெய்சிங் அசுவமேதம் செய்திருக்கிறார்.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த மகஞ்சதரோ, ஹரப்பா முதலிய இடங்களிலும் அசுவமேதயாகம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் காலங்களில் அசுவமேதயாகங்கள் நடைபெற்றுள்ளன என்பதற்கான போதிய சான்றுகளும் இப்பொழுது கிடைத்துள்ளன!

இதிலிருந்து பாரத நாட்டில் நீண்ட நெடும் நாட்களாக யாகங்களும் யக்ஞங்களும் வேத முறைப்படி நடத்து வந்துள்ளன என்று சந்தேகமறத் தெரிகிறது.

புதைபொருள் இலாகாவுக்கு ஒவ்வொரு நாளும் பாரத நாட்டுப் பண்பாட்டை விளக்கும் பல அரிய சான்றுகள் கிடைத்து வருகின்றன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது, பாரத நாட்டுச் சரித்திரத்தை இனிப் புது முறையில் பார்க்க வேண்டும், படிக்க வேண்டும் என்று சொல்லவேண்டியிருக்கிறது.




எமது
தீபாவளி
நல்
வாழ்த்துக்கள்
PSG


பாஞ்சாலி சபதம்
'— கடல்
அரு பொருவன் கொடுத்த
தோர் தெய்விகச் சங்கினில்
வஞ்சகன் கண்ணன் புனிதமுறுங்
கங்கை நீர் கொண்டு — திரு
மஞ்சன மாட்டு மப் போதி
லெவரு மகிழ்ந்ததும்
மூச்சை யடைத்ததடா!'
பாரதியார்


மாயச் சூதினுக்கே—ஐயன்
மன மிணங்கி விட்டான்;
தாய முருட்ட லானார்;—அங்கே
சகுனி யார்ப்பரித் தான்;
கடி கமழ் மின் னுருவை,—ஒரு
கமனியக் கன வினைக் காதலினை,
வடி வுறு பே ரழகை,—இன்ப
வளத்தினைச் சூதினிற் பணய மென் றே
கொடியவ ரவைக் களத்தில்—அறக்
கோமகன் வைத் திடல் குறித்து விட்டான்.
இது பொறுப்ப தில்லை,
—தம்பி!
எரி தழல் கொண்டு வா.
கதிரை வைத் திழந்தான்
—அண்ணன்
கையை எரித் திடுவோம்.





தேவி திரெளபதி சொல்வாள்—' ஓம்,
தேவி பரா சக்தி ஆணை புரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந் நீர்,—அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை யிரத்தம்,
மேவி யிரண் டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறு நெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான்;—இது
செய்யு முன்னே முடியே'
னென்றுரைத்தாள்.

கண் திறந்தது

பேராசிரியர்: அ. சீநிவாச ராகவன்

[பாழ்வினே என்னும் கிராமத்துக்கு வடமேற்கே உள்ள பனங்காட்டு நடுவில், பெத்தம்மன் கோவில் வாசல். மாலைப் பொழுதின் கடைசி இரத்தச் சொட்டு, கோவில் முன்புறம் அசையாமல் சாய்ந்து காவல் புரியும் மண் குதிரையின் உடைந்த முகத்திலே விழுகிறது. குதிரையின் கிழிந்த வாயிலிருந்து இரத்தம் ஒழுகுகிறதோ என்று தோன்றுகிறது. குதிரையைத் தொட்டுக் கொண்டு பூசாரி மாடசாமி நிற்கிறான். நாற்பது வயதிருக்கும். கட்டையான, சிறிது பருத்த உடல்; கருங்காலி மரத்தில் செதுக்கியது போன்றது. ஏழு முழ மஞ்சள் வேட்டி ஒன்றை, கண்டும் காணுததுமாய் முழங்காலுக்கு மேல் ஏறத் தார் பாய்ச்சிக் கட்டி, முன்னுல் கொசுவித் தொங்கவிட்டிருக்கிறான். தோளில் வெள்ளைக் கோடுகள் குறுக்கும் நெடுக்குமாய்க் கட்டம் போட்ட சிவப்பு 'லேஞ்சு'; கழுத்தில் கறுப்புக் கயிற்றில் கோர்த்த வெள்ளிப் பூண் கொண்ட ஒற்றை உருத்திராட்சம்; பரட்டைத் தலை செம்பட்டை படர்ந்தது. நெற்றியில் வெள்ளை வெளேரென்ற விபூதியொற்றின் நடுவில் சந்தனக் கீற்று. அதன் மத்தியில் குங்குமக் கோட்டை. மூக்கு முகட்டின் இருபுறமும் இருந்து, மீசைக் காட்டைத் தழுவும் பளிங்கு உருண்டை விழிகள்.

கீழே தரையில் உட்கார்ந்து, கையினுல் மண்ணைக் கோதிக் கொண்டே, தலையைச் சாய்த்து, பூசாரி மாடசாமியை விழி ஓரத்தால் கோணலாகப் பார்த்துப் பேசுகிறான் கேசவலு. அவன் வயதை நிதானிக்க முடியவில்லை. முப்பது இருக்கலாம். இருபதென்று எண்ண வைக்கும் அவ்வளவு ஒல்லியான உடல்; சிறு பையனைப் போலக் கையைப் படபட என்று ஆட்டிக் கொண்டு பேசுகிறான். கள்ளம் கபடு இல்லாமல் பேசுகிறான் என்ற எண்ணத்தை இது உண்டாக்குகிறது. ஆனால் கருக்கம் நிறைந்த வற்றல் முகமும், நீண்டு தடிமனும் மூக்கும், சாம்பலை பற்ற கோடுபோன்ற உதடும், கோணல் வாயும், இடுங்கிய ஆட்டுக் கண்களும் அவன் ஒரு மனிதன் என்று எச்சரிக்கை செய்கின்றன. முதிர்ந்த நரி. அறுபது வயதிருக்கலாம் என்று தோன்றுகிறது]

கேசவலு (கிளைத்துக் கொண்டு): என்னவோ அண்ணே, நான் சொல்றதைச் சொல்லிவிட்டேன். பொறவு, ஒங்கபாடு.



பூசாரி: ஆமாம், பெத்தம்மன் சாட்சி யாச் சொல்லுவியா?

கேசவலு (கோவில் பக்கம் தலையை விருப்பமில்லாமல் திருப்பி): என் பேச்சிலே ஒங்களுக்கு நம்பிக்கை இல்லியா, அண்ணே? இந்த ஊரிலேயே பொறந்து, இந்த ஊரிலேயே வளர்ந்து.......

பூசாரி: அது சரிதான்கிறேன். இந்த ஊரிலேயேதான் களவாண்டு அடிபட்டு...

கேசவலு: அண்ணே, அண்ணே! நீங்க கூடவா அதை நம்புறிய? எங்கே யிருந்தோ வந்த இந்த டாக்டர்ப் பிள்ளை பேச்சைக் கேட்டு, ஊர்க்காரங்க கட்டி விட்ட கதையை நீங்க கூட நம்பினு? இதோ குந்தி இருக்கிற பெத்தம்மனுக்குத் தெரியும், நடந்தது. என் கண்ணுலே, நான் ஒருத்தர் வழிக்கும் போகல்லே.

பூசாரி: பெத்தம்மாவுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே, தம்பி. அவ அடிமை இந்தப் பூசாரி மாடசாமிக்குத் தெரியாததும் ஒண்ணுமில்லே. ஆமாம், அதை மட்டும் தெனக்லே வச்சுக்க.

கேசவலு (கோணற் பார்வையோடு நகைத்து): சரிதான், அண்ணே! சரிதான்! ஒங்களுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே அப்போ தெரிஞ்சே நீங்க சம்மதிச்சிருந்தா, எனக்கென் பாடு? நான் போறேன்?

[எழுந்திருக்கிறான்]

பூசாரி (கேசவலுவைத் தோளைப் பிடித்து உலுக்கி): என்ன சொன்னே, களவாணிப் பயலே! உன்னை இங்கேயே வெட்டி, பெத்தம்மனுக்குப் பலி போட்டுடுவேன்.

கேசவலு (பயத்தைக் காட்டிக் கொள்ளாமல்): செய்யுங்க, அண்ணே செய்யுங்க. ஆனால் ஊர் சிரிக்குது. அதை அடக்க முடியுமா? என்னை வெட்டிப் போட்டா உண்மை மறைஞ்சிடுமா? பாஞ்சாலங் குறிச்சி நாயக்கருகப் பொறந்த இந்தக் கேசவலு சாகப் பயப்படுவானு? சும்மா வெட்டிப் போடுங்க..... ஹீ..... ஹீ......பொறகு டாக்டர் ஐயாவும், ஒங்க தங்கச்சி அஞ்சலை ஆச்சியும், கும்மாளி போடுறதைப் பார்த்துகிட்டு சந்தோஷமாய் இருங்க... ஹீ...ஹீ...ஹீ.. ஹீ....

பூசாரி (ஆத்திரத்துடன்): உன்னேயும் வெட்டிப் போட்டு அவங்க இரண்டு பேரையும் குத்திக் கடலிலே எறியாட்டி என் பேரை மாத்தி வைச்சடு......

கேசவலு: என்னேச் சும்மா வெட்டிப் போடுங்க, அண்ணே! ஆனல் நீங்க கையிலே காப்போடே மாமனர் வீட்டுக்குப் போயிடுவிக. அதுவும் நல்லது தான் அவுகளுக்கு..ஹி..ஹி..ஹி..

பூசாரி (உறுமும் குரலில்): ஏய், குள்ளநரி! என்ன சொல்லுறே? ஆமாம், நாவை அடக்கிப் பேசு.

கேசவலு: ஆறிலேயுஞ் சாவு, நூறிலேயுஞ் சாவு. நல்லது ஆகாது. அண்ணே, இந்த ஒலகத்திலே நல்லது ஆகாது. உண்மையைச் சொல்லப்படாது.

பூசாரி: அதுதானே கேக்குறேன்.

கேசவலு: என்னே ஏன் கேக்கிறிய? அவரைக் கேளுங்க. எல்லாத்தையும் பார்த்துக்கிட்டு ஊமைக்கல்லாக் கிடக்கும் உங்க பெத்தம்மாவைக் கேளுங்க. ராவோடராவா, அவங்களைத் தன்வண்டியிலே ஏத்திக்கிட்டுச் சுத்துறாரே அந்தச் சூரப்புலி கருப்பையாவைக் கேளுங்க. பொறவு, என்னே வெட்டிப்போட வாங்க.

பூசாரி: நீயும் கூடத்தானே சுத்திக் கிட்டுருந்தே? டாக்டருன்னு ராவோ பகலோ வெளியிலே போய்த்தானே தீரணும்? யாரோ சாகக் கிடக்கிறாங்கன்னு போகாமல் முடியுமா!

கேசவலு: இவரு உலகத்திலே இல்லாமெ வந்து குதிச்சிட்டாரு. டாக்டரா, இல்லே? இதற்கு முன்னே இருந்தாரே அவரைக் குளம் ஐடா, அவரு இப்படியா சுத்தனரு? ஏதோ வந்தா மருந்து கொடுப்பாரு. சாகிறதும் இருக்கிறதும் டாக்டரு கையிலேயா இருக்குது?

பூசாரி: இப்போ ஒருத்தரும் அப்படி நினைக்கிறதில்லே. ஒலகம் முன்னேறிப் போச்சு, தம்பி. முன்னேறிப் போச்சு. முன்னெல்லாம் ஊரே திரண்டு வரும். இப்போ கோயில் பக்கம் ஒருத்தருமே வருகிறதில்லே. முன்னே ஊரிலே காய்ச்சல்னு இங்கே உண்டியல் நிறைஞ்சிடும். இந்த டாக்டரு வந்த பொறவு அதெல்லாம் மாறிப் போச்சு.

கேசவலு: இப்போ தெரியுதா நான் சொல்றது? ஒங்களை ஓட்டாண்டியாக்கப் பாக்கிறாரு, இந்த டாக்டரு.

பூசாரி: அதுக்கு அவரு என்ன செய்வாரு? சர்க்காருலே இங்கே அவரைப் போட்டிருக்காக...

கேசவலு: எதுக்கு? பூசாரி ஐயா தங்கச்சி அஞ்சலை அம்மாவுக்கு வேலே போட்டுக் கொடுத்துப் போறெ போறெ இடத்துக்கெல்லாம் அவங்களே......

பூசாரி: ஏய், அவ பேச்சை எடுக்காதே. தெரியுதா?

கேசவலு: இல்லே, அண்ணே, இல்லே. என் பேரிலே களவாணிப் பட்டம் சுமத்தி என்னே விலக்கிட்டாக. அது ஏன், நெனச்சுப் பாத்தி களா? ஏதுக்குன்னு குழந்தைக்குக் கூடத் தெரியும்: நான் இருந்தால் இடைஞ்சல் தானே? அவுக இரண்டு பேரும் தனியாப் போக முடியுமா?

பூசாரி: தம்பி, கேசவலு! இந்த டாக்டரு வந்த பிறகு என் பொழைப்பே போயிடுச்சு உண்மைதான். ஒத்துக்கிடறேன். அது போனல் போகட்டும்னு, இப்போ...இப்போ...உண்மையைச் சொல்லிப் போடுறேன். தம்பி, எனக்கு ரத்தம் கொதிக்குது. இந்தப் பாதகத்தியைப் படிக்க வைச்சது தப்பாப் போச்சு. கன்னிமாடத்து அம்மாமார் வந்து அவள் மனசைக் கலைச்சுப் போட்டாக. வீட்டுலே பிள்ளே மாதிரி வளர்ந்ததா? நானும் சரின்னு போனபடி விட்டேன். இப்போ வினையா வந்து முடிஞ்சிருச்சு.

கேசவலு: ஹி...ஹி...ஹி... வயசுப் பொண்ணு. அந்த டாக்டர் பெஞ்சாதியைப் பறி கொடுத்தவரு. என்ன செய்வாரு? தெரியாமலா அந்த அம்மாவைப் பாம்பு கொத்திரிச்சு?

பூசாரி: அடே, அவுங்களே ஒண்ணும் சொல்லாதே. அந்த அம்மா மவராசி; வெள்ளிக்கிழமை தவறாமே கோயிலுக்கு வருவாங்க. அவுகளைக் கொத்தின பாம்பு, என் தங்கச்சி அஞ்சலை



யைக் கொத்தி இருக்கப்படாது? 'சனி தொலைஞ்சதின்னு தலையை முழுகிட்டு இருந்திருப்பேன்.

கேசவலு: இப்போதான் என்னவாம்? மாசம் அறுபது ரூபா வருதில்லே? ஒங்க பொழைப்பு போச்சு, அவ பொழைப்பு வந்திச்சு, விபூதி போச்சு மருந்து வந்துது. டம், டம், ஹி...ஹி...ஹி...ஹி.

பூசாரி: அறுபது ரூபாய். யாருக்கு வேணும் அந்தப் பிச்சைக் காசு?

கேசவலு: அப்படிச் சொல்லுங்க, மறச் சிங்கக் குட்டி! அது பேச்சு. ஆனல் ஒண்ணு யோசனே செய்தியளா? எவுக யாவது, இந்த ஒடங்காட்டு ஊரிலே, மருந்துவச்சிக்கு அறுபது ரூபாய் மாசா மாசம் சொலையாக் கொடுப்பாங்களா? கம்பவுண்டராயிருந்த எனக்கே மாசம் முப்பது ரூபாய்தானே? இந்தப் பெண்ணுக்கு அறுபது ரூபாய், கேட்டியளா? அவள் இப்போ கம்பவுண்டரு, மருத்துவச்சி, சின்ன டாக்டரம்மா, பொறவு டாக்டரம்மாதான்., ஹி...ஹி. .ஹி...

பூசாரி (கோபத்துடன்): உன் நாற்ற வாயை மூட மாட்டே? ஒன் குடலைப் பிடுங்கி எறிஞ்சுட்டு...

கேசவலு: யாரோ வாராக. ஒங்க வூட்டுக்காரி அம்மா பாக்கியத்தாச்சி வருது....பேசி அனுப்பிடுங்க. பொறவு, யார் குடலைப் பிடுங்கி எறியறதுன்னு முடிவு கட்டுங்க....

[கோவிலுக்குள் சென்று மறைகிறான். பூசாரி மனைவி பாக்கியம் வருகிறாள். முப்பது வயதிருக்கும். என்றாலும் பதினேழு பதினெட்டு வயதுதானே என்று தோன்றுகிறது. அவ்வளவு கட்டமைந்த மேனி, கறுப்பு, ஆனல் கடைந்தெடுத்த உடல், கூந்தல் புயலே எப்படியோ கொண்டையாக அடக்கி இருக்கிறாள். முகத்திலே பரபரப்பு, திகைப்பு]

பூசாரி: அது யாரு பாக்கியமா? இப்ப எங்கே வந்தே நீ?

பாக்கியம்: ஐயோ! நான் என்ன செய்வேன்? எங்கே வந்தேன்னு கேக்கிறிய? ஏன் கேக்கமாட்டிய? மதியத்திலேருந்து ஒங்களைத் தேடிக்கிட்டு அலையிறேன். எனக்கு ஒண்ணுமே புரியல்லே. புள்ளேக்கு—தம்ப முருகனுக்கு ...

[அழுகிறாள்]

பூசாரி: ஏ பிள்ளே, அழாதே. புள்ளேக்கு இப்போ என்ன வந்திருச்சு?

பாக்கியம் (அழுது கொண்டே): அம்மா, பெத்தாயி.... நான் என்ன செய்வேன்? புள்ளே கண்ணே முழிக்கலியே? மூணு நாளா இப்படி நெருப்பாக் காயுதே.... என் புள்ளே பொழைக்குமா? ஐயோ, என்னுடைய வயித்தை என்னவோ செய்யுதே!

பூசாரி: ஏ, பாக்கியம், நான் சொல்லுதேன்...அழாதே. இந்தா, இந்த விபூதியைக்கொண்டு போய்ப் போடு, சரியாய்ப் போயிடும். இப்போ அவனுக்கு எப்படி இருக்குது?

பாக்கியம்: விபூதியை நீங்களே வச்சுக்கிடுங்க. வீடு முழுதுந்தான் விபூதிக் காடாக் கிடக்குதே. என் பிள்ளைக்கு என்ன ஆகுமோ? இந்தப் புது டாக்டரு கெட்டிக்காரராமே, அவரை அழைச்சு வந்து காட்டப்படாதுங்களா?

பூசாரி: அவரைப் போய் அழைச்சிட்டு வந்தே, ஒன்னேயும் ஒன் பிள்ளையையும் வெட்டிப் போட்டுடுவேன், ஆமாம்.

பாக்கியம் (மெல்ல அவனைப் பார்த்து): ஒங்களுக்கு என்ன கிறுக்குப் பிடிச்சுப் போயிருச்சா?

பூசாரி: கிறுக்கு ஒனக்கும் அந்தச் சிறுக்கி அஞ்சலைக்கும் தான் பிடிச்சிருக்கு.

பாக்கியம்: ஆமாம், அஞ்சலை கூட மூணு நாளா சொல்லிக்கிட்டு இருக்கு. டாக்டர் பிள்ளையைக் கூட்டியாரேன்னு. உங்களைக் கேளாமல் செய்யப்படாதின்னு சும்மா இருக்கேன். நீங்க என்னடான்னு காலையிலே வந்திக; மூணு நாளா ஊரிலே இல்லியே, வூடு என்ன ஆச்சுன்னு நினைச்சுப் பார்க்கலே, புள்ளே முகத்தைத் திரும்பிக் கூடப் பாராமே கோயிலண்டை வந்து குந்த வச்சிட்டு இருக்கிய....சொல்லுங்க, நான் போயி டாக்டரைக் கூட்டியாரேன். இல்லாட்டி நீங்க போங்க.

பூசாரி: ஊர்க்காரனுவதான் அந்த டாக்டர்ப் பயமருந்திலே மயங்கிட்டானுவ. பெத்தாம்மாவை மறந்தாங்க. இது நல்லதுக்கில்லே, நல்லதுக்கில்லே. இந்த ஊர் அழிஞ்சு போகாட்டி என்னு கேளு. நீயுங் கூடப் பெத்தம்மனே மறந்துட்டியா?

பாக்கியம்: நானு? அவதானே நமக்கு இத்தனே வருசத்துக்கும் பொறவு ஒரு

புள்ளையைக் குடுத்தா. அவளே மறப் பேளு? அவ சொல்லித்தான் டாக்ட ரைக் கூட்டியாரணும்னு சொல்றேன்....

பூசாரி: அவ சொன்னாளா?

பாக்கியம்: ஆமாம், நேத்து ராவிலே பெத்தம்மா வந்திச்சு.

பூசாரி: அட போக்கிரேன், கனவு கண்டுட்டாளாம், கனவு! ஏ, பாக்கியம், பேசாமே வூட்டுக்குப் போ. நான் வாரேன். போன்னு போ.

பாக்கியம்: போறவு மருந்து வேண் டாம்னு சொல்லுறியே?

பூசாரி: டாக்டரு, மருந்துன்னு பேச் செடுத்தே, ஒங்க எல்லாரையும் குத்திப் போட்டு, நானும் இந்தப் பெத்தம்மா முன்னுக்குக் குத்திக்கிட்டுச் சாவேன்.

பாக்கியம்: என்னவோ வெறி புடிச் சாப்பிலே பேசறியளே! ஐயோ, குழந் தைக்கு என்ன வருமோ, தெரியல்லியே. நீங்க பார்த்தாத் தெரியும், இப்படிப் பேச மாட்டிய. ஒடம்பு நெருப்பாக் காயுது. கண்ணைச் சொருகிட்டு நார் போலக் கிடக்குது. மூச்சு வேறே முட்டுது. தம்பி, தம்பின்னு அனேச்சாப் பேச்சு மூச்சுக் காணோம்.

[கேசவலு வருகிறான்]

அது யாரு, கம்பவுண்டர் அய்யாவா? நீங்களாச்சும் சொல்லுங்க, ஐயா, ஒங்க அண்ணன்கிட்டே டாக்டரை அழைச் சாரச் சொல்லுங்க.

கேசவலு: ஹி...ஹி...ஹி...எதுக்கு? தண்ணி மருந்தைக் குடுத்து ரூபாயைத் தட்டிக்கிட்டுப் போகவா? சும்மா வூட் டுக்குப் போங்க, ஆச்சி!

பூசாரி: போ இக்கிறேலிக்லே, போ. நான் வாரேன், பத்து நிமிட்டிலே. ஆறல் டாக்டருட்டே போனே, பொறவு, என்ன நடக்குமோ, யார் கண்டது? பெத்தா யிக்கும் அவ குலத்துக்குத்தான் தெரியும்!

பாக்கியம்: நான் போறேன். புள்ளே எப்படி இருக்குதோ? பெத்தாயி'. .நீ தான் காப்பாத்தணும். நீங்க வாரியளா?

பூசாரி: போ, நான் வரேன்.

பாக்கியம்: எங்கே போவேன்? எனக்கு ஒன்னும் தோணலியே...நீங்க வந்தி டுங்க...சீக்கிரம்.

[போகிறாள்]

கேசவலு: ஏன் அண்ணே, டாக்டரே அினக்க வேணும்னு காட்டுங்களேன். அஞ்சலே கூடச் சொல்லிச்சாதே...

பூசாரி: அந்தக் குட்டியைக் கேிச்சப் போடணும். என் உசிரு போனாலும் அந்த டாக்டர்ப் பேயைக் கூட்டியார விடமாட்டேன்.

கேசவலு: அது சரி அண்ணே! ஒங் களே யாரு கேக்கப் போறாக?

பூசாரி: நீ என்னு சொல்லுறே?

கேசவலு: நீங்க என்னே நம்ப மாட் டேன்னு சொன்னீங்களே. இப்போ நீங் களே கண்ணாறப் பார்த்துக்கிடலாம்.

பூசாரி: என்ன பார்க்கலாங்கிறே?

கேசவலு: இன்னிக்கு ராவு டாக் டர்ப் பிள்ளே ஒங்க வூட்டுக்கு வராட்டி என் பேரு கேசவலு இல்லே.

பூசாரி: என் வூட்டுப் படியை அவன் மிதிச்சிடுவானு? பார்ப்போம். பாக்கியம் அழைச்சிட்டு வந்திடுவாளா? அவ்வளவு தெம்பு அவளுக்கு ஏது? செய்யட்டும். பொறவு என்ன நடக்குதுன்னு...

கேசவலு: வீண் பேச்சு எதுக்கு? அஞ்சலையே இப்படித்தான் நம்பி மோசம் போனியே! ஒங்க வூட்டுப் பக்கம் பனங் காட்டுலே இன்னிக்கு ராவு மறைஞ் ஒளிஞ்சிருந்து பாருங்க... விசயம் தெலு லிப் போவுது. டாக்டரு... அஞ்சலே யாச்சி, பாக்கியத்தாச்சி....

பூசாரி: ஏ மூடு, அவமாத்திரம் அந்த டாக்டரை அழைச்சாரட்டும்....

கேசவலு: ஏறுமாறு ஏதாச்சும் வெட் டிக்கிட்டுப் போடாதிய....

பூசாரி: பொறவு, வெட்டாமே? நல்லா ஞாபகப்படுத்தினே? அரிவாளே எடுத்துக்கிட்டே போறேன்.

கேசவலு: நான் சொல்றதைச் சொல்லிப்புட்டேன். ஒங்கபாடு. அரிவா ளைக் கொண்டு போறியளா? போங்க.

பூசாரி: ஆறு. நீ சொன்னது தப்பா இருந்துச்சு, அந்த அரிவாளு ஒனக்குத் தான்... ஆமாம்... நான் வர்றேன். பெத்தாயி.., பெத்தாயி. ..

[போகிறான்.]

கேசவலு: போ, போ! போய்த் தொலைஞ்சிடு! புத்தி கெட்ட எருமை மாடு! மஞ்சவெட்டி, ருத்திராச்சம், விபூதி...ஹி...ஹி...ஹி..,புத்தி கெட்ட பூசாரிப்பய...அந்த டாக்டர்ப்பயலுக்கும் அந்த அஞ்சலே மூதிக்கும் வழி சரியா வைச்சுட்டேன். என்னு கருவம் அந்தக் குட்டிக்கு? என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்னு சாதிச்சிருச்சே? களவாணிக் குரங்காம்! என்னைப் பார்த் தாக் குரங்காட்டமாவா இருக்குது? இருக்கும், இருக்கும். நாளைக்குக் காலே யிலே நீ ரத்தத்திலே புரண்டுட்டுக் கிடக் கிறபோது, இந்தக் குரங்கு ஊரைவுட்டே டாஞ்சி போயிடும்... ஆமாம்... ஆமாம், போலிறதுக் குன்னே பெத்தம்மனுக்கு ஒரு கும்பிடு போட்டிட்டு...ஹி .ஹி...அங்கே ஏதாச்சும் இருந்தா...ஹி...ஹி...ஹி... பெத்தாயி...பெத்தாயி....!

[கோவிலுக்குள் போகிறான் - இருள் விழுகிறது.]

காட்சி 2

[பாழியிலே டாக்டர் ஆஸ்பத்திரிய பின்னே வீட்டுக் கூடம். பனநாக்க



கட்டில் ஒன்றில் டாக்டர் மகன் கண்ணன் (ஆறு வயது) படுத்திருக்கிறான். அருகில் உள்ள குத்து விளக்கின் ஒளியில் அவன் முகம் மாத்திரம் தெரிகிறது. கூரிய அறிவும், கற்பனையும் பெருக்கும் ஒளி வீசுகின்ற குழந்தை முகம். கண்ணிலே காய்ச்சலின் மயக்கம். அவன் பாட்டி செல்லத்தாச்சி குத்து விளக்குக்கு எண்ணெய் ஊற்றி, கடவைத் தூண்டிவிட்டுக் குழந்தைக்கு அருகிலே வந்து உட்காருகிறாள். விபூதியை எடுத்துக் குழந்தைக்கு நெற்றியில் இடுகிறாள்.]

கண்ணன்: பாட்டி!

செல்ல: ஏண்டா, கண்ணு?

கண்ணன்: ஏன் பாட்டி, விளக்குலே எண்ணெய் ஊத்தினே?

செல்ல: எண்ணெய் இல்லாமே விளக்கு எரியாதில்லே, அதுக்குத்தான்.

கண்ணன்: எண்ணெய் இல்லாம விளக்கு எரியவே எரியாதா?

செல்ல: ஊ....ஹூம். எரியாது. நீ இப்படி ஏதாச்சம் கேட்டுக்கிட்டே இராதே. எங்கே, கண்ணல்ல, உறங்கு.

கண்ணன்: ஏன் பாட்டி, யாரு எனக்கு எண்ணெய் ஊத்தினா?

செல்ல: ஒருத்தரும் ஊத்தலே, கம்மா கண்ணை மூடிக்கிட்டுத் தூங்கு.

கண்ணன்: பின்னே ஏன் பாட்டி, ஒரேயடியாய் என் உடம்பு எரியுது?

செல்ல: எண்ணெயும் ஊத்தலே, ஒண்ணுமில்லே. கம்மாத் தூங்கு. தானாக்குச் சரியாய்ப் போயிடும். (தலைக்குள்) அனலாய்க் காயுது. அதான் அப்படிப் பேசுது. பழனி ஆண்டவா, ஒன் மேலே பாரத்தைப் போட்டிருக்கேன்.

[விபூதி எடுத்துக் குழந்தைக்கு இடுகிறாள்.]

கண்ணன்: ஏன் பாட்டி விளக்குத் தூங்கலே? என்னை மாத்திரம் தூங்கச் சொல்லுறியே? எரியற விளக்கு தூங்குமா பாட்டி?

செல்ல: இங்கே பாரு கண்ணு, இப்படி அலட்டிக்கிட்டு இருந்தால்....

கண்ணன்: விளக்கு அணைஞ்சிடுமா?

செல்ல (திகைப்புடன்): கண்ணு! கண்ணு, என்ன சொல்லுதே, என்ன சொல்லுதே? பெத்தம்மா, நீதான் காப்பாத்தணும். ஒனக்குப் பொங்கல் வைக்கிறேன், குளிர அபிசேகம் செய்யுறேன். அடி, ஆத்தா, பெரியாயி! இந்தப் பச்சைப் புள்ளையை வாட்டாதே. ஒனக்கு வாடா விளக்கு வாங்கி விடுறேன். எங்க குடும்ப விளக்கு....

[அழுகிறாள்]

கண்ணன்: ஏன் பாட்டி அழுதே? பெத்தம்மனுக்குக் காய்ச்சல் இல்லே. எனக்குத் தெரியும். அன்னிக்குக் கோயில்லே அவளைத் தொட்டுப் பார்த்தேன். சில்லுன்னு இருந்திச்சு.

செல்ல (பயத்துடன்): தொட்டுப் பாத்தியா? பெத்தம்மனைத் தொட்டுப் பாத்தியா? தொட்டா பாத்தே?

கண்ணன்: ஆமாம், பாட்டி. அன்னிக்குப் பெருங்குளத்துக்கு நீ அனைச்சிக்கிட்டுப் போகலே என்னே? அன்னிக்கு, தண்ணியிலே இறங்காதேன்னு சொல்லிட்டு, நீ மாத்திரம் குளிக்கப்போனியே, அப்போ கோயிலுக்குள்ளே போனேன். கையிலே பூ வைச்சிருந்தேன். அரளிப் பூ. அதைப் பெத்தம்மன் மேலே போட்டேன். அங்கே குலம் வைச்சிருக்குப் பாரு, அதைத் தூக்கிப் பார்த்தேன். தூக்க முடியல்லே, பாட்டி.

செல்ல: ஐயய்யோ! குடி மூழ்கிப் போச்சே! ஏண்டா, கண்ணு, இப்படிச் செய்யலாமா? சாமி குலத்தைத் தொடலாமா? அதான், அதான் இப்படிச் சோதனை செய்யிறா அவ.

கண்ணன்: இல்லே, பாட்டி, குலத்தை எடுத்துக்கிடுன்னு சொன்னாள் பெத்தம்மா. என்னாலேதான் தூக்கிட்டு வர முடியல்லே. அவளைத் தொட்டுக் கேட்டேன். பெத்தம்மாவுக்குக் காய்ச்சலே இல்லே, சில்லுன்னு இருந்தா.

செல்ல: ஐயய்யோ, நான் என்ன செய்வேன்? சின்னப் புள்ளை தெரியாமல் செஞ்சுபுட்டுது. நீ மனசிலே வையாதே, பெத்தம்மா, ஒனக்கு ஒரு படி தண்ணி மாக்கொட்டுறேன், ஒன்தேரு வரப்போ.

கண்ணன்: இல்லே, பாட்டி! பெத்தம்மன்தான் என்னைத் தொட்டுப் பாருன்னு சொல்லிச்சு.



செல்ல: கம்மா இரு, கண்ணு. இப்படி யெல்லாம் பேசினால், சாமி கண்ணைக் குத்திடும்.

கண்ணன்: பெத்தம்மா என் கண்ணைக் குத்தவே குத்தாது. பூசாரிதான் என் கண்ணைப் பிடுங்கிடுவேன்னு கத்தினாரு!

செல்ல: பாவிப் பய, அப்படியா சொன்னான்?

கண்ணன்: ஆமாம், பாட்டி! பெத்தம்மனோடே நான் பேசிக்கிட்டு இருந்தேனா, அப்போ உள்ளே வந்தாரு. கோயில் பக்கம் நான் வந்தால் என்னைக் கொன்னு போடுவாராம். கண்ணைப் பிடுங்கி வைச்சிடுவாராம். தன் பொன்னைப் பைக் கெடுத்த பாவி மகனும் நான்.

செல்ல: அவன் தலையிலே இடி விழ! அம்மாத்திரம் திமிரா அவனுக்கு? உன் அப்பா வரட்டும், சொல்லுறேன்.

கண்ணன்: பாட்டி!

செல்ல: ஏண்டா கண்ணு! அந்தப் பூசாரிப் பயலைத் தொலைச்சுத் தலையை முழுகவேணும், நீ பயப்படாதே. அவன் குளியம் வைச்சுத்தான் என் தங்கக் கிளி பாம்பு கடிச்சு இறந்து போச்சு.

கண்ணன்: அம்மாவைத்தானே!

செல்ல: ஆமாம், நீ தூங்கு.

கண்ணன்: பாட்டி, நான் சொன்னதை நீ அப்பாகிட்டே சொல்லாதே.

செல்ல: ஏண்டா?

கண்ணன்: பூசாரி ஐயா, அப்பா குடலைப் பிடுங்கிடுவாராம் அந்தச் சூலத்தாலே. அப்படிக் கத்தினாரு அவரு. அதுதான் அந்தச் சூலத்தை எடுத்தாந்துடப் பார்த்தேன். என்னாலே தூக்க முடியல்லே. என்ன செய்யலாம்னு பெத்தம்மனைக் கேட்டேன். அவ சொல்லுறதுக்குள்ளே பூசாரி வந்தாரு. அப்போ...

செல்ல: கம்மா இரு, கண்ணு! அதெல்லாம் கிடக்கட்டும். நீ தூங்கு.

கண்ணன்: அப்போ, அந்தப் பெத்தம்மன் சிரிப்பாய் நின்னுக்கிட்டா. அவ கண்ணைப் பார்க்க விளங்கல்லே. அம்மா செத்துப் போன போறவு அவ கண்ணு எப்படி இருந்திச்சு, அப்படி ஆயிடுச்சு பெத்தம்மன் கண். ஏன் பாட்டி, பூசாரி வந்ததும் பெத்தம்மன் செத்துப் போனாள்?

செல்ல: நல்லாத்தான் இருக்குது நீ பேசுற கதை! சின்னப் புள்ளையா லட்சணமா தூங்குவியா? உலகத்தை எல்லாம் ஆட்டி வைக்கிற பெத்தம்மா செத்துப் போவாளா? சொல்லாதே தம்பி, அப்படிச் சொல்லாதே!

[அழுகிறாள்]

கண்ணன்: அழாதே பாட்டி. நான் பேசலே. அப்பா எப்போ வருவாங்க?

செல்ல: அவனுக்கென்ன, வீட்டைப் பத்தி என்ன கவலே? ஊருக்கெல்லாம் உழைக்கிறான். வீட்டிலே பச்சைப் புள்ளை காய்ச்சலிலே துடிக்குது. அதுக்கு ஒண்ணும் மருந்தைக் காணோம். வீடு வீடாய் ஊசி போட்டுக்கிட்டு அலையறான்.

[கதவைத் தட்டும் சத்தம்]

கண்ணன்: அப்பா வந்துட்டாங்க, பாட்டி. அப்பாதானே?

செல்ல: யாருன்னு பார்க்கிறேன். நீ பேசாம படுத்துக்க. யாரது...?

குரல்: நான்தான் அஞ்சலை.

செல்ல: இதோ வந்துட்டேன்.

[கதவைத் திறக்கிறாள். அஞ்சலை உள்ளே வருகிறாள்.]

செல்ல: என்ன விசயம், அஞ்சலை? அவன் எங்கே, ஒங்க டாக்டர் எங்கே? எங்கே வந்தே இந்நேரத்திலே?

அஞ்சலை: டாக்டர் ஐயா மருந்து எடுத்துக்கிட்டு வரச்சொன்னாக. அதான் வந்தேன். தம்பி கண்ணனுக்கு எப்படி இருக்குது?


செல்ல: அனலாக் காயுது. என்னென்னமோ பேசிக்கிட்டே இருக்கான், கர வேகத்திலே.

அஞ்சலை: மருந்து கொடுத்தியளா?

செல்ல: கொடுத்திட்டுத்தான் இருக்கேன். ஒங்க அண்ணாச்சி, கோயில்லே வைச்சு, புள்ளையே கோபமாகப் பேசினாராம். புள்ளே பயந்திருக்குமோ என்னவோ? விபூதி போட்டுப் பார்க்கணும்.

அஞ்சலை: எங்க அண்ணாச்சி முன் கோபக்காரரு. அவ்வளவுதான். நீங்க அதை மனசிலே வையாதீங்க, அம்மா!

கண்ணன்: அக்கா, அஞ்சலை அக்கா, ஏன் ஒங்க அண்ணாச்சி கண் உருண்டையாய் இருக்குது? உன் கண் கறுப்பா, நல்லாப் பட்டுப் பூச்சி மாதிரி இருக்குது. அவரு கண்ணு மட்டும் ஏன் அப்படி?



தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

அஞ்சலை: தூங்கு தம்பி! நாளைக்குச் சொல்லுதேன். நாளைக்கு வரப்போ என்ன கொண்டாருவேன், தெரியுமா?

கண்ணன்: ஓ, தெரியுமே. பூ கொண்டாருவே, முறுக்கு கொண்டாருவே... (சிரித்துக் கொண்டு) மருந்து கொண்டாருவே. கசப்பு மருந்து. நான் குடிக்க மாட்டேன். குடிக்கவே மாட்டேன்.

அஞ்சலை: கண்ணைல்ல, தூங்கு தம்பி. அம்மா, மருந்தை எடுத்துப் போகட்டுமா?

செல்லம்: என்ன மருந்து அது, அஞ்சலை?

அஞ்சலை: பெறுளத் தேவரு திருநெல்வேலிக்குப் போயி, காலையிலே வாங்கியாந்தாராம். பேப்பரிலே கட்டி அலமாரிலே வைச்சிருக்காங்களாம் டாக்டர்.

செல்லம்: ஊசி மருந்தா?

[செல்லத்தாச்சிபோய் மருந்தை எடுத்து வருகிறாள்.]

அஞ்சலை: ஆமாம், அதுதான்.

செல்லம்: சும்மா இருடா. இந்த மருந்து தானே? இது கண்ணனுக்குப் போடணுமின்னில்லா வாங்கியாரச் சொன்னுன்? கரம் அதிகமானு போடுவாங்களாம்?

அஞ்சலை: நம்ப கண்ணனுக்கு வாங்கின மருந்துன்னு, அதை நான் எடுத்துக்கிட்டுப் போகல்லே. இங்கே இந்தக் காட்டுலே வேறே மருந்து ஏது? ஒரு சமயம் தம்பிக்கு கரம் அதிகமானு, வேணுமில்லே? நான் போய் மறுபடியும் கேட்டுட்டு வரேன்.

செல்லம்: சொன்னதைக் கேளு. நீ இந்த மருந்தை எடுத்திட்டுப் போ.

அஞ்சலை: குழந்தை கண்ணனுக்கு.

செல்லம்: எல்லாம் அவனுக்குத் தெரியும், நீ போ...,கண்ணனுக்கு ஒரு கெடுதியும் வராது. நீ போ. அம்மா, பெத்தம்மன் இருக்கா. அவ பார்த்துக்கிடுவா.

அஞ்சலை: நான் வரேன் அம்மா. போயி ஐயாவை உடனே வரச் சொல்லறேன்.

[மனமில்லாமல் மருந்தை வாங்கிக் கொண்டு போகிறாள்.]

செல்லம்: இப்படியும் ஒருத்தன் இருப்பானு? வீட்டிலே புள்ளெ காய்ச்சல்லே துடிக்குது. அதுக்கு வந்த மருந்தை எடுத்து யாருக்கோ போடப் போறுருமே.......அட, பழனியாண்டவா.... பழனியாண்டவா!

காட்சி 3

[பாழியின ஊர்க் கோடியில் பூசாரி மாடசாமி வீட்டு வாசல். இருள் பிரியத்தருணம். பக்கத்தில் இருக்கும் பனங்காட்டுக்குள்ளிருந்து பூசாரி மாடசாமி வருகிறான். அவன் முகம் பேய் அறைந்தது போல் பயங்கரமாய் இருக்கிறது. தன் வீட்டைப் பார்த்து விட்டுக் காப்பாகச் சிரிக்கிறான்.]

பூசாரி: பொழுது விடியுது. எல்லாருக்கும் பொழுது விடியரப்போ எனக்குப் பொழுது அடையப் போவுது. என்ன தெம்பு அந்தப் பய மவனுக்கு! உன்னேயிருந்து வரட்டும். அவனையும் அவளையும் ஒரே போடா போட்டுட்டு ஓட்டமாய் ஓடுவேன். எங்கே ஓடுவேன்? என் மகனே, என் பாக்கியத்தை - என் பாக்கியமா-ளே, சுத்த மூதி ஓடைந்தையாய் இல்லாட்டி இது நடந்திருக்குமா? சவத்தின் முகத்தலே முழிக்கப் படாது ....

எனக்கு ஒன்னும் புரியல்லே...அது யாரு, வூட்டுக்குள்ளேயிருந்து வரது? நாட்டாமைக்காரரில்லா வராரு.

[திரும்புகிறான். உள்ளே இருந்து நாட்டாண்மைக்காரர் வருகிறார்.]


நாட்டாண்மை: பொழுது விடிஞ்சிருச்சு, அப்பா, அவரு டாக்டருல்லே, தெய்வம்...அது யாரு, மாடசாமியா? ஏ, எங்கே போனே? வா. ராவெல்லாம் ஒன்னைத் தேடிக்கிட்டுல்லா திரிஞ்சோம்! வா, வா, ஒன்புள்ளே பிழைச்சுக் கிட்டுது. அப்பா. இனிமே கவலை இல்லே. டாக்டர் ஐயா உசிரைக் குடுத்திட்டாரு.

[மாடசாமி மெள்ள வருகிறான்.]

என்ன அசைஞ்சிட்டு வாரே? எங்கே போயிருந்தே ராவெல்லாம்? வா, அப்பா, மாடசாமி, ஏதோ இந்தவு வருஷம் கலிச்ச ஒனக்குப் பெத்தாயி கொடுத்த பொருள், அதை டாக்டர் பிள்ளை காப்பாத்திட்டாரு. இதோ வருவாரு. காலிலே விழுந்து கும்பிடு.

[டாக்டர், அஞ்சலை இருவரும் வருகிறார்கள்.]

பூசாரி (நகைத்து): கும்பிடுரேன். கும்பிடுரேன். பலி போட்டுக் கும்பிடுரேன். வந்திட்டயளா? வாங்க, ஒங்க இரண்டு பேரையும் வெட்டிப் போடறேன். நாட்டாண்மைக்கார ஐயா, நீங்க தள்ளிப் போங்க.



நாட்டாண்மை: அடேடே, குடி முழுகிப் போச்சே. ஏ பாவி, சும்மா இருலே.

[நாட்டாண்மைக்காரர் பாய்ந்து அவனைப் பிடிக்கத் திமிறிக் கொண்டு திணறித் திணறிப் பேசுகிறான் மாடசாமி. டாக்டரும் அஞ்சலையும் திகைத்து நிற்கிறார்கள்.]

பூசாரி: ஏ, அஞ்சலை, ஒனக்கு வெக்கமில்லே? அவன் சொன்னுன் நம்பல்லே. ஆனால் கண்ணுலே பார்த்தேன். பாதி ராவுலே தனியா டாக்டர் வூட்டுக்குப் போய் அவனைக் கட்டியாத்திலே? உனக்கு என்ன திமிரு? விடுங்க ஐயா, அவனைக் குத்திப் போடறேன்...

அஞ்சலை: அண்ணாச்சி, ஒங்களுக்கு என்ன பயித்தியம் பிடிச்சுட்டுதா?

நாட்டாண்மை: சீ, நீ ஒரு ஆம்பிள்ளே மாதிரி. அரிவாளை வைச்சிட்டுப் போய் பிள்ளையைப் பயமுறுத்திரியா? எறிலே.

பூசாரி: அவளை வெட்டின பொறகு தான் அதைக் கீழே போடுவேன்.

அஞ்சலை: அப்படியா சேதி? சரி, இந்தா என்னைக் கொன்னு போடுங்க. அதுக்குத்தானே என்னை வளர்த்திய?

டாக்டர் (நிதானமாக): அஞ்சலை, நீ அவர் முன்னுலே போய் ஒன்னும் பேசாதே; நாட்டாண்மை ஐயா, பூசாரி ஐயாவுக்கு ஏதோ மனசு சரியாய் இல்லே. என்ன என்று கேட்டுச் சமாதானம் சொல்லுங்க. நான் வீட்டுக்குப் போய்விட்டு வரேன். அஞ்சலை, கவலைப் படாதே. குழந்தை பிழைத்துக் கொண்டான்.

பூசாரி: எங்கே, ஐயா, நழுவப் பார்க்கிறே? செய்யறதையும் செய்து போட்டு, இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமான்னு வேசம் போடுறியா? இந்தப் பூசாரியை ஏமாத்த முடியாது. கேட்டதுக்குப் பதில் சொல்லு. இல்லாட்டி இந்த அரிவாளுக்குப் பதில் சொல்லு.

நாட்டாண்மை: ஏய், மாடசாமி. உனக்கு என்ன வந்திரிச்சு?

டாக்டர்: பூசாரி ஐயா! உங்களுக்கு என் மேலே என்ன கோவம்?

அஞ்சலை: அண்ணாச்சி, நீங்க என்ன செய்யணும்னு சொல்லுதிய? டாக்டரை வெட்டிப் போடவா அரிவாளைத் தீட்டுறிய? ஏன் செய்யமாட்டிய? ஒங்க பிள்ளையைக் காப்பாத்த ராவெல்லாம் கண் முழிச்சு உசிரைக் கொடுத்தாரு. அவரு இல்லாட்டி இந்த வீட்டிலே இடி விழுந்திருக்கும். டாக்டர் ஐயாவை மனிசன்னு நெனைச்சுக்கிட்டிய? அவரு தெய்வம். அவரோட மகன் வீட்டிலே உசிருக்கு மன்றாடிக்கிட்டுக் கிடக்கிறப்போ அதை விட்டுட்டு, இங்கே பாதி ராத்திரியிலே நம்ப வீட்டுக்கு வந்தாரு. அவர் மகனுக்கு வைச்சிருந்த ஊசி மருந்தை நம்ப முருகனுக்குப் போட்டுட்டாரு. ராவெல்லாம் தூங்காமல் குழந்தைக்கு ஒத்தடம் கொடுத்தாரு. நாங்க செய்யறோம், வீட்டுக்குப் போங்கன்னு சொல்லிப் பார்த்தோம். மாட்டேன்னுட்டாரு. அங்கே அவரு மகனுக்கு எப்படி இருக்குதோன்னு சொல்லிப் பார்த்தேன். பெத்தாயி பார்த்துக்கிடுவான்னு சொல்லிட்டாரு. இப்போ பெத்தாயி கோவில் பூசாரி வழியை மறைச்சுக்கிட்டு அரிவாளை ஓங்குகிறாரு. அண்ணாச்சி! நீங்க அழிஞ்சு போயிடுவிய. டாக்டரையா வெட்டப் பார்க்கிறியா? அதுக்கு முன்னே, என்னையும் ஒங்க வூட்டுக்காரியையும், குழந்தையையும் வெட்டிப் போடுங்க. பொறவு ஒங்க பெத்தாயியை வெட்டிக் கடலிலே தூக்கிப் போட்டுடுங்க.

நாட்டாண்மை: அஞ்சலை! சும்மா இரு. கொட்டின சொல்லை அள்ள முடியுமா? மாடசாமிக்கு விசயம் தெரியாது. ஏதோ கோபத்திலே.... என்னென்னு விசாரிப்போம். நீ சும்மா இரு.

அஞ்சலை: கோபமா? கொடுமையின்னு சொல்லுங்க, ஐயா, நன்றி கெட்ட கொடுமை. எச்சிலை நக்கிட்டு நாய்கூட வால் ஆட்டுது. மனிதன் ஒருத்தன் தன் உசிரை, தன் குழந்தை உசிரைப் பணயம் வைச்சு, நமக்கு உசிரைக் கொடுத்தா, அவனை வெட்ட வருகிற வங்களை என்ன சொல்லுறது? நாயின்னு சொன்னு நாய் வெக்கப்படும்!

பூசாரி (உறுமும் குரலில்): அஞ்சலை!

நாட்டாண்மை: பதறாதே. அம்மா அஞ்சலை, கொஞ்சம் பொறு. நான் அவனுக்குச் சொல்லுதேன்.

அஞ்சலை: நான் ஒரு நிமிஷம் இனி மேல் இங்கே இருக்க மாட்டேன். (தழ தழத்த குரலில்) ஐயா, டாக்டர் ஐயா, இந்த ஏழையைக் காப்பாத்துங்க. நம்ப வீட்டுக்கு வந்து, அங்கே அடிமையா இருக்கேன். எப்படித்தான் அங்கே ஒங்க கண்ணை விட்டுட்டு இங்கே வர ஒங்க ளுக்கு மனசு வந்ததோ? இருந்த ஒரே ஊசியையும் கொண்டாந்து இங்கே போட்டீயளே? சாமி, நீங்க தெய்வம்!

டாக்டர்: அஞ்சலை, யமனோடே போராடுறபோது நம்ம வீடு, பிறர் வீடு கிடையாது. அம்மா, நீயும் வைத்தியத் தொழிலிலே ஈடுபட்டவள். இது உனக் குத் தெரியாதா? நான் என்ன செய் தேன் அதிசயமாய்? ஒன்றுமில்லை. இந்த ஏழை மனிசனைத் தெய்வம்னு சொல் லாதே. அப்படி யாரையாவது தெய் வம்னு சொல்லணும்னு, இதோ வரு கிறான் கருப்பையா, நாளைக்கு உன் புருசனாகப் போகிறவன். அவனைத் தெய்வமாகக் கொண்டாடு.

[கருப்பையா ஓடி வருகிறான்.]

நாட்டாண்மை: என்ன கருப்பையா! ஏன் இப்படி ஓடியாரே?

கருப்பையா: மாமாவைப் பார்க்கணும் ஐயா, ஐயா...இது என்ன அரிவாளை வைச்சுட்டு நிற்கிறய? என்ன நடந்தது?

நாட்டாண்மை: ஒன்றுமில்லே கருப் பையா! மவனுக்கு உடம்பு சரியில்லாம இருந்திச்சா, அதிலே மாடசாமிக்கு ஏதோமனசு கலங்கியிருக்கு. எங்கே,மாட சாமி அந்த அரிவாளைக் கீழே போடு.

[மாடசாமி மனமில்லாமல் அரிவாளைக் கீழே போடுகிறான். கருப்பையா அதை எடுத்துக்கொள்ளுகிறான்.]

கருப்பையா: நானு ஒரு சேதி கொண்டு வந்தேன். பயங்கரமான சேதி. இங்கே வந்தால் அதைவிடப் பயங்கரமா யில்ல இங்கே நடப்பு இருக்குது' அஞ்சலை ஏன் மாமா அரிவாளைத் தூக்கிருரு?

டாக்டர் (பரபரப்புடன்): பயங்கர மான சேதியா? கருப்பையா, கருப் பையா, என்ன அப்பா இது?

கருப்பையா: நீங்க பதறாதீங்க, ஐயா வீட்டிலே ஒங்க குழந்தைக்குக் காய்ச்சல் விட்டிருச்சு. கவலைப்படாதீங்க. பெரி யம்மா ஒங்க கிட்ட சொல்லச் சொன் னுங்க. நான் அங்கேதான் இருந்தேன். மூணு நாளிகைக்கு முன்னே குழந்தைக்கு ஒரு தடவை குப்பென்னு வேர்த்து விட்டது. அவ்வளவுதான். காய்ச்சல் தணிஞ்சு போச்சு. குழந்தை இப்போ நல்லா உறங்கிட்டு இருக்கிறான்.

டாக்டர்: பெத்தம்மாள்தான் என் குழந்தையைக் காப்பாத்தினுள்!

மாடசாமி (கரகரத்த குரலில்): கருப் பையா! டாக்டர் வீட்டிலே யாருக்கு உடம்பு சரியாயில்லேன்னு சொன்னே?

கருப்பையா: ஒங்களுக்குத் தெரியாது? அவுக மகன் கண்ணனுக்குத்தான். நான் தான் திருநெல்வேலிக்குப் போய் ஊசி மருந்து வாங்கியாந்தேன். அதைக் கொடுக்காமலேயே குணமாயிடுச்சு.

அஞ்சலை: அதை எப்படிக் கொடுக் காது? மருந்தைத்தான் நம்ம வீட்டுப் புள்ளைக்குப் போட்டுவிட்டாரே டாக்டர்?

டாக்டர்: மருந்திலே மாத்திரம் என்ன அம்மா, இருக்குது? எந்த உயிருக்கு அந்த மருந்து அதிகமாகத் தேவைப்பட்டதோ, அதற்குக் கொடுத்தேன். அதுதான் என் கடமை. ஆனால் இரண்டு குழந்தைகளை யும் கடவுள்தான், பெத்தம்மன்தான் காப்பாற்றினுள். டாக்டர் கையிலே மருந்துதான் உண்டு. அதுகூட இன்று இல்லாமற் போச்சு. உயிர் பெத்தம்மன் கையிலே இருக்குது. அதைக் கொடுக்கிற தும், எடுக்கிறதும் அவள்தான்.

கருப்பையா: நல்லாச் சொன்னீங்க, ஐயா உயிரைக் கொடுக்கிறதும் எடுக்கிற தும் அவதான். இங்கே ஊரிலே உயிரைக் குடுத்தா, அங்கே ஓடக்காட்டிலே உயிரை எடுத்திட்டா! அவனுக்குத் துரோகம் நெனைச்சபடுபாவிப்பயல் உயிரை எடுத்தே போட்டா. கண்ணுலே பார்த்தேன்.

நாட்டாண்மை: என்ன கருப்பையா! என்ன நடந்திச்சு?

கருப்பையா: டாக்டர் ஐயா வீட்டிலே இருந்து குறுக்கே வெள்ளைப் பாறைப் பொட்டல் வழியா ஓடியாந்தேன். பாறைக்குப் பக்கத்திலே அரச மரம் இருக்குதில்லே. அங்கே நம்ப கம்பவுண் டர் கேசவனு கிடந்தான்.

டாக்டர்: கேசவனுவா?

நாட்டாண்மை: அவன் எங்கே அங்கே போனுன்?

கருப்பையா: யாரு கண்டது? அவன் பக்கத்திலே பெத்தம்மன் கோயில் உண்டி யல் செம்பு கிடந்தது. பெத்தம்மன் குளமும் ரத்தம் தோஞ்சு...

பூசாரி (நடுங்கும் குரலில்): பெத் தாயி அவனைக் குத்திப் போட்டிரிச்சா?

கருப்பையா: அவன் செத்துக் கிடந் தான். ஒடம்பெல்லாம் நீலம் பாஞ் சிச்சு. பக்கத்தாலே அவனைக் கொத் தின பாம்பும் கிடந்தது. அதைச் சூலத் தாலே குத்திக் கொன்னுருக்கான், தான் சாகிறதுக்குள்ளே.

டாக்டர்: பாவிப் பயல் இப்படியா இறந்து போனுன்? கடைசி வரையிலும் திருட்டை விடல்லியே? உண்டியலையும் சூலத்தையும் திருடி...

பூசாரி: திருடன்தான், ஐயா திருடன் தான். இப்போ தெரியுது. என்னை இங்கே அனுப்பிச்சிட்டு, அங்கே அகப் பட்டதைச் சுருட்டப் பார்த்திருக்கான். அதுக்குள்ளே....அட பாவி....திருடன் மாத்திரமா, ஐயா! இல்லே இல்லே, அபாண்டமா கோயில் முன்னே பொய் சொன்னுன். அதான்...அதான்...சாமீ! என்னை மன்னிச்சிடுங்க. அவன் சொன்ன தைக் கேட்டு ஒங்களையும் அஞ்சலையை யும் சந்தேகப்பட்டேன்.

நாட்டாண்மை: அது தான், அரிவாளைத் தூக்கிட்டு வந்தயாக்காட்டியும். நல்ல வேலை செஞ்சே, தம்பி!

பூசாரி: புத்தி கெட்டுப் போனேன், ஐயா, புத்தி கெட்டுப் போனேன். டாக்டர் ஐயா, இவனை மன்னிச்சிடுங்க. திருடன் உசிரைக் குடிச்ச பெத்தாயீ, இவனே, இந்த நன்றிகெட்ட பயலைத் தண்டிப்பா. விடமாட்டா, டாக்டர் ஐயா! இந்த ஒடம்பை ஒங்களுக்குச் செருப்பாகத் தைக்கப் போடச் சம்மதம், ஐயா, கேசவனு பேச்சை விஷம் நெஞ்சிலே ஏறி ஏதோ கண்டபடி நடந்துவிட் டேன். மனசிலே வையாதீங்க. அஞ்சலை, கருப்பையா, நீங்க ரெண்டு பேரும் என்னை மன்னிச்சு....

அஞ்சலை: அண்ணாச்சி! அண்ணாச்சி! அப்படிச் சொல்லாதீங்க. நம்ப குல தெய்வம் பெத்தாயிதான் ஒங்களை இந்தப் பாதகத்திலேயிருந்து காப்பாத்தினுள்.

பூசாரி: பாதகமா? ஆமாம், அஞ்சலை, படுபாதகம். அரிவாளாலேயே என்னைச் சதைச்சாலும் காணுது. அப்படி ஒரு பாதகமில்ல நெனைச்சுட்டேன். பேய்க் கனவு கண்டேன், முழிச்சுக்கிட்டேன். கண் திறந்திருச்சு. டாக்டர் ஐயா! வாங்க போவோம், நம்ப வீட்டுக்கு. போய்த் தம்பியைப் பார்த்தாத்தான் என் மனசு ஆறும். அன்னைக்குக் கோயிலிலே அதைக் கடுமையாகப் பேசிட்டேன். போவோம். வாங்க நான் வரலாமா?

டாக்டர்: போவோம். ஆனால் முதல்லே கோயிலுக்குப் போவோம். கண் திறந்திருச்சுன்னு சொன்னீங்க; பூசாரி ஐயா! மனசே திறந்திருச்சு. அங்கே பெத்தம்மன் இருக்கிறாள்.


கருப்பையா (தலையை ஆட்டிக் கொண்டு, கண்ணைச் சிமிட்டி மெல்லிய குரலில் அஞ்சலையிடம்): என்ன, அஞ்சலை, அப்படித்தான். எனக்குத் தெரியும். என் கண்ணும் திறந்திருச்சு.

அஞ்சலை: சும்மா, இருங்க, அத்தான்!

[சிரிக்கிறாள்] (திரை)




மங்களகரமான
தீபாவளி
வாழ்த்துக்கள்
தி பக்கிங்ஹாம் & கர்நாடிக் கோ. லிட்.,
தி பங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க்
மில்ஸ் கம்பெனி, லிமிடெட்
மானேஜிங் ஏஜெண்டுகள்:
பின்னி & கோ (மதராஸ்) லிட்., மதராஸ்.
BY 158


DODGE
DIESEL TRUCKS & BUSES
FARGO
Diwali Greetings
FROM
THE
PREMIER
AUTOMOBILES
LIMITED
BOMBAY


ஹாஸ்ய வெடிகள்
"பெருமாளுக்கு வைர கவசம் சாத்தவேணும்னு குருக்களிடம் பணம் கொடுத்தீரே!......அது என்ன ஆச்சு?..."
"குருக்கள், பணத்தை எடுத்துக் கொண்டு எனக்கே நாமத்தைச் சாத்திட்டுப் போயிட்டார்!"
"நீங்க நடத்தின இசை விழாவிலே என் கச்சேரிக்குப் போலீஸ்பந்தோபஸ்து இல்லேன்னு அவ்வளவு பெரிய கூட்டத்தை உங்களாலே சமாளித்திருக்க முடியாது, ஸார்!"
"எல்லாம் உங்களுடைய நன்மையை உத்தேசித்துத்தான் இந்தப் போலீஸ் பந்தோபஸ்து செய்தோம், ஸார்!"
"எந்த..ரோ..ம..ஹா..னு.. ப..பாவலு..ல.."
"நம்ம ராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, வேத மூர்த்தி மூன்று பேருமாகச் சேர்ந்து ஒரு கம்பெனி ஆரம்பிக்கப் போகிறார்களாம். கம்பெனிக்கு என்ன பெயர் வைக்கலாம்னு யோசனை கேட்டார்கள்..."
"பேசாமல் திருமூர்த்தி கம்பெனி என்று வைக்கச் சொல்லுமே!"
"என்னுடைய நடிப்பு மகா மட்டம்னு எழுதியிருக்கிறீர். இது நியாயமா?"
"நான் வேறு விதமாக எழுதியிருந்தால், 'இது நியாயமா'ன்னு ஆயிரக்கணக்கான பேர்கள் கேட்பார்களே, ஐயா!"
OCT 1
"என்ன ஸார்! ஒரே கவலையாய் இருக்கேள். இன்னைக்கு?..."
"இன்னைக்குச் சம்பளத் தேதியா இருக்கேன்னுதான் கவலையாய் இருக்கு!......"

“அவரைப் பற்றி நீங்கள் இப்படிப் பேச வேண்டாம், மன்னி! அப்படி அவரிடம் என்ன குற்றத்தைக் கண்டு இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? என்னவோ இரண்டு நாட்கள் கூட இருந்து விட்டேன் என்பதற்காக நீங்கள் அவரைப் பற்றி இப்படி யெல்லாம் சந்தேகப்பட வேண்டாம்'' என்று படபடப்புடன் பேசிய விஜயா, சரசரவென்று, கொடியில் தொங்கிய துணிமணிகளை எடுத்துப் பெட்டியில் திணிக்கத் தொடங்கினாள்.


இனி அவளுடன் தர்க்கிப்பதில் பயன் இல்லை என்பதை நன்குணர்ந்திருந்த விஜயாவின் மன்னி, பரபரப்புடன் உள்ளே சென்று, ஒரகத்தியை அடுப்பைப்பற்ற விடச் சொல்லி விட்டு, கடைசி மைத்துனனைக் கடைக்கு அனுப்பிச் சாமான்களை வாங்கி வரச் செய்து தின்பண்டங்கள் தயாரிப்பதில் முனைந்தாள்.

'நாளை மறுநாள் தீபாவளி. போனதும் போகாததுமாகக் கைக்குழந்தையையும் வைத்துக்கொண்டு என்ன செய்



எட்டு யுகங்கள்

கிரிஜா



வாள், விஜயா?' என்ற அநுதாபம் விஜயாவின் மன்னிக்குப் புது பலத்தைக் கொடுத்தது. சில மணி அவகாசத்தில் நான்கு வித தின்பண்டங்களைத் தயாரித்து, அவற்றைத் தக்கபடி டப்பாக்களில் வைத்துக் கட்டியும் விட்டாள்.

விளக்கின் சுடரைப் போல அருமையாக வளர்ந்த நாத்தனார் விஜயாவிடத்திலே அவள் மன்னிகளுக்கு அதிக அன்பு உண்டு. ஒரு நாள் கூடக் கணவனை விட்டுப் பிரிவதைப் பொறுக்காத விஜயா, திடுமென்று தன்னந் தனியாக வந்து இறங்கியதுடன், வந்து ஏழு நாட்களாகியும், கலகலப்பாகப் பேசாததுடன் கணவனைப் பற்றிய பேச்சையே எடுக்காமல் இருந்தது அவர்களுக்குச் சந்தேகத்தையும், கவலையையும் கொடுத்ததில் வியப்பில்லை.

'மாப்பிள்ளை தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறாரோ? 'கிண்டி ரேஸ்', 'சூதாட்டம்' என்று ஏதாவது அவரைப் பற்றிக் கொண்டு விட்டதோ? அதனால் எழுந்த தகராறில் விஜயா, கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டாளோ?' என்ற சந்தேகம் கொண்டு கவலைப்பட்ட விஜயாவின் அண்ணன்களும், மன்னிகளும் சற்று உரக்கவே இதைப் பற்றிப் பேசி விட்டதால் விஜயாவுக்குக் கோபமும், ஆத்திரமும், அழுகையும் வந்து விட்டன.

விஜயாவை வைதிருந்தால்கூட அவளுக்கு இத்தனை ஆத்திரம் வந்திருக்காது. சகல நற்குணங்கள் நிரம்பிய அவள் கணவனைப் பற்றி, அவர்கள் விபரீதமாகப் பேசவே விஜயாவுக்கு ஆத்திரம் வந்தது.

உண்மையில் விஜயா கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு தான் புறப்பட்டு வந்திருந்தாள். ஆனால் அந்தச் சண்டை, அவளுடைய அண்ணா, மன்னிகள் நினைப்பது போல் எழுந்த சண்டை அல்ல.

எல்லா நற்குணங்களும் கொண்ட கணவனிடத்திலே ஒரே ஒரு குணந்தான் விஜயாவுக்குத் தொல்லையைக் கொடுத்தது: இரக்கம் என்ற அந்த நல்ல குணத்தையும் விஜயா வெறுக்கவில்லை. ஆனால்....?

விஜயாவின் கணவன் ராஜா, 'மத்தியதரவகுப்பு' என்று சொல்லப்படும் ரூபாய் நூறு சம்பளம் வாங்கும் சிப்பந்தி தான். ஆனால் அவனுக்குப் பூர்வீகச் சொத்துகொஞ்சம் இருந்ததால் மற்றவர்களைவிடச் சற்றுத் தெம்பாக இருந்தான். இதன் காரணமாக, அவன் நண்பர்கள் அவனை மாதக் கடைசியில் அடிக்கடி தேடிவருவார்கள். ஐந்தும், பத்துமாகக் கடன் கொடுத்து உதவிக்







கொண்டிருந்தபோது விஜயா கவலைப்படவில்லை. ஐம்பது, நூறு என்று கொடுக்கவும், கடைகளில் தன் பெயரில் கணக்கை ஏற்றுக்கொண்டு, துணிமணிகள், சாமான்கள் என்று வாங்கிக் கொடுக்கவும் கணவன் ஆரம்பித்தபோது தான் அவள் கவலை அதிகமாகிவிட்டது.

சிரித்தபடி கணவனைக் கண்டித்தும் வற்புறுத்தியும் பல கடன்களை வசூலிக்கச் செய்திருக்கிறாள். நண்பருக்கு உதவியதாகச் சொன்ன பெரும் தொகை விஜயாவின் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது.

பிரசவித்த பலவீனத்திலிருந்து முழுவதும் மீளாத உடம்பு. அத்துடன் மீண்டும் தாய்மைக்கான பலவீனம். அதனால் பொறுமையாகச் சிரித்தபடியே கணவனைக் கடிய அவள் உடம்பில் சக்தியில்லை. கோபத்தில் படபடவென்று பேசி விட்டாள். உரிமையில் அவனைச் சற்று அதிகமாகவே அவள் கண்டிக்கத் தொடங்கி விட்டாள்.

அவன் ஆண் பிள்ளையல்லவா? ''நிறுத்திக் கொள். உன் பிறந்தகத்திலிருந்து வந்ததை யொன்றும் நான் அள்ளிக் கொடுத்து விடவில்லை. என் சொத்து. என் இஷ்டப்படி கொடுப்பேன்; அழிப்பேன்.''

'' அப்படியானால் நானொருத்தி இங்கே எதற்காக நாளெல்லாம் உழைத்து உருக வேண்டுமாம்? எனக்கு உரிமை இல்லை என்றால் இங்கே...''

'' இருக்க வேண்டாம். இப்போதே புறப்படு. நான் தடுக்கவில்லை'' என்றான் அவள் கணவன்.

விஜயாவுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் துணிகளைப் பெட்டியில் நிரப்பத் தொடங்கினாள். அவனும் சளைக்கவில்லை. வண்டியைக் கொண்டு வந்து வாசலில் நிறுத்திவிட்டான்.

இடுப்பில் ஏந்திய குழந்தையுடன், துணையின்றிப் பிறந்தகம் வந்து சேர்ந்து விட்டாள் விஜயா.

கோபமாகப் புறப்பட்ட விஜயாவுக்குப் பிறந்தகம் வந்த முதல் நாள், தன்மீது குற்றமேயில்லை யென்றும், குற்றம் முழுவதும் கணவன் மீதுதான் என்றும் மனம் பொருமியது. அந்தப் பொருமலில்கூடக் கணவனின் பிரிவு அவளைக் கலக்கியது. அந்த ஒருநாளும் ஒரு யுகமாகத்தான் கழிந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது விஜயாவின் மனம், கனம் குறைந்து இலேசாக இருந்தது. சிந்தனையும் மிகத் தெளிவாக ஓடி வந்தது. அவள் மெள்ளத் தன் கணவன் கைப்பற்றின அன்று முதல் நடந்த ஒவ்வொன்றையும் நினைவில் வைத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினாள்.

அக்னியை வலம் வந்து தன் வாழ்க்கைத் துணைவன் கைப்பற்றிய மறுதினமே அவனுடன் புறப்படத் தயாராகி விட்டாள் விஜயா. 'முன்பின் அறிமுகமற்ற அந்தப் பையனைக் கண்டதும் நம்மை யெல்லாம் மறந்து புறப்பட்டு விட்டாளே, விஜயா!' என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள் விஜயாவின் அண்ணாக்களும், மன்னிகளும். விஜயாவோ கணவனுடன் சென்று அவன் இருக்கும் இடத்தின் அலங்கோலத்தைக் கண்டதும், 'நாம் இன்னும் முன்னாலேயே இவரை மணந்து வராமல் போனோமே!' என்ற அங்கலாய்ப்புடன் எல்லாவற்றையும் சரி செய்வதற்குத் தொடங்கி விட்டாள்.

மாலை ஆபீஸிலிருந்து திரும்பிய விஜயாவின் கணவன் ராஜா தன் அறையின் கவர்ச்சியைக் கண்டு பிரமித்தான். கையில் இடைவேளைப் பலகாரத் தட்டுடன் உள்ளே நுழைந்த விஜயாவை உணர்ச்சிப் பெருக்குடன் நோக்கிய அவன், ''விஜயா! மனைவி 'உடல்' என்றும், கணவன் அவ்வுடலின் 'உயிர்' என்றும் பெரியவர்கள் சொல்லுகிறார்களே, அது சரியல்ல என்று எனக்குப் படுகிறது! கணவன் 'உடல்'; மனைவிதான் 'உயிர்'. இதுவரை வெறுமையாக இருந்த என் உடலில் இன்றுதான் 'உயிர்' வந்தது. இதுவரை சாரமற்ற என் வாழ்வில் இனி ஜீவ ஒளி வீசும், இல்லையா?'' என்றான்.

விஜயா கலகலவென்று சிரித்தாள். ''அடேடே! பிரமாதமாகப் பேசுகிறீர்களே! இனி இந்த உயிர், உடலை விட்டு ஒரு கணமும் பிரியாமல் இருக்க வரம் தருவீர்களா?'' என்றாள்.

ராஜாவும் சிரித்தான். ''கமலவல்லித்தாயார் ராஜகோபாலப் பெருமாளிடம் கேட்ட மாதிரி கேட்கிறாயே!'' என்றவன் விஜயாவின் கையிலிருந்த தட்டை வாங்கிக் கொண்டான்.

அவனுக்கு எது பிடிக்கும் என்பதை அறிந்து செய்வதில் அவளுக்கு அலாதி ஆசை. அவளுக்கு எது பிடிக்கும் என்பதை அறிந்து வாங்கி வருவதிலே அவனுக்கு அலாதிப் பிரேமை.

இப்படித்தான் அவர்கள் இல்வாழ்வில் இன்பம், அன்பு இரண்டும் கலந்து பெருகின.

அன்று அவன் சொன்னான் : "விஜயா! உன் செய்கை ஒவ்வொன்றும் என்னைப் பூரிக்கச் செய்கிறது. உன்னைப் போலச் சில பெண்கள் இருந்தாலே போதும்... பூலோகம் நிச்சயம் சொர்க்கமாகி விடும்."

விழிகளில் நீர் மல்க அவனை ஏறிட்டு நோக்கிய விஜயா, "உங்களுடைய இந்த அன்பு என்றும் மாறாமல், என்னைப் பிரியாமல் இருக்கும் அல்லவா?" என்றாள்.

அவள் விழி நீரைத் துடைத்த அவன், "விஜயா! ஏன் இந்தக் கேள்வி? அன்று கமலவல்லித் தாயார் கூடப் பெருமாளிடத்தில் இதை ஒருமுறைதான் கேட்டாளாம். நீயானால் இரண்டாம் முறையாகக் கேட்டு விட்டாய்" என்றான்.

முகத்தைச் சுளித்த விஜயா, "ஆமாம்; நீங்களும் இதோடு பல தடவைகள் கமலவல்லித் தாயாரைப் பற்றி அரைகுறையாகச் சொல்லி என்னுடைய ஆவலைக் கிளப்பி விடுகிறீர்கள்" என்றாள் மிகுந்த மனத் தாங்கலுடன்.

"கோபித்துக் கொள்ளாதே, விஜயா! இதோ கதையை ஆரம்பித்து விட்டேன். உட்கார்!" என்று அவளை உட்கார வைத்துக் கதையைச் சொல்லத் தொடங்கினான் ராஜா :

"ஒரு சமயம் விஷ்ணுவானவர், மிகவும் துஷ்டனான அசுரன் ஒருவனைக் கொன்று விட்டு வரும்படி தம் சக்ராயுதத்தை அனுப்பினார்.

அமலன் ஆழி துரத்த ஓடிய அசுரன் வழியில் ஆசிரம வாசலில் நின்றிருந்த பிருகு முனிவரின் பத்தினியைச் சரணடைந்தான். அசுரனுக்கு அபயம் அளித்த அம்முனி பத்தினி சக்கரத்தாழ்வாரை நோக்கி, "நான் அபயம் அளித்துள்ள இவனை நீ கொல்ல வேண்டாம்" என்றாள்.

சக்கரத்தாழ்வார் பதில் சொன்னார்: "அம்மணி! நான் மகாவிஷ்ணுவின் ஆழி. அவர் ஏவலை மேற்கொண்டு வந்துள்ள நான் எடுத்த காரியத்தை முடிக்காமல் திரும்ப முடியாது.



மேலும் 'தாங்கள் அபயம்' கொடுத்துள்ள 'அவன் பலரைக் கொன்ற' ஒரு துஷ்ட அசுரன். ஆகையால் அவனை விட்டு விடுங்கள்" என்றார்.

பிடிவாதம் காட்டிய பிருகு முனிவரின் பத்தினி, "அசுரனே யானாலும் சரண் என்று வந்தவனைத் தன் உயிர் உள்ள வரை காப்பது கடமை. ஆகையால் என்னைக் கொன்றாலன்றி நீர் அவனை அணுக முடியாது" என்றாள்.

தர்மசங்கடத்தில் நின்ற சக்கரத்தாழ்வாரோ, வேறு வழியில்லாததாலும், முனி பத்தினியின் பிடிவாதத்தாலும் மனத்தை உறுதி செய்துகொண்டு, குருபத்தினியைக் கொன்று, அசுரனையும் கொன்றுவிட்டுத் திரும்பி விட்டார்.

வெளியே சென்றிருந்த பிருகு முனிவர் திரும்பியபோது தம் பத்தினி கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்டு கடுங்கோபம் கொண்டு, மகாவி செய்த குற்றத்தையோ, கொன்றது இறைவன் ஆழி என்பதையோ சிந்தித்து அறியாமலே, 'என் மனைவியைப் பிரிய எவன் காரணனோ, அவனும் தன் மனைவியைப் பிரியக் கடவன்' என்று சாபமிட்டார்.

சாபத்துக்குக் கட்டுப்பட்ட லக்ஷ்மிதேவி உடன் விஷ்ணுவை விட்டு அகன்றாள். பிரிவுத் துன்பத்தைத் தாள முடியாத பகவான், தம் தாபத்தைத் தணித்துக் கொள்ளப் பல சோலைகளை நாடினார். ஆயினும் அது தணியாமல் போகவே, பூலோகத்தில் சோழ வள நாட்டில் காவேரிக்குத் தென்திசையில் மலர் குலுங்கும், 'செண்பகாரண்யம்' என்னுரு வனத்தைக் கண்டு அங்கு சென்று தங்கினார்.

கோபம் தணிந்த பிருகு முனிவரோ, சாந்தமாகச் சிந்தித்தபோது, தம் தவற்றை உணர்ந்து திடுக்கிட்டார். 'உலகையாளும் இறைவனையன்றோ என் சாபம் தாக்கி விட்டது! இந்தப் பயங்கரமான பாபத்தை எங்கே சென்று போக்கிக் கொள்வேன்' என்று எண்ணுதலும் எண்ணிக் கலங்கினார். கடைசியாக அவரும் பூலோகத்தை யடைந்து, இறைவன் உறையும் செண்பக வனத்தின் பெருமையை உணர்ந்து அங்கு சென்று, திருப்பாற்கடலில் நீராடி, கடும் தவத்தை மேற்கொண்டார். 'என் பாபத்தைப் போக்க, லக்ஷ்மியை என் மகளாகப் பெற்று, நாராயணனுடன் சேர்ப்பேன்'



தீபாவளி வாழ்த்து!...
TSR
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL SANDAL TOILET POWDER
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய டால்கம் பவுடர்
ஸாண்டல் வுட் டாய்லெட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை மென்மையாக்கப்பட்டது
டி. எஸ். ஆர். & கோ
கும்பகோணம்
A.K.GOPAL

என்ற திட சங்கற்பத்துடன் தேவியைக் குறித்துத் தவம் கிடந்தார்.

அவர் தவத்துக்கு இரங்கிய லக்ஷ்மி, அவரது விருப்பம் உணர்ந்து, குழந்தையாக ஓடி வந்தாள்.

விரிந்த கமல மலர்போல் நின்ற குழந்தையை வாரி எடுத்துக்கொண்டே முனிவர் குழந்தைக்குப் பார்க்கவி, செங்கமலவல்லி என்று இரு திருநாமங்களைச் சூட்டி வளர்த்தார்.

பார்க்கவி வளரவும் முனிவர் இறைவனைக் குறித்துத் தவம் செய்யலானார். பார்க்கவியும் பரந்தாமனையே பதியாக அடையவேண்டும் என்று தவமிருந்தாள்.

பிருகு முனிவரின் தவ உக்கிரம் மகா விஷ்ணுவை உலுக்கி எழுப்பியது. எழுந்தவர் முனிவருக்கும், பார்க்கவிக்கும் முன்னால் வந்து காட்சி தந்தார்.

இறைவன் பாத பத்மங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் உகுத்த பிருகு முனிவர், "ஐயனே! யான் அறியாமல் செய்த பெரும் பிழை பொறுப்பாய்" என்று வேண்டினார்.

ராஜகோபாலப் பெருமானின் ராஜ களையைக் கண்களால் அள்ளிப் பருகியபடி நின்ற பார்க்கவி, அவர் தன் பக்கம் திரும்பியதும் நாணித் தலை கவிழ்ந்தாள். வெட்கத்தால் அவளது செவ்விதழ்கள் விரிய மறுத்தன.

புன்னகை கொண்ட பன்னகசயனன், "பிருகு மா முனிவரே! உம் செல்வியின் எழில் மிகுந்த மதிவதனம் எம்மை மயங்கச் செய்து விட்டது; ஆயினும் மௌன விரதம் கொண்டு நிற்கும், உம் செல்வியின் விருப்பத்தையும் அறிந்து சொல்லும்" என்றார்.

பார்க்கவி தன் இதழ்களைப் பிரித்தாள். "அப்பா! எனக்கும் இவரைப் பதியாக அடையச் சம்மதமே. ஆனாலும் அவர் ஒரு வரம் தரவேண்டும்: இவர் அன்பு இன்றுபோல் என்றும் மாறாமல் இருக்க வேண்டும். என்னைக் கணமும் பிரியாமல் இருக்கவும் வேண்டும்" என்றாள்.

இறைவனும் இதை ஏற்று, அனைவரும் கண்டு களிக்கப் பார்க்கவியின் கரம் பற்றி அவளை மணந்து மடிமீது அமர்த்திக்கொண்டு இன்றும், 'லக்ஷ்மி நாராயண'னாகக் காட்சி யளிக்கிறார்" என்று கதையை முடித்தான் ராஜா.

கதையை முடித்தவன், "விஜயா! அன்று பெருமான், பார்க்கவி என்னும் கமலவல்லித் தாயாருக்கு வாக்களித்தது போல், இன்று நானும் சொல்கிறேன்: 'என் அன்பு மாறாது; உன்னைப் பிரியவும் நேராது. சரிதானா?" என்றான்.

விஜயாவின் மனம் விம்மியது. 'அன்று இப்படி வாக்களித்தவர் தானா என்னை ரயிலேற்றி அனுப்பி விட்டுச் சும்மா இருக்கிறார்? அவரைச் சொல்லுகிறேனே நான் மட்டும் என்ன? செய்து கொண்ட எல்லா உறுதிகளையும் பறக்கவிட்டுத்தானே புறப்பட்டு வந்தேன்!' மனம் நொந்து கண்ணீர் விட்டாள் விஜயா.

விஜயாவின் மன்னி, வேலை நிமித்தம் வெளியே சென்றுள்ள தன் கணவனுக்குத் தகவல் அனுப்பி விட்டுக் கடைசி மைத்துனனை விஜயா கூடத் துணைக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்து விட்டாள்.

வண்டி புறப்படும்போது அவசரமாக ஓடி வந்த விஜயாவின் அன்னை, ஒரு பெரும் பொட்டலத்தை வண்டிக்குள்



"எல்லாரும் உங்களுக்குக் குழந்தை சுபாவம்னு சொல்றது சரியாய்த்தானிருக்கு."

போட்டு விட்டு, "மனத்தில் ஒன்றும் வைத்துக் கொள்ளாதே, விஜயா! இதில், தீபாவளிப் புதுசுகள் இருக்கின்றன. மாப்பிள்ளைக்குப் பிடித்த ஊதா நிறப் புடவையே எடுத்திருக்கிறேன்" என்றாள்.

வண்டி புறப்பட்டு விட்டது. விஜயா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, குழந்தையை அணைத்துக் கொண்டாள்.

விஜயா புறப்பட்ட அதே நேரத்தில் ராஜகோபாலனும் வண்டியில் வந்து கொண்டிருந்தான் தஞ்சையை நோக்கி!

ராஜா ஆண் பிள்ளையல்லவா? இரண்டு நாட்கள் வரை அவன் மனத்தில் கோபம் தணியவில்லை. அதனால் சிந்தனையும் எழவில்லை. மூன்றாவது நாள்தான் அவனுடைய மனம் சற்று ஆறிச் சிந்திக்கத் தொடங்கியது.

ராஜாவின் வீம்பு மெல்ல மெல்ல உச்சாணிக் கொம்பை விட்டுக் கீழ் இறங்கத் தொடங்கியது.

அன்று வெள்ளிக் கிழமை. சூன்யமாகக் கிடந்த வீட்டுக் கூடத்தைப் பார்த்த ராஜாவுக்கு வேதனை மனத்தை வதைத்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விஜயா கூடத்தில் படத்துக்கு முன் குத்து விளக்கை ஏற்றி வைத்து, அருமையான தமிழ்ப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பாள். 'சே! சே! அழகுச் செல்வமான அவள் இல்லாத வீட்டிலா ஏழு நாட்களைக் கழித்தேன். ஏழு நாட்களா அவைகள்? துன்ப உருவான ஏழு யுகங்களல்லவா அவைகள்!'

சிந்தனை தந்த அடியில் ராஜாவின் மனம் இளகி விட்டது. இனியும் அவள் பிரிவை அவனால் சகிக்க முடியாது.

தன்னையே நொந்து கொண்ட ராஜா போர்வையை உதறிவிட்டு எழுந்தான். மடமட வென்று கதவுகளை இழுத்துப் பூட்டினான். வழக்கப்படி, அடுத்த போர்ஷனில் இருப்பவர்களிடம் சாவியைக் கொடுத்துவிட்டுக் கிளம்பி ஓடினான், முதல் வண்டியைப் பிடிக்க.

ராஜா ஏறியிருந்த புகை வண்டி, சிதம்பரம் வந்து நின்றபோது, அடுத்த இருப்

புப் பாதையில், தஞ்சையிலிருந்து வரும் வண்டி நிற்பதைக் கண்டான். "இதே வண்டியில் தானே என் விஜயாவுடன் திரும்பிக் கொண்டிருப்பேன்" என்று எண்ணி மகிழ்ந்தான். அதே வண்டியின் கடைசிப் பெட்டியில் விஜயா இருப்பதை அவன் அறியவில்லை.

விஜயாவும் விழித்துக் கொண்டுதான் இருந்தாள். அந்த நீண்ட இரவு அவளுக்குத் தொலையா இரவாகவே பட்டது. அடுத்து வந்து நின்ற வண்டியைப் பார்த்து, "இந்த வண்டியில் நானும், அவரும் எத்தனை முறை தஞ்சை சென்றிருக்கிறோம்!" என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். அதே வண்டியில் ராஜா செல்வதை அவள் அறியவில்லை.

மலரை விட்டு, மணம் பிரிவதுபோல அவனைச் சுமந்த புகை வண்டி புறப்பட்டு விட்டது. விஜயாவைச் சுமந்த வண்டி விரைந்து சென்றது.

கதவைத் திறந்த விஜயாவின் அண்ணா அங்கே ராஜா நிற்பதைக் கண்டு திகைத்தான். "மாப்பிள்ளையா! வாருங்கள். நேற்று இரவு மெயிலில் விஜயா சென்னை சென்றிருக்கிறாளே!"

உள்ளே வைத்த காலை எடுத்துக் கொண்டு திரும்ப யத்தனித்தான் ராஜா. அவனைத் தடுத்த மைத்துனன், "இனி மேல் சென்னை செல்லும் வண்டி ஆறு மணிக்குமேல்தான். உள்ளே வாருங்கள்" என்று கூறி அழைத்துச் சென்றான்.

சென்னையில் பூட்டிய கதவுக்கு முன் திகைத்து நின்று விட்டாள் விஜயா. அவளைக் கண்டதும் அடுத்த வீட்டுப் பெண் சாவியைக் கொண்டு வந்து கொடுத்து, "மாமா! நேற்று சாவியைக் கொடுத்து விட்டு எங்கேயோ போனார். இரவு அவர் வரவேயில்லை" என்று சொன்னாள்.

விஜயாவுக்குத் 'திக்'கென்று மனம் அடித்துக் கொண்டது.

அவள் தம்பி சந்துரு கதவைத் திறந்து சாமான்களை உள்ளே வைத்துவிட்டு வந்து, "இப்பொழுதே அழ ஆரம்பித்து விடாதே, அக்கா! அத்திம்பேர் சினிமாப் பார்த்துவிட்டு, நண்பன் வீட்டில் தூங்கிக் கொண்டிருப்பார். முதலில் காப்பி போட்டுக் கொடு; அவரை அழைத்து வருகிறேன்" என்றான். விஜயாவின் தவிப்பு அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

குழந்தையும் பசித்து அழவே, அடுப்பைப் பற்ற விட்டாள் விஜயா.

நண்பர்கள் வீடு, ஆபீஸ் எல்லா இடங்களையும் வலம் வந்தான் சந்துரு. உள்ளுக்கும், வாசலுக்குமாக அலைந்துகொண்டிருந்தாள் விஜயா.

இருட்டிவிடவே விஜயா குத்துவிளக்கை ஏற்றிக் 'கமலவல்லித் தாயாரை' வேண்டித் துதித்தாள். அவள் கண்கள் நீரைச் சொரிந்தன. "தாயே! என்னைத் தண்டித்து விடாதே. இனி ஒருநாளும் இப்படித் தவறு செய்யவே மாட்டேன். அவரை என்னுடன் சேர்த்துவிடு" என்று கதறி விட்டாள்.

"அக்கா! ஜுரம் என்று லீவு எடுத்துக் கொண்டவர் நாலு நாட்களாகவே ஆபீஸ் வரவில்லையாம்" என்று சொல்லியபடி வந்த சந்துரு படுத்துக் கொண்டு விட்டான். அவன் அலுப்பு அவனுக்கு.

பிடித்திருந்த சிறு நம்பிக்கையும் நழுவி விடவே விஜயாவுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவள் முன் சென்னை நகரமே சுற்றி வருவதுபோல் இருந்தது.

"விஜயா! விஜயா!"-அவளை அழைத்தபடி கதவைத் தட்டினான் ராஜா. கலவரத்தில் கதவைத் தாளிடவில்லை அவள். கைபட்டதும் திறந்து கொண்டது கதவு.


"விஜயா!" என்ற அழைப்புடன் உள்ளே நுழைந்த அவன் திகைத்தான்; விஜயா அவன் பாதங்களில் சுருண்டு விழுந்தாள். அவளால் பேசமுடியவில்லை.

கையிலிருந்த பொட்டணங்களைக் கீழே போட்ட ராஜா அவளை வாரி எடுத்தான்.

கண்களைத் திறந்த அவள் அவன் மார்பிலே முகத்தைப் பதித்து, "என்னை மன்னிப்பீர்களா?" என்று கேட்டபடி விம்மி விம்மி அழுதாள்.

ராஜாவின் கண்களும் நீரைச் சொரிந்தன. துன்ப உருவான எட்டு நாட்களும் எட்டு யுகமாகக் கழியக் கடைசிக் கட்டத்தில் கண்ணீர்ப் பிரளயத்தில் மூழ்கிய அவனும், அவளும் இன்ப வாவியில் மிதந்து மதிமயங்கித் தெளிந்தார்கள்.


பட்டாஸ் வெடிச் சத்தத்தைக் கேட்டு விசுக்கென்று எழுந்து உட்கார்ந்து விட்டாள் குழந்தை. அவள் விஷயத்தைப் புரிந்து கொண்டவள் போலக் "களுக்" கென்று சிரித்தாள்.




தீபாவளி
வாழ்த்துக்கள்!
புனித ஸ்னானம் செய்து,
புத்தாடை உடுத்தி,
மகிழ்ச்சியுற்றிருக்கும்
உங்களுக்கு எங்கள்
மங்கள வாழ்த்துக்கள்.
மேட்டூர் கெமிகல் &
இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை — சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்டுகள்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.
KAMADHENU
CAUVERY
CAUVERY BAR SOAP

"விஸ்வாஸ்"

ஹரிஸாண்டல், ஸ்லோ
ஸ்பீட், கோல்ட் ஸ்டார்ட்



குருட் ஆயில் என்ஜின்கள்

5 - 6 HP ... 550 RPM
8 - 9 HP ... 500 RPM


விசாரிக்கவும்

மாடர்ன் என்ஜினீயரிங் கம்பெனி

டெலிபோன்: 2745 2-27, பிராட்வே, சென்னை -1 தந்தி: "டிராக்டர்ஸ்"

இந்தியாவில் ஸோல் ஏஜண்டுகள்:
"ஸாம்ஸன்"
டானிஷ் தயாரிப்பு மோட்டார்கள்

டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
"பீக்கோ"
எலக்டிரிக் மோட்டார்கள்



அனைவருக்கும் ஏற்றவண்ணம் சௌகர்யமான
கால வரம்பினுள்ளும், சந்தா தொகைகளிலும்
பல ஆண்டுகளாக சீட்டுகள் நடத்தி சேவைபுரிந்து
வருகிறோம். யாவரும் இவற்றில் சேர்ந்து
சிறுகச் சிறுகச் சேமித்து நலனடையும்படி
கோருகின்றனம்.

எமது
மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்!

கள்ளிக்கோட்டை பண்ட்ஸ்
பிரைவேட் லிட்.

333, தளி ரோடு, கோழிக்கோடு - 2
போன்: 563 தந்தி: "MAMBILA"

மதராஸ் கிளை:
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்-5


KCF-42%



கல்லுளிமங்கன்




காவடியாட்டம்



கரகம்



கழைக் கூத்தாடி



பெருமாள் மாடு



பாம்பாட்டி



குரங்காட்டும் குறத்தி

அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்



48 ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்று விளங்குகிறது

ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம், ஜுரம், ஜன்னி
முதலியவைகளுக்குக் கைகண்டது
புட்டி ஒன்றுக்கு விலை 63 காசுகள்

★

மேரிராம் பற்பொடி

பற்களைச் சுத்தமாகவும் வெண்மையாகவும் செய்கிறது
டின், பாக்கெட் இருவித சைஸ்களிலும் கிடைக்கும்

சித்தர் கோரோஜனை
மாத்திரை



குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இருமல், கபம்
முதலியவைகளை உடனே அறவே நீக்குகிறது

40 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றுக்கு
விலை ரூ. 1/-

லேடிடால் ஹேர் ஆயில்

குளிர் தாமரை போன்ற மூலிகைகளினால் தயாரிக்கப்படும் உயர்ந்த சந்தனத் தைலம். இதை உபயோகித்து வந்தால் கண் எரிச்சலைப் போக்கி மூளைக்கு குளிர்ச்சியைத் தரும். எண்ணெய் ஸ்நானத்திற்கும் உகந்தது. அழகிய அட்டைப் பெட்டியில் விற்பனையாகிறது

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 1-25

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்

ஆர். எஸ். பதி அண்டு கம்பெனி

(ஸ்தாபிதம்: 1909)

தபால் பெட்டி எண்: 99 - 214 & 215, மேல மாசி வீதி, மதுரை


தீபாவளி அஞ்சலி
துணி கொடுக்கும் அணு வளர
CCM
வணங்குவோம்!
The Coimbatore Cotton Mills Limited,
SINGANALLUR - COIMBATORE.
MANAGING AGENTS: R. BHEEMA NAIDU & CO.
BP

ரஞ்சனி

காலையில் அம்மாவந்தாள். ''ராஜு! இது உனக்கே நல்லா இல்லேடா. வீணாகப் பெண் பாவத்தைக் கொட்டிக் கொள்ளாதே... போய் அந்தப் பெண்ணை—ரஞ்சனியை—அழைத்து வா!'' என்றாள்.

''முடியாது'' என்றேன் அழுத்தமாக. என் நிலையில் வேறு யாராக இருந்தாலும் இதைத் தவிர வேறு முடிவு சொல்வார்களென்று எனக்குத் தோன்றவில்லை.

''உன் அண்ணன் இதை அறிந்தால்..'' அடுத்த பயமுறுத்தல். நானு அதற்கு மசிந்து விடுகிறவன்?

''நான் வாழுவது எனக்காக. என் அண்ணனுக்காக அல்ல!''

என் ஆணித்தரமான பதிலைக் கேட்டு அம்மா அசந்து விட்டாள். அந்த அசர்வு என் உள்ளத்திலே அணையாத துயரத்தை எழுப்பியிருக்க வேண்டும்.

இந்த உணர்வு அன்றே - கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்த அன்றே அல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்?

. நான் செய்து விட்ட மாபெரும் தவறு அதுதான். அதை நினைத்து நினைத்துத்தான் இன்றும் அழுது கொண்டிருக்கிறேன். அதையே அம்மா சுட்டிக் காட்டியபோது என் உள்ளம் அலை மோதியது. உள்ளத்து உணர்வெல்லாம் ஒன்று திரண்டு முட்டி மோதி ஓலமிட்டன. என் தளர்வைப் பயன்படுத்த எண்ணி அம்மா, ''ராஜு! சொல்லடா இந்தப் பண்டிகை முடிகிறவரைக்குமாவது அவள் இங்கிருக்கட்டும். வீட்டுக்கு வந்தவளில்லாமல் தீபாவளியா?''

விழித்துக் கொண்டேன்.

''அவள்தானே வேண்டும் உங்களுக்கு. பேஷாக அழைத்துக் கொள்ளுங்கள். அவள் இங்கிருந்து திரும்பிச் செல்லும் வரை நான் எங்கேயாவது...''

''ராஜு!''

''அம்மா!''

''உன்னை ஒரு பிள்ளையாகப் பெற்றதற்கு வருந்துவதைத் தவிர...'' என்று வார்த்தையை முடிக்காமல் அம்மா விக்கி அழுதாள்.

''நானும் அதைத்தானம்மா அடிக்கடி நினைக்கிறேன். நம்மால் ஒரு சுகமில்லாது உங்களுக்குப் பிள்ளையாக ஏன் பிறந்தோமென்று...''

''சுகமும் துக்கமும் நம் கையில்தான். உன்னுடைய வீண் பிடிவாதத்தினால் ஒரு பெண்ணையும் அழவிட்டு நீயும் அழுது கொண்டிருக்கிறாய். என் கடமை; சொன்னேன். முடிவு உன் கையில்...''

அம்மா எழுந்து போய் விட்டாள்.

★


சிற்பக்கலையில் வளர்ந்த கன்னி கண்ணெதிரே உருவெடுத்து நிற்பதைப் போல எங்கிருந்தோ வந்தாள் பத்மா. என் வீட்டை அடுத்த நாலாவது பங்களாவில் குடியேறியவள் மெல்ல மெல்ல என் இதயத்திலும் இடம் பிடித்துக்கொள்வாளென்று நான் எண்ணவேயில்லை.

எங்கள் வீட்டுத் தோட்டம் அந்த வட்டாரத்திலேயே பெரும் புகழ் பெற்றிருந்தது. நகரில் காணும் கண்காட்சிச் சாலையைப் போல எங்கள் வீடு தேடி வந்து தோட்டத்தைப் பார்த்துச் சென்றவர் பலர். அதன் அழகைப் புகழ்ந்து சென்றவர் எத்தனையோ பேர்.

அவர்களில் பத்மாவும் ஒருத்தி.

மலர்கள் பறிக்கும் சாக்கிலும் செடிகள் எடுத்துச் செல்லும் நினைவிலும் அடிக்கடி என் வீட்டுக்கு வருவாள். வந்தவள் தன் வேலையோடு போவாளா? போக மாட்டாள். தோட்டத்தின் அழகையும் அதன் நேர்த்தியையும் புகழ்வதோடு, தோட்டக்காரனின் (என்னுடைய) திறமையையும் புகழ்வதைக் கேட்க என் நெஞ்சம் நிமிர்ந்து நிற்கும்.

தோட்டத்துப் பயிர்களைப் போல எங்கள் அன்பும் வளர்ந்தது. வாழ்வின் ஜோடியாய்க் கண்டு களிக்கத் நிர்மாணித்துவிட்ட இரு குடும்பத்துப் பெரியவர்களும் எங்கள் அன்புக்குத் தடை விதிக்கவில்லை. மற்றவர்களின் ஆதரவும் வளர்ந்து வந்த எங்களுடைய அன்பு வித்துக்கு உரம் ஊட்டியது.



கோமதி சுப்பிரமணியம்

வெகு சீக்கிரத்திலே, திருமணம் நிச்சயமாகிவிட்டது. அந்தநாளின் நினைவுக்கு விளக்கம் தருவது அத்தனை எளிதானதல்ல. இந்த உலகத்துச் சிந்தனையேயின்றி வான வெளியிலே; இன்ப லோகத்திலே சிறகடித்துப் பறந்து திரிந்து கொண்டிருந்தேன். இன்னும் எட்டே நாட்கள் இடையே... அப்பால் என் கனவுக் கன்னி என் கைத்தலம் பற்றி விடுவாள்.

யார் யாரோ வந்தார்கள். வீட்டில் எந்த நேரமும் ஆரவாரமும் கலகலப்பும். அம்மாவுக்கு ஒரே உற்சாகம். பெரிய இடத்துச் சம்பந்திக்கு எதிராகத் திருமணப்புடவை, சரடு கல்பதித்த மாங்கல்யம் இன்னோரன்ன பொருள்கள் திரட்டுவதிலேயேஅவள்பொழுதுதேய்ந்தது.

அண்ணன் எனக்காக வாங்கிவந்த கடிகாரச் செயினைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தோம். பத்மாவின் வீட்டு ஆள் என் தந்தையிடம் ஏதோ கடிதத்தைக் கொடுத்துச் சென்றான்.

"என்னப்பா கடிதம்?" என்றான் அண்ணா. அவர் ஏன் பதில் பேசப்போகிறார்? அப்பாவின் கைகளும் உதடும் துடித்தன. கண்கள் கணத்தில் செக்காயச் சிவந்தன. என் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது. அப்பாவுக்குக் கோபம் வரும்படியாக அப்படி என்ன தான் எழுதியிருப்பார்பத்மாவின்தந்தை?

வந்திருந்த கடிதத்தை அண்ணனிடம் வீசி யெறிந்துவிட்டு அப்பால் போய் விட்டார் தந்தை.

"என்ன அண்ணா?" என்றேன்.

"நமது குடும்பத்தின் முன் வாழ்வு என்னும் பொய்கையிலே மூழ்கி அடிமண் எடுக்க முயன்றிருக்கிறார் பத்மாவின் தந்தை அருணாசலம்."

இலேசாகச் சிரித்தான். சிரிப்பா அது? இதயத்திலிருந்து வெடித்துக் குமுறும் உணர்ச்சிக்கு உதட்டின் விளிம்பிலே போடப்பட்ட ஒரு அணை.

ஆம். சிறு வயதிலே பெற்றோரை இழந்துவிட்ட என் தந்தை அவரது அத்தையின் ஆதரவால் மனிதரானார். அத்தை செல்வத்திலே புரளும்கோடீசுவரியல்ல. குழந்தையை விட்டுச் சென்ற தம்பியோ குழந்தைக்காகக் கால் காசும் விட்டுச் செல்லவில்லை. படிப்பு அதிகமில்லாத அவள், என்ன உத்தியோகம் செய்ய முடியும்? குழந்தையை எப்படி வளர்த்துப் "பெரியவனாக்க" முடியும்?

குழந்தைக்காகக் கௌரவத்தை எண்ணாமல் உழைப்பதென முடிவுக்கு வந்தாள். நாலு வீடுகளுக்குத் தாமிரபரணி நதி தண்ணீர் எடுத்துக் கொட்டுவது. மிஞ்சிய நேரம் அப்பளம் இட்டுவிற்பது. பெரிய "மனிதர்கள் வீட்டு விசேடங்களில்" ஒத்தாசையாக நிற்பது — இது தான் அவள் நடத்திய ஜீவனம்.

இப்படி குழந்தையை வளர்த்தாள். பெரிய மனிதர்கள் உதவியால் அவனைப் படிக்க வைத்தாள். அவனுக்கு உதவி செய்த பெரிய மனிதர்களுள் ஒருவர் சிறிய நவுளிக் கடை ஒன்றைத் துவக்கிக் கொடுத்தார்

என தந்தை எடுத்துக் கொண்ட முயற்சியின்பலனாகக் கடை நாளுக்குநாள் ஆலமரம் வளர்வதுபோல் வளர்ந்து, இப்போது ஊருக்கு ஊர் கிளையாகப் பரவித் தழைத்திருக்கிறது.

இதுதான் பழங்கதை.

என் தந்தையை வளர்த்த அத்தை என்றோ ஒருநாள் அருணாசலத்தின் வீட்டுத் தேவையிலும் கலந்து கொண்டு வேலை செய்திருந்தாளாம். அதைத்தான் கடிதத்தில் சுட்டிக்காட்டி எங்கள் சம்பந்தம் தேவையில்லை யென்று குறிப்பிட்டு எழுதி யிருந்தார்.

"என் வீட்டிலேயே வேலை செய்தவளின் வம்சத்திலா என் பெண்ணைக் கொடுப்பேன்? நாலு சபையில் அவள் என் சம்பந்தியாக நிற்பது எனக்குத் தலை குனிவு. விவரம் தெரியாமல் உறவு கொண்டாடியதற்கு மன்னிக்கவும். இதற்குமேல் கல்யாண வேலைகள் தொடர வேண்டாம்..."

எத்தனை பேரிடி! என் நினைவு மங்கியது. கண்களில் இருள் சூழ்ந்தது. தள்ளாடி என் அறையில் போய் விழுந்தேன்.

வெகு நேரத்துக்கப்பால் கண்விழித்து எழுந்தேன். இல்லை...எழுப்பப்பட்டேன். அண்ணா எனக்கு எதிரே விசனமே உருவாக நின்றான்.

"ராஜு! இப்பொழுது நான் உன்னிடம் முக்கியமான விஷயம் பேசப் போகிறேன். யோசித்துப் பதில் சொல். நன்றாக யோசித்துப் பதில் சொல் ராஜு. சிறுபிள்ளைத்தனத்துக்கு இதில் இடமேயில்லை. குடும்ப நலனில், கௌரவத்தில் உனக்கும் மகத்தான பொறுப்பு உண்டு என்பதை நான் சொல்லாமலேயே நீ உணர்ந்திருப்பாய்..." என்றான்.

"அண்ணா எதற்காக இந்தப் பீடிகை போடுகிறாய்? ஒரு வேளை அந்தப் பெண்ணையே நான் மணக்கப் பிடிவாதம் பிடிப்பேனென்று...?"

"கெஞ்சிக் கூத்தாடியாவது அந்தப் பெண்ணை எனக்கு மணம் முடித்துக் கொடு என்று நான் கேட்பதாக நீ நினைத்திருந்தால் அந்த எண்ணத்தை அகற்றிவிடு. அண்ணா. அப்பாவின் கௌரவத்தில் நானும் ஒரு பங்காளி என்பதை உணர்ந்துதானிருக்கிறேன்" என்றேன்.

அண்ணா உணர்ச்சியோடு என்னைக் கட்டிக் கொண்டான்.

அன்றைய அதிர்ச்சிக்குப் பிறகு நான் நானாக இல்லை. என் நினைவில் நான் உழலவில்லை. உணர்ச்சியில் தள்ளப்பட்ட நான் அதன்வேகத்தில் சுழன்றேன்.

"பெண் யாரென்று கேட்கவில்லையே?" என்றான் அண்ணா ஒருநாள்.

"பத்மா இல்லையென்றான பின் யாராக இருந்தாலும் எனக்கு ஒன்று தான், அண்ணா!"

"உன் மதனியின் தங்கை ரஞ்சனி, இதில் உன் மதனிக்குப் பரம திருப்தி. நம் பெற்றோர்களுக்கும்தான்..."

பலருடைய திருப்திக்காக நான் என் உணர்ச்சியைக் கொன்றுவிட்டேன்.

திருமணம் நடந்தது.

அன்புக்காக இல்லாது அநுதாபத்துக்காக வாழ்ந்தேன்.


வீட்டிலே, வெளியிலே எங்கும் அவள் நினைவு என்னை வருத்தியது.


நல்லதைத்தானே தியாகம்செய்து கொள்கிறவன் ஞானி. எல்லோருமே ஞானியாகி விட முடியாது. உணர்ச்சி வசப்பட்டுத் தியாகம் செய்வதாக நினைத்து நெருப்பில் குதித்து விட்டு இப்பொழுது அதை நினைத்துப் பொசுங்குகிறேன்.

ஒரு முடிவுக்கு வரமுடியாத நான் கண் மறைவாகவாவது இருக்கட்டுமென்று அவளைப் பிறந்த வீட்டில் கொண்டு விட்டு வந்து விட்டேன்.

அதன் பிறகாவது நிம்மதி உண்டா? அதுதான் இல்லை. சதா அம்மாவின் நச்சரிப்பு. அதுவும் பண்டிகை நெருங்க நெருங்கத் தினமும் துளைத்தெடுத்தாள்.

நாளை அண்ணா வந்து விடுவான். அண்ணியையும் பேரப்பிள்ளையையும் கண்டு விட்டால் அம்மாவின் மனம் அதிலே திரும்பிவிடும். ஏன்? அமைதி இழந்தும் என் மனம்கூடக் குழந்தை பிரேமாவின் வரவால் ஆறுதல் பெற்றுவிடுமே!





குழந்தைக்கான சில சாமான்கள் வாங்கக் கடை வீதிக்குப் புறப்பட்டேன். என் அன்பின் பரிசாகப் பட்டாசுகள், பொம்மைகள், ரிப்பன், துணி வகைகள் வாங்கிக் குவிக்க என் மனம் துடித்தது.

★

வண்டியில் பிடித்த ஒற்றைப் பையுடன் அண்ணா வண்டியை விட்டு இறங்கினான். வண்டிச் சத்தம் கேட்டதுமே மொட்டை மாடிக்கு வேகமாக ஓடி வந்து எட்டிப் பார்த்தேன்.

'என் அண்ணா! இறங்கியதும் வண்டி போய் விட்டதே. என் அண்ணி, குழந்தை பிரேமா இவர்கள் ஏன் வரவில்லை? மனைவியையும் குழந்தையையும் அரைக் கணமும் விட்டுப் பிரியாத அண்ணா இன்று ஏன் தனியாக வந்திருக்கிறான்?' அவன் மட்டும் வந்தது ஏனோ எனக்குப் பிடிக்கவில்லை.

இதற்குள் அம்மாவும் வந்து விட்டாள், வாசலுக்கு அண்ணனை வரவேற்க.

"வாடாப்பா வா. நீ மட்டும்தான் வந்தாயா. பானு, பிரேமா இவர்களெல்லாம் எங்கே...?"

"இந்த வீட்டிலே பெற்ற பிள்ளைகள் மட்டும்தானே சீராட வேண்டும். நான் மட்டுமென்ன இதற்கு விதிவிலக்கா...?"

அண்ணாவின் குரல் சகஜமாக இல்லை. இப்பொழுதுதான் புரிந்தது; என்னைப் பழி வாங்கத்தான் இப்படிப் பேசுகிறான்.

இனி எந்த முகத்துடன் குழந்தையைப் பற்றி அவனிடம் பேசுவது? வந்த சுவடு தெரியாமல் மாடியில் சரண் புகுந்தேன். அண்ணனின் கண்ணுக்குத் தப்பியே அன்றையப் பொழுதைக் கழித்தேன்.

★

வேலைக்காரன் தைத்துக் கொடுத்த சில்க் துணிகளைப் பெற்றுக் கொண்டு வீடு வந்தேன். பிரேமா வருவாளென்று ஆசை ஆசையாக வாங்கிய துணிகள் என் அறையிலே தூங்கும் பட்டாசுக் கட்டுகளோடு கிடந்தன. அவற்றின் மேல் கையிலிருந்த பொட்டலத்தையும் தூக்கி எறிந்தேன். வேலைக்காரன் என் பெயருக்கு வந்த கடிதங்களை என்னிடம் கொடுத்துச் சென்றான். இரண்டொரு நண்பர்களின் வாழ்த்துக் கடிதங்கள்.

'என்ன..முத்துப்பேட்டை முத்திரை. 'சரிதான் ரஞ்சனி அம்மா எழுதியிருப்பாள். அன்பே..ஆருயிரே..இப்படியும் தங்கள் பராமுகம் ஆகுமா?..பண்டிகைக்காவது என்னை அழைத்துக் கொள்ளுங்கள்' என்று நாலு சொட்டுக் கண்ணீரை வடித்துக் காட்டி யிருப்பாள்.. சே, சாகஸக்காரி..!

தூக்கியெறியப் போனவன் என்னதான் எழுதி யிருப்பாள் என்று பார்க்கலாமென்று கவரைப் பிரித்தேன். அவளிடமிருந்து வந்த முதல் கடிதமே அது வல்லவா..!

"அன்புமிக்க சித்தப்பாவுக்கு..." அடியில் கையெழுத்தைப் பார்த்த நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டேன்.

பிரேமா..கோட்டை எழுத்தில் குழந்தைக் கிறுக்கில் எழுதியிருந்தாள். நான் எதிர்பார்த்ததைப் போல் ரஞ்சனி எழுதவில்லை. வைராக்கியக்காரி என்று முணுமுணுத்தது மனம். என்னையுமறியாத ஓர் உணர்வு அவள் ஏன் கடிதம் எழுதவில்லை என்று என்னைத் தூண்டியது. என்னைவிட்டு ஒதுங்கி வாழ்வதை அவளும் விரும்புகிறாளா..?

கடிதத்தைப் படித்தேன்.

"அன்புமிக்க சித்தப்பாவுக்கு,

எனக்கும் அம்மாவுக்கும் அப்பாவைப் பிரிந்திருப்பது என்னவோ போலிருக்கிறது. அம்மா சொன்னாள், பண்டிகைக்காவது அப்பாவோடு இருக்க வேண்டுமென்று. எனக்கு ரொம்ப ஆசை, உன்னை, பாட்டி, தாத்தா எல்லோரையும் பார்க்க. எல்லாரோடும் பண்டிகை கொண்டாட நான் அங்கே வந்துவிடுகிறேனென்று சொன்னேன். அம்மா 'அப்பா ரொம்பக் கோபமா இருக்கா. நாம் போகக்கூடாது' என்றாள். ஏன் சித்தப்பா! நீ வந்து என்னைக் கூட்டிப் போயேன்..."

பிரேமாவின் உருவம் என் கண்ணெதிரே தெரிந்தது. என்ன இது... பிரேமாவுக்குப் பின்னால் யார்...? ரஞ்சனியா.....அதற்கும் பின்னால்....பின்னால் என் அண்ணி...ஐயோ! அவள் கண்களில் ஏன் அத்தனை கோபம்? என்னால் அவளும் அவள் குழந்தையும் தனிமையில் வாடும்படி ஆகிவிட்டதே என்று...?

அண்ணாவின்மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கடிதத்தைக் காண்பித்துச் சண்டையிட நினைத்துத் தடதடவென்று இறங்கினேன். கீழே வந்து விட்டேன்... ஏன் என் கால்கள் தள்ளாடுகின்றன? ஆம். எந்த முகத்தைக் கொண்டு அவனோடு சண்டை போடுவது? உனக்கொரு நியாயம், எனக்கொரு நியாயமாவென்று அவன் கேட்டால்...?

பின்னே என்னதான் செய்வது? ஆம், அதுதான் சரி. அன்று மாலை ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் முத்துப் பேட்டையை நோக்கிப் புறப்பட்டேன்.

விடிந்தால் தீபாவளி. தூக்க மாட்டாத சுமைகளை வண்டியிலிருந்தும் தூக்கிச் சுமந்து வீட்டினுள் கொண்டு வந்தேன். அத்தனையும் ஜவுளி நிறைகள். வீட்டிலுள்ள அனைவருக்கும்தான். ஆம்! ரஞ்சனிக்காக நான் தேர்ந்தெடுத்த பட்டுப் புடவையும் அதில்தானிருந்தது.

வீட்டில் ஒரே கோலாகலம். அம்மா இரண்டு மருமகளோடும் ஓடியோடிப் பட்சணங்களைத் தயாரிப்பதைப் பார்த்து இத்தனை இன்பத்தையும் நான் ஒருவன் தடுத்துப் பிடித்து நிறுத்தியிருந்தேனே என்ற நினைவு என்னுள் எழுந்தது.

அண்ணாவும் அல்லவா மாறிவிட்டான்? வந்த இரண்டு நாட்களும் மனம் 'சிடுசிடு' வென்று இருந்தவன் இந்த இரண்டு நாளும் சிரிக்கிற சிரிப்பிலே வீடே அதிர்ந்துவிடும் போலல்லவா இருக்கிறது? அப்பா என்றும் வேதாந்தி. துன்பத்திலும் அப்படி. இன்பத்திலும் அப்படி.

என் இன்பமெல்லாம் பிரேமாவின் அன்பு வெள்ளத்திலே மூழ்கி யிருக்கிறது. நான் வாங்கிக் குவித்த சாமான்களைப் பார்த்துப் பார்த்து அவள் பரவசப்படும் காட்சியைக் கண்டு மனம் பூரிப்படைகிறேன்.

பிரேமா வெளியே உலாவப் போக வேண்டுமென்றாள். அவளை அழைத்துக் கொண்டு காலிமேல் கோட்டை கடைத்தெரு நெடுகிலும் சுற்றி விட்டு வந்தேன். படம் பார்க்க வேண்டுமென்றாள். குழந்தைகளுக்கான படம் ஒரு தியேட்டரில் ஓடிக்கொண்டிருந்தது. குழந்தையாக நானும் அதை அனுபவித்து விட்டு வீடு திரும்பியபோது இரவுமணி பத்துக்கு மேலாகி விட்டது.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு என் அறைக்குச் செல்லும்போது அண்ணாவின் அறையில் பேச்சுக் குரல் கேட்டது.

"பானு! தனிமையில் ரொம்பக் கஷ்டப் பட்டிருப்பாய். என் தம்பியின் மனம் திருந்துவதற்காகப் பாவம் நீயும் குழந்தையும் அவதிப்பட்டு விட்டீர்கள்..."

"ரஞ்சனியின் தனிமை தீருவதற்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நாம் கஷ்டப்படலாமே" என்றாள் அண்ணி. அவளுக்குத்தான் தங்கையின் மீது எத்தனை இரக்கம்?

குடும்பத்திலுள்ள அத்தனை பேருமே ரஞ்சனியிடம் அன்பும் பரிவும் செலுத்துகிறார்கள். ஆனால் நான் ஒருவன்...

அதிக அன்பை அளிக்க உரிமை உடைய நான் என் கடமையினின்று தவறுகிறேன்.

விழித்துக் கொண்டேன். இனி ரஞ்சனியின் வாழ்விலும் விடிவுதான்.

தெருக்களிலே பட்டாசு கடும் சத்தம்; வீடுகளிலே பட்சணங்களின் மணம்; அன்பு கொண்ட இதயங்களிலே ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.







உலகம் பரவிய

வை. மு. நரசிம்மன்

இன்று உலகம் முழுவதும் போற்றி வணங்கப்படும் இந்து தெய்வங்களில் கணபதியே முதன்மையானவர். அவருடைய வரலாறு மிக ரஸமானது.

இந்துக்களின் தெய்வங்களில் மிகவும் முக்கியமானவர் கணபதியே. அவருடைய திருவுருவம் இல்லாத ஊர் இந்தியாவில் இல்லை என்றே சொல்லலாம். எல்லாரும் பக்தியுடன் வழிபடும் இவர் நேபாளம், திபேத், துருக்கிஸ்தான் முதலிய நாடுகளிலும் கடல் கடந்து சுமத்ரா, ஜாவா, பாலி, போர்னியோ, சயாம், இந்தோ சீனா, சீனா, ஜப்பான் முதலிய கீழை ஆசிய நாடுகளிலும், மெக்ஸிகோ போன்ற மேலைத் தேசங்களிலும் குடியேற்றப்பட்டு மக்களால் வழிபட்டு வந்தார். முதலில் நம் பாரத நாட்டில், முக்கியமாக, தென் இந்தியாவில், இவருடைய வழிபாட்டைக் கூறிப் பிறகு அயல் நாடுகளில் காணப்படும் வழிபாட்டைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

✶

எல்லா இந்துக்களும் எந்தக் காரியம் செய்ய ஆரம்பித்தாலும் அந்தக் காரியம் நன்கு நிறைவேறக் கணபதியையே வேண்டிக் கொள்கிறார்கள். இவர் கணங்களுக்குத் தலைவராகக் கருதப்படுவதால், கிராமங்களைக் காக்கும் தெய்வமாகப் போற்றப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் வணங்கப்படுகிறார். இவர் எல்லாவிதமான செல்வங்களையும் கொடுக்கவல்லவராகவும் ஒரு செயல் ஆற்றும்போது ஏற்படக் கூடும் பல இடையூறுகளையும் தடுத்து அக் காரியங்களை வெற்றிகரமாக முடிவடையும்படி செய்பவராகவும் கருதப்படுகிறார். அத்துடன் எல்லாக் கலைகளுக்கும் அதிபர் கணநாதரே.

விநாயகர், இந்துக்களின் எல்லாக் கடவுளர்களையும்விட மிகவும் போற்றப்படுபவர் எனலாம். இந்துமதக் கடவுளாக இருப்பது போலவே பௌத்த, ஜைன மதக் கடவுளாகவும் இருக்கிறார். இவருடைய திருவுருவங்கள் கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவில் எல்லா இடங்களிலும் வழிபாட்டிலிருந்ததற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே விநாயகர் வழிபாடு இந்தியாவிலிருந்து நேபாளத்துக்குச் சென்றிருக்கிறது. அசோக சக்கரவர்த்தியின் புதல்வி நேபாளத்தில் விநாயகர் வழிபாட்டைப் பரவச் செய்திருக்கிறார். டாக்டர் ஆனந்த குமாரசாமியும், பேராசிரியர் ஜீவோதுப்ரேயிலும் அமராவதியில் கி. பி. முதல் நூற்றாண்டு காலத்திய கணபதியின் சிற்பத்தைக் கண்டுள்ளனர். ஈழத்திலும், மகிந்தலையில் பல கணங்களுடன் கணபதி காணப்படுகிறார். இடையூறுகளைத் தடுத்துக் காப்பவராக, நவகிரகங்களுடனும், சப்த மாதாக்களுடனும் இவர் காணப்படுகிறார். இவருடைய வழிபாடு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து அதி துரிதமாக மேன்மேலும் பெருகிப் பத்தாம் நூற்றாண்டில் மிக உச்ச நிலையை அடைந்தது.

கணபதியையே ஒரு சிலர் முதல் கடவுளாகவும் கருதினர். திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில் போல இவருக்காகத் தனிக் கோவில்களும் ஏற்பட்டன. அவைகளை இவருடைய வாகனமாகிய மூஞ்சூறு காப்பது போலவும் நிருமித்தனர். மேலும் மந்திர, தந்திர வளர்ச்சியினாலும் சக்தி பூஜையின் விளைவாலும் கணபதியும் அவருடைய சக்தியுடன் இருப்பவராகக் கருதப்பட்டார். உச்சிஷ்ட கணபதி, மகாகணபதி, லக்ஷ்மி கணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி என ஐந்து கணபதிகளையும் இவருக்குச் சித்தி, புத்தி என்ற இரண்டு மனைவியரையும் சிலர் ஏற்படுத்திக் கொண்டனர். ஆனாலும் இவர் கல்யாணமே ஆகாதவராகத்தான் சாதாரண மக்களால் கருதப்படுகிறார்.

அதனால்தான், "உன் கல்யாணம் பிள்ளையார் கலியாணம் போலத்தான்" எனக் கேலி செய்கின்றனர்.

விநாயகப் பெருமானை வீற்றிருந்த திருக்கோலம், நின்ற திருக்கோலம், நடனமாடும் திருக்கோலம் இவைகளில் காணலாம். பத்மாசனத்தில் எழுந்தருளியிருப்பதும் உண்டு. கண்டெலி அல்லது சிங்கம் இவைகளில் ஏதேனும் ஒன்றின் மீது இருப்பவராகவும் காட்சி அளிப்பார். இவருடைய துதிக்கை இடமாகவோ, வலமாகவோ திரும்பியிருக்கும். கைகள் 4, 6, 8, 10 அல்லது 12, 16 என்று பல மாதிரிகளில் இருக்கும். இவரைப் பல வடிவங்களில் உருவாக்கினாலும், பெரும்பாலும் பால கணபதி, வீர கணபதி என்ற வடிவங்களிலேயே இவர் காட்சி யளிக்கிறார்.

கணபதி வழிபாடு முதன் முதலில் நம் பாரத நாட்டிலே தோன்றி வேரூன்றிப் பின் கடல் கடந்து பல தேசங்களிலும் 4-ம் நூற்றாண்டு முதல் 10-ம் நூற்றாண்டு வரை பரவி மிக உன்னத நிலையை அடைந்தது. காலப் போக்கில், அயல் நாடுகளில் பல மாறுதல்கள் ஏற்பட அவற்றின் பயனாகக் கணபதி வழிபாடும் அங்கு மிகக் குறைந்துவிட்டது. ஆனாலும் பல அயல் நாடுகளில் விநாயகர் பௌத்த கடவுளாக வணங்கப்பட்டு வருகிறார்.

ஆராய்ச்சிக்காரர்கள் விநாயகப் பெருமானின் தொன்மையைப் பற்றித் தெளிவாக எதுவும் கூற முடியாமல் திகைக்கின்றனர். இவருடைய உடல் பூதகணங்களின் உடலைப் போலவும் தலை

1. வேலூர்க் கோவிலின் கல்யாண மண்டபத்தின் ஒரு தூணில் இருக்கும் கணபதி. 2. அதே கோவிலின் இன்னொரு தூணில் உள்ள பால வீர கணபதி. 3. நாகனாபுரம் வேதநாராயணப் பெருமான் கோபுர வாசலில் காணப்படும் கணபதி.

கணபதி

ஓர் விலங்கின் தலையைப் போல வும் இருப்பதால், இவர் ''திராவிடருடைய கடவுள்'' என்பர் சிலர். ருக் வேதத்தின் வழியாகத்தான் பிள்ளையாரை நன்கு புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர் பலர். விநாயகர் சிவபிரானுடைய பிள்ளையாதலால் பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டுள்ளாரென்றும் தம்மை வணங்காதவர்கள் ஆரம்பிக்கும் காரியங்களுக்குத் தடை விதிக்கும் சக்தியும், தம்மை வணங்குபவர்க்கு ஏற்படும் தடைகளை நீக்கும் சக்தியும் உடையவரென்றும் கூறி, இவர் கையில் காணப்படும் கொடிகழுக்கிலுகோடு அவரைத் தொடர்புபடுத்தி மழை, காற்று இவைகளை உண்டாக்கவும் தடுக்கவும் கூடிய தேவர்களான மருத் கணங்களின் தந்தையான ருத்திரன், கலைகளுக்கும் கணங்களுக்கும் அதிபரான பிருகஸ்பதி, வெள்ளையானையின் அதிபரான இந்திரன் ; — இவர்களுடைய அம்சமாகச் சொல்வதும் உண்டு. இப்படியாக, கணேசர் மேற்பட்ட தெய்வமாகி, கஜானனர் (யானைமுகத்தவர்), லம்போதரர் (பானை வயிறு படைத்தவர்), விநாயகர் (இறைவிலி), சித்திதாதா (வெற்றியைக் கொடுப்பவர்), ஏகதந்தர் (ஒற்றைக் கொம்பு உடையவர்), குகராஜா (குகையில் இருப்பவர்), ஹேரம்பர் விநாயகர் எனப் பல காரணப் பெயர்களைக் கொண்டு திகழ்ந்து வருகிறார்.

தமிழ் நாட்டில் இவர், சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் பொதுவான கடவுளாகவும் காணப்படுகிறார். வைணவக் கோயில்களில் பார்க்கப்புகின் செங்கோட்டருகிலுள்ள திருமழிசைப் பெருமான் கோயிலின் கர்ப்பக்கிருக வெளிச்சுவரில் வடகோட்டத்தில் இருப்பது போலவோ, நாகலாபுரம் வேதநாராயணர் கோயிலில் துவாரபாலகராக இருப்பது போலவோ, விநாயகர் காட்சி வழங்கலாம்.

★

இனி, இந்தியாவுக்கு வெளியே நடைபெற்று வரும் கணபதி வழிபாட்டைப் பற்றிக் கவனிப்போம்.

பர்மா : கீழ் பர்மாவில் ஹீனயான பௌத்த மதம் பரவி இருந்ததால், பாரதத்திலிருந்து சென்ற விநாயகருக்கு இங்கு அவ்வளவு நல்ல வரவேற்பு கிடைக்கவில்லை. ஆனால் மேல் பர்மாவில் அமோகமாக வரவேற்கப்பட்டார். மகாயான பௌத்த மதமாக இருந்த இந்த இடத்தில் கணேசரைப் பௌத்த கோயில்களினுள்ளே வைத்து மகாபின்னே என்ற பெயரால் பூசிக்க ஆரம்பித்தனர்.

சயாம் : இங்குள்ள பௌத்தர்கள் கணேசரை மிகவும் போற்றினார்கள். கோயில்களினுள்ளே அவருக்கு இருக்க இடம் அளிக்காவிடினும், கோயில்களின் பிராகாரத்தில் வைத்து வழிபட்டனர்.

சம்பா, கம்போடியா : கி.பி. 4-12-ம் நூற்றாண்டு வரையில் சைவ மதம் மிக உன்னத நிலையில் தழைத் திருந்த இந்த நாடுகளில் கணேசர் வழிபாட்டுக்குக் குறைவு ஏது? கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து கணேசரின் திருவுருவங்கள் அகப்படுகின்றன. இந்தோ சீனாவில் அகப்படும் கல்வெட்டுக்கள், கணேசரைப் பல கடவுளர்களுடன் இருக்கும் போது ''கணேசர்'' என்றும், லிங்க ரூபத்திலுள்ள பரமசிவனுடன் காணப்படும்போது ''திருவிநாயகர்'' என்றும் குறிக்கின்றன. ஒன்பதாம் நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்று ''சந்தனகிரி கணேசர்'' என ஒரு கணபதியைக் குறிக்கிறது. இந்தக் கல்வெட்டு மிகவும் முக்கியமானது. இதனால் கணேசர் தனிப்பட்ட கடவுளாகக் கருதப்பட்டார் என்றும், நம் நாட்டில் ''மலைக்கோட்டைக் கணபதி'' என்பது போல, இங்கும் வழக்கம் இருந்தது என்றும் அறியலாம். இந்த வழக்கம் ஜப்பானுக்குக் கூடப் பிற்காலத்தில் சென்றது.

ஜாவா, பாலி, போர்னியோ : ஜாவாவில் இந்துக்கள் நான்காம் நூற்றாண்டிலேயே மிக்க சிறப்புடன் இருந்து வந்த தாகச் சீனாவிலிருந்து இந்தியாவுக்கு வருகையில் அங்கு தங்கி வந்த பா-கியன் என்னும் பௌத்த யாத்திரிகர் எழுதியுள்ளார். பிரயாணிகளினால் கணேசர் ''விக்னேச்வர''ராகக் கருதப்பட்டார். ஆறுகளைக் கடக்கும் இடங்கள், செங்குத்தான மலைச்சாரல்கள் போன்ற அபாயகரமான இடங்களில் கணேசருடைய உருவங்கள் அகப்படுகின்றன. மண்டை ஓடுகளினால் ஆக்கப்பட்ட ஆபரணங்களை விநாயகருக்கு அணிகலன்களாக அணியும் வழக்கத்தை இந்த நாட்டில் தான் காணலாம்.

பாலித் தீவில் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பே, பிரமனையும், இந்து மூர்த்திகளான சிவன், துர்க்கை, விஷ்ணு, சூரியன், கணேசர் இவர்களையும் வழிபட்டு வந்தனர். 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் பாலியில் சைவ மதமே மிகவும் பிரபலமாக இருந்தது. சிவனுடன், துர்க்கை, கணேசர், நந்தி என்ற மூவரும் கூடிய சிற்பங்களே மிக அதிகமாக இந்தத் தீவில் அகப்படுகின்றன. இம்மாதிரி காட்டப்படும் போது, கணேசர் லிங்க உருவத்திலேயே அநேகமாகக் காணப்படுவதும் கவனிக்கத்தக்கது. மற்றப்படி இவர் குள்ளமாகவும், பருத்த உருவத்துடனும், மூன்று கண்களுடனும், கரந்த மகுடம் போன்ற தலை அணியுடனும், நின்ற திருக்கோலமாகவே வெகுவாகக்

4. திருவொற்றியூர் தனிஞமூர்த்தி மடத்திலுள்ள பஞ்சமுக விநாயகர். 5. தேபானத்திலுள்ள ஹேரம்ப விநாயகர். 6. நாகலாபுரத்திலுள்ள சக்தி விநாயகர்.









7 கம்போடியாவில் உள்ள கணபதி.



8 பல்லவ விநாயகர்.



9 சீனாவில் கிடைத்த கணேசர்.

காட்சி அளிக்கிறார். பாம்புகளை ஆபரணமாகவும் கொண்டிருக்கிறார். சீனாவில் இருப்பது போல், இவர் இங்கும் பல இடங்களில் துவாரபாலகராகவே வைக்கப்பட்டு இருப்பது போலத் தோன்றுகிறது. போர்னியோவில், மடித்த கால்களின் உள்ளங்கால்கள் ஒன்றையொன்று தொடும்படி உட்கார்ந்த மாதிரியில் காணப்படுகிறார். ஐந்தாம் நூற்றாண்டிலேயே சைவ மதம் இங்கு பரவி இருந்ததாகக் கல்வெட்டுக்களால் தெரிகின்றன.

சீனா, ஜப்பான்: சீனாவில் கி. பி. 531-ஆம் வருஷத்திய கல்வெட்டைக் கொண்ட யானைமுகக் கடவுளின் சிற்ப வடிவம் ஒன்றுள்ளது. ஆனால், ஜப்பானில் ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகே இவர் தெரிய வந்துள்ளார். இந்த இரண்டு தேசங்களிலும் இவர் சாதாரணமாக எங்கும் இருப்பது போல் இரண்டு கைகளுடன் காணப்படுகிறார். ஆனால், இரண்டு கணேசர்கள் நிற்கும் நிலையில் அமைக்கப்பட்டிருப்பின் அப்போது ஒருவர் மற்றொருவரைப் பார்ப்பது போலவும் காட்சி தருகிறார். இம்மாதிரியான இரு வடிவங்கள் சீனா, ஜப்பான் தவிர, வேறு எங்கும் கிடையாது. இந்தியாவிலிருந்து வந்த கணேசர் மதம் அல்லது கணேசர் வழிபாடு, நம்நாட்டில் இல்லாத மாதிரியான மந்திர, தந்திர வழிபாடுகளைக் கொண்டு மிகவும் பரவிற்று. இதனால், ''அவலோகித ஈச்வரபோதிசத்வர்'' மாதிரி, இவரும் இவ்விரண்டு நாடுகளிலும் எல்லோருக்கும் தெரிய வந்தார். நாளடைவில் போதிசத்வருடன் இவரையும் சேர்த்தனர்.

நேபாளம், சீனா, துருக்கிஸ்தான், திபேத்: நேபாளத்தில், பிரசித்தமான அசோக சக்கரவர்த்தியின் குமாரி, கணேசருக்கு ஓர் கோயில் எடுப்பித்ததாகக் கூறப்படுகிறது. பல ஆராய்ச்சிகளின் முடிவாக, 10, 11-ம் நூற்றாண்டுகளில் விநாயகர், இந்தியாவில் இருப்பது போல இந் நாட்டிலும் மிகப் பிரபலமாக ஆகிவிட்டார் எனலாம். விநாயகர் பௌத்த கடவுளாக, நர்த்தன கணபதியாக நேபாளத்திலும், திபேத்திலும் மிகவும் தெரிய வந்தார். சாதாரணமாக, பன்னிரண்டு கைகளுடனும், அவருடைய எலி வாகனத்தின் மீது நடனமாடுவது போலவும் காணப்பட்டார். நேபாளத்திலுள்ள ''ஹேரம்ப விநாயகர்'' வடிவங்களைத் தவிர, மற்றவைகளை ஒரு யானைத் தலையுடனும், நான்கு முதல் பதினாறு கைகளுடனும், மூன்று கண்களுடனும், உட்கார்ந்தோ அல்லது நின்ற மாதிரியாகவோ காணப்படுகின்றன. இன்னும் யானை முகம் நீண்டும், மெலிந்தும், தட்டையாகவும் செய்யப்பட்டன. ஐந்து தலைகளுடனும், பத்து கைகளுடனும், சக்தியைத் தழுவிய வண்ணமாக, சிங்கத்தின் மீது வீற்றிருக்கும் ஹேரம்ப விநாயகர் நேபாளத்தில் மிகப் பிரசித்தம். இன்னும் மகா காளரையும், விநாயகரையும், நேபாள தேசத்திலே வாயில் காப்போராக வைப்பதைக் காணலாம்.




10 ஜாவாவில் உள்ள விநாயகர் சிற்பம்.

வட இந்தியாவிலும், சீனாவிலும், துருக்கிஸ்தானிலும், கணேசர் துவாரபாலகராகக் காட்டப்படவில்லை. மகாயான பௌத்தக் கோயில்களுள்ள வட ஆசியா பாகத்தில் மிகவும் வணங்கப்பட்டார்.

திபேத்திலோ, நேபாளத்தைப் போல அவ்வளவு நல்ல இடம் இவருக்குக் கிடைக்கவில்லை. மகாயான பௌத்த கடவுளர் வரிசையில் இவர் சேர்க்கப்படவில்லை. பல விநாயக வடிவங்கள் அகப்படும் மேற்கு திபேத்திலும், இவர் துஷ்ட தேவதைகளை அடக்கிக் காப்பாற்றுகிறவராகக் கருதப்பட்டு, வீட்டு வாசற்படிகளுக்கு மேல் வைக்கப்பட்டார்.

தென் அமெரிக்கா: பண்டைக் காலத்திலே, கிறிஸ்து பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்பே, இந்தியர்கள் மிக உன்னத நிலையை அடைந்து, உலகிலேயே புகழ் பெற்றிருந்தனர். தம் கப்பல்களைக் கொண்டு, பெரிய கடல்களைத் தாண்டி, உலகத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் வாணிப, கலாசாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர். இப்படியாக, இந்து நாகரிகம் தென் அமெரிக்காவையும் அடைந்தது. மயர் என்ற தென் அமெரிக்கர்களின் உலகப் புகழ் பெற்ற அற்புத நாகரிகம் பலவகைகளில் இந்திய நாகரிகத்தை ஒத்திருக்கிறது. மெக்ஸிகோ அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் மெக்ஸிகோவின் சரித்திரம் என்ற நூலில் இம் மக்கள் இந்தியாவிலிருந்து குடியேறினவராகச் சொல்லப்பட்டுள்ளதாம். இந் நாட்டில் உள்ள கோயில்களில் நம் ஆலயங்களில் காணப்படுவதைப் போல் பிராகாரங்கள், யாளி முகச் செதுக்கு வேலை, பூதங்கள், தம் தலைகளில் தாங்கும் அஸ்திவாரம், ஆயிரக்கால் மண்டபங்கள், கோபுரம் முதலியன காணப்படுகின்றன. நம்நாட்டுத் தெய்வங்களுள் பல இங்கே காணப்படுகின்றன. முக்கியமாக, இந்திர - கணேசரும் காணப்படுகிறார்.


SEE
PLACES
OF
HISTORIC
INTEREST
MOUNT ABU
SOMNATH
JAIPUR
AJMER
UDAIPUR
DWARKA
உங்கள் விடுமுறை நாட்களை அதிகச் செலவின்றி மிகச் சிக்கனமாகக் கழிக்கவும் இந்தியாவின் பண்டைய காலத்துப் பெருமைக்கும் மகத்துவத்துக்கும் அழியாத ஞாபகச் சின்னங்களாக விளங்கும் எல்லா முக்கியமான இடங்களுக்கும் விஜயம் செய்யவும் இப்போது அமுலுக்குக் கொண்டு வந்துள்ள சுற்றுப்பிரயாணக் கட்டணச் சலுகைகள் உங்களுக்கு உதவியாயிருக்கும்.
AGRA
FATEHPURSIKRI
DELHI
UJJAIN
DAKOR
CHITORGARH
Western Railway



டிப்போக்கள் : மாயவரம் • கும்பகோணம் • திண்டுக்கல் • மதுரை • திருநெல்வேலி




முத்தழகு நாச்சியாரின் கருநெடுங் கண்கள் நீரைச் சொரிந்தன. இருட்டி வெகுநேரம் ஆகிவிட்டது. பொழுது போகாத தெரு நாய்களின் குரைப்பும், மரங்கள் ஆடும் ஓசையும், வெற்றிலைக் கொடிக்கால்களிலிருந்து கிளம்பிய சில்வண்டுகளின் ஒலியும் தவிர ஊர்அரவம் அடங்கிவிட்டது.

அவள் அந்தச் சின்னஞ் சிறு குடிசையின் வாசலில் தன்னந்தனியே கன்னத்தில் பதித்த கையோடு, வழி மேல் விழி வைத்து நின்று கொண்டிருந்தாள். வீண் நப்பாசை கொண்ட மனத்தைப் போல் எரியலாமா, வேண்டாமா - என்ற நிலையில் குடிசையுள் ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தங்கத்தில் சிலைசெய்து தாமரையை முகமாக்கினாற் போன்ற அவள் கன்னங்களில் கண்ணீர் அருவி ஒழுகிக் கொண்டிருந்தது.

"காலையில் ஒரு வாய் பழைய சோறு சாப்பிட்டு விட்டுப் போனவர் இன்னும் வரவில்லை. எங்கேயோ பாகனேரியிலோ, சிறுமங்கலத்திலோ ஒரு செல்வச் சீமானைப் பார்த்து உதவி பெற்று வருகிறேனென்று போனார். ஹும்!...ஏட்டையும் எழுத்தாணியையும் பாட்டையும் மதிக்கத் தெரியாத உலகத்தில் இவர் அவைகளை நம்பிப் பிழைத்து விடலாமென்று எண்ணுகிறாரே"— குங்குமக் குடம் போன்ற நெஞ்சு நிமிர ஒரு பெருமூச்சு விட்டாள் முத்தழகு நாச்சியார்.

* * *

முத்தழகு நாச்சியாருக்கும், தலைமலை கண்ட தேவருக்கும் திருமணம் நிகழ்ந்து சில மாதங்களே ஆகியிருந்தன. தலைமலை கண்ட தேவருக்கு அவளைக் கொடுப்பதை அவள் தமையன்மார்கள் சிறிதும் விரும்பவில்லை. ஏழெட்டுத் தமையன்மார்களோடு ஒரே பெண்ணாகப் பிறந்தவள் அவள். பிறந்த குடும்பம் அவ்வளவாக வசதியில்லாதது. 'தமையன்மார்கள் எப்படி வாழ்வைக் கழிக்கிறார்கள்?' என்பதை வெளியில் சொல்லிக் கொள்ள வெட்கப்பட வேண்டும். திருடுவது, கன்னமிடுவது, கொள்ளையடிப்பது,— இவை போன்ற கள்ளர் மரபுத் தொழில்கள் சர்வ சாதாரணமாக அவர்கள் அன்றாட வாழ்வின் முயற்சிகளாகி யிருந்தன. ஆகவே எப்படியாவது கணவன் என்ற நிலையில் யோக்கியமான ஒரு ஆண் மகனிடம் தன்னை ஒப்பித்துக் கொண்டு தமையன்மார்களிடமிருந்து வெளியேறிச் சென்றால் போதுமென்று ஆகிவிட்டது அவளுக்கு. அவர்களுடைய குடும்ப உறவுச் சுற்றத்துள் அவளை மணந்துகொள்ள வேண்டிய முறை மாப்பிள்ளையாக இருந்தவர் தலைமலை கண்ட தேவர். மறவர் குடிக்குள் கள்ளத் தொழிலைச் சிறு வயதிலேயே வெறுத்து ஒதுக்கியவர் தலைமலை. தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்துப் புலவராக வேண்டுமென்று



தலைமலை கண்ட தேவர்

அவருக்கு ஆசை. நாட்டரசன் கோட்டையிலிருந்த கவிராயர் ஒருவரிடம் பல வருடங்கள் பாடம் கேட்டுத் தமிழை முற்றக் கற்றறிந்த பின்பே அவர் ஊர் திரும்பினார்.

அவர் தமிழ் படித்த பெருமையைத் திருப்புவனம் ஊர் முழுதும் கொண்டாடியது. தனக்கு மாலையிட வேண்டியவருக்கு ஏற்பட்ட அந்தப் பெருமை முத்தழகியின் உள்ளத்தை மயங்கச் செய்தது. ஆனால் அவள் தமையன்மாரோ, "தமிழ் படித்துவிட்டால் வயிறு நிறைந்து விடுமா? பேசாமல் கன்னக்கோலையும், பட்டாக்கத்தியையும் ஏந்திப் பிழைப்பை நடத்துவதை விட்டு என்ன படிப்பு வேண்டியிருக்கிறது? கால் காசு பெறாத காவடிப் பயல்களையெல்லாம் 'காமதேனுவே! கற்பகதருவே!' என்று மானமில்லாமல் புகழ்ந்து கொண்டு திரிய வேண்டும். அப்படிப் புகழ்ந்தாலும் எச்சில் கையால் ஈ விரட்டாத வள்ளல்கள் என்ன தந்து விடுவார்கள்?" என்று தலைமலையை இகழ்ந்து பேசினர்.

"நீங்கள் சொறித் தவளைகள். உங்களால் சேற்றுக் குட்டையில்தான் வாழ முடியும். நான் அன்னம். என்போன்றவர்கள் தாமரைப் பொய்கைபோல் கண்ணியமான நிலையில்தான் வாழ விரும்புகிறோம்." என்று படித்துவிட்டு வந்த கர்வத்தோடு கடக்கட அவர்களுக்குப் பதில் சொன்னார் தலைமலை.

"அவ்வளவு திமிரா உனக்கு? போகப் போகத் தெரியும். வயிறு காய்ந்தால் தானே வழிக்கு வருகிறாய். எப்படியும் தொலைந்து போ" என்று கையை உதறி விட்டனர். அவர்கள் குடும்ப உறவும் அறுந்து விட்டது.

முத்தழகியின் திருமணத்துக்காக அவர்கள் வெளியில் மாப்பிள்ளை தேடியபோது, "நான் தலைமலை அத்தானைத்தான் கட்டிக் கொள்வேன். வேறு யாரையும் எனக்காகப் பார்க்க வேண்டாம். என் கைமாலை அவர் ஒருவர் கழுத்துக்குத் தான்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள் அவள்.

முடிவில் அவள் ஆசைதான் வென்றது. "எக்கேடு கெட்டு வேண்டுமானாலும் போ! அந்தத் திருவோடு தூக்கிப் பயலுக்குக் கழுத்தைக் காட்டியபின் இந்த வீட்டில் எட்டிப் பார்க்கக் கூடாது. உன்பாடு, அவன்பாடு, பட்டினி கிடந்து திண்டாடுங்கள்" என்று கூறி அவளுக்கும் தலைமலைக்கும் திருமணத்தை முடித்து வீட்டிலிருந்து துரத்தி விட்டனர் முரடர்களான அவள் தமையன்கள். தலைமலை கொஞ்ச நாட்கள் கவிதை, காவியம் என்று சீரழிந்து விட்டுத் தானாகத் தங்கள் காலடியில் வந்து விழுவான்" என்று எண்ணிக் கொண்டனர் அவர்கள்.

* * *

இரவும், தனிமையும் வளர்ந்து கொண்டே இருந்தன. உள்ளே அகல் விளக்கில் எண்ணெய் வற்றிப் போனதால் திரி தன்னைத்தானே எரித்துக் கொண்டிருந்தது, சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட ஆத்மத் தியாகி போல. ஊருணியில் தவளைகளும், மரங்களில் ஆந்தைகளும்

நா. பார்த்தசாரதி

இருள் மங்கைக்குத் தாலாட்டு பாடிக் கொண்டிருந்தன.

முத்தழகி இன்னும் நின்று கொண்டிருந்தாள். 'வருகிறாரா? வருகிறாரா?' என்று வழியைப் பார்த்துப் பார்த்து அவளுக்கு வழியின் இருளெல்லாம் கண்களுக்குள் புகுந்து விட்டது போலிருந்தது.

"யார் அது? அத்தானா?" அவள் வாயிலிருந்து மிகுந்த ஆவலோடு வெளிப்பட்டது இந்தக் கேள்வி.

"நான்தான் முத்தழகி! நீ இன்னுமா தூங்காமல் காத்துக் கொண்டிருக்கிறாய்? அடாடா . . . எனக்காக. . ." தலைமலை கண்ட தேவரின் குரல் பதில் கூறியது.

"அப்படியா சொல்வார்கள்? வெளியே போன மனிதர் ஒழுங்காக வரவேண்டிய நேரத்துக்கு வரவில்லை என்றால் மனம் கேட்க மாட்டேனென்கிறதே?"

அன்பு கொஞ்சும் அந்த இனிய குரலின் பிறப்பிடத்தை இருளில் கண்களால் பருகினார் தலைமலை கண்ட தேவர். அவர் படித்த, பாடிய தமிழ்க்கவிதையின் அழகெல்லாம் ஒருபெண் உடலாகச் செழித்து வளர்ந்து இருளில் அவர் முன் நிற்பது போல நின்றாள் முத்தழகி.

"முத்தழகி!"

"அத்தான்!"

"யார் யாரையோ, காசுக்காகப் பாடிக்கொண்டு அவர்கள் வீடு தேடிப் போகிறேனே? உன்னுடைய வனப்பு நிறைந்த தோற்றத்தைப் பார்த்துக் கொண்டே பசி, தாகம் எல்லாம் மறந்து ஊழிஊழியாகப் பாடலாம் போலிருக்கிறதே? தனக்குப் பயன்படாத கலையால் என்ன பயன்? நாளை முதல் ஒரு மனிதப் புழுவையும் நான் தேடிச் செல்லப் போவதில்லை. நான் தேடிப் பாட வேண்டிய மகாகாவியம் இதோ என் எதிரே என் குடிசையில் எனக்காக நின்று கொண்டிருக்கிறது."

"போதும்! பிதற்றுகிறீர்கள்.........', அவள் தலையைக் குனிந்துகொண்டாள். குரல் நாணத்திலும் ஒடுங்கி ஒலித்தது.

"பிதற்றவில்லை! அறிவைத் தவிர வேறு எதுவும் இல்லாத என்னை நம்பி அண்ணன்மார்களையும் பகைத்துக் கொண்டு கழுத்தை நீட்டினாயே; நீ அதிகத் துணிச்சல்காரி."

"நீங்கள் மட்டும் என்னவாம்? 'கன்னக் கோலை நம்புவது கயமை; தமிழை நம்பி வாடினாலும் வாடலாம். திருடி வாழ என் கை கூசுகிறது' என்று துணிந்த துணிவு இலேசானதா?"


"ஊம்...! அப்படித் துணிந்த பாவத்தினால்தான் இப்போது உன் வயிற்றையும் சேர்த்துக் காய விடுகிறேன். இந்தக் குடிசையில் ஏடுகளும் எழுத்தாணியும் இருந்து பயன் என்ன? ஒரு மணி அரிசி இல்லை. இந்த ஏட்டுக்கும் எழுத்தாணிக்கும் பதிலாக ஒரே ஒரு கன்னக்கோலை நானும் நம்பியிருந்தால்...?"

"என்ன? நீங்கள் கூடவா இப்படிப் பேசுகிறீர்கள்? என் செவிகளையே நம்ப முடியவில்லையே?"

"வேறு எப்படிப் பேசுவது? இதோ பார்! இன்று காலையிலிருந்து நாலு ஊரில் குதிகால் தேய அலைந்தேன். கீழ்மங்கலத்துச் சீமான் நான் பாடிக் கொடுத்த பாட்டைப் பத்திரமாக வாங்கி வைத்துக் கொண்டார். 'சன்மானம்' மட்டும் பின்னால் தருவாராம். பாகனேரி வள்ளல் நான் தெருவில் வருவதைப் பார்த்தவுடனே வாயிற்கதவை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார். நான் படித்த தமிழுக்குக் கொடுக்கும் மரியாதை இதுதான்."

"ஐயையோ! ஆனால் வெறுங்கையோடுதான் வந்திருக்கிறீர்களென்று சொல்லுங்கள்."

"பார்த்தாயா? உன் குரலே கருகி இறங்கி



விட்டது. வெறும் கையோடு வாழ்கிறவனை அவன் மனைவிகூட வரவேற்பதில்லையல்லவா?''

''நான் வெறுமனே கேட்டேன். நீங்கள் இப்படிக் குதர்க்கமாக எடுத்துக் கொள்வீர்களென்று தெரியாது.'' முத்தழகி விம்மி விட்டாள்.

''முத்தழகி! அழாதே. நீ ஏன் அழுகிறாய்? நான் அழவேண்டும். என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியதே பொல்லாத தமிழ்; அந்தத் தமிழ் எனக்காக அழவேண்டும். நீ அழாதே...'' ஏமாற்றத்தில் கொதித்த அவர் நெஞ்சிலிருந்து குமுறி வெளிவந்தன இச்சொற்கள். ஏடு எழுத்தாணி மூட்டையைக் குடிசையின் மூலையில் தூக்கி எறிந்துவிட்டு முத்தழகியைப் பார்த்து, ''விளக்கை அணைத்து விட்டு நீ படுத்துக் கொள்!'' என்றார்.

''நீங்கள்....?'' என்றாள் முத்தழகி.

மனம் மாறித் துணிந்து தவி ஆளாகத் திருடப் போயிருக்கிறான்'' என்பதை நம்ப மறுத்தது அவர்கள் மனம்.

''ஐயோ, அண்ணா! நான் பொய்யா சொல்லுகிறேன்? 'கேட்டுத் தராததைக் கேட்காமல் கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு இப்போதுதான் ஓடிப் போனார் அவர். மேல்மங்கலத்துக்குப் போகிற சாலையில் நீங்கள் சென்றால் பாதி வழியிலேயே அவரைக் கண்டு பிடித்து விடலாம். உடனே ஓடுங்கள் அண்ணா! அவரைக் காப்பாற்றுங்கள்...'' முத்தழகி அவர்களுக்கு முன் அலறினாள்.

''அது சரி! காப்பாற்றுவதற்கு இதில் என்ன இருக்கிறது? இன்றைக்காவது 'திருடினால்தான் பிழைக்க முடியும்'— என்று அவனுக்குப் புத்தி வந்ததே. அந்த மட்டில் சந்தோஷம்.''



''நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருகிறேன்'' —அவர் குரலில் எதையோ உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டிருப்பது போன்ற அழுத்தம் நிறைந்திருந்தது.

''இந்த நட்ட நடுநிசியில் எங்கே போகப் போகிறீர்கள்?''

''எங்கே போனால் என்ன? பகலில் கேட்டு அடைய முடியாததை இரவில் கேட்காமல் அடையத் தீர்மானித்துவிட்டேன்.'' —அவன் திடுக்கிட்டாள்.

''திருடப் போகிற அளவுக்கு மனம் எப்படி மாறியது? நான் உங்களைப் போக விடமாட்டேன்''

''தமிழைப் படித்த தலைமலை இறந்து விட்டான். இப்போது நீ காண்பது 'மனிதன்' தலைமலையைத்தான். விடு வழியை! மறிக்காதே...''

அவர் அவள் கையை விலக்கித் தள்ளி விட்டுத் திமிறிக் கொண்டு வெளியே ஓடினார். குடிசைக் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு வேகமாகத் தன் தமையன்மார்களின் வீட்டை நோக்கி ஓடினாள் முத்தழகி. நடந்ததைத் தன் சகோதரர்களிடம் கூறினாள்; அவர்களால் அதை நம்பி ஒப்புக் கொள்ள முடியவில்லை. ''திருட்டுத் தொழிலை மிகவும் ஈனச் செயலாக மதித்த தலைமலை

''அதற்கில்லை, அண்ணா! அனுபவமில்லாத அவர் எங்கேயாவது திருடுகிறேன் பேர்வழி என்று, அசட்டுத்தனமாக தெரியாமல் ஏதேனும் செய்து மாட்டிக் கொள்ளப் போகிறார்...''

''உனக்குக் கவலை வேண்டாம். இன்றிலிருந்து உன்னையும் உன் கணவனையும் பிடித்திருந்த வறுமைப் பீடை தொலைந்து விட்டது'' என்று கூறி அவளை வீட்டுக்குத் திருப்பி அனுப்பினர் தமையன்மார்கள்.

அவள் சென்ற பின் அவர்கள் மேல்மங்கலம் சாலையை நோக்கி விரைந்தனர். வேகமாகச் சென்று கொண்டிருந்த தலைமலையைப் பாதி தூரத்திலேயே தடுத்து நிறுத்தித் தங்களோடு அழைத்துச் சென்றனர் அவருடைய மைத்துனர்கள். அவருடைய நெஞ்சகம் பழைய பகை, மனஸ்தாபம் யாவற்றையும் மறந்து அவர்களுடன் சேர இணங்கி விட்டது.

பின்பு எல்லோருமாக ஓரிடத்தில் உட்கார்ந்து அன்றிரவு திருப்புவணத்து அரண்மனைக்குத் திருடப் போவதென்று முடிவு செய்தனர். ''தலைமலை! உனக்குத் தொழில் பழக வேண்டும். அதற்காக இன்று கன்னம் வைத்து உள்ளே நுழையும் பொறுப்பை முதல் முதலாக உன்னிடம் தருகிறேன்'' என்று அவருடைய மூத்த மைத்துனன் கூறினான்.

கால் நாழிகையில் பரம்பரைத் திருடன் தோற்றுப் போவான் என்று சொல்லும் படி அவ்வளவு அருமையாகக் கன்னம் போட்டுத் துவாரத்தை உண்டாக்கினார். கன்னத் துவாரத்தின் வழியே புகுந்து ஒவ்வொரு பகுதியாக நோட்டம் பார்த்தார்.

கடையில் விளக்கு எரிந்து கொண்டிருந்த அழகிய விசாலமான அறை ஒன்றில் துணிந்து நுழைந்தார். பூனை போல் அடிமேல் அடிவைத்து நடந்து பருத்த தூண் ஒன்றின் மறைவில் நின்று சுற்றிலும் பார்த்தார். கண்களுக்கு விருந்து போன்ற காட்சிகள்.

அது அரசனின் படுக்கை யறை. அறை நடுவே யானைத் தந்தத்தில் செய்யப்பட்டுப் பஞ்சணை பரப்பிய கட்டில்கள் இரண்டு இருந்தன. சுற்றிலும் மல்லிகைமலர் தெறித்திருந்தது. ஒரு கட்டிலில் அரசி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். இன்னொரு கட்டிலில் அரசன் உட்கார்ந்து விளக்கொளியில் ஒரு ஓலையில் ஏதோ எழுதுவதும் அடிப்பதுமாக இருந்தான். இடையிடையே அவன் வாய் ஏதோ சில சொற்களை முணுமுணுத்தது.

''விளக்கை அணைத்து விட்டு அரசனும் படுத்துக் கொண்டு உறங்குகிறவரை நாம் இப்படியே தூண் மறைவில் நிற்க வேண்டியதுதான். அரசன் தூங்கின பின் நம் வேலையை ஆரம்பிக்கலாம்''— என்று எண்ணிக் கொண்டார் தலைமலை கண்ட தேவர்.

இப்படி அவர் நினைத்துத் தூண் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த அரசன், கையிலிருந்த ஏட்டை நோக்கி,

''தலையில் இரக்துண்டான்
தண்டடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்ந்தான் —
உலையில்
....
....''

என்று தன்னால் எழுத முடிந்த இரண்டு வரிகளைக் கனிரென்று பாடினான். திரும்பத் திரும்ப அந்த இரண்டு வரிகளையே பாடிக் கொண்டிருந்தான். மூன்றாவது வரியும் நாலாவது வரியும் பூர்த்தியாகவில்லை. பாட்டு மொட்டையாக நின்றது.

தூண்மறைவில் கன்னக்கோலும் கையுமாக நின்று கொண்டிருந்த தலைமலை கண்ட தேவருக்கு நாக்கு துடித்தது. பாடிப் பாடித் தழும்பேறிப் போயிருந்த அவர் நாவை அடக்க முடியவில்லை. 'தாம் எங்கிருக்கிறோம், எந்நிலையிலிருக்கிறோம், எதற்காக வந்திருக்கிறோம்; அகப்பட்டுக் கொண்டால் என்ன கதி அடைவோம்?'—சகலத்தையும் மறந்து விட்டார் அவர். மின்னல்போல் கவிதை உணர்வின் ஆவேசம் நெஞ்சிலே புகுந்த அந்தக் கணநேர அவகாசத்தில் மனத் தாழ்த்திலே புதைந்திருந்த வாக்குத் தேவதை நாக்கு வழியே எட்டிப் பார்த்தாள். அவ்வளவுதான்; அவர் தம்மை மறந்தார். காம்பீர்யமும் இனிமையும் நிறைந்த தம் குரலினால் அரசன் பாடிய அரைகுறைப் பாடலின் மற்ற இரு வரிகளைத் தூண் மறைவிலிருந்தபடியே பாடத் தொடங்கி விட்டார்:

இருப்பு வண மேனியனார்
என்றுலோ ஆமாம்
திருப் புவணத் தீசர் திறம்''

அமுதம் பொழிவது போல் ஒலித்த இப் பரவசக் குரலைக் கேட்டு மஞ்சத்தில் அமர்ந்திருந்த அரசனுக்கு மெய் சிலிர்த்



எமது தீபாவளி வாழ்த்துக்கள்
அங்குவிலாஸ்
வாசனைப் புகையிலை
அங்குவிலாஸ் M.V. முத்தையா பிள்ளை (FIRM)
1957
தாம்பூலஅரசன்
M.V.முத்தையா பிள்ளை
ரிஜிஸ்டர் நம்பர்கள்
12700
149348
ESTD.1925.
திண்டுக்கல்
தந்தி: "அங்குவிலாஸ்" போன்நிர்.71

தது. அசரீரிபோல் ஒலித்த அந்த மணியான குரலைச் செவியுற்ற மறுகணமே மேல் உத்தரீயத்தை அரையில் கட்டிக் கொண்டு பயபக்தியுடனே மஞ்சத்திலிருந்து கீழே இறங்கிக் கைகூப்பி நின்றான் அவன்.

குரலா அது? உத்வேகம் நிறைந்த கவி ஒருவன் தன் ஆத்மாவின் உருக்கமான மொழியில் தெய்வத்தைக் கூவி அழைப்பது போலிருந்தது. பாட்டு ஒலித்து ஓய்ந்து வெகு நேரமான பின்பும் அரசன் மூடிய கண்களைத் திறக்கவில்லை. கூப்பிய கரங்களை எடுக்கவில்லை.

குரல் கேட்டுத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த அரசி தூண் மறைவில் நின்று கொண்டிருந்த உருவத்தைப் பார்த்துத் திகைத்து விட்டாள்.

"ஐயோ! திருடன்....திருடன்..."

அரசியின் கூக்குரலைக் கேட்டு வெளியே நின்று கொண்டிருந்த காவலர்கள் உள்ளே பாய்ந்து ஓடி வந்தனர். தலைமலைத் தேவர் அவர்கள் கையில் பிடிபட்டு விட்டார். 'நண்டும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழியின் பொருள் அவர் விஷயத்தில் மெய்யாகி விட்டது. அவர் இதய அந்தரங்கத்தில் எந்த ஒரு மகோன்னதமான கலைச் சக்தி மறைந்திருந்ததோ, அது சந்தர்ப்பம் தெரியாமல் வெளிப்பட்டு அவரையே காட்டிக் கொடுத்து விட்டது.

பாடலைக் கேட்ட தெய்விகப் பரவசம் நீங்கி அரசன் கண்களைத் திறந்தபோது காவலர்கள் தலைமலைகண்ட தேவரைக் கொண்டு வந்து அவன் முன் நிறுத்தினர். 'நேற்றுவரை ஒரு பிடி சோற்றுக்குக் கூடப் பயன்படாத தம் கவிதா சக்தி இன்று கேடோர் தொழிலால் பிழைக்க வந்த தம்மை வம்பில் பிடித்துத் தள்ளி விட்டதே?' என்று ஏங்கி அரசனுக்குமுன் குனிந்த தலை நிமிராமல் நின்றார் அவர்.

"யார் இவர்?"

அரசனிடமிருந்து கேள்வி பிறந்தது.

"திருடன், அரசே! இதோ இந்தத் தூண் மறைவில் ஒளிந்திருந்தான். அரசியார் பார்த்து விட்டுக் கூச்சல் போட்டார். நாங்கள் ஓடிவந்து பிடித்தோம்."

அரசனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. "யார் நீர்? எதற்காக இந்த நேரத்தில் இங்கு வந்தீர்?" நேரடியாகக் கேட்டார்.

"திருடுவதற்காகத் தான் வந்தேன். அடங்காப்பிடாரியான என் நாவினால் அகப்பட்டுக் கொண்டேன்."

இந்தப் பதிலைக் கேட்டதும் அரசனின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"பாடியது நீர்தானா?" என்று அப்படியே முன்னால் பாய்ந்து தலைமலை கண்ட தேவரை மார்புறக் கட்டித் தழுவிக் கொண்டான். அவனுடைய அன்புப் பிடியில் திக்கித் திணறினார் அவர். "நான்தான் பாடினேன், அரசே! ஆனால் பாடுவதற்காக வரவில்லை. திருடுவதற்காகத்தான் வந்தேன்."

"அதுதான் திருடிவிட்டீரே என்னுடைய உள்ளத்தை; இன்னும் என்ன இருக்கிறது திருட?"

"அரசே! நான் தண்டிக்கப்பட வேண்டியவன்."

"ஆம்! உம்மைத் தண்டிக்கத்தான் போகிறேன். தமிழைப் படித்த நீர் கன்னம் வைத்துத் திருட வந்தீர். பிறவிக் கவிஞரான உமது கை ஏந்த வேண்டிய பொருள் இந்தக் கன்னக்கோல் அல்ல. இனி என்றென்றும் இந்தக் கை எழுத்தாணியைத் தவிர வேறு எதையும் ஏந்த முடியாதபடி தண்டிக்கப் போகிறேன்."

"நான் பாக்கியசாலிதான், அரசே!"

"ஆமாம்! நான் ஆறு நாழிகைப் பொழுது தவித்தேன், அந்தப் பன்னிரண்டு வரிகளை நிரப்பமுடியாமல். நீங்கள் எப்படி ஐயா கண்ணிமைக்கும் நேரத்தில் அதைக் கற்பனை செய்து பாடினீர்?"

"எப்படி என்று நான் எவ்வாறு சொல்ல முடியும்? ஏதோ ஒரு வேகம், 'நீ பாடு! உன்னால் முடியும்' என்று என் நாவைத் தூண்டியது. பாடினேன். இப்போது நினைத்தால் நான்தானா அப்படிப் பாடினேனென்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது!"

"எல்லாக் கலைகளுமே இப்படித்தான். தன் நினைப்பற்ற ஒரு முனைப்பில் ஆத்மாவின் அடித்தளத்திலிருந்து பொங்கிப் பெருக வேண்டும். அவ்வாறு பெருகுவது தான் உண்மைக் கலை."

"அரசே! ஆண்டவன் உங்கள் உள்ளத்தை ரசிகத்தன்மை நிறைந்ததாகப் படைத்திருக்கிறான். எதையும் உணர்ந்து பேசுகிறீர்கள்!"

தலைமலை கண்ட தேவர் நன்றிதொனிக்கும் குரலில் அரசனிடம் கூறினார்.

"இன்னுமா அந்தக் கன்னக்கோலைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்? தூர எறிந்து விட்டு வாரும் இப்படி."

அரசன் அவர் கையிலிருந்த கோலைப் பிடுங்கி எறிந்து விட்டுத் தழுவினாற் போல அழைத்துச் சென்று தன் அருகே மஞ்சத்தில் அமர்த்திக் கொண்டான். தன் கையில் அணிந்திருந்த விலை மதிப்பற்ற வைர மோதிரங்களை ஒவ்வொன்றாகக் கழற்றிச் சற்று முன் கன்னக்கோலைப் பிடித்திருந்த அந்தக் கைவிரல்களில் அணிவித்தான்.

"அரசே!...நான்..." நன்றிப் பெருக்கினால் மேலே பேச மாட்டாமல் குரல் தழுதழுத்தது தலைமலைகண்டதேவருக்கு.

"யாரங்கே? இவரைப் பல்லக்கில் ஏற்றி மேளதாளத்தோடு வீட்டில் கொண்டு போய் விட்டு வாருங்கள்." அரசன் பெருமிதத்தோடு உத்தரவிட்டான். தலைமலை கண்ட தேவர் கண்ணில் நீர்மல்க அவனைக் கைகூப்பி வணங்கி விடைபெற்றார்.

உள்ளே கன்னத் துவாரத்தில் நுழைந்து சென்ற தலைமலைகண்ட தேவர் நீண்ட நேரமாக வெளிவராமற் போகவே சுவரருகே பதுங்கிக் கொண்டிருந்த மைத்துனன்மார்கள் பயந்து ஓடி விட்டனர்.

நடுச்சாமத்துக்குமேல் கொட்டுமேளத்துடன் பல்லக்கு ஊர்வலம் வருவதைக் கண்டு ஊரே வியந்தது. தூக்கக் கிறக்கத்திலிருந்த முத்தழகு நாச்சியார் மேளச்சத்தம் கேட்டு எழுந்து குடிசை வாசலுக்கு வந்தாள்.

கை விரல்களில் வைரமோதிரம் ஒளிரப் பல்லக்கிலிருந்து சிரித்த முகத்தோடு இறங்கினார் தலைமலைகண்ட தேவர். ஒரு பெரிய தாம்பாளம் நிறையப் பட்டுத் துணியால் மூடப்பட்ட பரிசுப் பொருள்களைக் குடிசைக்குள் கொண்டு வந்து வைத்தான் ஒரு காவலன்.


"அத்தான்! இதெல்லாம் என்ன? நான் கனவு காண வில்லையே?"

முத்தழகி அவரை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"முத்தழகி! எந்தத் தமிழையும் கவிதையையும் வெறுத்து விட்டுத் திருடக் கிளம்பினேனோ, அந்தத் தமிழ் அளித்த கௌரவங்கள் இவை..." என்று பதில் கூறினார் தலைமலைகண்ட தேவர். அவர் பதிலில் பெருமிதம் தொனித்தது!



பிர்லா மந்திர்



சுந்தர்

மந்திர் இது மந்திர் இது
மந்திரத்தால் தோன்றியதோ!

புது தில்லியிலே உள்ள பிர்லா மந்திரை, முதல் தடவையாய்ப் பார்ப்பவர் "ஜாலக் கோலே வீசி ஒரு மந்திரவாதி படைத்த கோயிலோ இது!" என்று வியக்கக் கூடும். இதன் செங்காவிக் கோபுரங்கள், கும்பங்கள், அடுக்கு மாடங்கள், அலங்கார தோரணங்கள், பளிங்குப் படிக்கட்டுகள், வர்ணக் கோலங்கள், வளைவுகள் நெளிவுகள், கோணங்கள் முதலியவற்றை, முதல் கண் வீச்சில் ஒருங்கே காணும்போது, இப்படித்தான் வியக்கத் தோன்றும். ஆனால் இது, மந்திரத்தாலோ மாய ஜாலத்தாலோ உண்டானது அல்ல. வள்ளல் ஒருவர் வழங்கிய பணத்தினாலும், நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் உழைப்பினாலும், கலைஞர்களின் கைத்திறமையினாலும் உருவான கோயிலே இது.

கோயில் இது கோயில் இது
கோல மிகும் கோயில் இது:

பழுப்புக் கல் படிகளை மிதிக்க மனமின்றி மிதித்தேறி, வர்ணக் கற்கள் பதித்த முகப்புக் கூடத்தைக் கடக்க மனமின்றிக் கடந்து, மூர்த்திகளின் கொலு மண்டபத்தை அடைகிறோம். அடைந்ததும், கடவுளின் வடிவங்களுக்கும் கலையின் வண்ணங்களுக்கும் இடையே அகப்பட்டுக் கொண்டு திகைக்கிறோம்; திணறுகிறோம்!

நாராயணரும் லக்ஷ்மியும், பிரதான மூர்த்திகளாய், நடுவிலே நின்று காட்சி அளிக்கிறார்கள். அவர்களுக்கு இடது பக்கத்தில், ஆதிசிவன் அமர்ந்திருக்கிறார்; வலது பக்கத்தில், வரிப் புலிமீது துர்க்காதேவி வீற்றிருக்கிறார்.

இந்தக் கொலு மண்டபத்தின் பளிங்குச் சுவர்களிலும் தூண்களிலும், மாடிக் கட்டுகளிலும், ராஜஸ்தான் சிற்பிகளும் ஓவியர்களும் படைத்திருக்கும் வடிவங்களும், சித்திரங்களும், நம்மைத் தட்டாமாலை சுற்ற வைக்கின்றன. கல்லிலே பூத்த தாமரைகளும், அல்லிகளும், பெயரில்லா மலர்கள் பலவும், கலை மணத்தை அள்ளி வீசி, நம் மனத்தைக் குழப்புகின்றன. இந்தக் குழப்பத்தினால், பளிங்கு மயில்கள் ஆடுவதையும், பளிங்கு அன்னங்கள் நீந்துவதையும் பார்க்கிறோம். வெள்ளை மான்களும் வர்ண மான்களும் துள்ளி ஓடுகின்றன. நீலப் பாம்புகள் நெளிந்து ஓடுகின்றன; நந்திகள் அசைந்து அசைந்து நடை போடுகின்றன.

டிமரென்று மணியோசை கேட்கிறது. ஒலிப்பது வெண்கல மணியா, சிற்பமணியா அல்லது சித்திரமணியா என்று தெரியாமல் திகைக்கிறோம்.

கடவுளிலே கலையையும், கலையிலே கடவுளையும் பொதிந்து காட்டும் இந்தக் கொலு மண்டபத்தை, ஐந்தே நிமிஷத்தில் பார்த்து முடித்து விடலாம்; அல்லது, ஐந்துமணி நேரம் பார்த்துக் கொண்டும் இருக்கலாம்.

சிறுவர்க்குக் களிப்பூட்டும்
சிங்காரக் கோயில் இது:


இந்தக் கோயிலை அடுத்துள்ள **இந்திரப்பிரஸ்த தர்ம** வனம் "குழந்தையும் கடவுளும் கொண்டாடும் இடத்திலே" என்ற பழமொழியை நினைவூட்டுகிறது. ஒளியும் நிழலும், நிலமும் நீரும், பாறைகளும் புல்வெளிகளும், இயற்கை அழகும் செயற்கை அழகும் கலந்து நிறைந்துள்ள இந்த வனம், குழந்தைகளுக்கு ஒரு கொண்டாட்ட வனமாகத் திகழ்கிறது.

சிறுவர் சிறுமியர் இடித்துப் புடைத்துக் கொண்டு சறுக்கு மரங்களில் ஏறி விளையாடுகிறார்கள்; ஊஞ்சல்களில் ஆடுகிறார்கள்; ராட்டினங்களில் சுற்றுகிறார்கள்.

ஒளிந்து பிடிக்கும் விளையாட்டுக்கு ஏற்றதாக, சில குகைகள் இங்கே இருக்கின்றன. இயற்கையாய் இங்கே உள்ள பெரிய பாறைகளைக் குடைந்து, இந்தக் குகைகளை அமைத்திருக்கிறார்கள்; இவற்றின் வாய்களை, வெவ்வேறு மிருகங்களின் வாய்கள் போல் தோன்றும் படி செதுக்கி வைத்திருக்கிறார்கள். ஒரு குகையின் வாய், பூதத்தின் வாயாக மாறி இருக்கிறது. சிங்கம், புலி, கரடி, பூதம் முதலியவற்றின் வாய்களுக்குள்ளே குழந்தைகள் ஓடி, உள்ளே இப்படியும் அப்படியும் வளைந்து செல்லும் பாதைகளில் ஒளிந்தும் தேடியும் ஆனந்தமாக விளையாடுகிறார்கள்.

ஓடியாடிக் களைத்துப் போகும் பாலர்களை, முதுகில் ஏற்றிக் கொள்ளத் தயாராக, யானையும், ஒட்டகமும், சிங்கமும் புலியும் கூட நிற்கின்றன. பெரியவர்களின் கண்களுக்குத்தான் இவை கல்லால் செய்த மிருகங்கள். குழந்தைகளுக்கோ இவை உயிருள்ள மிருகங்கள்!





தென்னாட்டுப் பாணியில் அமைந்துள்ள கோபுரம். முத்தலைப் பாம்பு. தோரணம்.



கீதாமந்திர் என்ற பஜனை மடத்தில் உள்ள கண்ணபிரான் சிலை.

விசித்திரமான இந்தப் பூங்காவின் மத்தியில், யமுனை அம்மன், வெண்சிலையாய் நிற்கிறாள். அவளுடைய அருட் கையின் கீழேயுள்ள குடம் ஒன்றிலிருந்து, தண்ணீர் பொங்கி வந்து, ஓடைகளில் உருண்டு ஓடுகிறது. இந்த ஓடைகளிலே, குழந்தைக் கண்களுக்கு மட்டுமே உயிருள்ளனதான—மீன்களும் ஆமைகளும் முதலைகளும் கிடக்கின்றன.

வட்டமான குளம் ஒன்றில், மூன்று தலைப் பாம்பு ஒன்று, மூன்று வாய்களிலிருந்தும் தண்ணீரைப் பொழிந்து கொண்டு நிற்கிறது. இதைக் கல்லிலே செதுக்கி இருக்கிறார்களா அல்லது சிமெண்டிலே செய்திருக்கிறார்களா என்று, பெரியவர்கள் தர்க்கம் செய்கிறார்கள். இந்தத் தர்க்கத்தைக் குழந்தைகள் காதில் வாங்கிக் கொள்ளாமல், வேறு எங்கெல்லாம், எத்தனை தலைப் பாம்புகள் இருக்கின்றன என்று மிகுந்த ஆர்வத்துடன் தேடிப் பார்க்கிறார்கள்.

உளத்தோடு உடலுக்கும்
வளம் ஊட்டும் கோயில் இது:

இந்த நந்தவனத்தின் ஓர் ஓரத்தில், "வியாயம் சாலா" ஒன்று. அதாவது, உடல் பயிற்சிக் கூடம் ஒன்று இருக்கிறது. காலை வேளையில், இங்கே இளைஞர்கள் கூடி, பஸ்கி, தண்டால், கரளத் முதலிய அப்பியாசங்களில் பாடு படுகிறார்கள். மாலை வேளையில் குஸ்தி போடுகிறார்கள்! சிலம்பம் வீசுகிறார்கள்; சடுகுடு ஆடுகிறார்கள்.



விநோதமான மிருகத்தின் தலை போன்று அமைந்துள்ள விசித்திரக் குகை வாசல்.

இந்தப் பயிற்சிக் கூடத்துக்கு அருகே நாடகசாலை ஒன்று இருக்கிறது. சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால், இந்த நாடகசாலையின் அரங்கில், ஐயப்பன் கொலுவிருந்தார். ஹரித்வாரில் ஐயப்பனைப் பிரதிஷ்டை செய்வதற்காக, அவருடைய விக்கிரகம் ஒன்றை, பக்தர்கள் கொண்டு வந்தார்கள். ஹரித்வாருக்குச் செல்லும் வழியில், தில்லியில் இந்த அரங்கிலே ஐயப்பனைக் காட்சிக்கு வைத்தார்கள். அப்போது, தென்னிந்தியர்கள் நிறைந்திருந்தார்கள். தமிழும், தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் கலந்து ஒலித்தன. நாயனப் பேரிசை நிறைந்து பரவியது. தென்னாட்டு மாதிரியில் இந்தப் பூங்காவில் அமைந்துள்ள கோபுரம், அப்போது நிலவிய தென்னிந்தியச் சூழ்நிலைக்கு ஒரு மகுடம்போல் இருந்தது.


இசைமாரி பொழிகின்ற இனியமணிக் கோயில் இது:

கோயிலின் வெவ்வேறு பகுதிகளில் நடக்கும்போதும், நந்தவனத்தில் இங்கும் அங்கும் சுற்றும் போதும், இசை அலைகள் வந்து மோதிய வண்ணம் இருக்கும். அங்கங்கே பொருத்தியுள்ள ஒலிபெருக்கிகள் மூலம் இந்த இசை அலைகள் வருவதை அறிகிறோம். எங்கிருந்து பாடுகிறார்கள் என்பதை விசாரித்தால், மாடியிலுள்ள கீதா மந்திருக்கு வழி காட்டுவார்கள். அந்த இசைக் கோயிலில், கண்ணபிரான் முன்னிலையில் காலை முதல் இரவு நெடுநேரம் வரை, வித்துவான்கள் முறை வைத்துக் கொண்டு தோத்திரப் பாடல்களைப் பாடுகிறார்கள்.

அன்னியர்க்கு நம் மதத்தை அறிவிக்கும் கோயில் இது:

"ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வருகிறவர்களை அழைத்து வந்து, இந்த ஆலயத்தைக் காட்டுவது, ஹிந்துக்களின் கடமையாகும்" என்று, ஆலய அதிகாரிகள் வெளியிட்டுள்ள புத்தகம் ஒன்றில் காண்கிறது. இதன்படியே, உள்ளூர்க்காரர்கள் வெளிநாட்டாரை இங்கே அழைத்து வருகிறார்கள்; யாரும் அழையாமல், தாமாகவும் பல அன்னியர்கள் இங்கே அடிக்கடி வந்து போகிறார்கள்.

அன்னியர்கள் புரிந்து கொள்வதற்கென்றே, ஹிந்து மதத்தின் ஆதார தத்துவங்களையும், கோட்பாடுகளையும், ஐதிகங்களையும், ஆங்காங்கே சுற்களில், ஆங்கிலத்தில் வரைந்து வைத்திருக்கிறார்கள். வேத வாக்கியங்களும், உபநிஷத் வாக்கியங்களும், கீதா சுலோகங்களும் பொன்னெழுத்துக்களில் மின்னுகின்றன.



மரச் சிற்பங்களுடன் வரவேற்கும் கல் யானைகள்.

ஹிந்து மன்னர்களின் சிலைகளும் வீரர்களின் உருவங்களும் பல இடங்களில் நிற்கின்றன. சரித்திர நிகழ்ச்சிகளும் வீர வரலாறுகளும், சித்திரங்களிலும் சித்திரவாக்கியங்களிலும் பதிந்திருக்கின்றன.

காந்திமகான் நல்வாழ்த்தைக்
கொண்ட திருக் கோயில் இது:

ஹரிஜன ஆலயப் பிரவேசச் சட்டம் அமுலாவதற்கு முன்னுலேயே, பிர்லா மந்திரில், ஹரிஜனங்கள் தடையேதும் இன்றிப் பிரவேசித்துத் துதித்துக் களித்தார்கள். 1938-ஆம் ஆண்டில் இந்தக் கோயில் பூர்த்தி ஆயிற்று. அப்போது தலைவாசலில் பதித்த கல்லில், "ஹரிஜனங்கள்" உள்பட ஹிந்துக்கள் எல்லோரும், ஆரிய சமாஜிகள், பௌத்தர்கள், சீக்கியர், ஜைனர் முதலியோரும் இந்தக் கோயிலில் வழிபடலாம்" என்று வரைந்திருக்கிறது.

ஹரிஜனங்களை வரவேற்ற இந்த ஆலயத்தைக் கண்டு, காந்தி மகாத்மா எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்!



பயங்கரமாகத் தோற்றமளிக்கும் குகை வாசல்.

இந்தக் கோயிலுக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் புத்தர் கோயிலை, மகாத்மா காந்தி, 1939ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 18ஆம் தேதியன்று திறந்து வைத்தார். அந்தப் புண்ணிய நன்னாளில், மனித தெய்வமும் தெய்வ மனிதரும், நேருக்கு நேர் சந்தித்தார்கள்-அவர்களில் யார் எவர்?

நாட்டியவர் புகழ்தன்னைக்
காட்டிநிற்கும் கோயில் இது:

"லக்ஷ்மி நாராயண் மந்திர்" என்பதுதான் இந்தக் கோயிலுக்கு உரிய பெயர். ஆனாலும், இதைக் கட்டிய பிர்லாவின் பெயராலேயே இதை மக்கள் அன்புடன் குறிப்பிட்டு மகிழ்கிறார்கள்.

தொழிலியல் துறையிலும், வர்த்தகத் துறையிலும், இன்னும் பல துறைகளிலும் இப்போது பிரபலமாய் விளங்கும், கே. கே. பிர்லா, ஆர். டி. பிர்லா, ஜி. டி. பிர்லா, பி. எம். பிர்லா ஆகிய பிர்லா சகோதரர்களின் தகப்பனார், ராஜா பல்தேவ் தாஸ் பிர்லா இந்தக் கோயிலைக் கட்டினார்.

இவர், 1864-ஆம் ஆண்டில், ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில், பிலானி என்ற ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே, தொழில்களிலும் வர்த்தகத்திலும், தம் தகப்பனார் உதவியுடன் இவர் தேர்ச்சி அடைந்து, 1898-ஆம் ஆண்டில், 'பல்தேவ் தாஸ் ஜுகல் கிஷோர்' என்ற கம்பெனியை நிறுவி, தொழில்களையும் வர்த்தகத்தையும் பெருக்கிப் பெருகி, பெருஞ் செல்வம் ஈட்டினார். இருபத்திரண்டு வருஷங்களுக்குப் பிறகு, 1920ம் வருஷத்தில், தமது பொறுப்புக்கள், ஈடுபாடுகள் எல்லாவற்றையும், தமது குமாரர்களிடம் ஒப்படைத்து விட்டுக் காசி நகரில் வசிக்கலானார். ஹிந்து சமய நூல்களையும் இலக்கியங்களையும் அவர் தீவிரமாய் ஆராய்ந்து, பல புத்தகங்கள் எழுதினார். 1937ஆம் ஆண்டில், "டாக்டர் ஆப் லிட்ரேசர்" என்ற கௌரவ இலக்கியப் பட்டத்தை, காசி சர்வ கலாசாலை அவருக்கு வழங்கியது. இதற்கு முன்னால், 1925ம் ஆண்டில், ராஜா என்ற உயரிய பட்டத்தை, பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியது.

நம் தேசத்துப் பெரிய வள்ளல்களில் இவரும் ஒருவர். காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு, முப்பது லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார் இவர். பிர்லா சமிஸ்கிருத வித்தியாலயம், பிர்லா கல்விதான ஸ்தாபனம், பிர்லா தர்ம ஸ்தாபனம், ஹிந்துஸ்தான் தர்ம ஸ்தாபனம் முதலிய பல ஸ்தாபனங்களை இவர் நிறுவி, கோடி கோடியாய் அவற்றுக்கு நிதி வழங்கினார்.

பெரும் பொருள் ஈட்டி, பெரும் பொருள் ஈந்து, பெரு வாழ்வு வாழ்ந்த பிறகு, 1956ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று, 92 ஆவது வயதில் வள்ளல் பல்தேவ் தாஸ் பிர்லா மறைந்தார்.

மறைவதற்கு முன்னால், மங்கும் மனத் திரையிலே தோன்றியிருக்கக்கூடிய காட்சிகளில், அவர் ஆசையுடன் நிர்மாணித்த அற்புதமான லக்ஷ்மி நாராயண் மந்திரும் ஒன்றாக இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

1. புத்தர். 2. யமுனா அம்மன். 3. பிரதான மூர்த்திகள், நாராயணன்-லக்ஷ்மி. 4. துர்க்கை.









அவரைப் பாருங்கள்!

- ★ அவருக்குச் சளி மூண்டிருக்கிறது அல்லது தொண்டையில் கபம்
- ★ அவர் படுக்கையில் உட்காருகிறார் அல்லது ஜன்னலை நோக்கி ஓடுகிறார்
- ★ அவருக்கு மூச்சு அடைப்பதுபோலிருக்கிறது; மூச்சுவிட அவதிப்படுகிறார்
- ★ அவர் உள்ளிழுக்கும் மூச்சு குறுகியும் விரைவாயும் இருக்கிறது
- ★ அவர் வெளிவிடும் மூச்சு கடினமாகவும் நீண்டும் இருக்கிறது
- ★ இருமும்போது அவருக்கு வேர்க்கிறது, உதடுகள் வெளுத்திருக்கிறது
- ★ அவரது முகம் ஒரு சோகக் கதையைக் கூறுவதுபோல் இருக்கிறது

அதுதான் ஆஸ்த்மா

கவலையும் பச்சாத்தாபமும் தோய்ந்த கண்ணீருக்கும் அப்பாற்பட்ட உருவமாக அவர் காட்சி யளிக்கிறார்

நவரத்ன கல்பம்

உபயோகியுங்கள்

ஆனந்தமும் உற்சாகமும் உள்ளவராக அவரை மாற்றிவிடும்

வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம், பவழம், முத்து, கோமேதகம் வைடூரியம் ஆகிய ஒன்பது உயர்ந்த கற்களின் கலவையே நவரத்ன கல்பம்

பண்டிட் துர்காதத் வைத்யா
கவிராஜ் வைத்திய வாசஸ்பதி
அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது



★

இதர விவரங்களுக்கு எழுதவும்


NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (INDIA)

கொண்டது. கிழவன் தன் மனைவியோடு சரியான முறையில் குடும்பம் நடத்தியிருந்தால் இப்படி ஒரு பேரோடு வாழ்ந்திருப்பான்.

கிழவன் சிரித்தான். "பார்த்தாயா, முத்து! இப்படித்தான் ஆத்திரமாக அன்றைக்கும் எதையாவது சொல்லியிருப்பாள். அதனால்தான் ஜெயிலுக்கு வர வேண்டி ஏற்பட்டிருக்கிறது."

பழிக்குப்



"இருந்தாலும் உனக்கு இத்தனை ஆத்திரமாகாது. எப்படியும் உன்னை நாளைக்கு விடுதலை செய்யத்தான் போகிறார்கள். அதற்குள்ளே ஏன் இப்படிப் பறக்கிறாய்?"

"நீங்கள் இப்படித்தான் சொல்லுவீங்க. ஒரு குற்றமும் செய்யாமல் ஆறு வருஷங்கள் ஜெயிலில் இருந்திருந்தால் அப்போ தெரியும் உங்களுக்கு. என் மனசு வேகறது உங்களுக்கு இப்போ எப்படித் தெரியும்?"

"ஆமாம் முத்துசாமி, நீ சொல்வது மெய்தான். நான் குற்றம் செய்துவிட்டு ஜெயிலுக்கு வந்தவன்தான். உன்னைப் போல் வரவில்லை. அதனால் உன்னுடைய மனக் கொதிப்பு எனக்குத் தெரியாதுதான்" என்று அந்தக் கிழவன் கொஞ்சம் வருத்தமடைந்தவன் போல் பேசினான். அவன் தன் மனைவியைக் கொலை செய்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

முத்துசாமி கிழவனைக் குத்திக் காண்பிக்க நினைக்கவில்லை. தான் நிரபராதி என்பதை வற்புறுத்தவே எண்ணினான். இருப்பினும் எதிர்பாராதவிதமாக அவனுடைய வார்த்தைகள் கிழவன் உள்ளத்திலே சுருக்கென்று தைத்ததைக் கண்டு, "தாத்தா! நான் சொன்னது தப்பு. ஆனால் உங்களைக் குறிப்பிட்டு நான் பேச நினைக்கவில்லை" என்று தாழ்ந்த குரலில் சொன்னான். கிழவனிடத்திலே உண்மையாகவே அவனுக்கு மரியாதை ஏற்பட்டிருந்தது. சிறையிலே ஏற்பட்ட தொடர்பு என்றாலும் அது எப்படியோ வேரூன்றிக்

"இல்லை, தாத்தா! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. வேண்டுமென்று அந்த வேலுசாமிக் கவுண்டன் என்னை அந்த அடிதடி வழக்கில் சேர்த்து வைத்துவிட்டான். நான் ஒரு பாவமும் செய்யவில்லை."

"இதைத்தான் என்னிடத்திலே ஆயிரம் தடவைகள் சொல்லியிருக்கிறாயே?"

"அப்படியிருந்தும் உங்களுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை."

"அடடே! மறுபடியும் உனக்கு இந்தச் சந்தேகமா? நீ குற்றம் செய்திருக்க மாட்டாய் என்றுதான் நான் முழுக்க முழுக்க நம்புகிறேன். ஆனால் எப்படியோ தண்டனை அனுபவித்தாகி விட்டது. இப்போ வெளியிலே போகிற சமயத்திலே இப்படி ஆத்திரப்பட வேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். ஜெயிலுக்குள்ளே கூட நீ கொஞ்சம் நிதானமாக நடந்து கொண்டிருந்தால் ஆறு மாசத்துக்கு முன்னமேயே வெளியில்

போயிருக்கலாம். நல்ல நடத்தைக்காகத் தண்டனை குறைந்திருக்கும்.''

'' அப்படிக் குறைய வேண்டிய அவசியமில்லே, தாத்தா! என் குடும்பம் கெட்டதோ கெட்டது. ஆறு மாசம் முன்னாலே போயிருந்தால் அதைக் காப்பாத்த முடியவா போகுது ?''

'' சரி, முத்து ! நாளைக்கு வெளியிலே போய் என்ன செய்யப் போகிறாய் ?''

பழி

பெ. தூரன்

'' இருட்டோட இருட்டாக ஊருக்குப் போய்ச் சேர்ந்து முதவில் அந்த வேலாங்காட்டுக் கருப்பண்ணசாமியைப் பிடுங்கி உடைத்தெறியப் போகிறேன்.''

'' என்ன முத்து, பனைமரத்திலே தேள் கடிக்கத் தென்னை மரத்திலே நெறியேறுதே? கருப்பண்ணசாமி என்ன செய்தார்?''

'' அந்தச் சாமியை நான் அந்தக் காலத்திலே கும்பிடாத நாளில்லே. அதை நினைக்காத நேரமில்லே. அப்படி இருந்த எனக்கு இப்படி வந்ததே, அப்போ அதென்ன சாமி ?''

கிழவன் மறுபடியும் சிரித்தான்.

'' என்ன தாத்தா, உங்களுக்கு இதெல்லாம் சிரிப்பாக இருக்குதா ?''

அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். '' சரி யப்பா, சாமியை உடைப்பது ரொம்பச் சுலபம். சாமி உன்னைத் தடுக்கவா போகிறது? நீ கும்பிட்டாலும் சும்மா இருக்கும் ; கல்லேத் தூக்கிப் போட்டாலும் சும்மாத்தான் இருக்கும். அப்புறம் என்ன செய்யப் போகிறாய் ?''

முத்துசாமிக்குக் கிழவன் பேச்சு எரிச்சலை உண்டு பண்ணியது. '' அப்புறமா? அந்த வேலுசாமிக் கவுண்டனை நாளைக்கு ராத்திரியே பலி வாங்கி விட்டு உங்களைப் போலே இங்கே வரப் போகிறேன்.''

'' இந்தத் தீர்மானத்தை நீ மாற்றவே மாட்டாயா, முத்துசாமி?''

'' தாத்தா! நீங்கள் ஆயிரம் தடவைகள் என்னிடம் இதைப் பற்றிக் கேட்டாகி விட்டது. இந்தத் தீர்மானத்தை மாத்திரம் நான் மாற்றவே மாட்டேன்.''

இதைக் கேட்டுக் கிழவன் கவலையடைந்தான்.

'' முத்து ! நான் சொல்வதைக் கொஞ்சம் காதிலே வாங்கி யோசனை செய்து பார். நீதான் தீர்மானம் செய்து விட்டாய். அப்படியிருக்கும்போது எதற்கு அவசரம்? நிதானமாகச் சமயம் பார்த்துக் காரியம் செய்யப்படாதா? உன்னுடைய குடும்பத்தை நினைத்தாவது மறுபடியும் கேசிலே மாட்டிக் கொள்ளப்படாது. அது தான் என்னுடைய ஆசை.'' இப்



படிச் சொல்லும்போது கிழவனுக்கு முத்துசாமியிடத்தில் ஏற்பட்டிருந்த அன்பு வெளியாயிற்று.

"அதைப் பற்றிக் கவலையே வேண்டாம், தாத்தா! சிக்கிக் கொள்ளாமல் பழி வாங்க நான் திட்டம் போட்டிருக்கிறேன். ஆறு வருசமாக ஜெயிலில் எத்தனையோ பேரிடம் பழகி இதுகூடவா எனக்குத் தெரியாது?"

"முத்து! நான் என்னமோ கிழவன் சொல்லறதாக நினைக்காதே. நானும் உன்னைப் போல ஆத்திரப்பட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். என் வீட்டுக்காரி ஒருநாள் கொஞ்சம் கூடக்கூடப் பேசிவிட்டாள். அதைப் பொறுக்க முடியாமல் போனதுக்கு நான் அனுபவிக்கிறது உனக்குத் தெரியாதா? நான் சொல்றது அந்தக் கருப்பண்ணசாமி சொல்கிறதாகவே நினைத்துக்கொள், அப்பா!"



"கருப்பண்ணசாமியா? அந்தச் சாமியைப் பற்றி என்னிடம் பேச வேண்டாம், தாத்தா. அது வெறுங் கல்லு" என்றான் முத்துசாமி வருத்தத்துடன்.

கிழவன் தயங்கினான். முத்துசாமிக்கு மனசிலே படும்படி வேறு எப்படிச் சொல்லலாம் என்று யோசித்தான்.

"முத்து! சாமியைப் பற்றிக் கூட நினைக்க வேண்டாம். உன் பையனை நினைத்துப் பார். அவனுக்காகவாவது நீ மறுபடியும் ஜெயிலுக்கு வரப்படாது."

"பையனா? எனக்குத் தண்டனை கிடைத்தபோது அவனுக்கு ஆறு வயசு. இப்போ எப்படி இருக்கிறானோ? நான்தான் படிக்காத காட்டு முட்டாளாக இருந்தேன். அவனையாவது படிக்க வைக்கணு மென்று ஆசைப்பட்டேன். அதெல்லாம் போச்சு. என் குடும்பமே தொலைந்தது. அவன் இப்போ எப்படி இருக்கிறானோ? வயசான என் தகப்பனார் என்ன கஷ்டப்படுகிறாரோ? நான் ஒருத்தன் கூலி வேலை செய்து அத்தனை பேரும் வயிறு வளர்த்தார்கள்."

இப்படிக் கூறும்போதே முத்துசாமியின் கண்கள் இரத்தம் போலச் சிவந்தன. அவர்களோடு தன்னை வாழவிடாமல் ஜெயிலுக்கு ஓட்டிய வேலுசாமிக் கவுண்டரின் மேல் கோபம் பொங்கி யெழுந்தது.

முத்துசாமியை மறுநாள் விடுதலை செய்துவிட்டார்கள்; இரவு பதினொரு மணிக்குமேல் தன் சொந்த ஊரான காட்டுப்பாளையம் போய்ச் சேர வேண்டும் என்பது அவனுடைய உத்தேசம். அதற்கு ஏற்றமாதிரி கோயம்புத்தூரிலிருந்து ஒரு ரயிலில் ஏறி ஊர் போய்ச் சேர்ந்தான்.

முத்துசாமி நேராக வீட்டுக்குப் போகவில்லை. வேலாங்காட்டுக்குத்தான் போனான். வேலமரம் நிறைய இருந்ததால் அதற்கு வேலாங்காடு என்று பெயர். மரக் கூட்டத்தால் அங்கே ஒரே இருட்டாக இருந்தது. அதிலே ஒரு பக்கத்தில் கருப்பண்ணசாமி கோயில் இருந்தது. இரவிலே அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். கருப்பண்ணசாமி கோயிலைப் பூட்டி வைப்பதும் கிடையாது. பூட்டி வைத்திருந்தாலும் அவன் பூட்டை உடைக்கத் தயங்கி யிருக்க மாட்டான்.

முத்துசாமி கோயிலுக்குள்ளே புகுந்தான். கருப்பண்ணசாமியின் சிலையை ஆத்திரத்தோடு அசைத்துப் பிடுங்கினான். அந்தி சந்தி அனவரதமும் கும்பிட்ட அந்தச் சிலையைப் பலி பீடத்தின் மேலேயே போட்டு நூறு சுக்காக உடைத்தான். தனது எண்ணங்களில் ஒன்று நிறைவேறிவிட்டது என்று மகிழ்ச்சியடைந்தான்.

அடுத்த எண்ணத்தையும் நிறைவேற்றிவிட வேண்டுமென்று அங்கேயே காத்திருக்கலானான்.

முத்துசாமிக்குக் கருப்பண்ணனிடத்திலே எத்தனை பக்தி யிருந்ததோ, அத்தனை பக்தி வேலுசாமிக் கவுண்டருக்கும் உண்டு.

வேலுசாமிக் கவுண்டர்தான் காட்டுப் பாளையத்தில் பெரிய பண்ணைக்காரர். ரொக்கமும் பூஸ்திதியும் நிறைய உடையவர். நல்ல செல்வாக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. அவருடைய பேச்சுக்கு அட்டி சொல்லுகிறவர் யாரும் காட்டுப்பாளையத்தில் கிடையாது. அவர் வைத்தது தான் சட்டம். அதை யாரும் மீறி நடக்க மாட்டார்கள். அப்படியிருந்தாலும் அவர் கொடுங்கோல் நடத்தவில்லை. எவனாவது தம்மை மீறப் பார்க்கிறானென்றால் விடமாட்டார். மற்றப்படி எல்லோரிடமும் அனுதாபத்தோடுதான் நடப்பார். அவருக்குப் பணிந்து போகிறவர்களுக்கு நல்ல சலுகைகளும் கிடைக்கும். "நீங்கள்தான் ராஜா" என்று சொல்லிவிட்டால், என்ன உதவியும் செய்ய முன் வருவார். அதிகாரத்திலே அத்தனை ஆசை உள்ளவர்.

ஆறு வருஷங்களுக்கு முன்னே பக்கத்தூர் வாசிகளோடு பூமி விஷயமாக ஒரு கலவரம் ஏற்பட்டது. அதிலே வேலுசாமிக் கவுண்டர் முழு வெற்றியடைந்து விட்டார். நியாயம் அவர் பக்கத்திலே இருந்ததாகச் சொல்ல முடியாது. ஆனால் அவருடைய பணம் காரியத்தைச் சாதித்தது. அவரிடம் வாலாட்ட நினைத்த எல்லோரையும் அந்தக் கலவரத்தையொட்டிய வழக்கிலே சிக்க வைத்து ஜெயிலுக்கு ஓட்டிவிட்டார்.

முத்துசாமி காட்டுப்பாளையத்தில் ஒரு சாதாரணக் கூலிக்காரன். அவன் நல்லவன்தான். ஆனால் பணிந்து நடக்கிற சுபாவம் அவனிடம் கிடையாது. "கஷ்டப்பட்டு வேலை செய்தால் கூலி கிடைக்கிறது. ஒருத்தனுடைய தயவு எதற்கு வேணும்?" என்பது அவனுடைய எண்ணம். யாராவது தோரணையோடு பேசினால் அவனும் பொறுக்க முடியாது. ஒரு நாள் அவன் வேலுசாமிக் கவுண்டருக்கு முன்னாலே துடுக்காகப் பேசியதை மனத்திலேயே வைத்துக் கொண்டிருந்து வேலுசாமிக் கவுண்டர் அவனையும் பக்கத்து ஊர்க் கலவர வழக்கிலே எதிரியாகச் சம்பந்தப்படுத்தி விட்டார். தமக்குப் பணியாதவனுக்குக் கொஞ்சம் பாடம் கற்பிக்க வேண்டும் என்பதுதான் அவருக்கு எண்ணம். ஆனால் முத்துசாமிக்கு ஆறு வருஷம் ஜெயில் கிடைக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. நீதிமன்றத்திலே அவன் நடந்துகொண்ட முறையும் பேசிய பேச்சும் அவனுக்குப் பாதகமாய் நின்றன.

"பணந்தானே ஜெயித்தது? நீதியா நடந்தது? அன்றைக்கு இந்த வேலுசாமிக் கவுண்டன் தன் பணத்தினாலல்லவா என்னைச் சிக்க வைத்துவிட்டான்? இப்போ அவன் வரட்டும். அவன் பணம் என்ன செய்யும் என்பதை நான் பார்க்கிறேன்" என்று கறுவிக் கொண்டே முத்துசாமி கோயிலில் ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் கருப்பண்ணசாமியின் தலை இருந்தது. அந்தத் தலையையே வேலுசாமிக் கவுண்டரின் தலையில் போட்டு உடைக்க வேண்டும் என்பது அவனுடைய நோக்கம்.

ஆயிற்று; மணி ஐந்திருக்கும். கார்த்திகை மாசமாதலால் நல்ல குளிர். பனியும் பெய்தது. இருட்டும்

குறையவில்லை. அந்த நேரத்தில் சற்றுத் தூரத்தில் வருகின்றவரைக் கண்டு கொள்ள முடியாது. அப்படி இருண்டிருப்பதும் முத்துசாமிக்கு ஒரு வகையில் சாதகமாக இருந்தது. அவன் வேலுசாமிக் கவுண்டர் வழக்கமாக வரும் வழியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ''அதோ, வந்து விட்டானே, அந்தச் சிவப்புச் சால்வையைப் போர்த்துக் கொண்டு வருவதை இன்னும் விடவில்லையா? வரட்டும் வரட்டும்—அந்தச் சிவப்புச் சால்வைக்கு இன்னும் நல்ல சிவப்புச் சாயம் கொடுக்கிறேன்'' என்று அவன் கொதித்துக் கொண்டு எச்சரிக்கையாக நின்றான். வேலுசாமிக் கவுண்டரையே நினைத்துக் கொண்டிருந்த முத்துசாமிக்கு அவர் குளிருக்காகப் போர்த்திக் கொள்ளும் சிவப்புச் சால்வை நன்றாக நினைவில் இருந்தது. ஆறு வருஷங்களிலே சற்று முதுகு வளைந்து போனது போலத் தோன்றினாலும் அவர் முத்துசாமியின் கண்ணுக்கு வாட்டசாட்டமாகத்தான் தோன்றினார். ஆத்திரத்தோடு முன்னால் பாய்ந்து கருப்பண்ணசாமியின் தலையை ஓங்கி வீசினான். வந்தவர் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவேயில்லை. அவர் ஒரு சத்தங்கூடப் போடவில்லை. அப்படியே சுருண்டு விழுந்தார். மண்டையடிபட்டதால் உடனே உயிர் போயிருக்கும் என்று நினைத்துக் கொண்டு முத்துசாமி வீட்டை நோக்கி வேகமாக நடக்கலானான்.

அதிகாலையிலே வரும் ரயிலில் இறங்கி வருகிறவன் போல அவன் போனான். இதுதான் அவனுடைய திட்டம். மனைவியையும் அருமை மகனையும் தந்தையையும் ஆறு வருஷங்களுக்குப் பிறகு அன்று பார்க்கப் போகிறான். அதை எதிர்பார்த்து அவன் உள்ளத்திலே எழுந்த இன்ப உணர்ச்சியைவிடத் தான் நினைத்த காரியத்தைத் தனது திட்டப்படி அன்றே முடித்துவிட்டதற்காகப் பூரிப்பு அதிகமாக இருந்தது. ''கருப்பண்ணசாமி இந்தக் காரியத்துக்காவது எனக்கு உதவினாரே, அதுவே போதும்; அவர் தலை கைக்கு அடக்கமாக இருந்தது'' என்று அவன் நினைத்து உள்ளுக்குள்ளே களிப்படைந்தான். கொலை செய்தது வெளியானால் என்ன செய்வது என்று அவன் சிந்திக்கவில்லை. வேலாங்காட்டுக்கு அவன் சென்றதை யாரும் பார்த்திருக்க முடியாது. அப்படியிருக்கச் சிலையை உடைத்த குற்றத்தையோ அந்தச் சிலையின் தலையைக் கொண்டே கவுண்டரைத் தாக்கிய குற்றத்தையோ யாரும் இவன்மேல் சுமத்த மாட்டார்கள். அவனுடைய பக்தியைப் பற்றி ஊரிலே அத்தனை மதிப்பு இருந்தது.

முத்துசாமியின் மனைவி சின்னம்மாள் வாசலுக்குச் சாணம் தெளித்துக் கொண்டிருந்தாள். அவள் தன் கணவனைக் கண்டதும், ''காலை ரயிலிலா வந்தீங்க?'' என்று என்ன கேட்பதென்று தெரியாமல் கேட்டாள். அவன் பிரிந்திருந்த வருஷங்களெல்லாம் அவளுக்கு ஒரு இரவு போல மறைந்து விட்டன. அத்தனை மகிழ்ச்சி அவளுக்கு.

''சின்னம்மா, இனிக் கவலையில்லை. அந்த வேலுசாமிக் கவுண்டனுக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது'' என்றான் முத்துசாமி.

''ஆமாம், கருப்பண்ணசாமி சும்மா விடுமா? இருந்தாலும் இப்போ நாம் அப்படிப் பேசப்படாது. அவரால் தான் இத்தனை காலமாக நாங்கள் பிழைச்சிருக்கோம்'' என்று சின்னம்மாள் ஆழ்ந்த சிந்தனையோடு தெரிவித்தாள்.

''அவன் தயவிலா! அதெப்படி?''

''உங்களைக் கேஸிலே சிக்க வைத்தது அவர்தான். ஆனால் அப்புறம் என்னமோ அவருக்கு மனசு மாறிப் போய்விட்டது. கருப்பண்ணசாமியை அவரும் தினமும் கும்பிடுவாரே, அந்த சாமிதான் அப்படிப் பண்ணியிருக்கும். உங்கள் தகப்பனாரும் குழந்தையும் படுகிற கஷ்டத்தைப் பார்த்துவிட்டு அவருக்கே விசனமாய்ப் போச்சு. நம்ம பையன் பேருக்கு மூணு ஏக்கரா நிலம் எழுதி வைத்தார். அதை வைத்துத்தான் இப்பொழுது குடும்பம் சுகமா நடக்குது.''

''மூணு ஏக்கரா எழுதி வச்சானா? அத்தனை இரக்கம் எப்படி வந்தது அவனுக்கு?''

''அவருக்குத் திடீரென்று பக்கவாதம் வந்து படுகிடையாக விழுந்து விட்டார். அதெல்லாம் உங்களை ஜெயில்லே போட்டதினாலே வந்த வினைன்னு அவர் சொல்லிக்கிட்டே இருந்தார். கருப்பண்ணசாமியே தண்டிச்சுட்டாரு என்று நினைச்சார். பக்கவாதம் சுகம் ஆனால் கருப்பண்ணசாமிக்குப் புதிதா கோயில் கட்டி வைக்கிறதாக வேண்டுதலை யெல்லாம் பண்ணினார். ஆனால் ஒன்றும் சரியாகவில்லை. கடைசி வரையிலும் படுக்கையாகவேதான் கிடந்தார்.''


''என்னது? அவரு இப்போ எங்கே?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் முத்துசாமி.

''அவர் செத்துப்போய் நாலுமாசத்துக்கு மேலாவுது. அவர் சாகிறபோது சொல்லிவிட்டுச் செத்தது போல உங்க அப்பாதான் இப்போ தினமும் காலையிலே கருப்பண்ணசாமியைக் கும்பிடப் போறாங்க. நீங்க சுகமாகத் திரும்பிவர வேணும்னு பண்ணைக்காரர் கும்பிடச் சொன்னாங்களாம்.''

''அய்யோ, கருப்பண்ணா! இந்த ஆத்திரக்காரனைக் காப்பாத்துவையா? என்னைக் காப்பாத்த வேண்டாம். என் தகப்பனாரையாவது காப்பாத்து, காப்பாத்து'' என்று அலறிக்கொண்டே முத்துசாமி வேலாங்காட்டை நோக்கி வெறி பிடித்தவன் போல ஓடினான்.




ஈடில்லா
எழிலுக்கு
ரெமி
ஸ்னோ, பவுடர்,
ஹேர் ஆயில் &
பிரில்லியன்டைன்
Remy


Modern Motorists.....
FOR YOUR REQUIREMENTS IN SPARE PARTS
PLEASE CONTACT
THE MODERN AUTOMOBILES
4/17-A, MOUNT ROAD, MADRAS-2
Telephone: 86765 - Post Box 322 - Telegrams: MOBILE
★
Direct Importers of spares and accessories for all
POPULAR CARS AND TRUCKS
Also for TATA MERCEDES BENZ TRUCKS
Major stockists of FORD GENUINE SPARES


காப்பி ராகத்தை மெய்மறந்து என்ன ஆனந்தமாகப் பாடுகிறார் பார்த்தீர்களா?
நரசுஸ் காப்பியின் நறுமணத்தில் லயித்துப்போய் அல்லவா அப்படிப்பாடுகிறார்!
நரசுஸ் காப்பி
நரசுஸ் மான்யுபாக்சரிங் கோ., பிரைவேட் லிட்.,
சென்னை & சேலம்



இலக்கியக் காட்சிகள்—1

உடல் அங்கே! உளம் இங்கே!

பழம்பெரு மொழியாகிய நம் தண்டமிழில் எத்தனை எத்தனையோ நுட்பமான மன இயல்புகளைக் காட்டும் பாடல்கள் ஏராளமாக உள்ளன. அவற்றைப் படிக்கும் ஒவ்வொரு தமிழனும் தான் தமிழனாகப் பிறக்க நேர்ந்த பேற்றை எண்ணி எண்ணி மகிழ்வான்; பெருமிதம் கொள்வான்; ஆண்டவனுக்கு நன்றி கலந்த அஞ்சலி செலுத்துவான்!

சங்க இலக்கியத்திலே ஒரு அருமையான காட்சி. பொருள் தேடிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிய தலைவனிடம், "என்னை இத்தனை நாளும் மறந்துதானே இருந்தீர்கள்?" என்று தலைவி கோபத்தோடு கேட்டாள்.

"என்னை அண்டி வந்தவர்க்கும் பொருளுதவி செய்யாவிட்டால் பிறர் என்னைப் பழிப்பரே என்று பொருள் தேடச் சென்றேன். வெறும் கையோடு திரும்பி வர வெட்கப்பட்டு வெளிநாட்டில் தங்கி இருந்தேன். அப்படித் தங்கியிருந்தபோது உடல்தான் அங்கிருந்ததே தவிர என் உள்ளம் இங்கு உன்னிடம்தான் இருந்தது!" என்று பதில் அளித்தான்.

எள்ளல் நோனும் பொருள்தரல் விருப்பொடு
நாணும் தளையாக வைகி, மாண்வினைக்கு
உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை
மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே.

— அகநானூறு

இந்த அழகிய காட்சியை மேலேயுள்ள சித்திரம் சித்திரிக்கிறது!

கல்கி தீபாவளி மலர் 1957



இலக்கியக் காட்சிகள்—2

காமனைக் கண்காட்டினாள்!

கவிச் சக்கரவர்த்தி கம்பர் ராமாயண காவியத்தை மட்டும் பாடவில்லை. பலப்பல சந்தர்ப்பங்களில் பலப்பல அற்புத மான பாடல்களையும் பாடியிருக்கிறார்! அவற்றில் சில சமயம் நகைச்சுவை ரஸமும் சில சமயம் காதலும் கனிந்திருக்கக் காண்கிறோம்.

ஒரு இளைஞன் ஒரு கோவிலின் கோபுர வாசலில் நின்றுகொண்டு வருவோர் போவோரை ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தான். இந்தக் காட்சியைப் பார்த்தார். அவர் உள்ளத்தில் அற்புதமான காதல் ரஸம் பரிமளிக்கும் பாடல் உருவாயிற்று.

"அவளைப் பார்த்தீர்களா?" என்று கோவிலுக்குள்ளிருந்து வெளியே வருவோரையெல்லாம் கேட்கிறான். ஆனால் அவர்கள் "இல்லை - தெரியாது" என்றுதான் பதில் சொல்லுகிறார்கள். அவனுக்கு அவள் பெயராகிலும் தெரியுமா? அதுவும் தெரியாது! சரியாக விசாரிக்க வேறு வழியில்லை. பின் அந்த இடத்தை விட்டாகிலும் போய்த் தொலையலாமல்லவா? அதற்கும் வழியில்லாமல் அல்லவா செய்துவிட்டுப் போய்விட்டாள்!

இல்லென்பார் தாமவரை, யாமவர்தம் பேர்அறியோம்
பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாதித்துக்
கொல்லென்று காமனையும் கண்காட்டிக் கோபுரத்தில்
நில்லென்று போனாள்என் நெஞ்சைவிட்டுப் போகாரே!

அவன் நெஞ்சைவிட்டுப் போகாத அந்த ஆரணங்கு கொல்லென்று காமனைக் கண்காட்டிவிட்டு அல்லவா சென்றுவிட்டாள்! இந்தக் காட்சியை நமது ஓவியர் 'விஜு' மேலே தந்திருக்கிறார்.

கல்கி தீபாவளி மலர் 1957



இலக்கியக் காட்சிகள்—3

தவத்தின் பயன்

தமிழ்ப் புலவர்களின் கற்பனைத் திறனும் பாராட்டுத் திறனும் பேர் ஆச்சரியத்தை அளிக்கவல்லன !

ஒரு தோழியின் கூற்றாக அமைந்துள்ள இந்தப் பாடலைப் பாருங்கள். அவள் தனது தலைவியின் முக அழகைப் பாராட்ட வருகிறாள் ! ஆனால் அவள் ''சந்திரனைப் போன்ற முகம்'' என்றோ, தாமரையைப் போன்ற முகம் என்றோ சொல்லவில்லை. அதற்கு மாறாகத் தலைவியின் முகத்தைப் பார்த்த பிறகுதான் தாமரை ஒற்றைக் காலில் நின்று தவம் புரியும் காரணம் புரிந்ததாம்.

குளிர்ந்த நீர் நிரம்பிய இக்குளத்தில் வண்டுகள் மொய்க்கும் தாமரை நின்று தவம் செய்த காரணத்தால், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இன்குரல் படைத்த தலைவியே, உன் முகத்தைப் போன்ற அழகும் உருவமும் அது பெற்றது.

தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்றார் உளம்பருகும் பண்மொழியாய் பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள் !

—பழம் பாடல்

இவ்வுலகில் முயற்சி எடுத்துக் கொண்டால் நடைபெறாது என்று சொல்லத்தக்க காரியம் ஒன்றுமில்லை. இந்தக் கருத்தை எவ்வளவு அற்புதமான முறையில் தமிழ்ப் புலவர் வெளியிட்டிருக்கிறார் ! ஆனால் இந்தத் தமிழ்ப் புலவர் தம்முடைய பெயர் என்ன என்பதை மட்டும் யாருக்குமே தெரிவிக்காமல் மறைந்து விட்டார் !

கல்கி தீபாவளி மலர் 1957



இலக்கியக் காட்சிகள்—4

கருணை வள்ளல்

சமீபத்தில் பகவான் புத்தரின் இரண்டாயிரத்து ஐந்நூறாவது ஆண்டு விழா பாரத நாடெங்கும் கொண்டாடப்பட்டது. இந்தப் புனித மகான் ஒரு சின்னஞ் சிறு ஆட்டினிடம் கருணை பொங்கி, அதன் உயிருக்காகப் பிம்பிசாரன் என்னும் பேரரசனுடன் போராடி அவன் நடத்த இருந்த யாகத்தை நிறுத்தி வெற்றி கண்ட வரலாற்றை உலகம் உள்ளளவும் நினைந்து நினைந்து உருகும்! அப்படி உருகியவர்களில் நம்மிடையே வாழ்ந்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களைக் குறிப்பிட வேண்டும்!

பெண்டுகள் வாசலில் கூடிநின்றார் - இந்தப்
பேரரு ளாளனும் யாரோ வென்றார்
கண்டவர் உள்ளம் கனியுதென்றார் - இவன்
கண்ணின் அழகினைப் பாருமென்றார்
கன்னி யொருமகள் மையெழுதி - இரு
கண்ணும் எழுதுமுன் ஓடிவந்தாள்
பின்னு மொருமகள் கூந்தலிலே - சூடும்
பிச்சி மலர் கையிற் சுற்றிவந்தாள்

"நொண்டி" நடந்துவந்த ஆட்டுக்குட்டியைத் தோளில் சுமந்துகொண்டு யாகசாலையை நோக்கி நடந்து சென்ற கருணை வள்ளலின் முகப்பொலிவை ஊர்மக்கள் பார்த்து வியந்த காட்சிகளைக் கவிமணி எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார்?

கல்கி தீபாவளி மலர் 1957


பாருங்கள்!
சொத்தையைத் தடுக்க விசேஷ பாதுகாப்பு*
TEST K.42
Kolynos
கோலினஸ் ஸூப்பர்-வொய்ட் டூத்பேஸ்ட்
உங்கள் நகையழகைப் பாதுகாக்கும்
* 'கோலினஸ் ஸூப்பர்-வொய்ட்' டூத்பேஸ்ட் (படத்தில் வெள்ளை பாகம்) சொத்தைக்குக் காரணமான கிருமிகளைத் (கருப்பு பாகம்) தடுக்கிறது (சாம்பல்நிற வட்டம்) என விஞ்ஞான பரீட்சை K. 42 நிரூபித்துள்ளது.
பெப்பர்மின்டின் குளுமை வாய்ந்த இனிய சுவையை அனுபவியுங்கள்!
Kolynos TOOTHPASTE
Kolynos SUPER WHITE TOOTHPASTE
Koly
பாருங்கள்! பிடிப்பதற்கு சௌகரியமான பிரத்தியேகவித மூடி.
ஜெப்ரி மானேர்ஸ் அண்டு கோ., பிரைவேட் லிட்., ரிஜிஸ்தர் செய்துகொண்டு உபயோகிப்பவர்கள்

தாபமும் தியாகமும்

எஸ். ரங்கநாயகி

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. தன் நாயகனை ஆதவனை வரவேற்கக் கமல மலர் குவிந்த மலர்க் கைகளை விரித்தது. இரண்டு சொட்டுத் தேன், வரவேற்பில் பூரண கும்பமாக நின்றது. தன் சகிகளான வண்டினங்களை மங்களகீதம்பாட எழுப்பியது.

பட்சி ஜாலங்கள் தங்களுக்குள் ஆயிரம் பேசிக்கொண்டே துயிலெழுந்தன. நாற்புறமும் அன்றலர்ந்த மல்லிகை மணம் கமழச் சீதை இயற்கைக் காட்சிகளை ரசித்தவாறே உட்கார்ந்திருந்தாள். சகல ஜீவராசிகளிடத்தும் தன் அன்னையின் தயவைக் கண்டு வியந்து கொண்டிருக்கும் போது, சட்டென்று தன் கண்களை யாரோ பின்னால் இருந்து மூடுவதைக் கண்டாள். கைகளைப் பிடித்துப் பார்த்தாள். 'ஐயோ!' என்று அலறிவிட்டாள். 'வளையலற்ற ஆணின் கைபோலிருக்கிறதே! அவ்வளவு துணிச்சல் இங்கு யாருக்கு இருக்கும்?' கைகள் விடுபட்டன. சீதை திடுக்கிட்டுத் திரும்பினாள்.

பின்புறமாக ஒரு குறத்தி நின்று கொண்டிருந்தாள். ''அம்மே!'' சீதை சிரித்து விட்டாள். அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது. ''அடி போக்கிரி! நீயா இப்படி ஏமாற்றினாய்? இதோபார், சுருதகீர்த்தி! வேஷம் போட்டாலும் அதற்குத் தகுந்தபடி நீ பாட வேண்டும். குறத்தி கையில் வளையல்கள் இருக்கும். முதலில் அதைத் தெரிந்துகொள்'' என்றாள் சீதை, அவளுடைய மலர்க் கன்னத்தை நிமிண்டியபடியே.

''இதோ பார் அம்மே! கண்ணாடி வளையல், பாசி வளையல், பவழ வளையல், முத்து வளையல். உன்னை ஏமாற்ற எல்லாம் மடியில் இருந்ததம்மா!'' என்று கூறிய சுருதகீர்த்தி எல்லா வளையல்களையும் கைகளில் அடுக்கிக்கொண்டாள்.

''இதென்னடீ கூத்து! இந்தக் காலை வேளையில்? எந்த மகாராஜனைக் காண வேஷம் போட்டு விட்டாய்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் சீதை.

''அதை ஏன் கேட்கிறாய்? பருவத்தின் கோளாறு இவ் வயதில் ஆரம்பிப்பது இயற்கைதானே! தானே சென்று ஒரு குறத்தியிடம் கைநீட்டினாள். 'எந்த ஊரிலிருந்து எந்த மகாராஜன் மாலையிட வருவான் சொல்லடீ, பெண்ணே' என்று அவளிடம் கேட்டாள். அவள் குறி கூறியதும் இந்த அம்மாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. தன்னையே குறத்தியாக மாற்றிக்கொண்டு நாட்டுக் கன்னிப் பெண்கள் எல்லோருக்கும் குறி கூறக் கிளம்பி விட்டாள்'' என்று கூறிக் கொண்டே ஊர்மிளை பின்தொடர மாண்டவி அங்கே வந்தாள்.

''சரியாய்ப் போச்சு. அந்தக் கூத்து வேறா? என்னடி பெண்ணே, என்ன சொன்னாள் உங்கள் குறத்தி? எனக்கும் தான் சொல்லேன். நமது வீட்டுக்கு வரப் போகும் மருமகளைப் பற்றித் தெரிந்து கொண்டு, தந்தையிடம் கூறி விவாக விருந்து கிடைக்க ஏற்பாடு செய்து விடுகிறோம்'' என்றாள் சீதை.

''ஓஹோ! இப்படிச் சொல்லி உங்கள் வேலையையும் முடித்துக் கொண்டு விடலாம் என்று பார்க்கிறீர்களா? எவ்விஷயமும் பெரியவர்களுக்கான பின்புதானே சிறியவர்களுக்கு? அதனால் உங்கள் விஷயத்தை முதலில் அறிந்து கொண்ட பிறகு, என் விஷயத்தைத் தந்தையிடம் சொல்வதைப் பற்றி யோசிக்கலாம்.''

''சரியான போக்கிரிதான். எங்கே முதலில் சீதை அக்காவின் கையைப் பார்க்கலாம். அந்தக் குறத்தியை உடனே இங்கே அழைத்துக் கொண்டு வா'' என்று சொன்னாள் மாண்டவி.

''சரிதான், இவளே குறத்தியாக இருக்கும்போது, வேறு குறத்தியைத் தேட வேண்டுமா? ஆனால் ஒரு விஷயம். எங்கள் அருமை அக்காவுக்கு ஒரு பிச்சைக்காரனை மணாளனாகக்கூறிவிடாதேம்மா!'' என்றாள் ஊர்மிளை. ஆனால் சுருதகீர்த்தி அவள் எச்சரிக்கையைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் சீதையின் செந்தாமரைக் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

* * *


சகோதரிகள் நால்வரும் இரு தந்தையின் மூலம் சகோதரி உறவு கொண்டவர்களேயானாலும், இணைபிரியா அன்பு கொண்டவர்கள். மிதிலை அரண்மனையில் அநேகமாக எப்பொழுதும் சேர்ந்து பொழுதைக் கழிப்பார்கள். இளமை புகுந்தது. வசந்தத்தின் சுகந்தம் பரவியது. நால்வரும் ஒருவரை யொருவர் பரிகசிப்பதில் காலத்தைக் கழித்தனர்.

கடந்த ஒரு வார காலமாக ஒரு குறத்தியிடம் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டாள் சுருதகீர்த்தி. வேடிக்கையாகத்தான் உறவு கொண்டாள். ஆனால் அவளோ சுருதகீர்த்தியின் செல்வச் சீமானைப் பற்றி விவரித்துக் கூறவே அந்த ஆனந்தத்தில் ரேகை பார்த்துக் குறி சொல்வதையும் கற்று விட்டாள். அதன் பயனாக இன்று குறத்தி வேஷத்தில் சகோதரிகளின் கைகளைப் பார்ப்பதற்குக் கிளம்பி விட்டாள்.

'மன்மத வடிவன் உன் ராஜன். செல்வச் சீமான் உன் ராஜன்.' இன்னும் என்னென்னவோ தன்னைப் பற்றிக் குறத்தி குறி கூறினாளே என்று மனத்துக்குள் சிரித்து மகிழ்ந்தாள் சுருதகீர்த்தி.

''என்னடீ, பெண்ணே! குறி சொல்வதற்கு இவ்வளவு நேரமா?'' என்று ஊர்மிளை தூண்டிவிட்டாள்.

சுருதகீர்த்தி தன்னைச் சமாளித்துக் கொண்டு சீதையின் கைகளை நோக்கினாள். சட்டென்று அவள் மனம் 'ஐயோ' என்று அலறியது. 'அவள் பார்ப்பது





தவறா, அல்லது அவள் கற்றது தவறா?' மனம் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் திக் திக்கென்று அடித்துக் கொண்டது.

"சரிதான், நீ குறி பார்த்துச் சொல்வதற்குள் அக்காவுக்கு விவாகம்கூட முடிந்து விடும்" என்றாள் ஊர்மிளை.

சுருதகீர்த்தி சட்டென்று தன் முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். 'தன் கண்ணால் கண்டது உண்மைதானா?' என்று நிர்மாணிப்பதற்கு இவர்கள் விட மாட்டார்கள். அதற்குள் மாண்டவியின் கையைப் பார்ப்போம் என்று எண்ணியவளாய், "அக்கா, இதோ பார், உனக்கு வரும் மணாளனைப்



பற்றிக் கூற என்னால் ஆகாது. மாண்டவி! நீ உன் கையைக் காட்டு!" என்றாள்.

"விடுத்தது போ. இவ்வளவு நேரம் கையைப் பார்த்து விட்டு ரத்தினச் சுருக்கமாக ஒரே வார்த்தையில் சீதையைப் பற்றிக் கூறிவிட்டாய். அடுத்தது மாண்டவிக்கு என்ன சொல்லப் போகிறாயாம்?" என்று ஊர்மிளை பரிகசித்தாள்.

சுருதகீர்த்தியின் செவிகளில் அவள் வார்த்தைகள் விழவில்லை. மாண்டவியின் கையைப் பார்த்து மேலும் அதிர்ச்சியுற்றாள் அவள். ஒரே கலவரத்துடன் சடாரென்று ஊர்மிளையின் கையை எடுத்துப் பார்த்தபோது அவள் மனம் மேலும் மேலும் துணுக்குற்றது.

திடீரென்று, தன் இடத்தை விட்டு எழுந்தாள்; பரக்கப் பரக்க அரண்மனையை நோக்கி ஓடினாள்.

"ஓஹோஹோ! சாயம் வெளுத்துப் போச்சு. குறி சொல்லத் தெரியாமல் குறத்தி வேஷம் போட்டு விட்டு ஓட்டம் பிடித்து விட்டாளே!" சகோதரிகளின் இந்தப் பரிகாசப்பேச்சு அவள் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை.

அரண்மனையை அடைந்த சுருதகீர்த்தி பரபரப்புடன் தன் வேஷத்தைக் கலைத்தாள். மாற்றுடை அணிந்து ஓடினாள். இந்தக் கால வேளையில் ராஜகுமாரியைப் பார்த்த குறத்தி சற்றே திடுக்கிட்டாள். கடைசியில், தான் வந்த காரியத்தைச் சுருதகீர்த்தி கூறியபோது, அவள் ஐயத்தைச் சந்தேகமறத் தீர்த்து விட்டாள் குறத்தி. சகோதரிகளின் கைகளில் காணப்படும் ரேகை கணவன் மூலம் ஏதாவதொரு விதத்தில் வரும் விரக தாபத்தைத் தெரிவிக்கக் கூடியதுதானாம்.

மெள்ள மெள்ள அடி வைத்து மனச் சுமையுடன் சுருதகீர்த்தி மீண்டும் அரண்மனைக்குத் திரும்பியபோது, பூஜைக் கால மணியோசை கேட்டது.

சுருதகீர்த்தி ஜெகதம்பிகையின் பாதம் பணிந்தாள். "தாயே! என் சகோதரிகளிடம் எனக்குள்ள அன்பு உனக்குத் தெரியும். அவர்கள் வினையை விலக்க நான் முயலுவேன். ஆயினும், விதி வென்றிடில், அவர்கள் தாபத்தைக் குறைக்க நான் சிறிதளவாவது உதவும்படி அருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.

தேவியின் திருக்கரத்திலிருந்து ஒரு மலர் மெதுவாக உதிர்ந்தது.

* * *

மிதிலையில் அன்று கோலாகல வைபவம். மிதிலாதிபதி ஜனகரும், அவர் சகோதரர் குசத்வஜரும் ஒரு பக்கத்தில் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர். தம்முடைய சபதம் நிறைவேறியதில் மட்டற்ற மகிழ்ச்சி ஜனகருக்கு.

அந்தப்புரத்தில், பெண்களின் கொம்மாளம் சொல்லில் அடங்காது. யாவரும் சீதையைப் பரிகசித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். இவ்வளவு குதூகலத்தில் மனத்துள் துயரச் சாயையுடன் சுருதகீர்த்தி மட்டும் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தாள்.

'இதோ! இன்று சீதைக்கு விவாகம் நிச்சயமாகி அவள் புருஷனுடன் சென்று விடுவாள். இதே போல் ஒரு நாளைக்கு மாண்டவிக்கும் ஊர்மிளைக்கும் ஒரு இடத்தில் விவாகம் நடந்து ஒரு நாள் ஆனந்தமாகச் சென்று விடுவார்கள். நடுவில் கணவனுடன் கூடிய தங்கள் எதிர்காலத்தை அவர்கள் இன்னும் அறியவில்லையே! மேலும் இவர்கள் வெவ்வேறு இடங்களில் விவாகம் செய்து கொடுக்கப்பட்டால் நான் யாரைத் தேற்றுவது?' அவள் மனம் குழம்பித் தவித்தது.

"என்னம்மா சுருதகீர்த்தி! பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டாயே?" என்று கேட்டுக் கொண்டே மெதுவாகத் தோழி காஞ்சனை அருகில் வந்தாள்.

"தனக்கு எப்பொழுது மன்மத மணாளன் வரப்போகிறானோ என்ற யோசனையாக இருக்கும்" என்று ஊர்மிளையின் பரிகாசம் தொடர்ந்தது.

மனத்திலுள்ள கலக்கத்தை அவர்களிடம் மறைக்க, "ஆமாம்! உங்களுக்கெல்லாம் சிரிப்பும், ஆனந்தமுமாகத் தான் இருக்கிறது. ஆனால் அக்காவை விட்டுப் பிரிய வேண்டுமே என்று நினைத்தாலே என் மனம் வேதனை அடைகிறது" என்றாள் சுருதகீர்த்தி சாதுர்யமாக.

இவர்களைப் பார்த்த தோழி சரளகன்னிகா, "சரியாய்ப் போச்சு, நால்வரையும் ஒரே கணவருக்குக் கைப்பிடித்துக் கொடுத்தால்தான் சந்தோஷமாக இருப்பீர்கள் போலிருக்கிறது" என்றாள் சிரித்துக் கொண்டே.

"கண்டபடி பேசாதே. நால்வரையும் ஒரே குடும்பத்தில் விவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்றாவது சொன்னாலும் பொருந்தும்" என்று காஞ்சனை கடிந்து கொண்டாள்.

பளிச்சென்று சுருதகீர்த்தியின் மனத்தில் ஒரு மின்வெட்டு தோன்றி மறைந்தது. அவ்விடத்திலிருந்து ஓடினாள்.

காஞ்சனை கூறியதுபோல் ஏன் செய்யக் கூடாது? சீதையின் கைப்பிடிக்கப்போகும் மணாளனுக்குச் சகோதரர்கள் இருப்பதை அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். இப்பொழுது கூடவே ஒரு சகோதரர் வந்திருப்பதும் அவளுக்குத் தெரியும்.

"வாம்மா, சுருதகீர்த்தி, உள்ளே வா!" ஜனகர் அவளை அருகில் அழைத்தார். அருகில் அவள் தந்தை குசத்வஜர் இருந்தும், தன் மனோபாவத்தை வெளியிடத் தயங்கித் தயங்கி நின்றாள் சுருதகீர்த்தி.

"ஏனம்மா, தயக்கம்? உன் தந்தையைப் போல் என்னையும் நினைத்துவரும் உனக்கு இங்கே வரப் பூரண அதிகாரம் உண்டு. இன்று சீதைக்குத் திருமணம் நிச்சயமாகி இருப்பது உனக்குத் தெரியுமல்லவா! இச் சுபதினத்தில் உனக்கு என்ன வெகுமதி வேண்டும், சொல்!" ஜனகர் மீண்டும் அவளை அழைத்தார்.

சற்றே துணிவு கொண்ட சுருதகீர்த்தி, "ஒரு திருமணம் மட்டுமல்ல, பல திருமண வெகுமதிகள் தர நீங்கள் வழி செய்ய வேண்டும்" என்றாள்.

வியப்புடன் அவளை நோக்கிய குசத்வஜர், "பல திருமண வெகுமதிகளா? நீ சொல்லுவது புரியவில்லையே!" என்றார்

"அப்பா! என் சகோதரி மாண்டவியும், தங்கள் சகோதரர் புத்திரி ஊர்மிளையும் விவாகப் பருவத்தின் எல்லைக் கோட்டில் கால் அடி எடுத்து வைத்து விட்டது தாங்கள் அறிந்ததுதானே! சீதைக்கு விவாகத்தை முடிக்கும் அதே தருணத்தில், தசரத குமாரருடைய சகோதரர்களுடன் இவர்கள் விவாகத்தையும் நிச்சயம் செய்து விட்டால், எனக்குச் சகோதரிகளின் விவாகத்துக்கு வேண்டிய வெகுமதிகளெல்லாம் நிறையக் கிடைக்குமே!"

ஜனகருக்கு இந்த யோசனை மிகவும் உசிதமாகப் பட்டது. தன் விவாகத்தைப் பற்றியும் சொல்லாமல் சொன்ன சுருதகீர்த்தியின் சாதுர்யத்தைக் கண்டு அவர் அசமகிழ்ந்து போனார்.

* * *

அன்று மிதிலை எவ்விதம் எழில் நகரமாகக் காணப்பட்டதோ, அதற்குமேல் பன்மடங்காக இன்று அயோத்தி விளங்கியது. நகர மக்கள் அனைவரும், இன்று புதிதாக நாட்டில் அடிவைக்கப் போகும் விவாகத் தம்பதிகளை எதிர்கொண்டு அழைக்க நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டிருந்தனர்.

அதோ, ரதங்கள் வந்து விட்டன. தேஜோ மயமாக அலங்கரிக்கப்பட்ட நான்கு ரதங்களில் தசரத ராஜகுமாரர்கள் புத்தம் புது கல்யாணக் களையோடு நான்கு புறமும் ஒளியை வாரியிறைக்கும் சோபையுடன் கூடிய தங்கள் மனைவிகளைப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தவர்களாய் அரண்மனையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்;

நான்குபுறமும் வேதங்கள் ஒத, எட்டு திக்குகளிலும் வாத்தியங்கள் முழங்க, பாலர் முதல் கிழவர் வரை புஷ்பமாரி பொழிய ராஜகுமாரர்கள் ரதத்திலிருந்து இறங்கினர். பிறகு தம்பதிகளை மங்களகரமாக அரண்மனையில் அழைக்க, மங்களச் சடங்குகள் தொடங்கின.

திடீரென்று ஸ்ரீராமன் கௌசல்யாவை நோக்கி, "அம்மா, சத்துருக்னன் ஏன் தனியாக நிற்கிறான்? நம் மாட்டுப் பெண் எங்கே?" என்று பதற்றத்துடன் கேட்டார். உடனே கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. சீதை ஊர்மிளை மாண்டவியும் திகைத்து விட்டனர்.

"சுருதகீர்த்தி! சு ரு த கீ ர் த் தி!" கௌசல்யை உரக்கக் குரல்கொடுத்தாள்.

"இதோ இருக்கிறேன்,அம்மா" எதிரே வந்து நின்று விட்டாள் சுருதகீர்த்தி.

"இவ்வளவு நேரம் எங்கேயம்மா இருந்தாய்?" என்றாள் கௌசல்யை.

"இங்குதானே இருந்தேன். அண்ணாவுக்கும் மன்னிக்கும் நீங்கள் மங்களச் சடங்குகள் கழிக்கும்போது அதற்கு வேண்டிய சாமான்களை உங்களுக்கு எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன்" என்று சாவதானமாகப் பதில் கூறினாள் சுருதகீர்த்தி;

கௌசல்யையும், மற்ற எல்லோரும் ஸ்தம்பித்து நின்று விட்டனர்.

பூப் பந்தாட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள் சுருதகீர்த்தி.

"நந்தினி! மாண்டவி ஏன் இன்னும் வரவில்லை? அவள் இல்லாமல் ஆட்டம் ரசிக்கவில்லையே" என்றாள் சுருதகீர்த்தி ஆட்டத்தின் நடுவே.

"அவள் இன்று வரமாட்டாள். அவள் கணவர் பரதர் இன்னும் இரண்டு நாட்களில் தமது மாமன் வீட்டுக்குப் போகிறாரே! அதனால்..."

"என்னது? மாமன் வீட்டுக்கா? மாண்டவியும் கூடப் போகப் போகிறாள் அல்லவா?" என்று திடுக்கிட்டபடி கேட்டாள் சுருதகீர்த்தி.

"இல்லை, அம்மா! மாண்டவி தானும் போவதாக இருந்தால் தம்மிடம் சொல்லிக் கொள்ள வரமாட்டாளா?"

சுருதகீர்த்தியின் மனம் அதற்குமேல் ஆட்டத்தில் ஈடுபடவில்லை. அங்கிருந்த சலவைக்கல் மேடைமீது அமர்ந்து ஆழ்ந்த யோசனையில் தன்னை மறந்தாள். அவள் மனம் கன்னிப் பருவத்துக்குப் பாய்ந்தது. குறத்தியாக மாண்டவியின் கையில் கண்டது நினைவுக்கு வந்தது. சற்றேறக்குறைய அவ் விரகதாப காலம் சமீபித்து விட்டதும் அவளுக்கு நினைவுக்கு வந்தது. மாமன் வீடு செல்லும் பரதரின் மனம் விதியின் சுற்றினால் ஏதாவது காரணமாக மாறி விடுமோ!

உடனே சுருதகீர்த்தி மாண்டவியை நோக்கி வேகமாக ஓடினாள்.

"அக்கா!"

"என்ன சுருதகீர்த்தி! என்ன பதற்றம்?" தங்கையின் நிலையைக் கண்டு மாண்டவி பயந்து விட்டாள்.

"மாண்டவி, அண்ணா கேகய நாட்டுக்குப் போகப் போகிறாரா?"

"ஆமாம், மாமன் வரச் சொல்லிப் பன்முறை சொல்லி இருப்பதால் போக வேண்டியது நியாயம்தானே!"

"நீ போகவில்லையா?"

"இல்லை."

"மாண்டவி, நான் சொல்கிறேன். தயவு செய்து நீயும் போ!"

"போடீ, பைத்தியம்! நான் விரகதாபத்தால் இப் பிரிவைச் சகிக்க முடியாமல் திண்டாடுவேன் என்று பயந்து விட்டாயோ? என் தாபத்தைவிட என் கணவரின் கட்டளையே எனக்குப் பிரதானம். அவர் ஆணைப்படி நான் இங்கு இருக்க வேண்டியவளே!" என்றாள்.

சுருதகீர்த்தி மேலும் ஒன்றும் கூற முடியாமல் திண்டாடினாள். தான் குறி அறிந்ததைப் பற்றி அவளிடம் கூறவும் விரும்பவில்லை. கணவருக்குக் கீழ்ப்படியும் மாண்டவியின் உறுதியான மனத்தை ஒருநாளும் மாற்ற முடியாது என்பதையும் அறிந்து கொண்டாள்.

உடனே அவளுக்கு வேறு ஒரு உபாயம் தோன்றியது. தன்னுடைய கணவர் சத்துருக்னனையும் பரதருடன் கேகய நாட்டுக்கு அனுப்பி விட்டாள்.

* * *

"சுருதகீர்த்தி, ஏனம்மா இப்படிச் சோர்ந்து போயிருக்கிறாய்? உடம்புக்கு என்ன?" என்று அன்பும் ஆதரவும் பொங்கக் கேட்டாள் சுமித்திரை.

"ஒன்றுமில்லை, அம்மா" என்று மட்டும் கூறின சுருதகீர்த்தி பூந்தொடுப்பதில் மூழ்ந்தாள். தினமும் தன் கைகளினால் பூத்தொடுத்து ஸ்ரீ நாராயணனுக்குச் சாத்துவது அவள் வழக்கம்.

தன் கணவரைக் கேகய நாட்டுக்கு அனுப்பிய அவளுக்குக் கணம் கழிவதும் ஒரு யுகமாக இருந்தது. சத்ருக்னர் இல்லாத அயோத்தி சூன்யமாக இருப்பதாக அவள் மனம் உறுத்தியது. அவள் மனம் விரக வேதனையில் தவித்தது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

சுருதகீர்த்தியின் மனம் சங்கடப்படுவதைச் சுமித்திரை உணர்ந்தாள். அதனால் சத் விஷயங்களில் அவளை ஈடுபடுத்த முயன்றாள். "சுருதகீர்த்தி! நீ பூஜிக்கும் அந்த நாராயணனுடைய மகிமையைப் பெரியோர்களிடம் கேட்டு அறிய வேண்டும். ஒரு மண்டலம் சத்யநாராயண பூஜை செய்தால் எக்காரியத்தையும் சாதித்து விடலாம் என்பார் தந்தை. ஆனால் எனக்குத்தான் அந்தச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை."

பளிச்சிட்ட ஒரு யோசனை தோன்றியது சுருதகீர்த்தியின் மனத்தில். தான் ஏன் அப்பூஜையை ஏற்றுச் சகோதரிகளுக்கு வரப் போகும் விபத்தை தடுக்கக்கூடாது? உடனே தன் மாமியிடம், தான் அப்பூஜையை ஏற்றுச் செய்வதாகக்கூறினாள்.

சுமித்திரையோ அப்பூஜையை அனுஷ்டிப்பதிலுள்ள கஷ்டங்களைக் கூறினாள். ஆனால் சுருதகீர்த்தி பிடிவாதமாக விரதத்தை மேற்கொள்ள நிச்சயித்து, விக்னமில்லாமல் முடிய அடுத்துள்ள ஆரண்யத்தைப் பொறுக்கி எடுத்து, இரு தோழிகளுடன் அங்கு சென்று விட்டாள்.

அவள் சென்றதும் விதியின் கூத்து என்றுதான் சொல்ல வேண்டும். இல்லையெனில் மறுநாளே பரந்தாமனின் பட்டாபிஷேகத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, மேற்கொண்டு நடந்த குழப்பங்கள் நிகழ்ந்தபோது, அவள்



அரண்மனையில் இல்லாமலிருந்தது விபரீதமாகப் போகுமா! விரதம் தடைப்பட வேண்டாமென்று பட்டாபிஷேக வைபவத்தைப் பற்றிக் கூடச் சொல்லி அனுப்பாத சுமித்ரை, பிறகு தசரத சக்ரவர்த்தியின் கருமகாரியங்கள் நிறைவேற, பரத சத்ருக்னர் திரும்பி வந்த இரண்டாம்நாள் சொல்லி அனுப்பினாள்.

செய்தி கேட்ட சுருதகீர்த்தி 'ஐயோ!' என்று ஒரு பயங்கரமான அலறலுடன் அரண்மனைக்கு ஓடி வந்தாள்.

* * *

சுருதகீர்த்தி நல்லது நினைத்துச் செய்த ஏற்பாடுகள் அனைத்தும் விபரீதமாக முடிந்தன. பட்டாபிஷேக வைபவ புரட்சியின் போது சத்ருக்னர் நகரில் இருந்திருந்தால், கூனி மந்தரை கைகேயியைச் சந்தித்திருக்கவே விட்டிருக்க மாட்டாரே! கூனியிடம் என்றுமே அவருக்கு வெறுப்பு உண்டு. அவர்தான் இல்லை, அவளாவது இருந்திருந்தால், கைகேயியிடம் நன்மையைப் போதித்திருக்கலாமே? அல்லது அது கைகூடாமல் இருந்திருந்தாலும், ஊர்மிளையையாவது அவர்களுடன் அனுப்ப முயன்றிருப்பாள்; பரதர் மீண்டும் ராஜ்யத்துக்குத் திரும்பிக் காலடி வைக்கும்போதே மாண்டவி குற்றமற்றவள் என நிரூபித்திருப்பாள். இப்பொழுதோ எல்லாம் தலைக்குமேல்போன ஆபத்தாக முடிந்து விட்டது. மாண்டவியும், ஊர்மிளையும் வெவ்வேறு விதமாகத் துன்பம் அனுபவிக்கின்றனர். சீதை கணவனுடன் சென்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயந்தான். ஆயினும் அவளுக்கு என்ன விபத்து நேருமோ என அவள் மனம் அஞ்சியது. எல்லாம் தன்னால்தான் நேர்ந்த தென்றும், தான் இருந்திருந்தாலெவ்வளவோ சாதித்திருக்கலா மென்றும் ஒரு எண்ணம் அவள் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது.

"சுருதகீர்த்தி!"

திடுக்கிட்டுத் திரும்பினாள் சுருதகீர்த்தி. சத்ருக்னர் நின்று கொண்டிருந்தார்.

"சுருதகீர்த்தி! தனிமையில் நீ மட்டும் இங்கு என்ன செய்கிறாய்?"

அவரை மேலே பேசவிடவில்லை அவள். "ஓ நீங்களா...மறந்து விட்டேனே. இவ்வேளை நம் தாய்க்குப் பூஜைநேரம். வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும். மன்னியுங்கள், நான் சென்று வருகிறேன்" என்று கூறிப் பதிலையும் எதிர்பாராமல் மறைந்து விட்டாள்.

சத்ருக்னர் அவள் அவ்வளவு அவசரமாகப் போவதைப் பார்த்து வியந்தபடியே நின்று விட்டார். ஏன் இப்பொழுதெல்லாம் தன்னிடம் நின்று பேசக் கூட விரும்பாமல் ஓடி விடுகிறாள் என்பது புரியாப் புதிராக இருந்தது. ஆயினும் அவர் மனம் கலக்கமடையவில்லை. சுருதகீர்த்தியிடம் அவருக்கு மாறாத அன்பும், நிலையான நம்பிக்கையும் உண்டு.

இப்பொழுதெல்லாம் சுருதகீர்த்தி பட்டாடை தரிக்கவில்லை. ஊர்மிளை, மாண்டவியைப் போல் தபஸ்வினியாக இருந்தாள். அத்துடன் தன் பதியிடம் அதிகம் பேசி, பொழுதைக் கழிப்பதை நிறுத்திக் கொண்டாள். சகோதரிகள் விரகதாபத்தில் தவிக்கும் போது, தனக்குக் கிடைத்த பாக்கியத்தை முற்றிலும் சுவைக்க அவள் விரும்பவில்லை. சத்ருக்னரைக் காணும்போது, தன் மனம் பேதலித்து விடுமோ என்று அஞ்சி, ஏதோ சாக்குப் போக்கு சொல்லி அவ்விடத்தை விட்டு அகன்றாள். சகோதரிகளின் பொருட்டுத் தன் மகிழ்ச்சியைத் தியாகம் செய்ய அவள் துணிந்து விட்டாள். சுமித்ரைக்குச் செய்யும் பணிவிடைகளில் தன் பொழுதைக் கழித்தாள்.

சுருதகீர்த்தி நேராகத் தன் விடுதிக்கு ஓடினாள். அங்கிருந்த சத்ருக்னரின் சித்திரத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள். கண்களிலிருந்து இரு முத்துக்கள் சித்திரத்தை அர்ச்சித்தன. "என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குச் சகோதர பாசம் எவ்வளவு உண்டோ, அவ்வளவு பாசம் என் சகோதரிகளிடம் எனக்குண்டு. உங்கள் மனத்தில் இது தவறாகப் படாமலிருக்க, அந் நாராயணனே அருள் புரியவேண்டும். என்னை மன்னிப்பீர்களா?" கற்பனை உருவில் அமைந்த அச் சித்திரத்திடம் அவள் மன்னிப்புக் கோரி, தன் இதயத்தைக் கொட்டி அழுது துடித்துக்கொண்டிருந்த போது, அப்பக்கம் வந்த சத்ருக்னர் அதைப் பார்த்துத் துடிதுடித்துவிட்டார்.

சுருதகீர்த்தியின் மனம் அவருக்குப் புரிந்து விட்டது. வந்த வழியே சத்தமிடாமல் திரும்பி விட்டார்.

* * *

இன்று அயோத்தி நகரம் பொன் நகரமாக விளங்கியது. எங்கும் குதூகலம்; எங்கும் கொண்டாட்டம். புத்திரர்களை மீண்டும் தங்களருகே பெற்றதில் கௌசல்யை, சுமித்ரை இருவரும் உள்ளக் குதூகலத்தில் இருந்தனர். தன் மகன் தன்னை மன்னித்து, 'அம்மா, அம்மா' என்று அழைத்ததில் கைகேயிக்குச் சுவர்க்க சுகம் கிடைத்த ஆனந்தம். மூவரும் கடந்தகால நிகழ்ச்சிகளை யெல்லாம் மறந்துவிட்டு ஆனந்தமாகச் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர்.



ஸ்ரீராமனும் சீதையும் இரவு நேரம் என்பதையும் மறந்து நிலவொளியில் தாமரைத் தடாகத்தினருகே அமர்ந்திருந்தனர். இராவணனிடம் பட்ட கஷ்டங்களை நினைத்து நினைத்து மிதிலை நந்தினி வருந்தாமலிருக்க, ரகுநந்தனன் அவளுக்கு முனிவர்களிடமும், சபரியிடமும் தனக்கேற்பட்ட பரிச்சயத்தைக் கூறிக் கொண்டிருந்தார்.

பரதரும் மாண்டவியும் அந்தப் புரத்தில் ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருந்தனர். மாண்டவி பரதரைப் பரிகசித்துச் சிரித்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தாள். இவ்வளவு நாட்கள் அவளிடம் பராமுகமாயிருந்த பரதர் இன்று அவள் பரிகசிப்பில் ஆனந்தம் எய்திக் கொண்டிருந்தார்.

லக்ஷ்மணரும் ஊர்மிளையும் அரண்மனை வசந்த மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். தன் அண்ணன் வனவாசத்தில் சீதையின் காரணமாக அடைந்த வியோக வேதனையையும், ஆஞ்சனேயப் பிரபாவத்தையும் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தார் லக்ஷ்மணர்.

அரண்மனையின் இந்த உல்லாசப் பூங்காவில் ஒரே ஒரு ஆத்மா மட்டும் தன்னந்தனியே இருந்தது. இன்று சுருதகீர்த்திக்கு ஒருவருடைய மனத்துயரையும் போக்க வேண்டிய பணி இல்லை. அரண்மனையின் ஒவ்வொரு ஜீவனும் இன்று ஆனந்தக் கடலின் உல்லாச யாத்திரையில் இருந்தது. அவள் ஏற்ற பணி முடிந்து விட்ட அந்தருணத்தில்...

அவளும் அன்று எல்லோரையும் போல் பட்டாடை உடுத்தி ஆபரணம் அணிந்திருந்தாள். அவள் மனம், "சுருதகீர்த்தி! கணவனிடம் செல்ல உனக்கு என்ன தயக்கம்? உன் புருஷனை உனக்குத் தெரியாதா? இந்த உல்லாச வேளையில் நீயும் உல்லாசமாக இருக்க வேண்டாமா? போ, உடனே போ!" என்று கூறியது.

மனத்துணிவு அவளை இரண்டு அடி முன் தள்ளினால், மனச் சஞ்சலம் அவளை மூன்றடி பின் தள்ளியது;

"சுருதகீர்த்தி!"


ஆஹா, தேனருவி தன்னைத் தேடி அருகில் வந்து விட்டதே! உணர்ச்சி பொங்க உடனே எழுந்தாள் சுருதகீர்த்தி. தன் தெய்வத்தின் கால்களை அணைத்துக் கொண்டு விட்டாள். கண்களிலிருந்து பெருகிய உணர்ச்சி வெள்ளம் சத்ருக்னர் கால்களைக்கழுவியது.

மெதுவாக அவளைத் தூக்கி இறுக அணைத்துக் கொண்டார் சத்ருக்னர். இருவர் உள்ளமும் உறவாடின.

அவள் நெஞ்சத் துடிப்பு அவருக்குப் பல விஷயங்களை எடுத்துக் கூறியது. கண்கள் பெருக்கிய நீர் அவள் மனத்தைப் பளபளக்க எடுத்துக் காட்டியது.

அவள் தலையை மெள்ள மெள்ள வருடின சத்ருக்னர், "சுருதகீர்த்தி! நான் தவறுணர்ந்து விட்டேன். உன் பெருமையே என் பெருமை. உண்மையில் பாக்யவான் என்ற பதத்தின் பொருளை இன்றுதான் உணர்ந்து கொண்டேன்" என்றார் உணர்ச்சி பொங்க.

சுருதகீர்த்தியின் மனத்தில் இன்பப் பெருக்கெடுத்தது. ஆனந்த போதையில் அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.


டால்மியா தயாரிப்புகள்
நவீன வீடுகளுக்கும் ஆபீஸ்களுக்கும்
உயர்ந்த ரக ஸ்டோன்வேர்
மற்றும் பீங்கான் தயாரிப்புகள்
ரிப்ராக்டரிகள் (1)
டால்மியா (2)
போர்ட்லண்ட் சிமெண்ட்
இன்ஸுலேட்டர்கள்
மற்றும் (3)
ஸ்டோன்வேர் (4)
பைப்புகள்.
ஆர்.ஸி.ஸி. (5)
ஸ்பன் பைப்புகள்.
பீங்கான் சானிட்டரி
சாமான்கள் (6)
DALMIA
MADE IN INDIA
டால்மியா ஸிமெண்ட் (பாரத்) லிட.,
டால்மியாபுரம் (திருச்சிராப்பள்ளி).

நான் அந்தக் கோவிலை விட்டுக் கிளம்பும்போது சாயங்கால பூஜை நடந்து கொண்டிருந்தது. பட்டாச்சாரியார் சுவாமி என் பிரயாணத்தைத் தடை செய்தார். அவர் என்னை நோக்கி, "நான்கு நாட்களாக உங்களுக்குக் கடுமையான வேலை. இரவில் சீக்கிரம் தூங்கப் போய் விட்டீர்கள். இன்றைக் காவது அர்த்த ஜாமத்துப் பூஜைகளைப் பார்த்து விட்டு, 'முனீசுவரன் பொங்கல்' சாப்பிட்டு விட்டு, நாளை போகலாம்" என்றார் என் கைகளைப் பற்றியபடி.

"எதற்காக? வந்த காரியம் கணக்கு வழக்குகள் தணிக்கையிட வேண்டியதெல்லாம்தான் முடிந்து விட்டனவே. இனிபார்க்க வேண்டியதும் ஒன்றுமில்லை. நான்கு தினங்களாக, பெருமான்-தாயாரின் திவ்ய சேவைகளும் கிடைத்து விட்டன. இன்னும் எதற்காக அநாவசியமாக இந்த ஊரில் தங்க வேண்டும்?"

என் சமாதானங்களை அவர் செவியுறாமலே தம் முதிர்ந்த பிராயத்தை ஆதாரமாகக் கொண்டு உரிமையுடன் என்னைக் கட்டாயப்படுத்தினார். அவர் கூறிய 'முனீசுவரன் பொங்கல்' என்ற விஷயம் ஆரம்பத்தில் சிறிது அசட்டுயமாகத்தான் உணர்த்தின்று. நான் அக்கோவிலின் கணக்குகளைத் தணிக்கையிடும் போது, 'முனீசுவரன் கட்டளை' என்ற ஒரு தனியான வரவு செலவுப் புத்தகம் இருப்பதைக் கண்டு வியந்திருந்தேன். ஏனெனில், பெருமாள் கோயிலுக்கும் முனீசுவரனுக்கும் எத்தகைய சம்பந்தம் இருக்க முடியும்? அந்தத் தனியான கணக்குப் புத்தகத்திலிருந்து நான் ஒன்றையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

அர்த்த ஜாமத்துப் பூஜைகளெல்லாம் முடிவடையும் வரையில் கோயிலினுள்ளே காத்துக் கொண்டிருந்தேன்.

இரு பரிசாரகர்கள், கையில் பாத்திரங்களுடன் கிளம்பி, கருடாழ்வார் சமீபமிருந்த பெண் சிலையினிடம் வந்தனர். இதற்கு முன்பாகத் தயாராக வைக்கப்பட்டிருந்த தளிகைச் சாமான்களை எடுத்து அளந்து போடுகிறார் மணியக்காரர். கையிலுள்ள உழக்குப் படியினால் ஐந்தளவுகள் அரிசியும், மூன்றளவுகள் பயற்றம் பருப்பும், இரண்டளவுகள் நெய்யும் தனித்தனியாக அவரால் அளந்து போடப்படுகின்றன. பரிசாரகர்கள் பயபக்தியுடன் கரம் தாழ்த்தி அவற்றைப் பெற்றுக் கொண்டு, அவற்றில் எவ்வித அபசாரங்களும் புரியாது, தாங்கள் நைவேத்தியம் தயாரித்து வருவதாக அப்பெண் சிலையிடம் பிரதிக்ஞை செய்கின்றனர். அன்றாடம் இந்நிகழ்ச்சி நடந்தது. இது முடிந்த ஒருமணி நேரத்துக்குப் பின்புதான் அர்த்தஜாமக் கட்டளை தொடங்குகிறது.

பூஜை முடிந்த பின்னர், அப்பிரசாதப் பொருளைக் கோயில் அதிகாரிகளோ, மணியக்காரர்களோ வழியாக எடுத்துப் போவதில்லை. பலரின் முன்பாக அதை எட்டு கூறுகளாக்கி விலைக்கு விற்று விடுகின்றனர். இதைப் பெற, முன்னதாகவே கட்டணம் செலுத்திக் காத்திருக்கவும் வேண்டும்.

இந்தக் கட்டளை எவ்வளவோ காலங்களாக நடைபெற்று வருவதைக் கேள்வியுற்றதும், என் மனம் குறுகுறுத்தது. அந்தப் பெண் சிலையின் எதிரே அன்றாடம் நடக்கும் அளவு முறை, பிரதிக்ஞை இவற்றுக்கும் அங்கேயிருந்த முனீசுவரன் சிலைக்கும் என்ன சம்பந்தங்கள் இருக்க வேண்டுமென்ற ஆர்வம் என்னுடைய மனத்தில் எழுந்தது.

பட்டாச்சாரியாரை அழைப்பித்து என் சந்தேகங்களைச் சொன்னேன். அவர் கூறிய செய்திகள் எவ்வளவோ காலமாகச் செவி முறையில் வந்த கதையாக இருந்தது. அவரது வாய்மொழிக்குப் பின், சரித்திரத்துடன் ஒன்றியிருந்த முனியதரையன்-விரதையின் விசித்திர வாழ்க்கை விவரங்களைத் தேடி பெற்றேன்.

மாலையென்னும் மங்கிய ஒளியில், மறைபொருளாகி நிற்கும் மாதவன் உருப்போன்றிருந்தது அவர்கள் சரிதை!

ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த பொன்னிவள நாட்





டின் சரிதையில் செல்வசித்த ஏட்டின் பகுதியில் அவர்களுடைய அற்புதமான வாழ்க்கை வரைந்திருந்தது.

நான்கெல்லைகளில் வெந்தலங்களையும், முடிகொண்டாளுற்றை அண்மையிலும் கொண்டது திருக்கண்ணபுரம் தலம். ஏழ வீதியிலிருந்த என் குடிகளும் அக் கண்ணபுரப் "பெருமானின்" திருவடிகளுக்குச் சேவை செய்வதையே பிறவிக் கடனாகவும், பெருமையாகவும் கொண்டிருந்தனர். குடியிலொரு பெண் பிறவியைப் பரந்தாமனுக்குப் பத்தினியாகவும், அடியாளாகவும் குட்டிவைப்பது அவர்களது குல வழி அறம். மனித உள்ளத்தின் இயற்கை [அபிலாஷைகளைத் துறந்து, தன் வாழ்வைப் பரமனுக்கே அர்ப்பணமாக்கிக்கொள்ளும் தியாகவாழ்வினருக்கு அக் காலம் பெருமதிப்பு வைத்திருந்தது. அத்தகைய குடியில் பிறந்தவள் விரதை. பல பெண்களுக்கு நடுவே பிறந்து வளர்ந்தவள், விரதையின் தாய். அதனால் அவளுக்கு முறையான இல்லறம் கிடைத்து, நீலவண்ண வேளாரை மணந்திருந்தாள். வெகு கால இல்லறத்துக்குப்பின் பிறந்த விரதை, தாய் முகம் காணக்கிடைக்காத அபாக்கியசாலியானள். அது முதல் விரதைக்குத் தந்தையே தாயுமாகி வளர்க்கும் பொறுப்பு கொண்டிருந்தார்.]

வயது வளர்ந்த விரதை வையத்துக்கொரு வனிதையாகிப் பேரெழிலுற்று விளங்கினள். அவளது வாழ்வைப் பற்றித் தீர்மானிக்க முடியாமல் குழப்பமுற்றார் தந்தை. முடிவாக, அவளைப் பரமனுக்கே உரித்தானவளாக்கி விடத் தீர்மானம் கொண்டு, அவளுக்குப் பரதம் பயில்வித்தார். அந்தக் கலை அவளது கொடி உடலுக்குப் புது மெருகையும், புத்துணர்வையும் அளித்து விட்டது.

அன்று — திருவோணமும், பூர்ணிமையும் ஒன்றாகக் கூடிய ஆவணித் திருநாள். குழப்பெரு நாயகனான சவுரிராஜப் பெருமானுக்குகந்த அந்தத் திருவோணையில், விரதையின் பரதக் கலையை முதன்முதலாகச் சமர்ப்பணம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுற்றுவட்டாரங்களிலிருந்து பெருமக்கள் திரளாக ஆலயத்துக்கு வந்திருந்தனர். அவர்களில் ஒருவன்தான் முனிசுவரன் எனப்படும் முனியதரயன்! அவன் அங்கு வந்ததின் காரணம், அவளைப் பற்றி அறிந்ததனால் அல்ல. அவளைப் பற்றி அவன் முன்பின்னாக அறியவும் இல்லை. அவ்வாலயத் திருமாலின் திருமேனி அழகைக் கேள்வியுற்றிருந்த அவன் உள்ளம்தான் அவனை அங்கு இழுத்து வந்திருந்தது. கோவிலுக்குள் நுழைவதற்கு முன்பாக அவன் உள்ளம் ஏதோ ஒரு தகாத செயலைச் செய்ய முற்படுவது போன்று உணர்த்தியது. நெஞ்சில் ஒரு பீதியும், கால்களில் கூச்சமும் அவனுக்கு இருந்தன; அதன் காரணம் அவனது வாழ்வை



ஒட்டிய சோழவள நாட்டின் அதிசயமான அரசியல் சரித்திரமே யாகும்.

சைவப் பற்று முதிர்ந்து, வைணவத்துக்கு எதிரான காலம் அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருந்தது. சோழ நாட்டின் அரச பீடத்தில் அப்போது இருந்தவர் அனபாய சோழர். அவர் பட்டமேறிய சிறிது காலத்துக்குள்ளாகவே, தலைசிறந்த வீரராகவும், ஆழ்ந்த தெய்வப் பற்றுடையவராகவும் புகழ் கொண்டிருந்ததில் குறைவில்லை. ஆனால் அவர் உள்ளத்தில் ஓங்கி உலகளந்த உத்தமனுக்கு இடமுமில்லை, சிறப்புமில்லை. மலைமேலுறைந்த மகாதேவன் ஒருவனையே முழுத் தெய்வமாக அவர் உள்ளம் ஒப்புக் கொண்டிருந்தது. சோழ மன்னரின் மன வேற்றுமைகள் கண்டு வைணவ சமயத்தார் அஞ்சி ஒடுங்கி யிருந்தனர்.

முனியதரயன் சோழ அரசாங்கத்தின் பொக்கிஷக் காப்பாளன். சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்த கிராமங்களில் சில வருஷங்களாகச் சரியான முறையில் வரி வசூல் இல்லாமையால், இவற்றை விசாரித்து வசூலை உடனடியாகச் செய்வதற்காகவே முனியதரயன் பிரத்தியேகமாக ஏவப்பட்டிருந்தான். அத்துடன் அரசரால் பலப் பல சிவாலயங்களுக்கும் விடப்பெற்றிருந்த நிபந்தங்களைக் கண்காணிப்பதும் அவனது கடமையாக இருந்தது. திருப்புகலூர், திருச்செங்காட்டான் குடி, ராமநதீசுரம் முதலிய தலங்களைப் பார்வையிடுகையில்தான், திருக் கண்ணபுரத்துப் பெருமானைப் பற்றி அவன் அறிந்தான். அவன் உள்ளத்தில் அத்திருமாலைக் காண அளப்பரிய வேட்கை மிகுந்தது. கூடவே, அரசரின் வைணவத் துவேஷம் என்னும் தீ, அவனுக்குப் பயங்கரமான தண்டனைகளையெல்லாம் மனத்தில் உணர்த்தின. தம்முடன் இருந்த மெய்காப்பாளர்களைத் தந்திரமாக வேற்றிடங்களுக்கு அனுப்பி வைத்து விட்டு, அவன் மட்டும் தனியாக அங்கு வந்திருந்தான்.

விரதையின் பரதக் கலை அப்பெருஞ் சபையில் பிரசித்தமாகிக் கொண்டிருந்தது. அவளது குழைந்து நெளிந்த கொடியுடலும், குலுங்கிய சடையும், கொஞ்சிய சதங்கை பொலியும் அவன் கண்டிராத அதிசயமாகி விட்டன. அவள் அப்போது திருமாலின் திரு அவதாரப் பெருமைகளை விளக்கிக் கொண்டிருந்தாள். அரித் துவேஷத்தின் ஆவியைப் போக்கிய நரசிம்ம உருவின் ஆவேசச் சிலிப்பையும், சிறப்புமிக்க சிவதனுசைப் பொடித்து நீற்றும் ராகவனின் வெற்றிப் பெருமிதத்தையும், கோவர்த்தனக்குடை சுமந்த முகில் வண்ணனின் முறுவல் வதனத்தையும் அவளது நடனத்திலே கண்டான். அக்கணமே அரிபக்தியென்னும் அற்புத சக்தி அவனைப் பெரும் பித்தனாக்கி விட்டது! தன்நிலையிழந்த நிலையாக ஒன்றி அந்தக் கம்பத்தடியிலே சமைந்து விட்டான்.

நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவள் தலை நிமிர்ந்தாள். கம்பத்தின் அடியிலிருந்த அவ்விளம் புருஷனின் தோற்றம் அவளைப் பிரமிப்படையச் செய்து விட்டது. அவள் நெஞ்சில் ஊறி ஊறியிருந்த கம்பீர ராமனே அங்கு பிரத்தியட்சமாகி விட்டதாக அவளுக்குத் தோன்றியது.

பிரதி வெள்ளிக்கிழமைதோறும் அப் பெருமாளின் சந்நிதியில் அவளது ஆடல் அரங்கம் நிகழ்ந்தது. அத்தினங்களில் அவனும் எப்படியோ அங்கு தோன்றித் தோன்றி மறைந்தான். நாளடைவில் அந்தப் பெருமாளிடம் ஒன்றுபட்டிருந்த அவ்விதயங்களில் தூய பக்திக் காதல் வேரூன்றி விட்டது. அவன் பிச்சியானான்.

நாளடைவில், முனியதரயனின் அரசியல் வாழ்வு வெகுதூரத்துக்கு விலகிக் கொண்டிருந்தது: அவனால் வசூலான வரித் தொகைகளெல்லாம் மெய்காப்பாளரின் மூலமாக அரசாங்கக் கருவூலத்தை அடைந்து கொண்டிருந்த நிலை மாறிற்று. அதற்குப் பதிலாக அவை அச் சவுரிராஜனின் திருமுடிக்கும், திருமேனியின் அழகுக்கும் பயன்பெறத் தொடங்கின. இந்நிலையில், தம்மை நாடி வந்து, அன்பு பூணும் பக்தர்களைத்தானே அப்பரமன் சோதனையிடுவது வழக்கம்? அத்தகைய சோதனை உருவாயிற்று.

வானம் வறண்டது! குளங்களும், ஏரிகளும் வற்றின. வரப்பின் உயர்வும் குறைந்தது. சோழ நாட்டைப் பஞ்சம் என்னும் உருத் தெரியாப் பூதம் குறையாடிற்று! முனியதரனின் மூலம் வசூலான தானியங்களெல்லாம் அச்சவுரிராஜனின் ஆலயத்தில் பெருந்தளிகை யுருவாகி, அன்றாடம் எண்ணற்ற ஏழைகளின் உண்டிகளை நிறைவிக்கத் தொடங்கி விட்டன.

சோழ மன்னருக்குச் செய்தி எட்டிற்று. கோர சர்ப்பமெனச் சீறியெழுந்து அவனைக் கட்டிப் பிடித்து வருமாறு கட்டளை பிறப்பித்தார். தூதுவர் சிட்டாய்ப் பறந்தனர். மூன்று தினங்களுக்குப் பின் ராஜசபையில் நிறுத்தப்பெற்ற முனியதரயன் பரிதாபமாகத் தலைசாய்ந்து நின்றான். மன்னரின் வெஞ்சினம் கொண்ட பல கேள்விகளுக்கும் அவன் பதில் கூறாது மௌனியானான். வரிப் பொருள் அனைத்தையும் விரயம் செய்ததாகக் குற்றமிடப்பட்டுக் கொடும் வாதைகளுக்கு ஆணையிட்டார் சோழப்பேரரசர்.

இவற்றையெல்லாம் அறியாத விரதை ஒரு பட்ச காலம் வரையில் காத்திருந்தாள். அவன் திரும்பவில்லை. அவனுக்கு நேர்ந்திருந்த கதிகள் பராபரியாகக் காதில் விழுந்தன. அவள் புழுவாய்த் துடித்தாள். வெளியுலகின் அனுபவங்களையே சற்றுமறியாத அப் பேதையுள்ளம் வெதும்பித் தத்தளித்தது. முடிவாக அவள் நாட்டின் பஞ்ச நிலைமைகளை விளக்கியும், முனியதரயனின் செயலை மன்னிக்கும்படியும் மன்னருக்கு வேண்டுகோள் ஓலை விடுத்தாள். அது பலனளியாது போகவே, வரிப் பொருள்களின் நஷ்டஈடுகளுக்காகத் தம் வீட்டிலிருந்து பொன்னணிகள் அனைத்தையும் சமூகத்துக்கு அனுப்பி வைத்து, அவனது விடுதலையைக் கோரினாள். பத்து தினங்கள் கழிந்துவிட்டன. தலைநகரிலிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை.

வனிதையின் உள்ளத்தில் வைராக்கியம் பிறந்தது! சவுரிராஜனின் சந்நிதிக்கெதிரே வந்து நின்று, 'நான்காம் நாள் மாலைக்குள் அவன் திரும்பாவிடில், அந்தன்னிரவில் எரிதணல் மூட்டி எழில் உடம்பைப் போக்கிக் கொள்வேன்' என்று சத்திய உறுதி கொண்டு விட்டாள்.

புன்னகை பூத்து நின்ற அக்கபட நாடகதாரி அப்போதும் சோதனையிட்டான்! அந்த நான்காம் நாள் இரவின் கடைசி விநாடி வரையில் எவ்வித முகாந்திரமும் தெரியவில்லை. பஞ்சப் பிணியில் வாடும் மக்களுக்குத் தன் பொருள்களை வாரி வழங்கினாள் வனிதை.

கரிய வானத்தின் முகட்டில் வைர மின்மினிகள் இறைந்து கிடந்தன. காட்டு மரத் துண்டுகளைக் குவித்து அவன்

TWO REASONS WHY

MAX FACTOR'S DUAL PURPOSE FACE POWDER

MAKES ALL OTHERS OLD-FASHIONED!

1

When you need but a sheer transparent veil of flattery for your complexion, in your true skin tone, puff on Max Factor DUAL PURPOSE Face Powder extra lightly, brush away the excess, and you will have a more natural-looking complexion loveliness than you've ever known before.

2

When you need a light cover-up for those pesky blotches, freckles or aging shadows ...puff on Max Factor DUAL PURPOSE Face Powder more freely. You can be confident your complexion will be perfectly flawless because DUAL PURPOSE Face Powder goes on better, adheres better, covers better.



Max Factor DUAL Purpose Face Powder is the modern face powder, scientifically compounded to give your skin that satin-smooth matte finish that is every woman's desire, either way you use it. Comes in shades carefully blended for every type of complexion coloring. Fluffy-light, it never looks heavy or "masky."

P.S. Pleasantly fragrant ... economical, too!

Dual-Purpose

Face Powder

MAX FACTOR

HOLLYWOOD

Sole Agents in India: ORIENT COSMETICS PRIVATE LTD., Madras - Bombay - Calcutta

மூட்டிய தீ வானுற உயர்ந்து செம்பொறிகள் தெறித்தன. அவள் கரம் குவித்து அத் தீயை வலம் வந்தாள். இன்னும் இரண்டே விநாடிகளில் அவளது பூதவுடல் மறைந்து விடும். அதுகாறும் அவள் அல்லும் பகலுமாக ஆராதித்த அத்தெய்வத்தின் திருவுள்ளமே இப்படியானால் இதை எவ்வாறு மாற்ற முடியும்? அவள் மும்முறை சுற்றி விட்டு ஆகாய வெளியை நோக்கிக் கரம் குவித்தாள்; தீயின் படபடப் பொலியில் அப்பரமன் சிரித்தான்; அடுத்தகணம் அவளது கால்கள் பூமியை விட்டு எழும்பிவிட்டன. ஒரு விநாடிப் பொழுதுக்குள் ஒரு சுழற்சி! கண்மூடிப் பாயும் தீயில் இருந்த அவளது கரத்தை அவ்வளவு உத்வேகத்துடன் பற்றி இழுத்தது யார்? ஒருகால் அப்பரமனேதானோ?

அவளது உடலுக்கோர் பெரும் அதிர்ச்சியே நிகழ்ந்து விட்டது. ஒட்டியிருந்த கண்ணிமைகளைப் பிய்த்துக் கொண்டு உற்று நோக்கினாள். எலும்பும் தோலுமாகக் காணப்பட்ட அங்கிருந்த உருவம் தான் அவளைப்பற்றி இழுத்தது என்பது அவளுக்கு விளங்கிற்று. ஆனால் அது யார்? சரியாகப் புரியவில்லை. மாயாவியான பரமன் எந்த உருவில்தான் தோன்ற முடியாது?

விரதை கண்களைக் கசக்கி விட்டபடியே அவ்வுருவை நெருங்கி வந்து கவனித்தாள். அவன் வேறு யாருமில்லை. அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தம பக்தன் முனியதரையனேதான்! ராஜதண்டனைகளின் விளைவுகளால் கட்டமைந்த அவனுடைய அழகுத் திருவுருவம் மாறியும், வந்த வேகத்தில் சக்தி இழந்தும் காணப்பட்டான். அவன் எப்படி இத்தருணத்தில் இங்கு வந்து சேர்ந்தான்? இதுவும் அந்தப் பரமனின் சாகசத்தில் ஒன்றுதான்.

தீயின் ஒளியில் அவனது பலஹீனமான நிலை அவளுக்குத் தெரிந்தது. அவனது விழிகள் பசியின் கோர சக்தியை அறிவித்தன. மறுகணம் அவளது தள்ளாடிய உடலுக்கும் எங்கிருந்தோ ஒரு அபூர்வ சக்தி ஏற்பட்டு விட்டது. அவனைக் கரம் பற்றி அழைத்தபடியே வீட்டை நோக்கி வேகமாகக் கிளம்பினாள்.

அங்கே அத் திறந்த வீட்டைப் பஞ்சத்தின் சக்தி ஆட்கொண்டு போயிருந்தது! இண்டு இடுக்குகளும் பரம சூன்யமாகக் காட்சியளித்தன. அவள் இதற்காக ஏங்கவில்லை. பரமனின் பசியும் பாமரனின் பசியும் ஒன்றுதானே? அவளது விடாமுயற்சியின் பயனாக ஏதோவொரு மூலையிலிருந்த மட்பாண்டங்கள் அவளது கைகளுக்குத் தட்டுப்பட்டன. அவைமட்டிலும் பிறர் விழிகளுக்குத் தெரியாமல் எப்படித் தப்பித்திருந்தனவோ!

விரதை அவற்றை முற்றத்தின் நிலவொளிக்கு எடுத்து வந்து ஆராய்ந்தாள். அவள் உள்ளம் பெரு மகிழ்வு கொண்டது; முதற் சட்டியில் ஐந்து நாழியளவு அரிசியும், இரண்டாவதில் முக்கால் நாழியளவு பயற்றம் பருப்பும், மற்றொன்றில் இரு நாழியளவு நெய்யும் இருந்தன. பரமன் வைத்திருந்த எஞ்சிய பொருள் அவைதான். இவற்றை ஒன்று கூட்டி உருவாக்கும் பாகவகை தெரியாது. அவள் சற்றே நினைத்தாள்; பின்னர் அவற்றையெடுத்துக் கொண்டு, அக்கினியிருந்த இடத்துக்கு விரைவாகச் சென்றாள். சற்று முன் அவளையே ஆகாரமாகக் கொள்ளவிருந்த அக்கினித் தேவன், இப்போது அவளுக்கே ஆகாரம் தயாரித்துக் கொடுக்க வேண்டியதை யெண்ணிப் பெருநகை புரிந்தான்.

சற்று நேரத்துக்குப் பின், பாகமான அமுதையெடுத்துக் கொண்டு விரதை வீட்டுக்குத் திரும்பினாள். முற்றத்தின் நிலவொளியில், சட்டியில் இருந்தவற்றை இரு இலைச் சருகுகளில் வடித்து, அவனெதிரில் ஒன்றை வைத்தாள். பாவம்! அதுவரையில் அறியாத அக்குடல் பசியின் தவிப்பு அப்பொழுதுதான் அவளையும் உந்திற்று. மற்றொன்றைத் தன் பக்கத்துக்கு எடுத்துச் சென்றாள்.

ஆவி பறந்த அப் பொங்கலை யெடுத்து அவன் முதற்கவளமாக வாயில் போட்டுக் கொண்டான். அடுத்த கணமே—



அவன் உடலில் ஏதோவொரு உணர்ச்சி உத்வேகத்துடன் எழுந்து விட்டது. கையை உதறியபடியே, ''தேவி, தேவி! இத்தேவ பாகத்தை நான் இது வரை சுவைத்ததுமில்லை, கேள்வியுற்றதுமில்லை. அவ்வமுதுக்குக் காரணபூதமான கண்ண புரநாயகிக்கே இது உரித்தானது! நான் இதைப் புசித்ததும் அபசாரம்!'' என்றான் பரவசத்துடன்.

அவளும் அப்போதுதான் முதல் கவளத்தை வாயில் உட்கொண்டிருந்தாள். பரபரப்பாக அவளும், ''தேவ தேவா! நான்தான் பெரும் அபசாரம் புரிந்து விட்டேன். ஒரு பருக்கையால் உலகத்தின் பசியைப் போக்கிய அந்த உத்தமச் சவுரிராஜனுக்கே உகந்த இவ்வமுதை இவ்வடியாள் தனக்கென நினைத்து விட்டதும் மகா பாதகம்!'' என்றாள் மெய்ச்சிலிர்ப்புடன்.

பக்தியின் மெய் நிலையில் அவர்கள் மனம் ஒன்றிச் சமைந்துவிட்டனர். எதிரே யிருந்த அர்ச்சனைமிக்க உணவுப் பொருள் என்னவாயினவென்பது பற்றியும் அவர்களுக்குச் சிறிதும் உணர்வில்லை!

* * *

மறு நாள் காலை, தம் பரிவாரங்களுடன் சோழ வேந்தர் ராமநதீச்சுரமுடையார் ஆலயத்துக்கு வந்திருந்தார். அவரது செவிகளுக்கோர் அதிசயச் செய்தியை யாரோ கொண்டுசென்றனர்.

அதிகாலையில் ஆலயக் கதவுகள் திறந்து உட்சென்ற பூசகர்களுக்குப் பெரும் வியப்பு காத்திருந்தது. வாசற்படி முதலே, வழி நெடுகிலும் சிந்தியிருந்த அமுதைக் கண்டனர். அதனின்றும் ஒரு அலாதியான மணமே கமழ்ந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து செல்லுகையில், மூலக் கருவறையிலுள்ளிருந்த அச்சவுரிராஜப் பெருமாளின் திருவாயிலும், தாயின் திருவதரங்களிலும் வெண்ணிறப் பொங்கலமுது ஒட்டிக் கொண்டிருந்தது. பட்டர்கள் திகைத்தனர். நீண்டநேர ஆராய்ச்சிக்கும், விசாரணைகளுக்கும் பின்னரே தெருவெல்லாம் உதிர்ந்து கிடந்த சோற்றுப் பருக்கைகள், மேல வீதியிலிருந்த விரதையின் வீட்டுக்கு வழிகாட்டி விட்டன!


கூடத்தில் கூப்பிய கரமாகச் சாய்ந்து கிடந்த முனியதரையனையும், முற்றத்தின் ஓரத்தில் துவண்ட கொடியாக இலையின் முன் கிடந்த விரதையையும் அவர்கள் கண்டனர். அவர்களிடையே அப் பொங்கல் பாண்டமும் எஞ்சிய திருவமுதுடன் அங்கே யிருந்தது. அவர்கள் முகத்தில் தெய்வ ஒளி வீசிற்று!

ஊர் திரண்டு வந்து இந்த அதிசயக் காட்சியைக் கண்ணுற்றது.

முதன் முதலாக அத்திருமால் ஆலயம் வந்து சேர்ந்த சோழ மன்னர், மனம் வெகுவாக மாறி முனியதரையனைத் தழுவிக்கொண்டார். அவனுக்களித்த தண்டனைகளுக்கு வெட்கி, அவற்றுக்குப் பரிகாரம் பெறும் வகையில், அந்த ஆலயத்துக்கும் நிபந்தமளித்தார் அரசர். அப்பெருமானின் அன்றாட அர்த்தஜாமப் பூஜைக்கு இதே முறையிலும், அளவிலும் பொங்கல் தளிகை நடத்தி, அதை எளியோர்க்கு விநியோகித்து விடும் திட்டத்துடன் 'முனியதரையன் கட்டளை' என்ற பக்திக் கட்டளை உருவாயிற்று!

* * *

சரித்திரம் தழுவிய இவ்வரலாற்றினைப் பிரயாசையுடன் அறிந்தேன். 'முனியதரையன் கட்டளை' நாளடைவில் தேய்ந்து, 'முனியோதரன் கட்டளை' யாகி அதுவும் மாறி, 'முனிசுவரன் கட்டளை' யாகவும், முனிசுவரன் பொங்கலெனவும் சொல் வழக்கில் மருவி வந்து விட்டன. அந்தக் கண்ணபுரப் பெருமான் சந்நிதியிலும், தாயார் சந்நிதியிலும் கூப்பிய கரமாக நிற்கும் விரதையும், முனியதரையனும் பக்தியினால் ஒன்றுபட்ட இதயங்கள். அவர்களால் இதய முருகிப் பாடப் பெற்ற பதிகங்கள் கால அளவில் எங்கு புதையுண்டனவோ?



காட்டிக் கொடுத்த கருணை

பக்கத்து வீட்டிலே யாரோ ஒருபெரியவர், இலக்கிய அநுபவத்திலே தோய்ந்தவர் போலிருக்கிறது. பிள்ளைப் பாசத்தின் தன்மையை விளக்கி அழகான பாடல் ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தார். கடைசி அடியில் ஒரு பகுதியாக, 'கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்?' என்று காதில் விழுந்தபொழுது என் உள்ளம் சிலிர்த்தது! மடியிலே படுத்திருந்த என் பிள்ளை நந்துவை அப்படியே மார்போடு அணைத்துக் கொண்டேன்.

"பிள்ளைப் பாசம் என்பது பொல்லாதது; முற்றும் துறந்த முனிவனையும் அது விட்டு வைப்பதில்லை. ஞானியை மட்டுமென்ன, கொலை வெறி பிடித்த கொடியவனைக் கூட அது இலகுவில் 'கண்ணி' வைத்துப் பிடித்து விடும்! அந்த மாய வலைக்கு எந்த இதயமும் நிச்சயமாகத் தப்பிவிட முடியாது...."

பெரியவரின் பேச்சு என்னை எங்கோ தூக்கிக் கொண்டு போயிற்று. மின்னலைத் திரித்துப் போட்ட மாதிரி நீள நீளமான தங்க நிறச் சடைகள் காற்று வாக்கிலே ஊசலாட நீலகண்டப் பரதேசியார் வந்து என் எதிரே நின்றார். கூடவே, என்றோ—எப்பொழுதோ நந்து பிறப்பதற்கு முன்னால் ஓடிப்போன நாட்களும் நினைவுகளும் என்னை வந்து சூழ்ந்து கொண்டன!

அப்பொழுது நான் பாண்டி நாட்டிலே காட்டிலாகாவில் வேலை செய்து கொண்டிருந்தேன். கல்யாணமாகி ஐந்து வருஷங்களாகியும் எனக்குப் பிள்ளை பாக்கியம் கிட்டவில்லை. என் மனைவி காந்தாமணிக்குத்தான் ரொம்பவும் குறையாக இருந்தது. அப்போது யாரோ, மலையடிவாரத்துக்கு மேலேயுள்ள அருவியில் குளித்து விட்டு, பொய்கைக் கரையிலுள்ள தேவதாரு மரத்தை வலம் வந்தால் சந்தான பாக்கியம் ஏற்படும் என்றார்கள். காந்தாமணியும் நானும் அவள் பிள்ளைபோல வளர்த்து வந்த பச்சைக் கிளியுமாக ஒரு நாள் புறப்பட்டோம். இருவரும் குளித்து விட்டுச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஒரு செங்குரங்கு வந்து கையை நீட்டி எங்களிடம் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டது. அப்போது அங்கு வந்து சேர்ந்த நீலகண்டப் பரதேசி மேற்கண்ட கதையைச் சொன்னார்.

★

நீங்கள் தினசரிப் பத்திரிகைகளிலே பிரபல கொள்ளைக்காரனான கோட்டி ரெங்கனைப் பற்றிப் படித்திருப்பீர்கள்! 1946-ம் வருஷம் என்று நினைக்கிறேன். இந்தச் சுற்று வட்டாரத்தில் எந்தக் கிராமத்தில் போய்க் கேட்டாலும் அவனைப் பற்றிச் சொல்லுவார்கள். பொதுவாகவே போலீஸாருக்கு அகப்படாமல் எத்தித் திரிந்த ரௌடிகளும் கேடிகளும் அவ்வப்பொழுது வாழ்ந்துதான் வந்திருக்கிறார்கள். ஆனால் கொள்ளையடிப்பதிலும் ஒரு 'தர்மத்தை'க் கடைப்பிடித்த கள்ளர்கள் எத்தனையோ பேர்கள் இருந்திருக்கிறார்கள் — ஏன், ஜம்புலிங்கத் தேவனை ஏழை பங்காளன் என்று மக்கள் பாராட்டவில்லையா என்ன? ஆனால் கோட்டி ரெங்கன் மகா மூர்க்கன். துஷ்ட மிருகங்களிலே பசி எடுக்காத பொழுதும் கண்ணில் கண்ட மிருகங்களையெல்லாம் அடித்துக் கொல்லும் வேங்கைப் புலிகளும் உண்டல்லவா? அதைப் போன்ற மனப்பாங்கு உடையவன்.

சின்னப் பிள்ளையாக இருக்கும்பொழுதே அவனைக் கண்டு ஊராரெல்லாம் பயப்படுவார்களாம். எப்பொழுதும் கக்கத்தில் கூர்மையான பாளை அரிவாளை இடுக்கிக்





கொண்டே அலைவான் கோட்டி. கனரான் வீட்டுத் தோப்பு என்றெல்லாம் கணக்குக் கிடையாது. கணப் பொழுதுக்குள் குலைகுலையாக இளநீர்க் காய்களை இறக்கிச் சீவிக் குடித்து விட்டுப்போய்விடுவான். இந்தச் சூழ்நிலையில் வளர்ந்த அவனுக்கு நாளடைவில் 'எது தலை, எது இளநீர்க் குலை?' என்ற பாகுபாடெல்லாம் மறந்து போயின. கொள்ளை, வழிப்பறி, எதிர்த்தால் கொலை—என்ற ரீதியில் சமூகத்துக்கே ஒரு எதிரியாய்த் தலை யெடுத்து விட்டான். இப்பேர்ப்பட்ட கொடியவனான கோட்டிக்கு இருபத்தைந்தாவது வயது தொடங்கும்பொழுது அவனுடைய 'ஜாதகத்தை' வைத்துக் கொண்டு போலீஸார் வெகு மும்முரமாக அவனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அவன் மேல் எத்தனையோ கொள்ளை வழக்குகள்! அதோடு புலன் விசாரிக்கச் சென்ற போலீஸ் இலாகாவினர் ஒருவரைக் கொன்றுவிட்ட குற்றமும்—யார் கொன்றார்களோ, தெரியாது.—அவன் தலையில்தான் விழுந்திருந்தது!

ஆனால் போலீஸின் முயற்சிகள் எல்லாம் ஒன்றும் பலிக்கவில்லை. ஆள் எங்கே பதுங்கியிருக்கிறான், எப்படி நடமாடுகிறான் என்பதைப் பற்றிய சரியான துப்புக்களே கிடைக்கவில்லை. பின்னர் எப்படியோ தெற்கு மலை எஸ்டேட்டின் காடுகளில்தான் அவன் நடமாட்டம் இருந்து வருவதாகத் தகவல் கிடைத்தது.

இவ்வளவு கோட்டி போலீஸ் இலாகாவுக்குப் பெரும் பிரச்னையாகிச் சதா அவனைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க, அவனும் கொஞ்சமும் பயப்படாமல் திரிந்து கொண்டிருக்கும் நாளில் கோட்டியின் வாழ்வில் ஒரு முக்கிய—ஆனால் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. 'விதி' என்கிறார்களே, அதற்கு 'விலக்கு' என்று எந்த மனிதனாவது உண்டா?

அடை மழை காலத்தில் ஒரு நாள் சாயங்காலம் நான்கு மணிக்கு ஆரம்பித்த புயலும் மழையும் இரவு பன்னிரண்டு மணி வரையிலும் ஓயவில்லை. சுழற்காற்றும் மின்னலும் ஒன்றை யொன்று வெட்டிப் பிளந்து கொண்டிருந்தன. காட்டு மரங்கள் 'ஹோ..' என்ற பேரிரைச்சலோடு தலைவிரி நடனம் புரிந்தன. இந்தக் கொள்ளை மழையிலும் புயலிலும் நிசி நேரத்தில் தன் யதாஸ்தானத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் கோட்டி. புயலும் இருளும் அவன் போக்கைத் தடுத்தன. அதோடு போலீஸாருக்கும் விஷயம் எப்படியோ தெரிந்து அங்கங்கே ரகசியமாகத் தேட ஆரம்பித்தனர். கோட்டியும் உஷாராகி விட்டான். மழையிலே நெடுநேரம் நனைந்தபடியால் உள்ளுக்குள்ளே கதகதவென்று கனல் பறப்பதைப் போல ஒரு உணர்வு. தலையிலே 'விண் விண்' என்று மண்டையிடியும் சேர்ந்து கொண்டு அவனை அலைக்கழித்தது. நேரே ஓடி அருகில் இருந்த ஓலைக் குடிசையின் கதவைத் தடதடவென்று தட்டினான்.

கதவு திறந்தது!

கோட்டியின் வாழ்விலும் 'ஒரு புதிய திருப்பம் என்றே சொல்ல' வேண்டும். அந்தக் குடிசையில் கிழவி ஒருத்தியுடன் பகவதி என்ற இளம் பெண்ணும் இருந்தாள். இருளிலே பிறந்து இருளிலே வளர்ந்துவிட்ட ஒரு இருண்ட மனிதன் கோட்டி! முதன் முறையாக வெளிச்சத்தைப் போல வியப்போடு அவளைப் பார்த்தான். கிழவி அவனை அடையாளம் தெரிந்து முதலில் பதறினாள். என்றாலும் சட்டென்று தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு உள்ளே வந்தாள். அவனுக்கு மாற்றுவதற்குத் துணியும், சாப்பிடுவதற்குப் பழைய கஞ்சியைச் சுடவைத்தும் கொடுத்தாள். கோட்டி ஏதோ ஒரு பிரமையில் இயந்திரத்தைப் போல இயங்கினான். மனத்துக்குள்ளே இத்தனை நாளுமில்லாத ஒரு 'பயம்' வந்து சூழ்ந்து கொண்டது. போலீஸை நினைத்தபொழுது ஏனோ உடம்பு 'வெட வெட' என்று நடுங்கியது! பகவதி அவன் நடுக்கத்தைப் போக்கினாள். தலைக்குப் பற்று அரைத்துப் போட்டாள்! என்னென்னவோ புத்திமதிகளை விடிய விடியச் சொன்னாள்! பெண் மனம் புதிர் என்பார்களே, எவ்வளவு உண்மை!

விடிய ஒரு சாமத்தில்!—பகவதி இருள் பிரிவதற்கு முன் எழுந்து பாயைப் பார்த்தாள். கோட்டி மாயமாகமறைந்து போய் விட்டான். அவளையுமறியாமல் நெடியதொரு பெருமூச்சு நெஞ்சாழத்திலிருந்து விடுபட்டு வந்தது.

கோட்டி ரெங்கனும் அன்று முழுதும் 'இரை' எடுக்கவில்லை! ஏதோ பறிகொடுத்தவனைப் போல அவனுடைய இருண்ட குகைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். முதல் நாளிரவு கிழவியின் குடிசைக் கதவைக் கையால் தட்டிய சத்தம் இன்னும் அவன் நெஞ்சுக்குள் கேட்டுக் கொண்டிருப்பதைப் போல "இருதயம் 'படக், படக்' என்று அடித்தது.

"இந்தா பாரு, நீ இந்தத் திருட்டுத் தொழிலை விட்டுப் போடு; உன்னையே நான் கட்டிக்கிறேன்" என்று பகவதி கூறிய வார்த்தைகள் குகை வாசலில் நின்று இப்போது கூப்பாடு போட்டன!

"பைத்தியக்காரி! நான் நல்ல வழிக்கு எப்படி வரமுடியும்? இலேசிலே விட்டு விடுவாங்களா? செஞ்ச பாவத்துக்கே என்னைக் கண்டதுண்டமா வெட்டிக் கழுகுக்குக்கே போடணும்..." என்று அவன் உள் மனம் புலம்பியது.

இந்த மனப் புலம்பலிலே பல நாட்கள் கழிந்து மறைந்து விட்டன.

திடீரென்று ஒருநாள் மிமலி 'இப் பலியோ, பிறகோ?' என்ற நிலையில் இருப்ப தாகக் கோட்டிக்குத் தெரிய வந்தது. இரவிலே ஓடோடியும் வந்தான். அவன் வருகைக்காகவே காத்திருந்தவளைப் போல் பேத்தியைப் பிடித்து அவன் கையில் கொடுத்துவிட்டுக் கண்களை மூடி விட்டாள் மிமலி. பாவதி கோட்டியின் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறினாள். அவளை அவன் எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் விழித்தான். பின்னர் அந்த அர்த்த ராத்திரியிலே இருவருக்கும் கல்யாணம் நடந்தது. புறவாசல் மன்னியிலே புளித்து உடைந்த மஞ்சள் விரலி பாவதி யின் கழுத்துக்கு ஏறிவிட்டது!

போலீஸாரின் தேடும் படலம் ஒரு பக்கம்; கோட்டியின் ரகசிய நடமாட்டம் ஒரு பக்கம். இதற்கிடையில் எப்படித் தான் இரண்டு வருடங்கள் ஓடி மறைந் தனவோ? எத்தனை மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன? பாவதி கோட்டியின் மனைவி மட்டுமல்ல, இப்போது பச்சைக் குழந்தை யொன்றின் தாயாகவும் இருந்தாள்.



போலீஸாருக்கும் எப்படியோ அவன்மேல் சந்தேகம் விழுந்து அவளையும் கவனிக்க ஆரம்பித்து விட்டனர்.

அன்றிரவு குழந்தையைப் பார்க்கக் கோட்டி ரெங்கன் வந்தபொழுது பாவதி கண்ணீர் வெள்ளத்திலே மிதந்தாள்.

"இனிமேல் நீங்கள் என்னையும் என் குழந்தையையும் மறந்துடுங்க. உங்க ளாலே எங்களுக்கு ஏதாவது நல்லது செய்யணும்னு நான் சொல்றதைக் கேளுங்க. உங்களுக்குக் கழுத்தைக் கொடுத்த பாவத்துக்கு ஒரு புள்ளை கிடைச்சப் போச்சு! அதையும் அநியாய மாகக் கொன்று போடாதீங்க. போலீஸ் காரங்க இப்போ தினமும் இந்தப் பக்கமா வந்துட்டுப் போறாங்க; நீங்க அகப் பட்டுக்கிட்டீங்கன்னு என்னாலே அதைத் தாங்க முடியாது. எங்கேயாச்சும் ஓடிப் போயிடுங்க..." என்று அவன் காலைப் பற்றிக் கொண்டு கதறினாள்.

அவள் துயரத்தைக் காணப் பொறுக் காத கோட்டி திடீர் என்று மின்னலைப் போல் ஓடிமறைந்து விட்டான்.

நாட்கள் பல உருண்டன.

குட்டியைப் பறி கொடுத்த வேங்கைப் புலியைப்போல் 'குழந்தையை' எண்ணித் தவித்தான் கோட்டி. பின்னையின் நினைவு அவனை வாட்டி வதைத்தது. பாவதியை மறந்துவிடக் கூட அவன் மனம் இசைந் தது. ஆனால் பெற்ற மதலையை மறக்கும் வழி தெரியாது மறுகினான் அவன்-அந்தக் கொலைகாரன்! தன் கடந்தகால வாழ்க் கையை எண்ணி மனத்துக்குள் மிகவும் வெறுப்படைந்தான். தற்காப்புக்காக இடுப்பிலே செருகி வைத்திருந்த கைத் துப்பாக்கி பின்னைப் பூச்சியைப் போல அரித்துப் பிடுங்கியது. இன்னும் எதற் காக அந்தக் கொலைக் கருவி?

இடமோ நடு வனாந்தரம். நேரமோ நடு இரவைக் கடந்த நிசிப்பொழுது. மலையிடுக்கில் ஒரு பள்ளத்தாக்கில் மல் லாந்து படுத்த வண்ணம் ஆத்ம சிந்தனை யில் ஈடுபட்டிருந்த கோட்டி சட்டென்று இருளுக்குள் எழுந்து உட்கார்ந்தான். கண்முன்னே வெறும் இருள்! இருள்! இருள்! துப்பாக்கியைக் கையிலே எடுத் தான்! இன்னும் ஒரே ஒரு குண்டு தான் அதில் இருந்தது!—தற்கொலை புரிந்து கொள்ளலாமா என்ற கோழைத் தனம் — கண்களிலே நீர் முட்டியது கோட்டிக்கு. ஏதோ இரண்டு பிஞ்சுக் கைகள் அவன் முகத்தை, அந்தக் கண்ணீரை அளாவுவதாக ஒரு பிரமை! அவ்வளவு தான்; குலுங்கிக் குலுங்கி அழுதான் கோட்டி. கொஞ்ச நேரத்துக் குள் என்ன நினைத்துக் கொண்டானோ?- ஒருவேளை எஞ்சியிருக்கும் ஒரு தோட்டா வையும் யாருக்கும் திங்கிழைக்காத வகை யில் தொலைத்து விடலாம் என்று எண்ணி னானோ என்னவோ? ஆகாயத்தை நோக் கிக் குறிபார்த்த வண்ணம் துப்பாக்கி யைப் பிடித்தான். கருகும் என்ற இருளைக் கிழித்த வண்ணம் 'டமீல்' என்று குண்டு வெடித்தது! மறுகணம்...? ஒரே பிரளயம்! 'கிரீச், கிரீச்' என்ற இரைச்சல்! கோட்டி பதறிப் போய் எழுந்தான். அவன் மார்பின்மேல் பொத்துப் பொத் தென்று ஏதோ விழுந்தன. என்ன புலிக் குட்டிகளா?.....அலறிப் புடைத்துக் கொண்டு இடுப்பிலிருந்த தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியை உரசினான்! சருகுக் கூளங்களோடு ஐந்து குரங்குக் குட்டிகள்-எல்லாம் கருங்குரங்குகள்-மூங்கு மூலே வெளிச்சத்தைக் கண்டு பயந்து பம்மின.

கோட்டியின் மூளை துரிதமாக வேலை செய்தது. 'பாவம்!' என்று அவனையும் அறியாமலே அவன் உதடுகள் முணு முணுத்தன. குண்டு வெடித்த சத்தத்தில் குட்டிகள் பதறிப்போய்த் தாயின் வயிற் றைப் பற்றியிருந்த பிடியை விட்டு விட்டன போலும்! குட்டி பிடியை விட்டு விட்டால் மீண்டும் சேர்த்துக் கொள் ளாமல் அப்படியே கடித்துக் குதறிவிடும் பழக்கம் கருங்குரங்குகளுக்கு உண்டு என்பது கோட்டிக்குத் தெரியும்; அதை எண்ணிய பொழுது அவன் உள்ளமும் தவியாகத் தவித்தது.

காலை விடிந்ததும் கோட்டியின் நிலை தர்மசங்கடமாகப் போய் விட்டது. ஐந்து குட்டிகளும் அவன் காலடியையே சுற்றிச் சுற்றி வந்தன! கோட்டிக்குக் குழந்தையின் நினைவு தலை தூக்கியது. யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான் கோட்டி ரெங்கன். "ஆமாம், இந்தக் குட்டிகளைப் பாவதியிடம் கொண்டு சேர்த்து விட்டு அப்படியே குழந்தையையும் ஒரு தடவை — ஒரே யொரு தடவை பார்த்து விட்டு வந்து விட்டால் போதும்! அப்புறம் எங்கே யாவது கண்காணாத இடத்துக்குப் போய் விடலாம்!" என்று எண்ணினான். மனத் திலே ஒரு வெறி பிறந்தது. 'விறு விறு' என்று குட்டிகளைத் தூக்கிக் கொண்டு அடிவாரத்தை நோக்கி இறங்கினான்.

கடுவாய் வனையைத் தாண்டியதும் வட பாரிசத்திலிருந்து ஒரு குண்டு பாய்ந்து வந்து அவன் தலையிலே தாக் கியது. சுருண்டு போய்க் கீழே விழுந் தான். அவன் கையிலும் தோளிலும் தொற்றிக்கொண்டிருந்த குரங்குக் குட்டி கள் பயங்கரமாகக் கத்திக் கொண்டே திக்குக்கு ஒன்றாகச் சிதறியோடின. திடீ ரென்று 'பிஸ்' சத்தம் கேட்டதும் 'தட தட' வென்று போலீஸ்காரர்கள் ஓடி வந்தார்கள். பத்து வருஷங்களாக இலக்குவைத்த குறி இன்று அடிபட்டுவிட் டது! என்றாலும் குறி தவறாது கட்டசர்க் கிள் இன்ஸ்பெக்டர் உள்பட எல்லோரும் கண்ணீர் விட்டனர். குருதி வெள்ளத் துக்கு மத்தியில் துடித்துக் கொண்டிருக் கும்ஒரு இருடனையும் அவன் தலைமாட்டில் பிள்ளைகளைப்போல உட்கார்ந்து ஏதோ கத்திக் கண்ணீர் வடிக்கும் ஐந்து குரங்குக் குட்டிகளையும் பார்த்தபோது யாருக்குத் தான் மனம் உருகாது?..."


சாமியார் தாடியைக் கோதி விட்டார். கதை முடிந்து விட்டது:

"ஆமாம்; இப்போது நீங்கள் ஆகாரம் கொடுத்த குரங்குகள்?..."

"கதையிலேயே வந்த குரங்குகளின் சந்ததிகள்!"

"உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது? கூட இருந்து பார்த்த மாதிரி சொல்கிறீர்களே!" என்று கேட்டேன்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவர் சட்டென்று எழுந்து வந்த வழியைப் பார்த்து நடையைக் கட்ட ஆரம்பித்தார். ஆனால் போகிற போக்கில் "என் பெயர் நீலகண்டப் பரதேசி! ஒரு காலத்தில் என் 'சேவைக்'காகப் போலீஸ் டிபார்ட் மெண்ட் எனக்கொரு வீரப் பதக்கத்தை அளித்தது! .." என்று முணு முணுத்துக் கொண்டு போனது காதில் விழுந்தது.


நீங்கள் வாங்கும்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களின்
உத்திரவாதமுள்ள அடையாளம்
I.M.M.C
MADRAS-3
உற்பத்தியாளர்.
இந்தியன் மெட்டல் & மெட்டலர்ஜிகல்
கார்ப்பொரேஷன்
498, தங்கசாலைத்தெரு, மதராஸ்-3.


அம்பீஸ்
ஊறுகாய்கள்
எங்கும் கிடைக்கும்.
MANGO PICKLE
1 LB NETT
AMBI'S CAFE
6, BROADWAY, MADRAS.
AMBI'S CAFE,
MADRAS & VELLORE.



என்ன நடக்குமோ?



ஐந்து பூனைக் குட்டிகள்
அணி வகுத்துச் சென்றன;
வெய்யில் கொளுத்தும் வேளையில்
வேக மாகப் போயின.

கடுக டுத்த முகத்துடன்
காலை எட்டிப் போட்டன.
படை யெடுக்கும் வீரர்போல்
பாய்ந்து பாய்ந்து சென்றன.

கண்கள் இரண்டும் சிவக்கவே,
காது நிமிர்ந்து நிற்கவே,
என்ன கோபம், கோபமோ?
எங்கு அவைகள் போகுமோ?

சீன வெடியைக் கொளுத்தியே
சின்னப் பூனைக் குட்டிமேல்
சீனு போட்டு விட்டதால்
தேம்பித் தேம்பி அழுததாம்.

அன்னை மாரி டத்திலே
அழுது கொண்டே சென்றதாம்.
கண்ணீர் வழிய நடந்ததைக்
கலக்கத்தோடே சொன்னதாம்.


கேட்ட வுடனே அன்னைமார்
கிளம்பி விட்டார். சீனுவின்
வீட்டைத் தேடிச் செல்கிறார்.
மேலே என்ன நடக்குமோ?







அழ. வள்ளியப்பா



உங்கள் குழந்தைக்கு
இங்கிலே ஏற்பட்டால்
MANNERS
GRIPE MIXTURE
MANNERS
GRIPE MIXTURE
மானேர்ஸ்
கிரைப் மிக்சர் கொடுத்து,
அது சிரித்து
மகிழ்வதைக் கண்டு
அனுபவியுங்கள்.
ஞாயிறுதோறும் காலை 10-30 மணிக்கு 19 மீட்டர்களில் ரேடியோ ஸிலோனில் ஒரு மணி நேரம் ஒலிபரப்பப் படும் "துனியா ரங் ரங்கீலி" என்ற பிலிம் பாடல்களைக் கேளுங்கள்.
உன்னத தரத்தின் இந்த சின்னத்தைக் கவனியுங்கள்.
இது ஒரு மானேர்ஸ் தயாரிப்பு
GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. BOMBAY · CALCUTTA · DELHI · MADRAS.


ஹாஸ்ய வெடிகள்
உங்கள் பேரன் என்மேல் பட்டாசைக் கொளுத்திப் போட்டான். நல்ல காலம்! என் மேல் படவில்லை!
ஏண்டா! பார்த்துப் போடக் கூடாதோ?
பார்த்துத்தான் போட்டேன். என்ன செய்வது? சில சமயம் குறி தவறி விடுகிறது!
பாலர் மலர்
நான் வாங்கிக் கொடுத்த பட்டாசு ஒன்றுகூட வெடிக்கவில்லை என்றாயே! இப்பொழுது பெரிய வெடிச் சத்தம் கேட்டதே!
அது நீங்கள் வாங்கிக் கொடுத்த சைக்கிளின் டயர். ரொம்ப நல்லா வெடிக்கிறது!
ஏண்டா! குழந்தை அழுகிறாய்?
எங்கப்பா அம்மாவை நாயே என்று வைது விட்டார்!
திருப்பி எங்கம்மா அவரை நரியே என்று வைது விட்டாள்!
அதற்கு நீ ஏன் அழுகிறாய்?
அப்போ நான் யாரு? ஊ... ஊ...!
மழையாய் இருக்கு. குடையை எடுத்துப் போய்ப் பள்ளிக் கூடத்திலிருந்து குழந்தைகளை அழைத்து வா!
1
2


1909-1949


1922
1912
1910
1902
டி.வி.சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை





தீபாவளிக்குச் சில நாட்கள் இருந்தாலும், சங்கரும் அவனது தம்பி குமாரும் கடைகளில் வாங்கப் போகிற வெடிகளை விடத் தாங்களே செய்யப் போகிற வெடிகளைப் பற்றித்தான் யோசித்த வண்ணமாக இருந்தார்கள். பக்கத்து வீட்டில் வசிக்கும் லக்ஷ்மணன், கிட்டாமணி, மங்கேஷ், ரவி நான்கு பேர்களும் அவர்கள் செய்து கொண்டிருந்த யோசனையில் கலந்து கொண்டார்கள்.


சங்கருக்கு இந்திரா என்ற பெயருள்ள ஒரு தங்கை இருந்தாள். ஆனால் சங்கர் ஏதாவது ரகசியமான காரியங்கள் செய்ய வேண்டும் என்று விருப்பம் கொண்டால் அவளை அருகிலே சேர்க்கமாட்டான். அப்படிச் சேர்த்தால் தாங்கள் செய்யும் இரகசியக் காரியத்தை அம்மாவிடமோ, அப்பாவிடமோ சொல்லி விடுவாள் என்ற பயம்தான். சங்கரின் வீட்டுத்தோட்டத்தின் வழியாகவும், லக்ஷ்மணன் வீட்டுத் தோட்டத்தின் வழியாகவும் பையன்கள் சென்று சந்தித்து யோசனை செய்தார்கள். கடைசியில் வெங்காய வெடிகள் செய்வது என்று நிச்சயம்செய்துகொண்டனர்.

''டேய், லக்ஷ்மணா! வெங்காய வெடி செய்வது எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சதுன்னா நம்மை அடிப்பார். 'பக்கத்து வீட்டுப் பையன்களோடு வெங்காய வெடி ஏதாவது செய்தேன்னு தெரிஞ்சது, அப்புறம் பார்த்துக்கோ' என்று சொல்லியிருக்கிறார்'' என்றான் சங்கர்.

'' டேய், சங்கர் ! அதையேதான் எங்க அப்பாவும் சொன்னார். உங்களோடு சேர்ந்து ஏதாவது வெங்காய வெடிகள் செய்தால் எங்கள் நாலு பேருடைய முதுகுத் தோலையும் உரித்து விடுவேனென்று பயமுறுத்தியிருக்கிறார் '' என்றான் லக்ஷ்மணன்.

உடனே குமார் குறுக்கிட்டு, '' டேய் ! நாம் இங்கே வெங்காய வெடிகளைச் செய்தால்தானேடா அவர்களுக்குத் தெரியப் போகிறது ? வாங்க, நாம் எல்லோரும் குளக்கரைக்குப் போய் யோசிக்கச் செய்யலாம்டா '' என்றான்.

குமார் சொல்வதுதான் சரி என்று எல்லோரும் வேகமாக ஒரு குளத்தின் கரைக்குச் சென்றார்கள். வெங்காய வெடிகளை எப்படிச் செய்வது என்று ஒருவருக்கு ஒருவர் கலந்து யோசனை செய்து, ஒரு விசாலமான இடத்தில் வெங்காய வெடிகளைச் செய்வது என்று நிர்மானித்தார்கள்.



வெங்காய வெடி

உடனே சங்கர், "டேய், லக்ஷ்மணா! அருகில் வா. நாம் வெடிகளை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். ஞாபகம் வைச்சுக்கோ. இல்லா விட்டால் நம் உயிருக்கே ஆபத்து வந்து விடும். நாம் இரண்டு பேரும் தனித்தனி கோஷ்டியாக இருந்து செய்யலாம். நானும் குமாரும் செய்யறோம். நீயும் கிட்டாமணியும் செய்யுங்கோ. மங்கேஷையும், ரவியையும் வீட்டுக்கு அனுப்பி விடு. அவர்கள் சின்னப் பையன்கள்" என்று மெதுவாகச் சொன்னான்.

"அதுதான் சரி. இப்பொழுதே நான் என் தம்பிகளை வீட்டுக்கு அனுப்பி விடுகிறேன். டேய் மங்கேஷ், ரவி! இரண்டு பேரும் வீட்டுக்கும் போங்கடா. ஹூம், ஹூம், சீக்கிரம்!" என்றான் லக்ஷ்மணன்.

மங்கேஷும், ரவியும் கண்களைக் கசக்கிக் கொண்டே மெதுவாகத் தங்கள் வீட்டை நோக்கிச் சென்றார்கள். மற்றவர்கள் நால்வரும் வெங்காயவெடி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

அப்பொழுது குமார், "அண்ணா, அண்ணா! யார் செய்கிற வெடி நன்றாக வெடிக்கிறதென்று பார்க்க வேணும். அதனாலே நாம் செய்கிற தெல்லாம் வெள்ளைக் காகிதத்தில் இருக்கட்டும். அப்போது தான் யார் செய்த வெடி என்று அடையாளம் தெரியும்" என்றான்.

உடனே கிட்டாமணி, "அதுதான் சரி. அப்படியே செய்யலாம். ஆனால் நாம் சிறிய வெடிகளாகச் செய்வோம். அப்போதுதான் நம் அப்பாவுக்கெல்லாம் தெரியாமல் வைத்துக் கொள்ளலாம். வெடித்தாலும் ஏதோ சின்னப் பட்டாசுதான் வெடிக்கிறன் என்று பேசாமல் இருப்பார்" என்றான்.

கிட்டாமணி கூறியதை எல்லோரும் ஆமோதித்தார்கள். வெங்காய வெடிகளைச் செய்து முடித்தார்கள். செய்த வெடிகள் அவரவர்கள் வீட்டில் ஜாக்கிரதையாகக் கொண்டு போய் வைக்கப்பட்டன.

கூட்டம் கூட்டமாகச் சங்கர், குமார், லக்ஷ்மணன், கிட்டாமணி நால்வரும் அடிக்கடி போய்விட்டு வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரா, "டேய், சங்கர்! எனக்கு நீங்கள் எல்லாம் என்ன பண்ணுகிறீர்கள் என்று தெரியும். அப்பா வரட்டும் சொல்லுகிறேன்" என்றாள்.

"சொல்லேன். எங்களுக்கு என்ன பயம்? நாங்கள் ஏதாவது செய்தால்தானே?" என்றான் குமார்.

சற்று நேரம் கழித்து அவர்கள் தகப்பனாரும் வந்தார். அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்திரா ஓடோடிச் சென்று அவர் காதில் என்னவோ சொன்னாள்.

அதைப் பார்த்த சங்கர் குமாரைப் பார்த்து, "டேய்! வெங்காய வெடி செய்தது அப்பாவுக்குத் தெரிந்தால் ஆபத்து. நீ உடனே ரகசியமாக உள்ளே இருந்து வெங்காய வெடிகளை எடுத்துக் கொண்டு கொல்லைப் பக்கமாகப் போய், லக்ஷ்மணன் வீட்டு அறையில் வைத்து விட்டு வா" என்றான்.

சங்கரின் தகப்பனார் மாடிக்குச் சென்றார். சங்கரும் மெதுவாக அவரைப் பின்தொடர்ந்தான். "டேய், சங்கர்! நீ பக்கத்து வீட்டு லக்ஷ்மணனோடு சேர்ந்து வெங்காய வெடிகளைச் செய்தாயா? உண்மையைச் சொல்!" என்று கோபத்துடன் கேட்டார்.

"இல்லவே இல்லை" என்றான் சங்கர்.



அப்போது அங்கே வந்த இந்திரா, "பொய், பொய்! இப்போதுதான் அவர்கள் அறையிலே வெங்காய வெடிகளைப் பார்த்தேன். நீ வா, காண்பிக்கிறேன்" என்று தன் தகப்பனாரை வெகு வேகமாகச் சங்கரின் அறைக்கு அழைத்துப் போனாள். சங்கரும் பயப்படாமல் அப்பாவுடன் சென்றான். அவன் எதற்காகப் பயப்பட வேண்டும்? அவற்றை லக்ஷ்மணன் வீட்டுக்கு அனுப்பி விட்டானே!

ஆனால் சங்கர் அறைக்குச் சென்றதும் அங்கே இருந்த வெங்காயவெடிகளைப் பார்த்துக் கோபமடைந்தார் சங்கரின் தகப்பனார். அச்சமயத்தில் குமாரும் அங்கே ஓடிவந்தான்.

"அப்பா, அப்பா! இந்த வெடிகளெல்லாம் சிவப்பு வெடிகள். பக்கத்து வீட்டு லக்ஷ்மணன் தான் கிட்டாமணியோடு செய்தான்" என்றான்.

"அப்படியா? இந்த வெடிகளை யெல்லாம் எதற்கு இங்கே கொண்டு வைத்திருக்கிறான்? இப்பொழுதே போய் லக்ஷ்மணன் அப்பாவைப் பார்த்துக் கண்டித்து விட்டு வருகிறேன்" என்று கூறிக் கோபமாகச் சிவப்பு வெங்காய வெடிகளை எடுத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போனார் சங்கரின் தகப்பனார். "இது என்ன அக்கிரமம்? உங்கள் பையன் வெங்காய வெடிகளைச் செய்து எங்கள் வீட்டில் கொண்டு வந்து வைத்திருக்கிறான். இப்போதே பையனைக் கண்டியுங்கள்" என்றார்.

"இதோ பாருங்கள், உங்கள் பையன்கள் செய்த அக்கிரமத்தை! வெங்காய வெடிகளைச் செய்து எங்கள் வீட்டில் வைத்திருக்கிறார்கள்" என்று வெள்ளை வெங்காய வெடிகளைக் காண்பித்தார் லக்ஷ்மணனின் தகப்பனார்.

அப்பொழுதுதான் அவர்களுக்குத் தங்கள் பையன்கள் பயந்து கொண்டு ரகசியமாக ஒருவருக்கொருவர் ஒரே சமயத்தில் வெங்காய வெடிகளை மாற்றி வைத்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

அந்தச்சமயத்தில் அவர்களுக்குச் சிரிப்பதா, அல்லது கோபிப்பதா என்று தெரியவில்லை. "போனதுபோகட்டும். இனிமேலாவது வெங்காய வெடிகளிடம் போகாதீர்கள். இந்த வெடிகளை யெல்லாம் எங்கள் கண்களுக்குத் தெரியாமல் மாந்தோப்பில் இருக்கும் பெரிய பாழுங்கிணற்றில் அவைகள் உபயோகப்படாதபடி ஜாக்கிரதையாகப் போட்டு விட்டு வாருங்கள்" என்று இரண்டு பெரியவர்களும் சொல்லவே, "இதோ இப்பொழுதே கொண்டு போய்ப் போட்டு விடுகிறோம்" என்று சொல்லிக்கொண்டே சங்கர், குமார், லக்ஷ்மணன், கிட்டாமணி நான்கு பேர்களும் ஓடினார்கள்.

ஒரு நாள் காலையில் சங்கர் குமாரை அழைத்து ஏதோ ரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதே மாதிரி லக்ஷ்மணன் தன் வீட்டில் கிட்டாமணியிடம் ஏதோ ரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் குமார் கோட்டைப் போட்டுக் கொண்டு தோட்டம் பக்கமாக ஓடினான். அந்தச் சமயத்தில் லக்ஷ்மணனின் தகப்பனார் சங்கரின் தகப்பனாரை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்.

"என்ன சார்! உங்கள் பையன் குமாரைச் சர்க்கஸுக்கு அழைத்துக்கொண்டு போனீர்களாமே? சர்க்கஸில் செய்த வித்தை யெல்லாம் அப்படியே செய்கிறான். எங்கள் வீட்டிலே எல்லாரும் பார்த்து ஆச்சரியப்பட்டோம்" என்றார்.

உடனே சங்கரின் தகப்பனார், "எனக்குத் தெரியாதே? நான் பார்க்கவே இல்லை. டேய்! குமார், இங்கே வாடா!" என்று தோட்டம் பக்கமாக வேகமாக ஓடிக் கொண்டிருந்த குமாரைக் கூப்பிட்டார்.

குமார் தலையைச் சொறிந்து கொண்டே மெதுவாக வந்தான். உடனே லக்ஷ்மணனின் தகப்பனார், "டேய், குமார்! எங்க வீட்டிலே செய்து காண்பித்தாயே, அது மாதிரி இரண்டு கைகளையும் கீழே வைத்துக் கொண்டு இரண்டு கால்களையும் மேலே உயர்த்தி வேகமாக இந்த அறையைச் சுற்றி வா; பார்க்கலாம்" என்றார்.

அதைக் கேட்டவுடன் குமார் சந்தோஷமாக இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக் கால்களை மேலே தூக்கினான். தூக்கியதுதான் தாமதம்; அவனது ஜேபியிலிருந்து வெங்காய வெடிகள் கீழே ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன. வெடிகளைப் பார்த்த குமாரின் அப்பாவுக்குக் கோபம் வந்தது. "ஏது உன்னிடம் இந்த வெங்காய வெடிகள்?" என்று பயமுறுத்திக் கேட்டார்.

உடனே குமார் விம்மி விம்மி அழுது கொண்டே, "அப்பா! அன்றைக்கு வெங்காய வெடிகளைக் கிணற்றிலே போடச் சொன்னாயே, அன்றைக்குப் போடவில்லை. உள்ளே தான் ஒளித்து வைத்திருந்தோம். இன்றைக்குத்தான் ஆற்றங்கரையிலே போய் வெடிக்கிறதாக நிச்சயம் செய்தோம். ஆற்றங்கரைக்கு என்னை முன்பே ரகசியமாகப் போகச் சொல்லி என் ஜேபியில் சங்கர் வெங்காய வெடிகளைப் போட்டு அனுப்பினான். அதற்குள்ளே...." என்று சொல்லி முடிப்பதற்குள் லக்ஷ்மணனின் தகப்பனார் கோபமாக லக்ஷ்மணனைக் கூப்பிட்டவாறே வீட்டுக்கு ஓடினார்.

விஷயத்தை அறிந்த லக்ஷ்மணன் கிட்டாமணியிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னான். "டேய் லக்ஷ்மணா! வெங்காய வெடிகளை நீங்களும் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார் லக்ஷ்மணனின் தகப்பனார்.

"இல்லையே அப்பா! எல்லாவற்றையும் கிணற்றிலே போட்டு விட்டோமே!" என்று லக்ஷ்மணனிடமிருந்தும் கிட்டாமணியிடமிருந்தும் பதில் வந்தது.

அந்தச் சமயத்தில் கிட்டாமணியின் தாத்தா, "டேய், கிட்டாமணி! எத்தனை நேரம் கூப்பிடுவது? எனக்கு வெற்றிலை பாக்கு இடித்துக் கொடுடா" என்றார்.

கிட்டாமணி அரை நொடியில் சிறிய இரும்பு உரலையும் உலக்கையையும் எடுத்துக் கொண்டு வந்தான். வேகமாகச் சென்று வெற்றிலையையும் பாக்கையும் உரலில் போட்டான்.

"ஏண்டா நேரம் கடத்துகிறாய்? தாத்தாவுக்கு வெற்றிலைப் பாக்கை இடித்துக் கொடு" என்றார் தந்தை.

ஆனால் கிட்டாமணி தயங்கித் தயங்கி நின்றான். அப்பா அதட்டினார். கிட்டாமணி பயந்து கொண்டே, "நான் இடிக்க மாட்டேன் அப்பா. எனக்குப் பயமாக இருக்கிறது" என்று உரலைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"பயமாக இருக்கிறதா?" உரலிடம் நெருங்கிக் கிட்டாமணியின் அப்பா பரிசோதித்தார். அப்பொழுதுதான் அவருக்கு விஷயம் விளங்கியது. "இதென்ன இது? உரல் நிறைய வெங்காய வெடிகள் அல்லவா இருக்கின்றன? தவறி உலக்கையினால் இடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? டேய் கிட்டாமணி, நீயாடா இப்படிச் செய்தாய்?" என்று கிட்டாமணியைக் கேட்கவே அவன் பயந்தான்.

அப்பொழுது லக்ஷ்மணனின் தாயார், "என்ன! சமையலுக்கு வாங்கி வந்த வெங்காயத்தை ஒன்றையும் காணோமே?" என்று கேட்டுக்கொண்டே வந்தாள்.

"கவலைப் படாதீர்கள். இந்தப் பசங்கள் செய்த வெங்காய வெடி வெடித்தால் அடிபட்டு விடுமல்லவா? நான் அவற்றைத் தூர எறிந்து விட்டு, வெங்காயத்தை வாணக் காகிதத்தைச் சுற்றி வைத்தேன். அப்படியே பக்கத்து வீட்டுச் சங்கரின் தாயாரிடம் சொல்லி மாற்றச் செய்தேன்!" என்றார் அந்தப் பொல்லாத கிழவர்!



குறுகோலத்தைப் போட்டு விட்டுநின்று அதை அழகு பார்த்தாள். உடனே அருகேயிருந்த ஓர் அகலப் பாத்திரத்தில் கையைக் கழுவி விட்டுக் கிழிசல் துணியில் துடைத்துக் கொண்டு செம்மண் கிண்ணத்தைக் கையில் எடுத்தாள். தான் கீழே வரைந்திருந்த சித்திரக் கோலத்தின் மத்தியில் ஆங்காங்கு சிறு செம்மண் கிளிகளைத் தீட்டினாள். மீண்டும் நிமிர்ந்தாள். கோலத்தைக் கண்டு மகிழ்ந்தாள்.

அவளுடைய தமக்கை சாவித்திரி வாசற்படியருகில் நின்றாள். தன் தங்கை இவ்வாறு கோல மிடுவதையும், மகிழ்வதையும் பார்த்தாள். சிறிது நேரத்துக்கு மேல் அவளால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவள் கண்கள் எதிர் வீட்டையும், தெருவையும் ஒரு முறை பார்த்தன. பார்த்துவிட்டு மீண்டும் அவள் தங்கையிடம் வந்து நின்றன. அதிருப்தியே நிறைந்திருந்தது, அந்தப் பார்வையில்.

"சுகுணா! உள்ளே போமடி!" என்று சற்று அழுத்தமாகக் கூறினாள் சாவித்திரி.

"ஏன், சாவித்திரி?" என்று நிதானமாகவே கேட்டாள் சுகுணா.

"நல்ல கேள்வி! போ உள்ளே, இரண்டுங் கெட்டானே!" என்று சிறிது தழதழுப்புடன் மீண்டும் வற்புறுத்தினாள்.

"இரு, சாவித்திரி! இன்னும் ஒரே ஒரு கிளி. மாவிலிக்கு இந்தக்கோலமென்றால் உயிர். அவன் கல்லூரியிலே ஒரு விசேஷத்துக்குக் கூட என்னைப் போடச் சொல்லி அழைத்துப் போனான். பெரிய ஹால். நன்றாக இருந்தது. கலர் வேறே கிடைத்தது. இதுபோல நாலு மடங்கு பெரிசாக்கிப் போட்டிருந்தேன். அதை ஓர் அமெரிக்கப் பெண் மணியும் படம் எடுத்துக் கொண்டு போனானாம்" என வளவள வென்று பேசினாள் சுகுணா.


சாவித்திரி திண்ணையில் கிடந்த கோல மாவுக் கிண்ணத்தையும், கந்தல் துணியையும் எடுத்துக் கொண்டு உள்ளே கிளம்பினாள். "சரிதான், போதும் உன் கோலப்பைத்தியமும் நீயும்! வா, உள்ளே: நாலு பேர்கள் சிரித்து, மூன்று பேர்கள் காறி உமிழ...."

சுகுணா தன் தமக்கையின் பின்னால் நடந்து உள்ளே சென்றாள்; அவள் நடையிலே சோர்வு தட்டிவிட்டது. "நான்கு பேர்கள் காறி உமிழும்படி ஒன்றும் ஈனமான வேலை நான் செய்யவில்லை. விதியினால் நேர்ந்த குற்றத்துக்கு நான் பொறுப்பாளியா? என்னைக் கண்டு இந்த உலகம் இரக்கப்படவும் வேண்டாம், இகழ்ந்து பேசவும் வேண்டாம்" என்று கூறிவிட்டு அவள் அப்பால் சென்றாள்; கண்வழியே தெரியாத கண்ணீர் அவள் தொண்டையிலே புலப்பட்டது.

"அடி, அசடே! உன்னை நான் சுட்டிக் காட்டினேனா? நாம் வேண்டாமென்றால் உலகம் நகைக்காமல் நிற்குமா, செய் என்றால்செய்யுமா; உன் மனசு எவ்வளவு களங்கமில்லாமல் இருந்தாலும் உலகம் ஒப்பாதே; நீ நாளைக்குப் புத்தாடை உடுத்து, வெற்றிலைபோட்டு, பூ வைத்துக் கணவனுடன் மகிழக் கொடுத்து வைக்காமல் பின்னால் பதுங்கி நிற்பதைக் காண என் மனம் விண்டு போகவில்லை என்று நினைக்கிறாயா?" என்று கேட்டுவிட்டு, சாவித்திரி பொங்கி வரும் துக்கத்தை அடக்க மாட்டாமல் தவித்தாள்.

"உஷ், சாவித்திரி! நீ கலங்கக்கூடாது; கலங்கினால் உன்னை நான் மன்னிக்கவே மாட்டேன்; நான் தெம்பாக இருக்கிறேன். என் மனசையும் கெடுத்துவிடாதே."

"உனக்குத் தான் என்ன பொறுமையோ!" என்று அங்கலாய்த்துவிட்டுச் சாவித்திரி பின்புறம் போய்விட்டாள்.



நிறை தீபாவளி

சுகுணாவின் கணவன் ஓர் அலுவலகத்தில் காஷியராக இருந்தான். ஒருநாள் நாலாயிரம் ரூபாய் களவாடியதாக அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்து விட்டார்கள். ஜாமீன் கொடுத்து அவனை மீட்டுக் கொண்டுவந்து, வக்கீலை வைத்து, அவனை நிரபராதி என்று ருஜுப்படுத்

தத் தயாராக இருந்தனர், அவளுடைய மனிதர்கள். ஆனால் சுகுணாவின் கணவன் மூர்த்தி எதற்கும் இடம் கொடாமல் கோர்ட்டில் தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டு, தண்டனை ஏற்கத் தயாராக இருப்பதாகக் கூறி விட்டான். அதன் காரணமாக இரண்டு வருடச் சிறைவாசத்தை மேற்கொண்டு அடைந்து கிடந்தான். அது நடந்து நான்கு மாதங்களாகி விட்டன. சுகுணாவின் வீட்டினருக்கும், மூர்த்தியின் வீட்டினருக்கும் மூர்த்திமீது மிகுந்த கோபம். தன்னோடு நில்லாமல் தன்னைச் சேர்ந்தவர்களையும் புழுதியில் புரட்டி, சகதியில் அழுத்தி விட்டான் என்று அவர்கள் அவமானப்பட்டுக் கொண்டிருந்தனர்.

சுகுணா என்ன நினைத்தாளோ, யாருக்குமே தெரியவில்லை. என்றைக்குக் கணவன் சிறைக்குள் சென்றானோ, அன்று மறுநாளே அவள் தான் முன்பு படித்த பள்ளியில் ஒரு வேலை தேடிக்கொண்டு விட்டாள். மறுநாள் முதல் நிம்மதியாக வேலைக்குப் போய் வந்தாள். தன் குடித்தனத்தைக் காலி செய்து விட்டுப் பிறந்தகத்தோடு வந்து விட்டாள். தன் குழந்தை முரளியோடு கொஞ்சிக் குலாவினாள். வீட்டிலுள்ளவர்களுடன் சகஜமாகப் பேசிச் சிரித்தாள்.

இன்று சுகுணாவின் அண்ணன் மகள் மாலினிக்குத் தலை தீபாவளி. சம்பந்திகள், மாப்பிள்ளை யாவரும் கல்கத்தாவில் இருந்தனர். இவர்கள் வீட்டில் மூர்த்தியின் கதை நடந்த பிறகு இதுவே முதல் தடவை வருகிறார்கள். இதனால் சுகுணாவின் பெற்றோர், உடன்பிறந்தோர் யாவரும் ஓரளவு மனச்சோர்வுடனே அவர்களை எதிர்பார்த்தார்கள். மாலினியின் தலை தீபாவளியை நன்றாகக் கொண்டாட வேண்டும் என்று இருந்தாலும், எல்லோருக்கும் சுகுணாவின் பிரச்னை முன்போல் தைத்தபடி இருந்தது. சுகுணாவோ சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவள் ஓடி ஓடி வேலை செய்தாள். மாவிலைத் தோரணங்கள் கட்டினாள். மாப்பிள்ளை, சம்பந்திகளுக்கு வசதிகளை ஏற்பாடு செய்தாள்; கோலம் போட்டாள். ரசித்து ரசித்து ஒவ்வொன்றையும் செய்தாள். அவளுடைய இந்தப் போக்கும் மற்றவர்களுக்குச் சிறிது கஷ்டமாக இருந்தது. மருமகன் சிறைவாசம் செய்யப் போனதிலிருந்து சுகுணாவின் தாயார் தலையில் பூ வைப்பதில்லை. நல்ல புடவை உடுப்பதில்லை. சுகுணாவின் தகப்பனார் வெளியே தலைகாட்டுவதில்லை; அதை உத்தேசித்துத்தான் சாவித்திரி, தன் தங்கை சுகுணாவை எச்சரித்து உள்ளே போகும்படி கூறினாள்.


சாவித்திரி தன்னைச் சமாளித்துக் கொண்டு வெளியே வந்தாள். சுகுணா அப்பொழுதுதான் மாடி அறையில் பூப்போட்ட துணிகளை விரித்துக் கொண்டிருந்தாள். மாலினி ஜன்னல்மீது அமர்ந்தபடி, தன் அத்தை சுகுணாவிடம் பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தாள். குழந்தை முரளி மேஜை விரித்துப்போட்ட பழைய விரிப்புகளில் புரண்டு புரண்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

சாவித்திரி சுகுணாவின் எதிரில் போய் அமர்ந்தாள். மாலினி அவளைப் பார்த்து விட்டு, "ஏன் அத்தை, உன் கண்கள் சிவந்திருக்கின்றன?" என்று கேட்டாள்.

"எனக்கு ஒரு ரத்தினமான தங்கை வாய்த்திருக்கிறாளே! அவள் மட்டும் கொஞ்சம் இங்கிதம் தெரிந்து நடந்து கொண்டால்......" என்று தன் வாக்கியத்தை முடிக்காமலேயே பெருமூச்சு விட்டாள் சாவித்திரி.

மாலினி சீறிக்கொண்டு சிறுத்தை போல் கிளம்பினாள். "என்ன, அத்தை! சுகுணாவுக்கு என்ன இப்பொழுது? அவள் என்ன தவறாக நடந்து விட்டாள்? என் மேலே பிரியமாக இருப்பது உங்களுக்கும் பிடிக்கவில்லையா?" என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

"போடி, பைத்தியக்காரி! நான் மட்டும் உங்களிடம் பிரியமாக இல்லையா? ஏதோ நீராது—வேலைக்குப் போகிறாள். மற்றச் சமயத்திலே வெளியே தலைகாட்டாமல், கூடுமானவரை நல்ல துணிமணி, பூ அலங்காரம் ஒன்றுமில்லாமல் இருந்தால்தான் உலகம் ஒப்பும். இல்லாவிட்டால் 'கணவன் ஜெயிலிலே கிடக்கிறான். மான, அவமானமில்லாமல் குலுக்கி, மினுக்கி, ஜாலியாக இருக்கிறாளே' என்று நினைக்க மாட்டார்



ளா!'' என்று சாவித்திரி தன் அபிப்பிராயத்தைச் சொன்னாள்.

கருணா குனிந்த தலை நிமிரவில்லை. தலையணை உறை ஒன்றைப் பிரிப்பதில் அவள் அதிக கவனம் செலுத்தினாள். 'சரி, நாம் சொன்னதை அவள் புரிந்து கொண்டு விட்டாள். இனி இங்கிதமாக நடந்து கொள்வாள்' என்று நினைத்து, மகிழ்ந்து சாவித்திரி போய் விட்டாள்.

மாலினி கருணாவை அணைத்துக் கொண்டு, அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பி, "கருணா! நீ அவர்கள் பேச்சை யெல்லாம் கேட்டு அவலவேஷம் போட்டுக் கொண்டு, பதுங்கிப் பதுங்கி நிற்கக் கூடாது. என் புக்ககத்தினர் அதையெல்லாம் எதிர்பார்க்க மாட்டார்கள். என் கணவர் உன்னைக் கண்டு பேசி அறிமுகம் ஆகவேண்டும் என்று கடிதத்துக்குக் கடிதம் எழுதுகிறார். அதனால்தான் உன்னையே கோலம்போடச் சொன்னேன். அன்றைக்குக் கல்லூரியிலே போட்ட படிக்கோலம் வாசலில் போடச் சொன்னேன்'' என்றாள்.

கருணா அவளுக்கு ஒன்றும் பதில் சொல்லாமல், "போடி, கழுதை! வரவர மரியாதையே இல்லை. 'அத்தை', என்று வாய் நிறையக் கூப்பிடக் கூடாது? கருணாவாமே, கருணா!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"நீ மட்டும் உன் அக்காவைப் பெயர் வைத்து அழைக்கலாமோ!'' என்று மாலினி கேட்க, இருவரும் பலமாகச் சிரித்து விட்டனர்.

கருணா முரளியை அப்புறப்படுத்தி விட்டு, கீழே கிடந்த துணிகளை எடுத்துக் கொண்டு போய் விட்டாள். மாலினி முரளியைத் தூக்கி, அணைத்து, முத்த மிட்டுக் குலாவிக்கொண்டு, அந்த அறையிலேயே அன்று மாலை வர இருந்த தன் கணவனைப் பற்றி இன்பக்கனவுகள் காண ஆரம்பித்தாள். அந்தக் கற்பனையிலே மணி போனதே தெரியவில்லை.

"மாலினி! மாலினி!'' என்று கீழ் இருந்து சத்தம் கேட்டுத்தான் அவள் விழித்துக்கொண்டு இறங்கிச் சென்றாள். முரளி அப்பொழுது கூடத்திலிருந்து கொண்டு ஓர் அதிரசத்தை மென்று கொண்டிருந்தான்.

"மாலினி! முகத்தைக் கழுவி, அழகாகப் பொட்டிட்டுக் கொண்டு, தலை வாரி, பூவைத்துத் தயாராக இருக்க மாட்டாயோ? தாத்தா ரயிலுக்குப் போனவர் திரும்பவர நேரமாகிவிட்டது. ரயில் கூவினதுகூடக் கேட்டது. இன்னும் பத்து நிமிஷத்தில் வந்து விடுவார்கள். போ, போ, சீக்கிரம்'' என்று மகளைத் துரிதப்படுத்தினாள் மாலினியின் தாயார்.

மாலினி தன்னை அலங்காரம் செய்து கொள்ள ஓடினாள்: கருணா அவள் தலையை வாரி அழகாகக் கொண்டை போட்டு விட்டாள். அவள் உடுத்த வேண்டிய புடவையையும், நகைகளையும் கொண்டு கொடுத்து விட்டு, முரளியைச் சுத்தப்படுத்திப் புத்தாடை உடுத்தப் போய் விட்டாள்.

சம்பந்திகளும், மாப்பிள்ளையும் வந்து இறங்கினார்கள். அவர்கள் உள்ளே நுழையும்போதே நின்று வாசலில் இட்டிருந்த கோலங்களைக் கவனித்து விட்டுத்தான் வந்தார்கள். மாவிலையைச் சங்கிலி போல் கோத்துக் கட்டியிருந்த தோரணம் முதற்கொண்டு அவர்கள் பாராட்டைப் பெற்றது.

வீட்டிலுள்ளவர்கள் பரபரப்புடன் உபசரணையில் இறங்கினார்கள். மாலினி கண்டும் காணாமலும் கணவனின் அழகை அநுபவித்து வந்தாள். கருணா சுறுசுறுப்பாக வந்த விருந்தினர்களுக்குச் சிசுருஷைகள் செய்து வந்தாள்.

சுமார் ஏழு மணி இருக்கும் போது, கருணா முரளியைத் தூங்கச் செய்வதற்காக ஜமக்காளம் எடுப்பதற்கு மாடிப் பக்கம் போனாள். மாலினி தன் கணவனுடன் வெளித் தாழ்வாரத்தில் தெரு விளக்கின் வெளிச்சத்தில் அமர்ந்து தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். தான் வந்த சந்தடி தெரியாமல் கருணா கீழே இறங்கிச் சென்று விட்டாள். முரளியை உறங்கச் செய்து விட்டு, அவள் தன் தாயிடம் சென்று, "அம்மா! நாளைக்கு எங்கள் பள்ளிக்கூடத்தில் தீபாவளி விருந்து நடக்கிறது. கல்வி மந்திரி வரப் போகிறார். கொஞ்சம் வேலை இருக்கிறது, அம்மா! நான் போய் விட்டு இன்னும் ஒரு மணி நேரத்தில் திரும்பி விடுவேன். நாழிகையானாலும் என் தோழிகளுடன் வருவேன். என்னைத் தேட யாரையும் அனுப்பாதே'' என்று கூறினாள்.



பிறகு மற்றவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல்வெளியே போய்விட்டாள் கருணா.

மாலினி தன் கணவனிடம் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு இறங்கி வந்தாள். அவள் தன் பாட்டியிடம் கருணாவைப் பற்றிக் கேட்ட போது, "யாரிடமும் சொல்லாதே. அவள் வந்துவிடுவாள். போனது தெரிந்தால் தாத்தா, அப்பா யாவரும் கோபிப்பார்கள்'' என்று பாட்டி எச்சரித்தாள்.

எல்லோரும் விருந்து உண்டார்கள். மாலினியின் தங்கை, தம்பியுடன் மாப்பிள்ளை,சினவெடி வெடித்தார், மத்தாப்பு ஏற்றி மகிழ்ந்தார்.

இரவு படுக்கும்வரை கருணா வரவில்லை. மாலினி மீண்டும் பாட்டியிடம்போனாள்.

"கருணா வரட்டும், சொல்கிறேன். கடைசியில இப்படிச் செய்து விட்டாளே!'' என்று மாலினி பொருமினாள்.

"என்னடி, தத்துப்பித்தென்று உளறிக் கொண்டு! அவள் எதற்கு இப்பொழுது, நாம் தாராளமாக எதையும் செய்ய முடியாமல்?'' என்றாள் பாட்டி.

மாலினியின் மனம் மிகவும் வேதனை கொண்டது. அவள் சரசரவென்று அங்கிருந்து நகர்ந்து தன் கணவனைத் தேடிச் சென்றாள். அங்கே அவனுடன் அவள் தாயார் பேசிக்கொண்டிருக்கவும், அவள் சங்கோசத்துடன் வெளித் தாழ்வாரத்தில் நின்று விட்டாள். உள்ளேயிருந்து பேச்சுக் குரல் கணீரென்று கேட்டது.

"அவள் பிள்ளைதான் இது. அவள் கணவன்தான் ஆபீஸ் சொத்திலே கையை வைத்துவிட்டு, ஜெயிலிலே கிடக்கிறான். பின்னே, ஊரான் சொத்து நெருப்பு இல்லையோ? நேர்மை வேண்டாமோ? ஆனால் அவள் ஒன்றும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஜோராக வேளைக்கு ஒரு உடை, வாடாத புன்சிரிப்பு, பூவென்ன, கொண்டையென்ன?'' என்று மாலினியின் மாமியார் தன் மகனிடம் கூறிக் கொண்டிருந்தாள்.

மாலினியின் கண்களிலே நீர் சுரந்தது. அவள் அதை விரல் நுனியால் சுண்டிவிட்டுக் கொண்டாள். இதற்குள் கீழே முரளி எழுந்து 'ஓ' வென்று அழும் குரல் கேட்டது. மாலினி குழந்தையிடம் ஓடினாள். 'வயிற்றை வலிக்கிறது' என்று கை காலில் நிற்காமல் பலமாக அழுதது குழந்தை. கூடவே, "அம்மா! அம்மா எங்கே?'' என்று கேட்டது.

கருணாவை அழைத்து வர அவள் அண்ணன் கிளம்பினார். ஆனால் பத்து நிமிஷத்துக்குள் திரும்பி விட்டார், கருணா இல்லாமல்தான்.

மாலினி தனிமையில் தன் தகப்பனாரைத் தேடிச் சென்று கேட்டாள்.

"கருணா பள்ளிக்கூடத்தில் ஒன்றுமே விசேஷம் இல்லையாம். நம்மிடம் அவள் பொய்சொல்லிவிட்டு எங்கேபோனாளோ, தெரியவில்லையே?'' என்றார்.

"அப்பா! அவளுக்கு உயிர்த் தோழி நளினி என்பவள். அவள் வீட்டில் இருப்பாளோ என்னமோ?'' என்றாள் மாலினி.

"இப்பொழுது ஒன்றும் நீங்கள் மறுபடியும் இருட்டிலே போய், கண்ட கண்ட வீட்டிலும் கதவை இடித்துக் கொண்டு நிற்க வேண்டாம். அவளுக்கு உலகமே இலட்சியமாகத் தோன்றவில்லை, பின்னே எப்படி யிருக்கும்?'' என்றாள் மாலினியின் தாயார்.

"அம்மா! அவர்களிடமெல்லாம் ஒன்றும் சொல்லாதே. கருணா காலையில் நிச்சயம் வந்து விடுவாள்..'' என்று கெஞ்சினாள் மாலினி.

குழந்தை முரளியை ஒருவாறாகச் சமாதானப்படுத்திவிட்டு எல்லோரும் உறங்கப் போயினர்.

பின் காலை நான்கு மணிக்குள் எல்லோரும் மங்கள ஸ்நானம் முடித்து புத்தாடை உடுத்திக் கொண்டு பட்சணங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கருணா உள்ளே வந்தாள். அவள் நடையிலே ஒரு துடிப்பு, முகத்திலே ஓர் ஆனந்தம். அவள் சந்தோஷமாக உள்ளே வரவும், அவள் தகப்பனார் எழுந்து, "நில், நேற்று எங்கே போனாய்? உண்மையைச் சொல்'' என்றார்.

கருணா எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள். நிதானமாகத் தலை நிமிர்ந்து தந்தையைப் பார்த்துப் பேசினாள். "முதலில் தோழி வீட்டுக்கு. பிறகு ஜெயிலுக்கு'' என்றாள்.

யாரும் அவளை மேலே கேள்வி கேட்கவில்லை. ஆனால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கருணாவின் கண்களை நீர் மறைத்தது, தொண்டை கண்ணீருடன் கனத்தது. "என் தோழி நளினியின் தகப்பனார் ஜெயிலில் மேற்பார்வை

யாளராக இருக்கிறார்; முரளியின் அப்பாவுக்குக் கொஞ்சம் பட்சணம் கொடுத்து விட்டு, கண்ணும் பார்த்து விட்டு வரலாம் என்று போனேன்."

" அவன் செய்த காரியத்துக்குப் பட்சணம் வேறு?" என்று கேட்டார் கருணாவின் தமையன்.

" எனக்கு அப்படித் தோன்றவில்லை. மேலும் இங்கே இருந்தால் என்னைப் பார்த்துப் பார்த்து நீங்களும் சகஜமாக, தாராளமாக, பண்டிகை கொண்டாட முடியாதே என்றுதான் முதலில் தலை மறைத்துக் கொள்ள எண்ணி அம்மாவிடம் பொய்ச் சாக்கு சொல்லிவிட்டு தளினியின் வீட்டுக்குப் போனேன். அங்கே போன பிறகுதான் அவரைப் பார்க்க அனுமதி கிடைக்கும் என்று அறிந்து கொண்டேன். அவர்களே பட்சணங்கள்கட்டிக் கொடுத்தனர். நான் அவரைப் பார்த்தேன். நமக்கெல்லாம் ஒரு நற்செய்தி கொண்டு வந்திருக்கிறேன்" என்றாள் கருணா. அவள் தொண்டை உடைந்து போய் விட்டது.

" என்ன?" என்று கேட்டார் தந்தை. அவர் கண்களிலும் நீர் தளும்பியது.

" முரளியின் அப்பா நிரபராதி என்று ருசுவாகும்படி ஏதோ சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றனவாம். அதனால் இவரை இன்றைக்கே விடுவித்து விடுவார்களாம்" என்று கூறும் போதுதான் அவள் கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது.

" என்ன? யார் சொன்னார்கள்?"

" தளினியின் அப்பாதான் சொன்னார். யாரோ கூட வேலை செய்கிற பேர்வழி செய்த வேலை இது. முரளியின் தகப்பனருக்கு மிகவும் சிநேகமாம். அவன் ஒரு மாதத்துக்கு முன்பே ராஜினாமா கொடுத்து விட்டு ஓடிவிட்டானாம். நம் துரதிருஷ்டம் காரணமாக முதலாளி இவரிடம் இரும்புப் பெட்டிச் சாவி கொடுத்த அன்றைக்குத்தான் களவு கண்டு பிடிக்கப்பட்டது. போதாக் குறைக்கு இவரும் அதை ஒப்புக்கொண்டு விட்டார். . . . "

எல்லோருடைய ஆவலும் தூண்டப் பெற்று விட்டது. ஒவ்வொருவரும் அவளிடம் பல கேள்விகள் கேட்டனர்.

" அந்த மனிதரின் மனைவி க்ஷய ரோகத்தில் தவிக்கிறாளாம். வைத்தியம் செய்யப் பணமில்லை. நெருக்கடியில் செய்து விட்டார் தப்பை. தலை மறைவாகவும் வாழ்ந்து வந்தார். பிறகுதான் தமக்காகத் தன் நண்பன் பொய் வாக்குமூலம் கொடுத்து விட்டுச் சிறையில் இருப்பது தெரிந்ததாம். உடனே சர்க்காருக்கு, ஜெயிலுக்கு, ஆபீஸுக்கு எல்லா இடங்களுக்கும் எழுதிப்போட்டு விட்டு ஜாமீனையும் செலுத்தி விட்டாராம். ஒரு வாரமாக நடக்கிறது இந்த நடவடிக்கை. தீர்மானமாகத் தெரிந்தபிறகு சொல்லலாம் என்று இருந்தாராம் தளினியின் அப்பா." கருணாவால் பேசவே முடியவில்லை. அவள் பேசாமல் எழுந்து உள் ' - சென்றாள். அவள் மதனி அவளுக்குச் சூடாகக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்து விட்டு அவள் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு நடமாட ஆரம்பித்தாள். பின்புறம் போனபோது விசும்பல் கேட்டு அவள் திடுக்கிட்டு நோக்கினாள். மாலினி ஒரு சுவரில் சாய்ந்தபடி விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

"என்னடி அசடு!" என்றாள் கருணா.

"கருணா! கருணா! உனக்கு ஏன் அந்தப் பெயரை வைத்தார்களோ! அதனால் தானே நீ இப்படியெல்லாம் கஷ்டம்



அனுபவிக்கும்படி கடவுள் வைக்கிறார்?" என்று குமுறினாள் மாலினி.

"எனக்கு எப்பொழுதும் கஷ்டமே இல்லை, மாலினி! இப்பொழுது அதன் சாயையும் அழிந்தது. இனி அழுவானேன்?" என்றாள் கருணா நிதானமாக.

"உங்களைப் போல எல்லோரும் இருப்பார்களா?" என்று குரல் கேட்டுத் திரும்பினாள் கருணா. மாலினியின் கணவன் நின்று கொண்டிருந்தான்.

"நான் ஒன்றும் அப்படிப்பட்ட தெய்வம் இல்லை....."

"தெய்வமோ, மனுஷியோ? தகாத காரியத்தைக் கணவன் செய்து விட்டான். உற்றார் யாவரும் அவமானத்தில் குன்றிக் கிடக்கிறார்கள். உலகம் கட்டிக்காட்டி நகைத்தாலும் ஒன்றையும் பொருட்படுத்தாமல் சிரித்து இன்பமாகப் பேசி, அந்தக் கணவனிடம் அன்பு குறையாமல் இருப்பது என்பது..."

"அன்பு இருந்தால் எதுதான் சாத்தியமில்லை? எனக்கு அவர் அன்புதான் தெரிகிறது. அவருக்குத் தண்டனை அளிக்கக் கடவுள், மனச்சாட்சி, நீதிமன்றம் — இத்தனை இருந்தன. அன்பு செலுத்த நான் ஒருத்திதான் இருந்தேன். அவர் நேர்மையற்றவராக இருந்திருந்தால், அவருக்கு இருந்த வசதிக்கு எப்பொழுதோ நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு இன்று உங்களுடன் மாப்பிள்ளை மரியாதை பெற்றிருப்பார்; அவருடைய நட்பு அவமானத்தைப் பெரிதாகக் கருதவில்லை" என்றாள் கருணா ஆவேசம் வந்தவள் போல.

" உங்கள் திடமான நம்பிக்கைதான் உங்கள் கணவரை மீட்டது. இது உறுதி" என்றான் மாலினியின் கணவன். கருணா இலேசாக முறுவலித்தாள்.

அன்று மாலை தாமே காரில் சென்று மூர்த்தியை அழைத்து வந்தார் மாலினியின் தந்தை. கருணா குழந்தை முரளியுடன் வாசற்படியிலேயே நின்றாள். கணவன் படியேறி வந்ததுமே குழந்தையை அவனிடம் நீட்டினாள். முரளியும் தன் தகப்பனைப் பார்த்து விட்டு,

"போ, அப்பா! என்னை விட்டு விட்டு எங்கே போனும்?" என்று கேட்டான்.

" இங்கேயே கிட்டேயேதானடா—ஒரு அன்புப் பிணைப்பிலே" என்று கூறிவிட்டுப் பெருமிதத்துடன் தன் மனைவியைப் பார்த்தான் மூர்த்தி.

அவரவர்களும் தங்கள் மன உருக்கத்தைக் காட்டிக் கொள்ளச் சங்கோசப்பட்டு எங்கெங்கோ பார்த்தனர்.

"நில்லுங்கள், ஆரத்தி எடுக்கட்டும்" என்று கருணாவின் தந்தை சொன்னார்.

கருணா கணவன் அருகில் நின்றாள். அவள் தாய் மஞ்சள் நீர் சுற்றி, திருஷ்டி கழித்து விட்டுச் சென்றாள்.

"தலைதீபாவளி மாலினிக்கா? அல்லது உனக்கா?" என்று வேடிக்கையாகக் கேட்டான் மூர்த்தி தன் மனைவியிடம்.

" எல்லோருக்குமே தான். காரில் தீபாவளி முடிந்து விட்டது. நமக்கு இனிதான் ஆரம்பம்" என்றார் கருணாவின் அண்ணன்.

எல்லோரும் கூடத்தில் போய் அமர்ந்ததும், மாலினியும் அவள் கணவனும் கருணாவுக்கும் மூர்த்திக்கும் நமஸ்காரம் செய்தனர். அப்பொழுது மூர்த்தி, "கருணா பெயரிட்ட தோஷத்துக்காக வேஷம் போடுகிறான். மாலினி அசல் கருணை" என்றான்.

" நான் கூட உன்னைத் தவறாக எண்ணி விட்டேனே அம்மா!" என்றாள் மாலினியின் மாமியார் கருணாவைப் பார்த்து.

" அதனால் என்ன மாமி?" என்று தள்ளி விட்டாள் கருணா.

" இந்த உள்ள நிறைவு என்றும் எங்களுக்கும் இருக்க வேண்டும் என்று ஆசீர்வதியுங்கள்" என்று வேண்டிக் கொண்டான் மாலினியின் கணவன்.

" மாலினி அன்பே உருவெடுத்தவள்" என்று மிகுந்த வாத்சல்யத்துடன் பதிலளித்தாள் கருணா.

" கருணா!" என்றாள் மாலினி. தொண்டை அடைத்தது. கேவிக் கேவி அழ ஆரம்பித்து விட்டாள் அவள்.

"சீ, சீ, அசடு. அது கிடக்கட்டும்; 'அத்தை' என்று கூப்பிடு!" என்றான்,

எல்லோரும் துளியேனும் சங்கோசமில்லாமல் ஆனந்தக் கண்ணீரை வடிய விட்டனர் அப்போது.

அதுவே புனிதமான கங்காஸ்நானம் போலிருந்தது.

ஆனைமலைக் காடர்

பிலோ இருதயநாத்



1

ஆனைமலையில் எத்தனை எத்தனையோ ஆண்டுகளாக வாழும் காடர்களின் விசித்திர வாழ்க்கையை நேரில் பார்க்கவே நான் அங்கு சென்றேன். மேற்படி காடர்களைக் காண வேண்டுமானால், பொள்ளாச்சியிலிருந்து வால் பாறைக்குப் போகும் வழியில், ஆயர்பாடி என்னும் இடத்தில் இறங்க வேண்டும். பிறகு எஸ்டேட்டு வழியாகச் சிறிது தூரம் சென்று, வெளிச்சமே புகமுடியாத பயங்கரமான இருண்ட காட்டில், ஒற்றையடிப் பாதையின் வழியாகச் சுமார் நான்கு மைல் தூரம் வரையில் நடக்க வேண்டும். அவ்விதம் சென்ற பின் ''கவர்க்கல் காட்டை'' அடைவோம்.

அடர்ந்த காடுகளில் வசிப்பதாலேயே இவர்களுக்குக் காடர்கள் என்று பெயர் வந்தது. அட்டைகள், கருங்குரங்குகள், கொடிய மிருகங்களின் கர்ஜனை, வண்டுகளின் ரீங்காரம் இவற்றைத் தவிர, மற்ற எதையும் அங்கு நாம் காதால் கேட்கவோ, கண்ணால் காணவோ இயலாது. அடர்ந்த காட்டுக்குள் செல்லச் செல்ல, நாம் ஏன் இங்கு வந்தோம் என்ற பீதி என் உள்ளத்திலே ஏற்பட்டது. மனைவி, குழந்தைகளின் சிந்தனை ஒரு பக்கம் எழுந்தது. இந்தக் காட்டில் தான் நமது இந்த உலக வாழ்வு முடியப் போகிறதோ என்ற எண்ணமும் என்னை வாட்டத் தொடங்கியது.

காட்டில் எனக்கு வழி காட்டி வந்தவர் அடிக்கடி என் மேலிருக்கும் அட்டைகளை அப்புறப் படுத்திக் கொண்டிருந்ததால், நிலையான சிந்தனையுடனும் கூர்ந்த பார்வையுடனும் நடந்து செல்ல முடியவில்லை. ஒற்றையடிப் பாதையில் போகும் போது வழியில் ஓடி வந்த ஒரு காடன், எங்களைக் கண்டதும், ''ஐயா, இந்தப் பக்கம் போக வேண்டாம். யானைக் கூட்டங்கள் அதிகமாக இருக்கின்றன'' என்றான்.

இவ்விதம் காட்டு ஜாதியார் ஏதாகிலும் கூறினால், அதை நான் பொன் மொழியாகக் கருதுவது வழக்கம். எனக்கு வழிகாட்டியாக வந்த யசோதரன் உடனே வேறு வழியாக என்னை அழைத்துச் சென்றார். நல்ல வழிகாட்டி எனக்குக் கிடைத்ததால், கொடிய விலங்குகள் வாழும் காட்டில் ஆயுதமில்லாமல் செல்ல முடிந்தது. சில இடங்களில் மலை செங்குத்தாக இருந்தது. சில இடங்களில் பெரிய ஓடைகளின் குறுக்கே, காட்டு மரங்களின் மேல் நடந்து ஓடையைத் தாண்டிச் செல்ல வேண்டியதாக இருந்தது. இவ்வளவு சிரமத்துடன் சென்றாலும், காட்டு ஜாதி மக்கள் எங்களைக் கண்டதும் ஓடி ஒளிந்துகொள்ளுவார்கள்.

காடர்களின் குடிசைகள் அருகிலிருக்கின்றன என்பதை வாழைத் தோட்டங்களே நமக்கு முதலில் தெரிவிக்கும். ''காடர்கள் பட்டி'' என்று அவர்கள் வசிக்குமிடங்களைச் சொல்லுகிறார்கள். இவர்களின் குடிசைகள் மற்றவர்களின் கண்களுக்கு எட்டாத தூரத்திலும், ஓடைக்கு அருகிலும், மலைச் சரிவிலும் இருக்கின்றன. குடிசைகள் முழுவதும் மூங்கிலால் நிர்மாணிக்கப்பட்டவை. கூரை, சுவர், கதவு முதலியவைகள் யாவும் மூங்கில்களால் செய்யப் பட்டவையே. மூங்கில் சுவருக்கு மேல், மண்ணையும், இலையையும் கலந்து பூசுகின்றனர். குடிசைக்குள்ளும், வெளியிலும் படுப்பதற்காகப் பெரிய திண்ணைகள் கட்டி யிருக்கின்றனர். சமையல் செய்வதற்கும், குளிர் காய்வதற்கும், கட்டைகள் எரிப்



2

பதற்கும் தனித்தனி இடங்களுண்டு. மழைக் காலங்களில் கொடிய விலங்குகளுக்குப் பயந்து, ஒரு பெரிய பந்தல் அமைத்து, அதன் மத்தியில், பட்டியிலுள்ள குழந்தைகளும், பிறகு பெண்களும், அதைச் சுற்றிலும் ஆடவர்களும் படுத்துக் கொள்ளுகின்றனர். அப்பந்தலைச் சுற்றிப் பெரிய பெரிய கட்டைகள் எரிந்து கொண்டே இருக்கின்றன. நெருப்பு அணையாமலிருக்கவும், விலங்குகளுக்காகவும் இரவு முழுவதும், கையில் அம்புடன் ஒரு காடன் காவல் காக்கிறான். பகலில் மட்டும் பெண்களில் யாராவது ஒருத்தி பார்த்துக் கொள்ளுகிறாள். இவர்களின் குடிசைகளைச் சுற்றிலும் எரிந்த சாம்பல் குவியல்கள் அதிகம் உண்டு. இவர்களின் வீட்டில் மண் பாண்டங்களும், மூங்கிற் சாமான்களும் தான் அதிகமாக இருக்கின்றன. இரண்டு கஜ நீளம் உள்ள அகன்ற மூங்கிற் குழாயில் தண்ணீரை நிறைத்து வைத்திருக்கின்றனர். தேனுக்காகவும், காட்டுக் கிழங்குகளுக்காகவும், விவசாயத்தைக் கருதியும் இவர்கள் ஓரிடத்தில் நிலைத்திருப்பதில்லை. அடிக்கடி குடிசைகளைப் பிரிப்பதற்கு ஏற்றாற்போல் அமைத்திருக்கின்றனர்.

ஆண்களுக்கு, வேகமாக ஓடவும், மரம் ஏறவும் தகுந்தாற்போல் அவர்களுடைய கால்கள் சிறுத்திருக்கின்றன. இவர்கள் இயற்கையிலேயே பயந்த சுபாவமுள்ளவர்கள். பார்வைக்குக் குள்ளமாகவும், அகன்ற மூக்கும், சுருட்டை மயிரும், கறுத்த நிறமும், உடல் கட்டும் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். சாதாரண நாட்களிலும், நல்ல நாட்களிலும், வேஷ்டியும், தலைப் பாகையும் அணிந்து, மேலே ஒரு துண்டைப் போர்வையாகப் போர்த்தி மார்புக்கு நேராக முடிபோடுகிறார்கள். ஆண்களும், பெண்களும் தலையில் மூங்கிற் சீப்பைச் செருகி வைத்திருக்கிறார்கள்.

ஆண்களுக்குக் கத்தி, கோடரி, மண்வெட்டி, ஈட்டி, அரிவாள், பாறைக்கோல் முதலியவைகள்தான் முக்கியமான ஆயுதங்கள்.

பெண்கள் குள்ளமாக இருக்கிறார்கள். நான்கு, ஐந்து அடி உயரமுள்ளவர்களும் உண்டு. எட்டு கெஜம் நூல் புடவையை மட்டும் அணிந்து கொண்டிருக்கிறார்கள். நல்ல உழைப்பாளிகள். இவர்கள் வெள்ளிக் கம்மலும், மூக்குத்தியும், கையில் பித்தளைக் காப்பும் அணிந்திருக்கின்றனர். பெண்ணும் ஆணும் ஒரு விதப் பொடியை வைத்துத் தங்கள் பற்களைக் கறையாக்கிக் கொள்ளுகின்றனர். தலையை வாரிக் கொண்டை போட்டு, காட்டுப் பூக்களுடன், ஒரு மூங்கில் சீப்பும் செருகிச் சுத்தமாகக் காட்சி அளிக்கின்றனர்.

ஆண்களுடன், பெண்களும் தேன் எடுத்தல், வேட்டையாடல் முதலிய பணிகளுக்கு உதவி செய்யப் போவதால், தங்கள் குழந்தைகளைத் தங்கள் கணவருடன் பணி செய்யும் போது முதுகில் வைத்து, முந்தானைத் துணியால் கட்டித் தூக்கிக் கொள்ளுகின்றனர். காடர்களைப் போலவே ஜப்பானியர், பல்கேரியர், பெடுயினர், இந்தோ சீனாவிலுள்ள 'அன்னம்' ஜாதியினர், போர்னியோ மக்கள் முதலியோர் தங்கள் குழந்தைகளை முதுகில் கட்டித் தூக்குகின்றனர்.

ஆடவர்கள் வாசிக்கும் வாத்தியங்களெல்லாம் மூங்கிலாலும் ஓலையாலுமே செய்யப்பட்டவை. இன்றும் இவர்கள் இரவில் விளக்கு வைப்பதில்லை. அதற்குப் பதிலாக வெட்டி விட்ட குங்கிலிய மரத்தின் பாலை, பிசின் போல் எடுத்துக் காய வைத்து, கெட்டியானதும், அதை விளக்காக எரிக்கின்றனர். அதை எரிப்பதற்கும் பண்டைக் காலத்திலும் சரி, இன்றும் சரி, சிலர் மட்டும், கல்லையோ மூங்கிலையோ உரைத்து நெருப்பை உண்டாக்குகிறார்கள்.

காடர்கள் தங்கள் பெயர்களின் கடைசியில் ஒரு பட்டம்போல், 'ஆளி' என்று சேர்த்துக் கொள்ளுகின்றனர். எனக்கு விலாசம் கொடுத்தவனின் பெயர், 'தங்கவேலு ஆளி காடர்' என்பதாகும்.

காடர்கள் தைரியசாலிகளாகவும், உழைப்பாளிகளாகவும், நிலத்தில் வேலை செய்கிறவர்களாகவும் பார்த்துத்தான் திருமணத்துக்குப் பெண்களைத் தேர்ந்தெடுப்பார்கள். திருமணத்துக்கு என்று தனி வயதில்லை. திருமணத்துக்கு வளர்பிறையில், ஒரு வெள்ளிக்கிழமையாகப் பார்த்து, நாளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

திருமணத் தன்று அவர்கள் தாலி கட்டுதல், தாம்பூலம் மாற்றுதல், தலைப்பாகை கட்டுதல் முதலிய சடங்குகள் பஞ்சாயத்தாரின் முன்னிலையில் நடைபெற வேண்டும். திருமணமான பின்னும் பையன் மனைவியுடன், தன் பகுதி





1. காடர் தேன் எடுக்க மூங்கிலின் உதவியால் மரம் ஏறுகிறார். 2. அவர்கள் கட்டியிருக்கும் மரப்பாலம். 3. தண்ணீர் எடுக்கும் தொட்டி. 4. வேலை செய்யும் போதும் குழந்தையைத் தோளில் கட்டிக் கொள்கின்றனர்.

யைக் கொடுத்து, ஒரே குடிசையில் பெற்றோர்களுடன் தான் வாழவேண்டும். அவர்களிடையே நடைபெறும் திருமணச் சடங்குகள் மிகவும் விசித்திரமானவை.

தம்பதிகளுக்குள் சச்சரவுகள் ஏற்பட்டால், பஞ்சாயத்தாரின் முன்னிலையில், நியாயம் பேசி, சமாதானப் படுத்தப் பார்ப்பார்கள். இருவரும் ஒத்துவரா விட்டால் பஞ்சாயத்தாரின் மூலம் விவாகரத்து செய்து பெண்ணைத் தாயகம் அனுப்புவார்கள்.

காடர்கள் சாதாரணமாய் மலேரியாக் காய்ச்சல், வயிற்றுவலி, வீக்கம் முதலிய வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள். இவ் வியாதிகளுக்கு ஆஸ்பத்திரி தூரத்தில் இருப்பதால், தங்களிடம் இருக்கும் மருந்துகளையும், மூலிகைகளையும், கஷாயங்களையும் செய்து சாப்பிடுகிறார்கள். சிலர் வியாதி வந்தால் முறத்தில் இரும்புச் சங்கிலியைப் போட்டு ஆகாயத்தைப் பார்த்து, புடைப்பார்கள். அவர்களுக்கு தெய்வ அருள் வந்து வியாதி குணமாக ஏதாவது ஒரு பரிகாரம் தோன்றும்; நோயாளியிடம் கூறுவார்சள். நோயாளி அதைச் செய்ததும், வியாதி குணமாகி விடுமாம்.

காடர்களுக்குக் காட்டுக் கிழங்கு (இது சேப்பங் கிழங்கைப் போல் வழவழப்பாக இருக்கிறது) தேன், கருங்குரங்குகள்தான் முக்கியமான உணவு. இத்துடன்



காடச் பெண்களும், அவர்கள் கல்யாணத்தின் போது நடக்கும் நாட்டியமும்.

மூங்கில் அரிசி, ஆடு மாடு, பறவை இனங்கள், மச்சங்கள், எலி இனங்கள் முதலியவைகளைச் சாப்பிடுகிறார்கள். இவர்களுக்கு அரிசி கிடைப்பது அரிது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்ல நாட்களில் சாராயம், கஞ்சா குடிப்பதில் விருப்பம் அதிகம்.

காடர்களின் முக்கியமான தொழில் தேனெடுப்பதும், மரங்கள், மூங்கில் முதலியவைகள் விற்பனை செய்வதும் ஆகும். இன்று சிலர் பயிர்த் தொழில் செய்கிறார்கள். வலைகளை வைத்து மிருகங்களையும், பறவைகளையும் பிடிப்பதில் சமர்த்தர்கள். இவர்களின் பட்டிக்குச் செல்லும் போது, "என்ன? இவ்வளவு நாய்கள் வளர்க்கின்றனரே" என்று சிந்தித்தேன். விசாரித்ததில் ஒவ்வொரு நாயும் வேட்டைக்காகவே வைத்திருக்கின்றனரென்று தெரிந்து கொண்டேன். முயல், காட்டுப்பன்றி, மான் முதலியவைகளை வேட்டையாடவும், கொடிய விலங்குகள் வருகின்றன என்று தெரியப்படுத்தவும் நாயைப் பழக்கியிருக்கின்றனர்.

தேன், கொம்புகள், தோல், குளம்பு, விலங்குகளின் பற்கள், பறவைகளின் சிறகுகள் முதலியவைகளை ஊர்களுக்குள் கொணர்ந்து, விற்பனை செய்து, தங்களுக்கு வேண்டியதை வாங்கிச் செல்கின்றனர். நமக்கு ஆகவேண்டிய வேலைகள் ஏதாவது இருந்தாலும், அதையும் முகமலர்ச்சியுடன் செய்து கூலி பெற்றுக் கொள்ளுகின்றனர், பாம்புக் கடிக்கு உடனே நிவாரணம் அளிக்கும் மருந்து இவர்களிடம் இருக்கிறது.

சிலர் விஷ வேர்களைத் தண்ணீரில் கரைத்து, மீனை மயக்கிப் பிடித்து, அவைகளை உண்பார்கள்.

மானிடர் கண்களுக்கு எட்டாத தூரத்திலும், மலைச் சரிவுகளிலிருக்கும் பாறைகளின் இடுக்குகளிலும், தேனீக்கள் கூடு கட்டுவதை இக் காடர்கள் எளிதில் கண்டு பிடித்து விடுவார்கள். சுமார் நூறடி இருக்கும் சில காட்டு மரங்களின் மேல், தேன் கூடுகள் நிரம்பியிருக்கும். அவ்வித மரங்களின் மேல் ஏறுவது இயலாத காரியம். அவ்விதமான இடங்களில் உயரமான மூங்கிலைக் கணுக் கணுவாக விட்டு விட்டு வெட்டி மரத்துடன் சேர்த்து ஒன்றின் மேல் ஒன்றாகக் கட்டி, மூங்கில் கணுவின் மேல் கால் வைத்து ஏறி உச்சியில் சென்று, தேனை எடுத்துத் தங்கள் முதுகில் கட்டியிருக்கும் மூங்கில் குழாயில் போட்டுக் கொள்ளுவார்கள்.

அடர்ந்த காடுகளில் ஐம்பதடி மூங்கிலை எடுத்துச் செல்வது சிரமமல்லவா? அவ்விதமான இடங்களிலிருக்கும் தேனை எடுக்க, சுமார் ஓரடி நீளமுள்ள அறுபது, எழுபது மர ஆப்புகளைத் தயார் செய்து கொண்டு, அடிமரத்திலிருந்து ஒவ்வொன்றாக அடித்துக் கொண்டே ஏறுவார்கள். முதலில் அடித்த ஆப்பின் மேல் இடது காலை ஊன்றி, அதற்கு மேலிருக்கும் ஆப்பில், மற்றொரு காலைக் கொக்கி போல் மாட்டிக்கொண்டு, இன்னொரு ஆப்பைத் தலைக்கு மேல் அடிப்பார்கள். இப்படி ஆப்பு அடித்துக் கொண்டே ஏறிய காடனைக் கீழிருந்து மர உச்சியில் பார்த்தால் ஒரு பருந்தைப் போல் சிறு உருவமாகத் தெரிவான்.

ஒவ்வொரு பட்டிக்கும், ஒவ்வொரு தலைவனுண்டு. தலைவனைக் குடும்பப் பரம்பரையாகவே தேர்ந்தெடுப்பது வழக்கம். தலைவனை "மூப்பன்" என்றும், அவன் மனைவியை "மூப்பாட்டி" என்றும் அழைக்கின்றனர்.

மாரியாத்தா, ஐயப்பன், மதுரை வீரன், காளி முதலிய குல தெய்வங்களை வணங்குவதுடன், காட்டு யானைகளைத் தூரத்தில் கண்டு கைகூப்பி வணங்குகிறார்கள். வால் குட்டையான கருங் குரங்குகளை, "காட்டின் சாபக்கேடுகள்" என்று வேட்டையாடிக் கொன்று புசிக்கின்றனர்.

கொடிய மிருகங்களிடமிருந்து தப்ப "மலைவாசி" என்ற தெய்வத்தையும் வணங்குகிறார்கள். வியாதி வந்தால், இறந்தவர்களை நினைத்து "நினைவு பூஜை" செய்தால், வியாதி சுகமாகிறதென்ற நம்பிக்கை இன்றும் இவர்களிடையே நிலவி வருகிறது.

இவர்கள் பேசும் பாஷைக்கு இலக்கணமும், இலக்கியமுமில்லை. கொச்சைத் தமிழும், மலையாளமும் பேசுகிறார்கள்.

மலை ஏறுவதிலும், மரமேறுவதிலும், மிருகங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மோப்பம் பிடித்துச் செல்வதிலும், மோப்பத்தால் எத்திசையில், எவ்விலங்குகள், எவ்வளவு தூரத்தில் வருகிறதென்று தெரிந்து கொள்வதிலும் வல்லவர்களாகிய இவர்களின் இனம் மேம்படவும், குழந்தைகள் கல்வியறிவு பெறவும், நல்லதோர் வாழ்வு வாழவும், இவர்கள் இனம் அழிவுறாமல் காக்கவும் நல்ல குடி தண்ணீரும், நிலமும், கலப்பையும், வீடு வசதியும், நல்ல வழியும் ஏற்படுத்திக் கொடுத்து, இவர்களைக் கவனித்தால், இன்னும் சில நூற்றாண்டுகளிலாவது இவர்கள் முன்னேற்றம் அடைய இடம் உண்டு.

Hearty Greetings to all their patrons

THE COIMBATORE PIONEER MILLS LIMITED
PEELAMEDU (P.O.) COIMBATORE

Grams: 'PIONEER' Coimbatore

Phone: 160

CHOOSE PIONEER YARNS

For better weaving.........To fetch better price

Pioneer 'A' Mills


Spindles:
27226

★

Finer counts

Tex Mark 609

60s, 80s & 100s combed yarn



Pioneer 'B' Mills

Spindles:
22000

★

Medium & Lower counts

Tex Mark 2869

20s & 40s Indian Cotton yarn

Practical training given to diploma students in L. T. M., L. M. E. and L. E. E.

THE BALARAMAVARMA TEXTILES LTD.
SHENCOTTAH

Managing Agents: KARAYALAR & RANGASWAMY NAIDU SONS CO.

COIMBATORE

Grams: 'Baltex'
Phone: 1116

20s to 80s cotton and 20s to 40s staple fibre yarn



SHENCOTTAH

Grams: 'Baltex'
Phone: 36

Spindles:
14384

Under erection:
3472

CHANDRA TEXTILES
PRIVATE LTD.
PEELAMEDU (P.O.) COIMBATORE


Grmas: 'Chandratex'

Phone: 1122


★

Manufacturing

60s and 100s carded yarn



THE PIONEER TEXTILES
RANGASWAMY NAGAR
VEDAPATTY-COIMBATORE



Phone: 1422


Spindles 10000

Now Manufacturing

40s yarn

Proprietors:
P. S. G. RANGASWAMY NAIDU SONS

By the finest spinners of the South



"VENKATESWARA"
PNEUMATIC CLEANER
For Ring Spinning Frames

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

"வெங்கடேஸ்வரா" ராக்கெட் டைப் ஸ்ப்ரேயர்


முக்கிய அம்சங்கள் :

- பூச்சிகளை ஒழிக்கும் மருந்து தெளிக்க உகந்தது
- நீடித்து உழைக்கத் திடமாக உருவாக்கப்பட்டது
- தடையின்றி எளிதில் இயக்கலாம்; சிக்கலின்றி இயங்கும்
- சிரமமின்றி 200 பவுண்டு அழுத்தத்தைப் பெறலாம்
- விவசாயிகள் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கும்

*

Advantages :

Valuable waste collected in clean condition
Economical operation
No dust or loose fibres
Keeps maintenance cost down
Absolute elimination of under clearers
Testimony for sound workmanship
Entangling of flying ends eliminated
Satisfactory results
Works load of operative less
Added life for top and bottom rollers
Reduced yarn breakage
Absolutely no dust or loose fibres



SRI VENKATESWARA INDUSTRIES
SOWRIPALAYAM P.O. COIMBATORE

SUNDARAM

DPF TEXTILES (PRIVATE) LTD
DPF
TEXTILES
METTUPALAYAM ROAD COIMBATORE

GOLD FISH

மகிழ்ச்சியான செய்தி!

தங்கமீன் மார்க் (CONES & HANKS) 20ம் நெ சிறந்த பஞ்சு நூலை நாங்கள் தயார்செய்கிறோம்

விபரங்களுக்கு: போன் நெ. 1134

DPF டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
மேட்டுப்பாளையம் ரோடு - G.N.மில்ஸ் P.O. கோயமுத்தூர்.



தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

அட்டைப்படம்

தெய்வீகக் காதல்

உலகப் படைப்பிலே காதல் இல்லாப் பொருள் எது?

மலர்கள் காதலிக்கின்றன. மிருகங்கள் காதலிக்கின்றன! பட்சி இனங்கள் காதலிக்கின்றன!

உலகிலுள்ள இந்த ஜீவ ராசிகள் எல்லாம் மீண்டும் படைப்பு எடுப்பதற்காகவே இத்தகைய உணர்ச்சியை இயற்கை ஏற்படுத்தி விருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மை. எனினும் காதல் எல்லாச் சமயத்திலும் இந்தப் பயனையே உண்டாக்குவது என்பது சொல்வதற்கில்லை!

காதல் காரணமாக, மனிதன் எத்தகைய மகத்தான தியாகங்கள் செய்ய முடியும் என்பது உலகம் அறிந்த விஷயம்.

ஒரு அரசன் ஒரு பெண்ணையே தியாகம் செய்துவிட்ட சம்பவம் சமீப காலத்திய சரித்திர நிகழ்ச்சியாகும்! காதலின் முன் சாம்ராஜ்யப் பேறு மிகத் துச்சமான பொருளாகி விடுகிறது!

காதல் காரணமாக, மக்களின் வீர உணர்ச்சி வெளிப் படுவதையும் பார்க்கிறோம்!

ராம ராவண யுத்தமும், மகாபாரத யுத்தமும் மகத்தான வீரத்தை நிரூபிக்கும் நிகழ்ச்சிகளாகும். வீரத்தின் அடிப் படை காதல் என்பதை யார் மறுக்க முடியும்?

கிரேக்க சரித்திரத்தில் ஹெலன் என்ற மாதரசி மேல் கொண்ட காதல் ட்ரோஜன் யுத்தத்துக்குக் காரணமாக இருந்தது!

இப்படிக் காதல் காரணமாக உலகில் நிகழ்ந்த மகத் தான தியாகங்களையும் வீர நிகழ்ச்சிகளையும் எத்தனையோ எத்தனையோ சொல்லலாம்.

இந்த வருஷ தீபாவளி மலரின் அட்டையிலே தோன்றும் அற்புதக் காதலர்களைப் பார்த்தீர்களா?

காதலன் அவளை அப்படியே பருகிவிட விரும்புவது போல் பார்க்கிறான் அல்லவா? ஏன், அவளுடைய விழிகளில் மட்டும் ஆர்வம் குறைந்தா இருக்கிறது! அவளும் அவனை.....!

காதலர்களின் இந்தப் பார்வையைப் பார்க்கும் போது கவிச் சக்கரவர்த்தி கம்பருடைய கீழ்க்கண்ட அடிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்

"பருகிய நோக்கெனும் பாசம்" எவ்வளவு அற்புதமான சொற்றொடர்! இந்தச் சொற்றொடருக்கு ஏற்ப அட்டைச் சித்திரம் விளங்குகிறது! இலக்கியத்துக்கேற்ற வண்ணஓவியம்!

இவர்கள் என்ன என்ன இன்பக் கதைகள் பேசிக்கொள் கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது! அவர்கள் பேசும் சரச சல்லாப மொழிகளைச் சற்றுக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லையே என்று சிலருக்குத் தாபமாகக் கூட இருக்கலாம்! ஆனால் காதலின் உண்மை நிலையை அறிந்தவர்கள் அவர்கள் பேச்சைக் கடந்த நிலையிலிருக்கிறார்கள் என்பதை உணர்வார்கள்! அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு இன்றுமட்டுமல்ல, இருபத்துநாலு மணி நேரமல்ல, யுகம் யுகமாகவே நின்று விடுவார்கள்! உள்ளம் உள்ளத் தோடு நயனங்கள் மூலம் பேசும்போது பேச்சு எதற்கு?

பயன் கருதிச் செய்யப்படும் காரியம் உலகில் என்றும் ஒரு மாற்றுக் குறைவாகவே மதிக்கப்படுகிறது.

கலைப் பொருள் வியாபார நோக்கோடு செய்தால் அதன் பெருமை குன்றியே இருக்கிறது. பயன் கருதாமல் கலைக்காகவே செய்யப்படும் கலைப் பொருள் உலகில் உயர்ந்தே விளங்குகிறது.

'காதல்' பயன் கருதாக் காதலாக விளங்கும் வரை அது அற்புதமாக விளங்குகிறது. காவியத்துக்கும் ஓவியத்துக்கும் தகுதி பெற்றதாக விளங்குகிறது. அந்தக் காதல் காமமாகப் பரிணமித்து விடும் போது உலகம் அருவருப்புக் கொள்ளுகிறது.

காதலுக்காகவே காதல் செய்யும் பண்பு நடைமுறை உலகில் காண்பது அரிது!

அதனாலேயே ஓவியர்களும் கவிஞர்களும் இலக்கிய ஆசிரியர்களும் கற்பனையில் கண்டு தெய்வீகக் காதல் என்று போற்றினர்.

அத்தகைய தெய்வீகக் காதலர் இருவரை, காதல் மணம் எங்கும் வீசும் தீபாவளித் திருநாளில் ஓவியர் மணியம் இம் மலரின் அட்டைப் படத்திலே வழங்குகிறார்.

பாஞ்சாலி சபதம்

மகாகவி பாரதியார் எளிய சொற்கள், எளியநடை, எளி தில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுமக்கள் விரும் பும் மெட்டு இவைகளைக் கொண்டு கவிதைகள் இயற்றினார். அவருடைய பாட்டிலே கற்கண்டின் இனிமை சொட்டும். இனிமை மட்டும்தானா? பரம்பரை பரம்பரையாக நமது முனி புங்கவர்கள் ஓதிவந்த வேத மந்திரங்களின் சக்தியும் அவ ருடைய கவிதைகளிலே இருக்கக் காண்கிறோம். இப்படி யெல்லாம் மகா கவியின் கவிதைகளைக் குறித்து வியந்து பாராட்டிக் கொண்டே இருக்கலாம். பாரதியை விட்டு விட்டு அவர் பாடிய பாஞ்சாலி சபதத்துக்கு வருவோம்.

திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்பமில்லாதவனாகவும் துரியோதனனிடம் வெறுப் புள்ளவனாகவும் காட்டிப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இயற்றியிருக்கிறார். தம்முடைய பாஞ்சாலி சபதத்தைப் பற்றிப் பாரதியாரே சொல்வதைக் கேட்போம். "எனது சித்திரம் வியாசர் பாரதத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந்நூலை வியாசர் பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதி விடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி."

இவ்வாறு தமிழ் நடைக்கு மாத்திரமே தாம் பொறுப்பாளி என்று அவர் கூறிக் கொண்டாலும் இவருடைய பாஞ்சாலி சபதமே மூல நூலோ என்று எண்ணும்படி இருக்கிறது. இந்தப் பாடல்களிலே நவரசங்களும் ததும்புகின்றன. சிறப்பாக வீரச் சுவையும், தருமக் குரலும் பொங்குகின்றன.

துரியோதனன் சபையில் அதர்மத்தில் அண்ணனையும் மிஞ் சிய துச்சாதனன் பாஞ்சாலியை இழுத்து வந்தபின், சபை யோரைப் பார்த்துத் துரௌபதை கூறும் வார்த்தைகள் அழகும் ஆற்றலும் மந்திர சக்தியும் கொண்டவையாக இருக் கின்றன. அம்பு பட்ட மான்போல் அலறித் துடிக்கும் பாஞ் சாலியின் நிலைமையைக் கண்டு, பீமனின் ஆறாச் சினம் கொள் வதையும் அவன் சினத்தை அடக்குவதற்காக விஜயன் சமாதானம் சொல்லுவதும் அற்புதமான கட்டங்கள்.


"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடியும் வெல்லும், எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்"

என்று அர்ச்சுனன் கூறுகிறான். பின்னர், பீமன், அர்ச்சுனன், திரௌபதி, முதலானோர் சபதம் கூறியவுடன் 'பாஞ்சாலி' சபதம் எனும் காவியம் முற்றுப் பெறுகிறது.

இந்த அருமையான காவியத்தில் காணப்படும் பொருளை நமது ஓவியக் கலைஞர் மணியம் தமது கற்பனைக் கண் கொண்டு பார்த்து மனோபாவத்தினால் உருவகப்படுத்தி அழகிய வண்ணச் சித்திரக் காட்சிகளாக அமைத்துத் தந்திருக்கிறார். இந்த அருமையான பாஞ்சாலி சபதச் சித்திரக் காட்சிகளை 87-90 பக்கங்களில் காணலாம்.


மனைவி : தீபாவளி லீவுக்குக் கல்கத்தா போனால் எங்கே தங்குவது என்ற கவலையே இல்லாமல் நீங்கள் பாட்டுக்குக் குஷியா இருக்கேளே !
கணவர் : அந்தக் கவலையை அங்குள்ள 'கோமள விலாஸ்'காரர்கள் நமக்கு வைக்கவில்லையே ! வசதியான ஹோட்டலை வைத்துக் கொண்டு நம் வரவை மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ! அந்த சந்தோஷத்தில்தான் இருக்கேன் !
கோமள விலாஸ்
73, ராஷ் பிஹாரி அவின்யு
GRAMS: SOUTHTEL கல்கத்தா-26 PHONE: 46-1960

நாதனுள்ளிருக்கையில்



அகிலன்

தனுஷ்கோடிக்குச் சென்று கொண்டிருந்த இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில், கட்டையை நீட்டிவிட்டுப் படுத்திருந்தார் பேரின்பநாயகம். கட்டை நல்ல உரமான கட்டை. அதன் சட்டைப் பையில் ராமேசுவரத்துக்கு டிக்கட் இருந்தது.

அறுபது வயதைத் தாண்டி ஆறு மாதங்கள் கண்ட அநுபவசாலிக் கட்டை அது. வைரம் பாய்ந்த தேகத்தைப் பார்த்தால் நாற்பத்தைந்து வயது கூட மதிக்க முடியாது.

பெரிய துணிப் பையைத் தலைக்கு வைத்துப் படுத்திருந்தது அது. பைக்குள் மாற்றுத் துணிகளும், கெட்டி அட்டைச் சித்தர் பாடல் தொகுப்பொன்றும் இருந்தன. பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அகப்பைச் சித்தர், அழுகணிச் சித்தர் இப்படிப் பல சித்தர்கள் அந்த 'பைண்ட் வால்யூ'முக்குள் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். பாம்பாட்டிச் சித்தரின் பதினேழாவது பக்கத்தில் ஒரு காகித உறையில் ஒரு ரூபாய் நோட்டுக் கற்றை பிதுங்கிக் கொண்டிருந்தது.

வண்டியின் அடுத்த பலகையில் நாலைந்து பையன்கள் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டு வந்தார்கள். அதற்கடுத்த பலகையில் இலங்கைக்குக் கப்பலேறப் போகும் பிரயாணிகள், ராமேசுவரத்துக்கு யாத்திரை போகிறவர்கள், சொந்த ஊர்களுக்குத் திரும்புகிறவர்கள்—இப்படிப் பலர் இருந்தார்கள்.

ரயில் ராமநாதபுரத்தைத் தாண்டி மண்டபம் ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த பலகையிலிருந்த பையன்கள் பின்னை வரத்துக்காக ராமேசுவரம் போகிறவர்களைப் பற்றிப் பலவிதமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு வந்தார்கள்.

'மூட நம்பிக்கை' என்றான் ஒருவன். விஞ்ஞான உண்மை அதில் பொதிந்து கிடப்பதாகச் சொன்னான் மற்றொருவன். 'மூட நம்பிக்கை இல்லை, கருத்துள்ளநம்பிக்கை' என்று வாதாடினான் மூன்றாவது பையன். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த காரணங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

சிந்தனை சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருந்த பேரின்பநாயகத்திடம் பையன்களின் பேச்சு விழிப்பேற்படுத்தி விட்டது.

அவரே ஒரு சித்தர்; அரை குறைச் சித்தர். அதாவது அவருக்குச் சித்து விளையாட்டுக்கள் கைவரவில்லை. ஆனால் சித்த வைத்தியம் அவரைக் கைதூக்கி விட்டது.

அவருடைய காளைப் பருவத்தில், இருபதாவது வயதில், அவருடைய கிராமத்துக்கு ஒரு கோவணச் சித்தர் வந்திருந்தார். அவரைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். அற்புதமான சித்து விளையாடல்களை அவர் செய்து வந்தாராம். தெருவோரம், வீட்டுத் திண்ணை, மரத்தடி, குப்பை மேடு எங்கே வேண்டுமானாலும் அவர் படுத்து உறங்கினார். வியாதியஸ்தர்களுக்குப் பச்சிலை மருந்துகள் அரைத்துக் கொடுத்துக் குணப்படுத்தினார்.

விசித்திரமான கதை ஒன்று கிளம்பி விட்டது :

அவர் படுத்து உறங்கியபோது, கை வேறு, கால் வேறு, கழுத்து வேறாகத் தனித் தனி முண்டங்களாகக் காட்சி கொடுத்தாராம். தலைக்குப் பக்கத்தில் அந்தரத்தில் ஒரு விளக்கொளி தெரிந்ததாம். பலர் நேரில் பார்த்ததாகச் சொன்னார்கள். இந்த அதிசயம் உண்மை தானா என்று கண்டுபிடிக்கப் பேரின்பநாயகம் அவருக்குச் சீடரானார். அவருடன் பல ஊர்களைச் சுற்றி, பல மருந்துகள் அரைத்து, பலவிதமான அநுபவங்களைப் பெற்றார். ஆனால் ஒருநாள்கூடத் தமது குருநாதரிடம் அவர் எதிர்பார்த்த அதிசயம் நடக்கவில்லை.

உறங்கும்போது சித்தர் குறட்டை விட்டார்; தலையும் கழுத்தும் ஒட்டிக் கொண்டுதான் இருந்தன !

சித்தரே ஒருநாள் தமது சீடரை மடக்கினார். "ஏண்டா, பயலே! நீ பிடிவாதக் காரண்டா. இதற்காகவா என்னைச் சுற்றுகிறாய்?" என்று கேட்டார்.

சீடர் மௌனம் சாதித்தார்.

"வந்ததுதான் வந்தாய்; வைத்தியத்தைக் கற்றுக் கொண்டு சொந்த ஊருக்கே போய்த் தொலை. வயது வந்த பையன் என்னோடு இருந்தால் சம்சார பந்தம் பற்றிக் கொள்ளும்."


மூன்று வருஷத் தொண்டு பேரின்பநாயகத்தைச் சித்தராக்கவில்லை; சித்த வைத்தியராக்கியது.

பக்கத்துப் பலகையிலிருந்து ஒரு பையன் வேகத்தோடு பேசினான் :

"மூடப் பழக்கம்! முட்டாள் நம்பிக்கை! யாத்திரைக்கும் பூசைக்கும் காசு செலவுசெய்தால் குழந்தை பிறக்குமா?"

பேரின்பநாயகம் அவனுடைய கட்சியைத் தமக்குள் ஆமோதித்தார்.

"நாதனுள்ளிருக்கையில் இவர்கள் ஏன் நட்ட



கல்லைத் தேடிப் போகிறீர்கள்? இதில் செலவழிக்கும் காசையும் நேரத்தையும் வைத்தியரிடம் செலவழிக்கலாம்; மருந்து வாங்கிச் சாப்பிடலாம்" என்று கத்தினான் அதே பையன்.

வைத்தியருக்கு இது 'சுருக்'கென்று தைத்தது. சித்த வைத்திய முறையில் அவர் பலவிதமான 'சர்வ ரோக நிவாரணி'களைத் தயார் செய்து விட்டார். பல வியாதிகளைப் பறக்க அடித்துப் பல லட்சம் திரட்டி விட்டார். ஆனால் இந்த ஒரே ஒரு விஷயத்தில் அவருடைய வைத்தியம் கைகொடுக்கவில்லை.

அந்த மருந்தை மட்டிலும் அவர் நிறுத்திக் கொண்டு விட்டார்.

பிறவிப் பெருங்கடல் தாண்டியவன் முக்தி நிலையை எதிர்ப்பது போல், பாம்பன் கடலைத் தாண்டியவுடன் ராமேசுவரத்தை எதிர்பார்த்தார் பேரின்பம்.

பழுதடைந்த பாம்பன் பாலத்தில் ரயில் அட்டையைப் போல் ஒட்டிக் கொண்டு நகர்ந்தது. குபீரென்று கடல் காற்று உள்ளே வீசவே, கட்டையை நிமிர்த்திச் சன்னலோரத்தில் சாயவிட்டார் வைத்தியர். வலது புறத்தில் மீன் பிடிக்கும் சிறு தோணிகள் இரண்டு, பாய்மரங்களில் காற்றை நிரப்பிக் கொண்டு, கடல் நீரைக் கிழித்துச் சென்றன. இடது புறத்தில் கருமீன் குஞ்சுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நீருக்கு வெளியே எழும்பிக் குதித்துச் சண்டை போட்டுக் கொண்டன. தந்திக் கம்பிகளில் தவ யோகம் செய்த மீன் குத்திகள், தரிசனம் கிடைத்தவுடன், தரிசனம் கொடுத்த சிறு மீன்குஞ்சுகளைத் தமக்குள்ளே இழுத்துக் கொண்டன.

பாம்பன் சந்திப்பில் இறங்கி, குழாயில் தண்ணீர் குடித்து விட்டு, அடுத்தாற் போல் காத்திருந்த ராமேசுவரம் வண்டியில் ஏறிக் கொண்டார் பெரியவர்.

யாத்திரைக்காரர்களைப் பிய்த்துப் பிடுங்கும் தரகர்கள் பெரியவரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. பாம்பாட்டிச் சித்தரின் பதினோராவது பக்கத்தில் இருக்கும் தோட்டுக் கற்றையை அவர்கள் எங்கே கண்டார்கள்? கட்டை வெறும் கட்டை என்று அவர்கள் நினைக்கவில்லை. பிச்சைக்காரக் கட்டை என்று ஒதுக்கினார்கள். ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் பிச்சைக்காரர்களுக்கென்று ஒதுக்கிய கட்டை அது.

வண்டியை வடக்கத்திக் கூட்டம் அடைத்துக் கொண்டிருந்தது. நாற்றம் சித்தரின் மூக்கைத் துளைத்தது. உள்ளத்தின் அழுக்கைப் போக்கிக் கொள்ளத்தான் அவர்கள் அங்கு வந்தார்களே தவிர, உடல் அழுக்கையல்ல. பத்து நாட்களுக்கு முன்பு காசியில் கங்கைத் தண்ணீரில் மூழ்கியவர்கள், அந்தப் புனிதத் தன்மை கெட்டுப் போகாதபடி அடுத்த முழுக்குக்கு ராமேசுவரம் கடலுக்கு வந்தார்கள். உள்ளத்தைக் கழுவிக் கொள்ளச் சுவாமி தரிசனம் போதும். உடலைக் கழுவிக் கொள்ள ஒரு கட்டிச் சோப்பும் ஒரு மட்டைத் தேங்காய் நாரும் வேண்டும்.

ராமேசுவரம் கோயில் பிராகாரத்தைக் கண்டு திகைத்துப் போனார் பேரின்ப நாயகம். மணலைத் தவிர, கல்லையே காண முடியாத அந்தத் தீவில் பெரிய பெரிய மலைகளை உடைத்துக் கல் தூண்களை நிறுத்தி வைத்தான் அதைக் கட்டியவன். மனிதன் கல்லைவிட உறுதி வாய்ந்தவன்தான். கடலைத் தாண்டி மலையைத் தூக்கி வந்து கோயில் எழுப்பியிருக்கிறான் அல்லவா?

அன்று வைகாசி பௌர்ணமி.

இடித்துப் புடைத்துக் கொண்டு சந்நிதியை மறைத்தது பக்தர்கள் கூட்டம். யானையைவிடப் பெரிதாய்ப் படுத்துக் கிடந்த நந்திகளும், உள்ளே நட்டநடுவில் நின்ற சிவலிங்கத்துக்கும் இடையில் நெரிசல் தாங்கவில்லை. சித்த வைத்தியர் பக்தரில்லை. ஆகவே அவர் ஒதுங்கி ஓர் தூணருகில் உட்கார்ந்து, 'சிவோஹம்-நானே சிவன்' என்று மூச்சை உள்ளே இழுத்தார். பிறகு வெளியே விட்டார்.

நாதனுள்ளிருக்கையில் இந்த மனிதர்கள் ஏன் இப்படி நட்டகல்லைச் சுற்றிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்று அவருக்குப் புரியவில்லை. அழுதார்கள், தொழுதார்கள், ஆடினார்கள், பாடினார்கள், அதைக் கேட்டார்கள், இதைக் கேட்டார்கள், அர்ச்சனை அபிஷேகம் என்று என்ன என்ன வேலையோ செய்தார்கள்.

பேரின்ப நாயகம் எழுந்து நின்று, தம்முடைய நண்பர் ஒருவரிடம், 'போய் வருகிறேன்' என்று சொல்லும் பாவனையில் ஒரு கும்பிடு போட்டு விட்டுத் திரும்பினார்.

இதைப் போல் ஒரு நம்பிக்கையில்லாத கட்டை இங்கு எதற்காக வந்தது? வேடிக்கை பார்க்கவா?

இங்கே மட்டும் அது வரவில்லை. இமயமலைக்குப் போய்க் கம்பளிப் போர்வையைச் சுற்றிக்கொண்டு கைலாய நாதரை வேடிக்கை பார்த்தது. காசிக்குப் போய் விசுவநாதரை விசாரித்தது. கன்னியாகுமரிக்குச் சென்று அம்மனைப் பேட்டி கண்டது. கடைசி கடைசியாக ராமேசுவரத்துக்கு வந்திருக்கிறது.

தமக்குள்ளே உள்ள நாதனிடம் தாம் நம்பிக்கை வைப்பதுபோல், மற்ற மனிதர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மற்ற நாதர்களையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு வந்து விட்டது. பார்த்த பிறகும் அவருக்குப் பக்தி ஏற்படவில்லை. மற்ற மனிதர்களிடம் அனுதாபம் கொண்டார்.

கையில் பணமிருந்தது. தொழிலைப் பிள்ளைகள் கவனித்துக் கொண்டார்கள், வீட்டை மனைவி மேற்பார்த்தாள். கட்டையில் தெம்பிருந்தது; அவர் புறப்பட்டு விட்டார்.

மறுநாள் காலையில் தனுஷ்கோடிக்குப் போய்ச் சேதுக் கடற்கரையில் முழுகி விட்டு ஊர் திரும்ப வேண்டியதுதான்.

2


அன்றைக்குப் பௌர்ணமியல்லவா?

அமாவாசை — பௌர்ணமி இந்த இரண்டு இரவுகளும் அவருக்கு மிக முக்கியமானவை. தனிமைச் சமாதியில் உட்கார்ந்து நீண்ட நேரம் தியானத்தில் மூழ்கி விடுவார். வீட்டில் இருக்கும் போது அறையைத் தாழிட்டுக் கொண்டு நிலைக் கண்ணாடியின் முன்னால் உட்கார்ந்து விடுகிற வழக்கம் அவருக்கு.

இப்போது அவருக்கு அந்தத் தனிமை தேவையாக இருந்தது.

சத்திரம், சாவடி, ஓட்டல் அறை ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. பெட்டிக் கடையில் ஓரணா கொடுத்து இரண்டு வாழைப் பழங்களை உள்ளே தள்ளினார். ஊருக்கு வெளியில் தென்னந் தோப்பைக் கடந்தார். தோப்பையும் தாண்டிப் பெரிய மணற் குன்று தென்பட்டது. அதன் உச்சியில் ஏறி எதிர்ப் பக்கம் பார்த்தார். பார்த்த இடமெல்லாம் பாலைப்போல் நிலவு கொட்டிக்கிடந்தது.

ஒரு மைல் தூரத்துக்கப்பால் பசுமையும் வெண்மையும் கலந்த மணல் திட்



டுக்கள் மங்கலாகத் தெரிந்தன. இடையில் அங்கங்கே தாழம் புதர்கள். அந்த இடம் அவருக்குப் பிடித்திருந்ததால் வேகமாக நடந்தார்.

பக்கத்தில் வந்து பார்த்தவுடன் அந்த இடம் அவரை ஏமாற்றி விட்டது. அசை போடும் கால்நடைகளைப் போல் நிலைக்கொண்டும் திரும்பிக் கொண்டிருந்தன மணல் மேடுகள். குத்துக் குத்தாக முளைத்திருந்த தாழம் புதர்களிலும் ஒரு ஒழுங்கில்லை.

மேலும் நூறடி நடந்தார். ஒரே ஒரு நிட்டு இயற்கையின் அழகையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு அவரைத் தன்னிடம் அழைத்தது. நான்குபுறமும் சுவர் போல் எழும்பியிருந்தன தாழஞ் செடிகள். இலைக் குருத்துக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தாழம்பூ வெடித்திருந்தது. மலர்ந்த தென்னம் பாளைகள் போல், நிலவுக் கீற்றுக்களின் தொகுப்புக்கள் போல் அவை தோன்றின. இயற்கையின் பரந்த மார்பகத்தில் இப்படி ஒரு விசித்திரமான பேரழகு கொப்புளிக்க முடியுமா? பச்சைப் புதர்களின் உச்சித் தலைகளில் கொழுந்து விட்டெரியும் நெருப்புப் பந்தங்கள்....

அருகில் நெருங்கப் போனவர் திடுக்கிட்டு ஒருகணம் திகைத்தார்.

யாரோ இரண்டு பேர்கள் அந்தப் புதருக்குள் பேசும் சத்தம் கேட்டது. ஒன்று ஆண் குரல்; மற்றொன்று பெண் குரல்.

உண்மைதானா?


இரண்டு கடல்களுக்கு மத்தியில், இரவின் நடுச்சாமத்தில், நடுக் காட்டின் புதருக்குள், மணல்மேட்டுத் தனிமையில் மனிதக் குரல்களா? தம்மால்தான் பயத்தை வெல்ல முடியும் என்று அவர் நினைத்திருந்தார். அவர்களுக்குப் பயமா யிருக்காதா?

சத்தம் செய்யாமல் மறைவில் இருந்து கொண்டு புதர் வழியே எட்டிப் பார்த்தார். உண்மைதான். இறுக்கிப் போயிருந்த மணல் திட்டில் இரண்டு பேர்கள் உல்லாசமான பேச்சில் ஈடுபட்டிருந்தனர். ஆண் மகனின் மடியில் தலைவைத்துப் படுத்து அவனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்.

உடனே அந்த இடத்தை விட்டுப் போய்விட நினைத்தார் பேரின்பநாயகம். ஆனால் கால்கள் நகரவில்லை. தம்மைவிட நூதனமான பிராணிகளாய் அவர்கள் தோன்றியதால் வேடிக்கை பார்த்தார்.

பெண்ணின் கண்களில் வழிந்த நீர் நிலவில் மண் புழுப்போல் தெரிந்தது. அதை அவன் துடைத்து விரல்களால் சுண்டினான்.

அவனுக்கு முப்பது வயதிருக்கும்; அவளுக்கு ஐந்து வயது குறைவாக இருக்கலாம். இரு







தபால்காரர்:— உங்க விலாசத்தைக் கண்டு பிடிக்க எவ்வளவு தூரம் அலைஞ்சிருக்கேன், தெரியுங்களா?......
செட்டியார்:— அடடா!............பேசாமே போஸ்டிலே அனுப்பியிருக்கலா முங்களே?...............

வருமே நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்தது.

அவன் பேசினான்;

"என்னுடைய கஷ்டம் உங்களுக்கு எங்கே தெரிகிறது? நீங்கள் பெண்ணாய்ப் பிறந்திருந்தால் தெரியும். என்றைக் குமே உங்களுக்குச் சிரிப்பும் விளையாட் டும் தான்."

"பெண்ணாய்ப் பிறக்கவில்லையே என்று நான் வருத்தப்படுகிறேன்" என்றான் அவன். "பிறந்திருந்தால் கட்டியவனை அதிகாரம் செய்துகொண்டு காலந் தள்ள லாம். நூறு ரூபாய்க் காசுக்கு என்னைப் போல் ஆலாய்ப் பறக்க வேண்டிய தில்லை. மதுரையில் இருபது ரூபாய் கொடுத்து நாம் குடியிருக்கும் வீட்டைப் பார்த்தால் எனக்கு எப்படிக் கோபம் வருகிறது, தெரியுமா? இடித்துத் தூள் தூளாக்கத் தோன்றுகிறது."

"நான் இருப்பது உங்களுக்குப் பாரமா யிருக்கிறதா?" என்று கேட்டாள் அவள்.

"அப்படிச் சொல்லாதே!" என்று அவள் கன்னத்தில் அவன் செல்லமாய்த் தட்டினான். "சிரிப்பும் விளையாட்டும் எனக்கு நீ கொடுத்திருக்கிறாய். இல்லா விட்டால் இதற்குள் நான் ஓடி விட்டோ, சண்டை போட்டுக் கொண்டோ சிறைக்குப் போயிருப்பேன். அல்லது பட்டாளத்திலாவது போய்ச் சேர்ந்திருப்பேன்."

பெருமை தாங்காமல் அவள் அவ னுடைய கழுத்தை வளைத்துக் கொண்டு விட்டாள்.

"பிறகு ஏன் என்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள்?"

"எதைப் புரிந்து கொள்ளவேண்டும்?"

"நமக்குக் கல்யாணமாகி ஏழு வருஷங் களுக்கு மேல் ஆகவில்லையா?"

"எழுபது வருஷமானால்தான் என்ன?"

"எழுபது வருஷமானால் அப்புறம் தெரியும். உழைத்துப் போட ஒரு பிள்ளை யில்லாமல் என்ன செய்வீர்களாம்?"

"பின்னே, பின்னே, பின்னே! ஏழு வரு ஷத்தில் ஏழு பிறந்தால்தான் தெரியும் உனக்கு. ஏன், எட்டுகூடப் பிறக்கும்!"

அவன் சிரித்தான்.

"சிரிக்காதீர்கள்" என்று கத்தினாள்.

"நூறு ரூபாய் சம்பளத்தில் நாலேணி யாட்டம் போடுகிறோம் நாம். உனக்கோ குழந்தைப் பைத்தியம் பிடித்திருக்கிறது. வைத்தியருக்கும், மருந்துக்கும் ரொட்டி- மிட்டாய்க் கடைக்காரனுக்கும் செலவு வைக்க வேண்டு மென்கிறாய் நீ."

"ஐம்பது ரூபாய்க்குக் குறைந்து வாங்குகிறவர்களுக்கு இந்து குழந்தைகள் இல்லையா?"

"அந்தக் குடும்பத்தில் ஒரு நாள் தலை நீட்டிப் பார்த்தால் தெரியும்."

"உங்களுக்கு என்னைத் தெரியவே தெரியாது!" என்று அலறினாள் அவள். "நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கக் கூடாது."

"சண்டைக்கு வராதே! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? ராமேச வரத்துக்கு வரவேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றாய். கூட்டிக் கொண்டு வந்தேன்."

"உங்களுக்கு இதில் நம்பிக்கை யில்லையா?"

"எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை யில்லை. நீ நம்பினால் சரி."

"உங்களுக்கு வேறே எதில்தான் நம் பிக்கை யுண்டு?"

"சொல்லட்டுமா! உன்னிடம் நம் பிக்கையுண்டு; என்னிடம் நம்பிக்கை யுண்டு." அவன் உரக்கச் சிரித்தான்.

பேரின்பநாயகத்துக்கு அவனுடைய தன்னம்பிக்கை பெருமை தந்தது. நம் முடைய தத்துவத்தின் வெற்றி என்று எண்ணிக் கொண்டார்.

"இந்தத் தன்னம்பிக்கை போதவே போதாது" என்று சீறினாள் அவள். "மனிதர் குறையுள்ளவர்கள். அவர்க ளுடைய குறைகளைக் கடவுள்தான் தீர்த்து வைப்பார்."

"சரி, அப்படியே வைத்துக்கொள்."

"நான் என்ன வைத்துக் கொள்வது?" படீரென்று எழுந்து உட்கார்ந்து அவனை வெறித்துப் பார்த்தாள். "பொய் சொல் லாமல் உங்கள் நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். உங்களுக்கு என்றும் ஏதாவது கஷ்டமுண்டா?"

"எல்லாக் கஷ்டமும் உண்டு" என்று அவள் முகத்தைத் திருப்பினான் அவன்.

"கேவலம்! என்னை நீங்கள் பெண்ணா கவே மதிக்கவில்லை. மதித்தால் என் உணர்ச்சியை நீங்கள் புரிந்து கொண் டிருப்பீர்கள். நான் உங்களுக்கு என்ன கொடுத்திருக்கிறேன், உங்களுக்கே கொடுத்திருக்கிறேனா? சொல்லுங்கள்!"

மறைவிலிருந்த பேரின்பநாயக உடல் சிலிர்த்தது.

அவள் ஏதேதோ பேசிக் கொண்டே போனாள். தாய்மை உணர்ச்சியின் தவிப்பு அவர் கண்டும் கேட்டும் ...அளவுக்கு அந்தப் பிரதேசத்தி...ரொலி செய்தது. தம்முடைய கண்க ளில் அந்தப் பெண்ணுக்காகக் கசிந்து வழிந்த நீரை அவர் துடைத்து கொண்டார்.

அவன் அவளருகில் சென்று சமா தானம் செய்ய முயன்றான். அவள் விலகிக் கொண்டு தள்ளி உட்கார்ந்தாள்.

"இதோ பார், உனக்காக இப்போது கோவிலுக்குப் போய் வந்தோம்."

"'எனக்காக'! எனக்காகத்தானே? நமக்காக இல்லையே?"

அவன் பேசவில்லை.

"எனக்காக நீங்கள் அங்கே வந்தீர்கள்; உங்களுக்காக நான் அங்கே வந்திருக்கிறேன். நமக்குள் உள்ள உறவு இவ்வளவுதானே?"

"என்னை நீ என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"இனி உங்களுக்காக என்னிடம் ஒன்றுமே இல்லை. என்னைத் தொடாதீர்கள்." அவள் எழுந்து ஓடத் தொடங்கினாள்.

அவன் பிடித்துக் கொண்டான். அவள் திமிறினாள்.

"நீங்கள் நம்பாத வரையில் நமக்குக் குழந்தை பிறக்காது. என்னை விட்டு விடுங்கள்." அவள் அவனுடைய பிடியை விடுவித்துக் கொண்டு போக முயன்றாள். முடியவில்லை. அவன் தோளில் ஓங்கித் தன் தலையை மோதிக் கொண்டு அந்தக் கடலே பொங்கும்படி கதறி அழுதாள்.

"கோயிலில் நீங்கள் கையெடுத்துக் கும்பிடவில்லை. அதை நான் பார்த்தேன். நாலு பேருக்குமத்தியில் எனக்கொன்றும் சொல்லத் தோன்றவில்லை. இனி நீங்கள் கடவுளைக் கும்பிடாத வரையில் என்னைத் தொடுவதற்கு உங்களை விடமாட்டேன். தொடாதீர்கள். எட்டி நில்லுங்கள்!"

படபடவென்று அவள் தேகம் நடுங்கியது. அவள் மயங்கிப் போய்த் தரையில் துவண்டு விழுந்தாள். பேச்சு மூச்சில்லை; அசைவில்லை.

3

கால் மணி நேரத்தில் திரும்பவும் அவளுக்குச் சுய உணர்வு திரும்பியது. இந்தக் கால் மணி நேரத்தில் அவளுக்காக அவள் கணவன் துடித்த துடிப்பு, பட்ட வேதனை....

அவளுடைய நாடித் துடிப்பைக் கவனித்தான். மூச்சு வருகிறதா என்று பார்த்தான். கண்களைத் திறந்து விட்டான். அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். தட்டி எழுப்பினான், ஒன்றிலும் பலனில்லை.

நடுக்காட்டில், நள்ளிரவில், அவள் கட்டையாக விறைத்துப் போய் விட்டாளோ என்ற பயம் அவனைப் பிடித்துக் கொண்டது. பயமும் துக்கமும் அவனைப் படாத பாடு படுத்தின. குழந்தைபோல் அவள் பெயரைச் சொல்லி அழைத்துக் கேவிக் கேவி அழுதான்.

பயம், துக்கம், வேதனை! நிராசை! ஏமாற்றம் .?. .?

அவளைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு வானத்தை நோக்கிக் கரங்களை உயர்த்தினான். பிறகு கரங்கள் தாழ்ந்து நெஞ்சுக்கெதிரே குவிந்தன. மூடிய கண்களை அவன் திறக்கவில்லை; குவிந்த கரங்களை அவன் தாழ்த்தவில்லை. கும்பிடும் சிலையாக மாறினான்.

கடல் காற்று ஜில்லென்று அவள் முகத்தில் வீசியது. கணவனின் கண்ணீர் அவள் கண்களில் வழிந்தது. மெல்ல மெல்ல அவள் கண்களைத் திறந்தாள். உதடுகள் துடித்தன. நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

அவளுக்குத் தன்னுடைய துணைவனின் கோலத்தை நம்பவே முடியவில்லை. நன்றாக மூர்ச்சை தெளிந்தவுடன் அவனைப் பார்த்துப் பல் தெரியச் சிரித்தாள். கும்பிட்ட அவன் கரங்களை அன்புடன் பற்றித் தன்னுடைய நெஞ்சில் புதைத்துக் கொண்டாள்.

நேரம் சென்றது. நிலவு உச்சி வானத்தை விட்டு மேற்கில் ஒதுங்கி அவர்களை வேடிக்கை பார்த்தது.

இரண்டு புறமும் இருந்த கடல்கள் நிலவாய்க் கொந்தளித்து ஒன்றை ஒன்று தழுவிக் கொள்வதற்கு அலைக் கரங்களை வீசிக் கொண்டன.

ஒன்று ஆண் கடல்; மற்றொன்று பெண் கடல். — அப்படித்தான் அந்த ஊர்க்காரர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஆண் கடல் அலைகளை எழுப்பி விட்டுக் கொண்டு, முட்டி மோதிக்கொண்டு, சீற்றத்துடன் ஆரவாரம் செய்தது. பெண் கடலின் கொந்தளிப்பு வெளியில் தெரியவில்லை. அமைதியாக அலைகளைச் சுருள விட்டு மென்காற்றில் அது நெளிந்தது.

பேரின்பநாயகம் கடல்களின் நிலையில் அந்தத் தம்பதிகளைக் கண்டார். சத்தம் செய்யாமல் அவர்களுடைய தனிமைக்கு வாழ்த்து கூறி விட்டு, அந்த இடத்தை விட்டு நழுவி விட்டார்.

காலைக்குப் புதிய வனிமை பிறந்து விட்டது. காற்றைப் போல் நடந்து பழைய மணல் குன்றுக்கே வந்தார். உச்சியில் நின்று உலகத்தைத் திரும்பிப் பார்த்தார்.

அவருடைய சித்தத்துக்குள்ளே அடைபட்டுக் கிடந்த 'நான்' என்னும் புலி, அதை உடைத்துக் கொண்டு வெளியே பாய்வதற்காகப் பயங்கரமாக உறுமியது. யாரோ முன் பின் தெரியாத ஒரு பெண்பிள்ளை, தன்னுடைய வேதனைச் சுமையெல்லாம் அவரை யறியாமலே இவரிடம் இறக்கி விட்டு, தான்பாட்டுக்கு அங்கே தன் கணவனுடன் உல்லாசமாய்க் குலவிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய கண்ணீர்த் துளிகள் இங்கே இவரது சித்த சாகரத்தில், அறுபதாண்டுகள் வரையிலும் ஏற்படாத கடும் புயலை எழுப்பி விட்டன.

நாதனுள்ளிருப்பது உண்மைதான். ஆனால் அந்த நாதனைத் தம்மைத் தவிர வேறு யாருமே நம்பவில்லையே? தம்மை நம்பியவர்கள் தம்முடைய பணத்துக்காக, மருந்துக்காக, தம்முடைய உடைமைகளுக்காக நம்பினார்கள்.

ஆனால் அந்தப் பெண்ணின் கண்ணீர் வெறும் நம்பிக்கையால் துடைக்கப்பட்டு விட்டதே?

நம்பிக்கை : : : :

உருவமில்லாத ஒன்று, பெயரில்லாத ஒன்று, நிறமில்லாத ஒன்று, மணமில்லாத ஒன்று-இதற்கு உருவம் கொடுத்து, பெயர் கொடுத்து, நிறம் கொடுத்து, பொருள் கொடுத்து எப்படி யெல்லாம் நம்புகிறார்கள் இந்த மனிதர்கள்! நாதன் வெளியிலும் இருக்கிறானா? அவளுக்குக் கண்ணீர்தான் காணிக்கையா?

அவருடைய கண்ணீர் கரை புரண்டு வடிந்தது. "கடவுளே! அந்த ஏழைப் பெண்ணுக்கு ஓர் குழந்தையைக் கொடு! அவளுடைய துன்பத்தைப் போக்கு!" என்று தமக்குள்ளே கதறினார்.

இரவெல்லாம் பக்திப் பெருக்கு அவரை ஆட்டி வைத்து விளையாட்டு பார்த்தது. பொழுது புலரும் வேளையில் இரண்டு கடல்கள் கூடும் சேதுக் கரைக்கு அவர் குளிக்கப் போனார். அங்கே அவருக்கு முன்னால் அந்த இளம் தம்பதிகள் ஒன்றாய்க் குளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது முகங்களில் எல்லையற்ற மகிழ்ச்சி தாண்டவமாடியது.

தனுஷ்கோடியிலிருந்து நடுப் பகலில் ரயில் புறப்பட்டது. என்ன திருவிளையாடல் இது! அவர் உட்கார்ந்திருந்த அதே பெட்டியில் அவருடைய பலகைக்கு எதிரில் வந்து உட்கார்ந்தார்கள் அந்தத் தம்பதிகள். பேரின்பநாயகம் அவர்களைப் பார்த்துச் சிரித்து விட்டு, தாமே அவர்களிடம் பேச்சு கொடுத்தார்.

பேச்சு அவரை யறியாமலே வெளிப்பட்டதென்று சொல்லலாம்.

"உங்களுக்கு அடுத்த வருஷம் கட்டாயம் குழந்தை பிறக்கும். அப்படிப் பிறந்தால் என்ன தருவீர்கள்!"

அந்தப் பெண் பிள்ளையின் முகத்தில் குபீரென்று புதுக் களை பொங்கி வழிந்தது. ஆனந்தப் பெருக்கில் அவளுக்கு அவரிடம் என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று தடுமாறினாள்.

பெரியவர் அவள் கணவனைத் திரும்பிப் பார்த்தார். அவன் கண்களில் கேலிச் சிரிப்பு துள்ளத் தொடங்கியது. 'பணம் பிடுங்கும் சாமி ஒன்று எதிரில் வந்து கழுத்தறுக்கத் தொடங்கி விட்டதே! இவன் நம்மைச் சும்மாவிடமாட்டானே!'

சித்த வைத்தியர் அவன் சிரிப்பைக் கண்டு பிடித்து விட்டார்.

துணிப்பைக்குள்ளிருந்த சித்தர் பாடல் தொகுப்பை வெடுக்கென்று வெளியில் இழுத்தார். பாம்பாட்டிச் சித்தரின் பதினேழாவது பக்கத்தில் பதுங்கியிருந்த பணக் கற்றை பக்குவமாய்க் கீழே விழுந்தது. இளைஞன் பிரமித்தான். கட்டை வெறும் கட்டை இல்லை போல் இருக்கிறதே! 'புத்தம் புது நோட்டை அச்சடித்து வைத்திருக்கிறதோ?

"இதில் உங்கள் இருப்பிடத்தை எழுதிக் கொடுங்கள்" என்று துண்டுக் காகிதத்தை அவனிடம் நீட்டினார்.

பணத்தைக் கண்டவுடன் அவனுக்கு அவரிடம் மரியாதை பிறந்து விட்டது. எழுதிக் கொடுத்தான்.

தம்முடைய அச்சிட்ட முகவரிச் சீட்டையும் அவனிடம் கொடுத்தார். அவனுக்கு அதைப் படித்தவுடன் தூக்கி வாரிப் போட்டது.

"குழந்தை பிறந்தவுடன் ஒரு முக்காலணக் கார்டு போடுங்கள். நான் உங்கள் வீட்டுக்கு வருகிறேன். ஒரே ஒரு நிமிஷம் அதை என் கையில் கொடுத்தால் போதும். ஒரு முத்தம் கொடுத்து விட்டு உங்களிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். எனக்கு அதுதான் காணிக்கை."

"பிறந்தால் நாங்களே கொண்டு வருகிறோம்."

"'பிறந்தாலாவது!' பிறக்கும்."

அவர்களுக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்று தினந்தோறும் கடவுளை வேண்டிக் கொண்டார் பேரின்பநாயகம். அன்றிலிருந்து அவர் சித்தரில்லை; பக்தர்.





உங்கள் வீடுகளில்
மங்கள திருவிளக்குச் சுடர்
வருஷம்
முழுவதும் மங்காத
ஒளி தருக!
வினைப்பயன்களின்
வேதனைகள் குறைக. நோவு,
தலைவலி, ஜலதோஷம் மற்றும்
ஜுரத்திலிருந்து 'அனாஸின்' அபாய
மின்றியும், துரிதமாயும், நிச்சய
மாயும் நிவாரணம் அளிக்கும்
என்பது நினைவிலிருக்கட்டும்
'அனாஸின்'
வில்லைகள்
வலியிலிருந்து விடுதலை பெற
இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜ்யாப்ரே மானேர்ஸ் அண்ட் கோ. பிரைவேட் லிட்.
மாக்னெட ஹவுஸ், டக்கல் ரோடு, பம்பாய்-1
டிரேட் மார்க் உரிமையாளர்கள்: ஒயிட்ஹால் பார்மகல் கோ. நியூயார்க், யு. எஸ். ஏ.


LIPTON'S
YELLOW LABEL TEA
லிப்டன்
எல்லோ
லேபீள்
டீ
LIPTON LIMITED (Incorporated in England)
LGC 47


துணிகளின்
பாதுகாப்பிற்கும்
சிக்கன சிலவிற்கும்
தூயவெண்மைக்கும்
சிறந்தது!
பவர்லைட்
சோப்
POWER LIGHT
SPECIAL SOAP
BEST FOR WASHING
POWER LIGHT SOAP
பவர் லைட் சோப்
பவர் லைட் சோப்
நியூ சோப் ப்ரொடியூஸர்ஸ் கும்பகோணம்.
போன் : 22
தந்தி: POWERLIGHT

சீர்திருத்தவாதி

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட சமயம். ஹிட்லர் பல நாடுகளின் பூர்வீக எல்லைக்கோடுகளை மாற்றியமைத்துக் கொண்டிருந்தான். அதே சமயம் திருச்சியில் மதுரநாயகம் சென்னை சர்வகலாசாலையார் நடத்தி வரும் கல்லூரிக் கோட்டையைப் பிடிப்பதற்கு மூன்றாவது தடவையாகப் போர் நடத்திக் கொண்டிருந்தான்.

அன்று அவன் பரீட்சைக் கேள்விகளோடு மல்லாடிக் கொண்டிருக்கையில் அவனுடைய தகப்பனார் சிங்காரம்பிள்ளை தாமரைப்பட்டிக் கிராமத்தில் எமனுடன் வாதாடிக் கொண்டிருந்தார். மதுரநாயகம் பரீட்சைகளை எழுதி முடித்து விட்டுத் தாமரைப்பட்டிக்கு வந்த மறுதினமே எமன் அவனுடைய தகப்பனாரின் உயிரைக் கவர்ந்துகொண்டு போய் விட்டான். அவனுடைய வாழ்க்கையின் மீது ஏகாதிபத்திய உரிமை கொண்டாடிய ஒரு ஜீவன் ஓய்ந்து விட்டது. மதுரநாயகம் சுயநிர்ணய உரிமை பெற்று விட்டான்.

தாமரைப்பட்டிக் கிராமத்தில் பாதிப் பேர் வெல்லம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் வீட்டின் முன்னாலும், கரும்பைச் சாறு பிழிந்து வெல்லம் காய்ச்சுவதற்கான உபகரணங்கள் காணப்படும். சிலர் கரும்புச் சாகுபடியைத் தங்கள் முக்கிய தொழிலாக மேற்கொண்டிருந்தார்கள். சிங்காரம்பிள்ளை கரும்புச் சாகுபடியையும் வெல்லம் காய்ச்சும் தொழிலையும் ஒன்றுக்கொன்று உப தொழிலாக நடத்தி வந்தார்.

தமது தவப்புதல்வன் மதுரநாயகத்தை ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவருடைய இன்பக் கனவுகளில் ஒன்று. மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேற வேண்டியதுதான் அந்தப் பதவிக்கு வேண்டிய படிப்பு என்பதை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார் அவர். தமது மகனைத் திருச்சியில் உள்ள அவருடைய மாமன் வீட்டில் கொண்டுபோய் விட்டு முதல் பாரத்தில் சேர்க்கவும் ஏற்பாடு செய்து விட்டார்.

பையனது படிப்புக்காகத் தமது உடம்பைக் கரும்பாகப் பிழிந்து பிழிந்து, நாளடைவில் சக்கை போல ஆகிக் கொண்டு வந்தார் சிங்காரம் பிள்ளை. கரும்பு பிழியும் யந்திரத்திலிருந்து பெருகி ஓடிய சாறு போலப் பணம் பையனது இருப்பிடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது: கரும்பஞ் சாற்றிலிருந்து நல்ல பலன் கிடைத்து வந்தது: ஆனால் பையனுக்கு அனுப்பிய பணமெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே ஆகி விட்டது. எட்டு வருஷங்களில் மதுரநாயகம் தட்டுத்தடுமாறி எஸ். எஸ். எல். ஸி. வகுப்பு என்ற எல்லைக்குள் சேர்ந்தபோது கிராமத்திலுள்ள தேவதைகளுக்கெல்லாம் பூஜைகள் செய்வித்தார் சிங்காரம் பிள்ளை. அவன் இரண்டு வருஷங்களாக அந்த வகுப்பிலேயே தங்கிவிட்டது அவருக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும் மனமுடைந்து போகவில்லை அவர். தமது கனவு பலிப்பதற்குரிய திட்டத்தில் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் நிறைவேறி விட்டது என்பதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி: எத்தனை வருஷமானாலும் அந்தப் பரீட்சையில் தேறி அவன் என்றைக்காவது ஒரு நாள் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பதவியை ஏற்க வந்து விடுவான் என்ற நம்பிக்கை மட்டும் அவரை விட்டு அகலவில்லை. மூன்றாவது முறையாகப் பரீட்சையின் மீது படையெடுப்பதற்கு 'டியூட்டோரியல்' கல்லூரி என்ற இராணுவ முகாமில் அவனுக்குப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்து விட்டுச் சலியாத உழைப்பின் காரணமாகப் படுக்கையில் படுத்தவர் அப்புறம் எழுந்திருக்கவில்லை.

* * *

மதுரநாயகம் தாமரைப் பட்டிக்கு வந்து நான்கு நாட்கள்தான் ஆயின. ஆனால் அது நான்கு யுகங்களாகத் தோன்றியது அவனுக்கு. பிறந்து வளர்ந்த தாமரைப்பட்டி இப்பொழுது வேப்பஞ் சாறாகக் கசந்தது. இதற்குக் காரணம் அவனுடைய அரைகுறைப் படிப்பு மட்டுமல்ல; அவன் ஒன்றுவிடாமல் கேட்டிருந்த மேடைப் பிரசங்கங்களும்தான்!

அது மட்டுமா? இறந்து போன தகப்பனார் மீது அவனுக்குப் பாச உணர்ச்சி உண்டாகவில்லை. இருதயம் என்ற ஒரு உறுப்பு நின்று விடுவதும் அதன் காரணமாக மனித உடல் செயலற்றுப் பிணமாவதும் இயற்கையின் நிகழ்ச்சிகளில் ஒன்று என்பதாக அவன் கேட்டிருந்த பகுத்தறிவுப் பிரசங்கங்கள் விளக்கம் கொடுத்திருந்ததுதான் அதற்குக் காரணம்.

தங்கை சுந்தரி நான்கு நாட்களாக விடாமல் அழுது புலம்பிக் கொண்டிருந்ததை அவனால் சகிக்கவே முடியவில்லை. சுந்தரிக்கு அண்ணனிடம் அளவுகடந்த பாசம். அதைப்போலவேதான் அவனுக்கும் சகோதரியின் மீதுள்ள இந்தப் பாச உணர்ச்சி அவனுடைய பகுத்தறிவுத் தத்துவத்தையும் மீறி நின்றது. தாமரைப் பட்டிக் கணக்குப் பிள்ளையின் மகள் மரகதத்தின் மீது வளர்ந்து வந்த காதலும் அவனுடைய பகுத்தறிவுக் கொள்கைக்கு விதிவிலக்காகப் போய் விட்டது. கோடை விடுமுறையில் அவன் தாமரைப்பட்டிக்கு வரும் நாள், நேரம் எல்லாம் மரகதத்துக்கு எப்படியோ தெரிந்து விடும். ஊருக்கு வந்தது முதல் இவன் தினமும் மாலையில் வாய்க்கால் பக்கம் உலாவச் செல்வதும், மரகதம் அதே சமயம் வாய்க்காலில் தண்ணீர் எடுக்க வருவதும் சகஜமாக நடந்து வந்த காரியங்கள். தனது அண்ணன் மரகதத்தையே கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்பதைச் சுந்தரி ஜாடைமாடையாக அறிந்திருந்தாள்.

மதுரநாயகம் தாமரைப் பட்டிக்கு வந்து ஒரு வருஷம் ஓடிவிட்டது. அண்ணனுக்குச் சீக்கிரம் கல்யாணம் நடத்தி மரகதத்தை அண்ணியாகத் தன் வீட்டுக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று சுந்தரிக்கு ஆசை. மரகதமும் சுந்தரியும் பாலிய சிநேகிதிகள். மரகதத்தின் இஷ்டப்படியே அவளை மதுரநாயகத்துக்கு மணம் செய்து கொடுக்கச் சம்மதித்து விட்டார் கணக்குப்பிள்ளை. எப்பொழுது வேண்டுமானாலும் கல்யாணத்தை நடத்திக் கொள்ளலாம் என்று மரகதத்தின் தந்தை, மதுரநாயகத்தின் பாட்டியிடம் சொல்லியிருந்தார்.

ஒவ்வொரு தடவையும் குத்தகைப் பணம் வருவதற்கு முன் மதுரநாயகத்தின் வீட்டில் கல்யாணப் பேச்சு மும்முரமாக இருக்கும். பணம் காலியாகும் போது அந்தப் பேச்சும் கரைந்துவிடும். இதற்கிடையில் மதுரநாயகத்தின் சீர்திருத்தக் கருத்துக்களைச் செயலாற்றுவதற்குரிய அரிய சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. தாமரைப்பட்டிப் பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளையின் மனைவி இறந்து விட்டதால் அவருடைய இரண்டாவது கல்யாணத்துக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன.

காதலிலும் பாசத்திலும் மூழ்கிச் சற்று மங்கிக் கிடந்த அவனுடைய சீர்திருத்த மூளை விழிப்படைந்து பண்ணையாரின் மறுமணத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்தனை செய்ய ஆரம்பித்தது. மறுமணம் ஒரு சமூகக் கொடுமை! அது பெண்ணினத்துக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதி. ஏழை மக்களின் உழைப்பை அட்டை போல உறிஞ்சி உயிர் வாழும் பணமூட்டைகளின் அட்டகாசம் என்றுதான் மதுரநாயகத்துக்குத் தோன்றியது: பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளைக்கு ஜாதகப்படி வயது முப்பத்து மூன்றுதான்: ஆனால் சீர்திருத்தச் செம்மலின் கண்களுக்கு அவர் நாற்பத்தைந்து வயதான கிழட்டுப் பிணமாக, ஒன்றுமறியாத ஒரு அபலைப் பெண்ணின் வாழ்க்



மாறன்



கையைச் சூறையாடும் பயங்கர மிருகமாகக் காட்சியளித்தார்.

சுந்தரிக்குத் தன் அண்ணனுடைய மனப் போக்கு ஒன்றும் புரியவில்லை. ஊரில் சகஜமாக நடைபெறும் மறுமணத்தைப் பற்றி அவன் மட்டும் ஏன் இப்படி எதிர்த்துப் பேச வேண்டும்?

* * *

தாமரைப்பட்டிக் கணக்குப் பிள்ளையும் பெரிய பண்ணைக் காரியஸ்தரும் நெருங்கிய நண்பர்கள். கணக்குப்பிள்ளையுடன் ஏதோ பேசிக் கொண்டிருக்கும் போது பண்ணைக் காரியஸ்தர் தமது எஜமானரின் திருமண அபிப்பிராயத்தை வெளியிட்டார். உடனே கணக்குப் பிள்ளைக்குப் பண்ணையாரின் ஆஸ்திகளில் சிறிது சபலம் தட்டியது. பண்ணையாரின் மாமனார் ஆவதில் தமக்கு ஏற்படும் அந்தஸ்தையும் ஓரளவு கற்பனை செய்துபார்த்தார். தமது மகள் மரகதத்துக்குக் கிடைக்கக் கூடிய பங்களா வாசத்தையும், சுகபோகங்களையும் பற்றி ஆலோசித்துப் பார்த்தார்.



ஆசை அலையாகப் பெருகியது. அவர் தமது எண்ணத்தைப் பண்ணைக் காரியஸ்தரிடம் எப்படித் தெரிவிப்பது என்று தலைக்கு மேலுள்ள கூரை விட்டத்தை உற்று நோக்கினார். அதே வினாடியில் ''இஷ்டமிருக்குமானால் உங்கள் மரகதத்தைக் கூடப் பண்ணையாருக்குப் பேசி முடித்து விடலாம்!'' என்றார் பண்ணைக் காரியஸ்தர். தம் மனத்தில் ஓடிக்கொண்டிருந்த எண்ணத்தை வாசித்தவர்போல நண்பர் பேசியதைக் கேட்டுக் கணக்குப் பிள்ளை திகைத்துப் போனார். ''மரகதத்துக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டம் கிடைக்குமானால், அதற்கு நான் தடை சொல்லவா போகிறேன்?'' என்று பேச்சை நெருக்கினார்.

கிராமத்தில் எந்த விசேஷச் செய்தியும் ரகசியமாக இருக்க முடியாது. பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளை கணக்குப் பிள்ளையின் மகளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறார் என்ற செய்தி மறு நாளே ஊர் முழுவதும் பரவி விட்டது. ஊரார் அறிவதற்குச் சில மணி நேரத்துக்கு முன்னதாகவே மதுரநாயகத்துக்கு இந்தச் செய்தி பிரத்தியேக அவசரச் செய்தியாக மரகதத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

தீவிரமான ஆலோசனைகளுக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தவன்போல, ''சுந்தரி! நான் திருச்சிக்குப் போய்விட்டு மூன்று நாட்களில் திரும்பி வருகிறேன். மரகதத்தை மன உறுதியுடன் இருக்கச் சொல். எந்தவிதத்திலும் அவளை நானே மணந்து கொள்வேன்'' என்று கூறி விட்டுக் கிளம்பினான் மதுரநாயகம்.

அண்ணன் புறப்பட்டுச் சென்றதும் சொல்லாததுமாக அவன் நன்மையிலே அக்கறை கொண்ட சுந்தரிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

சுந்தரி அநுபவம் மிகுந்த தன் பாட்டியிடம் அதைச் சொன்னாள். பாட்டிக்குக் கூடச் சுந்தரியின் புதிய திட்டம் நல்லதாகவே பட்டது.

சுந்தரியின் யோசனை இதுதான்: 'தன் அண்ணன் மரகதத்தை மணக்கவேண்டுமானால், பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளை அவளை மணக்காமல் தடுக்கவேண்டும். ஆனால் எப்படித் தடுப்பது? அவளால் தடையுத்தரவு போட முடியுமா? தன்னை அவர் மணந்து கொள்ளும்படி செய்து விட்டால்?' யோசனை நன்றாகத்தான் இருந்தது. ஆனால் காரியத்தில் நடக்க வேண்டுமேல்லவா?

பாட்டி பண்ணைக் காரியஸ்தர் சிவஞானம் பிள்ளையைத் தனியாகச் சந்தித்தாள்.

சுந்தரி தன்னை வலிய மணந்து கொள்ளச் சம்மதிக்கிறாள் என்பதைக் கேட்டதும், பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளைக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவளைச் சிறு வயதில் இருந்தே அவருக்குத் தெரியும். கட்டமைந்த உடல், சுறுசுறுப்பான நடை, நல்ல புத்திசாலியுங்கூட. மரகதத்தை விட அவள் எத்தனையோ மடங்கு அழகு வாய்ந்தவள். ஆகவே உடனே சம்மதம் தெரிவித்து விட்டார் பண்ணையார்.

தனது யோசனை இவ்வாறு உடனே பலனளிக்குமென்று சுந்தரி எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவள் எல்லை கடந்த ஒரு ஆனந்த நிலையிலிருந்தாள். பண்ணையாரின் குடும்பத்தை நிர்வகிக்கப்போகும் பெரிய அந்தஸ்தைப் பற்றியெல்லாம் அவள் மகிழ்ச்சி யடையவில்லை. இந்தத் திருமணத்தின் மூலமாகத் தன் அண்ணனும் மரகதமும் அடையப் போகும் இன்ப வாழ்வை எண்ணித்தான் அவள் பூரிப்படைந்தாள். தனது செய்கையின் கருத்தை உணர்ந்தபின் அண்ணன் தன்னை மன்னித்து விடுவான் என்றும் நம்பினாள். அவனுக்கு அதிசயம் காத்திருக்குமாறு செய்ய எண்ணி அவன் வருவதற்கு முன்பே கல்யாணம் செய்து கொள்ளவும் சம்மதித்தாள்.

வெள்ளிக்கிழமை பகல் பத்து மணிக்கு முகூர்த்தம். கெட்டி மேளம் ஒலிக்கத் தாலிகட்டி முடிந்தது. ரயிலை விட்டிறங்கிய மதுரநாயகம் ஊருக்குச் சற்றுத் தூரத்தில் வரும் போதே மேளச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான். பண்ணையாரின் வீட்டெதிரே புதிதாகக் காணப்பட்ட புதிய கொட்டகைப் பந்தலும் தோரண அலங்காரங்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் கண்களில் தென்படவே துடித் துடித்தது அவன் உள்ளம்.

மரகதத்தை உயிரோடு பறிகொடுத்தது போலிருந்தது அவனுக்கு. நேராகப் போய் ஆறுமுகம் பிள்ளையின் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டு, மரகதத்துடன் எங்கேயாவது ஓடிவிட வேண்டுமென்று ஆத்திரம் ஏற்பட்டது. தான் காதலித்த பெண் இன்னொரு கிழட்டுப் பிணத்துடன் நிற்கும் கோரக் காட்சியைக் காணவும் விரும்பவில்லை அவன். ஆனாலும் அவனுடைய கால்கள் ஊரை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தன.

''மச்சினனுக்கு உண்டான வரிசைகளை வாங்காமே எங்கேயப்பா போயிருந்தே?'' என்று யாரோ வழியில் கூறியது கூட அவனுடைய காதுகளில் விழவில்லை.

புதுமணத் தம்பதிகள் கோவிலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் கூட வந்து கொண்டிருந்த கூட்டம் மதுரநாயகத்தின் கண்களில் தென்படவில்லை. ஆறுமுகம் பிள்ளைக்கு அடுத்தாற்போல நின்ற மணப் பெண்ணைப் பார்த்தான். அவன் தங்கை சுந்தரி! எதிர்பாராத பேரிடி இது. அவனுடைய பாதங்களுக்கு அடியிலுள்ள தரை அனலாகக் கொதித்தது. தலையின்மீது வெயில் கனலாகச் சொரிந்தது. சுற்றிலும் எரிமலைக் குழம்பு தகித்தது. அண்ணன் தங்கையைப் பார்த்தான்; தங்கை அண்ணனைப் பார்த்தாள். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டதன் அர்த்தத்தை வேறொருவரும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவன் எந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர முயன்றானோ, அதற்கு நேர் எதிராகச் சதி செய்து விட்டாள் உடன் பிறந்த தங்கை! அந்தச் சதிகார ஊரில் அதற்குமேல் ஒரு வினாடிகூட நிற்க மனமில்லை அவனுக்கு. திருச்சி இன்ஸ்பெக்டர் ஆபீசின் முன்னால் போய்ச் சேரும் வரை அவன் ஒரு இடத்திலும் நிற்கவில்லை.''

தன் அண்ணன் மகிழ்ச்சியுடன் வந்து மரகதத்தை மணந்து கொள்வான் என்று எண்ணியிருந்த சுந்தரியின் நம்பிக்கையில் மண் விழுந்தது. மதுரநாயகத்தைத் தேடுவதற்காகப் பண்ணையார் எடுத்துக் கொண்ட முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போய்விட்டன. அவருக்குச் சுந்தரியின் மன நோயினால் ஏற்பட்ட தொல்லை, அவருடைய முதல் மனைவியின் கஷ

ரோகத்தால் ஏற்பட்ட தொல்லைகளை விடப் பயங்கரமாக இருந்தது. தனது நிழலைப் பார்த்தும், அவளைப் பார்த்தும் ஏதேதோ பேச ஆரம்பித்தாள் சுந்தரி. கண் உறக்கமின்றி நாளுக்கு நாள் மெலிந்து படுத்த படுக்கையாகி விட்டாள் சுந்தரி. எங்கும் இருள். இருளைத் தவிர வேறு எதுவுமே அவளுடைய கண்களுக்குப் படவில்லை.

* * *

இரண்டு வருஷங்கள் ஓடி மறைந்தன. இந்தியாவின் வடமேற்குப் போர் முனையில் கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. டில்லி முகாமிலிருந்து மேலும் மேலும் படைகளை அனுப்பிக் கொண்டிருந்தது பிரிட்டிஷ் அரசாங்கம். டில்லி ராணுவ முகாமிலிருந்த மரத்தடியில் ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்தான் மருதநாயகம்.

இரண்டு வருஷங்களுக்குமுன் தாமரைப் பட்டியில் அவன் மனசைத்தாக்கிய அதிர்ச்சியின் எதிரொலி இப்பொழுது அவனது உள்மனத்திலிருந்து சிறிது வெளிக் கிளம்பி வந்தது.

இராணுவ சேவையின் மூலம் பழைய சம்பவங்களை மறந்து விட முயன்றான் மதுரநாயகம். ஆனால் என்றாவது ஒருநாள் தாமரைப் பட்டிச் சம்பவங்கள் அவனை இராணுவ வாழ்க்கைக்கு அப்பால் இழுத்துச் சென்று கொண்டிருந்தன. தனது கொள்கையை முறியடிப்பதற்காகவே, தங்கை சுந்தரி, தான் ஊரிலில்லாத சமயம் பார்த்து, இரண்டாவது மனைவியாகப் பெரிய பண்ணை ஆறுமுகம் பிள்ளையை அவ்வளவு அவசரமாக மணந்து கொண்டாள் என்ற எண்ணமே அவன் மனத்தில் நிலைத்திருந்தது. தங்கையின்மீது ஏற்பட்ட கோபம் இன்னும் தணியவில்லை. ஆயினும் இப்பால் போர்முனைக்குப் போவதற்கு முன்னால் தங்கையை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஆசை தோன்றி வளர்ந்து வந்தது. மரகதத்தின் கதி என்ன ஆகியிருக்குமென்று அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒருவேளை அவள் இன்னும் கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் தனது வருகையை நோக்கிக் காத்துக் கொண்டிருப்பாளோ என்று எண்ணிப் பார்த்தபோது அவனுடைய உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு தோன்றியது. தங்கைக்காக இல்லாவிட்டாலும் மரகதத்தைக் காண்பதற்காகவாவது ஒரு முறை தாமரைப்பட்டிக்குப் போய் வந்துவிட வேண்டுமென்ற ஆவல் அவனுடைய இதயத்தில் வலுவாக வளர்ந்தது. அதைத் தீர்மானிப்பதற்காகத்தான் அவன் மரத்தடியில் உட்கார்ந்து பலத்த யோசனை பண்ணிக் கொண்டிருந்தான்.



எல்லோருக்கும் நல்லவனாக நடந்து கொள்பவனுக்கு இராணுவத்தில் நல்ல மதிப்பு உண்டு. மதுரநாயகம் அத்தகைய நன்மதிப்பைப் பெற்ற ஹவில்தார். 'லீவு' கேட்டறியாத அவன் அன்று ஒரு மாத லீவு வேண்டி மனு எழுதிக் கேட்டான் தனது மேலதிகாரியிடம். பலத்த சிபார்சுகளுக்குப் பின் அவன் கேட்டபடி லீவு கிடைத்து விட்டது. அன்றிரவே அவன் ரயில் ஏறினான்.

இரண்டு வருஷங்களுக்கு முன் விட்டுப் பிரிந்த தாமரைப் பட்டியை வெகு தூரத்தில் வரும்போதே ஆவலோடு பார்த்தான் மதுரநாயகம். ரயில் வந்து நின்றது. நல்ல இருட்டு. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விளக்குகள் தூரத்தில் தெரிந்தன. இராணுவ உடையுடன் ரயிலிலிருந்து இறங்கி வந்து ஸ்டேஷனுக்கு வெளியில் நின்று கொண்டிருந்த மதுரநாயகத்தை நோக்கி ஒரு வண்டிக்காரப் பையன் ஓடிவந்தான். "வண்டி வேணுங்களா, ஸார்?" என்று பவ்யமாகக் கேட்டான் பையன். 'கொண்டுவா' என்று இராணுவ முறைப் போடு சொன்னான் மருதநாயகம்.

ஹவில்தார் ஏறி உட்கார்ந்ததும் வண்டி தாமரைப்பட்டியை நோக்கி வேகமாகப் புறப்பட்டது. வண்டிக்காரப் பையன் மதுரநாயகத்தோடு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். எடுத்த எடுப்பிலேயே, "ஐயா! பண்ணை வீட்டுக்குத் தானுங்களே போறீங்க?" என்று அவனுடைய குமுறலைக் கிளறிவிட்டான் பையன். "பேசாம வண்டியை விடுடா!" என்று சீறி விழுந்தபடியே இன்னும் உன்னிப்பாக ஊரை உற்று நோக்கினான் மதுரநாயகம். வண்டி இன்னும் சிறிது தூரம் சென்றதும், அவன் இரண்டு வருஷங்களுக்கு முன்பு கேட்ட அதே மேளச் சப்தம் கேட்டது. தன்னுடைய மனப் பிரமைதான் அப்படி ஒலிக்கிறதோ என்று நினைத்தான் மதுரநாயகம். மனப் பிரமை அல்ல அது; உண்மையிலேயே தாமரைப் பட்டியிலிருந்து அப்பொழுது நாதஸ்வர இசை, சுற்றிலும் பரவிக் கொண்டிருந்தது. தாமரைப் பட்டி வீதியில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்த ஏழெட்டு 'கேஸ்லைட்டு'களின் வெளிச்சமும் அவனுடைய கண்களுக்கு நன்றாகத் தென்பட்டது.

"ஏன் தம்பி, அது என்ன வெளிச்சம்? மேளச் சப்தம் கேட்கிறதே! என்ன விசேஷம்?" என்று ஆவலோடு கேட்டான் பையனிடம்.

"பண்ணை ஆறுமுகம் பிள்ளைக்கு இன்னிக்கு கண்ணாலமுங்க. ஊர்கோலம் இப்பத்தான் புறப்பட்டுப் போகுதுங்க" என்றான் பையன்.

சதிகாரத் தாமரைப்பட்டி கிராமத்தின் வண்டிக்காரப் பையனும்கூடத் தன்னுடைய உள்ளத்தைத் தார்க்குச்சியால் குத்தி வேடிக்கை பார்க்கிறானே என்று சந்தேகமேற்பட்டது மதுரநாயகத்துக்கு. "டேய் என்னடா உளறுகிறே! யாருக்கடா கலியாணம்?" என்று அருவருப்பாகப் பையனை மிரட்டினான்.

"நான் என்னங்க பொய்யா சொல்கிறேன்? மூணாந் தாரம் கண்ணாலம் ஆவுதுங்க பண்ணையாருக்கு."

"ரெண்டாந் தாரம்?" என்று கேட்டான் மதுரநாயகம். அவன் உடம்பு குபீரென்று வியர்த்து விட்டது.

"சிங்காரம் பிள்ளை மகளை ரெண்டாந் தாரமாகக் கட்டிக் கொடுத்திருந்தது. போன வருசம் அது செத்துப் போச்சுங்க...." பையன் இதைச் சொல்லி முடிப்பதற்குள் மதுரநாயகம் "ஐயோ!" என்று கதறி விட்டான்.

பையன் சிறிது திகைத்துவிட்டு, "இப்ப மூணாந்தாரமாகக் கணக்குப்பிள்ளை மகள் மரகதத்தைக் கண்ணாலம் பண்ணிக் குடுத்திருக்காங்க" என்று கூறி முடித்தான். மதுரநாயகம் வண்டிக்குள் பின்பக்கம் தடாலென்று சாய்ந்து விட்டான்.




பையன் வண்டியை நிறுத்தி விட்டு, "ஐயா! ஐயா!" என்று கூப்பிட்டான். பதிலே இல்லை. அழுகையும் விக்கலும் நிறைந்த குரலில், வண்டிக்குள்ளிருந்த ஆள் ஏதோ பேசுவது தெரிந்தவுடன் பையன் நெருங்கிச் சென்று பார்த்தான்.

"வண்டியை ரயிலடிக்குத் திருப்பி விடு,தம்பி!" என்று மதுரநாயகம் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு வண்டியைத் திருப்பினான் பையன்.

டெல்லி முகாமிலிருந்து இப்பால் போர்முனைக்குச் செல்ல, சிறந்த படை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் இராணுவ அதிகாரி. முதல்நாளிரவு அங்கு வந்து சேர்ந்த மதுரநாயகம் பலத்த சிபார்சுகள் பிடித்து அந்தப் படையில் சேர்ந்து கொண்டு இப்பாலை நோக்கிப் புறப்பட்டான். ஒரு மாத 'லீவி'ல் சென்ற மதுரநாயகம் ஒருவார காலத்திலேயே திரும்பிவந்து ஊக்கமாகப் போர்முனைக்குப் புறப்பட்ட வீரத்தைப் பாராட்டினார்கள் மேலதிகாரிகள்.


ஏ. & எப். ஹார்வி லிமிடெட்
மதுரை
தந்தி: “ஹார்வி”
மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
போன்: 250 (5 லைன்) - மதுரை - தந்தி: “ஹார்வி”
சகல நெசவாளர்களும் பெரிதும் விரும்பும் சிறந்த நூல்
களைப் பல்வேறு ரகங்களில் தயாரிக்கும் பிரபல ஸ்தாபனம்
★
5,00,000 நூற்கும் கதிர்கள் : நெ. 80 வரை நூல்கள்
★
மில்கள் : மதுரை : தூத்துக்குடி : அம்பாசமுத்திரம்
★
கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்
★
விசேஷ ரகங்கள் : கயிறுகள், விழுதுகள், கித்தான்கள்
நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள் -
தையல் நூல் – முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன
★
புனலூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்.
புனலூர் (கோசல ராஜ்யம்)
போன் : 15 — தந்தி : பேப்பர்மில்ஸ்
கிரீம்லெய்ட், போஸ்டர், லெட்ஜர், மனில்லா
கிராப்டு, பிரவுன், மாட்ச், பிரிண்டிங், முதலிய சகல
விதமான காகிதங்கள் தயாரிக்கும் சிறந்த ஸ்தாபனம்



கலைஞன் இதயம்



வசுமதி ராமசாமி

"உங்களைக் கேட்காமலே கச்சேரிக்கு ஒப்புக் கொண்டு விட்டேன். சபாவில் தியாகராஜர் தினம் கொண்டாடுகிறார்களாம். இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கின்றன, சாதகம் செய்து கொள்வதற்கு" என்று கோபாலன் மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே போனான்.

மீனு பதிலே சொல்லவில்லை. அவள் முகத்தில் சந்தோஷமே இல்லை. வேதனை படர்ந்தது. 'ஒருகாலத்தில் கலையை வேண்டுமென்றே மறித்துவிட்டு இன்று பாடச் சொல்லுகிறீர். நான் கச்சேரி செய்வதைக் கேட்டு யார் சந்தோஷப் படுவார்களோ, அவர்கள் இந்த உலகத்திலிருந்து விடைபெற்றுக் கொண்டு விட்டார்கள்.' இவ்வாறு பல எண்ணங்கள் அவள் மனத்திரையில் ஓடின. அசை வற்று அவள் சிந்தனையில் மூழ்கினாள்.

திருவையாறு அப்பையதீக்ஷிதரைத் தெரியாதவர்கள் இடையாது. சங்கீதம் அவர் பரம்பரைச் சொத்து. அவருடைய உலகம் சங்கீதம்தான். அவருடைய ஒரே பெண் மீனாட்சிக்குப் பரம்பரை செல்வமான சங்கீதத்தைக் கரைத்துப் புகட்டி விட நினைத்தார். ஏற்றுக் கொள்ளும் ஞானம் இல்லாவிட்டால் புகட்டினால் நிற்குமா? அது பூரணமாக வரவேண்டிய பாக்கியம் இருந்தது.

மீனுவுக்கு நினைவு தெரிந்தது முதல் வீட்டில் வித்துவான்கள் குழுமி இருந்து பாடும் பாட்டை விடாமல் கேட்டு வந்திருக்கிறாள். அந்தச் சூழ்நிலையின் காரணமாக மீனு சங்கீத ஞானத்தை விசேஷமாகப் பெற்றிருந்தாள். ஏழு வயதிலேயே யாராவது ராகங்களைப் பாடிக் காட்டினால் ராகத்தின் பெயரைச் சொல்லி விடுவாள். குழந்தையின் ஞானத்தைக் கண்டு வித்துவான்கள் சந்தோஷப்படுவார்கள்.

"தீக்ஷிதர்வாள்! உங்கள் குழந்தை கலைவாணியின் அருள் பெற்றவள். பரம்பரை கௌரவத்தைக் காப்பாற்றுவாள்" என்று அடிக்கடி நாகசுர வித்துவான் மாரியப்பன் சொல்லுவார்.

தீக்ஷிதருக்கு இரவு பகல் தம் அருமைப் பெண் காயக சிகாமணியாக ஆக வேணுமென்ற ஆவலே மனத்தில் குடிகொண்டிருந்தது. மீனுவின் தாய்க்கு எல்லோரையும் போல் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசை இருந்தது. அடிக்கடி தீக்ஷிதரிடம் சொல்லிக் கொண்டே இருந்தாள். அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மீனுவுக்குக் கல்யாணம் என்பதை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. 'தம் பெண் கலைக்காகப் பிறந்தவள்; சாதாரணப் பெண்களைப் போல் அவள் குடும்ப வாழ்க்கையில் மூழ்கிவிட்டால் சங்கீதம் மறைந்து விடும். கல்யாணப் பேச்சே வேண்டாம்' என்று வாதம் செய்வார். வருகிறவர்களும், 'குழந்தை பாட்டுக் கச்சேரி செய்து சங்கீத உலகில் பிரகாசிக்கட்டும், கல்யாணம் செய்து வைத்து விடாதீர்கள்' என்று அவருக்கு அனுசரணையாகச் சொல்லுவார்கள்.

ராமநாடகக் கீர்த்தனைகளை அப்பாவும் பெண்ணும் வீணையுடன் இசைத்து பாடும் போது கேட்போர் மெய் மறந்து போவார்கள். அவருக்குத் தீக்ஷிதர் இறுதிகளில் ஈடுபாடு அதிகம். தீக்ஷிதர் தினத்தில் எல்லா வித்துவான்களையும் அழைத்துக் கொண்டுவந்து விமரிசையாகக் கொண்டாடுவார்.

அன்று வழக்கம் போல் படங்களுக்கு அலங்காரம் செய்து விட்டு எல்லோரும் பாட உட்கார்ந்தார்கள். மீனு சுருதி சேர்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயம் பிடில் வித்துவான் சாம்பு வோடு இன்னொரு இளைஞனும் வந்தான். தீக்ஷிதர் அவர்களை வரவேற்றார்.

அவர் மனைவிக்கு அன்று காலையிலிருந்தே ஆத்திரம். "பெண்ணுக்குக் கல்யாணத்தைச் செய்து சம்பந்தி மாப்பிள்ளை என்று கொண்டாடுவார்களா? இது என்ன பஜனை மடமா? ஆண்டியாக உட்காரப் போகிறீர்களா?" என்று இரைந்தே கத்தினாள்.

கூடத்தில் இருந்த சாம்புவுக்கு எல்லாம் கேட்டது. "தீக்ஷிதர்வாள்! மீனாட்சிக்குக் கல்யாணம் ஆக வேண்டியதுதானே? மாப்பிள்ளை இதோ. கையோடு அழைத்து வந்திருக்கிறேன். தங்கமான குணம். தகப்பனார் இல்லை. தாயார் மட்டும் கிராமத்தில் இருக்கிறாள். திருவையாறு


ஆராதனைக்கு வந்த பொழுது மீனாட்சி பாடினதைக் கேட்டிருக்கிறேன். மனப் பொருத்தம், ஜாதகப் பொருத்தம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு கல்யாணத்தைச் செய்து விடலாம்'' என்று கூறினர்.

மீனாட்சி கண்களை அகல விழித்தாள். அவள் மன மகிழ்ச்சி முகத்தில் பிரதிபலித்தது. வந்த பிள்ளையும் மீனாட்சியை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான். தீக்ஷிதர் இருவரையும் மாறிமாறிப் பார்த்தார். பெண்ணின் மனத்தையும் புரிந்து கொண்டார். ஈசன் செயல் என எண்ணி மகிழ்ந்தார்.

மீனாட்சியும், கோபாலனும் சந்தோஷமாகத்தான் வாழ்ந்தார்கள். இணை பிரியாமல் இன்பமாக இருந்தார்கள். மீனாட்சியின் கச்சேரிகள் நிறைய நடந்து கொண்டிருந்தன. அடிக்கடி தீக்ஷிதரும் வந்து பெண்ணைப் பார்த்து விட்டுப் போவார். சாம்புதான் பக்கவாத்தியம். சாம்புவுக்குச் சாரீர வசதி போதாது. சங்கீதத்தில் ஆழ்ந்த ஞானம் அவருக்கு. சில அபூர்வமான நெறிகள் அவருக்குத் தெரியும். மீனு அவரிடம் ஒழிந்த நேரத்தில் பாடம் செய்து கொள்வாள்.

கோபாலனுக்குச் சங்கீதத்தில் விசேஷ ஞானமில்லை. ஆனால் மீனுவின் குரலில் இருந்த குறு குறுப்பையும் லலிதமான அந்தச் சங்கீதத்தையும் கேட்டு அவனும் இன்ப மடைவான்.

சாம்புவும், மீனுவும் மணிக்கணக்கில் சங்கீதப் பயிற்சியிலேயே மூழ்கி இருப்பார்கள். சாம்பு தன் மனைவியிடம் பேசிப் பழகுவது மிகவும் குறைவு. மனைவியிடம் தப்பித்தவறி அவன பேசினாலும் மீனுவைப்பற்றிப் புகழ்ந்து பேசுவான். கணவன் இன்னொரு பெண்ணைப்பாராட்டுதல் பொறுக்க முடியுமா?



மீனு அன்று வழக்கம் போல் கணவனிடம் ''சாம்பு அண்ணா ஞாயிற்றுக் கிழமை சபாவில் கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறாராம். இன்னும் மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. அப்பாவை வரச்சொல்லி எழுதக்கூட அவகாசமில்லை'' என்று பெருமையாகச் சொன்னாள்.

கோபாலன் பதிலே சொல்லவில்லை. புலி மாதிரி உறுமினான். சந்தோஷமாகப் பேசும் கணவனின் மாறுதலுக்குக் காரணம் மீனுவுக்குப்புரியவில்லை. அடுத்த இரண்டு நாட்களும் கோபாலன் நேரம் சென்றே ஆபீஸிலிருந்து வந்தான். ஆபீஸில் அவனுக்கு ஏதாவது தொந்தரவாக இருக்குமோ என்று நினைத்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மீனு காலையில் வெளியே புறப்பட்டாள்.

''ஒரு பாட்டும் சரியாக வரவில்லை. சாம்பு அண்ணாவிடம் போய்ச் சாதகம் செய்து கொண்டு வருகிறேன். வந்து சாப்பாடு போடுகிறேன்'' என்று சொல்லி வாய்மூடுவதற்குள் கோபாலன், ''சாம்பு அண்ணா, தம்பி என்ற உறவு போதும். மரியாதையாக உள்ளே போ!'' என்று அதட்டினான். மூன்று வருஷ வாழ்வில் ஒரு நாள்கூடத் தன்னை அதிர்ந்து பேசாத கணவனுடைய வார்த்தைகளா இவை!

நான்கு மணிக்குச் சாம்புவே பிடில் பெட்டியுடன் வந்து விட்டார். ''கோபாலா! மணி ஆகிவிட்டதே. மீனு தயாராக இருக்கிறாளா?'' என்று வெகு பிடியாகக் கேட்டுக் கொண்டே வந்தார்.

கோபாலன் என்ன நினைத்தானோ என்னவோ, பலவந்தமாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ''மீனு, கிளம்பு! சாம்பு அண்ணா வந்துவிட்டார்'' என்றான்.

மீனுவுக்கு அப்பொழுதுதான் உயிர் வந்தது. 'காலையில் உடல் சரியாக இல்லாமல் இருந்திருக்கும். நமக்கு மட்டும் என்ன அவ்வளவு கர்வம்? விசாரிக்காமல் இருந்து விட்டோமே' என்று குற்றத்தைத் தன்மீதே சுமத்திக் கொண்டாள். அதனால் அவளுக்கு மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

அன்று அவள் பாட்டு அபூர்வமாக அமைந்தது. சாம்பு மெய் மறந்து அடிக்கடி ''ஆஹா!'' என்றார். கோபாலன் பல்லை நறநறவென்று கடித்தான்.

பாதிக் கச்சேரியில் அவள் மெய்மறந்து பாடிக்கொண்டிருந்த பொழுது, சபையோர் கானத்தில் மூழ்கி இருந்தபொழுது கோபாலனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வேகமாக வீட்டை அடைந்தான்.

மூன்று நாட்களாக அவன் போக்கும், இன்று பாதிக் கச்சேரியில் அவன் வெளியே போனதும் அவளுக்குத் துக்கமாக இருந்தது.

''சாம்பு அண்ணா! அவருக்கு உடம்பு சரியாயில்லை. சீக்கிரமே வீட்டுக்குப்போய் விட்டார். என்னை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டுப் போங்கள்'' என்றாள். சாம்புவுக்கு அது ஒன்றும் விகல்பமாகத் தோன்றவில்லை.

சாம்பு கபடமின்றி மீனுவை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கோபாலனிடம் வாயாரப் புகழ்ந்து விட்டுக் கிளம்பினார்.

தீபாவளிப்பண்டிகைக்கு முதல் நாள். அன்றுதான் சபாவில் தீக்ஷிதர் நினைத்துக்கும் பாட மீனுவை அழைத்திருந்தார்கள். கச்சேரிக்குப் பிறகு கோபாலன் மனைவி

யுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. காலையில் தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு சாதகம் செய்ய ஆரம்பித்தாள். மாடியிலிருந்து இறங்கிய கோபாலன், "பொழுது விடியறச்சே என்ன பாட்டு, கூத்து? சாம்பு வீட்டில் போய்ப் பாடு!" என்று இரைந்து கத்தினான். வாத்தியத்தைப் பிடுங்கி எறிந்தான். கம்பிகள் ஒன்றோடொன்று இழைந்து ஒரு சோக நாதத்தை எழுப்பிக் கொண்டு விழுந்தன. குடம் சில்லாக உடைந்து தெறித்தது. மீனுவுக்கு அழுகை பொங்கி வந்தது. பேச நாவெழவில்லை.

அதே சமயம் வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அழுது கொண்டே நின்ற மீனு வண்டியிலிருந்து அப்பா இறங்குவதைப் பார்த்தாள். என்ன நினைத்தாளோ, கண்களைத் துடைத்துக் கொண்டாள். பாரத நாட்டுப் பெண்களுடைய பண்பு, வழி வழியாக வந்த அந்தப் பெண்மை என்ற செல்வம் அவளிடம் இருந்தது. அவசரம் அவசரமாக உடைந்த தம்பூராவையும், சில்லையும் எடுத்துப் பீரோவில் வைத்துக் கதவைச் சாத்தினாள்.

கோபாலன் மாமனாரைக் கண்டு பயந்து போய் விட்டான்.

அதற்குள் அப்பைய தீக்ஷிதர் வீட்டுக் கூடத்துக்கு வந்துவிட்டார். "குழந்தே! சௌக்கியமாக இருக்கிறயா? இன்று தீக்ஷிதர் நினைவாச்சே. அவர் கிருதிகளை நீ பாடிக் கேட்கணும் போல் இருந்தது. திடீரென்று நினைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டேன்" என்றார்.

"இரண்டு நாட்களாகவே உங்கள் நினைவுதானப்பா. உள்ளே வாருங்கள்" என்றாள் மீனு.

கோபாலன் மாமனாரிடம் சகஜமாகவே இருந்தான். அது மீனுவுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. பிற்பகல் சாப்பாடு ஆனதும் பெரியவர் பெண்ணைப் பாடச்சொன்னார். "பாட முடியாதப்பா! தம்பூராவை வெளியே வைத்து விட்டுச் சமையல் அறைக்குப் போனேன். எங்கிருந்தோ ஒரு பூனை வந்து தள்ளி உடைத்துவிட்டது."

மீனு தன்னை விட்டுக் கொடுக்காமல் இருக்கக் கோவையாகப் பொய் சொல்லுகிறாளேயென்று ஆச்சர்யப்பட்டான்.

பெரியவர் நான்கு நாட்கள் இருந்தார். உடைந்த வாத்தியத்தை ரிப்பேர் செய்து கொடுத்து விட்டுப் போனார்.

ஒரு வருஷம் உருண்டோடியது. மீனு கச்சேரிகளே செய்யவில்லை. பெரியவர் எழுதிக் கேட்டார். நேரிலும் வந்து பார்த்தார். மீனு பாட முடியவில்லை என்று சொல்லி விட்டாள்.

அன்று வெள்ளிக்கிழமை. கோபாலன் வீட்டில் இல்லை. மீனு தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள். தற்செயலாக வந்த சாம்பு மறைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்தார். 'மீனு' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"மீனு பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்டு மகிழவேண்டிய இந்தச் சங்கீதத்தை மூடி வைக்க விதி சதி செய்து விட்டதா? உனக்கும் கோபாலனுக்கும் இடையே திரை விழுந்திருக்கிறதே. இதற்குக் காரணம் என்ன? குழந்தாய் விருந்தே பழின என்னிடம் சொல்லு" என்று குரல் தழுதழுக்கக் கேட்டார்.

"அண்ணா! அவர் மனத்தில் சந்தேகப் பேய் புகுந்து விட்டது. நீங்கள் எனக்குப் பிடில் வாசிப்பதைக் குற்றமாக இரண்டு மூன்று தடவைகள் சொன்னார். அதற்காகக் கச்சேரி செய்வதையே விட்டு விட்டேன்" என்று விக்கினாள்.

இதைக் கேட்டதும் சாம்புவுக்கு எல்லையில்லாத துக்கம் வந்தது. அன்று வீட்டுக்குப் போனவர்தான், படுத்த படுக்கையானார். தம்பூரா சில்லாக உடைந்த மாதிரி அவர் இதயமும் உடைந்தது.

ஒரு வாரத்துக்குப்பிறகு மீனு கோபாலனுக்குக் காப்பி போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பையன் இரைக்க இரைக்க ஓடி வந்தான். "சாம்பு மாமாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறதாம். இனிமேல் பிழைக்க மாட்டாராம். உங்களையும், மாமாவையும் கையோடு அழைத்து வரச் சொன்னார்" என்றான்.

மீனு ஓடினாளா அல்லது பறந்தாளா என்று சொல்ல முடியாது. பின்னோடு கோபாலனும் போனான். மீனுவைக் கண்டதும் சாம்பு புன்சிரிப்புடன் தலையை அசைத்தார். சாம்புவின் மனைவி அழுது கொண்டே நின்றாள். சாம்பு ஒருகையால் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு இருவரையும் பக்கத்தில் வந்து உட்காரும் படி சைகை காட்டினார்.


மீனுவின் கையைப் பிடித்துக் கோபாலன் கையில் வைத்து, "கோபாலா! மீனு அருமையான பெண். வீண்சந்தேகப்பட்டுக் குழந்தையின் மனத்தை வாட்டாதே. இதெல்லாம் என் மனைவி செய்த வினை. உன்னுடைய மனத்தில் விஷ விதையை ஊன்றி விட்டாள். மீனு என் சொந்தத் தங்கை மாதிரி. அவள் சங்கீதத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டாதே. அந்த மகத்தான கலையை உலகுக்கு அளிக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே விக்கி விக்கி அழுதார்.

சாம்புவின் மனைவி, "என்னை மன்னித்துவிடு. உன்னிடம் என் கணவருக்குள்ள அன்பையும், பரிவையும் சகோதர பாசமென்று புரியாமல் பாவி தவறாக எண்ணிக் கொண்டேன். பொறாமைத் தீ என்னைப் பொசுக்கியது. உன்னை நேரில் பார்த்து வாயில் வந்தபடி திட்டி விடுவதென்று உங்கள் வீட்டுக்கு வந்தேன். என் கோர வேளை நீ வீட்டில் இல்லை. உன் கணவர் மட்டும் இருந்தார். அவரிடம் உங்கள் இரண்டு பேரைப் பற்றியும் குற்றமாகச் சொல்லி விட்டு வந்தேன். நீ என்னைமன்னித்தாலும் தெய்வம் மன்னிக்கவில்லை" என்று புலம்பினாள்.

மீனு பொங்கிப் பொங்கி அழுதாள். யார் அழுகைக்கும் அந்த உத்தமர் காத்திருக்கவில்லை. கலையோடு வாழ்ந்து வரும் கனிந்த உள்ளம் அதிக நாள் கலையைப் போல் உலகில் இருக்காது போலும்!

சில மாதங்களில் பெரியவரும் காலமானார். கோபாலன் மீனுவிடம் அன்பைச் சொரிந்தான். சாம்புவின் ஆத்ம திருப்திக்காக மீனு பல கச்சேரிகள் செய்தாள்.

அன்றும் தீக்ஷிதர் தினத்தில் அபாரமாகத்தான் பாடினாள். அப்பாட்டில் சோகக் குரல் பின்னப் பட்டிருப்பதைக் கோபாலன் மட்டும்தான் உணர்ந்திருந்தான்.





பரதநாட்டியக் கலையில் சுடர் விட்டு மின்னும் ஒரு புது நட்சத்திரம் தான் படத்தில் காணும் குமாரி உஷா ராஜ். வர்த்தக உலகில் பிரபலமாக இருக்கும் பிரமுகர் பெங்களூர் திரு பி.கே. சாரங்கபாணி முதலியார் அவர்களின் பேத்தி. நாட்டிய கலாகேஸரி வழுவூர் ராமையா பிள்ளை அவர்களின் சிஷ்யை. 'எத்தனை சொன்னாலும்' என்ற பாடலுக்குக் குமாரி உஷா ராஜ் பிடித்துள்ள பரதநாட்டிய அபிநயத்தோற்றங்கள் சிலவற்றை அடுத்த பக்கங்களில் காணலாம்.









பல்லவி


எத்தனை சொன்னாலும் தெரியாதவ ருடன்
ஏன் பிணங்கிக் கொள்வாய் மகனே!


அநுபல்லவி

அத்தன் அளித்த குமரேசன் வைதாலும் என்ன
ஆத்திரப் படுகிறாய் பெண்புத்தி யாலே
அன்புள்ள வர்க்குக்கோபம் பெருகும்மேன் மேலே
ராத்திரி ராமாயணம் கேட்டும் அப்பாலே
ராமருக்குச் சீதைமுறை என்னவென்பது போலே










சரணம்

கொண்டவர் நயத்திலும் பயத்திலும் சொல்லுவார்
கோதையரே அதைப் பொறுத்துப் போனால் என்னடி
சண்டை உனக்குப் பாலும் பழமோடி குடிகேடி
தாய்பேர் எடுப்பாய் வெகுநேர்த்தி யாகவே
மீனவிழியாளே! உனக்கா இந்தத் தடுக்கு?
விரல் அத்தனையும்உண்டு ஏன்இந்த முடுக்கு?
நான் ஒருத்தி இதற்கெல்லாம் போடாவிட்டால் தடுக்கு
நானும்ஒரு பெண்ணென்றுநீ குலுக்குவாய் அடக்கு.







குடிகேடி
தாய்பேர் எடுப்பாய்
வெகு நேர்த்தியாகவே
மீன விழியாளே
அடக்கு
விரலத்தனையும்
நானொருத்தி
நானும் ஒரு பெண்


இசை
வாணர்களுக்கு
செவிக்கினிய இசைநாதத்திற்கு இன்றியமையாத ரஞ்சகமான நிலையை விருத்தி செய்ய விடமின்கள் அத்தியாவசியமானவை. பார்லேயின் போஷாக்கு சத்து வாய்ந்த க்ளூகோ பிஸ்கட்டுகளில் விடமின்கள் சேர்ந்துள்ளன.
பார்லேயின்
க்ளூகோ
பிஸ்கோத்துகள்
விடமின்கள் சேர்ந்துள்ளன
Gluco
BISCUITS


யாவரும் சுலபமாக
சேமித்துப் பயனடைய
வசதியளிக்கும்
பாலுஸ்ரீ
பெனிபிட்
சிட் பண்டு
பிரைவேட் லிட்.
எங்கள் சேவை
உங்களுக்குத் தேவை
3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி,
மதராஸ் - 5
B-6 பிளாக் III
ஆஸப் அலி ரோட்,
புது டெல்லி - 1
'ஷௌகத் பில்டிங்ஸ்'
ஸில்வர் ஜூபிலி பார்க் ரோட்,
பெங்களூர் - 2

முதல் சோழப் பேரரசின் அழிவுக்கும் இரண்டாம் சோழப் பேரரசின் ஆரம்பத்துக்கும் இடையே உள்ள துரதிருஷ்டம் பிடித்த காலத்தில் ஒரு நாள் பின்னிரவு நேரம்.

சிதைந்த சோழ சாம்ராஜ்யத்தின் மேற்கு எல்லைப்புறக் காவல் மண்டபத்தின் வாசலில், வெகு தூரம் பிரயாணம் செய்த களைப்போடு வந்து நின்றது ஒரு குதிரை. அதன் மேல் இருந்த வீரன் கீழே குதித்துக் காவல் மண்டபத்தின் படிக்கட்டில் ஏறி நின்று ஒருவித இனிமையான ஒலியை எழுப்பினான். சற்று நேரத்தில் அந்த இருண்ட மண்டபத்தில் ஒரு தீவர்த்தியின் ஒளி தோன்றி அந்த வீரனை நெருங்கியது. இப்பொழுது அவ்வீரனின் முகம் நன்றாகத் தெரிந்தது. ஆகா! அவனுடைய முகந்தான் என்ன கீர்த்தி பொருந்திய முகம்!

தீவர்த்தியை எடுத்து வந்த உருவத்தை அவ் வீர வாலிபன் கூர்ந்து நோக்கினான். அவன் முகம் மலர்ந்தது. தீவர்த்தியை எடுத்துக் கொண்டு வந்தது ஒரு பெண். அவளுக்கு வயது இருபதுகூட இருக்காது. தீவர்த்தியின் பிரகாசத்தில் அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. அடாடா! அந்த முகத்தில்தான் என்ன கம்பீரம்! எவ்வளவு சோபை! எத்தனை கவர்ச்சி! தீவர்த்தியின் ஒளியில் அவள் இப்படியும் அப்படியும் அசைந்த பொழுது பளிங்கு போன்ற அவளுடைய கன்னங்கள் 'பளிர் பளிர்!' என்று மின்னின.

வந்தவள் ஏதும் பேசாதிருக்கவே வந்தவன் பேசினான்:


"குங்குமவல்லி! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? எந்நேரமும் குறைவற்றிருக்கும் உன் குதூகலம் இன்று எங்கே மறைந்து போயிற்று?"

"..........."

"ஏன் பேச மாட்டேன் என்கிறாய்?...எனக்குப் பசி வேறு வயிற்றைக் கிள்ளுகிறது. நான் வந்ததில் உனக்கு விருப்பமில்லை என்றால் சொல்லிவிடு! இப்பொழுதே இங்கிருந்து போய் விடுகிறேன்!"

"வேண்டாம்! வேண்டாம்!! இப்பொழுது நீங்கள் வந்தது எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது."

குங்குமவல்லி



சேத்தூர் கூத்தன்

"குங்குமவல்லி! உன் தந்தை மழவராயர் எங்கே? என்ன நடந்தது என்று விவரமாகச் சொல்லு."

"என்னத்தைச் சொல்வது?...ஏழை எல்லைக் காவலனின் மகள் குங்குமவல்லியைப் போல் அபாக்கியம் செய்தவள் வேறு யார் இருக்கப் போகிறார்கள்? பாக்கியம் செய்தவள் பாண்டிய குமாரி செந்திரு தேவி."

இதைச் சொல்வதற்குள் அவள் தொண்டை பல முறை கரகரத்தது. கண்கள் நீரைச் சுரந்தன.

வாலிபன் இலேசாகச் சிரித்துவிட்டு, "என்ன உளறுகிறாய்? இப்படி யெல்லாம் உன்னிடம் கதை கட்டி விட்டது யார்?" என்று கேட்டான்.

"இளவரசே! என்னிடம் யாரும் கதை கட்டிவிட வேண்டியதில்லை. எனக்கே சிந்திக்கவும் யோசிக்கவும் சக்தி இருக்கிறது. குமார்



இரண்டு வருஷங்களுக்கு முன்பு இதே மாறு வேஷத்தில் உயிர் போகும் நிலையில் இந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தீர்கள். அப்பொழுது நீங்கள்தான் சோழ நாட்டு இளவரசர் என்று எனக்குத் தெரிந்திருந்தால்...''

நிச்சயம் அவன் உயிரைக் காப்பாற்றி இருப்பாள். ஆனால் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்க மாட்டாள்.

இரண்டுவருஷங்களுக்குமுன்பு ஒருநாள் இரவு, மாறு வேஷம் பூண்டு பாண்டிய நாட்டுக்கு உளவறியச் சென்ற சோழ நாட்டு இளவரசனும் சேனாபதியுமான விஜயேந்திரன் பாண்டிய வீரர்களிடம் சிக்கிக் கொண்டான். ஆனால் வீராதி வீரனை விஜயேந்திரனின் கூரிய வாளுக்கு எதிரிகள் அத்தனை பேரும் இரையானார்கள். இருந்தும் விஜயேந்திரனுக்குப் பலமான காயம் பட்டுவிட்டது. சிறிது நேரத்தில் அவன் மூர்ச்சையாகி அப்படியே குதிரையின் மேல் சாய்ந்து விட்டான். தன் எஜமானனின் நிலையை ஒருவாறு உணர்ந்து கொண்ட அந்த அறிவுள்ள குதிரை அவனைப் பத்திரமாகச் சுமந்து கொண்டு இந்த மண்டபத்தின் வாசலுக்கு வந்துசேர்ந்தது. அப்பொழுது தான் குங்குமவல்லி தன் தந்தையின் உதவியோடு குதிரையின் மேல் கிடந்தவனைத் தூக்கி வந்து அவன் மூர்ச்சை தெளிவித்துக் காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டினாள். அன்று மட்டும் அவள் அத்தனை சிரத்தை எடுத்து விஜயேந்திரனைக் கவனித்திராவிட்டால்...

''....இன்று சோழ நாடு ஒரு ஒப்பற்ற தலைவனை இழந்திருக்கும். குங்குமவல்லியும் தன் மனத்துக்கு உகந்த காதலனைப் பெற்றிருக்க முடியாது. அதைத்தானே சொல்ல வருகிறாய்?'' என்று விஜயேந்திரன் விளையாட்டாகக் கேட்டான்.

''பிரபு! நான் படும் வேதனையை அறியாமல்தான்பேசுகிறீர்களோ என்னவோ.... பாண்டிய மன்னருக்குச் சென்றுள்ள ஓலையைப் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? பாண்டியரிடமிருந்து வந்த ஓலை உறையூர் அரசவையில் எல்லோரும் படித்ததுமின்றி, தான் எழுதி அனுப்பிய ஓலையையும் மகாராஜா படித்துக் காண்பித்தாராமே; என் தந்தைதான் ஓலை கொண்டு சென்றிருக்கிறார். நாடு முழுவதும் திருமணச் செய்தி பரவி விட்டது. இனித் திருமணம் தான் பாக்கி!'' என்று கண்களில் கண்ணீர் மல்கக் கூறிக் குங்குமவல்லி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

விஜயேந்திரன் ஒருவாறு விஷயத்தை ஊகித்துக் கொண்டான். அவனுக்கும் படு வைரியான பாண்டியன் மகள் செந்திரு தேவிக்கும் திருமணம்—இந்த நினைப்பே அவன் தலையில் நூறு நூறு இடிகள் அதிர்ந்து விழுவதைப்போலிருந்தது.

விஜயேந்திரன் தன் தோளில் கிடந்த பட்டு உத்தரீயத்தால் அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான். அந்த அன்பின் சக்தியில் குங்குமவல்லி சிறிது ஆறுதல் அடைந்தாள்.

பிறகு, ''குங்குமவல்லி! உளவறிவதற்காக நான் பாண்டிய நாட்டுக்குச் சென்று விட்டதால் இங்கு நடந்த எதுவுமே எனக்குத் தெரிய நியாயமில்லை; போகட்டும். இப்பொழுதே நான் உறையூருக்குப் போக வேண்டும். என் தந்தையார் குறிக்கப் போகும் முகூர்த்தத்திலேயே நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். ஆனால் அந்த மணவறையில் பகைவன் பாண்டியனின் மகளுக்குப் பதிலாக எல்லைப்புறத் தளபதி மழவராயனின் மகள் குங்குமவல்லி வீற்றிருப்பாள்!'' என்று கூறி அவளுடைய அழகிய வதனத்தை ஒருமுறை ஏறிட்டு நோக்கி விட்டு, அவள் பதிலைக் கூட



எதிர்பார்க்காமல் மண்டபத்தை விட்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றான்.

நாலைந்து நாட்கள் ஓடி விட்டன. குங்குமவல்லி ஒவ்வொரு நாளும் விஜயேந்திரனை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். விஜயேந்திரனைப் பற்றிய எந்தச் செய்தியும் அவளுக்குத் தெரியவில்லை.

ஆறாவது நாள் இரவு இரண்டாம் ஜாமம் ஆரம்பித்து ஒரு நாழிகை இருக்கும். உறையூர் இருந்த தெற்குத் திக்கில் 'டக் டக்...டக் டக்' என்ற குதிரைக் குளம்பின் ஒலி தெளிவாகக் கேட்டது; விஜயேந்திரனைத் தவிர வேறு யார் இந்த மண்டபத்துக்கு வரப் போகிறார்கள் என்று எண்ணிய குங்குமவல்லி, ''வந்து விட்டீர்களா?'' என்றாள்.

பொங்கி எழும் பூரிப்பு அவள் வாயிலிருந்து வார்த்தைகளாக வெடித்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னல் போல் பாய்ந்து குங்குமவல்லி குதிரையின் அருகில் போய் நின்றாள்;

"வந்துவிட்டேன், குமுந்தாய்! நான் வருவேனென்று உனக்கு முன்பே தெரியுமா?" என்றார் வந்தவர்.

இது யாருடைய குரல்? அடிக்கடி கேட்டுப் பழக்கப்பட்ட குரல்தான்; செயல் இழந்து கீழே விழுவதைப் போலானாள் குங்குமவல்லி.

"மகா...ரா...ஜா...!"

குங்குமவல்லி தடுமாறினாள். பேச வதற்கு நா புரளவில்லை.

"குமுந்தாய்! பயப்படாதே! எல்லாம் எனக்குத் தெரியும். எதிர்காலச் சோழ சாம்ராஜ்யத்தின் வாழ்வும், அழிவும் உன் கைகளில்தான் இருக்கின்றன என்பது கூட எனக்குத் தெரியும்!"

குங்குமவல்லி அயர்ந்து விட்டாள். அவள் இதயத்தில் ஏதோ ஒன்று சுரீர் என்று தைத்தது. அவள் எதையோ சொல்ல முயன்றாள். முடியவில்லை.

"வேண்டாம், குமுந்தாய்! நீ சிரமப் பட்டு எதையும் சொல்ல வேண்டாம். நான்தான் உன்னிடம் சொல்வதற்கு நிறையச் செய்தியோடு வந்திருக்கிறேன்; நான், உன்னை ஒன்று வேண்டிக் கொள்ள லாமா?" என்றார்.

'ஐயோ! இது என்ன அபசாரம்! சோழ மண்டலத்தின் ஏக சக்ராதிபதி தம் கீழ் பணி புரியும் ஒரு வீரனின் மகளிடமா வேண்டுகிறார்!' — குங்கும வல்லி தன் இரு காதுகளையும் இறுக மூடிக் கொண்டாள்.

"பரவாயில்லை, குமுந்தாய்! உன்னை வேண்டிக் கொள்வது எந்த விதத்திலும் தரக் குறைவாகாது. அறிவில் சிறந் தவள் நீ. எதிர்காலச் சோழ சாம் ராஜ்ய அதிபதியாகிய விஜயேந்திரனின் உள்ளத்தையே கொள்ளை கொண்ட மகா திறமைசாலி. ஆனால்...குமுந்தாய்! என் அருமை மகன் எல்லாவற்றையும் என்னிடம் விளக்கமாகக் கூறினான்; ஆனாலும் அதைக் கூறுவதில் அளவுக்கு மீறிய தாமதம் செய்துவிட்டான். நானோ அவன் உள்ளம் அறியாது பாண்டியனின் புத்திரியை மருமகளாக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்து ஓலை அனுப்பி விட் டேன். இனி அதை மாற்ற முயன்றால் அதனால் எவ்வளவு விபரீதம் விளையு மென்பதை யோசித்துப் பார். பாண்டி யனே பெண் கொடுக்க முன் வந்தும் விஜயேந்திரன் அதை மறுத்து விட்டான்; அதோடல்லாமல் 'உன் மகளை மணக்க முடியாது' என்று நேற்று பாண்டியனுக்கு ஓலையோறு அனுப்பி விட்டான். இதனால் பாண்டியன் மிகுந்த ஆத்திரம் அடைந் துள்ளதாக எனக்குச் செய்தி வந்துள்ளது. பாண்டியன் முன்பே சோழநாட்டின்மேல் குரோதம் கொண்டவன். இப்பொழுது இதுவும் சேர்ந்து கொண்டது. இன்னும் ஏழு நாட்களுக்குள் பாண்டியனின் சேனா சமுத்திரம் சோழ நாட்டுக்குள் நுழையப் போகிறதாம்..."

சோழ மகாராஜா சற்று நிறுத்திப் பிறகு ஆரம்பித்தார். குங்குமவல்லி வாயைத் திறக்கவில்லை.

"தற்சமயம் பாண்டியனின் படையை எதிர்த்து முறியடிக்கக் கூடிய சக்தி சோழ நாட்டுக்குக் கிடையாது.

"ஆதலின் விஜயேந்திரன் பாண்டிய னின் மகளை மணந்து அவனோடு சமாதான மாகப் போகாவிட்டால், பிறகு எந்த யுகத்திலும் சோழ நாட்டைத் தலைதூக்க முடியாதபடி பாண்டியனின் படைகள் நாசமாக்கி விடும். இந்த நாசத்தைத் தடுக்கவும் விஜயேந்திரன் மனத்தை மாற்றவும் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுவும் உன்னால் ஆகவேண்டிய வழி!"

சக்கரவர்த்தி கூறி முடித்ததும், "அது என்ன வழி மகாராஜா?" என்றாள் குங்குமவல்லி. அவள் குரல் நடுங்கியது. நெஞ்சு துடித்தது.

"குமுந்தாய்! வீணாக அதைரியப் படாதே. எதற்கும் அஞ்சாதவர்களே இந்த உலகத்தில் வாழத் தகுதி உள்ள வர்கள். நாம் எண்ணியது எதுவும் நடந்து விடுவதில்லை. அதைப் போலவே எண்ணாமல் இருப்பது நடக்காமல் இருப் பதும் இல்லை. இந்த உலகத்தின் போக் கும் அதில் நடக்கும் நிகழ்ச்சிகளும் இன்றுவரை புரியாத ஒரு புதிர். தெளி வடையாத மர்மம். நீ நினைத்தது ஒன்று. நான் நினைத்தது ஒன்று. ஆனால் முடிவோ மற்றொன்று. இது உலக நியதி ... காதோடு காதாக அந்த வழியைக் கூறுகிறேன். கப்பாகத் தான் இருக்கும்" என்று கூறி விட்டுக் குங்குமவல்லியிடம் மெலிந்த குரலில் மகாராஜா சொன்னார்.

ஐயோ! அவர் கூறியது கசப்பாகவா இருந்தது? அப்படி இருந்தால்தான் பரவாயில்லையே. அவர் கூறிய ஒவ் வொரு வார்த்தையும் அவளுடைய எண் ணக் கோட்டையை, இன்பக் கனவை, எதிர்கால வாழ்வை, அழித்து ஒழித்து அடியோடு நாசமாக்குவதாக அல்லவா இருந்தது!

ஏழு நாட்களுக்குப் பிறகு, சோழ நாடு இரு பெரும் அதிர்ச்சிகளுக்கு உள் ளாகிச் செய்வது அறியாது திகைத்து நின்றது. ஒன்று: நீண்ட நாள் சினம் கொண்டிருந்த பாண்டியன் தன் பெரும் படையோடு சோழ நாட்டுக்குள் புகுந்து உறையூர்க்கோட்டையைத் தாக்கிக் கொண்டிருந்தது. இரண்டு: மேற்கெல் லைப்புறக் காவல் தளபதி மழவராயனின் மகள் குங்குமவல்லியை எவ்வித ஆடம் பரமும் இல்லாமல், யாருடைய எதிர்ப் பையும் பொருட் படுத்தாமல் அவ ளுடைய முழு சம்மதத்தின் பேரில் வய தான சோழ மகாராஜா திடீரென்று மணம் புரிந்து கொண்டது.

மகாராஜாவும் புதிய மகாராணியும் பல முக்கியஸ்தர்கள் புடைசூழ ஆலோ சனை மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள்.

அப்பொழுது வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்த ஓர் போர்வீரன் சோழ சக்கர வர்த்தியிடம், "மகாராஜா! மகா



ராஜா! காரியம் மிஞ்சிவிட்டது. இனி அரை நாழிகைப் பொழுது கூட எதிரிகளைச் சமாளிக்க முடியாது போல் இருக்கிறது. என்ன செய்வதென்றே புரியவில்லை. உங்களை யோசனை கேட்டு வரும்படி சேனாதிபதி அனுப்பி யிருக்கிறார்'' என்றான்.

அதற்கு ''அப்படியா! ரொம்ப சந்தோஷம்! உடனே சமாதானக் கொடியை ஏற்றிவிட்டுச் சேனாதிபதியை இங்கு வரச்சொல்'' என்றார் அரசர்.

சிறிது நேரத்தில் சேனாதிபதி சக்கரவர்த்தியின் முன்பு வந்து தலைகுனிந்து நின்றான். அவன் முகம் அவமானத்தால் பழுக்கக் காய்ந்த இரும்பைப் போல் சிவந்திருந்தது. அதே சமயத்தில் சொல்ல முடியாத சோகமும் கவிந்திருந்தது.

''விஜயேந்திரா! உன் தந்தை பேசவில்லை. சோழ நாட்டின் சக்கரவர்த்தி பேசுகிறார். சமாதானக் கொடியை உயர்த்தியாகி விட்டதா?'' என்றார்.

''ஆம்! பிரபு. சமாதானக் கொடி பறந்து கொண்டிருக்கிறது'' என்றான் சேனாதிபதி.

''நல்லது. ஆனால்....சேனாதிபதி! பாண்டியனிடம் எந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு சமாதானம் செய்து கொள்வது?'' என்றார் அரசர்.

''இந்த ஏழைச் சேனாபதி எதுவும் அறியான், மகாராஜா!''

''அப்படியா? மகிழ்ச்சி. நீ அறியாவிட்டால் நான் அறிவேன். உடனே, பாண்டியன் மகள் செந்திருதேவிக்கும் சோழன் மகன் விஜயேந்திரனுக்கும் இன்றே திருமணம் என்று நகர் முழுதும் முரசறையச் சொல். இது என் கட்டளை. நான் போய்ப் பாண்டியனைப் பார்த்து விட்டு வருகிறேன்!''

சக்கரவர்த்தி கடுமையோடு கூறிவிட்டு எழுந்திருக்கப் போனார், அப்பொழுது—

''மகாப் பிரபு! இந்த வீரன் யார்?'' என்ற மெல்லிய நாதக் குரலோசை கேட்டுத் தலை குனிந்து நின்றிருந்த சேனாதிபதி விஜயேந்திரன் தலை நிமிர்ந்து பார்த்தான். மகாராஜாவின் பக்கத்திலே மகிழ்ச்சி பொங்கக் குங்குமவல்லி உட்கார்ந்திருந்தாள். அவள் குரலில் நடுக்கமோ, தடங்கலோ துளியும் இல்லை.

விஜயேந்திரனின் நெஞ்சு பட படவென்று வெடித்துச் சிதறுவதைப் போல் இருந்தது. 'அடி துரோகி! என்ன நய வஞ்சகமாய் ஒன்றும் தெரியாதவள் போல் பேசுகிறாய்!' என்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டான்.

மகாராஜா மெள்ளச் சிரித்தபடியே, ''குங்குமவல்லி! இவன்தான் இந்த நாட்டின் தலைமைச் சேனாதிபதி. எதிர்காலப் பரந்த சோழ சாம்ராஜ்யத்தின் மன்னாதி மன்னன். இன்னும் சற்று நேரத்தில் பாண்டியனின் மகளை மணக்கப் போகிற மகா அதிர்ஷ்டசாலி'' என்றார்.

விஜயேந்திரனின் ரத்தமெல்லாம் கொதித்தது. நரம்புகளெல்லாம் புடைத்தன. சட்டென்று அந்த இடத்தை விட்டு அகன்று விட்டான்.

சிறிது நேரத்தில் பாண்டியனின் மகள் செந்திரு தேவிக்கும் சோழநாட்டு இளவரசன் விஜயேந்திரனுக்கும் திருமணம் என்ற செய்தி உறையூர் முழுதும் முரசு அடித்துத் தெரிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியால் மூன்றே மூன்று பேர்களைத் தவிர மற்ற அத்தனை பேரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

விஜயேந்திரனுக்கும் செந்திரு தேவிக்கும் திருமணம் நடந்தது. கிழக்கும் மேற்கும் ஒன்று சேர்ந்தது; புலிக்கொடியும் மீன் கொடியும் சமமாய்ப் பறந்தன. சோழனும் பாண்டியனும் அருகருகே அமர்ந்து தத்தம் குழந்தைகளை ஆசீர்வதித்தனர்.

மறுநாள் மாப்பிள்ளை அழைப்பு. சோழநாட்டைச் சுடுகாடாக்க வந்த பாண்டியனின் படை, பகர முடியாத பரவசத்தோடு தங்கள் நாட்டு மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு புறப்பட்டது.

மகாராஜாவும் புதிய மகாராணி குங்குமவல்லியும் மேற்கு எல்லை வரையில் சென்று மகனையும், மருமகளையும், பாண்டிய மன்னரையும் வழி அனுப்பி விட்டு அன்று இரவு எல்லைக் காவல் மண்டபத்தில் தங்கினார்கள்.

மறு நாள் காலை மகாராஜா கண் விழித்தெழுந்தபொழுது அருகில் படுத்திருந்த குங்குமவல்லியைக் காணவில்லை. அவர் உடல் ஏனோ சிலிர்த்தது. பரபரப்போடு மண்டபம் முழுவதும் தேடினார். பலனற்றுப் போகவே பின்புறமிருந்த குளத்தை அடைந்தார். அங்கே—

அப்பொழுதுதான் நாள் அவிழ்ந்த தாமரை மலர்களின் நடுவிலே அழகே உருவெடுத்த குங்குமவல்லியின் உடல் உயிரற்றுக் கிடந்தது.

அந்தச் சடலம் அவரைப் பார்த்து, ''மகாராஜா! காதல் சக்தியை வேறு எந்தச் சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாது. உண்மைக் காதல் என்றால் அதன் முடிவு இப்படித்தான் இருக்கும்!'' என்று சொல்வதைப் போலிருந்தது.

சக்கரவர்த்தி தம் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். காற்றில் அசைந்த கமல மலர்கள் அவரைப் பார்த்துக் கலகலவென்று நகைப்பதுபோல் இருந்தன. அவர் வாய் அவரை அறியாமலேயே இலேசாக முணுமுணுத்தது.

''குங்குமவல்லி! நீ அமர வாழ்வு பெற்று விட்டாய். சோழர்களின் குலப் பெருமையையும் கௌரவத்தையும் காப்பாற்றி விட்டாய். பரம்பரை பரம்பரையாக அரச குலப் பெண்கள் மட்டுமே அமர்ந்து வந்த சோழ நாட்டு அரியணையில் ஒரு சாதாரணப் போர்வீரனின் மகள் அமரக் கூடாது —விஜயேந்திரனை மணக்கக் கூடாது—என்ற எனது எண்ணத்தை நிறைவேற்றி விட்டாய். ஆனால், ஒன்று சேர்ந்த இரு உள்ளங்களைப் பிளந்தெறிந்த பாவியாகி விட்டேன் நான். இனி எனக்கு ஏது மன நிம்மதி?...''

★

கிழவர் கதையை முடித்து விட்டு என்னைப் பார்த்தார். கிழவருக்கும் இந்தக் கதைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? ஆம். சடசடவென்று பொழிய ஆரம்பித்த மழைக்காக ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஒண்டச் சென்ற இடத்தில் ஒரு கிழவர் கூறிய கதைதான் இது.

இதற்குள் மழை விட்டுவிட்டது. நான் மண்டபத்திலிருந்து வெம்டலாம் என்று வெளியில் பார்த்தேன்.

''என்ன கதையைப் பற்றி நீங்கள் ஒன்றும் கூறவில்லையே?'' என்றார் கிழவர்.

''கதை அபாரம். குங்குமவல்லியைப் போன்ற தியாகிகள் இனி எந்த யுகத்தில் தோன்றப் போகிறார்கள்!'' என்று கூறி விட்டுக் கிழவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.


ஐம்பெருங்காப்பியங்கள்
இயற்றினர்
பெருங்காப்பியப்புலவர்கள்
சிலப்பதிகாரம்
மணிமேகலை
சீவகசிந்தாமணி
வளையாபதி
குண்டலகேசி
அவரெல்லாம் இன்றிருந்தால்
இன்னுமொரு காப்பியமும்
ஆக்கியிருக்கமாட்டாரோ
'ரத்தினம் பொடி'யினைப்பற்றி
T·A·S·ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, மதராஸ்-21


மாமனாரின் கனவு




'டி.டி.கே.'யின் வரி சம்பந்தமான செய்திகளைப் படித்தபடியே கண் அயர்ந்த வருங்கால மாமனார் இப்படியும் நடக்கக்கூடுமோ என்றதொரு பகற்கனவு காண்கிறார்.
நீங்கள் என் பெண்ணை மணம் செய்து கொள்ள வேணும். என் வசமுள்ள நகைகள், சொத்துக்கள் யாவற்றையும் கொடுத்து விடுகிறேன்.
ஐயையோ! வேண்டவே வேண்டாம். 'டி.டி.கே.' செல்வவரி போட்டிருக்கிறார். சொத்துக்களை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.
கல்யாணத்தையும் நான் சிக்கனமாக முடித்து விடுகிறேன். அதே புண்ணியவான் செலவு வரி வேறு.....
ஆமாம் அதுவும் சரிதான்.
கல்யாணப் பத்திரிகையும் அச்சடித்து யாருக்கும் அழைப்பு அனுப்ப வேண்டாம். 'போஸ்டல்' சார்ஜ் வேறு அதிகமாகி விட்டது.
அப்படி அனுப்பினாலும் யாரும் தப்பித்தவறி வந்துவிட மாட்டார்கள். ரயில் சார்ஜ் அதிகமாகிவிட்டது!
ஏது? இவ்வளவையும் பார்த்தால் பரம்பரை பரம்பரையாக உள்ள கல்யாணச் சடங்கையே மறைந்து விடும் போலிருக்கிறதே! பலே!
மேலும் கல்யாணமானவர்களுக்கு வருமான வரிச் சலுகை இருப்பதால் நானும் தங்கள் பெண்ணையே கல்யாணம் செய்து கொள்கிறேன்.


உங்களனைவருக்கும் எமது
மனமுவந்த
தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
துஷார் வனஸ்பதி மற்றும் நிராளா சோப் தயாரிப்பவர்கள்


உங்கள்
புன்னகையில்
ஒளிவீசச்
செய்யுங்கள்
அதற்கு ஏற்றது
போர்ஹான்ஸ்
டூத்பேஸ்ட்
ஜ்யாப்ப்ரே மானேர்ஸ் அண்ட் கோ., பிரைவேட் லிட்.



தீபாவளி வாழ்த்துக்கள்
தி ஜே இன்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்
கல்கத்தா
உஷா
தையல் மெஷின்



இலங்கையின் பழங்குடிகள்

கா. பொ. இரத்தினம்

இலங்கையின் வரலாற்றை உரைக்கும் தீப வமிசம் (1) மகா வமிசம் (2) முதலிய நூல்கள், விசயன் என்பவனையே சிங்களவரின் முதல் அரசன் எனக்கூறுகின்றன. வட இந்தியாவிலிருந்து இலங்கையையடைந்த இவ் விசயன், ஆரிய இனத்தவன் எனவும், இவன் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கைக்கு அரசனானான் எனவும், இவனுடன் எழுநூறு தோழர்கள் வந்தனர் எனவும் அந் நூல்கள் கூறுகின்றன. விசயன் இயக்கர் குலத்தவளான குவேனியை முதலில் மணஞ் செய்தான். (3) இவ்விருவருக்கும் பிறந்த இரு பிள்ளைகளுடைய பரம்பரையினரே இலங்கையில் இன்றும் நாகரிகமற்றவர்களாக வாழ்ந்து வரும் வேடர்கள்(4) என்கின்றனர். இப்பிள்ளைகளின் பரம்பரையினரைப் புளிந்தர் என மகாவமிசம் கூறுகிறது. இவர்கள் வாழ்ந்திருந்த பகுதி சபரகம என வழங்கப்படுகிறது. சபரகம என்பது சவரர் என்னும் சொல்லினின்றும் தோன்றியது. புளிந்தர் (புளினர்), சவரர் என்பன வேடர்களைக் குறிக்கும் சொற்கள்.

விசயனுடைய தந்தையாகிய சிங்கவாகு தன் தந்தையான (5) சிங்கத்தைக் கொன்றதால் 'சிங்கள' என வழங்கப்பட்டான். இதனால் அவனுடைய மகனும் அவனைச் சேர்ந்த மக்களும் இலங்கையில் சிங்களர் எனப்பட்டனர் என்று மகாவமிசம் உரைக்கிறது. இதனைக் கட்டுக்கதையாகவே பலர் கொள்கின்றனர். விசயன் இலங்கைக்கு வந்தபொழுது இயக்கர், நாகர்கள் எனும் இரு சாதியினர் இலங்கையில் வாழ்ந்தனர் என மகாவமிசம் (6) கூறுகிறது. பலாகாச சாதகம், தில்லியாவதானம் என்னும் நூல்களும் இலங்கையில் இயக்கர்கள் வாழ்ந்தார்கள் என உரைக்கின்றன. இலங்கையில் வாழ்ந்த இயக்கர்கள், மாபெரும் வீரனாகிய இராவணன் பரம்பரையினர் எனவும், இராவணன் ஒரு சிறந்த சிவபக்தன் எனவும் இராமாயணத்தால் அறிகிறோம். இராவணனுடைய வாழ்க்கைத் துணைவியாகிய மண்டோதரியைத் திருவாசகம் போற்றுகிறது.

புத்த சமயம் இலங்கையில் பரவுவதற்கு முன் இலங்கை சைவ ஆலயங்கள் பலவற்றையுடைய சைவ நாடாகத் திகழ்ந்தது. திருகோணமலையைப் பற்றிய புராண வரலாறுகளும், திருக் கேதீச்சரத்தையும், கதிர்காமத்தையும் பற்றிய வரலாறுகளும் பிறவும் இதனைப் புலப்படுத்துகின்றன. இராமர் முனீச்சரத்தில் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானை வணங்கினார் என்றும் உரைக்கின்றனர். (7) விசயன் இலங்கைக்கு அரசனானவுடன் பல சிவன் கோயில்களைக் கட்டுவித்தானென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. கி. பி. நாலாம் நூற்றாண்டில் இலங்கையையாண்ட மகாசேனன் பல சிவாலயங்களை இடித்து அழித்துப் புத்தராலயங்களைக் கட்டினான். (8)

விசயனுடைய காலத்தில் இலங்காபுரம் இயக்கர்களுடைய தலைநகரமாக இருந்தது. இலங்காபுரத்தைப் போன்ற பிற நகர்களையும் கோட்டைகளையும் உடைய

(1) தீபவமிசம்: கி. பி. 4-ம் நூற்றாண்டில் தோன்றிய பாளி நூல். (2) மகாவமிசம்: கி. பி. 6-ம் நூற்றாண்டில் எழுதப் பட்ட பாளிநூல். (3) மகா. அதி. 6, 7. (4) இவ்வேடர்களை இலங்கையின் முற்குடியினர் எனவும் சிலர் கூறுகின்றனர். G. C. Mendis - Early History of Ceylon. Ch. I. Sydney D Bailey-Ceylon P. 16. (5) வங்கநாட்டரசனுடைய மகள் சிங்கத்தோடு சேர்ந்து சிங்கவாகு எனும் புதல்வனையும் சிங்கவல்லி எனும் புதல்வியையும் பெற்றாள். சிங்கவாகு லாலநாட்டுக்கு அரசனாகிச் சிங்கவல்லியை மணந்து விசயனைப் பெற்றான். மகா. அதி. 6. (6) மகா. 7-68. (7) Sketches of Ceylon History - Sir P. Arunachalam. (8) மகா. 270:

வர்களாக இயக்கர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்தனர். (9) இந்த இயக்கர்களுடைய ஆதிக்கம் விசயனுடைய ஆட்சியின் பின்னரும் இலங்கையில் நிலைத்திருந்ததென்பதற்கு மகாவமிசத்திலேயே போதிய சான்றுகள் உள.(10) பந்துகாபயன் எனும் அரசன் கி. மு. நாலாம் நூற்றுண்டின் இறுதியில் இயக்கர்களுடைய உதவியைக் கொண்டு அரசனுனன். இவன் இயக்கர்கள் இருவரை இளவரசராகவும் ஆக்கினுன். இவர்களில் ஒருவன் பந்துகாபயனுடன் சரிசமனுக அரியணையில் வீற்றிருந்தான்.(11)

கி.பி. நாலாம் நூற்றுண்டில் மகாசேனன் என்னும் அரசன் இயக்கத் தலைவன் ஒருவனுக்கு நினைவுச் சின்னமாக ஒரு தூபத்தை எழுப்பினுன்.(12) இலங்கையில் வசித்து வந்த இயக்கர்கள் காலஞ் செல்லச் செல்லச் சிங்களவருடன் கலந்து அவர்களுடன் வாழ்ந்து சிங்களராகிவிட்டனர்.

இந்த இயக்கர்களைப் போலவே நாகர்களும் திராவிட இனத்தவரேயாவர். நாகர்கள் முற்காலத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும் வாழ்ந்தனர். புத்தர் பெருமானுடைய காலத்துக்கு முன்னும்பின்னும் இவர்களுடைய ஆட்சி பல நாடுகளில் சிறந்து விளங்கியது. தமிழ் நாட்டின் பழங் குடிகளாகிய சேர சோழ பாண்டியர்கள் போன்ற ஒரு பழந்தமிழ்க் குடியினரே இந்நாகர்களெனக் கூறலாம். இவர்களில் ஒளியர், எயினர், ஒவியர், அருவாளர், பரதவர் முதலிய பல பிரிவினர் உளர்.(13) சேர சோழபாண்டியர்கள் தம்முட் கலந்தது போலவே தமிழகத்தில் வாழ்ந்த நாகர்களும் அவர்களுடன் கலந்து விட்டனர். இலங்கையில் வாழ்ந்த நாகர்களில் பெரும்பாலானேர் சிங்களவருடன் கலந்து விட்டனர். ஏனையோர் தமிழருடன் கலந்துளர். நாகர்களைப் பற்றி மகாவமிசம், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களும் பழந் தமிழ் நூல்களும் குறிப்பிடுகின்றன.(14) தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த நாகர்கள் தமிழ்ப் புலமையிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர்கள்.



இலங்கையின் வடபகுதி முன்னர் நாகதீபமெனப் பெயர் பெற்று விளங்கியது.(15) இதன் உண்மையை வல்லிபுரக் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட செப்பேட்டுக் கல்வெட்டு நிலைநாட்டுகிறது. நாகர்கள் நாகரிகமாக ஆண்டு வந்த நாகதீபத்தினையே மணிமேகலையும் மணிபல்லவமெனக் குறிப்பிடுகிறது. நாகதீபத்தை நாகர்கள் கி. மு. பதினைந்தாம் நூற்றுண்டு தொடக்கம் ஆளத் தொடங்கினரென்பர்.(16) கி. மு. ஆரும் நூற்றுண்டு தொடக்கம் இலங்கையின் வடபகுதியை நாகர்கள் தொடர்பாக ஆண்டுளர். இப்பொழுது கந்தரோடை என்று வழங்கப்படும் இடம் முன்னர் கதிரைமலை எனும் பெயருடன் நாகர்களின் தலைநகரமாக விளங்கியது. மாதோட்டமும் நாகர்களின் சிறந்த நகரமாகப் பல்லாண்டு விளங்கிப் புகழுடைந்தது. இந்த நாகதீபத்தில் நாகர்களுடன் தமிழர்களும் கி. மு. ஆரும் நூற்றுண்டுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டுமென்பதைப் பலப்படுத்தும் குறிப்பொன்று மகாவமிசத்தில் உளது.(17)

கி. மு. ஆரும் நூற்றுண்டு அளவில் நாகர்கள் இலங்கையை மாத்திரமன்றி இலங்கையின் மேற்குக் கரைப் பகுதிகளையும் தென்னிந்தியாவின் தென் கீழ்க்கரைப் பகுதிகளையும் ஆண்டவரென்பது மகாவமிசத்தால் அறியப்படுகிறது.(18),(19) இப்பொழுது களனி யென வழங்கப்படும் கல்யாணியிலிருந்தும் கணவத்தமனே என்னும் மலையிலிருந்தும் நாக தீபத்திலிருந்தும் ஆண்ட நாகர்களைப் பற்றியும் மகாவமிசம் கூறுகிறது.

கல்யாணியை மணியக்கிகன் எனும் நாக அரசன் ஆண்ட காலத்தில் அவனுடைய மருகனும் நாகதீபத்தின் அரசனுமாகிய மகோதரனும், மணியக்கிகனுடைய பேரனும், மகோதரனுடைய மருகனுமாகிய சூலோதரனும் மணியாசனம் ஒன்றுக்கு உரிமைபாராட்டி அதனைப் பெறுதற்குப் போர் புரிந்தனர். அப்பொழுது புத்தர் பெருமான் வான் வழி வந்து அவர்களுக்கு அறத்தை யெடுத்துரைக்க அவ்வரசர்களும், அவர்களுடைய குடிகளும் புத்த சமயத்தவர்களாயினர். புத்தர் பெருமான் இலங்கைக்கு இரண்டாம் முறை வந்து ஆற்றிய பணி இதுவென மகாவமிசம் கூறுகிறது.(20) இச்செய்தியை மணிமேகலையும் மணிபல்லவத்துத் துயருற்றுக் காதையில் கூறுகிறது. மணிபல்லவத்தையும் அதனை யடுத்துள்ள நாகர்களுடைய பல ஊர்களையும் மணிமேகலை நாகநாடு எனவும் குறிப்பிடுகிறது.

இலங்கையின் வடபகுதியினை ஆண்ட நாகர்கள் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் மிகுந்த ஆற்றலுடையவர்களாகி இலங்கை முழுவதையும் ஒரு நூற்றுண்டுக்கு மேல் ஆண்டுளர் என்பதற்கு மகாவமிசம் குறிப்பிடும் அரசர்களின் பெயர்கள் சான்று பகர்கின்றன.(21) கருநாகன், சிறுநாகன், குட்டநாகன், அபயநாகன் முதலியன அவ்வரசர்கள் சிலரின் பெயர்களாகும். இக்காலத்தில் தமிழகத்திலும் நாகர்கள் ஆட்சி புரிந்தனர். இலங்கைத் தீவின் பெயரைக் கொண்டு விளங்கிய


---

40 - 41. (9) R. L. Spittel - Far - Off Things P. 52 (10) விசயன் இயக்கர்கள் யாவரையும் கொல்லவில்லை. மகா: 7 : 62. (11) மகா. 10 : 87. (12) மகா. 37 - 44. (13) வி. கனகசபைப் பிள்ளை - ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் பக். 80. (14) இலங்கையில் இன்பத் தமிழ்: பக். 14. (15) கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் தொலமி நாகதீபத்தைப் பற்றிக் குறிப்பிட்டுளர். Vinconts Periplus of Erythorean Sea Vol. II P. 450. கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுக்குப் பின் இப்பகுதியை உத்தரம் பிரதேசம் என மகாவமிசம் கூறுகிறது. (16) C. Rajanayagam - ancient Jaffna P 44. (17) புத்தர் பெருமான் நாகதீபத்துக்கு வந்த போது சமித்துசுமணன் எனும் தேவனும் அவருடன் வந்தானென்றும் அத்தேவன் நாகதீபத்தில் ஒரு மனிதனுக முந்திய பிறப்பில் இருந்தானென்றும் மகாவமிசம் கூறுகிறது. ஒரு நாகனுகப் பிறந்திருந்தான் என்று கூறுமையால் அவன் தமிழனுகப் பிறந்தான் என்று கொள்ளலாம். மகா. 52-55. (18,19) மகா. அதி. 1. (20) மகா. அதி. 1. (21) ஆயிரத்தெண்ணூறு

மாவிலங்கையெனும் நாட்டின் மன்னர்களாகவும் விளங்கினர். திருமாவளத்தான் எனப் போற்றப்படும் கரிகால்வளத்தான் நாகர்களை வென்றடக்கிய செய்தியைப் பட்டினப்பாலை கூறுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட ஒரு மன்னனின் பெயர் இளநாகன் என்பதாகும். இவன் தென்னிந்தியாவுக்குச் சென்று படை கொண்டு வந்து தன் பகைவர்களை வென்றான். இவனுடைய மனைவியின் பெயர் தமிழதேவியென மகாவமிசம்(22) கூறுகிறது. இலங்கையின் ஆட்சிக்குப் போட்டியிட்ட மோரியர் (23) இலம்பகர்ணர் என்னும் இரு இனத்தவர்களும் ஆரியரல்லர் என்றும் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்தே வந்தவர்கள் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். (24) இலங்கைக்குப் புத்தர் பெருமான் மூன்று முறை வந்தாரென்றும் அவற்றுள் இருமுறை நாகர்களிடத்து வந்தார் என்றும் நாகர்களும் புத்த சமயத்தவர்களாயினர் என்றும் கூறும் மகாவமிசம், இலங்கையில் வாழ்ந்த நாகர்கள் எங்கு சென்றனர்? எவ்வாறு தம் தனி இயல்பை இழந்தனர் என்பது பற்றி யாதும் கூறவில்லை. எனவே நாகர்களில் பெரும்பாலானோரும் இயக்கர்களைப் போலவே சிங்களருடன் நன்கு கலந்து விட்டனர் என்பதற்கு ஐயமில்லை.

சிங்களவரின் முதல் அரசனாகிய விசயனுடைய முதல் மனைவி இயக்கர் குலத் தலைவி என்பதும் பட்டத்தரசி பாண்டிய நாட்டரசி என்பதும் மகா வமிசம் கூறும் செய்திகளாகும். விசயனுக்குப் பெண் பெறுவதற்கு இலங்கையிலிருந்து மதுரைக்குச் சென்றார்கள்.(25) என்று மகாவமிசம் கூறுவதால் அக்காலத்தில் இலங்கைக்கும்பாண்டிய நாட்டுக்கும் போக்குவரத்துத் தொடர்புகள் இருந்தன என்பதும் இலங்கையரும் தமிழை அறிந்திருந்தனரென்பதும் புலனாகின்றன. அக்காலத்தில் இலங்கையின் வியாபாரப் பொருள்களைப் பிற நாடுகளுக்குக் கொண்டு சென்றவர்கள் தமிழர்களே யாவர். தமிழர்களில் பலர் மாதோட்டத்தில் தங்கியிருந்தனர். சோழ நாட்டில் காவிரிப்பூம் பட்டணம்போல இலங்கையில் மாதோட்டம் உலகறிந்த சிறந்த துறையாகவும் மக்கள் வதிந்த வணிக நிலையமாகவும் விளங்கியது. முற்காலத்தில் வட இலங்கையினர் கிரேக்கர்களுடனும் உரோமர்களுடனும் வாணிபம் நடத்தினர். பாண்டிய மன்னன் விசயனுக்கு மனைவியாகத் தன் மகளை அனுப்பியபோது விசயனுடன் வந்த எழுநூறு தோழர்களுக்கும் மனைவியர்களாக எழுநூறு பெண்களையும் பதினெட்டு வகையான தொழில்கள் செய்யும் ஆயிரம் குடும்பங்களையும் அனுப்பி வைத்தானெனவும் இவர்கள் மாதோட்டத்தில் வந்து இறங்கினர் எனவும் மகாவமிசம் கூறுகிறது. (26)




மகாவமிசத்தின் கூற்றின்படி இயக்கர்களையும் நாகர்களையும் விட என்பது தலைமுறைக்கு முன் இலங்கையில் குடியேறியவர்களின் பட்டியல் பின்வருமாறு :— வட இந்தியாவிலிருந்து வந்த ஆரிய ஆடவர்கள் எழுநூற்றொருவர்; பாண்டி நாட்டுப் பெண்கள் எழுநூற்றொருவர். பாண்டி நாட்டிலிருந்து வந்த தமிழ்க் குடும்பங்கள் ஆயிரம். இவர்களின் பரம்பரையில் வந்த சிங்களவர்களை, ஆரியர்கள் என்பதா? திராவிடர்கள் என்பதா? சிங்கள மக்களுடைய இரத்தத்தில் குறிப்பிடத் தக்க பகுதி தமிழ் இரத்தமே யென்று இலங்கையில் பழைய வரலாறு என்னும் நூலின் ஆசிரியரான சி. சி. மென்டிசு என்பவர் கூறுகிறார். (27) மேலும், இங்கு குறிப்பிட்ட தொகையினருடன் கலந்தவர்களாகக் கருதப்படும் இயக்கர் நாகர்களும் திராவிடர்களே. எனவே இப்பொழுது இலங்கையில் உள்ள சிங்களமக்கள் தங்களை ஆரியரென உயர்த்தி உரைப்பதற்கும் தமிழர்களைத் திராவிடர் (28) எனக் குறைத்துக் கூறுவதற்கும் வரலாறு இடங் கொடுக்குமா?

சிங்கள மக்களுக்கு இந்த உலகிலே மிக நெருங்கிய தொடர்பு உடையவர்கள் தமிழர்கள் என்பதையும் சிங்கள மொழிக்கு ஆக்கம் தந்தது தமிழே என்பதையும் எவரும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது. இதைச் சிங்கள மக்கள் நன்கு உணர்ந்தால் இலங்கையில் இனப் பூசல் ஏற்படாதன்றோ? இன்னும் விசயன் காலம் முதல் இன்றுவரை இலங்கைக்குத் தொகையாக வந்தவர்களும் சிங்களவர்களோடு கலந்தவர்களும் தமிழர்களே (29) என்பதற்கு மகாவமிசம் முதலிய நூல்கள் சான்று பகர்கின்றன. தென்னிந்தியாவின் அண்மையினையும் அதனை இலகுவில் அடையக் கூடிய தன்மையினையும் புலப்படுத்தும் முறையில் தென்னிந்தியாவை மகாவமிசம் ''அடுத்த கரை'', ''எதிர்க்கரை'' ''அப்பாற்கரை'' என்று குறிப்பிடுகிறது. (30) இலங்கைக்கு மிகுந்த அண்மையிலுள்ள தமிழகத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரையும் தமிழர்கள் வந்து கொண்டேயிருந்தார்கள். வியாபாரிகளாகவும், படைவீரர்களாகவும், ஆட்சியாளர்களாகவும், குடிமக்களாகவும், கலைஞர்களாகவும், ஞானிகளாகவும், பண்டிதர்களாகவும் தமிழர்கள் இலங்கைத் தீவுக்கு வந்தார்கள்.

கி. பி. முதலாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட அனுலா என்னும் அரசியின் காதலர்களில் இருவர் தமிழர் என மகாவமிசம் உரைக்கிறது. இவர்களில் ஒருவன் அநுராதபுரத்திலிருந்த வடுகன் என்னும் தச்சன்; மற்றவன் நிலியன் என்னும் அரண்மனைக் குரு. இவர்கள் இருவரும் அனுலாவின் காதலர்களாக ஈராண்டு இலங்கையை ஆண்டனர். (31) இந்தச் செய்தி

ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் ப. 84. (22) மகா. 35 : 48. (23) கிறித்துவ ஆண்டின் தொடக்கத்தில் மோரியர் எனும் இனத்தவர் தென்னிந்தியாவில் இருந்தனர். Early History of Ceylon P. 5. மோரியர்கள் நாக இனத்தவராகவிருக்கலாம். மோரியர்கள் என்பதற்குப் புறநானூற்றின் பழைய உரையாசிரியரும் 'விச்சாதரரும் நாகரும்' எனக் கூறுகிறார். பு. நா. 175. (24) Early History of Ceylon P. 5. (25) மகா. அதி. 7 : 50 புவியியல் போக்குவரத்து வசதி, காலம் முதலியவற்றை நோக்காது மதுரையை வட இந்தியாவிலுள்ள மதுரா எனக் கூற முயல்வார்க்கு மகாவமிசத்தின் பின்வரும் கூற்றுக்கள் இடமளிக்கா. 7:73 ; 59: 4. 63: 15. (26) மகா. 7.Far-off Things P 52. (27) Early History of Ceylon P. 9. Far-off Things P. 93. (28) சிங்களப் பத்திரிகைகள் மேலும், சிங்கள வகுப்புவாதிகளும் இன்று தமிழரைத் திராவிடர் என்று குறிப்பிடுகின்றனர். மகாவமிசம் தமிழர் என்றே பன்னூறு ஆண்டுகளாகக் குறிப்பிட்டமையை இவர்கள் அறியார்கள் போலும். (29) Early History of Ceylon P. 8, (30) மகா. 35: 27; 36: 112. (31) மகா. 29:19, 24. (32) மகா 45. 11; 55: 5, 12;



விறுலும் அக்காலத்திலே தமிழர் பலர் சிங்களவருடன் கலந்துறைந்தனர் என்பது பெறப்படுகின்றது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழரின் செல்வாக்கும் தமிழ்ப்படை வீரரின் ஆதிக்கமும் இலங்கையில் மேலோங்கின. கி. பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் சிங்கள மன்னர் தமிழரின் தாக்குதல்களுக்குப் பயந்து அநுராதபுரத்தை விட்டுவிட்டுப் பொலன்னறுவையைத் தலைநகராக்கினர். சிங்கள மன்னருடைய படைகளில் தமிழரே தொகையாக இருந்தனர். (32) இவர்களுள்ளே வேலைக்காரர் எனும் பெயர்பூண்ட படை வீரர்கள் மிகுந்த ஆதிக்கமுடையவர்களாய் விளங்கினர். (33) சிங்கள மன்னர்கள் பலரின் வாழ்வும் தாழ்வும், தமிழ்ப் படை வீரர்கள் அவர்களுக்கு அளித்த ஆதரவினைப் பொறுத்திருந்தன. சிங்கள இளவரசர்களும் சிங்களத் தலைவர்களும் அரசியல் ஆதிக்கம் பெறுதற்காக அடிக்கடி ஒருவரோடொருவர் பகைத்துப் போரிட்டனர். இப்போர்களில் உதவி செய்யுமாறு அவர்கள் தமிழர்களையே அழைத்தனர். இதனாலே தமிழரின் ஆதிக்கம் அநுராதபுரத்தில் நிலைத்தது; சிங்களருடன் தமிழர் கலந்தனர். ஒன்பதாம், பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில், தமிழர் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் நிறைந்திருந்தனர். (34)

இலங்கையின் சிங்கள மன்னர் சிலர் விசயனைப் போலத் தமிழ்நாட்டு இளவரசிகளை மணந்தனர். (35) இவ் விளவரசிகளுடனும் தமிழ்க் குடிகள் பல இலங்கைக்கு வந்தன. கலிங்க* பாண்டிய நாடுகளின் இளவரசர்களும் இலங்கையின் அரியணையில் அமர்ந்து இலங்கையை ஆண்டனர். கண்டியிலிருந்து இலங்கையை ஆண்ட கடைசி மன்னர் நால்வரும் தமிழரேயாவர். இலங்கையின் ஒப்பற்ற வீர வேந்தனை முதலாம் பராக்கிரமபாகுவும் தமிழ் இனத்தோடு இரத்தக் கலப்புடையவனே.

தமிழ்ப் பிராமணர்கள் பலர் அரசவைக் குருமாராகவும் சிங்கள மன்னரோடு உறைந்தனர்; (36) தானங்களும் பெற்றனர். (37) சிங்கள மன்னர்களின் ஆட்சியில் தமிழர் பலர் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாக உயர்ந்த உத்தியோகங்களையும் பெற்றிருந்தனர். (38) இவற்றால், தமிழ்மொழி சிங்கள மன்னர் பெருடைய அரண்மனை மொழியாக விளங்கவும், சைவ சமயச் சடங்குகள் அரண்மனையில் இடம் பெறவும், (39) புத்த சமயச் சடங்குகளுடன் அவை கலக்கவும் வாய்ப்பேற் பட்டது. ஏழாம் எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில், திருகோணமலையும் திருக்கேதீசுவரமும் இந்தியாவிலுள்ளோரும் போற்றும் தலங்களாக விளங்கின. திருஞான சம்பந்தரும், சுந்தரரும் இத்தலங்கள்மேற் பதிகங்கள் பாடியுளர். சிங்கள மன்னர் சிலர் தேவாலயங்களைக் கட்டியும் புதுப்பித்துமுளர் (40) இன்றும் சிங்கள மக்களில் பெரும்பாலானோர் முருகனையும் திருமாலையும் கண்ணகியையும் வழிபடுகின்றார்கள். புத்த பள்ளிகளில் தமிழ் மொழியும் பழங்காலம் தொடக்கம் கற்பிக்கப்பட்டு வருகிறது. சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள தொடர்பு மாத்திரமே சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமுள்ள கலப்பைவிளக்கப் போதுமானது. (41)

சிங்கள மன்னர் பலர் தென்னிந்தியாவுக்குச் சென்று தமிழ்ப் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு வந்து இலங்கையின் அரசியலைக் கைப்பற்றியுளர். இப் படை வீரர்களில் பலர் சிங்களவருடன் கலந்தனர். முன்னர் குறிப்பிட்ட இளநாகன் மாத்திரமன்றி, கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசாண்ட அபயநாகனும், ஐந்தாம் நூற்றாண்டில் ஆண்ட மூன்றும் அக்கபோவும், சிறீநாகன் எனும் சேனாதிபதியும், முதலாம் தாதோபதிசனும், இரண்டாம் தாதோபதிசனும், எட்டாம் நூற்றாண்டில் ஆண்ட மானவம்மனும், இரண்டாம்

69: 18; 70: 230. (33) மகா. 60: 36; 63: 24, 29; 74 :44 (34) "Raja Rata Kara records in the ninth or tenth century the domination of the Tamils was so complete that every town and village in the Island teemed with them and that in the whole of the Island there were not to be found even five Buddhist priests" — Sir P. Ramanathan-Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society Vol 10, No. 35, P. 108. (35) Far off Things P. P. 17, 207. *கலிங்கர்களும் திராவிடர்களே. (36) கி.மு. முதலாம் நூற்றாண்டில் தீசன் எனும் பிராமணன் ஒருவன் உள் நாட்டுக் கலகமொன்றை உண்டாக்கினான். மகா. 63: 33, 45; 63: 5, (37) மகா. 48:23; 51:65; 77:105. (38) Far-off Things PP 17-207. மகா: 46:39-40. (39) மகா. 10. 79; 11:26; 34:24; 62:28; 33:46. (40) மகா. 79:19, 22, 81; 85:85, (41) Early History of Ceylon P. 9. கி. மி. இரண்டாம் நூற்றாண்டில் தீசுத்த பஞ்சத்தின் ஏக நாமிக பஞ்சம் என மகா


நாட்டின்
நலன் பெருக
நாட்டின் நலன் பெருக
அடிப்படையான தேவை விவசாயம்.
விவசாயம் நன்கு வளர நீர்ப்பாசனத்
திட்டங்கள் அவசியம். நீர்ப்பாசனத் திட்டங்
கள் நிருமிக்க அத்யாவசியமானது சிமெண்டு.
இன்று நம் ராஜ்யத்தில் உருவாகி யிருக்கும்
மணிமுத்தாறு, வைகை முதலிய திட்டங்கள்
இன்னும் அதிகமாக விவசாயத்தைப் பெருக்கி
குடிமக்கள் நல்வாழ்வு வாழ உதவிபுரியப் போகிறது.
இந்த நற்பணிபுரியும் திட்டங்களில் நிடத்திற்
கும், தரத்திற்கும் பெயர்பெற்ற எங்கள் சங்கர்
பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்டையே உபயோகப்
படுத்தி யிருக்கிறார்கள். நாட்டின் வருங்கால
சுபிக்ஷத்திற்கு அடிகோலும் இத்தகைய திட்டங்
களில் நாங்களும் பங்கு கொண்டுள்ளோம்
என்பது எங்களுக்கு மிகவும் பெரு
மையையும் மகிழ்ச்சியையும்
அளிக்கிறது!
SANKAR
I C
BRAND
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் சிமெண்ட்
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்
மதராஸ்-1.
தொழிற்சாலை:
சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா
IC: 424



அழகுக்கு அழகை அளிப்பது
கோஹினூர் சரிகைகள்.

தப்புலனும் இந்தியாவுக்குச் சென்று தமிழ்ப் படைகளை இலங்கைக்குக் கொண்டு வந்தனர்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் யாழ்ப் பாணத்திலே தனித் தமிழரசு நிலைநாட்டப்பட்ட பதின் மூன்றும் நூற்றாண்டு வரையுமுள்ள காலத்தில் இடை யிடையே தமிழ் மன்னர்களும் வீரர்களும் இலங்கைக்குப் படையெடுத்து வந்து இலங்கையை ஆண்டனர். இவர்களுள்ளே பின் வருவோர் குறிப்பிடத் தக்கவர்கள். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட சூரத்திசன் என்னும் சிங்கள மன்னனைச் சேனன், கூட்டிகன் எனும் இரு தமிழர்கள் வென்று இருபத் திரண்டு ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர்.

இவர்களை வென்று அரசாண்ட அசலன் என்னும் சிங்கள மன்னனை எல்லாளன் என்னும் சோழ நாட்டுப் பெருமகன் வென்று அநுராதபுரத்தைக் கைப்பற்றி நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டான். இவனை வென்ற துட்டகைமுனு இலங்கை முழுவதற்கும் அரசனு வதற்கு முன் முப்பத்திரண்டு தமிழ் மன்னர்களை வென்றான் என மகாவமிசம் கூறுகின்றது!(42) இக் கூற்று இலங்கையின் பல பகுதிகளையும் அக்காலத்திலே தமிழர்கள் சிற்றரசர்களாய் ஆண்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது. இலங்கையைத் தமிழராட்சியி லின்றும் விடுவித்த பெருவீரனெனத் துட்டகைமுனு பாராட்டப்படுகிறான்.

எல்லாளன் தனக்குத் துணைபுரியவருமாறு அனுப்பிய ஓலையைப் பெற்றவுடன் அவனுடைய மருமகன் வல்லூகன் முப்பதினாயிரம் வீரர் கொண்ட படையுடன் வந்து மாதோட்டத்துள் இறங்கித் துட்டகைமுனுவுடன் போராடி இறந்தான்.

கி. மு. முதலாம் நூற்றாண்டில் மறவ வீரர்கள் ஐவர் பெரும் படையுடன் வந்து வாலகம்பாகு என்னும் அரசனுடன் போரிட்டு அவனை வென்று பதினைந்து ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் சோழ அரசர் களுள்ளே மிகுந்த சிறப்புடன் விளங்கிய கரிகாற் பெரு வளத்தான் இலங்கையை வென்று தன் சேனைத்தலைவன் ஒருவனை இலங்கையை ஆளுமாறு செய்து, பன்னிரண் டாயிரம் சிங்களக் குடிகளைச் சோழ நாட்டுக்குக் கொண்டு சென்றான். (43) இச் செய்தியைக் கலிங்கத்துப்பரணி எனும் நூல் கூறுகிறது. (44) கரிகாலன் காலத்தில் இலங்கையிலிருந்து உணவுப் பொருள் சோழ நாட்டுக்கு அனுப்பப்பட்டது. (45) சேரன் செங்குட்டுவன் கண்ண கிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பு செய்தபொழுது கடல்சூழ் இலங்கைக் கயவாகுவும் அம்மன்னனுடன் இருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இந்தக் கயவாகு கி.பி. 114 முதல் கி.பி. 136 வரை ஆண்டான்; இலங்கையிலும் பத்தினித் தெய்வவழிபாட்டை நிலை நாட்டினான்.(46) இவன் கரிகாலன் கொண்டு சென்ற சிங்கள மக்களை மீட்டு வந்ததுமல்லாமல் அவர்களைப் போல் இருமடங்கான சோழர்களையும் சிறைப்படுத்தி இலங்கைக்குக் கொண்டு வந்தானென்று இராசாவலி என்னும் சிங்கள நூல் கூறுகிறது. ஆனால் இந்தச் சிங்கள நூலைத் தவிர வேறு எந்த நூலிலும் இந்தச் சம்பவத் தைப் பற்றிய விவரம் இல்லை. மகாவமிசத்திலோ தமிழ் நூல்களிலோ எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை.

மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டன் என் பான் ஐந்தாம் நூற்றாண்டில் திருகோணமலைக்கு வந்து தம்பளகாமத்தில் பழுதடைந்து கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் புதுப்பித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் கூறுகிறது.

ஐந்தாம் நூற்றாண்டில் பாண்டு என்பவனும் வேறு ஐவரும் பெரும் படையுடன் வந்து இலங்கையை அடைந்து இருபத்தேழு ஆண்டுகள் இலங்கையை ஆண்டு வந்தனர். எட்டாம் நூற்றாண்டில் உக்கிர சிங்கன் எனும் அரசன் பெரும்படையுடன் வந்து இலங்கையின் வடபகுதி முழுவதையும் ஆண்டான்.


ஒன்பதாம் நூற்றாண்டில், முதலாம் சேனனுடைய காலத்தில் சிறீமார சிறீவல்லப என்னும் பாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்து வந்து இலங்கையிலிருந்த தமிழ் வீரரின் துணையோடு அநுராதபுரத்தைக் கைப் பற்றிப் பெருந்தொகையான பொருளுடன் பாண்டி நாட்டுக்கு மீண்டான்.

பத்தாம் நூற்றாண்டில் பராந்தகச் சோழன் இலங் கையின்மேல் படையெடுத்தான். பின்னர் பதினோராம் நூற்றாண்டில் இராசராச சோழனும் பின் அவன் மகன் முதலாம் இராசேந்திரனும் இலங்கையை வென்று, மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயர் சூட்டி, சோழ நாட்டின் ஒரு பகுதியாக்கி அரைநூற்றாண்டுக் காலத் துக்கு மேல் ஆண்டனர். அவர்கள் காலத்தில்தான் இலங்கையில் கலைகளும் கற்கோயில்களும் ஓங்கி வளர்ந் தன. இலங்கைத் தீவில் வாழ்ந்த எல்லா மக்களும் எவ்விதக் குறையுமின்றி வாழ்ந்து வந்தனர். (47) பன்னி ரண்டாம் நூற்றாண்டில் சிறீ வல்லபன் என்பவனுக்குதவி செய்வதற்காக இரண்டாம் இராசாதி ராசசோழன் ஒரு பெரும் படையை இலங்கைக்கு அனுப்பி வைத்தான்.

பதின்மூன்றும் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கலிங்க நாட்டிலிருந்து வந்த மாகன் என்பான் வட இலங்கையில் வந்து இறங்கி இலங்கையை ஆண்டான். இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் சடவர்மன் சுந்தர பாண்டியனும், சடவர்மன் வீரபாண்டியனும் இலங்கையின்மேல் படையெடுத்து இலங்கையைத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். மாறவர்மன் குலசேகரன் இலங்கையை ஆண்ட காலத்திலேதான் யாழ்ப்பாணத் திலே தனித் தமிழரசு தொடங்கியது. யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என வழங்கப்பட்டனர். போர்த்துக்கீசர் இலங்கையை அடிமைப்படுத்திய பதினேழாம் நூற்றாண்டு வரையும் யாழ்ப்பாணத்தையும் வட இலங்கையையும் இவர்கள் ஆண்டனர். இவ்வாறு இலங்கையை வென்று ஆட்சி புரிந்த அரசர்களோடும் வீரர்களோடும் வந்த படை வீரர்களிலும் குடிமக்களிலும் பலர் சிங்களவருடன் கலந்து சிங்களவராயினர்.

எனவே, இதுவரையும் கூறியவற்றால் இலங்கையின் பழங்குடிகள் இயக்கர், நாகர், வேடர், தமிழர் என்னும் சாதியினரும், இவர்கள் பலருடன் எழுநூறுக்கு மேற் பட்ட ஆரியர்கள் கலந்து உண்டாகிய சிங்களச் சாதி யினரும் என்பது பெறப்படுகின்றது.

வமிசம் கூறுகிறது. நாழி என்பது தமிழர்தம் முகத்தலளவை யாகும். எனவே, அக்காலத்தில் இலங்கையிலே தமிழரின் நாழி எனும் அளவையும் வழக்கில் இருந்ததெனக் கொள்ளலாம். (42) மகா: 25:75. (43) இலங்கையைக் கொண்டு கரிகாலன் காவிரியின் கரையைக் கட்டுவித்தான். (44) கலிங்கத்துப் பரணி - 142. (45) "ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" — பட்டினப்பாலை-191. (46) கண்டியில் இன்றும் ஆண்டுதோறும் நடத்தப்படும் பேரகரா எனும் விழா கயவாகுவின் காலம் முதல் நடந்து வருகிறது. முதலில் இது கண்ணகிக்கே உரியதா யிருந் தது. கண்டியிலுள்ள நாதா மாளிகைக்குள்ளே கண்ணகி கோவில் இன்றும் காட்சி யளிக்கிறது. பேரகரா பிராகாரத் தோடு தொடர்பு பட்டது. பாடி விழா என்பது தமிழ் வழக்கு. சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது. (47) இலங்கை முதன் முதலாக இக்காலத்திலேதான் பிற நாட்டுப் பேரரசொன்றின் பகுதியாக ஆளப்பட்டது.


FOR YOUR REQUIREMENTS IN
Perkins P-6 PARTS
Also genuine and replacement parts for
CHEVROLET, DODGE, FARGO
AND OTHER POPULAR VEHICLES
The correct place to approach
DODGE CARS
THE MODERN DISTRIBUTING Co
65, SINGANNA CHETTY STREET, CHINTADRIPET, MADRAS-2
Phone: 85550
Post Box 2241
Grams: JEEPSPARES


எமது தீபாவளி வாழ்த்துகள்
பொடிகளில் சிறந்தது
காரம் மணம் குணம்
நிறம் நிறைந்தது
அப்பாதுரைப் பொடியே
ஆ. அப்பாதுரை முதலியார் & சன்.
புகையிலை பொடி வியாபாரம்
55, ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1.
S.S.



தெம்மாங்கு



ர. அய்யாசாமி

பத்து வருஷங்களுக்குப் பின், நான் மீண்டும் எங்கள் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தேன். ரயிலும் மோட்டாரும் எட்டாத சிற்றூர் அது. நடந்துதான் போக வேண்டும். ரயிலடியிலிருந்து நான்கு மைல் தனிவழி செல்வது எனக்குப் புதிதல்ல. அன்று முழு நிலவும் காய்ந்து கொண்டிருந்தது. தூரத்தில் வண்டிச் சக்கரங்கள் பாறை மீது 'நெறு நெறு' என்று உராய்ந்து செல்லும் ஒலி நன்றாகக் கேட்டது.

முன் வண்டிக்காரன் பொன்மலை சாட்டையைச் சொடுக்கினான். மாட்டை அடித்து விரட்டுவதற்காக அல்ல. சாட்டையைச் சொடுக்குவது அவனுடன் இரண்டறக் கலந்து போன ஒரு பழக்கம். அவன் பாடிய பாட்டுக்கும் அதுவே தாளம் கூட்டியது. அவனுடைய அடித் தொண்டையிலே பிறந்து தவழ்ந்த பாடல் படிப்படியாக உயர்ந்து ஒலித்தது.

ஆலாம் விழுது போலே
அந்தப் புள்ளே தலைமயிரு
தூக்கி முடிஞ்சிட்டாலோ
தூக்கணாங் கூடு போலே

உடனே அடுத்த வண்டியிலிருந்து அதற்கு முத்துச்சாமியினுடைய எதிர்ப் பாடல் கிளம்பிவிட்டது.

ஏணி மேலே ஏணிவெச்சு அவள்
இளங் கூந்தல் ஆத்தயிலே
ஏணிக்கும் கீழாலே நீ
ஏங்கி இருந்தாயல்லோ

அந்தச் சூழ்நிலையிலே, வண்டிக்காரர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுத்துப் பொங்குவதில் வியப்பில்லை.

வண்டிகள் நகர்ந்து கொண்டிருந்தன. கொஞ்சம் வேகமாகக் காலை எடுத்து வைத்தால் அவற்றை நெருங்கி விடுவேன். ஆனால் வேண்டுமென்றே நடையைத் தளர்த்தினேன். வண்டிக்காரர்களுடன் பேச்சுக் கொடுத்து, அவர்கள் பாடலை இடைமறிக்க நான் விரும்பவில்லை. தெம்மாங்கு தொடர்ந்தது.

இசையிலே கட்டுண்டு நானும் மெதுவாக நடந்து கொண்டிருந்தேன்.

நான் படித்த கவிதைகள் நினைவுக்கு வந்தன. நான் கேட்டு அனுபவித்த இசை மரபுகள் ஞாபகத்தில் தோன்றின. நான் பார்த்த சினிமாப் படங்கள் நினைவுத் திரையிலே விரிந்தன. ஆனால் நாட்டுப் பாடல்களிலும், அவற்றின் இசையிலும் உள்ள எழிலும் சுவையும் ஈடற்றவை எனக் கண்டேன். ஏன்?

ஏனென்றால் நாட்டுப் பாடல்கள் மக்களின் சொந்தப் பாடல்கள்; மண்ணுடன் வளர்ந்து வளம் பெற்றவை. தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டுப் பூக்கள் அவை. செயற்கை அரண் இன்றிப் பெருகித் தழைத்தவை. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்தும் மக்களின் உள்ளக் கிளர்ச்சியை அப்படியே வெளியிடுபவை. நாட்டுப் பாடல்கள் என்னும் பூஞ்சோலையில் இன்ப ஊற்று ஓடும்; காதற்குயில் பாடும்; கவிதை மயில் ஆடும்; கனவு மலர் விரிந்து மகரந்தம் சிந்தி மணம் வீசும். பக்தித் தேன் பாயும். நாட்டுப் பாடல்கள் துன்பப் பாலையையும் நமக்குக் காட்டாமல் இல்லை. பழைய பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறையையும் கூட நாம் நாட்டுப் பாடல்கள் என்னும் பலகணியினூடே காணலாம்.

இப்படி எண்ணச் சுழலில் ஈடுபட்ட என் உணர்வைத் தூண்டி விட்டுச் சென்ற பொன்மலையின் தெம்மாங்கு மீண்டும் என்னை வந்து கவர்ந்தது.

கூடுமோ கூடுமோ நாம்
கூண்டு வண்டிக் காளைபோலே
ஆகாத காலம் வந்து நாம்
ஆளுக் கொரு திசையானோம்.

மானத்திலே மீனிருக்க
மதுரையிலே நீயிருக்க
சேலத்திலே நான் இருக்க
சேருவதும் எக்காலமோ ?

முத்துச்சாமியும் பாடினான்:

மலையோரம் மாமரமாம்
மாமா மாரு குத்தகையாம்
காய்க்குதில்லே பூக்குதில்லே
கண்மயிலே உன் மயக்கம்

ஆத்தோரம் கொடிக் காலாம்
அரும்பரும்பா வெத்திலையாம்
போட்டால் சிவக்குதில்லே
பொன்மயிலே உன் மயக்கம்.

என்னுடைய மனம் பெரியதோர் ஆராய்ச்சியிலே இறங்கி விட்டது.

ஒரு பெண்ணின் கூந்தல் செழுமையை அவர்கள் வர்ணித்தார்கள் அல்லவா? கூந்தலுக்கு உவமை தேடி அவர்கள் அலைந்தார்களா? எங்கள் ஊருக்குக் காவல் தெய்வமாக வீற்றிருப்பவள் பத்திரகாளி அம்மன். அவள் கோவிலுக்கு நிழல் தருவது ஒரு பெரிய ஆலமரம். பல்லாண்டு பல்லாண்டுகளாக விழுது விட்டுப் படர்ந்து வளர்ந்த மரம். அதில் ஆயிரக்கணக்கான பறவைகள் வாழ்கின்றன. கூடு கட்டிக் குஞ்சு பொரித்து இல்லம் நடத்துகின்றன. தூக்கணாங் குருவியின் கூடுகள் கிளைகள்தோறும் ஊசலாடிக் கொண்டிருக்கும். பார்த்துப் பழகிய இந்தக் காட்சிகளைப் பாடலிலே வடித்தார்கள் வண்டிக்காரர்கள். கவிஞர்கள் கண்டறியாத அற்புதமான ஒரு உவமை நயம் அமைந்து விடுகிறது.

ஆலாம் விழுது போல
அந்தப் புள்ளே தலைமயிரு
தூக்கி முடிஞ்சிட்டாலோ
தூக்கணாங் கூடு போலே

ஆலம் விழுது போல வளர்ந்து நீண்ட கூந்தலை ஆற்றுவதற்கு, பாவம், அந்தப் பெண் என்ன செய்வாள்! ஏணி மேலே ஏணி வைத்து ஏறித்தானே நிற்க வேண்டும்! இவ்விதம் ஒரு அழகிய பெண்ணைக் காதலன் கைப் பிடிக்கிறான். தனித் தனியே இயங்கிக்கொண்டிருந்த அவர்கள் வாழ்க்கை இணைகிறது. எப்படி? ஓட்டிச் செல்லும் வண்டியையே உவமை காட்டி விடுகிறான் அவன். கூண்டு வண்டிக்காளைகளைப்போல் அவர்கள் மனமொத்து இல்லறம் நடத்தினதைக் கண்டு ஊரார் வியக்கிறார்கள். ஆனால் யார் செய்த வஞ்சகமோ, ஆகாத காலம் வந்து அவர்கள் ஆளுக்கொரு திசையாகி விடுகிறார்கள். அவள் வானத்திலே இருக்கும் மீனைப்போல எட்டாத பொருள் ஆகி விடுகிறாள். அவன் வாடுகிறான். மயக்கம் அடைகிறான். வாழ்க்கையில் எதுவும் அவனுக்குச் சுவைப்பதில்லை. அவன் நீர் பாய்ச்சும் மாமரம் காய்ப்பதில்லை. ஆற்றுக் கொடிக்காலில் வளர்ந்த அருமையான அரும்பு வெற்றிலையும் அவனுக்கு இனிப்பதில்லை.

திருமணத்துக்கு முன் அவனும் அந்தக் கட்டழகியும் பலமுறை பல்வேறு இடங்களில் சந்திக்கிறார்கள். ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவர்களல்லவா? ஆனால் எல்லோரும் அறிய நின்று பேச முடியுமா? தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல முடியுமா? பூவை வட்டமிடும் வண்டு போல, அவள் இருக்குமிடமெல்லாம் அவன் சுற்றித் திரிவான். சோளம் விதைக்கையில், பருத்தி எடுக்கையில், நிலக்கடலை விடுவிக்கையில் அவன் பொளிமேல் நின்று கண் சிமிட்டிச் செல்வான். மாட்டுக் கூட்டத்திடையில் நின்றுகொண்டு சாடை காட்டி ஆயர் குழல் எடுத்து ஊதுவான்.





" அத்துவானக் காட்டுக்குள்ளே
ஆயர்குழல் ஊதையிலே
சாடை சொல்லி ஊதினாலும்
சாடையிலே நான் வருவேன்."

என்று அவள் சொன்னது உண்மைதான்: ஆனால் தன் தோழிகளை விட்டுத் தனியே போக முடியாது. போனாலும் அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அன்றொருநாள் அவள் பருத்திக் காட்டிலே வேலை செய்து கொண்டிருந்தாள். பம்பல் முடிந்து விட்டது. விட்டுப் போன பருத்திச் சுளைகளைத்தான் அவள் பொறுக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் வேலை மேல் மனம் போகிறதா? வேலியோரம் பார்க்கிறாள். ஆற்றங்கரையைப் பார்க்கிறாள். வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறாள். அவனைக் காணத் துடிக்கிறாள்.

பருத்தி எடுக்கையிலே
பலநாளும் வந்த மச்சான்
ஒருத்தி எடுக்கையிலே
ஓடிவந்தால் ஆகாதோ?

என்று ஏங்குகிறாள். அவன் வருகிறான். அந்த இடத்துக்கு அல்ல. எதிர்பாராத வேளையில் எதிர்பாராத இடத்தில் அவன் முகம் தோன்றுகிறது. ஊரிலே அவள் வீடு ஒரு ஒதுக்கிய இடத்தில் இருக்கிறது. நல்ல கட்டுக் காவல் உண்டு. வெளி மதில் உயர்ந்து நிற்கும். மதிலுக்கு எதிர்ப்புறம் சமையல் அறை. அவள் மஞ்சள் அரைத்துக்கொண்டிருக்கிறாள். சட்டென்று அவள் கை நின்று விடுகிறது. குழவிக்கல் நகருவதில்லை. அவள் முகத்திலே வியப்புக்குறி படருகிறது. அதிலே நிலவும் கலந்திருக்கிறது. ஆனால் கண நேரத்திலே இந்த உணர்ச்சி மறைந்து, இன்ப மயக்கம் அவளை ஆட்கொண்டு விடுகிறது. யாராவது சொக்குப் பொடி தூவி விட்டார்களா, என்ன? ஆமாம்.

" மஞ்சள் அரைக்கையிலே
மதிலேறிப் பார்த்த மச்சான்
என்ன பொடி தூவினீங்க
இழுத்தரைக்கக் கூடலையே "

என்று அவள் சொல்வதிலேதான் எத்தனை ஆனந்தம் தொனிக்கிறது! அவன் மறு விநாடி அங்கிருந்து மறையவேண்டியவன். யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது! ஊரார் அவனைத் தூற்ற ஆரம்பித்து விடுவார்களல்லவா? ஆயினும் அந்த ஒரு கணத்திலே அவள் அவனுக்கு ஆறுதல் சொல்ல விரும்புகிறாள். தன் மன உறுதியை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறாள். அது பேசாத பேச்சாகத்தான் அவளிடமிருந்து வெளிப்படுகிறது.

காமையிலே உன்னைக்
கைவிடலே என்னு சொல்லி
மீனாட்சி கோயிலிலே
வேட்டிப் போட்டுத்தாண்ட
ரேண்டி

உம் மனசும் எம்மனசும்
ஒருமனசா இருந்ததுன்னு
சிக்கந்தர் மலையைக்கூடச்
செந்தூக்காத் தூக்கிடலாம்.

இரு மனமும் ஒன்றுசேர்ந்து விட்ட உறுதியல்லவா அவனுக்கு இந்தத் தைரியத்தைக் கொடுக்கிறது?

மதிலேறிப்பார்த்து மங்கையை மயக்கவும் துணிந்து விடுகிறான். ஆனால் எத்தனை நாளுக்கு இந்த ஒளி மறைவு? சிந்தித்துப் பார்க்கிறான். அவனுக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. அவளை நெருங்குவதற்கு வழி கண்டுபிடித்து விடுகிறான்.

ஊரார் உறங்கையிலே
உற்றாரும் தூங்கையிலே
நல்ல பாம்பு வேடம் கொண்டு
நான் வருவேன் சாமத்திலே.

ஆனால் அவள் இணங்க வேண்டுமே! மனத்திலே ஆசையிருக்கிறது. இருப்பினும் எளிதில் விட்டுக் கொடுக்கலாமா! அவள் குறும்புக்காரி; தெம்மாங்குக்கு எதிர்த் தெம்மாங்கு பாடுகிறாள்:

நல்ல பாம்பு வேடம் கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்
ஊர்க் குருவி வேடம் கொண்டு
உயரப் பறந்திடுவேன்.

கட்டுக்காவலை யெல்லாம் கடந்து கனவிலே காதற் பறவையாகத் திரிய ஆசைப்படுகிறது, அவள் நெஞ்சம். தர்க்கம் தொடருகிறது. ஊர்க் குருவியைப் பிடிப்பதற்கு அவனுக்கு உபாயம் ஒன்று தோன்றுகிறது.

ஊர்க்குருவி வேடம் கொண்டு
உயரப் பறந்தாயானால்
செம்பருந்து வேடம் கொண்டு
செந்தூக்காத் தூக்கிடுவேன்.

சிக்கந்தர் மலையைக் கூடச் செந்தூக்காய் தூக்க வல்லவனுக்கு ஒரு சிறு குருவி எம்மாத்திரம்? இந்தக் காதலர்கள்தாம் எவ்வளவு விரைவில் உருமாறி உல்லாசம் ஆடுகிறார்கள்? பாட்டு வளருகிறது:

அவள்:

செம்பருந்து வேடம் கொண்டு
செந்தூக்காத் தூக்க வந்தால்
பூமியைக் கீறியல்லோ
புல்லாய் முளைத்திடுவேன்.

அவன்:

பூமியைக் கீறியல்லோ
புல்லாய் முளைத்தாயானால்
காராம்பசு வேடம் கொண்டு
கடித்திடுவேன் அந்தப்புல்லை.

பெண் மனம் இளகுகிறது. குறும்பு காதற்கனிவாக மலருகிறது. பாம்பாய், பருந்தாய், பசுவாய்த் தன் அன்பன் அலைந்தது போதும் என்று நினைக்கிறாள். இனிமேலும் அவள் தப்பி ஓட விரும்பவில்லை. அவனுடன் ஒட்டிக் கொள்ளுவதற்கு விழைகிறாள்:

காராம்பசு நீ ஆனால்
கழுத்துமணி நான் ஆவேன்.

ஆஹா, என்ன அதிசயமான கற்பனை! அவள் வாழ்விலே என்றும் இன்ப நாதம் அல்லவா இசைக்கப் போகிறாள் அவள்? அதுமட்டுந்தானா?

ஆலா மரத்தடியே
அரளிச் செடியாவேன்.

ஆமாம். நல்ல வெய்யிலில் ஆலமர நிழலில் இருந்து கொண்டு, அலர்ந்த கொத்து அரளிப்பூவின்செந்நிறத்தையும், நறுமணத்தையும் அநுபவித்தவர்களுக்குத்தான் அந்த அருமை தெரியும். காதலன் மனத்தை மயக்க வைக்கும் மதுத்துளிராக வளர்ந்து விடுகிறாள் அவள். அந்த இன்ப மயக்கத்தில் அவன் உறங்கியும் விடுகிறான்.

ஆலாமரம் உறங்க
அடிமரத்தில் வண்டுறங்க
உன் மடியில் நான் உறங்க
என்னவரம் பெற்றேனடி!

அவன் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கிறான். உணர்ச்சியோடு பாடுகிறான்:

அத்திமரமும் ஆவேன்
அத்தனையும் பிஞ்சமாவேன்
நத்தி வரும் மச்சானுக்கு
முத்துச்சரம் நான் ஆவேன்.

* * *

ஏனது கனவு திடீரென்று கலைந்தது. என் கற்பனைக் கதைத் தொடரும் அறுந்தது; வண்டிக்காரப் பொன்மலையும், முத்துச்சாமியும் ஏனோ தங்கள் பாட்டைச் சட்டென்று நிறுத்திக் கொண்டார்கள். சக்கரங்களும் நின்று கொண்டு விட்டன. எதிரே ஒரு பெரியவர் வந்தார்; பொன்மலையின் தந்தை வழக்கம்போல் இரவு காவலுக்குப் பட்டிக்குப் போய்க் கொண்டிருந்தார். வயது சென்ற தன் தந்தையைக் கண்ட மகன் மரியாதையுடன் வண்டியிலிருந்து இறங்கினான். இன்னும் பழைய பண்பு நாட்டுப்புறங்களிலிருந்து மறையவில்லை யென்பதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தேன்.

பெரியவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். மகனைத் திரும்பிப் பார்த்தார். "ஏண்டா, பொன்மலை! அண்ணனை நடத்தியா கூட்டிக்கிட்டு வந்தே?" என்று கேட்டார். அப்போது தான் என்னைப் பார்த்துப் பொன்மலை திடுக்கிட்டுப் போனான்.

"ஏன், அண்ணே, வண்டியிலே ஏறியிருக்கக் கூடாது?" என்று என்னையே மடக்கினான் உரிமையுடன். பெரியவர் மகனை நோக்கி, "ஆமாம், பாட்டுப் பராக்கிலே உனக்கு எதுதான் தெரியப் போகுது" என்றார்.

எனக்கும்கூட அப்படித்தான். பெரியவர் போனவுடன், "பொன்மலை! நாலு மைல் போனதே தெரியவில்லை" என்றேன். "நாலு மைல் என்னங்க அண்ணே! நானூறு மைலுக்கு வேணு மானாலும் என்னிடம் தெம்மாங்கு இருக்குது" என்று அவன் பெருமை பேசினான்.

ஆமாம், இந்த எளிய மக்களின் பெருமை இதிலேதான் இருக்கிறது. நாட்டுப் பாடல்கள் என்னும் நவமணிக் குவியலைத் தலைமுறை தலைமுறையாகப் போற்றிக் காப்பாற்றி வருபவர்கள் அவர்களேயல்லவா?


கிராமியக் காட்சிகள்
ஆலாம் விழுதுபோலே அந்தப்புள்ளே தலைமயிரு
தூக்கி முடிஞ்சிட்டாலோ தூக்கணாங் கூடுபோலே


ஆலமரம் உறங்க
அடிமரத்தில் வண்டுறங்க
உன்மடியில் நான்உறங்க
என்னவரம் பெற்றேனடி


மஞ்சள் அரைக்கையிலே
மதிலேறிப் பார்த்தமச்சான்
என்னபொடி தூவுனீங்க
இழுத்தரைக்கக் கூடலையே


அத்துவானக்
காட்டுக்குள்ளே
ஆயர்குழல்
ஜாடையிலே
சாடைசொல்லி
ஜதிருதும்
சாடையிலோன்
வருவேன்.


இத் தீபாவளி நன்னுள்
நாடுபூராவிலுமுள்ள எமது ஆதரவாளர்கள், ஏஜண்டுகள், பிரதிநிதிகள் அனைவருக்கும், மகிழ்ச்சியையும் சுபிட்சத்தையும் அளிக்கட்டும்
கேசவர்த்தினி
எங்கள் இதர தயாரிப்புகள்:
கேசவர்த்தினி ஷாம்பு
அஞ்சன் கண் மை
கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்... கோயமுத்தூர்....
GP

திரிலோக சுந்தரி

ஆனந்தி



நாகைப்பட்டினக் கடற்கரையின் வெண்மணற் பரப்பிலே இரு காதலர்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். நீலத் திரைக்கடல் பெரும் கொந்தளிப்புடன் அலைகளை வீசுவதைப் போல, அந்தக் காதலர்களின் உள்ளத்திலும் பெரும் கொந்தளிப்பு அலை மோதின. பூரண நிலவின் தண்மை மிக்க கிரணங்களும் அவர்களுக்கு அனல் கக்கும் சூரிய தழலின் கதிர்களாகத் தோன்றின.

"தேவி! உன் கண்களில் ஏன் நீர் தளிர்த்து நிற்கிறது? உன் மனம் நோகும் படி நான் ஏதும் கூறவில்லையே?" என்றான் சாமந்தாபரணன்.

"நீங்கள் பரமன் மழபாடியாரிடத்தில் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறீர்களே? அவர் உங்களுடைய மரியாதைக்கு உண்மையில் தகுந்தவரா? மிகவும் கொடிய மனம் உள்ளவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே!" என்று கோபத்துடனும் துயரத்துடனும் கூறினாள் திரிலோகசுந்தரி.

வெண்ணிலவின் தண்ணொளி பட்டு அலைகடல் உருக்கிய வெள்ளி போலக் காட்சியளித்தது. பொங்கிப் பொங்கி எழுந்த அலைகளோ கோடிக்கணக்கான நன் முத்துக்களை வாரி இறைத்துக்கொண்டு இந்திரஜால வித்தை செய்துகொண்டிருந்தது.

திரிலோகசுந்தரியும் சாமந்தாபரணனும் கடற்கரையோரமாக உள்ள மணற் பரப்பில் மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

சாமந்தாபரணன் நின்றான். திரிலோகசுந்தரியின் திவ்ய சௌந்தர்யம் பொருந்திய முகத்தைத் தன் கரத்தால் நிமிர்த்தி அவளுடைய விசாலமான கண்களைப் பார்த்தான். கண்ணீர் முத்துப் பிரகாசிக்கும் நயனங்களின் இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள் சுந்தரி. அப்போது பளபளவென்று மின்னிய கண்ணீர்த் துளிகள் அவளுடைய கன்னங்களில் உருண்டு ஓடிக் கீழே சிதறின.

பிறகு, "அன்பே! வீணுக்கு கலங்காதே. நாளை அவரையே நேரில் சென்று பார்த்து விஷயத்தைக் கேட்டுவிடுவோம். சரிதானே?" என்று சமாதானப்படுத்தினான் அவ்வீரன்.

*** *** ***

நாகைப்பட்டினம் துறைமுகம் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. எங்கும் தோரணங்கள் கட்டித் தொங்கின. கடல் கடந்து ஸ்ரீ விஜய நாட்டில் குடியேறியுள்ள தமிழர்களின் அல்லல்களைத் தீர்ப்பதற்காக, மும்முடிச் சோழரும், கங்கை கொண்டாரும், ஈழம் கொண்டாருமான கோப்பரகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் பெருங் கப்பல் படை திரட்டியிருந்தார். அப்படை இன்னும் இரண்டு நாட்களில் திக் விஜயத்துக்குப் புறப்படுவதாக இருந்தது. அந்த வீரக் கலப்படைக்குத் தலைமை தாங்கும் பேறு தஞ்சாவூர்க் கூற்றத்து, காருகுடி யுடையான் பரமன் மழபாடியாரான மும்முடிச் சோழருக்குக் கிடைத்திருந்தது.


துறைமுகத்தில் நெடுந்தூரம் வரிசையாக நின்ற கப்பல்களும், அவற்றில் விரித்திருந்த புலிக்கொடியுடைய பாய்மரச் சீலைகளும் கூடத் துறைமுகத்தை அலங்கரிப்பதற்காகவே நிறுத்தப்பட்ட மாதிரி இருந்தன.

துறைமுகம் முழுவதும் கூட்டம் கூட்டமாக வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய கரங்களில் பளபள வென்று வேல்கள் மின்னின. தலைமைக் கலத்தில் சாமான்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் நின்று இந்தக் காட்சியைப் பார்ப்பவருக்கு எறும்புப் புற்றின் ஞாபகம் தான் வரும். ஏராளமான வீரர்கள் சாரி சாரியாக அங்குமிங்கும் சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தது. துறைமுகத்துக்கே ஒரு அலாதியான ஜீவ களையைக் கொடுத்தது.

இந்த வீரர் பெருங் கூட்டத்தின் நடுவில் சாமந்தாபரணனும், திரிலோக சுந்தரியும் வந்து கொண்டிருந்தார்கள்.

சிறிது தூரம் இருவரும் போவதற்குள் பின்பக்கத்திலிருந்து பெரிய வீரர்கூட்டம் வருவதைக் கண்டு நின்றார்கள். வீரர் கூட்டத்துக்குப் பின் சில குதிரைகள் வந்தன. "வெற்றி வேல்! வீரவேல்" என்ற முழக்கம் வானளாவிப் பரவியது. அந்த முழக்கத்தில் சாமந்தாபரணனும் முழு உற்சாகத்துடன் கலந்து கொண்டான். திரிலோக சுந்தரிக்குக்கூட அதைக் கேட்டு மெய்சிலிர்ப்பு உண்டாயிற்று.

முன்னால் வந்த குதிரை வீரர்கள் இவர்களைத் தாண்டிச் சென்றதும் வாத்தியங்களைக் கோஷித்துக் கொண்டு சிலர் வந்தார்கள். வாத்திய முழக்கத்தை முழுக அடித்துக் கொண்டு, "கங்கைகொண்டார் வாழ்க!" "மும்முடிச் சோழர் வாழ்க!" "கோப்பரகேசரி ராஜேந்திர சோழ



தேவர் வாழ்க!" என்று ஆயிரமாயிரம் குரல்கள் வாழ்த்தின. சில விநாடிகளில் உயர்ந்த ஜாதி வெண்புரவி மீது சோழ மன்னர்குல திலகமான ராஜேந்திர சோழர் வந்ததை இருவரும் பார்த்தார்கள். அவருடைய முக காந்தியும், தோற்றமும் உலகாள்வதற்காகவே பிறந்த வீராதி வீரர் இவர் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்படச் செய்தன. அவருடைய சுந்தரமான தோற்றமோ, "இறைவன் நெற்றிக் கண் காணாத காமவேள்" என்று நாடு நகரத்திலுள்ள மக்களெல்லாம் புகழ்வது மிகையல்ல என்று பறைசாற்றியது.

"கடற்படையைப் பார்வையிட மும்முடிச் சோழர் செல்கிறார். பரமன் மழபாடியாரை இப்போது பார்க்க முடியாது" என்று சாமந்தாபரணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அரசரின் குதிரை அவர்களைத் தாண்டி மேலே போய்விட்டது.

"இளவரசர் ராஜாதி ராஜர் இவர்களில் யார்?" என்று திரிலோக சுந்தரி ஆவலுடன் கேட்டாள்.

"அவரை இந்தக் கூட்டத்தில் காண வில்லை. இன்றிரவு நாம் மாதண்ட நாயகரைப் பார்க்கலாம்" என்றான் சாமந்தாபரணன்.

"எனக்கு மாதண்ட நாயகரைப் பார்க்க வேண்டுமென்று ஆசையில்லை" என்றாள் திரிலோகசுந்தரி.

"அப்படிச் சொல்லாதே. பரமன் மழபாடியாருக்கு என்மீது மிகுந்த வாஞ்சை உண்டு. என்னையும், என் காதலியையும் பார்க்க அவர் நிச்சயம் விரும்புவார்" என்றான் சாமந்தா பரணன்.


காதலி என்று அவன் குறிப்பிட்டதனால் வெட்கமடைந்த திரிலோகசுந்தரியின் முகம் செந்தாமரைப் பூவைப் போல அழகாகச் சிவந்தது.

அன்றிரவு மறுபடியும் அவர்கள் இருவரும் மாதண்ட நாயகரைக் காணச் சென்றார்கள். பரமன் மழபாடியார் அன்று நாகைப்பட்டினத்தின் மாளிகை ஒன்றில் தங்கியிருந்தார்.

மாளிகையின் நடுக் கூடம் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த மரத் தூண்களால் சுமக்கப்பட்டு நின்றது. கீழே உயர்ந்த ரத்தினக் கம்பளம் ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. நான்கு பக்கங்களிலும் அதிக உயரமில்லாத மர ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. உயரமான வெண்கலக் குத்துவிளக்கு ஒரு பக்கம் சுடர் விட்டு எரிந்தது.

இவர்கள் உள்ளே சென்ற ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஒரு பெரியவர் கூடத்தின் மறு பக்கத்திலிருந்து வந்தார். சாமந்தாபரணனைக் கண்டதும் அவர் முக மலர்ச்சியுடன் அருகில் வந்து அவனுடைய கைகளைப் பிடித்து ஆசனத்தில் அமரச் செய்தார்.

ஒரு சாதாரணப் போர் வீரனிடம் மாதண்ட நாயகர் காட்டும் பேரன்பு அவரிடம் கோபம் கொண்டிருந்த திரிலோக சுந்தரியின் மனத்தைக் கூட இளகச் செய்துவிட்டது.



சாமந்தாபரணன் அடக்கத்துடன் அவரைப் பார்த்து, "நீங்கள் என் தந்தைக்குச் சமமானவர். ஆதலால் இந்தப் பெண்ணை மணப்பதற்குத் தங்களுடைய ஆசியை நாடி வந்தேன். எங்களுக்கு நீங்கள் ஆசி கூற வேண்டும்" என்றான்.

"என்னுடைய பரிபூரண ஆசி உங்களுக்கு என்றும் உண்டு. இறைவன் திருவருளால் நீங்கள் என்றும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ வேண்டும்" என்று கூறி விட்டு, "உன் பெயர் என்ன அம்மா?" என்று அவளைக் கேட்டார் பரமன் மழபாடியார்.

"திரிலோகசுந்தரி!" என்று அடக்கமாகப் பதில் வந்தது.

"பொருத்தமான பெயர்தான்" என்றார் மழபாடியார். அதைக் கேட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள் சுந்தரி.

ஸ்ரீ விஜயப் படையெடுப்பைக் குறித்துச் சிறிது நேரம் இருவரும் பேசினார்கள்.

பிறகு மழபாடியாரைப் பார்த்துச் சாமந்தாபரணன், "தங்களை நான் பார்க்க வந்தது ஆசி பெறவேயானாலும், உங்களிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்டுத் தெளிவு பெற வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. அதை இப்போது கேட்கலாமா?" என்றான்.

"கேட்க வேண்டியதைக் கேட்டு விடு. யுத்தத்துக்குப் போகும்போது மனத்தில் உள்ள சந்தேகங்களையெல்லாம் தீர்த்துக் கொண்டு விட வேண்டும்" என்றார் சேனாதிபதி பரமன் மழபாடியார்.

"மேற்குக் கடலிலுள்ள சாந்திமத் தீவின் மீது அரசர் பெருமான் படையெடுத்துச் சென்றபோது நீங்களும் போயிருந்தீர்கள் அல்லவா? அப்போது நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிக் கேட்க வேண்டும். திரிலோக சுந்தரியின் அண்ணன் அந்தப் போரில் வீர சுவர்க்கம் எய்தினான். அதைப் பற்றிப் பலவிதமான வதந்திகள் நாட்டில் உலவுகின்றன. நீங்கள் ஒருவர்தான் உண்மையைச் சொல்ல முடியும். அண்ணனின் பிரிவால் நொந்திருக்கும் திரிலோகசுந்தரியின் மனமும் சாந்தி பெறும்" என்றான் சாமந்தாபரணன்.

சேனாதிபதியாரின் முகத்தில் மாறுதல் உண்டாயிற்று. திரிலோக சுந்தரியின் முகத்தை அவர் உற்றுப் பார்த்தார். பிறகு தழுதழுக்கும் குரலில், "உன்னுடைய அண்ணன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"நீல கங்கரையன்!" என்று கூறினாள் திரிலோக சுந்தரி.

அந்தப் பெயரைக் கேட்டதும் மாதண்ட நாயகரின் முகத்தில் சோகம் ததும்பியது. கண்களில் நீர் துளித்தது. எத்தனையோ போர்க்களங்களில் யுத்தம் செய்ததனால் வைரமேறியும், வாளைப் பிடித்துப் பிடித்துத் தழும்பேறியும் போயிருந்த அவரது கரங்கள் நடுங்கின.

"தங்களுக்கு அந்தச் சம்பவம் மனத் துயரை அளிப்பது போலத் தோன்றுகிறது. என்னை மன்னித்து விடுங்கள். தங்களுக்கு விருப்பமில்லையானால் அதைப் பற்றிச்

சொல்ல வேண்டாம்'' என்று சொன்னான் சாமந்தாபரணன்.

ஒரு நிமிஷம் சேனாதிபதியார் பேசாமல் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தார். அவர் தலை நிமிர்ந்தபோது மறுபடியும் அவருடைய கண்களில் பழைய உறுதி குடிகொண்டிருந்தது. பதற்றம் அடங்கிப் போய் விட்டது. அவர் உணர்ச்சிகளையெல்லாம் வென்ற வீரர் என்று சாமந்தாபரணன் எண்ணினான்.

மழபாடியார் திரிலோக சுந்தரியைப் பார்த்து வாஞ்சை ததும்பும் குரலில், ''குழந்தாய்! உன் அண்ணனின் வீர மரணத்தைப் பற்றி நீ என்ன வதந்தியை அம்மா கேள்விப்பட்டாய்? உனக்குத் துயரம் தரும் செய்தி யாது?'' என்றார்.

அவர் எதிர்பாராதவிதமாக மிகவும் கருணையுடன், ''குழந்தாய்!'' என்று அழைத்துப் பேசியதால் குழப்பமடைந்தாள் திரிலோக சுந்தரி. அந்த வதந்தியைப் பற்றிச் சொல்லவே அவளுக்குத் தயக்கமாக இருந்தது. தயக்கத்துடனேயே, ''சுவாமி! உண்மை எது என்பதை நான் அறியேன். ஆனால் என் அண்ணன் தர்ம யுத்தத்தில் இறக்கவில்லை என்றும், நீங்கள் அவனை வஞ்சகமாக எதிர்க் கூட்டத்தின் அருகில் அனுப்பியதாகவும், அவனைக் காப்பாற்ற எந்த முயற்சியும் நீங்கள் செய்யாமல் திரும்பி வந்து விட்டதாகவும் கூறுகிறார்கள். சிலர் நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளவே அவ்வாறு செய்ததாகக் கூறுகிறார்கள். சிலர் வேண்டுமென்றே நீங்கள் அவ்வாறு செய்ததாகச் சொல்கிறார்கள். இதனால்தான் என் மனம் குழம்பி விடுகிறது. இந்த உலகத்தில் எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ளக் கூடியவன் அவன் ஒருவன்தான் இருந்தான். அவனும் இறந்தபிறகு நான்கு வருஷங்களாக நான் அநாதையாக நிற்கிறேன்!'' என்றாள் திரிலோக சுந்தரி. அவளுடைய கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் உதிர்ந்தது.

''உன் துயரம் எனக்கு மிகவும் வேதனை பயக்கிறது, குழந்தாய்! நீ எண்ணுவது போல அவனை நான் வேண்டுமென்று பலி கொடுக்கவில்லை. என்னைப் பற்றி அவதூறு சொல்வது ஒரு புறமிருக்க, சுத்த வீரனான நீலகங்கரையனின் மகத்தான தியாகத்தை உணராமல் அவனுடைய வீரத்துக்கே களங்கம் உண்டாக்கி விட்டார்களே என்று தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.''

''சுவாமி! அதைக் குறித்துத் தாங்கள் வருந்த வேண்டாம். இனிமேல் நான் அந்த வதந்திகளை நம்பவில்லை. ஆனால் நீங்கள் என் அண்ணனின் வீரத்தையும், தியாகத்தையும் பற்றிக் கூறினீர்கள். அவன் என்ன செய்தான் என்பதை நீங்கள் சொன்னால் நன்றியுடையவளாக இருப்பேன்'' என்றாள் திரிலோக சுந்தரி.

''அதற்கென்ன? தாராளமாய்ச் சொல்லுகிறேன், அம்மா! நீலகங்கரையனைப் பற்றிப் பேசுவதே எனக்குப் பெருமையாக இருக்கிறது. அவனை அண்ணனாக அடைந்ததற்கே நீ மகா பாக்கியம் செய்திருக்க வேண்டும்'' என்று கூறி விட்டுச் சாந்திமத் தீவில் நடந்த யுத்தத்தைப் பற்றிக் கூறத் தொடங்கினார் மாதண்ட நாயகர் பரமன் மழபாடியார்.



2

சேர நாட்டு அரசனான பரகராமன் அரக்கனைப் போலக் கொடூரத் தன்மை வாய்ந்தவனாக இருந்தான். அவன் தன்னிடம் அடங்கியிருந்த சிற்றரசர்களையெல்லாம் மிகவும் அல்லலபடுத்தி வந்தான். தவிர, சோழ சாம்ராஜ்யத்தில் அருள்மொழி வர்மரின் காலத்திலிருந்தே அடங்கியிருந்த பிரதேசங்களில் கலகங்களை உண்டாக்கி வந்தான். பரகராமனின் ஆணவத்தை அடக்குவது தம் கடமை என்று கருதிய ராஜேந்திர சோழதேவர் பெரும் படையுடன் மலைமலையைக் கடந்து சென்றார். அப்படிச் செல்லுமுன் ஈழ நாட்டைக் கைப்பற்றக் காரணமாக இருந்த பெருமை வாய்ந்த பெரும் கடற்படையை மேற்கு சமுத்திரத்தின் வழியாகச் சேர நாட்டுக் கரைக்கு வரும்படி பணித்து விட்டுச் சென்றார்.

ராஜேந்திர சோழரின் முன் யோசனையும், படைத்திறமும் அவருக்கு எப்போதும் வெற்றிகளை அளித்திருப்பது போலவே இச்சமயமும் அளித்தது. சேர நாட்டின் தோல்வியுற்ற பரகராமன் மேலைக் கடலிலுள்ள சாந்திமத் தீவுக்குக் கப்பலேறித் தப்பிவிடப் பார்த்தான்.

சாந்திமத் தீவின் அரண் மிகவும் பயங்கரமானது. ராஜேந்திர சோழ தேவர் தாமே தலைமை வகித்துப் போரை நடத்தியபடியால் போர்வீரர்கள் தளராமல் யுத்தம் செய்தார்கள். தங்களுடைய பேரரசரின் மதிநுட்பத்திலும், திண்மையிலும் அவர்கள் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. சாந்திமத் தீவின் அரண் தகர்ந்தது. சோழ நாட்டின் புலிக்கொடிகள் கம்பீரமாக இரு தீவுகளிலும், இன்னும் அருகருகே இருந்த பல தீவுகளிலும் வானளாவப் பறந்தன.

சேரநாட்டுக் குலதனமாகிய நவரத்தினங்கள் இழைத்த திருமுடி மிகவும் பத்திரமாக ஒரு சுரங்கத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. அதையும், செங்கதிர் மாலை என்று புகழ் பெற்ற ரத்தின ஆரத்தையும் கைப்பற்றினார் ராஜேந்திர சோழ வர்மர்.

வெற்றி முழக்கத்திலும், களிப்பிலும் எல்லாரும் ஈடுபட்டிருந்தபொழுது கப்பற் படையில் ஒரு பெரிய கலத்தைக் காணவில்லை என்ற செய்தி வந்து எல்லாரையும் கவலைக்குள்ளாக்கியது.

சக்கரவர்த்தியும், பரமன் மழபாடியாரும் அப்போது பேசிக் கொண்டிருந்தார்கள். ராஜேந்திர சோழதேவர் தம் தந்தையார் காலத்திலிருந்தே மகா வீரர் என்று பெயர் பெற்றிருக்க பரமன் மழபாடியாரிடத்தில் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார்.

தஞ்சையிலிருந்து கிருஷ்ணன் இராமனை மும்முடிச் சோழ பிரமராயர் அவசரமாக அனுப்பிய ஒரு சிறிய கலம் அப்போதுதான் வந்து சேர்ந்திருந்தது. மேலைச் சளுக்கிய மன்னன் சயசிங்கன் துங்கபத்திரை நதிக்கு வடக்கே இருந்த சோழ ராஜ்யத்துக்கு உட்பட்ட பகுதிகளையெல்லாம் திடீரென்று கைப்பற்றிக் கொண்டு விட்டதாகவும், அவன் மேலே படையெடுத்து வந்தால், தடுத்து நிறுத்துவதற்குப் போதிய படை பலம் இல்லை எனவும் செய்தி அனுப்பியிருந்தார்.

அரசர் இதனால் கவலையடைந்திருந்தாலும், பழந் தீவில் ஆட்சி ஏற்படுத்தாமல் போக அவருக்கு மனம் வரவில்லை. "என் தந்தை இந்த முந்நீர்ப் பழந் தீவு பன்னீராயிரத்தையும் போர் செய்து வென்றும் நிலையான ஆட்சி ஏற்படுத்தாமையால்தான் இந்தப் பரகராமன் இதைத் திரும்பக் கைப்பற்றினான். ஆகவே இங்கு நமது பிரதிநிதியை வைத்து ஒழுங்கான ஆட்சி நடக்கும்படி செய்ய வேண்டும்" என்று கூறினார் ராஜேந்திர சோழ தேவர்.

பரமன் மழபாடியார் அதற்குப் பதிலாக, "இங்கே விட்டுச் செல்லத் தகுந்த பிரதிநிதியாரும் இப்போது இல்லை. நாம் உடனே நாடு திரும்புவது அவசியம். ஒருவேளை சயசிங்கன் துங்கபத்திரையைத் தாண்டி வந்தால் நாட்டில் குழப்பம் விளையும். தாங்கள் அங்கே இருப்பது மிகவும் அவசியம். மேலும் தங்களுக்குக் கடல் கடந்து இருக்கும் நாடுகளிலெல்லாம் புலிக்கொடியைப் பறக்கவிட வேண்டும் என்னும் ஆசை இருப்பதால் கடற்படையைப் பிரிப்பதும் சரியல்ல. எல்லோரும் ஒன்றாகப் போய்விட்டுப் பிறகு அதைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் பெரிய கலம் ஒன்றைக் காணவில்லை என்றதும் எல்லாரும் கவலையடைந்தார்கள். அந்தக் கப்பலைத் தேடிக் கொண்டிருக்க நேரமில்லை. அரசர் உடனே திரும்புவது அத்தியாவசியமாக இருந்தது. ஆகவே ராஜேந்திர சோழர், "சேனாபதியாரே! அந்தக் கப்பலைத் தேடிக் கண்டு பிடித்துக் கிழக்குக் கடற்



கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை உம்மிடம் விட்டுச் செல்கிறேன். அனாவசியமாக ஒரு கப்பலையோ, அல்லது ஒரு உயிரையோ கூட இழக்க நான் சம்மதிக்க மாட்டேன். இருநூறு வீரர்களை இழப்பதென்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விஷயம். ஒருகால் கப்பலுக்குச் சேதம் ஏற்பட்டு அதைச் செலுத்திக் கொண்டு வர முடியாவிட்டாலும் அந்த இருநூறு வீரர்களையும் காப்பாற்றி அழைத்துவரும் பொறுப்பை உம்மிடம் ஒப்படைக்கிறேன். எதிரிகள் மறுபடியும் எங்கேயாவது தாக்கினாலும் குறைந்தபட்ச உயிர் சேதத்துடன் அவ் வீரர்களைக் காத்து அழைத்து வர வேண்டும். நம் முன்னால் இதைவிட, எத்தனையோ பெரிய விஷயங்கள் காத்துக் கிடக்கின்றன. ஒவ்வொரு வீரனுடைய உயிரையும் ஒரு பொக்கிஷமாக நினைத்து நீங்கள் காப்பாற்றி வரவேண்டும்" என்று கூறினார் பேரரசர்.

"பரமன் மழபாடியாரை இதற்கு இருக்கச் சொல்வானேன்? இதைக் கப்பல் தலைவன் ஒருவன் செய்துவிடமாட்டானா? இவருடைய உதவி நமக்குத் தேவையாக இருக்குமே?" என்று கேட்டார் விக்கிரம சோழியவரையர்.

"கப்பல்களில் இரண்டைக் குறைந்த வீரர்களுடன் விட்டுச் செல்வதே எனக்குச் சம்மதமாக இல்லை. அந்தக் கலத்திலுள்ள வீரர்களை அழைத்து வர வேண்டியிருந்தால் கப்பல்களில் இடம் வேண்டும். எனக்குக் கப்பல்கள் நிச்சயமாகத் திரும்பி வரும் என்ற தைரியம் வேண்டும். யுத்தத்தில் ஜயித்து விட்டதால் முழு அபாயமும் நீங்கிவிட்டதென்று சொல்ல முடியாது. வீரர்கள் குறைவாக இருக்கும் தனிக் கப்பல்களைக் கண்டால் எதிரிகள் என்ன செய்வார்களோ? சாந்திமத் தீவிலிருந்து ஓடியவர்கள் எங்கே ஒளிந்து கொண்டார்கள் என்பது நமக்குத் தெரியவில்லையே. பரமன் மழபாடியார் ஒருவரால் தான் சமயோசிதமாகக் காரியம் செய்து இந்த வீரர்களை மீட்டு வருவதற்கு முடியும்" என்றார் அரசர்.


அரசருடைய புகழ் மொழியாலும் வீரர்களுடைய நன்மையில் அவர் கொண்டிருந்த சிரத்தையாலும் மனம் களித்த பரமன் மழபாடியார், "என்னால் முடிந்த வரையில் உயிர்ச் சேதம் இல்லாமல் மூன்று கப்பல்களையும் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்கிறேன். நீங்கள் கிளம்புங்கள்" என்று கூறினார்.


"ஐம்பது வீரர்கள் கொண்ட இரு மரக்கலங்களை இங்கு விட்டு விட்டு நான் உடனே செல்கிறேன். நீங்கள் உசிதம் போல் நடவடிக்கை எடுத்துக் கொண்டு அவர்களைக் காப்பாற்றி அழைத்து வர வேண்டும். அப்படி அவர்களைக் காக்க முடியாவிட்டாலும் கலங்களுக்குப் பழுது நேராமலிருப்பது முக்கியம்" என்று கூறி விட்டுக் கிளம்பினார் ராசேந்திர சோழ தேவர்.

பிறகு அவரவர்கள் படகுகளில் தங்கள் தங்களுடைய கப்பலுக்குச் சென்றார்கள். சக்கரவர்த்திப் பெருமானின் இராஜ ஹம்ஸம் உடனே தெற்குத் திசை நோக்கிக் கிளம்பியது. தண்ணீரில் கம்பீரமாக நீந்தும் ஹம்ஸப்பட்சியைச் சுற்றி அதன் குஞ்சுகள் செல்வது போல மற்றக் கப்பல்கள் அதைத்தொடர்ந்துசென்றன. இரவில் அந்தக் கப்பல்கள் நகர்ந்து சென்ற காட்சியானது ஒரு சிறிய நகரமே அந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து செல்வது போல் தோன்றியது.

3

பொழுது புலரத் தொடங்கும் நேரத்தில் மழபாடியார் இருந்த கப்பல் உடைந்து போன கப்பலின் அருகில் வந்து சேர்ந்தது. உடைந்த கப்பலின் பாய் மரமும் அதன்மீது விரித்த பாய்களும் அப்படியே இருந்தன. ஆனால் கப்பலின் மேல் தளத்தில் நீர் நிறைந்து அலை மோதிக் கொண்டிருந்தது. அதைப்


Allure...
AMBICA
SAREES
PRINTS
VOILES & LAWN
'SANFORIZED'
Registered Trade Mark
of Cluett, Peabody & Co. Inc. U.S.A.
PRINTS
POPLINS & SHIRTINGS
2×2 POPLINS & LENO, ETC.
SHRI AMBICA MILLS LTD.
AHMEDABAD


WATER
for
home use –
day
and
night
Enjoy the boon of water 'on tap' day and night—install that modern necessity a Myers Automatic Electric Pump. No overhead tank. No switching on and off. Quite inexpensive. Dependable after-sale service.
Solve your Water Problem — use a
Myers
Deep-Well Automatic Electric Pump
WATER SUPPLY SPECIALISTS PRIVATE LTD.,
45, Thambu Chetty Street, Madras-1

பார்த்தவுடனேயே கலகத்தை மீட்க முடியாதென்று தெரிந்து விட்டது. அத்துடன் இன்னொன்றும் விளங்கியது. தீவின் ஓரமாக வெகு தூரத்துக்கு ஆழம் கிடையாது என்பதும் கப்பல்கள் சுமார் நூறு கஜ தூரத்துக் கப்பாலேயே தான் நிற்க வேண்டும் என்பதும் தெரிந்தன. கரையில் ஒதுங்கி யிருப்பவர்கள் தப்பவேண்டுமானால் படகில் யாரேனும் சென்றுதான் அழைத்து வரவேண்டும். படகில் அவர்கள் வந்தால் கரையிலிருந்து அம்பெய்வது எவ்வளவு சுலபம்? கரையில் காடு இருந்தது. மரங்களின் பின்னால் ஒளிந்து கொள்ளலாம். படகில் எவ்வாறு ஒளிய முடியும்?"

கப்பலை விட்டு இறங்கிக் கரைக்குச் சென்று போர் புரியலாம் என்றாலோ, எதிரிகள் யாரேனும் வந்து கப்பல்களுக்குத் தீ வைத்து விடுவதற்குக்கூடச் சந்தர்ப்பம் கிடைத்து விடும். வீரர்களைக் கப்பலை விட்டு இறங்கச் சொல்வது தற்கொலைக்கு ஒப்பாகும்.

பார்த்துக் கொண்டே இருக்கும் போது கரையோரமாகச் சிலர் வந்து நின்றார்கள். கைகளை அவர்கள் ஆட்டியதிலிருந்து சோழ நாட்டு வீரர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

பரமன் மழபாடியாருக்குத் தீவில் விரோதிகள் இருப்பது அவர்களுக்குத் தெரியாது என்று தோன்றியது. அது தெரிந்தால் வீரர்கள் இப்படி ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டார்கள். அப்படியென்றால் விரோதிகளுக்கு அந்தத் தீவில் ஒதுங்கி யிருப்பவர்களைப் பிடிக்கும் எண்ணம் இல்லை. கப்பல்களைக் கைப்பற்றுவதுதான் நோக்கமாக இருக்க வேண்டும்.

"அவர்களுடன் யுத்தம் செய்வதா, அல்லது திரும்பிப் போய் விடுவதா?" என்பதை நிர்ணயிப்பதற்கு அவர்களுடைய பலம் என்னவென்பதைத் தெரிந்து கொண்டாக வேண்டும். அதைக் கண்டு பிடித்துச் சொல்லக் கூடியவர் யாராவது இருக்கிறார்களா?" என்று கப்பல் தலைவரைக் கேட்டார் மழபாடியார்.

அவர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே தீவிலிருந்து ஒரு வீரன் நீந்தி வந்து சேர்ந்தான்.

அவ்வீரனிடமிருந்து தீவில் இருநூற்றைம்பது வீரர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள் என்பதும், சிலர் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், சிலர் அடிபட்டதனால் நீந்த முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதும், பலருக்கு நீந்தத் தெரியாது என்பதும் தெரியவந்தன. கப்பல் கரையருகில் உடைந்ததால் அலைகளால் தள்ளப்பட்டும், மரப்பலகைகளைப் பிடித்துக் கொண்டும் தெய்வாதீனமாக உயிர் தப்பி யிருந்தார்கள். நீந்திக் கப்பலுக்கு வந்து சேரக் கூடியவர்கள் முப்பது அல்லது அறுபது பேர்கள் தான் இருக்கும். அவர்களும் மிகவும் களைத்துப் போயிருந்தார்கள்.

கப்பல் தலைவர் ஒரு ஆலோசனை கூறினார். "எதிரிகளுக்கு நாம் அவர்கள் இத்தீவிலிருப்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்பது தெரிய நியாயமில்லை. இப்போது நாம் வீரர்களுக்கு உணவு அனுப்புவோம். நாம் ஒன்றும் செய்யாமல் இருந்தால் அவர்களுக்குச் சந்தேகம் உண்டாகும். இரவுவரை நேரம் கடத்தி விட்டால் பிறகு நாம் யாரையாவது வேவு பார்க்க அனுப்பலாம்" என்றார்.

"எப்படியிருந்தாலும் பட்டினி கிடக்கும் வீரர்களுக்கு உடனே உணவு அனுப்புங்கள்" என்றார் மழபாடியார்.

மாலைவரையில் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாரையும் ஒரே இடத்தில் இருக்கும்படி சொல்லியனுப்பினார் மழபாடியார். விரோதிகள் காட்டுக்குள் ஆயுதங்களுடன் ஒளிந்திருக்க வேண்டுமென்பது தெரிந்தது. ஆனால் கரையிலிருந்த வீரர்கள் ஆடுவதும், பாடுவதுமாகப் பொழுது போக்கினார்கள். தங்களைப் பயங்கர அபாயம் சூழ்ந்திருப்பது தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.


இருள் சூழும் சமயத்தில் கப்பல் தலைவர் வந்து, "எதிரிகள் ஒளிந்து கொண்டிருக்குமிடத்தைக் கண்டு பிடித்து வருவதாக நீல கங்கரையன் கூறுகிறான். அவன் மிகவும் துணிவு உள்ளவன். அவனும் பத்துப் பேர்களும் இரண்டு படகுகளில் நமது வீரர்கள் இருக்கும் இடத்துக்கு எதிர்ப்பக்கம் போய் இறங்குவார்கள். ஒரு படகில் ஒன்பது பேர்கள் சென்று இறங்குவார்கள். இன்னொரு படகில் இருப்பவன் நமக்குத் தகவல் சொல்லுவான்.

"எதிரிகளின் படை கொஞ்சமாக இருந்தால் நாம் அவர்களை அழித்து விட்டுச் செல்வோம். இந்தப் பத்துப் பேர்கள் உயிருக்குத் துணிந்து இந்தக் காரியத்தைச் செய்தால் பல வீரர்களை நாம் காப்பாற்றுவது சாத்தியமாகலாம்" என்று சொன்னார்.

மழபாடியார் சற்று யோசித்து விட்டுச் சம்மதித்தார். "எதிரி பதுங்கியிருக்கும் வரைதான் நமக்குப் பயம். வெளிப்பட்டு விட்டால் கவலை இல்லை. அந்த நீல கங்கரையனை நான் பார்த்து முதலில் பேச விரும்புகிறேன்" என்றார்.

அவனைப் பார்த்ததும் மழபாடியாருக்கு மிகவும் வாஞ்சை உண்டாயிற்று. அவனுடைய வீரம் பொருந்திய முகத்தைக் கண்டதுமே அவருக்குப் பிடித்துவிட்டது.

உயிரைத் திருணமாக மதித்து மற்றவர்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வீரச் செயல் புரிவதாக முன் வந்த அவனுடைய குடும்பத்தைப் பற்றி மழபாடியார் தெரிந்து கொள்ள விரும்பினார். நீலகங்கரையனின் குடும்பத்தாருக்கு அவன் திரும்பி வரா விட்டால் உதவி செய்ய விரும்பினார். அரசரிடம் அதைப் பற்றிச் சொல்வதற்காக நீலகங்கரையனை மிகுந்த அன்புடன் விசாரித்தார்.



"சுவாமி! எனக்குக் குடும்பம் ஒன்றும் இல்லை. ஒரே ஒரு தங்கை மட்டும் இருக்கிறாள். நாங்கள் அநாதைகள். ஈழ நாட்டிலிருந்து வந்து சேர்ந்தவர்கள். என் தங்கை திரிலோகசுந்தரிக்கு விவாகம் செய்து வைக்க வேண்டும். உங்களால் முடிந்தால் அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்றான் நீலகங்கரையன்.

ஈழத்திலிருந்து வந்தவர்கள் என்றதும் மழபாடியாருக்கு மனம் கனிந்தது. அவனுடைய தாய் தந்தையரைப் பற்றிக் கேட்டார். நீலகங்கரையன் கூறியதைக் கேட்டதும் இடிந்து போய் விட்டார்.

ஆனால் பரமன் மழபாடியார் தம் உணர்ச்சிகள் எதையும் அவனிடம் காட்டிக் கொள்ளவில்லை. அவன் சென்ற பிறகு அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வடிவதைக் கண்ட கப்பல் தலைவர் பேராச்சரியம் அடைந்தார்.

"மாதண்ட நாயகரே! இது என்ன? தாங்கள் ஒரு வீரனுக்காகக் கண்ணீர் வடிக்கிறீர்களே. நம்மைப் போன்றவர்களுக்கு இது புதியதா?" என்று கேட்டார்.

"என் மன நிலையை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் நான் ஒரு பெரும் தவறு செய்தேன். அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன்" என்று கூறி விட்டு அந்த விசித்திரமான உண்மையைச் சொல்ல ஆரம்பித்தார் பரமன் மழபாடியார்.

4

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன், அதாவது சாந்திமத் தீவில் யுத்தம் நடப்பதற்கு இருபது வருடங்களுக்கு முன்னால் இராஜேந்திர சோழரின் தந்தையரான இராஜராஜ சோழ தேவர் பரமன்மழபாடியாரை ஈழ நாட்டுக்கு அரசாங்க அலுவலாக அனுப்பி

வைத்தார். அங்கு சென்று சில நாட்களுக்கெல்லாம் விதிவசமாக ஒரு ஈழநாட்டு மங்கையைக் கண்டு காதல் கொண்டார்.

சில நாட்கள் அவளுடன் பழகிய பிறகு, அந்த அபூர்வ அழகு வாய்ந்த நங்கையான கம்பமா தேவி இலங்கை ராஜ வம்சத்தில் பிறந்தவள் என்பதை அறிந்து கொண்டார். கம்பமாதேவிக்குச் சோழர்களின் மீது மிகவும் வெறுப்பு என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அப்போது அவருக்கு இளம் வயது. தான் சோழ நாட்டுச் சேனாபதி என்பதை அறிந்தால் அவள் தன்னை மணக்க மாட்டாள் என்று உணர்ந்த மழபாடியார், தான் பாண்டிய நாட்டு வியாபாரி என்று அவளிடம் பொய் சொல்லி அவளை மணந்து கொண்டார். அவர் அங்கே இருந்த மூன்று வருடங்களும் ஆனந்த மயமாகப்பொழுது போயிற்று. முதலில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மறுபடியும் அவள் கருத்தரித்திருந்தபோது அரசரிடமிருந்து உடனே திரும்பி வரும்படி உத்தரவு வந்தபடியால் மழபாடியார் தமிழ் நாட்டுக்கு வந்து விட்டார். காதலித்து மணந்து கொண்ட அருமை மனைவியையும், பச்சிளம் பாலகனையும் பிரிந்து வரும்போது உண்மையைச் சொல்லி விருக்க வேண்டும். அதற்குத் தைரியம் வரவில்லை. பரமன் மழபாடியாருக்குத் தஞ்சையில் முதல் மனைவி இருந்தபடியால் தம் காதலியைக் கூட அழைத்து வருவதற்கும் தயக்கமாக இருந்தது. தஞ்சைக்கு வந்து மனைவியிடம் உண்மையைச் சொல்லிச் சமாதானம் செய்து விட்டு, மறுபடியும் சென்று அவளை அழைத்து வரலாம் என்று நினைத்திருந்தார்.

ஆனால் விதி வேறுவிதமாக இருந்தது. அப்போதும் முன்னீர்ப் பழந் தீவுகளைக் கைப்பற்றுவதற்காகச் சென்ற படையுடன் பரமன் மழபாடியாரும் போக வேண்டியிருந்தது. பழந் தீவுகளை அப்போதும் வென்று வெற்றியுடன் திரும்பினார் மழபாடியார். ஆகவே அவர் தம் காதல் மனைவி கம்பமாதேவியையும், அருமைக் குழந்தைகளையும் அழைத்து வர ஈழம் சென்றபோது இரண்டு வருடங்கள் கடந்து விட்டன.

அங்கே அவர் கேள்விப்பட்ட செய்தி மனமுடைந்து போகச் செய்வதாக இருந்தது. பரமன் மழபாடியார் தாய் நாடு சென்ற பிறகு அவளுக்கு இன்னொரு குழந்தை பிறந்ததாகவும், அவள் அப்போது இறந்து போய் விட்டதாகவும், குழந்தைகளை அவளுடைய உறவினர் யாரோ அவர்களுடைய தந்தையிடம் சேர்க்க அழைத்துச் சென்று விட்டதாகவும் கேள்விப்பட்டார்.

பாண்டிய நாட்டு வியாபாரி என்று தம்மைக் கூறிக் கொண்டது எவ்வளவு மகத்தான தவறு என்பது அவருக்கு அப்போது புலப்பட்டது. உடைந்த உள்ளத்துடன் திரும்பி வந்தார். பிறகு தம் துயரை மறப்பதற்காக அரசருடன் பல போர்களில் உயிரை ஒரு பொருட்டாக மதிக்காமல் போர் செய்து நாட்களைக் கழித்தார். குழந்தைகளைத் தேடுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சி எதுவும் பலிக்கவில்லை.

கடைசியில் இருபது வருடங்களுக்குப் பின்னர் தம்முடைய புதல்வனைக் கண்டு பிடித்தபோழுது, அவனை உடனே பறிகொடுக்கும்படியும் நேர்ந்துவிட்டது.

5

திரிலோகசுந்தரி, "தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறிக்கொண்டே எழுந்து அவரது பாதங்களில் பணிந்தாள்.

"இறைவனுடைய அருள் இன்னும் சிறிது என்பால் இருக்கிறதென்பதை இன்றுதான் நான் உணர்ந்தேன், குழந்தாய்!" என்றார் மழபாடியார்.

சாமந்தாபரணன் எதுவும் சொல்லத் தோன்றாமல் பிரமித்துப் போய் நின்று கொண்டிருந்தான்.

திரிலோக சுந்தரி அவனைப் பார்த்து, "என் தந்தையிடம் என்னைச் சேர்த்து வைத்ததற்கு உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பேன்?" என்று கூறினாள்.

"உங்களுக்குச் சொந்த மகனை எதிரிகள் கூட்டத்துக்கு அனுப்ப எப்படி மனம் வந்தது?" என்றான் சாமந்தாபரணன்.

"போர்வீரர்களில் ஒருவரிடம் மாத்திரம் பாரபட்சம் காட்டலாமா? அதிலும் அவனாக உயிர்த் தியாகம் செய்ய முன் வந்தான். அது விதிதானே? அவனை நான் எப்படித் தடுக்க முடியும்? கப்பல் தலைவரிடம் இதைச் சொன்னபோது நீலகங்கரையனை அவர் அனுப்பச் சம்மதிக்கவில்லை. பிறகு நான் கடுமையான உத்தரவிடும்படி நேர்ந்தது. இறைவன் அருளால் அவன் திரும்பிவிடலாம் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவன் திரும்பவில்லை. இரண்டாவது படகில் சென்றவன் மாத்திரம் திரும்பி வந்து படைவீரர்களின் தொகை குறைவுதானென்பதைக் கூறினான். பிறகு இரவோடிரவாகப் படை வீரர்களை அங்கே அனுப்பிப் போர் புரிந்து அவர்களை அழித்து விட்டுத் திரும்பினோம். ஏற்கனவே உணவுப் பொருள்களுடன் ஆயுதங்கள் போயிருந்தபடியால் கரையிலிருந்த வீரர்களில் அடிபடாதவர்களும் போர் புரிந்தார்கள். அதனால் வெற்றி சுலபமாகக் கிடைத்து விட்டது. ஆனால் அந்த வெற்றியினால் நான் அடைந்த வேதனை கப்பல் தலைவர் ஒருவருக்குத்தான் தெரியும்."

"அப்படியானால் நீங்கள் ஏன் திரிலோக சுந்தரியை உடனே தேடிப் பிடிக்கவில்லை?" என்று மிகுந்த வியப்புடன் கேட்டான் சாமந்தாபரணன்.

திரிலோகசுந்தரி அதற்குப் பதில் சொன்னாள். "மறுபடியும் விதி குறுக்கிட்டது. சாந்திமத் தீவிலிருந்து கலங்கள் வரும்போது புயலடித்ததால் ஒரு கலம் தான் முன்னால் வந்தது. முதலில் வந்த கலத்தில் இவர் வரவில்லை. அந்த வீரர்கள் மூலம் வதந்திகள் பரவின. அண்ணனைப் பிரிந்த துயரம் தாங்க முடியாமல் நான் இந்த ஊரிலிருந்து புறப்பட்டுத் தீர்த்த யாத்திரை சென்ற சிலருடன் போய்விட்டேன். என்னைத் தன் சொந்த மகள் போல் வளர்த்த மாதரசியுடன் பல ஊர்களுக்குச் சென்றேன். சோழ சைன்யம் என்றாலே எனக்கு வெறுப்பாக இருந்தது. என்னை வளர்த்த அன்னையுடன் அவர் கிராமத்திலேயே தங்கி விட்டேன். நாங்கள் மறுபடியும் நாகைக்குத் திரும்பி நான்கு திங்கள்தானே ஆகின்றன?" என்றாள் திரிலோகசுந்தரி.

"மறுபடியும் நான் எவ்வளவு முயற்சி செய்தும் இவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்று உன்னால் இவளை நான் அடைந்தேன். ஆனால் ஒன்று சொல்லுவேன். பொய் சொல்வதனால் ஏற்படும் இன்னல்களை நான் நன்கு அறிந்திருப்பதால் திரிலோகசுந்தரிக்கு உண்மையைச் சொல்லி விட வேண்டியது மிக அவசியம் என்று கருதுகிறேன், இளவரசே!" என்றார் பரமன் மழபாடியார்.

"என்ன, இளவரசரா?" என்று கூவினாள் திரிலோகசுந்தரி.

"ஆம், அம்மா! என் அருமை மகளைக் காதலிக்கும் உத்தம வீர வாலிபர் கோப்பரகேசரி ராசேந்திர சோழ தேவரின் திருக்குமாரரான இராசாதி இராசர்தான்" என்றார் மழபாடியார்.

திரிலோக சுந்தரியின் நயனங்கள் மறுபடியும் நீரைப் பெருக்கின.




கவலையின்றிப் **பிரயாணம்**

... அத்துடன் வசதி, இதுவே குறிக்கோள்

சரத்காலம் வந்துவிட்டது. பண்டிகை நாட்கள் வர இருக்கின்றன. உண்மையிலேயே கவலையின்றி ஓய்வு நாட்களைக் கொண்டாட உள்ளம் துடிக்கிறது. இதைப் பரிபூரணமாக வாக்களிக்கிறது "ஹிந்துஸ்தான் டிராவலர்". ஸ்டார்ட்டரைத் தொட வேண்டியதுதான்; நீங்கள் உங்கள் இஷ்டப்படி மிதந்து செல்வீர்கள். நீங்கள் உங்கள் விருப்பப்படி பிரயாணம் செய்து விடுமுறையைச் சௌகரியமாக சந்தோஷமாக அனுபவியுங்கள்; கொண்டாடி மகிழுங்கள்!



ஹிந்துஸ்தான் டிராவலர்





ஆறுபேர் தங்கள் பெட்டி படுக்கைகளுடன் சௌகரியமாக உட்கார வசதியிருக்கிறது



பின் சீட்டை மடக்கி விட்டால், ஒரு வானைப்போல் சாமான்கள் பல ஏற்றிக்கொண்டு மூன்று பேர் மிகவும் சௌகரியமாகச் செல்லலாம்....அல்லது



தூங்க விரும்பினால் உங்கள் படுக்கையை விரித்துப் போட வேண்டிய இடம் கிடைக்கும். சாமான்களை வண்டியின் மேல் வைக்கும்படியும் காரியர் பொருத்திக் கொள்ளலாம்.!

HM-12/57

ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா

கீழ்க்கண்ட இடங்களில் டீலர்கள் உள்ளனர்

ஆக்ரா, அம்பாலா கண்ட்டோன்மெண்ட், அஜ்மீர், அஹமதாபாத், அலகாபாத், பரோடா, பெங்களூர், பம்பாய், பரேலி, காசி, கல்கத்தா, கட்டாக், கோயமுத்தூர், டேராடூன், இந்தூர், ஜெய்ப்பூர், ஜோத்பூர், ஜோர்ஹாத், ஜாம்ஷெட்பூர், ஜலந்தர் சிட்டி, ஜம்மு, கான்பூர், கோல்ஹாப்பூர், லக்னோ, சென்னை, மதுரை, மங்களூர், மாண்டியா, நாகபூர், புது தில்லி, நேப்பாளம், பாட்னா, பூனா, ராஜ்கோட், ராஞ்சி, சம்பல்பூர், செகந்திராபாத், திருச்சிராப்பள்ளி, விஜயவாடா, விஜயநகரம்


வாழ்த்துச் செல்வம்
இவ்வாண்டு தீபாவளி நன்னாளன்று மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வாழ்த்துச் செல்வங்களை வழங்குகிறோம். உங்கள் தேக ஆரோக்கியத்துக்காகவும், சந்தோஷத்துக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இந்த ஆண்டு முழுவதும் நாங்கள் பிரார்த்திக்கிறோம்
ஆர்யன் பிரஷ் கம்பெனி லிமிடெட்
வேண்டிங் சேம்பர்ஸ் - தலால் தெரு - பம்பாய்-1
ஆர்யன்
டூத் பிரஷ்
Aryan Regd.
The correctly shaped
TOOTH BRUSH
Cleans far Better—Lasts far Longer!
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்:
அஸோஸியேட்டட் மெர்க்கண்டைல் கார்ப்பொரேஷன் (மதராஸ்) பிரைவேட் லிமிடெட், சென்னை-1


For the festival of lights!
ரேடியோ
அலங்கார கலர் விளக்குகள்
பிரகாசமாக ஜொலிக்கும் விளக்குகள் மனத்துக்கு இன்பத்தை அளிக்கின்றன. பிரகாசமாக மற்றும் கோலாகலமாக தீபாவளித் திருநாளைக் கொண்டாட ரேடியோ அலங்கார விளக்குகளை நிச்சயம் நம்பலாம். அவைகள் விலையில் குறைவு. நீடித்து உழைக்கும். பற்பல கலர்களில் கிடைக்கும்.
RADIO LAMP WORKS LTD. BOMBAY. CALCUTTA. DELHI. KANPUR. MADRAS. INDORE.
40mm FESTIVAL
CANDLE
PYGMY
NIGHT



Greetings




எமது ஸ்தாபனத்தின்
பொன் விழா ஆண்டில் வரும்
இந்தத் திருநாளன்று நாங்கள்
எமது நண்பர்கள் அனைவருக்கும்
இரட்டிப்பு மகிழ்ச்சியுடன்
நல் வாழ்த்துக்கள் கூறுகிறோம்

தி இந்தியன் பாங்க் லிமிடெட்


தலைமை ஆபீஸ்:
சென்னை


காரியதரிசி:
டி. பி. பார்த்தசாரதி






Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited, Managing Editor: T. Sadasivam


சசீந்திரன்


லக்ஷ்மிநாராயணன்


ஜானகிராமன்


ராதாகிருஷ்ணன்
கனு

பார்வதியின் தவம்


மலரை விட்டு மணத்தைப் பிரிக்க முடியாது. அது போல் சக்தியிடமிருந்து சிவத்தைப் பிரிக்க முடியாது. சிவத்தை விட்டு ஒரு சமயம் சக்தியின் அம்சம் பிரிந்தது. எதற்காகப் பிரிந்தது? மீண்டும் தவம் புரிந்து சிவத்தை அடைவதற்குத்தான்.

சிவானந்த வெள்ளத்திலே திளைத்து, சிவத்தை நினைத்து தவத்தில் நிற்கும் ஆதிபராசக்தி பார்வதியாக மண்ணுலகில் அவதரித்தது எதற்கு? சிவபெருமானைச் சில காலம் பிரிந்தது எதற்கு? ஊழி முதல்வனோடு ஒன்றி நின்று அனைத்துலகும் வாழ அருள் சுரப்பதற்குத்தான்.


வெள்ளிப் பனிவரையின் தாழ் வரையில் தேவி விரித்த கூந்தலுடன் புரியும் தவம் எத்தகையது? மனித குலத்தை மாண்புறச் செய்யும் வன்மை வாய்ந்த அன்பு என்னும் சக்தியை உலகனைத்தும் பரவச் செய்வது; இக வாழ்வின் இன்னல்களை ஓட்டி அதில் அன்பையும் அமைதியையும் இன்பத்தையும் ஊட்டுவது.

தேவியின் இன்னருள் சுரக்கும் முகாரவிந்தம் தவ ஒளியினால் தெய்வீக மலர்ச்சியுடன் விளங்குகிறது. அன்னை பராசக்தியின் அகத்தில் நிற்கும் சிவம் வான வெளி முழுதும் பரந்து நிற்கிறது. இந்தக் காட்சியை ஓவியக் கலைஞர் ரத்னம் அவர்கள் வண்ண ஓவியமாக, பாவபூர்வமாகத் தீட்டியிருக்கிறார். இந்த எழில் ஓவியத்தைப் பார்க்கும்போது நமக்கு மகாகவி பாரதியின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.


"தவமொன்றும் இல்லை-ஒரு
சாதனையும் இல்லை.
சிவமொன்றே உள்ளதெனச்
சிந்தை செய்தால் போதும்."



வத்தி வைக்காதே!



"டேய்! நீ வத்தி வைக்காதே.......கையைச் சுட்டுடும்.......உன் மாமா நன்னா
வத்தி வைப்பான். அவன்கிட்டேயே கொடு!...."




காலசம்ஹாரமூர்த்தி
(திருக்கடவூர்)



சிற்ப சித்திரம்—2 வில்லேந்திய வேலவர் (திருமெய்ஞானம்)



ஸோமாஸ்கந்தர் (திருமெய்ஞானம்)



பத்து கரங்களும்
முக்கண்ணும்
கொண்ட
அனுமார்
(அனந்தமங்கலம்)



அந்த இன்ப உலகம்

"களியானைத் தென்னன்
கனவில்வந்(து) என்னை
அளியான் அளிப்பானே போன்றான்"

— முத்தொள்ளாயிரம்

உலகங்கள் பதினாலு உண்டு என்று சொல்பவர்கள், அந்த உலகங்களைவிட அற்புதமானதோர் பதினைந்தாவது உலகம் ஒன்று உண்டு என்பதை ஏனோ கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

பதினைந்தாவது உலகம் என்பது எது என்று கேட்கிறீர்களா?

அதுதான் கனவு உலகம்!

ஆகா! அந்தக் கனவு உலகில் காலத்தின் கொடுமை கிடையாது! இடத்தின் தொல்லை கிடையாது!

இந்த உலக வாழ்க்கையிலே எதற்கும் ஒரு காலவரையறை ஏற்பட்டிருக்கிறது! ரோஜாப் புஷ்பம் மலர்ந்தால், அது அப்படியே என்றென்றும் மணம் வீசிக் கொண்டு மலர்ந்தபடியே இருக்கக் கூடாதா என்று நமக்குத் தோன்றுகிறது! ஆனால் அந்த மாலைக்குள் வாடி வதங்கிவிட வேண்டும் என்று இயற்கை அதற்குக் கட்டளையிட்டிருக்கிறது!

அதேபோல் நமக்கு இன்று காசிக்குப் போக வேண்டும் என்றால், உடனே காசிக்குப் போக முடியாது. இடையில் கிடக்கும் 'இடம்'— ஆயிரக்கணக்கான மைல்கள்—குறுக்கே நிற்கிறது.

இந்தக் காலமும் இடமும் சாதாரண மக்களைத் தொந்தரவு செய்வதை விடக் காதல் நிலையிலுள்ளவர்களைப் படுத்தும் பாடு அப்பப்பா, சொல்லி முடியாது!

காதலனுடன் கூடிப் பல மணி நேரம் சல்லாபம் செய்தால் கூட, காதலிக்கு ஒரு நொடியாகத்தான் தோன்றுகிறது.

காதலனைத் தூரதேசத்துக்கு அனுப்பி விட்டுப் பிரிந்து நிற்கும் போது காதலியின் பிரிவாற்றாமை தாங்க முடியாததாகி விடுகிறது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு நொடியும் ஒரு யுகமாகத் தோன்றி அவளை வாட்டி வதைக்கிறது.

இத்தகைய பிரிவாற்றாத நிலையிலிருக்கும் ஒரு காரிகை சற்றுக் கண்ணயர்ந்து விடுகிறாள். அப்போது அவள் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் பெறக்கூடிய இன்பங்களையெல்லாம் திரட்டித்தரும் கனவு உலகத்துக்குச் சென்று விடுகிறாள்.

பொருள் தேடிவர நெடுந்தூரம் சென்ற அவள் காதலன் அங்கு, அதாவது அவளுடைய கனவு உலகத்துக்கு வந்து சேருகிறான்.

எவ்வளவு இனிய சல்லாபங்கள் புரிந்து பொழுதைப் போக்குகிறாள்! இறந்த காலத்தில் துய்த்த இன்பக் காட்சிகளையும் காண்கிறாள். எதிர்காலத்தில் காண விரும்பும் இன்பங்களையும் காண்கிறாள். அதில் பற்பல யுகங்களில் கிடைக்கக்கூடிய இன்பத்தைப் பெற்று மனம் நிறைகிறாள்!

இந்த இனிய நிலையை நமது ஓவியர் வினு அழகிய வண்ண ஓவியமாகத் தந்திருக்கிறார். அவள் இன்பக் கனவுகள் காணும் நிலையை அப்படியே அற்புத ஓவியமாகத் தந்துவிட்டிருக்கிறார்!

நமது ஓவியர் விட்ட நிலையிலேயே நாமும் அவளை விட்டு அப்பால் போய் விடுவோம்.

சற்று நாம் சத்தப்படுத்தி அவள் விழித்துக் கொண்டாளானால், 'மீண்டும் எனக்கு அந்தக் கனவு உலகத்தைப் பிடித்துக் கொடுங்கள்' என்று கேட்பாள். பிடிவாதம் செய்வாள்.

இது யாரால் முடியும்?

கல்கி தீபாவளி மலர் 1957

தலை தீபாவளி!



புது மாப்பிள்ளை : ஆ! அப்பா....என்ன வியர்வை.....!

பெண் : அப்படின்னு என்மேல் உங்களுக்குத் துளிக்கூடக் காதல் இல்லை என்று தெரிகிறது....
காதலி பக்கத்தில் இருக்கும்போது யாருக்காவது வேர்க்கிறது, தெரியுமா?

சங்கீத சகோதரிகள்

கடவுளின் உருவமே இசை மயம் என்றார்கள் நம் முன்னோர்கள். "ஏழிசையாய்! இசைப் பயனாய்!" விளங்குகிறான் என்று சொன்னார்கள்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆண்டவனைப் 'பண்ணில் நோக்கும் பரா அமுது' என்று குறிப்பிட்டார்!

இப்படிப்பட்ட இசையை நமது பேரரசர்களும், பெரும் சங்கீத வித்வான்களும் எப்படிப் போற்றி வளர்த்தார்கள் என்பதற்கு நாட்டில் எத்தனை எத்தனையோ கதைகள் வழங்குகின்றன.

அக்பர் சக்கரவர்த்தி ஆட்சி விஷயத்தில் சிறந்து விளங்கியது போலவே கலைகளைப் போற்றுவதிலும் சிறந்து விளங்கினார். அவர் சபையில் தான்சேன் என்ற பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான் ஆஸ்தான பாடகராக இருந்தார்!

அதே சமயத்தில் குஜராத்தில் தானா, ரீரீ என்ற இரு சகோதரிகள் சங்கீதக் கலையில் புகழ் பெற்று விளங்கினார்கள். குஜராத் தேசத்திய பூர்வீகமான சாஸ்திரீய சங்கீதத்தையும் நாட்டுப் பாடல்களையும் பாடுவதில் சமர்த்தர்களாக விளங்கினார்கள். இதனால் அவர்களை ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு நகரத்திலும் பிரமுகர்களும் பாமர மக்களும் வரவழைத்து அவர்கள் சங்கீதத்தைக் கேட்டு மகிழ்ந்து வந்தார்கள்! அவர்கள் நூறு மாதர்கள் கொண்ட கோஷ்டியாகப் போவார்கள். பாட்டுக்கேற்ற நடனமும் நடைபெறும்.

"தீபக்" என்பது ஒரு ராகம். இந்த ராகத்தில் ஒரு விசேஷம். இதைப் பாடினால் உடனே எங்கும் தீப்பற்றி விடுமாம். ஒரு சமயம் தான்ஸேன் "தீபக்" ராகம் பாடினார். அதைப் பாடியதால் அவர் உடலில் உஷ்ணம் ஏறிப்போய் அவர் படுத்த படுக்கையாகி விட்டார்.

இதற்கு என்ன வைத்தியம் என்று விசாரித்த போது மழையை வரவழைக்கும் "மால்கோஷ்" ராகத்தை யாராகிலும் சிறந்த முறையில் பாடினால், அவர் உடலில் ஏற்பட்ட சூடு தணிந்து அவர் தேகநிலை சொஸ்தமடையும் என்றார்கள். உடனே அக்பர் சக்கரவர்த்தி தானா, ரீரீ என்ற சகோதரிகளுக்குச் சொல்லியனுப்பினார்.

சக்கரவர்த்தியின் அழைப்பைப் பெற்று இரு சகோதரிகளும் ராஜ சபைக்கு வந்தனர். அவர்கள் வாழ்க்கையிலேயே அதற்கு முன்னும் அப்படிப் பாடியதில்லை, அதற்குப் பின்னும் அப்படிப் பாடியதில்லை என்று சொல்லும் வகையில் மால்கோஷ் ராகத்தை அபாரமாகப் பாடினர். அதன் விளைவாகத் தான்ஸேனின் உடற்சூடு குறைந்து தேக ஆரோக்கியத்தைப் பெற்றார்.


இப்படித் தமக்குத் தேக ஆரோக்கியத்தைத் தந்த சகோதரிகளுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று பார்த்தார் தான்ஸேன்.

இனிமேல் ராக ஆலாபனையை "தானா-ரீரீ" என்று ஆரம்பித்துப் பாடுவதாக முடிவு செய்தார்.

அதிலிருந்துதான் "தான ரீரீ" என்று எல்லாப் பாடகர்களும் ராக ஆலாபனை செய்து வருகிறார்கள்!

இப்படி அற்புதமாகத் தம்மை மறந்து பாடிய தானா-ரீரீ சகோதரிகளை ஓவியர் கனு நமக்கு இங்கே அற்புத வண்ண ஓவியமாக வழங்குகிறார்! இந்தச் சித்திரத்தைப் பார்க்கும்போது சங்கீதத்தின் மிக உயரிய அனுபவ நிலைகளுக்கு நாம் போய்விடுவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா?

கல்கி தீபாவளி மலர் 1957



தெய்வத் திருமணம்

இங்கிவர் வதுவை காண்பான்
என்னநாம் நோற்றேம் என்பார் !

— பரஞ்சோதி முனிவர்

சின்னஞ்சிறு ஆலம் வித்துக்குள்ளே, பிரம்மாண்டமான ஆலமரம் வளர்வதற்கான மாபெரும் சக்தி இருப்பதை நம் முன்னோர்கள் கண்டனர். ஆம், அற்புதமான சிருஷ்டிசக்தி அதற்குள் இருக்கிறது என்பதைக் கண்டனர். அத்துடன், அவ்வளவு சக்தியும் அந்தச் சின்னஞ் சிறு விதைக்குள் அடங்கி ஒடுங்கி யிருக்கும் அற்புதத்தையும் கண்டனர். அப்படி அந்தச் சிருஷ்டி சக்தியை விதைக்குள் கட்டுப்படுத்தி வைக்கும் சக்திதான் யாதோ என்று வியந்தனர். அதற்குப் பக்தி செலுத்தினர், பாடினர், பரவினர் !

பொருளும் சக்தியும் ஒன்றை யொன்று பின்னிப் பிணைந்து நிற்கும் இந்த அழகைக் கண்டு வியந்து, பொருளைச் சிவம் என்றனர். பொருளுக்குள்ளிருக்கும் சக்தியைப் பராசக்தி என்றும் பார்வதி என்றும் மீனாட்சி என்றும் போற்றினர் ! சிவத்துக்கும் சக்திக்கும் திருமணம் புரிந்து பக்தி செலுத்தி ஆனந்த பரவசமாயினர்.

* * * *

மலயத்துவச பாண்டியனுக்கு சக்திதேவி மகளாக அவதரித்தாள். யாராலும் போரில் வெல்ல முடியாத வீராங்கனையாக விளங்கினாள். திக்விஜயம் செய்து மூவுலகங்களிலுள்ள பேரரசர்களை வெற்றி கொண்டாள். இதனாலே இப் பிராட்டிக்குத் தடாதகைப் பிராட்டி எனப் பெயர் வந்தது. யாராலும் தடுக்க முடியாத சக்தி பெற்றவள் என்பது இப்பெயரின் பொருள்.

இத்தகைய பிராட்டி கைலையங்கிரிக்குப் படையெடுத்துச் சென்றாள். சிவபெருமான் தோன்றியவுடன், அம்மையின் வீரம் எல்லாம் அடங்கிப் பெண்மை மேலோங்கியது. நாணம் பற்றிக் கொண்டது ! தலையைக் குனிந்து கொண்டு தன் கால் கட்டை விரலினால் நிலத்தைக் கீறினாள். ஆண்டவன் மதுரைக்குத் தாமே வந்து கல்யாணம் செய்து கொள்வதாக அருளினார். அம்மையைத் திரும்பிப் போகுமாறு பணித்தார் !

மதுரையில் சொக்கேசருக்கும் அம்மை தடாதகைப் பிராட்டியாருக்கும் கல்யாணம் என்றதும் மக்கள் அடைந்த சந்தோஷம் சொல்லி முடியாது ! மதுரை நகர் கோலாகலப்பட்டது. ஆடவரும் பெண்டிரும் குதூகலப்பட்டனர்.

ஆண்டவன் குறித்த வேளையில் தோன்றி அன்னையை மணந்தான். சிவமும் சக்தியும் உலகுக்கு இன்பமும் அருளும் சுரந்து கொண்டிருக்கின்றன.

* * * *

இந்தத் திருமணக் கோலத்தைக் காணத் திரளாக வந்திருந்தோர்:

நங்கை என் நோற்றாள் கொல்லோ,
நம்பியைத் தினைத்தற் கென்பார் !
மங்கையை மணப்பான் என்னோ
வள்ளலும் நோற்றான் என்பார் !

அங்கடி மதுரை என்னே
ஆற்றிய தவந்தான் என்பார்
இங்கிவர் வதுவை காண்பான்
என்னநாம் நோற்றேம் என்பார் !

— திருவிளையாடற் புராணம்

பொருளும் சக்தியும் இணைந்திருத்தலே உலகுக்கு மங்களம் அளிப்பது. ஆண்டவனின் இயல்பான காட்சி—மங்கலக் காட்சி—திருமணக் காட்சி. இந்தத் திருமணக் காட்சியை நம் முன்னோர்கள் பல படியாக அனுபவித்தார்கள். பாடல்கள் பாடியும் கோயில்கள் எழுப்பியும் போற்றினார்கள்.

தெய்வத் தமிழ் நாட்டின் மத்தியில் விளங்கும் மதுரையம்பதியும் மீனாட்சி — சுந்தரேசுவரரின் திருமணக் கோலமும் இந்த மங்களகரமான பேருண்மையை உலகத்துக்கு எடுத்து இயம்பிக் கொண்டிருக்கின்றன !


மீனாட்சி — சுந்தரேசுவரரின் திருமணக் கோலத்தை ஓவியர் ராஜம் இவ் வருஷ தீபாவளிப் பரிசாக வழங்குகிறார்.


மீனாட்சி சுந்தரேசுவரரின் அருளால் உலகில் மங்களம் பெருகட்டும் !




கல்கி
தீபாவளி மலர்
1957


சொத்துவரியும் மக்களும்!





ருஷ்யக்கரடி க்ருசேவ்
க்ருசேவ் சொன்னதை ஆமோதிக்கும் புல்கானின்
ஆமாம்
மோ-சி-துங்: "நூறு மலர்கள் மலரட்டும்"
பாகிஸ்தான் ஜனாதிபதி மிர்ஸா: மத்திய கிழக்கு நாடுகளுக்கென்று அமெரிக்கா தயாரித்துள்ள அபூர்வ குண்டு!
டல்லஸ்: அணு ஆயுத சக்தியின் விளக்கவுரையாளர்.
நாஸர்: அரபு நாடுகளின் சுதந்திரக் காவலர்!

உலகப் பிரமுகர்கள்




அரசியல் என்பது இதுதானே?
சுதந்திர உலகம்:
இதற்கு அமெரிக்க அகராதியில் டாலர் சங்கிலியால் பிணைக்கப் பட்ட நாடுகள் என்று பொருள்.
இரண்டாவது திட்டம்:
எட்டாத சந்திரனை எட்டிப் பிடிக்க முயலுவது!
தற்காப்பு உடன் படிக்கைகள்:
சமாதானம் நிலை நாட்ட உதவுவனவாம்!
பாக்தாத்
சீட்டோ
நேட்டோ
சமாதானம்
காங்கிரஸ்காரர்
தாம் பற்றி ஏறிய ஏணியைத் தாமே தள்ளி விடுபவர்!


VALE'S FOR
PORTRAITS
& BLOCKS
MADRAS-2.
BANGALORE-1.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

